இராமாயணம்

(வால்மீகியைத் தழுவியது)

இயற்றியவர்
ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

प्रज्ञानं ब्रह्म

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115
எலமனூர் (R. S.), திருச்சி ஜில்லா.
1987

தபோவனத் தொடர் 107

முதற் பதிப்பு	1980	பிரதிகள்	10,000
இரண்டாம் பதிப்பு	1982	,,	10,000
மூன்றாம் பதிப்பு	1984	,,	15,000
நான்காம் பதிப்பு	1987	,,	10,000

திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
காரியதரிசியால் பிரசுரிக்கப்பட்டது.

பிரசார விலை ரூ. 10-00

தபோவன அச்சுப்பள்ளி, திருப்பராய்த்துறை

பொருளடக்கம்

நீராவி யந்திரம் ஒன்று போய்ச் சேரவேண்டிய இடத்துக்குத் தனியாகப் போவதில்லை. பிரயாணிகள் நிறைந்துள்ள பல வண்டிகளின் தொடரையும் அது தன்னோடு இழுத்துச் செல்கிறது. அவதார மூர்த்தி ஒருவனுடைய செயலும் அத்தகையதே. துயரம் நிறைந்துள்ள நிலவுலக வாழ்வை ஒதுக்கித் தள்ளிவிட்டுப் பேரின்பத்துக்கு இருப்பிடமாகிய பரமபதத்துக்கு அன்னவர்களை அவதாரமூர்த்தி ஒருவன் தன்னோடு அழைத்துச் செல்கின்றான்.

— ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்

வால்மீகி

பண்டைக் காலத்தில் நம் நாட்டிலே முற்றிலும் பண்பாடு அடைந்துள்ள மேன்மகன் ஒருவனை ரிஷி என்று அழைப்பது வழக்கம். அந்த இலட்சியம் மங்கிப்போகாது இன்றைக்கும் நடைமுறையில் இருந்து வருகிறது. ரிஷிஸ்தானம் பெறுவதற்குப் பிறப்புரிமை ஏதுமில்லை. மக்களுள் யார் வேண்டுமானாலும் ரிஷி ஆகலாம். ஆண் ஆனாலும் சரி, பெண் ஆனாலும் சரி, அந்தப் பண்பின் பொருட்டு முழுமனதோடு முயலவேண்டும். அடக்கம் பழகுதலின் விளைவாக அன்னவனுக்கு ஞானக்கண் வாய்க்கிறது. ரிஷி ஒருவன் ஞானவடிவினன் ஆகிறான். ஞானம் மனத்தகத்தினின்று தானாக உதயமாகின்றது; புறத்தினின்று அது ஊட்டப்படுவது அன்று. சுயமுயற்சியைக் கொண்டு வால்மீகி ஒரு மஹாரிஷியானார். தத்துவ தர்சனம் தானாக அவருக்கு வந்து வாய்த்தது. அவர் இயற்றியிருக்கும் இராமாயணமே அதற்கு அத்தாக்ஷியாகிறது. அதனிடத்து எளிமையும், இனிமையும், மகிமையும் ஒன்றுசேர்ந்து அமைந்திருக்கின்றன.

வால்மீகி ஒரு ஞானியர் வமிசப் பரம்பரையில் வந்தவர் அல்லர். அவர் பிறப்பெடுத்தது ஒரு பாமரனாக. வழிப்போக்கர்களைக் கொள்ளையடிக்கும் திருடனாக அவர் தமது ஜீவிதத்தைத் துவக்கினார். வழியில்போன நாரத மஹாரிஷியைத் தாக்கி அவரைக் கொள்ளையடிக்க அத்திருடன் முயன்றான். நல்லான் ஒருவனுடைய போக்கு அத்தகையதன்று என்று மஹாரிஷி அவனைத் திரஸ்கரித்தார். எப்படியாவது தன் குடும்பத்தைக் காப்பாற்றி வரவேண்டும் என்று திருடன் தன் செயலை ஆதரித்துப் பேசினான். நல்வழியில் செல்வம்

சம்பாதிக்க இயலாவிட்டால் கெட்ட வழியிலாவது அதைத் தேடித்தான் ஆகவேண்டும் என்பது அவன் கருத்து.

திருடுதலும், கொலைபுரிதலும் மகாபாபங்கள். உற்றார் உறவினர் அப்பாபத்தில் பங்குகொள்ள மாட்டார்கள் என்று நாரதர் அவனுக்கு எச்சரிக்கை பண்ணினார். இப்படி அவர் இயம்பியது உண்மையா என்பதை ஆராய்ந்து அறிந்து கொள்ள அவன் தன் வீட்டுக்குப் போனான். அவனுடைய சுற்றத்தார் அவன் சம்பாதித்த செல்வத்துக்கே உரிமையாளர் என்றும் அவனுடைய பாபத்துக்கும் தங்களுக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லையென்றும் இயம்பினர். இதைக் கேட்ட அம்மனிதன் திகைத்துப் போனான். மானுட வாழ்க்கைக்குரிய இப்பேருண்மை அவன் உள்ளத்தில் அதிர்ச்சியை உண்டுபண்ணியது. அவனுக்கு நல்லறிவு வந்தது. நாரதரிடம் திரும்பி ஓடிவந்து தான் செய்த தீமைக்குக் கழுவாய் வேண்டி நின்றான். அந்தத் திருடன் மீது இரக்கம் கொண்ட தேவரிஷி 'ராம' என்னும் மந்திரத்தை ஜபிக்கும்படி அவனுக்கு உபதேசம் பண்ணினார். ஆனால் அந்தப் பாமரனுக்கு அந்த மந்திரத்தை 'மரா' என்றுமட்டும் தலைகீழாக உச்சரிக்க இயன்றது. அப்படியே செய்யும்படி அவனுக்கு உற்சாகம் ஊட்டிவிட்டு ரிஷி தம்போக்கில் போனார். மரா, மரா என்று அவன் உச்சரித்தான். நாளடைவில் அந்த உச்சரிப்பு 'ராம, ராம' என்று தானாகவே மாறிவிட்டது. அது அவனுடைய மனதை மாற்றியமைத்தது. தூய வாழ்வு வாழ அவன் ஆரம்பித்தான். கெட்ட கனவினின்று விழித்துக் கொள்வதற்கு நிகராக இந்த மாறுதல் தானாக அவனுக்கு அமைந்தது. ராம நாம உச்சரிப்பில் அவன் ஆழ்ந்து ஈடு பட்டான். உடல் ஞாபகத்தை அவன் தாண்டியவன் ஆனான். ராம நாம உச்சாரணையில் அவனுக்குப் பேரானந்தம் உண்

டாயிற்று. அந்த சப்த பிரம்ம தியானத்தில் அவன் அமர்ந்தான். நாட்டம் அந்தர்முகப்பட்டது. நாளடைவில் புற்று ஒன்று கிளம்பி அவன் உடலை மூடிவிட்டது. சமாதியில் இருந்த அன்னவனுக்கு அது ஒன்றும் தெரியவில்லை. அக்காரணத்தை முன்னிட்டே அவ்விப்ரருக்கு வால்மீகி என்னும் பெயர் வந்தது. புற்றின்கண் பரிபக்குவம் அடைந்த சான்றோன் என்பது அந்த நாமத்தின் உட்பொருள்.

ராம மந்திரத்தின் ஸ்தூல வடிவினனாக வந்தவன் ஸ்ரீ ராமன். ராம என்னும் மந்திரத்தை இடைவிடாது உச்சரித்து வால்மீகி மஹரிஷி பரிபக்குவம் அடைந்தார். ஸ்ரீ ராமனுடைய பூலோக வரலாறு முழுதும் அவர் உள்ளத்தில் உதயமாயிற்று. அப்படி உதயமானதை இராமாயணம் என்னும் ஆதி காவியமாக அவர் அமைத்தார். அவதார மூர்த்தி ஒருவர் உலகத்தில் தோன்றும்பொழுது அவருடைய வரலாற்றைக் குறிக்க மஹரிஷி ஒருவரும் அதே காலத்தில் தோன்றி வருகிறார். அக்கோட்பாட்டின்படி ஸ்ரீ ராமனுடைய பூலோக லீலையைக் குறித்துவைக்க வால்மீகி மஹரிஷி தோன்றினார். நூலாசிரியரும், கதாநாயகனும் ஆகிய இருவரும் தெய்விகம் நிறைந்த மூர்த்திகள். அதை முன்னிட்டு இராமாயணமும் தெய்விகம் நிறைந்த இதிஹாசம் ஆகிறது.

முன்னுரை

பூவுலகில் பண்பாடே வடிவெடுத்துள்ள இலக்கியங்களுள் இராமாயணம் தலைசிறந்ததாகத் திகழ்கிறது. இது உருவெடுத்தது இந்தியாவில் எனினும் மானுட வர்க்கம் முழுவதின் மனதைக் கவரவல்லதாக இது இருக்கிறது. குழந்தை ஒன்று இராமாயணம் கேட்பதில் உற்சாகம் பூணுகிறது. பாமரன் ஒருவன் இராமாயணம் கேட்டுப் பண்பாடு அடைகிறான். பண்டிதன் ஒருவரின் சிந்தனை சக்தியை இது வளர்க்கிறது. ஆத்ம சாதகன் ஒருவனுக்கு இது அருள் நாட்டத்தை ஊட்டுகிறது. ஞானி ஒருவனுடைய ஞானத்தை இது உறுதிப்படுத்துகிறது. திரும்பத்திரும்பப் படிப்பதால் இராமாயணத்தில் யாருக்கும் சலிப்புத் தட்டுவதில்லை. நீரினுள் மூழ்கி நீராடுவதால் மேனி தெளிவடைகிறது. அதே விதத்தில் இந்த இதிஹாச ஆராய்ச்சியால் மனது தெளிவடைகிறது. உணவு உடலைப் பேணுவது போன்று இந்நூல் அறிவை வளர்க்கிறது. பண்பாடடைய முயல்கின்றவனுக்கு வாழ்நாள் முழுதும் துணையாய் அமைந்திருப்பது இராமாயணம்.

அழிவற்ற இந்நூல் ஸ்ரீ ராமன் என்னும் மூர்த்தியை நடுநாயகமாகக் கொண்டுள்ளது. ஆகையினால் இது இராமாயணம் என்னும் பெயர் பெற்றிருக்கிறது. ராம சரிதம் என்பது இதன் பொருள். இளைஞர்களுக்கும், முதியோர்களுக்கும், உலக வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும், ஆத்ம ஞானத்தில் திளைத்திருக்கும் தபஸ்விகளுக்கும் ஸ்ரீ ராமன் முன்மாதிரியாகிறான். அறநெறியே வடிவெடுத்தவன் அவன். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அறத்தைக் கடைப்பிடிப்பவனாக அவன் இலங்குகிறான். மண்ணுலகில் தோற்றத்துக்கு வந்

துள்ள அவன் யாண்டும் பரத்திலேயே நிலைபெற்றவனைகப் பொலிகின்றான்.

இராமனுக்கேற்ற கற்பு வாய்ந்த மனைவி சீதை. சீதை என்னும் சொல் படைச்சால் எனப் பொருள்படுகிறது. இச்சிறுமிக்குப் பெற்றோர் இல்லை. பூமகளின் செல்வியாகப் படைச்சாலில் இவள் கண்டெடுக்கப்பட்டு ஜனக மகாராஜா வினால் வளர்க்கப்பட்டாள். சீதை புனிதத்திற்கும் பெண்மைக்கும் உறைவிடமானாள். அமைதியுடன் சகித்துக்கொள்ளுதல் வாயிலாக அவள் துயரத்தை வென்றாள். பெண்ணின் பண்புக்கு முடிந்த குறிக்கோளாக சீதை இலங்குகின்றாள்.

நலம், கேடு ஆகிய இரண்டையும் இயற்கை உடைத்திருக்கிறது. இவ்விரண்டுக்கும் இடையிலுள்ள போராட்டம் எங்கும் புலனாகிறது. இராமாயணத்தில் நல்லவர்கள் ரிஷிகள் என்றும் கெட்டவர்கள் ராக்ஷசர்கள் என்றும் கூறப்படுகின்றனர். இது உலகைப் பற்றிய மற்றோர் உண்மை. தனக்கு எதிரியில்லாத ஜீவஜந்து உலகில் இல்லை. எனவே எதிரியைச் சமாளிப்பது யாண்டும் வாழ்க்கைப் பிரச்னையாக இருந்து வருகிறது. எதிரியைச் சமாளிப்பது வாழ்க்கைப் பயிற்சியாகிறது. வலிவுபடைத்ததே வாழ்க்கைக்குத் தகுதி உடையதாகிறது. வலிவைப் பெறுவதும் எதிரியைச் சமாளிப்பதும் இராமாயணம் கொடுக்கும் பாடங்களாகின்றன. ராமபாணம் வலிவுக்கும் நேர்மைக்கும் சின்னமாகிறது. அது வீண்போவதில்லை. அறநெறி காப்பவனுக்கு வாழ்க்கையில் சோதனைகள் அதிகம். அவைகளை முறையாகச் சமாளிப்பவன் வாழ்க்கையில் வெற்றியடைகிறான். இது இராமாயணம் புகட்டும் பாடமாகிறது. காமமும், பொருளாசையும் மனிதனைக் கெட்ட வழியில் தூண்டுகின்றன. இவ்விரண்டிலுள் காமத்தை அடிப்படையாகக்

கொண்டு இராமாயணம் உருவெடுக்கிறது. அயோத்யாபுரி, கிஷ்கிந்தை, இலங்கை ஆகிய மூன்றும் தலைமைப் பட்டணங்கள். அயோத்யாபுரியில் தசரத மன்னன் தனக்கு வாய்த்த மனைவிமார் மூவரிலும் கைகேயியினிடம் அளவுகடந்த அன்பு காட்டினான். அதன் விளைவாகச் சிறிதளவு தீங்கு வடிவெடுத்தது. கிஷ்கிந்தையில் காமம் ஓரளவு அதிகரித்திருந்தது. அதன் விளைவாக வாலியும் சுக்ரீவனும் சிறிது காலம் பிரிந்திருந்தார்கள். லங்காபுரியிலோ இராவணன் காம நோய்க்கு முற்றிலும் வசப்பட்டு இருந்தான். அதன் விளைவாக இராவணனும் அவனைச் சார்ந்திருந்தவர்களும் அழிந்து பட்டுப்போயினர். ஸ்ரீ ராமன் இந்த மூன்று இடங்களில் மூன்று விதமான முறைகளைக் கையாண்டு காமநோயைத் துடைக்கிறான். சமுதாயத்திலுள்ள தீங்குகள் பலவற்றிற்குக் காரணம் காமம். அவைகளை இராமாயணம் எடுத்துக் காட்டுகின்றது.

காமத்தை வெல்லுதற்கு ஏற்ப மனிதன் தெய்வத்தன்மையில் ஓங்குகிறான். இராமன் ஏகபத்தினி விரதம் பூண்டிருந்தான். இல்வாழ்வு வாழ்ந்ததற்கிடையில் அவன் காமத்தை வென்றவன். இராமனும் சீதையும் நெடுங்காலம் தவத்தில் ஈடுபட்டிருந்தனர். சந்தானத்தின் பொருட்டு அவர்களிருவரும் ஒரே ஒரு தடவை கூடினர். பெற்றோரின் புனிதத்தையும் பரிபாகத்தையும் முகாமையாகக் கொண்டு அவர்களுக்கு வாய்த்த சந்தானம் தெய்விகமே வடிவெடுத்திருந்தது. சந்தானத்தைப் பெறும் விஷயத்தில் இவ்வுலகமானது சீதாராமனைப் பின்பற்றுமானால் அது புனிதம் நிறைந்த நல்லுலகம் ஆகும்.

இராமாயணம்

பாலகாண்டம்

கால்ச் சக்கரம் சதா சுழன்று கொண்டிருக்கிறது. அதில் கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் ஆகிய நான்கு யுகங்கள் ஒன்றன்பின் ஒன்ருக வந்து கொண்டே இருக்கின்றன. இப்பொழுது நாம் கலியுகத்தில் வாழ்ந்து வருகிறோம். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, பண்டைக் காலத்தில் திரேதாயுகத்தில் இராமாயணம் நிகழ்வதாயிற்று. புண்ணிய நதியாகிய கங்கா நதிக்கு வடக்கே கோசல ராஜ்யம் என்பது ஒன்று இருந்தது. அது அக்காலத்தில் மிகப் பெரியதாக விளங்கியது. அந்த ராஜ்யத்துக்குள் சரயு நதி பாய்ந்து கொண்டிருந்தது. சரயு நதி கங்கா நதிக்கு உபநதியாகும். கோசல ராஜ்யத்தை ஆண்டு வந்த அரசர்கள் எல்லாரும் சூரிய குலத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுள் பலர் மேன்மை தங்கிய மன்னர்களாக மிளிர்ந்திருந்தனர். அன்னவர்களுள் மனுச்சக்கரவர்த்தி, இக்ஷ்வாகு, ரகு ஆகியவர்கள் குறிப்பிடத்தக்க தகைமை வாய்த்திருந்தனர். கோசல ராஜ்யத்துக்கு அயோத்யா பட்டணம் தலைமை நகராகத் திகழ்ந்திருந்தது. அப்பட்டணத்தின் அமைப்போ பாராட்டுதற்குரிய அரிய பாங்குகள் பல படைத்திருந்தது. அயோத்யா என்னும் சொல்லுக்கு யுத்தத்தில் அசைக்க முடியாதது என்னும் பொருள் வருகிறது. அக்காலத்தில் அது எவ்விதத்திலும் தோல்வியடைந்தது கிடையாது.

சூரிய குலத்து அரசர்களுள் தசரதச் சக்கரவர்த்தி என்பவர் ஒருவர் இருந்தார். அவர் கீர்த்தி மிக வாய்க்கப் பெற்றவர். அவர் நெடுங்காலம் செங்கோல் தாங்கி முறையாக நாட்டை ஆண்டு வந்தார். தசம் என்பது பத்து எனப்

பொருள்படுகிறது. ரதம் என்பது தேர். தசரதன் என்னும் சொல் பத்துத் தேர்களை ஏக காலத்தில் நடாத்த வல்லவன் என்று பொருள்படுகிறது. மன்னன் ஒருவனிடம் இருக்க வேண்டிய மாண்புகளெல்லாம் தசரதச் சக்கரவர்த்தியிடம் இனிது அமைந்திருந்தன. தடுக்க முடியாத பாங்கில் போர் வந்து வாய்த்தபோது அதைத் தசரத மன்னன் திறமையுடன் சமாளித்தார். நிலவுலகில் போர் ஏதுமில்லாது அமைதியுற்றிருந்தகாலை அவர் அக்காலத்தைக் குடிமக்களுடைய நலனுக்காக நன்கு பயன்படுத்தி வந்தார். அசுரர்களை எதிர்த்துத் தேவர்களுடைய நலனுக்காக அந்தத் தேவர்களோடு சேர்ந்து வெற்றிகரமாகப் போர் புரிந்த சிறப்பு இந்த அயோத்தி மன்னவருக்கு உரியதாயிற்று. தம்முடைய குடிமக்களை ஒரு தந்தையின் பாங்கில் இவர் பராமரித்து வந்தார். தம்முடைய குடும்பக் காரியமானாலும் சரி, குடிமக்களுடைய நலம் ஆனாலும் சரி அவைகளைப் பற்றிய திட்டங்களை எல்லாம் இவ்வரசர் நன்கு ஆலோசித்துச் செய்வார். எப்பொழுதும் முனிவர்களையும், சான்றோர்களையும் அணுகி அன்னவர்களுடைய அபிப்பிராயங்களை அனுசரித்தே மேலாம் காரியங்களையெல்லாம் இவர் நன்கு நிர்வகித்து வந்தார். இவருக்குப் பக்க உதவியாயிருந்த மந்திரிமார்களெல்லாம் ஆட்சித் திறமை மிக வாய்க்கப்பெற்றவர்கள். சுயநலத்துக்கு அவர்கள் முற்றிலும் புறம்பானவர்கள். இனி, குடிமக்களோ முறையாகக் கல்வி பயின்றவர்கள். ஒழுக்கத்தில் நன்கு நிலைநின்றவர்கள். அவர்கள் எல்லாரும் உழைப்பாளிகளாக இலங்கினர். நாட்டின் செல்வத்தை வளர்ப்பதில் அவர்கள் ஊக்கம் மிகப்படைத்திருந்தனர். வேந்தனுக்கும் வையகத்துக்கும் இடையில் ஒற்றுமை மிக வாய்த்திருந்தது. எல்லார் உள்ளத்திலும் திருப்தி நிறைந்திருந்தது.

நாடெங்கும் ஆனந்தம் குடிகொண்டது. இவை யாவுக்கும் மேலாக இயற்கைத் தாயின் தயவு வேண்டியவாறு அமைந்திருந்தது. நிலமகளோ செழிப்பு மிக வாய்க்கப்பெற்றவள். விளைவை வேண்டியவாறு அவள் வழங்கி வந்தாள். பருவத்துக்கேற்ற பிரகாரம் அளந்தெடுத்து மழை பொழிந்து வந்தது. தசரதச் சக்கரவர்த்தியின் ஆட்சியிலே மானுடர் முயற்சியும், தெய்வ சம்பத்தும் இனிது ஒன்று கூடியிருந்தன. பூலோக வைகுண்டமாகக் கோசல நாடு காட்சி கொடுத்தது.

தசரத மன்னனுடைய வாழ்விலே சம்பத்துக்கள்யாவும் வாய்க்கப்பெற்றிருந்தது வாஸ்தவம். ஆயினும் அவருடைய விருத்தாப்பிய தசையில் வியாகுலம் ஒன்று அவருடைய உள்ளத்தில் ஊசலாடிக்கொண்டிருந்தது. ஆண்டுகள் பல கடந்துபோய்விட்டன. எனினும் அவருக்கு மகப்பேறு ஏதும் அதுவரை வாய்க்கவில்லை. அதைப்பற்றிய துயரம் அவர் உள்ளத்தை அரித்துக்கொண்டிருந்தது. இந்த ஒரு குறையை முன்னிட்டு ஏனைய வாய்ப்புக்கள்யாவும் பயனற்றவைகளாய்ப் போய்விட்டன. மகப்பேறு ஒன்றை நாடி அவருடைய உள்ளம் தவித்துக்கொண்டிருந்தது. இக்குறையை அகற்றுதற்கு ஏற்றதொரு வைதிகச் சடங்கைச் செய்வது பொருந்தும் என அவருக்குப் புலப்பட்டது. அதைக் குறித்துச் சான்றோர்களுடைய அபிப்பிராயம் யாதோ என்று ஆவலுடன் வினவினர். அதில் ஈடுபடுவது முறை என்னும் ஆமோதிப்பு அவர்களிடமிருந்து வந்தது. புத்திர காமேஷ்டி யக்ஞம் ஒன்று நன்கு நிறைவேறுமானல் புத்திர பாக்கியம் வாய்ப்பதும் உறுதி. அந்த யாகத்தை முறையாக நிறைவேற்ற வல்லவராக ரிஷ்யசிருங்கர் என்னும் முனிவர் ஒருவர் இருந்தார். அச்சான்றோரைச் செங்கோல் தாங்கிய மன்னர் பக்தி பூர்வமாக அணுகினர்.

முனிவரும் மன்னனுடைய வேண்டுதலுக்கு மகிழ்வுடன் சம்மதம் கொடுத்தார். அரசனுடைய அதிருஷ்டத்துக்கு அச்சம்மதமே நல்ல அறிகுறியாயிற்று. புத்திர காமேஷ்டி யக்ஞமோ நிறைவேற்றுதற்கு மிகக் கடினமானது. கிரியா விசேஷங்கள் பலப்பலவாக அதில் அமைந்திருந்தன. அயோத்யாபுரி அரசாங்கத்தில் இடம், பொருள், ஏவல். ஆகியவைகள் வேண்டியவாறு அமைந்திருந்தன. அவை யாவும் இந்த யாகத்துக்காகவென்றே நன்கு பயன்பட்டன.

புத்திரகாமேஷ்டி யக்ஞம் சிக்கல்கள் பல படைத்தது. இம்மியளவு பிசகினாலும் அது பயனற்றுப்போம். அதற்குரிய நியதிகளை முறையாக நிறைவேற்ற எல்லார்க்கும் இயலாது. இக்காலத்திய பௌதிக விஞ்ஞானிகள் ஆபத்து நிறைந்த ஜடசக்தியை எங்ஙனம் திறமையோடு கையாளுகிறார்களோ அதே விதத்தில் பழங்காலத்து ரிஷிகள் சித் சக்தியைத் தவத்தின் வாயிலாக நன்கு பயன்படுத்தினர். ஜடசக்திக்கு நிகராகச் சித்சக்தியையும் ஆக்கத் துறையில் பயன்படுத்தலாம், அல்லது அழிவுத் துறையிலும் பயன் படுத்தலாம். ரிஷ்யசிருங்க முனிவர் அதை ஆக்கத்துறையில் பயன்படுத்துவதில் நிபுணராயிருந்தார். அவருடைய ஆணைக்கு உட்பட்டு தசரதச் சக்கரவர்த்தியும் அவருடைய மனைவிமார் மூவரும் மிகக் கடினமான விரதங்களுக்கு உட்பட்டனர். தவத்தின் மேலாம் நிலை என்றே அதை இயம்பவேண்டும். நியதிகள் யாவற்றையும் ஒழுங்காகவும், முறையாகவும் ராஜ குடும்பம் நிறைவேற்றியது.

இதே வேளையில் பரலோகத்தில் சம்பவம் ஒன்று நேர்வதாயிற்று. தேவர்களெல்லாரும் சிருஷ்டிக் கர்த்தாவாகிய பிரம்மதேவனை அணுகித் தங்களுக்கு அமைந்திருந்த கஷ்டத்தைத் தெரிவித்தனர். லங்காபுரியை ஆண்டு வந்த இரா

வணன் வரம்பு கடந்த ஆக்கிரமிப்புகளில் ஈடுபட்டிருந்தான். காமநோயைத் தனக்கு அமைந்திருந்த ஒரு பெரிய வாய்ப்பாக அவன் கருதி வந்தான். மனிதனைத் தவிர வேறு எந்த மூர்த்தியினாலும் அவனைக் கொல்ல முடியாது என்னும் வரத்தை அவன் பிரம்மதேவனிடமிருந்து பெற்றிருந்தான். அந்த வரத்தைக் குறித்து அவன் படைத்திருந்த செருக்கு வரம்பில் அடங்காது. மனிதனை அவன் ஒரு துச்ச ஜந்துவாகக் கருதினான். ஆதலால் மனிதனிடத்திருந்து தனக்கு அழிவு வரலாகாது என்னும் வரத்தை அவன் கேட்கவில்லை. தேவர்கள் யாராலுமே அழித்துவிட முடியாத அரக்க வேந்தனுக்கோ ஆணவம் தலைக்கு மேல் ஏறியிருந்தது. தேவ கணங்களை அவன் சித்திரவதை பண்ணி வந்தான். இக் கொடுமையை வானவர்கள் படைப்புத் தெய்வத்திடம் சமர்ப்பித்தனர். அந்த வரத்தைக் கொடுத்திருந்த நான்முகக் கடவுளுக்கே அது சமாளிக்க முடியாத நெருக்கடியாயிற்று. ஆதலால் விண்ணவர்களை அழைத்துக்கொண்டு அந்த அயனார் வைகுண்டத்துக்குச் சென்றார். பிரபஞ்சம் முழுவதுக்குமே ஏற்பட்டிருந்த தொல்லையை வைகுண்டவாசியாகிய மஹாவிஷ்ணுவிடம் தெரிவித்தனர். புன்முறுவல் பூத்தவராக ஹரி சிறிது நேரம் அமைதியுற்றிருந்தார். பூலோகத்தில் தசரதச் சக்கரவர்த்தி புத்திரகாமேஷ்டி யக்ஞத்தை முறையாக நிறைவேற்றி வருவதால் நாராயணன் தாமே அந்தச் சக்கரவர்த்தியினுடைய நான்கு புதல்வர்களாக அவதரித்து வருவதாகவும் பூலோகத்தில் இராவணனால் நிகழ்ந்து வந்த இன்னல்களை ஒழுங்குப்படுத்துவதாகவும் பகவான் உறுதி கூறினார்.

பூலோகத்தில் தசரதச் சக்கரவர்த்தியின் புத்திர காமேஷ்டி யக்ஞம் உச்சநிலை எய்தியது. வேள்விக்கனலி

னின்று காட்சிக்கரிய பிரகாச மூர்த்தி ஒருவர் மேலே கிளம்பி வந்தார். அவர் கையில் பாயசம் நிறைந்திருந்த கனகக் கலசம் ஒன்று இருந்தது. அதை அவர் தசரதச் சக்கரவர்த்திக்குக் கருணையோடு எடுத்துக் கொடுத்தார். கலசத்திலிருந்த அமிர்தத்தை மஹாராணிமார் மூவருக்கும் எடுத்து வழங்கும்படி அந்தத் தேவதையிடமிருந்து ஆணை பிறந்தது. அமிர்தத்தை அருந்துவதன் விளைவாக அவர்களுக்குக் கருத்தரிக்கும் என்கின்ற நற்செய்தியும் தெரிவிக்கப்பட்டது. பிறகு அத்தெய்வம் தீயின் உள்ளேயே அந்தர்தானம் ஆனார். சக்கரவர்த்தியானவர் பாயசத்தின் செம்பாதியை மூத்த மஹாராணியாகிய கௌசல்யாதேவிக்கு எடுத்து வழங்கினார். கால் பங்கை சுமித்ரா தேவிக்குக் கொடுத்தார். மற்றும் உள்ள கால் பங்கை கைகேயிதேவிக்குக் கொடுத்தார். பொற்கலசத்தில் ஒட்டியிருந்த பகுதியை வழித்தெடுத்து சுமித்ரா தேவிக்கு இரண்டாம் தடவையாக வழங்கினார். இச்செயலின் விளைவாக தேவிமார் மூவரும் கருத்தரிக்கலாயினர். அவர்கள் கர்ப்பவதிகளாக இருந்தபொழுது பரமனைக் குறித்து வந்தனையும், வழிபாடும் ஓயாது நிகழ்ந்து கொண்டிருந்தன.

காலச் சக்கரம் சுழன்று கொண்டிருந்தது. கிரகங்கள் தத்தம் மார்க்கங்களில் உருண்டோடிக் கொண்டிருந்தன. அவைகளுள் ஐந்து கிரகங்கள் அவ்வவைகளுக்குரிய வீடுகளை ஏகோபித்து எய்தலாயின. இது நிகழ்வதற்கரிய ஒரு சம்பவம். இவ்வேளையில் பிறப்பெடுக்கின்றவன் தெய்விகம் முழுதுமே வாய்க்கப்பெற்றவனாக இருப்பான். சித்திரை மாதத்தில் சுக்லபட்சத்தின் ஒன்பதாம் நாளன்று இந்த நல்ல வேளை வந்து அமைவதாயிற்று. அப்பொழுது கௌசல்யா தேவி இராமனைப் பெற்றெடுத்தாள். சில நாட்களுக்குப் பிறகு கைகேயிதேவி பரதனை ஈன்றெடுத்தாள். இன்னும்

சில நாட்களுக்குப் பிறகு சுமித்ராதேவி இலட்சுமணனையும் சத்ருக்கனனையும் இரட்டையர்களாகத் தோற்றுவித்தாள். இங்ஙனம் பிறப்பெடுத்திருந்த சகோதரர்கள் நால்வரிடத்தும் தர்மமும், சத்தியமும், சிரத்தையும், வீரியமும் ஏகோபித்துத் திகழ்வனவாயின.

2. சகோதரர்கள் நால்வரும் நல்லமுறையிலே கல்வி பயின்று வந்தனர். வருங்காலத்தில் அவர்கள் நால்வரும் பாராளும் வேந்தர்களாக வாய்க்கவிருப்பதால் அதற்கேற்ற கல்வி அவர்களுக்கு வழங்கப்பட்டது. சமுதாயத்தின் நடைமுறையில் அறநெறி நிலைநிற்கும் அரசர்கள் அரியபெரிய பொறுப்புக்களை வகித்து வருகின்றனர். அறவாழ்வு வாழ்பவர்களுக்கே அது சாத்தியமாகிறது. இந்த ராஜ குமாரர்களுடைய நித்திய வாழ்வு முற்றிலும் அறத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அடக்கம் என்றால் என்ன என்பதற்கு முன்மாதிரிகளாக அந்த அரசகுமாரர்கள் இலங்கினார்கள். ஆத்ம சாதனங்களில் அவர்கள் ஆழ்ந்து ஊறியிருந்தனர். வேதங்களை அவர்கள் விதிப்படி பயின்றனர். வேத அங்கங்களையும் அவர்கள் முறையாகக் கற்று வந்தனர். நாடு ஆள்பவர்களுக்கு உடற்பயிற்சி முற்றிலும் இன்றியமையாதது. வில்வித்தை, குதிரை ஏற்றம், யானையை நடாத்துதல், தேர் கடாவுதல் ஆகிய பயிற்சிகளை இராமனும் அவனுடைய தம்பிமார்களும் ஊக்கத்துடன் பயின்று வந்தனர். நிறை கல்வி என்றால் என்ன என்பது அந்த அரசகுமாரர்களின் வாயிலாக வெளியாயிற்று. பக்தியிலும் ஞானத்திலும் அவர்கள் நிலைத்திருந்தனர். நல்லொழுக்கமே வடிவெடுத்தவர்களாக அவர்கள் இருந்தார்கள். பொதுநல சேவையில் அவர்கள் பேரூக்கம் படைத்திருந்தனர். உடற்கட்டு மிக உடைத்திருந்தனர். போர்க்கலையில்

நிபுணர்கள் ஆனார்கள். ஸ்ரீ ராமனும் அவனுடைய தம்பிமார்களும் இத்தகைய தெய்விகப் பேரறிவையும், பராபக்தியையும், பேராற்றலையும் ஒருங்கே அடையப்பெற்று வந்தனர்.

உடன் பிறந்தார் நால்வரும் ஒருவரை ஒருவர் இனிது நேசித்தனர். வடிவத்தில் நால்வர் எனினும் சொரூபத்தில் அவர்கள் ஒன்றாகத் திகழ்ந்தனர். தமையனாகிய இராமன் தம்பிமார்களாகிய மூவரிடத்திலும் தந்தைக்கு நிகராக நடந்துகொண்டான். பின்பு தம்பிமார் மூவருமோ தமையனைத் தந்தைக்கு நிகராகக் கருதினர். அன்னவர்கள் வணங்கும் தெய்வமாக இராமன் திகழ்ந்தான். அன்னைமார்களையும் பிதாவையும் தெய்வங்களாக அவர்கள் பாராட்டினர். சொந்தத் தாய், மாற்றாந்தாய் என்னும் வேறுபாட்டுக்கு அவர்களுடைய உள்ளங்கள் ஒருபொழுதும் இடம் கொடுக்கவில்லை. மாத்ரு, பித்ரு பக்தியில் அவர்கள் தலை சிறந்து இருந்தனர். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்னும் கோட்பாட்டில் இராமன் மற்ற மூவர்க்கும் மேம்பட்டவனாகவே இருந்தான். புத்ரோத்தமன் என்றால் இராமனே தகைசான்ற புத்ரோத்தமன் ஆனான். அவனுக்கு நிகரான புத்திரன் ஒருவனை இத் தொல்லுலகம் இதுகாறும் அறிந்திலது. சகோதரர்கள் நால்வரும் அவரவருடைய இயல்புகளுக்கு ஏற்றவாறு இணைபிரியாத இரண்டு ஜோடிகளாக இலங்கினர். இராமனும் இலட்சுமணனும் முதல் ஜோடியாக அமைந்தனர். பரதனும் சத்ருக்னனும் அடுத்த ஜோடியாக வாய்த்தனர். இத்தகைய இணக்கத்தினின்று அவர்கள் ஒருபொழுதும் பிசகவில்லை. சகோதர வாஞ்சைக்கு இலக்காக அவர்கள் யாண்டும் திகழ்ந்து வந்தனர்.

பெற்றோர்களுக்கும் பொதுமக்களுக்கும் பேரானந்தத்தை ஊட்டுபவர்களாக இராம இலட்சுமணனும், பரத

சத்ருக்கனனும் அமைந்திருந்தனர். இந்நால்வருள் மூத்த வனாகிய இராமன் மக்கள் எல்லார்க்கும் ஆனந்தமாகத் திகழ்ந்தான். மக்களுடைய நல்வாழ்வுக்கு வழிகாட்டுகிற துருவ நட்சத்திரமாகவும் அவன் இலங்கினன். சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்து வந்த தம் புதல்வர்களுக்கு மணம் முடித்து வைக்கும் காலம் நெருங்கியதை தசரதச் சக்கர வர்த்தி சிந்தையில் வாங்கினர். தம் கருத்தை முதியோர்கள் சிலரிடம் தெரிவித்தார். அவர்களும் ஏகோபித்து அவர் கருத்துக்குச் சம்மதம் தெரிவித்தார்கள்.

நம் நாட்டில் மணம் முடித்துவைப்பதைப் பற்றிய கருத்து பழங்காலத்தில் ஒரு போக்கில் இருந்தது; இக் காலத்தில் அது முற்றிலும் மாறிவிட்டது. சிறுவர்களும் சிறுமிகளும் இளம் வயதிலிருந்தபொழுதே அக்காலத்தில் விவாகத்தின் வாயிலாக இணைத்து வைக்கப்பட்டனர். அக்காலத்திய மனப்பான்மைக்கு அது முற்றிலும் பொருத்த மானதாக இருந்தது. தக்க தருணம் வரும் வரையில் அக் காலத்தில் காம உணர்ச்சி உள்ளத்தில் இடம்பெறவில்லை. அது அரியதொரு வாய்ப்பாகவிருந்தது. ஆண் குழந்தை களும் பெண் குழந்தைகளும் உடன் பிறந்தவர்களாவது மக்கள் வசிக்கும் திட்டத்தை அனுசரித்ததன்று. முற்பிறப் பில் யார் யாராகவோ இருந்தவர்கள் இப்பிறப்பில் தெய்வா தீனமாக உடன் பிறந்தவர்களாக வந்து வாய்க்கின்றனர். அதை முன்னிட்டுச் சகோதர சகோதரி வாஞ்சை இயல் பாகவே ஊற்றெடுத்து வளர்கிறது. நான் ஏன் இன்னார்க்கு உடன் பிறந்தவன் ஆனேன்? என்னும் கேள்வி இளம் வயதில் எழுவதில்லை. அதற்கு மாறாகப் பிறப்பு பந்தம் உறுதியாக வந்து பிடித்துக்கொள்கிறது. இது இறைவ னுடைய திட்டம். இதற்கு நிகராக யார் எந்தக் குடும்பத்,

துடன் சம்பந்தம் பண்ணிக்கொள்ளுதல் என்னும் தீர்மானத்தை முதியோர்கள் முடிவுகட்டுகின்றனர். சின்னஞ் சிறுவர்களுக்கு அத்தகைய மனபரிபாகம் வாய்க்கமாட்டாது. அங்ஙனம் காம உணர்வு வடிவெடுப்பதற்கு முன்பே விவாகத்தின் வாயிலாக இணைக்கப்பட்டிருந்த சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்குமிடையில் களங்கமற்ற மன ஒற்றுமை படிப்படியாக வடிவெடுத்தது. இல்வாழ்க்கைக்கு அது இனிய இணக்கமாக அமைந்திருந்தது. விவாகரத்தைப் பற்றிய பிரச்னை ஒரு பொழுதும் எழுந்தது கிடையாது. ஆனால் இன்றைக்குச் சூழ்நிலை முற்றிலும் மாறிவிட்டது. பல காரணங்களை முன்னிட்டுக் காம உணர்ச்சி சின்னஞ்சிறு வயதிலேயே சிறுவர் உள்ளத்தில் உருவெடுக்கிறது. பழங் காலத்தில் மணந்துகொண்ட சிறுவனும் சிறுமியும் கிட்டத் தட்டச் சகோதர சகோதரி வாஞ்சையுடன் குருகுலத்தில் பிரம்மச்சரிய ஆச்ரமத்தைக் கடைப்பிடித்தனர். அத்தகைய சூழ்நிலை இக்காலத்தில் வாய்க்கமாட்டாது. ஆதலால் விவாகம் பண்ணுவதை எவ்வளவுக்கெவ்வளவு சமுதாயம் ஒத்திவைக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு காம நோயைக் குறைப்பதற்கு அது உற்றதோர் உபாயமாகும். சுருங்கச் சொல்லின் பழங்காலத்துக்குப் பாலியவிவாகம் பயன்பட்டது. இக்காலத்துக்கு அது பயன்படாது. வயது முதிர்ந்த யுவர்களையும் யுவதிகளையும் பெற்றோர்கள் மணச் சடங்கின் வாயிலாக இணைத்து வைப்பதே இக்காலத்துக்கேற்ற விவாகத் திட்டமாகும். மேல்நாட்டு முறைப்படி காதலர்கள் காதலிகளைத் தேடி எடுப்பது வெற்றிகரமான விவாகமாவதில்லை. ஏனென்றால் 'காமத்துக்குக் கண் இல்லை' என்பது மறுக்க முடியாத உண்மை. பொருத்தமான விவாகத்தைக் காமனுடைய ஆதிக்கத்திலிருக்கும் யுவர்களும் யுவதிகளும் அமைத்

துக்கொள்ளமாட்டார்கள். அப்பொறுப்பைப் பெற்றோர்கள் எடுத்துக்கொள்வதே முறை. அதன் விளைவாக இல்வாழ்வு நம் நாட்டில் இனிதாக நடைபெறுவதற்கு நிகராக மேல் நாடுகளில் நடைபெறுவதில்லை. விவாகரத்து ஆங்கு உச்சநிலையிலிருக்கிறது. நம் நாட்டுக்கோ விவாகரத்து ஒரு நாளும் ஒவ்வாது.

மானுடனொருவன் தான் வாழ்ந்துவரும் சமுதாயத்துக்கு அங்கமாக அமைகிறான். உடலில் அமைந்துள்ள அங்கங்கள் உடலின் நலனுக்காகச் செயல்புரிகின்றன. அதே விதத்தில் ஒரு சமுதாயத்துக்குரிய மானுடனொருவன் சமுதாய நலனை முன்னணியிலும் தன் சொந்த நலனைப் பின்னணியிலும் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறான். இக்கோட்பாட்டுக்கு ஏற்ப வாழ்பவனே நல்ல குடிமகனாகிறான்.

3. தசரதச் சக்கரவர்த்தியும் அவருடைய மந்திரிப் பிரதானிகளும் அரசாங்க அலுவல்களை ஆர்வத்துடன் கவனித்து வருகிறார்கள். அப்பொழுது ஏவலாள் ஒருவன் அலுவலகத்தினுள் பிரவேசிக்கிறான். மாளிகையின் வாயிலண்டை மாமுனிவர் விஸ்வாமித்ரர் வந்து நின்றுகொண்டிருக்கிறார் என்னும் செய்தியை அவன் தெரிவிக்கிறான். இந்த நல்ல செய்தி அரசன் காதில் வீழ்கிறது. கவனித்து வந்துகொண்டிருந்த அலுவல்களையெல்லாம் ஒதுக்கிப்போட்டுவிட்டு அரசர் அவசர அவசரமாக எழுந்திருக்கிறார். மாளிகையின் வாயிலுக்கு அவர் தாமே விரைந்து செல்லுகின்றார். ஏனையவர்கள் அடக்க ஒடுக்கத்துடன் அவரைப் பின்பற்றுகின்றனர். விஸ்வாமித்ர மஹரிஷிக்கு பாத்யம், அர்க்யம் ஆகியவைகளை விதிப்படி வேந்தர் சமர்ப்பிக்கிறார். மஹரிஷியின் பாதங்களைத் தொட்டு வணங்குகிறார். சபா மண்ட

பத்துக்கு மாமுனிவர் மரியாதையோடு அழைத்துச் செல்லப்படுகிறார். மேலாம் ஆசனம் ஒன்றின்மீது அமர்ந்திருக்கும்படி அவர் வேண்டப்படுகிறார். முனிவரும் அங்ஙனமே அரியாசனத்தின்மீது அமர்கிறார். அவரைப் பின்தொடர்ந்து ஏனைய அனைவரும் அவரவர் தகுதிக்கேற்ற ஆசனங்களின் மீது அமர்கின்றனர்.

வேந்தர் விண்ணப்பிக்கிறார்: "போற்றுதற்குரிய பெரியோய், தங்களுடைய வையக வாழ்வு மானுட வர்க்கத்துக்கே நல்லதோர் எடுத்துக்காட்டு ஆகிறது. தாம் தமது ஜீவிதத்தை ஒரு சாதாரணமான மண்ணுலக மன்னனாக ஆரம்பித்தீர்கள். ஆனால் இப்பொழுதோ தாம் மானுட ஜென்மத்தின் உச்ச ஸ்தானத்தை அடைந்திருக்கிறீர்கள். பாரமார்த்திகப் பெருவாழ்வைத் தாம் தீவிரமாகக் கடைப்பிடித்தீர்கள். பலதடவைகளில் வையக வேட்கைகளுக்கு உட்பட்டவராகத் தாம் நெறிவழுவிக் கீழ்மையடைந்தீர்கள். ஆனால் தோல்விகளைக் குறித்துத் தாம் தளர்வடையக் கிடையாது. ஒவ்வொரு வீழ்ச்சியும் புதியதொரு முயற்சிக்குத் தூண்டுகோல் ஆயிற்று. எடுத்துள்ள ஒரே ஒரு மானுட ஜென்மத்தில் தாம் ராஜாவானீர்கள். பிறகு ராஜரிஷி ஆனீர்கள். அதைத் தொடர்ந்து மஹரிஷி ஆனீர்கள். கடைசியாகப் பெறுதற்கரிய பேறு ஆகிய பிரம்ம ரிஷியாகத் தாம் இப்பொழுது திகழ்கின்றீர்கள். எவ்வுலகிலாவது யாராலுமே அடைதற்குரிய பேறு இதனினும் மேலானது ஒன்றுமில்லை. தம்மைத் திரும்பத் திரும்பப் போற்றுகிறோம். அயராத முயற்சியே வடிவெடுத்துள்ள மேலோய், தம்மை மேலும் மேலும் போற்றுகிறோம்.

"அருட்கடலே, தாம் தமது திருவடிகளை இந்த அயோத்தியின்கண் நாட்டியதின் வாயிலாக நான் தன்னியன் ஆகி

யுள்ளேன். என் குடும்பம் தன் கருணைக்கு இலக்காகி யிருக்கிறது. எங்கள் இக்ஷ்வாகு வம்சமே அருளுக்குப் பாத்திரமாயிருக்கிறது. கிருபை கூர்ந்து தாங்கள் ஈண்டு எழுந்தருளியிருப்பது பலப்பல புண்ணிய க்ஷேத்திரங்கள் ஒன்று கூடுவதற்கு நிகரானது. இந்த ராஜ்ஜியத்திலுள்ள அனைத்தையும் தங்கள் திருவடியில் சமர்ப்பிக்கிறேன். தங்கள் ஆணையைச் சிரமேற்கொண்டு அதை அப்படியே நிறைவேற்றி வைக்கிறேன். நான் யாண்டும் தங்கள் தொண்டன்.''

வேந்தனுடைய வினயபூர்வமான வணக்கம் வந்திருந்த விஸ்வாமித்திர மஹரிஷிக்கு நிறைமகிழ்வை ஊட்டுகிறது. புன்முறுவலுடன் அவர் பேசுகிறார்: "வேந்தே, வாக்குத் தத்தத்தைத் தாம் வேண்டியவாறு வழங்கியுள்ளீர்கள். அதை நிறைவேற்றி வைப்பதிலும் தாம் உறுதிப்பாடே வடிவெடுத்து இருப்பீராக. நான் யாகம் ஒன்று நடாத்தி வருகிறேன். மாரீசன், சுபாகு என்னும் இரண்டு அரக்கர்கள் இரத்தத்தையும், மாமிசத்தையும் கொட்டி அந்த யாகத்தைப் பாழ்படுத்த உறுதிபூண்டிருக்கின்றனர். என்னுடைய தபோபலத்தால் அன்னவர்களுடைய விஷமத்தைத் தடுக்க எனக்கு இயலும். ஆயினும் மேலாம் இலட்சியம் ஒன்றை முன்னிட்டு அப்போக்கில் என் தபோபலனை நான் பாழ் படுத்தலாகாது செங்கோல் தாங்கிய செம்மலே, உம்முடைய மூத்த செல்வனாகிய இராமன் ஒருவனுக்கு மட்டுமே இந்த அரக்கர்கள் இருவரையும் ஒழித்துத் தள்ளுவது சாத்திய மாகும். வெறும் பத்தே பத்து நாட்களுக்கு மட்டும் தம் புதல்வனுடைய பணிவிடை எனக்குத் தேவையாக இருக் கிறது. உமது அருமைச் செல்வனுக்குத் தீங்கு ஏதும் வராதபடி நான் பார்த்துக் கொள்கிறேன். பொதுநலனுக்

காக அவனுடைய தெய்வீகப் பராக்கிரமத்தை வெளிப்படுத்தும் காலம் வந்துவிட்டது. என் கருத்தை இங்கு வீற்றிருக்கும் வசிஷ்ட மஹரிஷியும் ஏனைய மகாத்மாக்களும் முற்றிலும் ஆமோதிப்பார்கள்."

தசரதச் சக்ரவர்த்தி ஸ்தம்பித்துப் போகிறார். சிறிது நேரம் அசையாது ஊமைபோன்று நிற்கிறார். பிறகு மனதை ஒருவாறு சாந்தப்படுத்துகிறார். திக்கித் திக்கித் தடுமாறிப் பேசுகிறார்: "இராமனுக்குப் பதினாறு ஆண்டு இன்னும் பூர்த்தியாகவில்லை. இராக்ஷசர்களை எதிர்த்துப் போர்புரிகிற அனுபவம் அந்த இளம் கன்றுக்கு இன்னும் வரவில்லை. என்னுடைய படை முழுவதையும் எனக்குப் பின்பலமாக வைத்துக்கொண்டு தங்களுடைய யாகத்தின் தூய்மையை நானே பாதுகாக்கிறேன். ஆதலால் இதுவிஷயத்தில் தாங்கள் கொண்டுள்ள ஆவலை அகற்றிவிடுங்கள். இதே சந்தர்ப்பத்தில் தங்களிடம் மற்றும் ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கிறேன். இராக்ஷசர்களை எதிர்த்துப் போர்புரியும் செயலில் இராமனுடைய வல்லமையை இவ்வளவு விரைவில் சோதிக்க வேண்டாம்."

ஒரு காலத்தில் சினமே வடிவெடுத்திருந்த விஸ்வாமித்ர மஹரிஷி இப்பொழுது சினந்துகொண்டவர் போன்று பாசாங்கு பண்ணுகிறார். அளந்தெடுத்த சொற்களை உறுதியுடன் இயம்புகிறார்: "வேந்தே, இப்பொழுது தாம் கொடுத்துள்ள வாக்கினின்று பின்வாங்குகின்றீர். ரகுகுலத்து அரசன் ஒருவனுக்கு இச்செயல் ஒவ்வாது. இக்ஷ்வாகு வமிசத்து அரசர்கள் இதுவரையில் தர்மத்தினின்று வழுவியது கிடையாது; ஆனால் தாமோ கொடுத்துள்ள உறுதிமொழியினின்று வழுவுகின்றீர். இக்குறைபாட்டின் மூலமாக உம் குடும்பத்திற்குக் கேட்டை வரவழைக்கின்றீர். நான் எண்ணிவந்த

எண்ணம் நிறைவேறப்பெருது திரும்புகிறேன். உம்முடைய செல்வனேடு கொஞ்சிக் குலாவிக்கொண்டு நெடுங்காலம் வாழ்ந்திருப்பீராக."

அரசவையிலே அமர்ந்திருந்த ஆன்றேர்கள் உள்ளத்தில் இச்சம்பவம் சங்கடத்தை உண்டுபண்ணியது. விஸ்வாமித்ர மஹரிஷிக்கு அதிருப்தி ஏற்படுமானல் அதற்கேற்ற அசம்பா விதத்தை விளைவித்தவனுக்கு வில்லங்கம் நிச்சயமாக வரும். சான்றேர் ஒருவர் எதையுமே தமக்காகவென்று வேண்டுவ தில்லை. அவர் எதை வேண்டினலும் அது யாண்டும் பொது நலனுக்கு உரியது ஆகும். அப்படி அவர் வேண்டியதை வழங்க மறுப்பவனுக்குப் பொல்லாங்கு வருவது திண்ணம். இவ்வுண்மையை வசிஷ்ட மஹரிஷி நன்கு அறிந்திருந்தார். ஆதலால் இச்சங்கடத்தைச் சரிப்படுத்த அவர் முன்வந்தார். அறநெறி பிறழாத அரசன் ஒருவன் கொடுத்த வாக்கினின்று ஒருபொழுதும் பிறழுவதில்லை என்று தசரதச் சக்ரவர்த்திக்கு அமைதியாக ஞாபகமூட்டினர். கொடுத்துள்ள சொல்லி னின்று விலகுபவனுடைய புண்ணியங்கள் யாவும் அழிந்து பட்டுப் போகின்றன. இனி, விஸ்வாமித்ர மஹரிஷியோ ஒரு சாதாரணமான மூர்த்தி அல்லர். ஆற்றல்கள் அனைத் துக்கும் அவர் உறைவிடம். தாம் நடத்தி வந்த யாகத்தை அவர் தாமே காக்கவல்லவர். அப்படியிருந்தும் இராமனு டைய பணிவிடை அதற்குத் தேவை என்று தெரிவித்ததன் வாயிலாக அந்த அரசகுமாரனுக்கு வாழ்க்கைப் பயிற்சி ஒன்று கொடுக்க அவர் எண்ணியிருந்தார். இராமன் எதற் காக இவ்வுலகில் பிறப்பெடுத்திருக்கிருனே அதற்கு ஏற்ற பயிற்சியை அவனுக்குத் தரவேண்டியது அவசியமாயிற்று. இராமனுக்கோ எந்தச் சூழ்நிலையிலும் எக்கேடுமே ஒரு பொழுதும் வாராது. இங்ஙனம் வசிஷ்டர் விளக்கியது சக்கர

வர்த்திக்கு இப்பொழுது விளங்கிற்று. இராமனையும், அவனுடன் இணைபிரியாதிருக்கும் இலட்சுமணனையும் யாகம் காத்தல் பொருட்டு அனுப்பி வைப்பதாகப் பணிவுடன் விஸ்வாமித்திரரிடம் தெரிவித்தார்.

போற்றுதற்குரிய பெரியவர்கள் எல்லாரும் அந்த மண்டபத்தில் அமர்ந்திருந்தனர். ராஜ குமாரர்களாகிய இராமனும், இலட்சுமணனும் ஆங்கு அழைத்து வரப் பட்டனர். அச்சிறுவர்கள் விண்ணுலகத்தினின்று மண்ணுல கத்துக்கு வந்தவர்கள் போன்று தென்பட்டனர். இளைஞர் களைத் தொடர்ந்து தாய்மார்கள் மூவரும் ஆங்கு எழுந்தருளி அவர்களுக்கேற்ற ஆசனங்களில் அமர்ந்தனர். தந்தையாகிய தசரதர் தம் தனயர்களுக்குப் புதியதாய் அமைந்த கடமையை எடுத்து விளக்கினர். இளைஞர்கள் இருவரும் தலைவணங்கித் தந்தையின் ஆணையை ஏற்றுக்கொண்டனர். அடுத்தபடியாக அவர்கள் அன்னைமார் மூவரின் பாதங்களில் வீழ்ந்து வணங் கினர். அதே பிரகாரம் பிறகு பிதாவைப் போற்றினர். அடுத்தபடியாக ராஜ குடும்பத்து ஆச்சாரியராக வசிஷ்ட மஹரிஷியை வணங்கினர். இனித் தங்களுக்கு வாய்ப்பதாக இருக்கும் குருவாகிய விஸ்வாமித்ர மஹரிஷிக்குத் தங்களு டைய வழிபாட்டைச் செலுத்தினர். அதன் பிறகு ஆங்கு அமர்ந்திருந்த முதியவர்கள் எல்லார்க்கும் தங்கள் வணக்கத் தைத் தெரிவித்தார்கள். அவர்கள் எல்லாருடைய ஆசீர்வா தங்களையும் பெற்றுக்கொண்டு ராஜகுமாரர்கள் இருவரும் மஹரிஷியைப் பின்தொடர்ந்து சென்றனர். ஆத்மீகப் பேராற்றலைப் பின்பற்றிப் பூவுலகுக்குரிய பராக்கிரமம் பணி வுடன் புறப்பட்டுப் போனதன் காட்சி அதுவாகும். நில உலகத்தவர்களுக்கும், வான உலகத்தவர்களுக்கும் காண்ப தற்கரிய காட்சியாக அது தென்பட்டது. ஞான ஒளியுடன்

மிளிர்ந்த மாமுனிவர்க்கு இருமருங்கிலும் ஆற்றலின் வடிவினர்களாகிய ராஜகுமாரர்கள் ஊக்கத்துடன் நடந்து சென்றனர்.

அயோத்யாபுரிக்குள்ளே ஆத்மீக ஆற்றலின் திருவுருவமாகிய விஸ்வாமித்ர மஹரிஷி நுழைந்தவுடனே மக்கள் எல்லார் உள்ளத்திலும் பேரானந்தம் பொங்கியது. இராமனை அழைத்துச்செல்ல அவர் எண்ணங்கொண்டிருந்தது உடனடியாகத் திகைப்பையும் துயரத்தையும் ஊட்டியது. விஷயத்தை அவர் எடுத்து விளக்கியபொழுது மேன் மக்கள் எல்லார்க்கும் ஒரு விதத்தில் மன அமைதி வருவதாயிற்று. இந்த மூன்றுவித உணர்ச்சிகளும் ஒன்றைதொடர்ந்து ஒன்று விரைவில் வந்தன. இச்சம்பவத்தில் மானுட வாழ்க்கைக்குரிய பாடங்கள் சில அடங்கியிருக்கின்றன. நெற்பயிர் நன்கு வளர்தல் பொருட்டு அதை இடம் மாற்றிப் பண்பட்ட பூமியில் நடுதல் வேண்டும். அதே விதத்தில் நல்ல பயிற்சியின் பொருட்டு இளைஞன் ஒருவன் பிறப்பகத்தினின்று பயிற்சிக்கூடத்துக்குப் போய் ஆகவேண்டும். கோழிக் குஞ்சுகள் ஓரளவு வளர்த்தான பிறகு தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ளும் பயிற்சியைப் பெறுதற்பொருட்டு தாய்க்கோழி அவைகளை விரட்டியோட்டுகிறது. இப் பாடத்தை இயற்கை மக்களுக்குப் புகட்டுகிறது. சிறுவர்கள் நெடுங்காலம் பெற்றோர்கள் பராமரிப்பிலேயே பாதுகாத்து வைக்கப்படுவதில் பயனொன்றுமில்லை. பிறரைச் சார்ந்திருக்கும் கோழைத்தனம் உதவாது. தன்னையே சார்ந்திருக்கும் திண்மையை விரைவில் பெற்றாகவேண்டும். அதன் பொருட்டு வளர்ந்து வருகிற இளைஞர்கள் பெற்றோர்களிடமிருந்து பிரிந்து புதிய சூழ்நிலைக்குப் போவது அவசியம். புதிய சூழ்நிலையில் உள்ளம் உறுதி பெறுகிறது. அறிவு தீட்டப் பெறுகிறது. ஞானம் ஓங்குகிறது. சமயோசிதபுத்தி உரு

வெடுக்கிறது. சந்தர்ப்பத்திற்கேற்ற செயல்களைச் சமாளிக்கும் திறமை தானாக வருகிறது. இத்தகைய வாழ்க்கைப் பயிற்சி இளைஞர்களுக்கு முற்றிலும் இன்றியமையாததாகும். பிறப்பகத்தில் பெறும் பயிற்சியைப் பார்க்கிலும் படிப்புக் கூடத்தில் பெறும் பயிற்சி யாண்டும் மேலானது. இக்கோட்பாட்டை நடைமுறையில்கொண்டு வருவதற்கே விஸ்வாமித்ர மஹரிஷி அயோத்தியின்கண் வந்து இராமனைப் பலவந்தமாக ஏற்றுக்கொண்டு சென்றார். இவையாவுக்கும் மேலாக அந்த மஹரிஷியின் பெரிய பொறுப்பொன்று இருந்தது. அரிய பெரிய அஸ்திர சஸ்திரங்களை அவர் அடையப்பெற்றிருந்தார். அவைகளைப் பற்றிய ஞானம் அவரோடு மறைந்துபட்டுப்போகலாகாது; தக்க பாத்திரம் ஒன்றைத் தேடி அப்பாத்திரத்தினிடத்துத் தாம் பெற்றிருந்த போர்த்திறமையை ஒப்படைப்பது அவருடைய கடமையாயிற்று. அதன் பொருட்டே அதற்கேற்ற பாத்திரமாகப் பூவுலகில் பிறந்திருந்த பரம புருஷனாகிய இராமனை அழைத்துச் சென்றார். எக்காரியத்துக்காக இராமன் மண்ணுலகுக்கு வந்திருந்தானோ அக்காரியத்துக்கு ஏற்ற நல்ல பயிற்சியைத் தருகின்ற கடமை விஸ்வாமித்ரருக்கு உரியதாயிருந்தது. அதை உணர்ந்தே அவர் இராமனைத் தம்மோடு அழைத்துச் சென்றார்.

மஹரிஷியும் அவருடைய மர்ணுக்கர்களாகிய இராமனும் இலட்சுமணனும் முதல் இரவைச் சரயு நதிக்கரை ஓரத்தில் கழித்தனர். அப்பொழுது இளைஞர்கள் இருவருக்கும் பலம், அதிபலம் என்னும் இரண்டு மந்திரங்கள் உபதேசிக்கப்பட்டன. இந்த மந்திரங்களை ஜபிப்பதன் வாயிலாக மானுடன் ஆயாசத்தையும், பசியையும், தாகத்தையும் சிரமமின்றிச் சமாளிக்க முடியும். குருவை அணுகியதன் விளைவாக இவர்கள் பெற்ற முதல் பேறு இதுவாம்.

4. போகும் வழியில் குருவும் சிஷ்யர்களும் காமாஸ்ர மத்தை எட்டினர். இங்குதான் சிவனார் மன்மத தகனம் செய்தார் என்பது ஐதிகம். மன்மத தகனத்தின் வாயிலாகக் காமம் அழிக்கப்பட்டதால் இந்த இடத்துக்குக் காமாஸ்ரமம் என்ற பெயர் வந்தது. இங்கு இவர்கள் மூவரும் ஓர் இரவு தங்கியிருந்தனர்.

அடுத்தபடியாகக் குருவும், சிஷ்யர்களிருவரும் அடர்ந்த அடவி ஒன்றைக் கடந்து போக நேர்ந்தது. அந்த அடவியில் தான் தாடகையும், அவளுடைய தனயன் மாரீசனும் வசித்து வந்தனர். அவர்களிருவரும் அசாதாரணமான வலுவு படைத்த பயங்கரமான அரக்கப் பிரகிருதிகள் ஆவர். விரும்பிய மாத்திரத்தில் வேண்டியவாறு வடிவங்களை மாற்றிக் கொள்வது அவர்களுக்குச் சாத்தியமாயிற்று. மானுடர்களைச் சித்திரவதை பண்ணுவதிலும், மானுட மாமிசத்தைப் புசிப்பதிலும் அவர்கள் மகிழ்வு மிகக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு அஞ்சி மானுடர் யாரும் அப்பக்கத்தில் எட்டிப் பார்க்கமாட்டார்கள். அத்தகைய ஆபத்து நிறைந்த காட்டுக்குள் மஹரிஷி சிஷ்யர்களிருவரையும் அழைத்து வந்தார். "இராமா, வேண்டுமென்றே உன்னை இங்கே அழைத்து வந்திருக்கிறேன். இவ்வனத்தில் வசித்திருக்கிற தாடகையைக் கொன்றாக வேண்டும். அது உனக்குத்தான் சாத்தியம். பெண்பால் ஒருத்தியைக் கொல்லுவது பொருந்துமா என்று தயங்காதே. பெண் கொலை பொருந்தாது என்னும் கோட்பாடு நாகரிகம் படைத்துள்ள சமுதாயத்துக்கு உரியது. பயங்கரமானவைகளும் கொடூரத்தன்மை வாய்ந்தவைகளும் ஆகிய ஜந்துக்களை எதிர்க்கிறபொழுது இது ஆண்பாலா, பெண்பாலா என்னும் கேள்வி எழ வேண்டியதில்லை. நல்லவர்களைக் காத்தல் பொருட்டுக் கொடூரத்தன்மை வாய்ந்தவர்

களைக் கொன்றேயாக வேண்டும். இந்த ராக்ஷஸியை அறை கூவி அழை. பின்பு அவளை ஒழித்துத் தள்ளு," என்று முனிவர் தம் சிஷ்யனுக்குக் கட்டளையிட்டார்.

இராமனும் குரு ஆணையை நிறைவேற்றத் தொடங்கினன். தன்னுடைய வில்லுக்கு நாண் ஏற்றி அதில் அவன் ஓசையைக் கிளப்பினன். இந்த ஓசையைக் கேட்ட மாத்திரத்திலே வனத்தில் வசித்து வந்த உயிர்வகைகள் மருண்டு போய் நாலா பக்கமும் ஓட்டம் பிடித்தன. தான் வசித்து வந்த குகையினின்று தாடகை கோபாவேசத்துடன் கிளம்பி வந்தாள். அறைகூவுதல் எங்கிருந்து கிளம்பிற்றோ ஆங்கு அவள் கர்ஜித்துக்கொண்டு வானவெளியில் பாய்ந்தாள். மானுடஉருப்படிகள் மூன்று அவள் கண்ணுக்குத் தென்பட்டன. அக்கணமே அவைகளைக் கசக்கிக்கொன்று விழுங்கிவிட அவள் தீர்மானித்தாள். அம்மூன்றும் சேர்ந்து தனக்கு நல்லதொரு நச்சுத் தீனியாகும் என்றும் எண்ணினள். கழுகு வானத்தினின்று முயலின்மீது மோதுவது போன்று இம்மூவரின் மீதும் தாடகை விரைந்து பாய்ந்தாள். அங்ஙனம் வானத்தினின்று நிலத்தை நோக்கிச் சீறி வந்த அரக்கியை ராமபாணம் நடுவழியில் சந்தித்தது. அவளுடைய ஹிருதயத்தை அது துளைத்துக்கொண்டு போனது. அது மட்டுமல்ல, பூமியில் விழுவதற்கு முன்பே மாமிசமும், எலும்புத் துண்டுகளும், ரத்தமும் ஒன்று சேர்க்கப்பட்ட இறைச்சி மூட்டையாகத் தடால் என்று அது தரையில் வீழ்ந்தது. நல்லவர்களுக்கு யாண்டும் தொல்லைகளாகத் தோன்றியிருந்த கொடூர ஜந்துக்களை அழிக்க வந்தவன் இராமன். அத்தகையவனுக்கு இது கன்னிப் போராக வாய்த்தது. அவன் செயலை ஆமோதிக்கின்ற பாங்கில் குருமூர்த்தி சிஷ்யனைக் கட்டித் தழுவிக்கொண்டார். இதுகாறும்

இக்கானகத்தில் கால்வைக்கமாட்டாது மக்கள் மருண்டிருந் தனர். தாடகை வதைக்குப் பிறகு மக்களை மகிழ்வுடன் வரவேற்கும் கவர்ச்சிகரமான கானகமாக அது மாறி யமைந்தது.

வழியில் போய்க்கொண்டிருந்தபொழுது விஸ்வாமித்ர முனிவர் இராமனுக்கு அஸ்த்ர சஸ்த்ர வித்தைகள் பல புகட்டி வந்தார். அவை யாவும் மானுடவுலகில் காண முடியாத மேலான ஆற்றல்கள் படைத்தவைகளாக இருந் தன. செயலுக்கு வரும்படி அவைகளை ஏவுதல், ஆக்கிர மிப்புச் செயலில் எப்படி ஈடுபடுவது, தற்பாதுகாப்புச் செயலை எப்படிச் சமாளிப்பது, செயல்கள் யாவிலுமிருந்து எப்படிப் பின் வாங்குவது ஆகிய பகுதிகளை அவர் புகட்ட லாயினர். அந்த அரிய ஆயுதங்களைச் செயலில் ஈடுபடுத்து வதைவிட செயலினின்று அமைதியாக அடங்கிப்பின் வாங்கு வது மிகக் கடினமானது. அத்தகைய அரிய பெரிய ஆயுதப் பிரயோகங்களையும் ஆயுத அடக்க முறைகளையும் இராமனும், இலட்சுமணனும் நன்கு கற்றுக்கொண்டனர். இக்காலத்திய ஜடசக்தி ஆயுதங்களை யார் கையாண்டாலும் அவைகளின் ஆற்றல் எல்லார்க்கும் ஒரே பாங்கானது. ஆனால் அக்காலத் திய மந்த்ரசக்தி வாய்ந்த ஆயுதங்களோ அவைகளைக் கையாண்டு வந்த மூர்த்திகளின் ஆத்ம சக்திக்கேற்ப வல்ல மையில் மேலோங்கலாயின. இலக்கில் பிசகிப்போவது மந்த்ர சக்தியால் தூண்டப்பெற்ற ஆயுதங்களுக்குக் கிடை யாது. இந்த அரிய கோட்பாட்டின் பொருட்டே விஸ்வா மித்ர மஹரிஷி ஸ்ரீ ராமனைத் தகுதிவாய்ந்த சிஷ்யனாகத் தேர்ந்தெடுத்தார்.

விஸ்வாமித்ர மாமுனிவருடைய வாசஸ்தலம் சித்தாஸ் ரமம் என்னும் பெயர் படைத்திருந்தது. மூர்த்திகள் மூவரும்

கடைசியாக அந்த அரிய ஆஸ்ரமத்தை வந்தடைந்தனர். ஆஸ்ரமவாசிகளாகிய ரிஷிபுங்கவர்களுக்கு அவர்களுடைய வருகை பரமானந்தத்தை அளித்தது. ஏனென்றால் தங்களுடைய குலபதி கருதிச் சென்ற காரியம் கருதியவாறு கைகூடியிருந்தது. தசரதச்சக்கரவர்த்தி போன்ற பெருமை வாய்ந்த பூபதி ஒருவரை இவர்தாம் தம் வழிக்குத் திருப்ப முடியும். அதற்கு மேலாக யாகத்தைப் பாழ்படுத்துதற் கென்றே துணிந்திருந்த ராக்ஷசர்களைத் தோற்கடிப்பது தசரத குமாரனுக்குத்தான் சாத்தியம்.

யாகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் அதிவிரைவில் நிறைவேறின. அதைப் பூர்த்தி பண்ணுதற்கு ஆறுநாட்கள் பிடிக்கும். அந்த ஆறு நாட்களிலும் மஹரிஷி மௌன முற்றிருத்தல்வேண்டும். எந்த க்ஷணத்தில் வேண்டுமானாலும் ராக்ஷசர்கள் யாகசாலையின்மீது மோதுவார்கள். ஆதலால் உணவும் உறக்கமுமின்றி அரசகுமாரர்கள் அல்லும் பகலும் முழுவிழிப்புடன் வேள்வியைப் பாதுகாக்க வேண்டும். அதற்கு முற்றிலும் ஆயத்தமாக அண்ணனும் தம்பியும் காத்திருந்தனர். கடைசி நாளன்று வானத்தில் ஒரே கர்ஜனை. கார்மேகம் மலைமலையாக உருண்டு வருவதற்கு நிகராக அரக்கர் படை தோன்றுவதாயிற்று. அப்படைக்கு மாரீசனும் சுபாகுவும் தலைமை தாங்கினர். தம்பி இலட்சுமணன் என்ன செய்யவேண்டும் என்பதை அவனுக்குத் தெரிவித்து விட்டு மூத்தவன் மானவ அஸ்த்ரத்தை மாரீசன்மீது ஏவினன். அந்த அஸ்திரமும் தன் கடமையை ஒழுங்காக நிறைவேற்றியது. தாக்க வந்தவனைத் தகர்த்துத் தள்ளுவதற்குப் பதிலாக அவன் உள்ளத்தில் குழப்பத்தைக் கிளப்பி அவனைக் கடலினுள் வெகுதூரத்துக்கப்பால் வீசியது. ஆக்னேய அஸ்திரத்தை ஏவி இராமன் சுபாகு

வைச் சுட்டெரித்தான். பிறகு இரு சகோதரர்களும் ஒன்று கூடி மலைமலையாகப் புரண்டுவந்த ராக்ஷசப் படைகளைத் துடைத்துத் தள்ளினர். யாகமும் வெற்றிகரமாக முடிவுக்கு வந்தது. ஆறு நாட்கள் ஆறு மாதங்களுக்கு நிகராகச் சிக்கல் நிறைந்த நெருக்கடிகளை உண்டுபண்ணிக் கொண்டிருந்தன. ராம லட்சுமணர்களைத்தவிர வேறு யாருக்குமே அந்த நெருக் கடியைச் சமாளிக்கச் சாத்தியப்படாது. விஸ்வாமித்ர மகா முனிவருக்குப் பரமதிருப்தி உண்டாயிற்று. தசரதச் சக்கர வர்த்திக்குத் தாம் எவ்வளவுதூரம் கடமைப்பட்டவராக இருந்தார் என்பதை உள்ளத்தினுள் உணர்ந்தார். அதை வாய்விட்டுப் பேசவில்லை. ஆனால் ராஜகுமாரர்களுடைய பராக்கிரமத்தைத் திரும்பத்திரும்பப் பாராட்டினர். சித்தாஸ் ரமம் என்றால் தொடுத்த கர்மத்தை வெற்றிகரமாக நிறை வேற்றும் ஸ்தாபனம் எனப் பொருள்படுகிறது. இன்றைக் குச் சித்தாஸ்ரமம் உண்மையாகவே சித்த ஆஸ்ரமாக இலங்குகிறது என்று இயம்பினர். தீமையை எதிர்த்து வெல்லுபவன் சித்தன். அந்த ஆஸ்ரமத்துக்கு அத்தகைய அந்தஸ்தை அமைத்தவர்கள் இராமனும் இலட்சுமணனும் ஆவார்கள்.

தசரச குமாரர்கள் தரணியில் எதற்காகத் தோன்றி யிருக்கிறார்கள் என்பதைத் தகைசான்ற விஸ்வாமித்ர விப்ரர் நன்கு அறிந்திருந்தார். அந்தத் தெய்விகத்திட்டம் நன்கு நிறைவேறுதல் பொருட்டுத் தமக்கு வாய்த்திருந்த பெரிய கடமையையும் அந்தத் தபோதனர் நன்கு உணரலானர். தமக்குத் தசரத குமாரர்களின் சீரியதொண்டு முற்றிலும் தேவையாயிருந்தது என்று அவர் வெளிக்குக் காட்டிக் கொண்டார். உள்ளூர உள்ளத்தில் அவர் உணர்ந்திருந்தது இந்த ராஜகுமாரர்களை உலக க்ஷேமத்திற்காக ஆயத்தப் படுத்தல் ஒன்றேயாம்.

அரச குமாரர்களிருவரும் தங்களுடைய இறையவனிட மிருந்து அடுத்து வருகிற ஆணையை நிறைவேற்றுதற்கு அமைதியுடனும் பவுடணினும் காத்திருந்தனர்.

5. அக்காலத்தில் பிரசித்தி பெற்றிருந்த பட்டணம் ஒன்று இருந்தது. அதன் பெயர் மிதிலாபுரி. அதை ஜனக மஹாராஜா ஆண்டு வந்தார். அவர் கல்வியிலும் மேன்மை யுற்றிருந்தார். பண்பாட்டில் சிறந்த அவர் யாகம் ஒன்றை நடாத்த ஏற்பாடு செய்து வந்தார். அத்துடன் அவரிடம் அதிசயிக்கத் தக்க வில் ஒன்று இருந்தது. பல இடங்களி லிருந்து கற்றவர்களும், மற்றவர்களும் ஆற்றல் மிக வாய்க்கப் பெற்றிருந்த அரச குமாரர்களும் அவ்விழாவில் கலந்து கொள்ள ஆங்கு வந்துகொண்டிருந்தனர். சித்தாஸ்ரமத்தின் குலபதியாகிய விஸ்வாமித்ர மஹரிஷி அவ்வேள்வியில் கலந்துகொள்ள இசைந்திருந்தார். அவருடன் ஆஸ்ரம வாசிகள் பலர் புறப்பட்டுப் போவதற்கும் ஆயத்தமாய்க் கொண்டிருந்தனர். இவ்விஷயங்களையெல்லாம் ஒருநாள் காலையில் விஸ்வாமித்ரர் ரகுராமனுக்கு எடுத்துரைத்தார். விருப்பமிருந்தால் அந்த அரசகுமாரர்களிருவரும் இந்த யாகத் தைப் பார்க்க வரலாம் என்று இயம்பினர்.

ஆசசாரியர் ஆணைப்படி நடந்துகொள்ளத் தாங்கள் என்றும் ஆயத்தமாயிருப்பதை அவரிடம் இராமன் தெரி வித்தான். பொருளைத் தொடர்ந்து நிழல் வருவதற்கு நிகராகக் குருவைப் பின்பற்றிச் சிஷ்யர்கள் செல்வதுதான் முறையென்றும் அவன் இயம்பினன். ஆஸ்ரமத்தின் திருக் கூட்டம் புறப்பட்டுச் சென்றது. அத் திருக்கூட்டத்தில் இராமனும், இலட்சுமணனும் சேர்ந்திருந்தது ஆஸ்ரமவாசி கள் எல்லார்க்கும் பெரு மகிழ்வை ஊட்டியது. போய்க்

கொண்டிருந்தவர்களுக்கு மிதிலாபுரியின் காட்சி நெடுந் தூரத்திற்கு அப்பாலிருந்தே கண்ணுக்குத் தென்பட்டது. தூரத்தில் இருந்தது எனினும் அது மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தது. ஆயினும் அதனோடு சீர்தூக்கிப் பார்க்குமிடத்துப் பாழடைந்து கிடந்த ஆஸ்ரமம் ஒன்று இடைவெளியில் தென்பட்டது. முன்பொரு காலத்தில் இந்த ஆஸ்ரமம் மேன்மைகள் பலவற்றைப் படைத்திருந்ததன் அறிகுறிகளும் தென்பட்டன. அதற்குக் காரணம் யாதோ என்று இராமன் முனிவரிடம் வேண்டினான்.

அந்த ஆஸ்ரமத்தின் வரலாற்றை விஸ்வாமித்ரர் ரகுவீரனிடம் எடுத்தியம்பினார். முன்னொரு காலத்தில் அந்த ஆஸ்ரமம் அழகுக்கும் அருளுக்கும் உறைவிடமாயிருந்தது. கௌதம மஹரிஷி அதன் குலபதியாயிருந்தார். அந்த ரிஷியின் வாழ்க்கைத் துணையாயிருந்தவள் அகல்யை. அவளுடைய அழகோ ஒப்புயர்வு அற்றது. தேவேந்திரனுடைய மனதை அம்மாதரசியின் மேலாம் அழகு கவர்ந்தது. காம நோய்க்கு உட்பட்ட அவ்விண்ணவர்கோன் கௌதம முனிவர் போன்று வேஷம் பூண்டு வந்து அந்த அழகியோடு முறைவழுவிக் கூடலானான். நிகழ்ந்ததைக் கௌதமர் கண்டுபிடித்துவிட்டார். நெறிவழுவிய ஆடவனை அலியாகும்படியும் பெண்பாலைக் கல்லாகும்படியும் அந்த ரிஷி சபித்தார். இந்த விபத்துக்கு விமோசனம் இல்லையா என்ற விண்ணப்பம் நெறிவழுவிய இருவரிடமிருந்தும் வந்தது. பின்பு ஒருகாலத்தில் இராமன் என்னும் நாமம் தாங்கிய நாராயணனுடைய அவதார மூர்த்தி அப்பக்கத்தில் வருவான். அவன் வாயிலாக விமோசனம் வாய்க்கும். அப்பொழுது தபஸ்வியாகிய தாமும் அங்குத் திரும்பி வரும்படி வாய்க்கும் என்று சொன்னார். மனதிலே சஞ்ச

லத்தை ஊட்டிய இந்த நிகழ்ச்சியை மறந்திருத்தல் பொருட்டு அவர் ஹிமாசலத்துக்குப் புறப்பட்டுப் போனார். இவ்வரலாற்றை இயம்பி முடிப்பதற்குள்ளாக அத்திருக்கூட்டம் பாழடைந்து கிடந்த எல்லைக்குள் வந்து விட்டது. கதையைக் கேட்டுக்கொண்டு வந்த இராமனுடைய பாதம் தரையின் மீது கிடந்த கல்லின் மீது தற்செயலாய்ப் படிந்தது. அவனுடைய திருவடி பட்டவுடனே அந்தக் கல் மாயமாய் மறைந்து விட்டது. அதற்குப் பதிலாக நேர்மை வாய்க்கப்பெற்ற மாது ஒருத்தி பக்தி நிறைந்த அடக்க ஒடுக்கத்துடன் நின்றுகொண்டிருந்தாள். இவள்தான் சாபத்துக்கு இலக்கான மாதரசியாகிய அகல்யை ஆவாள். சிறிது நேரத்துக்குள்ளாக முன்பு சங்கல்பித்திருந்தபடி கௌதம மஹரிஷியும் அங்கே பிரசன்னமானார். இப்பொழுது ரிஷி தம்பதிகளாகிய இவர்கள் இருவரும் ஒன்றுகூடி இராமனுக்கும் இலட்சுமணனுக்கும் பாதபூஜை விரிவாக நடாத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியிலே இயற்கையின் பெரிய திட்டம் ஒன்று புதைந்து கிடக்கிறது. பிரபஞ்சமெங்குமுள்ள ஜீவாத்மாக்கள் தங்களுடைய யதார்த்த நிலையினின்று வழுவிக் கீழ் நிலைக்கு வந்தவர்கள் ஆவார்கள். அக்கீழ்நிலையோ கல்லுக்கு ஒப்பாகிறது. ஜடபுத்தியில் ஜீவாத்மாக்கள் உழன்று கிடக்கின்றன. ஆனால் பரமாத்மாவோடு தொடர்பு வைப்பதற்கேற்ப ஜடநிலை பின்னணிக்குப் போகிறது. படிப்படியாகச் சேதன நிலை முன்னணிக்கு வருகிறது. இதுவே ஜீவாத்மனைப் பற்றிய உண்மை. இக்கோட்பாட்டை இக்காலத்திய பௌதிக விஞ்ஞானம் தன்போக்கில் விளக்குகிறது. உயிரற்றுக் கிடப்பவைகள் உயிர் உற்றவைகளாகத் திருந்தியமைவது இயற்கையின் திட்டமென்று பௌதிக விஞ்ஞானம் இயம்புகிறது. இயற்கையின்கண் இது சதா நிகழ்ந்து

கொண்டிருக்கிறது. வெறும் மணல் தரையாயிருப்பது செழிப்பு நிறைந்த மண் தரையாய் மாறுவதை இதற்குச் சான்றாகக் காண்கிறோம். செழிப்புத் தரையில் செடிவகைகள் உயிராக உருவெடுக்கின்றன. இதே பேருண்மையைப் புராணம் தன்போக்கில் புகட்டுகிறது. கன்னியாகுமரியாகிய பார்வதி பர்வத ராஜனுடைய புதல்வி, மலைமகள் என்னும் பெயர் பெறுகிறாள். மலையோ உயிரற்ற கல். அதினின்று உயிர் உருவெடுப்பது குமரியின் சம்பவம் என விளக்கப் படுகிறது. இக் குமரி சிவனாரை அடைதல் பொருட்டுத் தென்முனையில் தவம் புரிவதில் இந்த மேலாம் கருத்து அடங்கியிருக்கிறது. ஜீவாத்மாக்கள் யாவும் படிப்படியாகக் கல் நிலையினின்று கடவுள் நிலையை எட்ட முயலுவதற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருப்பது அகல்யா தேவியின் சாப விமோசனமாம்.

6. மிதிலாபுரியில் யாகம் நிகழ்வதற்காகப் பரந்த இடவசதி செய்யப்பட்டிருந்தது. அவரவர் அந்தஸ்திற் கேற்பத் தங்குவதற்கான கொட்டகைகள் அமைக்கப்பட் டிருந்தன. விஸ்வாமித்ர மஹரிஷியும் அவருடைய திருக் கூட்டத்தினரும் அமைதியாக இந்த வேள்வி முகாமினுள் நுழைந்தனர். தங்கியிருப்பதற்கேற்ற வசதிகளெல்லாம் தாராளமாக அமைக்கப்பெற்றிருந்தது ஆங்கு நுழையும் பொழுதே தென்பட்டது. சௌபாக்கியம் நிறைந்த இடம் என்பது சொல்லாமலே விளங்கிற்று. பின்பு அங்கு வந்து தங்கியிருந்தவர்களெல்லாம் கல்வியிலும் கேள்வியிலும் மேலோர்கள் என்பதும் வெளியாயிற்று. அக்கம் பக்கங்களி லிருந்தும் நெடுந்தூரத்துக்கு அப்பாலிருந்தும் அவர்கள் அங்கு வந்து குழுமியிருந்தனர். யாகம் நடாத்துவதற்கிருந்த ஹோதாக்களோ அக்கலையில் நிபுணர்களாயிருந்தனர்.

கௌதம முனிவருக்கும் அகல்யாதேவிக்கும் மூத்த மகனாக வாய்த்திருந்த சதானந்தர் ஜனக மஹாராஜாவுக்கு முதல் அர்ச்சகராக அமைந்திருந்தார். இந்த அர்ச்சகர்தான் விஸ்வாமித்ரரை மரியாதையுடன் எதிர்கொண்டழைத்தவர். அவரைச் சந்தித்தவுடனே விஸ்வாமித்ரர் அவருடைய தாயும் தந்தையும் மங்களகரமாக மீண்டும் சந்தித்த விஷயத்தை விளம்பினார். அவருடைய தாயும் தந்தையும் ஸ்ரீ ராமனுக்குப் பக்தி பூர்வமாக வந்தனை வழிபாடு செய்தனர். ஏனென்றால் அவர்களுடைய சாபத்துக்கு விமோசன மூர்த்தியாயிருந் தவன் இராமன். இதைக் கேட்ட மைந்தர் சதானந்தர் மட்டில்லா மகிழ்வு அடைந்தார்.

தம்முடைய யாகசாலைக்கு அருள்துறையில் மகோன்னத நிலையடைந்திருந்த விஸ்வாமித்ர மஹரிஷி வந்திருக்கிறார் என்பதைக் கேள்வியுற்ற ஜனக மஹாராஜா பரமானந்த மடைந்தார். விதேக மன்னனாகிய அவர் விஸ்வாமித்ரருடைய சந்நிதிக்குச் சென்று அவருடைய வருகைக்கு நன்றி செலுத் தினார். அவருடைய வருகையால் ஆங்கு நிகழ்ந்துகொண் டிருந்த யாகத்துக்குத் தனி மஹிமை ஏற்பட்டிருக்கிறது என் றும் அவர் தெரிவித்தார். விஸ்வாமித்ரருடைய திருக்கூட்டத் திலே தேவதைகள் போன்று திகழ்ந்து கொண்டிருந்த இளைஞர்களிருவருடைய காட்சி ஜனகருடைய கவனத்தைக் கவர்ந்தது. அதைக் குறிப்பால் அறிந்துகொண்ட குலபதி சித்தாஸ்ரமத்துக்கு அந்த யுவர்களிருவரும் புரிந்த தெய்விகத் தொண்டைச் சிலாகித்துப் பேசினார். வீரம் செறிந்த இளைஞர்களிருவரும் மிதிலை நகரிலே விதேக மன்னனுடைய மாளிகையிலே வைக்கப்பட்டிருந்த வில்லைக் காண்பது முற்றி லும் அவசியம் எனக் கருதி முனிவர் தாமே அவர்களை ஆங்கு அழைத்து வந்திருப்பதாகத் தெரிவித்தார். அதனுடைய

உட்கருத்தையும், நோக்கத்தையும் மாமுனிவர் விளம்பரப் படுத்தாமலேயே மன்னவர் அறிந்துகொண்டார். அப்பேச்சை அவர்கள் அத்துடன் நிறுத்திவிட்டனர்.

பண்டைக்காலத்தில் பரத கண்டத்தில் அடிக்கடி யாகங்கள் நிகழ்ந்து வந்தன. அந்த யாகங்களில் நான்கு முக்கிய மான கூறுகள் அமைந்திருந்தன. நாட்டிலே ஏராளமாக விளைந்து வந்த தனதானியங்களைத் தாராளமாக மக்களுடைய நலனுக்காகப் பயன்படுத்தியது முதல் கூறு ஆகும். மக்கள் யாகங்களில் என்னென்ன பாங்குகளில் கலந்து கொண்டார்கள் என்பது அக்காலத்தியச் சமுதாய அமைப்புக்கு விளக்கமாயிற்று. கல்வியில் மேலோங்கியிருந்தவர்கள் ஆச்சாரிய ஸ்தானங்களை ஆங்குப் பெற்று வந்தனர். அறிவு வளர்ச்சியை விரும்பியவர்கள் யாக வைபவங்களை நன்கு பயன்படுத்திக் கொண்டனர். அது இரண்டாவது கூறு ஆகும். மூன்ருவதாக ஞானமும், கல்வியும் மக்களுக்கிடையில் வேண்டியவாறு எடுத்து வழங்கப்பட்டன. அவரவர் திறனுக்கேற்ற பிரகாரம் அந்த ஞானக் கொடையை அவர்கள் ஏற்று வந்தனர். நான்காவதாக ஒவ்வொரு யாகமும் ஒரு குறியை நோக்கி நடாத்தப்பட்டது. அதற்குத் திருஷ்டாந்தம் ஒன்று எடுத்துக் கொள்வோமாளுல் தசரதச் சக்கரவர்த்தி துவக்கிய அஸ்வமேத யக்ஞம், புத்ரகாமேஷ்டி யக்ஞமாகப் பூர்த்தியாயிற்று. அந்த யக்ஞத்தின் விளைவும் உலகுக்கு வெளிப்படையாயிற்று.

ஜனகச் சக்கரவர்த்தி நிகழ்த்தி வந்த யாகத்தில் முதல் புரோகிதராக வாய்த்திருந்த சதானந்தருக்கு ஏற்பட்டிருந்த கடமை மிக முக்கியமானது. யாகத்தில் வந்து கலந்து கொண்டவர்களுக்குப் பண்பின் மேலாம் பாங்குகளை எடுத்துப் புகட்டுவது அவருடைய கடமையாயிற்று. மானுட

வாழ்க்கையில் முன்னேற்றமும், பிற்போக்கும் மாறி மாறி வாய்ப்பதுண்டு என்பதை அவர் நன்கு விளக்கிக் காட்டினர். அதற்குச் சான்ருக அங்குத் திருமேனி தாங்கிச் சாந்நித்தியமா யிருந்த விஸ்வாமித்ரரை எடுத்துக்கொண்டார். அம் மாமுனி வரைப் பக்கத்தில் வைத்துக்கொண்டே அவரைப் பற்றி அப்படி ஆராய்ச்சி பண்ணியது மிகக் கடினமான செயலாகும். அவர் கொடுத்த விளக்கத்தில் ஏதேனும் பிழை நிகழ்ந்திருந் தால் அது மன்னிக்க முடியாத பொல்லாங்காக முடிந்திருக் கும். ஆயினும் தத்துவ ஆராய்ச்சி பண்ணுகிற பாங்கில் அதை அவர் முறையாகச் செய்து சாதித்தார். அதன் சுருக்கம் வருமாறு: 'விஸ்வாமித்ர மன்னர் செங்கோல் பிசகாத கோமகனை வாழ்க்கையைத் துவக்கினர். குடிமக்களோடு அவர் பூண்டிருந்த இணக்கம் பாராட்டுதற்குரியது. ஆனல் வசிஷ்ட மஹரிஷியோடு அவர் முரண்படுவதற்கான சூழ்நிலை வந்தது. அது ஆபத்து மிக நிறைந்தது. விஸ்வாமித்ர வேந்தன் பெரிய படை ஒன்றைத் திரட்டிக்கொண்டு வேட்டை யாட வனத்திற்குச் சென்றிருந்தார். அத்தனை பேருக்கும் வனத்தில் வசித்திருந்த வசிஷ்ட முனிவர் விருந்து ஓம்புதலை ராஜரீதியில் பெருமிதமாக நடாத்தி வைத்தார். பகட்டுமிகப் படைத்திருந்த பாராளும் வேந்தனுக்கு அத்தபோதனரைக் குறித்துப் பொருமை வந்தது. அத்தனை விதமான உபசாரங் களுக்கெல்லாம் வசிஷ்டர் ஆச்ரமத்திலிருந்த நந்தினி என் னும் பசு காரணமாயிற்று. அது காமதேனு ஈன்றெடுத்த கன்று ஆகும். யார்தான் அத்தகைய பசு ஒன்றைத் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ள விரும்பமாட்டார்! அப்பசுவைத் தன்னிடம் உடனே ஒப்படைத்துவிட வேண்டுமென்று ராஜ ரீதியில் அரசன் ஆணையிட்டார். ஆனல் அருளாளனை அந்த ஆணைக்கு அடிபணியவில்லை. அதன் விளைவாகக் கடும்

போர் மூண்டது. வேந்தன் வெல்லப்பட்டார். பெரும் வெட்கத்துக்கும் ஆளானூர்.

படைபலத்தைவிட அதிகம் வல்லமை வாய்ந்தது தவத்தின் விளைவு என்பதை விஸ்வாமித்ர வேந்தன் அறியலானூர். உடனே மக்களால் பெறமுடியாத வல்லமையைப் பெறுதற்குக் கடுந்தவத்தில் இறங்கினூர். நெடுங்காலம் தவத்தில் ஈடுபட்டதின் விளைவாக அவர் ஒரு ரிஷியானூர். மீண்டும் ஆழ்ந்து தவத்தில் ஈடுபட்டதன் விளைவாக அவர் ஒரு ராஜ ரிஷி ஆனூர். அந்த ஸ்தானமும் அவருக்குப் போதவில்லை. பரஞானத்தின் பூர்த்தியான நிலையாகிய பிரம்ம ரிஷி நிலையை எட்ட இடையருத் தவத்தில் அவர் ஈடுபடலாயினூர். அப்படி அவர் தவம்புரிந்துகொண்டிருந்தபொழுது மேனகா என்னும் நாமம் படைத்திருந்த மடந்தையொருத்தி அவரைக் காமவலையில் ஆழ்த்தி மகப்பேறு பெறும்படியான கீழ் நிலைக்குக் கொண்டு வந்து விட்டாள். வீழ்ந்த பிறகே தாம் வழி வழுவியது அவருக்கு விளங்கிற்று. மீண்டும் அவர் தவத்தையே நாடினூர். ஏனென்றூல் வீழ்ச்சிக்கு விமோசனம் தவத்தால் அன்றி வேறெவ்விதத்திலும் பெற முடியாது. முயன்றூர்; மேலும் மேல்நிலைக்கு வந்தார். ஆயினும் மறு வீழ்ச்சிக்கு இடமில்லாத பரிபூரண நிலையை அவர் இன்னும் அடையவில்லை. இன்னும் ஒரு முறை அவரை இந்திரிய சுகவாழ்வில் ஈடுபடுத்த ரம்பை என்னும் மற்றெரு தேவலோக மாது முயன்றூள். அப்பொழுது அவர் காமத்துக்கு வசமாகவில்லை. ஆனூல் கடுங்கோபத்துக்கு ஆளானூர். குரோதமோ காமத்திலும் கொடியது. ஆதலால் சினத்தின் விளைவாக அவர் சீர்கேடு அடைந்தார். தாம் அடைந்திருந்த சிறுமையைக் குறித்து அவர் உள்ளம் கசிந்து உருகினூர். மற்றும் ஒரு முறை தவத்தில் தீவிரமாகப் பிரவேசித்தார்.

விடாமுயற்சியின் விளைவாக வெற்றியையும் அவர் பெற்றார். அவர் பிரம்மரிஷியானது விடாமுயற்சியின் விளைவு. பிரம்மரிஷி ஸ்தானத்திற்கு மேலான பாரமார்த்திகப் பெருவாழ்வு வேறு ஏதுமில்லை. அத்தகைய நிலையை அடையப்பெற்றுள்ள ஆன்றோர் நம் எதிரே வீற்றிருக்கிறார். ஒரே மானுடப் பிறவியில் இத்தகைய மகோன்னத நிலை எய்திய மூர்த்தி ஒருவரைக் காண்பது அரிதிலும் அரிது. மானுட உலகு அருள்துறையில் செய்யவேண்டிய முயற்சிக்கு இம்மகா புருஷர் யாண்டும் முன்மாதிரியாகிறார். இங்ஙனம் சதானந்தப் புரோகிதர் விளக்கினர்.

விஸ்வாமித்திர மஹரிஷி இந்த விளக்கங்கள் யாவுக்கும் சாட்சியாக இருந்தார். தம்முடைய வரலாறு அம்பலத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதே என்ற விசாரம் இம்மியளவாவது அவருடைய உள்ளத்தை வந்து தாக்கவில்லை. யாரோ ஒரு வேற்றுளைப்பற்றிய நலங் கேடுகளை விளக்குகிறபொழுது அதில் சம்பந்தப்படாத மானுடனொருவன் உதாசீனனாக இருந்து அதைக் கேட்பது இயல்பு. யான் எனது என்னும் செருக்கை இவர் அறவே துடைத்துத் தள்ளிவிட்டதால் தம்முடைய முன்னுளைய குறைநிலைகளையெல்லாம் இவர் உதாசீனராகவே கேட்டுக்கொண்டிருந்தார். அவர் எய்தியிருந்த அத்தகைய நடுநிலையே அவருடைய பரிபாகத்துக்கு விளக்கமாயிற்று. பரிபூரணத்தை எட்டிய பரமபுருஷன் ஒருவரைப் பக்கத்தில் வைத்துக்கொண்டே அவருடைய வரலாறுகள் யாவற்றையும் வல்லமை வாய்ந்த விப்ரன் ஒருவன் விளக்குவானாகில் அதற்கு நிகரான பாடபோதனையை எங்குமே பெற முடியாது. சதானந்தர் அந்தச் சந்தர்ப்பத்தைப் பொதுமக்கள் நலனுக்காக நன்கு பயன்படுத்திக்கொண்டார். அத்தகைய ஞான விளக்கங்கள் நல்குவது யாகம் நடத்துவதன் மேலான நோக்கமாகும்.

7. அஸ்வமேத யக்ஞம் மங்களகரமான முடிவுக்கு வந்தது. அந்த நிகழ்ச்சியின் இறுதியில் சிறுமி சீதைக்குப் பொருத்தமான வாழ்க்கைத் துணைவனைத் தேர்ந்தெடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்தச் சிறுமியை ஜனக மஹாராஜா பூமாதேவியிடமிருந்து வரப்பிரசாதமாகப் பெற்றிருந்தார். தெய்விக எழில் நிறைந்திருந்த இந்தச் சிறுமிக்கேற்ற கணவனைத் தேர்ந்தெடுப்பது கடினமான காரியமாக இருந்தது. வல்லமை வாய்ந்திருந்த இளம் வேந்தனே இந்தச் சோதனையைச்சமாளிக்க முன்வர முடியும். சிவதனுசு ஒன்று விதேக மன்னனுக்கு வெகுமதியாக வந்து வாய்த்திருந்தது. சாமானியமான மானுடன் யாரும் தூக்க முடியாத கனம் உடையதாக அந்த வில் இருந்தது. எந்த ராஜகுமாரன் இந்த வில்லைத் தூக்கி வளைத்து நாண் ஏற்றுகிறானோ அவனே வண்ணத்திலும் சீர்மையிலும் மதிப்புப் போடமுடியாத மிதிலாபுரி மன்னனுடைய மகளை மணந்துகொள்ளத் தகுதியுடையவன் ஆவான். யாகத்தில் கலந்துகொள்ள வெவ்வேறு நாடுகளிலிருந்து ராஜகுமாரர்கள் பலர் வந்திருந்தார்கள். ஆனால் அவர்களுள் யாருமே சீதையை மணந்து கொள்வதற்கேற்ற நிபந்தனையை நிறைவேற்றத் துணிந்து முன்வரவில்லை. விஸ்வாமித்ர மஹரிஷியின் வேண்டுதலுக்கிணங்கி எடை மிக வாய்த்திருந்த அந்தச் சிவனார் வில் ஒரு வண்டியில் வைத்துச் சபையின்கண் இழுத்து வரப்பட்டது. வில்லின் வண்ணத்தைப் பார்த்த கூட்டம் முழுதும் திகைத்துப் போயிற்று. இந்தச் சோதனையைச் சமாளிக்க யாரால் முடியும் என்று அரசகுமாரர்கள் திகைத்துப் போயினர். மாமுனிவரோ ஆணையிடுகிற பாங்கில் இராமனைப் பார்த்தார். கீழ்ப்படி தலே வடிவெடுத்திருந்த சிஷ்யனாகிய இராமன் சிவதனுசு

வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு ராஜ கம்பீரத்துடன் நடந்து சென்றான். அப்பரந்த சபையின்கண் வீற்றிருந்தவர்களெல்லாரும் மூச்சுப் பேச்சற்றவர்களாக நிகழப்போவதை ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள். தெய்விகத்தில் தோய்ந்திருந்த தசரத குமாரன் லாகவமாக வில்லைப்பற்றி எடுத்தான். அக்காட்சியே மற்றவர்களைப் பிரமிக்கச் செய்தது. அவன் அந்த வில்லில் விளையாட்டுப் போன்று நாண் ஏற்றியது வியப்பிற்குரிய அடுத்த செயலாயிற்று. கூட்டத்தார் பூண்டிருந்த வியப்போ பெருமூச்சுடன் கூடிய திகைப்பாக மாறியது. ராகவன் வில்லின் ஒரு நுனியைத் தரையில் வைத்தான். மற்ற நுனியை இருகரங்களிலும் பற்றி அமுக்கினான். வெடி வெடித்தாற்போன்று வில் உடைந்தது. சபையோர் எல்லார் உள்ளத்திலும் ஆராதனையோடு கூடிய பேருணர்வு பாய்ந்தது. இத்தகைய வீரன் ஒருவனை வையகத்தில் காண முடியுமா என்று வியந்தனர். ஜனகமஹாராஜன் அடைந்த அகமகிழ்வை யாரே வருணிக்க வல்லவர்! மஹிமையுடன் அம்மன்னன் சபை நடுவில் வந்து நின்று 'வீராதிவீரனாகிய இராமன் என் உள்ளத்தில் யாண்டும் குடியிருக்கும் செல்வமாகிய தெய்விகச் சீதையைப் பாணிக்கிரஹணம் பண்ண உரியவனாகிறான்' என்று எடுத்து இயம்பினார்.

இவ்வரலாற்றின் செய்தியை விரைவில் செல்லக்கூடிய குதிரையாட்கள் மூலம் அயோத்தி நகருக்குச் சொல்லி அனுப்பினார்கள். தம்முடைய செல்வனாகிய இராமனுக்கு மணம் முடிப்பதற்குத் தசரதச் சக்கரவர்த்தியார் விரைவில் வரவேண்டுமென்ற அழைப்புச் சென்றது.

ஆடவன் ஒருவனுடைய தகைமையைச் சோதிப்பதற்கு உற்ற முறைகள் சில பண்டைக்காலத்தில் நாட்டில் வழக்கத்

தில் இருந்து வந்தன. இராமன் சோதிக்கப்பட்டது அம் முறைகளில் ஒன்ருகும். மண வாழ்வுக்கு முற்றிலும் தகுதி வாய்ந்தவர்களே அதற்கென்று தேர்ந்தெடுக்கப்பட்டனர். பலஹீனர்களாகவும் வீர்யமில்லாதவர்களாகவும் இருந்தவர் கள் இல்வாழ்க்கையில் பிரவேசிக்க அக்காலத்தில் அனு மதிக்கப்படவில்லை. ஏனென்ருல் மெலிந்திருப்பவர்கள் தோற்றுவிக்கும் மகப்பேறு தொத்தல்களாகப் போய்விடும். அதற்கு இடம் தராது மக்களின் திண்மையைக் கருத்துடன் பாதுகாத்து வந்தது பழங்காலத்து முறையாகும். இதற் கேற்ற சான்றுகள் சிலவற்றை இயற்கையிலும் ஆங்காங்குக் காணலாம். தேன் ஈ வர்க்கம் தலையாய சமுதாய வாழ்க்கை வாழ்ந்து வருகிறது. அதன் சந்தான விருத்திக்காக முட்டை யிடுகிற ராணி ஈயோடு சேர்தற்கு ஆண் ஈக்கள் அனைத்துக் கும் அனுமதியில்லை. அவைகள் ஒன்ருேடொன்று போர் புரிந்து வெற்றிகரமாக வருகிற வீர்யம் நிறைந்த ஆண் ஈ ஒன்றே அந்த இனத்தின் அரசியோடு பொருந்துதற்கு அனு மதிக்கப்படுகிறது. அம்முறையை அவ்வுலகில் என்றென்றும் காணலாம். யானை மந்தை ஒன்றில் மற்ற ஆண்யானைகள் அனைத்துக்கும் மேலான வீர்யம் படைத்த ஆண்யானை ஒன்றுக்கே பெண் யானைகளோடு கூடுதற்கு அனுமதி உண்டு. இனங்கள் சில தங்களின் தன்மைகளை இப்பாங்கு களில் பாதுகாத்து வருகின்றன. இயற்கை புகட்டி வருகிற இக்கோட்பாட்டுக்கு ஒத்து நடக்க மனிதன் யாண்டும் கடமைப்பட்டிருக்கிருன்.

தசரதச் சக்கரவர்த்தி தம் புதல்வனைவிட்டுப் பிரிந் திருக்க முதலில் ஒத்துக்கொள்ளவில்லை. பிறகு அரை மன தோடு பிரிந்ததன் விளைவாக வாய்த்துள்ள நலன்களை இப் பொழுது அறிய வந்தார். ஜனக மஹாராஜாவிடமிருந்து வந்த

அரச அழைப்புக்கு இணங்கி அவர் மிதிலாபுரிக்கு மகிழ்வுடன் புறப்பட்டுச் சென்றார். கீர்த்தி வாய்ந்திருந்த தம் தனயனைக் காணுதல் பொருட்டு அவர் விரைந்து பயணமானார். மாட்சிமை தங்கிய மன்னன் ஒருவருடைய தலைமைப் பட்டணத்துக்கு மாட்சிமை தங்கிய மற்றொரு மன்னன் வருகை தந்தது நகரவாசிகளனைவருக்கும் பெருமகிழ்வை ஊட்டியது. பிறகு செல்வி சீதைக்கும் செல்வன் இராமனுக்கும் நிகழ்ந்த விவாகச் சடங்கு மக்களின் மகிழ்வை மேலும் அதிகப்படுத்தியது. அதே சந்தர்ப்பத்தில் மற்றும் மூன்று மணச்சடங்குகள் நிகழ்த்தப்பட்டன. பரதன், இலட்சுமணன், சத்ருக்கனன் ஆகிய தசரதச் சக்கரவர்த்தியின் ஏனைய புதல்வர்கள் மூவருக்கும் ஜனக மஹாராஜாவினுடைய குடும்பத்தைச் சேர்ந்த ராஜகுமாரிகள் மூவர் மணந்து கொடுக்கப்பட்டனர். இந்நிகழ்ச்சிகள் யாவும் தசரதச் சக்கரவர்த்திக்கு மட்டில்லா மகிழ்வை ஊட்டின.

அண்டத்தின் அமைப்பு அலாதியானது. ஆங்காங்கு உருவெடுக்கிற பெரிய மூர்த்திகள் செயற்கரிய ஏதோ சில செயல்களை நிறைவேற்றி வைக்கப் பிரபஞ்சத்தில் தோன்றுகின்றனர். அச்செயல்கள் பூர்த்தியானதும் வையக வாழ்வு என்னும் நாடகத்தினின்று அவர்கள் மறைந்து போகின்றனர். அந்த நியதிக்கொப்ப விஸ்வாமித்ர மஹரிஷியினுடைய பூலோக லீலை இத்துடன் முற்றுப்பெறுகிறது. தசரதச் சக்கரவர்த்திக்கு உபத்திரவத்தை உண்டுபண்ணுபவர் போன்று அயோத்திக்குள் நுழைந்தார். மிதிலாபுரியில் மங்களகரமாகத் தமது திட்டத்தை நிறைவேற்றினார். இத்தகைய வைபவத்தை யாரும் எதிர்பார்க்கவில்லை. மக்கள் எல்லாருடைய நலனுக்காகவே அது நிறைவேறிற்று. இராமனுக்கும் இலட்சுமணனுக்கும் போர்ப் பயிற்சி கொடுக்

கிற பொறுப்பைத் தாமாகவே வலிய வந்து ஏற்றுக்கொண்டார். அதைப் பூர்த்தி பண்ணியது மட்டுமல்லாது அந்த ராஜகுமாரர்கள் இருவரையும் சமுதாய வாழ்க்கைக்கு முற்றிலும் தகுதி உடையவர்களாக அமைத்தார். பிறகு தந்தையாரிடம் அவர்களை ஒப்படைத்தார். அதன் பிறகு தவத்தின் வாயிலாகத் தாம் பரத்தில் ஒன்றுபடுதற் பொருட்டு விஸ்வாமித்ரர் ஹிமாசலத்தை நோக்கிப் புறப் பட்டார்.

மிதிலாபுரியிலிருந்து அயோத்யாபுரியை நோக்கித் தசரத மன்னனுடைய கூட்டம் புறப்பட்டது. பயணமோ ஆரம்பதசையில் இன்பம் நிறைந்ததாயிருந்தது. ராஜ குமாரர்கள் நால்வரும் நல்ல பயிற்சி பெற்றிருந்தனர். இல் வாழ்வில் பிரவேசிப்பதற்கான மணச் சடங்கும் அவர்களுக் குச் செய்து வைக்கப்பட்டிருந்தது. அவை யாவற்றையும் எண்ணிப் பார்த்த மன்னனர் மட்டில்லா மகிழ்வில் ஊறி யிருந்தார். ஆயினும் இடைவெளியில் எதிர்பாராத வண் ணம் திடீரென்று விபத்து ஒன்று வாய்ப்பதாயிற்று. காற்று பயங்கரமாக வீசியது. பூமி நடுங்குவது போன்று தென் பட்டது. வானம் முழுவதும் இருள் சூழ்ந்ததாக் காட்சி கொடுத்தது. சூழ்நிலை இக்கட்டு நிறைந்தது ஆனது. பயங்கர மூர்த்தியாகிய பரசுராமன் திடீரென்று அயோத்தி அரச கூட்டத்தின் எதிரே தென்பட்டார். க்ஷத்திரியர்களைத் துடைத்துத் தள்ளுவது அவருடைய வாழ்க்கைச் செயல். கோடரியைக் கையில் ஏந்தியவர் என்பது பரசுராமன் என்னும் நாமத்தின் பொருள். ஒரு தோளில் பெரிய வில் ஒன்றையும், மற்றொரு தோளில் தமக்குச் சின்னமாய் அமைந் திருந்த கோடரியையும் அவர் தாங்கியிருந்தார். அவரு டைய தந்தையாகிய ஜமதக்னி என்னும் ரிஷி அரசன் ஒருவ

னல் கொல்லப்பட்டார். அச்செயலுக்குப் பழிவாங்குதற் பொருட்டு க்ஷத்திரிய குலத்தையே ஒதுக்கித் தள்ளப் பரசு ராமன் விரதம் பூண்டிருந்தார். ஓர் இடத்தில் அவர் தோன்று தற்கு முன்பு இயற்கை அல்லோலகல்லோலப்படும். அவர் சிரசில் தாங்கியிருந்த ஜடாமுடி பார்ப்பதற்குப் பயங்கரமாய் இருந்தது. அவர் முகத்தினின்று தீப்பொறி பறந்துகொண் டிருந்தது. இத்தகைய விபத்து திடீரென்று வாய்க்கு மென்று தசரதன் எண்ணவில்லை. அவர் திகைத்துப் போனார். தழதழத்த குரலிலே தம் இளம் தனயனாகிய இராமனுக்கு உயிர்ப்பிச்சை தரும்படி அவர் கெஞ்சிக் கேட் டார். ஆங்குப் பிரசன்னமாயிருந்த கோபாவேச மூர்த்திக்கு அந்த இளம் கன்று எந்த விதத்தீங்கும் செய்யவில்லையென் றும் வேந்தன் விண்ணப்பித்தார்.

பயங்கர மூர்த்தியாகிய பரசுராமனோ தசரதனைக் கண் ணெடுத்துப் பார்க்கவில்லை. அரசர் கூட்டத்தையும் அவர் பொருள்படுத்தவில்லை. வசிஷ்ட மஹரிஷியையும் ஏனைய முனிவர்களையும் அவர் மனதில் வாங்கவில்லை. தசரத ராமன் ஒருவனே அவர் நாடிவந்த உயிர்ப் பிராணியாகும். அந்த இளைஞனைப் பார்த்துக் கர்ஜிக்கிற பாங்கில் இங்ஙனம் அவர் அறை கூவினார்.

பரசுராமன்: "அடே க்ஷத்திரியப்பதரே, துருப்பிடித்துப் போன ஒரு சிவவில்லை ஒடித்துக் கயவர் கூட்டத்தில் நீ வீராதி வீரன் என்று மிக எளிதில் கீர்த்தியைப் பெற்று விட்டாய். இதோ பார், என் கையிலிருப்பது விஷ்ணு தனுசு. இதில் நாண் ஏற்றி என்னோடு போர் புரியும்படி உன்னை ஆக்ஞாபிக்கின்றேன். போரில் மடிந்துபோ. அது உனக்கு இயலாவிட்டால் உன்னையும் உன்னுடைய கூட்டத்

தையும் விட்டில் பூச்சி போன்று துடைத்துத் தள்ளத் தீர்மானித்திருக்கின்றேன்.''

தசரத ராமனுடைய முதல் விடை: '' போற்றுதற்குரிய பெரியோய்! தங்களைப் போன்ற முதியோர்களைப் பார்த்து இளையவர்களாகிய நாங்கள் நல்லியல்பையும் நல்லொழுக்கத் தையும் சாந்தத்தையும் கற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கின்றோம். ஆனால் தாங்களோ ஒரே பதைபதைப்பும் சின மும் பூண்டவராகக் காட்சி கொடுக்கின்றீர்கள். நல்லொழுக் கத்தை நாடி இனி நாங்கள் யாரிடம் போவது?''

எரிகிற தீயில் தண்ணீரைக் கொட்டியது போன்று இராமனுடைய இன்சொல் எதிரியினுடைய பதைபதைப் பைத் தணித்தது. இது இராமன் பெற்ற முதல் வெற்றி.

மேலும் இராமன் மொழிந்ததாவது: ''போற்றுதற்குரிய பெரியோய்! என்னை க்ஷத்திரிய குலத்தில் பிறந்தவன் என அவமதித்தீர். என் பிறப்புக்கு நான் பொறுப்பாளியல் லேன். அது தெய்வாதீனமாக நிகழ்ந்தது. சான்றோர் ஒருவர் மானுடனொருவனுடைய பண்பை மட்டும் கருத்தில் வாங்கிக் கொள்கிறார். பிறப்பை அவர் பொருள்படுத்துவதில்லை.''

முன்கோபமே வடிவெடுத்திருந்த பரசுராமமுனிவர் தாம் பகர்ந்திருந்த பிழையை உணர்ந்தார். ஆனால் வாய்விட்டு ஒன்றும் பேசவில்லை. ரகுராமன் பொழிந்த இக்கருத்தும் பரசுராமனுக்குப் பிரதிகூலமாகப் போயிற்று.

மூன்றாம் கோட்பாடு ஜமதக்னி மைந்தனுக்கு விவே கத்தை ஊட்டும் வஜ்ராயுதம் போன்று வருகிறது. ''ஆராத னைக்குரிய அரும் தவத்தோய்! தம் ஆணைக்குட்பட்டுத் தமது வில்லில் நாண் ஏற்ற முயலுகிறேன். என்னுடைய வல்லமை

யைக் காட்டும் முன்னீட்டம் என்னிடத்தில் இல்லை. ஆன்றோர் ஆணைக்கு அடிபணிவதே என் பாங்கு. விப்ரரே, தாம் தந்த வில்லில் நாண் ஏற்றியாயிற்று. இதோ அம்பைத் தொடுக்கிறேன். தொடுக்கிற அம்பு ஒருபொழுதும் வீண் போகாது. அதற்கு இலக்கு யாது என்று தாம் இயம்பி அருள்வீராக."

பரசுராமன்: "பிரபோ, தாம் யார் என்பதைத் தம் அருளால் நான் இப்போது அறிய வருகிறேன். என்னுடைய வீண் செருக்கைக் கிருபை கூர்ந்து தாம் கழற்றி விட்டீர். அறங்காக்கத் தாம் அவனியில் அவதரித்துள்ள புருஷோத்தமன். தமது அம்பை என் ஆணவ அகங்காரத்தின் மீது தொடுத்து அவைகளை அழித்து அருள்வீராக!"

அயோத்தி ராமன் பரசுராமனுடைய வேண்டுதலை மானசீகமாக நிறைவேற்றுகிறான். பரசுராமனுக்கு ஞானம் உதயமாகிறது. இதுகாறும் நாசகாரியாயிருந்த நரவடிவினர் இப்பொழுது பண்பாடடைய விரும்புகிற மூர்த்தியாக மாறியமைகிறார். தர்ம சம்ஸ்தாபகனாகிய தசரத ராமன் புனிதமடைந்துள்ள அன்னவரை ஹிமாசலத்துக்குச் சென்று தவம் புரிந்து பரமபதப் பிராப்தியை எய்துமாறு ஆக்ஞாபிக்கிறான்.

ஸ்ரீ ராமன் அருள்வாரி உலகுக்கு வழங்க வந்த அண்ணல். மக்களைப் பண்படுத்திப் பெருநிலைக்குக் கொண்டு வந்த அரிய செயல்களுள் இது முதல் செயலாகிறது. ராம பாணம் வீண்போகாது என்னும் கோட்பாட்டுக்கு இது முதல் விளக்கமாகிறது.

அயோத்தியை நோக்கி அரசகுடும்பத்தின் குழாம் மேலும் புறப்பட்டுச் சென்றது. அக்கூட்டத்தின் வருகையை

எதிர்பார்த்திருந்த நகரவாசிகள் அந்நகரை நேர்த்தியாக அலங்கரித்திருந்தார்கள். பட்டணப் பிரவேசம் பண்ணிய கூட்டத்தைப் பெருமகிழ்வோடு பொதுமக்கள் வரவேற்றனர். புதிதாக மணந்திருந்த மணமக்களைப் பெரியோர்கள் எல்லாரும் மனப்பூர்வமாக ஆசீர்வதித்தார்கள். தாய்மார்கள் மூவரும் தங்கள் தனயன்மார்களையும் அவர்களுக்கு வாழ்க்கைத் துணைவிகளாக அமைந்திருந்த மிதிலாபுரி ராஜ குமாரிகளையும் தாயன்போடு வரவேற்றுக் கட்டித் தழுவிக் கொண்டனர். ராஜமாளிகை பேரானந்தத்துக்கு உறைவிடமாகத் திகழ்ந்தது.

அயோத்யா காண்டம்

அயோத்யாபுரியிலே அமைக்கப் பெற்றிருந்த அரச மாளிகை பூலோக சொர்க்கமாகக் காட்சி கொடுத்தது. திருப்தியே யாண்டும் திகழ்ந்திருந்தது. தசரதச் சக்கரவர்த்திக்குத் தமது பழுத்த விருத்தாப்பிய தசையில் யாவும் மங்களகரமாக இருந்தன. மக்கள் நால்வரும் பண்பாட்டில் மேலோங்கி வந்தனர். புக்ககத்துக்கு வந்திருந்த மணட்டுப் பெண்கள் மகிழ்வுடன் ராஜகுடும்பத்தில் ஒன்றுபட்டு வந்தனர். மஹாராணிமார் மூவரும் வாழ்வுக்குரிய நலன்கள் யாவையும் இனிது அடையப்பெற்று இன்புற்று இருந்தனர். தெய்விகம் செறிந்த இந்த இன்பம் நெடிது நிலைத்திருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

மிதிலாபுரியினின்று அயோத்யாபுரிக்கு அரசர் குழாம் திரும்பி வந்தான பிறகு தசரதச் சக்கரவர்த்திக்கு அவருடைய வயது முதிர்ந்த மாமனாராகிய கேகய நாட்டுக் கோமானிட

மிருந்து வேண்டுதல் ஒன்று வந்தது. அந்த வேண்டுதலை எடுத்துவந்தவர் வேறு யாருமல்லர். சக்கரவர்த்தியின் மைத்துனனும் யுவராஜனுமாகிய யுதாஜித் என்பவர் தாமே அயோத்திக்கு வந்தார். கைகேயி மஹாராணிக்கு அவர் சகோதரர் ஆவார். பிறகு வேண்டுதலோ வேறொன்றுமன்று. பேரனாகிய பரதன் தாத்தாவாகிய கேகயநாட்டு வேந்தரோடு கொஞ்சகாலம் வாழ்ந்திருக்கவேண்டும் என்பதேயாம். அதனால் அந்த வயோதிகருக்குப் பரமானந்தம் உண்டாகும். அன்னவருக்கு மாப்பிள்ளையாகிய தசரதச் சக்கரவர்த்தியும் அதற்கு மகிழ்வுடன் இசைந்தார். பரதனையும் அவனுடன் இணைபிரியாது வாழ்ந்துவந்த சத்ருக்கனனையும் தந்தையார் கொஞ்சகாலம் கேகய நாட்டில் தங்கியிருக்கும்படி அனுப்பிவைத்தார்.

இளவரசனாகிய இராமன் அயோத்யாப் பட்டணத்தில் பண்பாட்டில் விரைந்து முன்னேற்றமடைந்து வந்தான். தெய்விகப் பெற்றிகள் பலவற்றிற்கு அவன் உறைவிடமாயிருந்தான். கவர்ச்சிகரமான மேனி அழகு படைத்திருந்தான். தேஜஸ் அல்லது பொலிவு அவனுடைய முகத்தில் மிளிர்ந்து கொண்டிருந்தது. ஊக்கத்துக்கு அவன் இருப்பிடம். அதே வேளையில் குழந்தை ஒன்றின் சரள சுபாவம் அவனிடத்துக் குடியிருந்தது. செருக்குக்கும் அவனுக்கும் வெகுதூரம். அவன் திருப்தியே வடிவெடுத்தவன். பிறர் மனதைப் புண்படுத்துகிற புன்மொழியை அவன் பகரான். கேட்கின்ற கேள்விக்கும் அவன் குதூகலத்துடன் இன்சொல் விடையளிப்பான். பிறர் தனக்குச் செய்த அல்ப உபகாரத்தையும் அவன் ஒருபொழுதும் மறக்கமாட்டான். பிறர் தனக்குச் செய்த குற்றம் குறைகளை உடனுக்குடனே மறந்துவிடுவான். முதியோர்களுக்கு இராமன்

எப்போதும் மரியாதை காட்டுவான். கற்றவர்களோடும் அறிவாளிகளோடும் அவன் மகிழ்ச்சியோடு மெய்ப்பொருள் ஆராய்ச்சி பண்ணுவான். அவன் பேசிய பேச்சுக்கள் எப் பொழுதுமே ப்ரீதிகரமானவைகளாகவும், பொருத்தமான வைகளாகவும், ஏற்புடையவைகளாகவும் இருந்தன. பொய்மை அவனுக்குப் பக்கத்தில் வரமாட்டாது. பொரு ளற்ற புன்மொழிகள் அவனுடைய நாவினின்று எக்கார ணத்தை முன்னிட்டும் எழமாட்டா. சம்வாதம் புரிவதில் அவன் நிபுணன். பொருள் சேர்ந்த சொல்லே அவனிடத் திருந்து வரும். அளவெடுத்து அவன் இயம்புவதை யாரா லும் மறுக்க முடியாது. அவன் படைத்திருந்த ஞாபக சக்தியோ ஒருபொழுதும் பிழைபோகாது.

ஸ்ரீ ராமன் யாண்டும் சினத்திற்கு வேற்றாகை இருந் தான். பிறர்க்குத் தீங்கு விளைவிக்கிற செயல்களில் அவன் பிரவேசியான். பிறரைத் துன்புறுத்துகிற வார்த்தைகள் அவனுடைய வாயினின்று வாரா. நெருக்கடியான சூழ்நிலை களை அவன் சாமர்த்தியமாகச் சமாளிப்பான். தன் கடமை களை நிறைவேற்றுதலில் அவன் சளைத்துப் போகமாட்டான். பொருத்தமான முறைகளைக் கையாண்டே அவன் பொருள் ஈட்டுவான். மக்களுக்கு மகிழ்வூட்டுதலில் அவன் நிபுணன். இந்த அரசகுமாரனுடைய அமைப்பில் சோம்பலுக்கோ, தயக்கத்துக்கோ இடமில்லை. அவன் யாண்டும் ஊக்கத் துடனும், உறுதிப்பாட்டுடனும் இருந்து வந்தான். ஏமாற்ற மடைவதென்பது அவனிடத்து இல்லை. அறிவுத் திறனில் அவன் யாண்டும் விழிப்புடையவனாயிருந்தான். சமுதாய சம்பந்தமான பிரச்னைகளும், குடும்ப சம்பந்தமான பிரச்னை களும், ஒரு மனிதனுடைய தனி வாழ்வு சம்பந்தமான பிரச்னைகளும் ஸ்ரீ ராமனால் இனிது ஒழுங்குபடுத்தப்பட்டன.

ஒவ்வொரு பிரச்னையிலும் உள்ள நலன்களையும், கேடுகளையும் அவன் துருவி ஆராய்வான். மானுடன் ஒருவனோடு தொடர்பு கொண்ட மாத்திரத்திலேயே அவனுடைய தரத்தை இராமன் சரியாக அளந்தெடுப்பான். சிக்கலான கேள்விகளையும், இக்கட்டுகளையும் யாரிடத்துத் தாராளமாக இயம்பலாம், பின்பு யாரிடத்துப் பகரலாகாது என்பனவற்றை ரகுராமன் நன்கு அறிந்திருந்தான்.

சுயநலம் ஏதும் சிறிதும் இராமனிடத்து இல்லை. பிறர்க்கெனவே அவன் வாழ்ந்திருந்தான். ஏழை எளியவர்களுக்கு வேண்டியவாறு அவன் உதவி புரிந்தான். பண்பாட்டுக்கு உறைவிடமாயிருந்த பெருமக்களுக்கு அவன் ஆதரவு மிக அளித்தான். துயரத்துக்கு ஆளானவர்களுக்குப் பொருத்தமான விமோசனத்தை அவன் தேடிக்கொடுத்தான். குடிமக்கள் எல்லார்க்கும் அவன் காப்பாளனாயிருந்தான். அவன் புரிந்த செயல்களனைத்திலும் புனிதமே காணப்பட்டது. அவன் தர்மகோப்தா. காலத்தை அவன் யாண்டும் நல்வழியில் பயன்படுத்தினான். அவனுக்கு ஒவ்வொரு கணப்பொழுதும் சன்மார்க்கத்துக்கான வாய்ப்பு ஆயிற்று. மண்ணுலகில் அவனுக்கு ஒப்பானவனோ, மேலானவனோ யாருமில்லை என்பது திண்ணம்.

தகுதி வாய்ந்த தந்தை யார் என்னும் கேள்வி எழுகிறது. மகனுக்கேற்ற நலனைத் தக்க தருணத்தில் செய்து வைப்பவனே தகைசான்ற தந்தை ஆகிறான். மகன் வயதில் முதிர்ந்து வருவதற்கேற்ப அவனிடத்து ஆட்சி முறையும், பொருளும் ஒப்படைக்கப்படவேண்டும். அப்படிச் செய்வதால் யுவன் ஒருவனுடைய தகுதிகள் யாவும் தோற்றத்திற்கு வருகின்றன. தன்னிடத்து மறைந்து இருக்கும் மஹிமைகளை வெளிப்படுத்தும்படி சந்தர்ப்பம் தூண்டுகிறது. புத்திரனை

இந்தப் பாங்கில் தான் பராமரிக்கவேண்டுமென்று தசரதச் சக்கரவர்த்தி நன்கு அறிந்திருந்தார். அவர் அறிந்திருந்ததை நடைமுறையில் கொண்டு வருவதற்கு ஏற்ற காலம் வந்தது. விருத்தாப்பியத்தை முன்னிட்டு வேந்தனுடைய வீரியம் தளர்வுற்றது. யௌவனத்தை முன்னிட்டு இராமனுடைய வீரியம் வளர்ந்தது. இக்காரணத்தை முன்னிட்டுப் புத்திரனை யுவராஜா ஆக்குவது முறையாயிற்று. ஆயினும் தந்தை தாமே அதைப்பற்றி முடிவெடுப்பது பொருந்தாது. ஏனென்றால் அச்செயலில் பொதுமக்களுக்கும் இடமுண்டு. குடும்பப் புரோகிதர்களாகவும், விப்ரர்களாகவும் இருந்து வந்த வசிஷ்டர், வாமதேவர் ஆகிய மேலோர்களிடம் மன்னன் இந்த விஷயத்தை முதலில் தெரிவித்தார். அச்சான்றோர்களும் சக்கரவர்த்தியின் தீர்மானத்துக்குச் சம்மதம் கொடுத்தார்கள். பிறகு பட்டணத்திலிருந்த அறிஞர்கள், மேன்மக்கள், பொதுமக்களின் பிரதிநிதிகள் ஆகியவர்களைச் சபை கூட்டி அவர்களின் அபிப்பிராயத்தை அரசன் வேண்டினன். ஸ்ரீ ராமன் ஒப்பு உயர்வு அற்றவன் என்பதை இயல்பாகவே அவர்கள் எல்லாரும் அறிந்திருந்தனர். ஆயினும் நாட்டுக்கு எது நலனளிக்கும் என்ற கேள்வியை நடுநிலையிலிருந்து கொண்டு அவர்கள் ஆராய்ச்சி பண்ணினர். இளவரசுப் பட்டாபிஷேகத்தை இராமனுக்கு உடனடியாகச் செய்து வைப்பது உசிதம் என்னும் முடிவுக்கு அவர்கள் எல்லாரும் ஏகோபித்து வரலாயினர்.

மற்றொரு முக்கியமான விஷயம். மண்ணுலகில் நெடுங்காலம் வாழ்ந்திருந்த தசரதச் சக்கரவர்த்திக்கு அந்தியகாலம் அணுகிவிட்டது என்பதை அவர் உணரலானர். இனி, நாட்கணக்கோ அல்லது மணிக்கணக்கோ என்பது தெரியாது. எந்தக் கணத்தில் வேண்டுமானாலும் அவர் கண்

முடிவிடுவார். அதற்கு முன்பே தமது ஆருயிராய்த் தோன்றியிருக்கும் இராமனுக்கு முடிசூட்டி விடவேண்டும் என்ற முடிவுக்கு அவர் வந்தார். அந்த முடிவின் மூன்றும் நாள் மிக நல்ல நாள் என்று இயம்பப்பட்டது. அக்கணமே அயோத்தி நகரில் அச்செய்தி பறையறையப்பட்டது. மிதிலாபுரி மன்னனையோ பரதனுடன் கூடியிருந்த கேகேய நாட்டுக் கோமானையோ வரவழைப்பதற்கு அவகாசமில்லை. எப்படியாவது தாம் கண் மூடுவதற்கு முன்பு மூத்த குமாரனின் முடிசூட்டு விழாவைப் பார்த்து விடவேண்டும் என்ற அவா ஒன்றே அவர் உள்ளத்தில் ஊசலாடிக்கொண்டிருந்தது. ஆதலால் அந்த அரிய சம்பவத்தை அதிவிரைவில் சிறப்பாக முடித்துவிடத் தீர்மானித்தார். தீர்மானித்ததினின்று மூன்றும்நாள் நல்ல நாளாயிருந்தது. 'பட்டணம் முழுதும் பெருமகிழ்வில் மூழ்கியிருந்தது. அடுத்தநாள் நிகழ்தற்கிருக்கும் இராமன் பட்டாபிஷேகத்திற்கு மக்கள் அவசர அவசரமாக ஆயத்தப்படுத்தினர்கள். எல்லாருடைய முகவிலாசங்களிலும் மகிழ்ச்சி தாண்டவமாடிற்று. இங்குமங்கும் ஆடல்களும் பாடல்களும் ஆர்வத்துடன் நிகழ்ந்தன. பட்டணத்தைச் சிங்காரிக்கும் செயல் மும்முரமாக நிகழ்ந்து வந்தது.

தந்தையார் தம் மைந்தன் ராஜகுமாரனைத் தம் முன்னிலைக்கு வரவழைத்தார். அடுத்தநாள் யுவராஜப் பட்டாபிஷேகம் நிகழப்போவதை எடுத்து உரைத்தார். "பெரிய பொறுப்பொன்று உன்மீது சுமத்தப்படுகிறது. நாடாளும் பொறுப்பு உன்மீது சுமத்தப்படுகிறது. நகரவாசிகளனைவரும் உண்டு, உடுத்துக் களித்து இன்புற்று இருக்கின்றனர். ஆனல் இராமனும் சீதையும் உபவாசம் இருந்து இறைவனை வழுத்தவேண்டும். பணிவில் அவர்கள் பல படிகள் ஆழ்ந்து செல்லவேண்டும். புலனடக்கம் அவர்களுக்கு இன்றியமை

யாத பேறு ஆகும். தன்னடக்கம் பழகியவனே தேசத்தை ஆள வல்லவனாகிறான். நாட்டின் நலனை முன்னிட்டுத் தன் சுயநலனைத் துடைத்துத் தள்ளவேண்டும்.'' இங்ஙனம் ஆணை பிறந்தது. பக்திபூர்வமாக இராமன் ஆணையை ஏற்றுக் கொண்டான். தந்தையின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். கட்டளைகளை நிறைவேற்றத் தன்னுடைய மாளிகைக்கு அவன் திரும்பிச் சென்றான்.

2. குதூகலத்திற்கு இருப்பிடமாயிருந்த அதே ராஜ மாளிகையில் மற்றொருபக்கம் சூழ்ச்சி ஒன்று உருவெடுத்து வந்தது. அதாவது இந்த நல்ல திட்டத்துக்குத் தடை போட்டுத் தீங்கை விளைவிக்கும் பொல்லாங்கு ஒன்று கற்பிக்கப்பட்டது. மந்தரா என்னும் பெயர் படைத்த கூனி ஒருத்தி இருந்தாள். கேகேயச் சக்கரவர்த்தினிக்கு அவள் பணிப் பெண்ணாக இருந்தாள். பட்டணத்தில் எங்குத் திரும்பிப் பார்த்தாலும் ஆரவாரமே தென்படுகிறதே, அதற்குக் காரணம் யாது என்று விசாரித்தாள். அடுத்தநாள் இராமன் யுவராஜப் பட்டாபிஷேகம் பெறப்போகிறான் என்னும் செய்தி அவள் காதுக்கு எட்டியது. அதைக் கேட்டதும் அக்கிழவி திகிலடைந்தாள். கூர்த்த முகத்துடன் தன்னுடைய எஜமானியின் மண்டபத்துக்கு விரைந்து சென்றாள். சென்றவள் இங்ஙனம் உரையாடினாள்.

மந்தரை: மாட்சிமை தங்கிய மாதரசியே! நாளைக்கு இராமன் இளவரசனாக முடிசூட்டப் பெறுகிறான் என்பது உனக்குத் தெரியுமா?

கைகேயி: இந்த நல்ல செய்தியைக் கேட்டு நான் மகிழ்வடைகிறேன். இதை என்னிடம் கொண்டுவர முந்தியதை முன்னிட்டு இந்த முத்துமாலையைச் சன்மானமாக

ஏற்றுக்கொள். என் ஆருயிர்ச் செல்வனாகிய இராமன் யுவராஜ ஸ்தானம் வகிப்பது முற்றிலும் பொருத்தமானதே.

மந்தரை வெறுப்புடன் வெகுமதியை வீசி எறிகிறாள். தன் இறைவியை ஏசுகிறாள். "நீ ஒரு ராஜகுமாரத்தி. ராஜா ஒருவருக்கு மணம் முடித்துக் கொடுக்கப்பட்டவள். அப்படியிருந்தும் ஒரு குழந்தை போன்று நீ நடந்துகொள்கிறாய். ராஜ தந்திரத்துக்கும், ராஜ சூழ்ச்சிக்கும் உனக்கும் வெகுதூரம். ராஜகுடும்ப வாழ்வு என்னும் நதியில் தண்ணீர் கடலை நோக்கி ஓடவும் பிறகு எதிர்த்துப் பொங்கவும் செய்யும் என்று உனக்குத் தெரியாது. இன்றைக்குச் சக்கரவர்த்தியாருடைய பேரன்புக்கு நீ இலக்காக இருக்கிறாய். ஆதலால் மஹாராணிமார் மூவருள் நீ முதன்மை வகிக்கிறாய். நாளைக்கு இராமன் அதிகாரத்தை ஏற்கிறான். அதைத் தொடர்ந்து அவனுடைய தாயாகிய கோசலாதேவி முன்னணிக்கு வரப்போகிறாள். முதன்மை ஸ்தானத்தினின்று நீக்கப்பெற்று இரண்டாம் ஸ்தானத்தின்கண் நீ உந்தித் தள்ளப்படுவாய். அத்தகைய தௌர்பாக்கியம் உனக்கு வரப்போகிறது. இன்றைக்கு இராமனும் பரதனும் ராஜகுமாரர்கள் என்னும் பாங்கில் ஒரே அந்தஸ்தை வகித்து வருகிறார்கள். நாளைக்கோ இராமன் நாட்டின் அதிபதியாகிறபொழுது பரதன் அவனுடைய குடிமகன் ஆவான். அந்தப் பாங்கில் அவன் கீழ்மையுறுவான். நெருக்கடியை உள்ளபடி அறிந்துகொள்ள இயலாத பேதையாகிய நீ உன்னுடைய வீழ்ச்சிக்கும் உன்னுடைய செல்வனுடைய வீழ்ச்சிக்கும் வழி வகுக்கின்றாய். நான் வெறும் மடந்தையாயிருந்துகொண்டு இந்தச் சூழ்ச்சிக்கு உடந்தையாவது பொருந்துமா? என் உயிரைக் கொடுத்தாவது இந்த அடாத செயலை எதிர்ப்பது என் கடனாகும்."

கைகேயி: என்ன விபரீதம்! உலகம் முழுதும் இராம பட்டாபிஷேகத்தை ஒரு போக்கில் பொருள்படுத்து கிறது. இந்த மந்தரையோ அதை மற்ருெரு போக்கில் பொருள்படுத்துகிருள். மக்கள் எல்லாருடைய அன்புக்கும் இலக்காயிருப்பவன் இராமன். ஞானியர்கள் அவனைத் தெய்வமெனப் போற்றுகின்றனர். அவன் அறநெறி பிசகா தவன். இராமனுடைய வாழ்வு தர்ம மார்க்கமாகிறது. அவன் சத்தியத்தின் சொரூபம். தூய்மைக்கு இருப்பிடம். சக்கரவர்த்திக்கு அவன் மூத்த மகன். ஆதலால் இளவரசு உரிமை அவனுக்கே உரியதாகிறது. தன்னைப் பெற்றெடுத்த தாயை நேசிப்பதைவிட அதிகமாக இராமன் என்னை நேசிக்கிருன். தன் தாய்க்குப் பணிவிடை செய்வதைவிட இராமன் எனக்கு அதிகமாகப் பணிவிடை செய்கிருன். ஆதலால் அவன் ஆட்சிக்கு வருகிறபொழுது என்னுடைய அந்தஸ்துக்கு இடைஞ்சல் ஏதும் ஏற்படாது. தன் சொந்த சொரூபமாகவே இராமன் தன் சகோதரர்களை நேசிக்கிருன். ஆதலால் தமையனுடைய ஆட்சியில் தம்பியாகிய பரத னுக்கு இடுக்கண் ஏதும் வராது. பல்லாண்டுகளுக்குப் பிறகு பரதனும் ஒருநாள் தன்னுடைய பிதுரார்ஜித சிம்மா சனத்தில் வீற்றிருப்பான். இதுதான் விஷயம். ஆதலால் ஓ மந்தரா, உன்னுடைய கற்பனைகளையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டுப் பட்டாபிஷேக விழாவில் எங்களோடு கலந்துகொள்.

முன்பு படைத்திருந்த முகவாட்டத்தைவிட அதிக முக வாட்டத்தை மந்தரை இப்பொழுது பூண்டாள். அவள் பிரலாபித்ததாவது: " இராமனுடைய மகனே இராம னுடைய சிம்மாசனத்துக்கு உரியவன் ஆவான். அவனு டைய சகோதரன் ஒருநாளும் உரியவன் ஆகமாட்டான்.

அரசகுமாரர்கள் எல்லாரும் ஆட்சிபண்ண ஆரம்பித்தால் சமுதாயத்தில் குழப்பமே அதிகரிக்கும். ராஜ தந்திரம் அறிந்திருக்கிற வேந்தன் ஒருவன் ஆட்சிமுறையிலே தனக்கு நிகராயிருக்கும் சகோதரன் ஒருவனைத் தனக்கு அருகில் வைத்திருக்கமாட்டான். ஏதேனும் சாக்குப் போக்குச் சொல்லித் தனக்கு நிகரான தம்பியை அவன் வெகுதூரத்தில் வைத்துவிடுவான். இப்பொழுது பரதனோ தன் தாத்தாவுடன் வெகுதூரத்துக்கப்பால் வாழ்ந்து வருகிறான். ஆதலால் அவனைப்பற்றி நினைப்பார் யாரும் இங்கே அயோத்தியில் இல்லை. எல்லாருடைய கவனமும் இராமன் மீதே செலுத்தப்படுகிறது. இராமனைப் போற்றுவது ஒன்றே மக்களுடைய போக்காக இருக்கிறது. அவன் ஆட்சிக்கு வந்தானபிறகு பரதனைத் தன் நாட்டினுள் பிரவேசிக்கவொட்டாது பகிஷ்கரித்துவிடுவான். தனக்கு நிகராயுள்ள பரதனை அப்புறப்படுத்திவிட்டால் பிறகு இராமனுக்குக் கவலையொன்றுமில்லை. இத்தகைய ஆபத்து வராது முன் எச்சரிக்கை எடுத்துக்கொள்ளும் சமயோசித புத்தி உனக்கு இல்லை. ஒருநாள் உன் முயற்சியில் பிந்துவாயாகில் நீ ஒழிந்துபட்டுப் போவாய்.

"ஓ மாதரசியே, மற்றும் ஒரு விஷயத்தை மனத்தில் வைத்துக்கொள். இதுகாறும் நீ சக்கரவர்த்தியாருடைய அலாதியான அன்புக்கு இலக்காக இருந்து வந்திருக்கின்றாய். அதனால் அறிந்தோ அறியாமலோ கோசலாதேவியை அலட்சியப்படுத்தியிருக்கின்றாய். அவள்தான் தலைமைப் பேரரசி என்பதை நீ ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவில்லை. உன் பொருந்தாத நடத்தை அவளுடைய உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்து இருக்கிறது. இராமன் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டவுடனே உன்னை எப்படிப் பழிவாங்குவது

என்பது அவளுக்குத் தெரியும். நிச்சயமாக நீ கீழ்மையில் ஆழ்த்தித் தள்ளப்படுவாய். அந்தச் சூழ்நிலையில் உன்னால் விமோசனம் எதையும் சாதிக்க முடியாது.

"என் அன்பிற்குரிய பேரரசியே! உன்னுடைய பாலியப் பருவத்திலிருந்து உன்னை நான் பேணி வந்திருக்கிறேன். உன்னுடைய நலனைத் தவிர வேறு எந்தவிதமான குறிக்கோளும் வாழ்க்கையில் எனக்குக் கிடையாது; உண்டா இல்லையா என்பதை இப்பொழுதே தீர்மானித்தாக வேண்டும். உபாயம் ஒன்றை நான் இயம்புகிறேன் கேள். நெடுங்காலத்துக்கு முன்பு தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையில் போர் மூண்டபொழுது உன்னுடைய கணவராகிய கோமான் தேவர்கள் பக்கம் சேர்ந்துகொண்டார். தேவர்களுக்கு வெற்றியையும் தேடிக்கொடுத்தார். ஆனால் அதற்கிடையில் அவர் காயப்பட்டுச் சிறிது நேரம் மயங்கிக்கிடந்தார். அப்பொழுது நீ பணிவிடை புரிந்து அவரைத் தேற்றினாய். அந்த அரிய பெரிய செயலுக்குக் கைம்மாறாக அவர் உனக்கு இரண்டு வரம் தர முன்வந்தார். வேண்டியபொழுது அவைகளைப் பெற்றுக்கொள்வதாக நீ ஒத்தி வைத்தாய். அவைகளைப் பெறுதற்கான காலம் வந்திருக்கிறது. இப்பொழுதே விவகார மண்டபத்துக்குப் போய் வியாகுலத்தில் மூழ்கிப் கிடப்பதாகப் பாசாங்கு பண்ணு. உன் துயரத்தைத் துடைக்க உன்மீது பற்றுதலோடு கூடிய அன்பு பூண்டுள்ள சக்கரவர்த்தியார் எதை வேண்டுமானாலும் செய்வேனென்று வாக்குறுதி கூறுவார். சொன்ன சொல் மாற மாட்டார்கள் அல்லவா என்னும் உறுதிமொழியை முதலில் அவரிடம் வாங்கிக்கொள். பின்பு நீ வேண்டுகிறபொழுது வாங்குதற்குள்ள வரங்கள் இரண்டையும் பற்றி அவருக்கு ஞாபகமூட்டு. அவைகளை நிறைவேற்றி வைப்பதாக அவர்

அழுத்தம் திருத்தமாக இயம்புவார். அங்ஙனம் அவரைக் கட்டுப்படுத்திய பின்பு இராமன் பதினான்கு வருஷம் மரவுரி தரித்து வனவாசம் பண்ணியாகவேண்டும் என்பதை முதல் வரமாகக் கேள். இரண்டாவது வரமாக எந்த ஏற்பாடுகளை யும் பொருள்களையும் கொண்டு இராமனுடைய பட்டாபி ஷேகம் நிகழ்வதற்கிருக்கிறதோ அதே ஏற்பாடுகளையும் பொருள்களையும் கொண்டு பரதனைச் சிம்மாசனத்தில் அமர்த்திப் பட்டாபிஷேகம் பண்ணிவைக்கவேண்டும் என்று தயங்காது கேள். உன் எண்ணம் நிறைவேறிவிட்டால் வேந் தனர் வாய்மையினின்று விலகியவர் ஆவார்."

இப்பொழுது மந்தரை என்னும் கூனிக் கிழவியின் குயுக்திக்குக் கைகேயி முற்றிலும் இணங்கியவள் ஆனாள். தோற்றத்தில் அக்கிழவி அருவருப்புக்குரியவள். ஆனால் எத்தகைய விவேகமும், தீர்க்கதரிசனமும், ராஜ தந்திரமும் அவளுடைய மூளையில் புதைந்து கிடந்தனவென்று அரசி அதிசயித்தாள். மந்தரையின் சொற்படி நடந்துகொள்ள அவள் இசைந்தாள். இதுகாறும் அவள் மடமையில் மூழ்கிக் கிடந்தாளென்றும், இப்பொழுது அவளுக்கு நல்லறிவு பிறந்திருக்கிறது என்றும் அவள் இறுமாப்புற்றாள். மந்தரை மொழிந்தபடியே கைகேயி கயமைக் காரியத்தில் இறங்கினாள்.

தசரத மஹாராஜாவோ தமது ஆருயிர்ச் செல்வன் இராமனுடைய யுவராஜப் பட்டாபிஷேகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் பூர்த்தி பண்ணியிருந்தார். தமது அன்புக்கு அலாதியான இலக்காக இருந்த சக்கரவர்த்தினி கைகேயியிடம் தாமே நேரில் சென்று இந்த நல்ல செய்தி யைத் தெரிவிக்கவேண்டுமென்று அவர் எண்ணினார். அவளு டைய மாளிகைப் பக்கம் போக அரசர் கால் எடுத்து வைத்த

பொழுது கைகேயி தேவியார் விவகார விடுதியில் புகுந்திருக்கிறார் என்று வாயில் காப்பாளன் வருத்தத்துடன் தெரிவித்தான். அதைக்கேட்டு ஆவல் கொண்ட கோமான் அவ்விடத்துக்கு விரைந்து சென்றார். தம்முடைய ஆழ்ந்த அன்புக்கு உரியவளாகிய வாழ்க்கைத் துணைவி துயரத்தில் மூழ்கித் தரையில் படுத்துக்கிடந்ததைப் பார்த்தார். அவளுடைய கூந்தல் அலங்கோலமாகக் கலைந்திருந்தது. ஆபரணங்கள் சிதறுண்டு கிடந்தன. அவளுடைய ஆடை அழுக்குப் படிந்து இருந்தது.

சக்கரவர்த்தி: என் அன்புக்குரியவளே! எதைக் குறித்து நீ துன்புறுகிறாய் என்பது எனக்கு விளங்கவில்லை. யாராவது உன்னை அலட்சியப்படுத்தினார்களா? நோய் வாய்ப்பட்டிருப்பாயாகில் வைத்தியர்கள் பலர் உனக்குப் பணிவிடை பண்ணுவார்கள். யாரேனும் ஒருவன் வெகுமதிக்கப்படுவதென்றால் அல்லது தண்டிக்கப்படுவதென்றால் அச்செயல் இப்பொழுதே நடைபெற்றுவிடும். என் உயிரைக் காத்தல் பொருட்டும் உன் விருப்பத்துக்கு விரோதமாக நான் நடந்து கொள்ளமாட்டேன். உன்னுடைய குறைகளெல்லாம் இப்பொழுது நிறைவு நிலை எய்தும் என்று இதுகாறும் நான் புரிந்து வந்துள்ள புண்ணியச் செயல்களின் பேரில் சத்தியம் பண்ணுகிறேன்.

கைகேயி: நோய் ஏதும் என்னைப் பீடிக்கவில்லை. யாரும் எனக்குத் தீங்கும் செய்யவில்லை. எனக்கு ஆசை ஒன்று உண்டு. அதைத் தாங்கள்தாம் நிறைவேற்றி வைக்க முடியும். அதைக் குறித்து உறுதி கூறினால் நான் அதைத் தெரிவிக்கிறேன்.

இனிய புன்முறுவலுடன் பூபதி அவளுடைய தலையைத் தடவிக்கொடுத்து இயம்பியதாவது: "ஆடவர்களுள் எனக்கு

இராமன் தலையானவனாக இருப்பதற்கு நிகராக மாதரசி களுள் நீயே என் மனதில் மேலாம் இடம் வகித்து வருகிறாய் என்பதை நீ நன்கு அறிவாய். இராமனை யாருமே வெல்ல முடியாது. அவன் நரோத்தமன்; என்னுடைய சந்தானங் களுள் தலை சிறந்தவன்; அவன் எனக்கு உயிர்; அவனை விட்டுப் பிரிந்தால் நான் உயிர் துறப்பேன். அந்த இராமன் மீது சத்தியம் பண்ணிச் சொல்லுகிறேன். நீ எதைக் கேட் கிறாயோ அதை நான் உனக்குத் தருகிறேன்."

புதியதாகப் புகட்டப்பட்டிருந்த பொல்லாத கருத்துக் களைக் கைகேயி உறுதியுடன் உள்ளத்தில் ஓர்மைப்படுத்தி னாள். பிறகு அழுத்தம் திருத்தமாக அவள் இயம்பியதாவது: "நான் வேண்டுவதை வேண்டியவாறு வகுத்து எடுத்து வழங்கத் தாங்கள் வாக்குக் கொடுத்திருக்கிறீர்கள். உங்க ளுடைய உடன்படிக்கைக்கு விண்ணவர்களும், மண்ணவர் களும், பாதாளத்தவர்களும் சாட்சியாக இருப்பார்களாக. தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் இடையில் முன்பொரு காலத்தில் நிகழ்ந்த கொடிய போராட்டத்தில் நீங்கள் மயங்கிக் கிடக்க நேர்ந்தது. அப்பொழுது பணிவிடை பண்ணித் தங்களைத் தெளிவுறும்படி செய்தேன். அதற்குக் கைம்மாறாக இரண்டு வரங்களை ஏற்றுக்கொள்ளும்படி இயம்பினீர்கள். தேவைப்படும்பொழுது அவைகளை ஏற்ப தாக நான் தங்களிடம் தெரிவித்தேன். அந்த இரண்டு வரங் களைப் பற்றி நான் இப்பொழுது உங்களுக்கு ஞாபகமூட்டு கிறேன். அவைகளை நிறைவேற்ற நீங்கள் கடமைப்பட்டிருக் கிறீர்கள். அவைகளுள் முதல் வரமாக இராம பட்டாபி ஷேகத்திற்காக ஆயத்தப்படுத்தியுள்ள பொருள்களைக் கொண்டே பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைக்க வேண்டும். இரண்டாவது வரமாக மரவுரி தரித்தவனாக

இராமன் பதினான்கு வருஷகாலம் வனத்தில் தவம்புரிதல் பொருட்டு இன்றைக்கே போயாகவேண்டும்.'' இங்ஙனம் அவள் வெடித்துக்கொட்டினாள்.

தம்மீது இடிவிழுந்தது போன்று தசரதர் உணர்ந்தார். அவர் ஸ்தம்பித்துப் போய்விட்டார். மனம் தெளிவுறுதற்குக் கொஞ்சம் நேரம் ஆயிற்று. தாம் செய்திருந்த வாக்குத் தத்தம் மரணத்திற்கு நிகரானது என்று வருந்தினார். பிறகு கொந்தளிப்புடன் அவர் கர்ஜித்ததாவது: "அருவருப்புக்குரிய அல்ப ஜந்துவே! பாபத்தின் பிம்பமே! குடியைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பே! இராமனாவது நானாவது உனக்குச் செய்த தீங்கு தான் யாது? இராமனோ தன்னைப் பெற்றெடுத்த தாயைவிடப் பன்மடங்கு அதிகமாக உன்னை நேசிக்கிறான். அவன் உனக்கே பணிவிடை செய்து கிடக்கிறான். அத்தகையவனுக்குத் தீங்கு இழைக்க நீ தீர்மானித்துள்ளாய். உன்னைப் பராமரித்ததன் வாயிலாக இம்மாளிகையிலே நச்சுப்பாம்பு ஒன்றைப் பேணி வந்திருக்கிறேன். இராமனைச் சமுதாயம் முழுதும் ஒன்றுகூடிப் போற்றுகிறது. என் அருமைச் செல்வனாகிய அந்த இராமன்மீது என்ன குற்றத்தைத்தான் நான் சாட்டமுடியும்? கோசலா தேவியை, சுமித்ரா தேவியை, ராஜ்ய செல்வத்தை ஏன் என் உயிரையே நான் தியாகம் பண்ணமுடியும். ஆனால் என் அருமைச் செல்வன் இராமனை மட்டும் தியாகம் பண்ணமாட்டேன். சூரியனில்லாது ஒருவேளை உலகம் தாக்குப்பிடிக்கும். தண்ணீர் இல்லாது ஒருவேளை சாகுபடி நடந்தேறும்; ஆனால் இராமனில்லாது என் உயிர் உடலில் ஒட்டியிருக்கமாட்டாது. நாசகாரியாக உருவெடுத்து வந்திருப்பவளே, இந்தப் பொல்லாங்கினின்று பின்வாங்கும்படி உன்னை நான் பணிந்து பிரார்த்திக்கிறேன். உன்

பாதங்களில் என் தலையை வைத்து உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன்."

புலி ஒன்றைப் பார்த்து மான் ஒன்று நடுங்குவது போன்று கைகேயியின் முன்னிலையில் தசரதர் நடுங்கினர். ராஜாதி ராஜனுடைய மனக் கொந்தளிப்பு வெவ்வேறு வடிவங்களில் வெளியாயிற்று. மயங்கித் தரையில் வீழ்ந்தார்; தெளிவுபெற்று எழுந்துநின்று அந்தப் பெண்பாலைக் கெஞ்சிக் கேட்டார். மீண்டும் உணர்ச்சியின் வேகத்தால் அவர் மயங்கிக் கீழே விழுந்து கிடந்தார். ராஜரீதியும், கோமானுக்குரிய கௌரவ அமைப்பும் அக் கிழவனிடம் இருந்து மறைந்துபோயின. பிடிவாதமே வடிவெடுத்திருந்த அப்பாதகியின் பாதத்தில் அமர்ந்துகொண்டு ஒரு பாலகன் போன்று தேம்பித் தேம்பி அழுதார். கெஞ்சிக் கேட்பதிலும், வணங்கி விண்ணப்பிப்பதிலும், சீறி விழுந்து திட்டுவதிலும், நயந்து சமாதானப் படுத்துதலிலும், துயரத்துடன் கதறி அழுதலிலும் ஆக விதவிதமான மனக் கொந்தளிப்புகளில் மூழ்கியதாக அந்த இரவு கழிந்தது. ஆனல் அந்தப் பிடாரியின் விடாப்பிடியை மாற்றுதற்கு அவை யாவும் ஒன்றுக்கும் பயன்படாது போயின. கொடுத்திருந்த வாக்கை நிறைவேற்றியே ஆக வேண்டுமென்று கைகேயியானவள் மனம் கலங்காது கேட்டாள்.

இந்தப் பாங்கில் துயரம் நிறைந்த இரவு சிறிது சிறிதாகக் கழிந்துபோயிற்று. விடியற்காலத்தில் சாரதியாகிய சுமந்திரன் செய்தி ஒன்று கொண்டுவந்தான். இராமனுடைய பட்டாபிஷேகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் முறைப்படி அமைந்திருக்கின்றனவென்று வசிஷ்ட மஹரிஷி சொல்லியனுப்பியது அச்செய்தியாகும். ஆனல் பரிதாபத்திற்குரிய சக்கரவர்த்தியாருக்கோ பேச

நா எழவில்லை. இராமனை ஆங்கு அழைத்து வரும்படி கைகேயி மஹாராணி சுமந்திரனுக்கு உத்தரவு கொடுத்தாள். சாரதியோ தயங்கிக்கொண்டு சக்கரவர்த்தியாரைப் பார்த்தான். அவரோ, "அன்புக்குரிய இராமனைக் காண விரும்புகிறேன். அவனை ஈண்டு அழைத்து வா" என்று அடங்கிய குரலில் முணு முணுத்தார். ஏதோ விபரீதம் நிகழ்ந்திருக்கிறதென்று சுமந்திரன் சந்தேகப்பட்டான். ஆவலிலே தவித்துக்கொண்டிருந்த முகவாட்டத்துடன் அவன் ரதத்தை இராமனுடைய மாளிகைக்கு ஓட்டிச் சென்றான். விழாவுக்கு வேண்டிய ஆயத்தங்களெல்லாம் ஆங்கு முற்றிலும் நிறைவேறியிருந்தன. "தந்தையாரும், தாயாகிய கைகேயி தேவியும் இருக்கிற மண்டபத்துக்கு வரும்படி தங்களை அழைக்கிறார்கள்" என்று சுருக்கமாக அவன் இயம்பினன். அலங்கரித்த சீதையை அங்கேயே இருக்கும் படி சொல்லிவிட்டு இராமனும் இலக்ஷ்மணனும் பிரதான மான அரண்மனைக்கு ரதத்தில் வேகமாகச் சென்றனர். வழிநெடுக இன்பத்தில் துய்த்திருந்த குடிமக்கள் இராமனைப் பேரார்வத்துடன் போற்றினர்கள். மைந்தன் தந்தையார் முன்னிலையில் தோன்றி வீழ்ந்து வணங்கினன். "இராமா" என்று அரசர் அலறினர். மேற்கொண்டு ஏதும் இயம்ப அவருக்கு இயலவில்லை. இக்காட்சி இராமனைத் திகிலடையச்செய்தது. 'நான் தந்தையாருக்கு ஏதேனும் மன வருத்தத்தை உண்டுபண்ணிவிட்டேனே' என்று மைந்தன் அஞ்சினன். அதே பக்தி பூர்வமான பாங்கில் தாயார் முன்னிலையிலும் வீழ்ந்து வணங்கினன். குறிப்பறிகிற பாங்கில் அவளுடைய முகத்தை அவன்பார்த்தான். வழக்கமாக இருந்த தாயன்பு இப்பொழுது அவளிடத்திருந்து மறைந்து போய்விட்டது என்பது வெளியாயிற்று. பகை

பூண்டிருப்பது போன்ற பாங்குடன் அவள் பகர்ந்ததாவது: "தர்மத்துக்கும் ஆணைக்கும் உட்பட்டு உன் தந்தையார் எனக்கு இரண்டு வரங்கள் தரக் கடமைப்பட்டிருக்கிறார். அந்த இரண்டு வரங்களுள் ஒன்றனோடு நீ இணைக்கப்பட்டிருக்கிறாய். உன் தந்தையாரோ சத்தியத்தோடும் தர்மத்தோடும் இணைக்கப்பட்டிருக்கிறார். உனக்குச் சங்கடத்தை விளைவிக்க அவர் தயங்குகிறார்."

மைந்தன்: இவ்வளவுதானா! திண்ணிய எண்ணம் படைத்திருப்பவனுக்கும், கீழான ஆசை எதற்கும் அடிமைப்படாதிருப்பவன் எவனுக்கும் வாழ்க்கைப் பிரச்னை ஏதும் இல்லை. பெற்றோர்க்கு நான் யாண்டும் அடிமை. பெற்றோர்களிடமிருந்து பிறக்கிற ஆணைக்கு உட்பட்டுக் கொழுந்துவிட்டு எரிகிற தீயில் குதிப்பேன், விஷத்தை அருந்துவேன் அல்லது ஆழ்கடலில் மூழ்குவேன். எனக்கு வாழ்க்கைப் பிரச்னை ஏதுமில்லை. தாயே! தாங்கள் உத்தரவு இடுங்கள். இதோ அதற்கு அடிபணிய நான் ஆயத்தமாயிருக்கிறேன்.

கைகேயி: உன் தந்தையாரிடம் நான் வற்புறுத்தி வேண்டுவன இரண்டு உள. மரவுரி தரித்துப் பதினான்கு வருஷகாலம் தவம் புரிவதற்காக நீ இன்றைக்கே இப்பட்டணத்தை விட்டுக் கிளம்பித் தண்டகாரண்யத்திற்குப் போக வேண்டும். இது முதல் வேண்டுதல். நீ திரும்பி வரும் வரை பரதன் ராஜ்ய பரிபாலனம் பண்ணவேண்டும். இது இரண்டாவது வேண்டுதல். இவையிரண்டும் மாற்றமுடியாத என் திட்டங்களாகின்றன.

பிடிவாதக்காரியாகிய அப்பெண்பால் விடுத்த அடாத ஆணையைக் கேட்டு தசரதச் சக்கரவர்த்தி நடுநடுங்கினார். ஆனால் பாராட்டுதற்குரிய புத்திரனுடைய பாங்கோ தந்தையினுடைய பாங்குக்கு முற்றிலும் மாறுபட்டதாயிருந்தது.

அவனுடைய முகவிலாசத்தில் தெய்விக ஆனந்தம் திகழ்ந்து கொண்டிருந்தது. சான்றோர்களுக்குரிய சாந்தத்தையும் அவனுடைய வதனம் விளக்கிக்கொண்டிருந்தது. அத்தகைய பாங்கு படைத்திருந்த புதல்வன் அன்னையின் ஆணைக்கு அக்கணமே உடன்பட்டான். "என் தாயாரிடத்திலிருந்தும் சீதையிடத்திலிருந்தும் விடைபெறுவதற்கான காலதாமதத்துக்கு மட்டும் அனுமதி தாருங்கள்" என்று நாடு கடத்தப்பட்ட ராஜகுமாரன் பணிவுடன் வேண்டிக் கொண்டான். தாயாரின் மாளிகையை நாடித் தசரத குமாரன் ரதத்தில் விரைந்து சென்றான். வழி நெடுக மகிழ்வுடன் கூடி நின்ற மக்கள் இராமனுடைய முகத்தில் எந்த விதமான மாறுதலையும் காணவில்லை. ஆனால் உடன் சென்ற இலக்ஷ்மணனே துன்பத்தில் மூழ்கியவனாகத் தென்பட்டான்.

கௌசல்யாதேவி அப்பொழுதுதான் அவளுடைய காலை வந்தனை வழிபாடுகளை முடித்திருந்தாள். அத்தருணத்தில் மைந்தன் இராமன் அன்னையின் முன்னிலையில் தோன்றினான். வனவாசம் ஏகுதற்குத் தனக்கு வந்துள்ள உத்தரவைத் தாயிடம் சுருக்கமாக அவன் எடுத்தியம்பினான். மகிழ்வோடு மைந்தனை வரவேற்ற மாதா அக்கணமே கஷ்ட தசையில் மூழ்கினாள்.

ராஜ குடும்பத்தில் அரசிமார்கள் மூவரில் மூத்தவளாகிய கௌசல்யா தேவியின் நிலைமை எவ்விதத்திலும் பாராட்டுதற்குரியதாகத் தென்படவில்லை. கைகேயி தேவியினிடத்துத் தசரதச்சக்கரவர்த்தி வைத்திருந்த வரம்பு கடந்த வாஞ்சை முதல் அரசியாகிய கோசலாதேவியை ஒருவாறு புறக்கணித்து வைத்திருந்தது போலப் புலப்பட்டது. ஆயினும் அச்சங்கட நிலையை மாண்புமிக்க மாதரசி பொருள்படுத்த

வில்லை. ஆனால் இராமனைப் பகிஷ்கரித்ததை முன்னிட்டு அக்கணமே அவளுக்கு மாள முடியாத மனவேதனை உண்டா யிற்று. "இராமா, என் உயிரே; நீ இருப்பதால்தான் உயிர்வாழ்க்கையில் நான் இன்பம் காண்கின்றேன். உன்னை விட்டுப் பிரிந்தால் நான் உயிர் துறந்தவள் ஆவேன். நீ இவ் விடத்தை விட்டுக் கிளம்பியாக வேண்டிய நிர்ப்பந்தம் உனக்கு ஏற்பட்டிருக்கிறதென்றால் 'கன்றினுக்குப் பின்னே பரிந்து கொண்டு பசு போவதுபோன்று உன்னைப் பின்பற்றி நான் வெளியே கிளம்புவதற்கும் நீ எனக்கு அனுமதி தா" என்று அன்னை இயம்பினாள்.

குறிப்பறியும் திறமை வாய்ந்த இலக்ஷ்மணனுக்கு இப் பொழுது குடும்பத்தில் ஏற்பட்டுள்ள பிணக்கு நன்கு புலனா யிற்று. இராமனைக் காட்டுக்கு அனுப்புவதைக் குறித்துத் தான் ஆட்சேபம் பூண்டிருந்தது போன்று இராமனுடைய தாயாருக்கும் அது பிடிக்கவில்லை. ஆதலால் அவன் அக் கணமே பொங்கி எழுந்தான். "அண்ணா, இப்பொழுது இந்த நாட்டுக்கு நீ தான் அரசன். தந்தையாருடைய காலம் கடந்து போயிற்று. மக்கள் எல்லாரும் ஒன்றுகூடி உன்னைச் சிம்மாசனத்தில் அமர்த்த ஆவலுற்றிருக்கின்றனர். தயங் காது எனக்கு உத்தரவு தா. உன்னுடைய உரிமைக்கு யாரெல்லாம் தடையாயிருக்கிறார்களோ அவர்களையெல்லாம் இப்பொழுதே மாய்த்து மறுலோகத்துக்கு அனுப்பி விடு கிறேன்."

இராமன்: இலக்ஷ்மணா, சினம் மனிதனுக்குச் சத்துரு. சீற்றம் உனது விவேகத்தை மறைத்திருக்கிறது. பெற்றோர் களிடத்துத் தன்னை முற்றிலும் ஒப்படைத்திருப்பவனே மைந்தன். அவர்களிடமிருந்து தனக்கென்று கேட்பதற்கு மகனுக்கு ஒன்றுமில்லை.

இப்பொழுது தாயை நோக்கி மைந்தனாகிய இராமன் மொழிகிறான்: "சத்தியத்தை மனிதன் ஒருநாளும் புறக்கணிக்கலாகாது. தந்தையைச் சத்திய சங்கல்பனாக்குவது என் கடமை. ஆதலால் அவர் கொடுத்திருக்கிற வாக்குத் தத்தத்தை நிறைவேற்றுவதற்கு நான் இப்பொழுதே கானகம் ஏகுகிறேன். இந்தத் தீர்மானத்தினின்று எக்காரணத்தை முன்னிட்டும் நான் பின்வாங்கேன். என்னை விட்டுப் பிரிந்திருப்பது தந்தைக்குப் பெரிய வருத்தத்தை உண்டுபண்ணுகிறது. அம்மா, தாங்கள் இங்கேயே தங்கியிருப்பீர்களாகில் அவர் படும் வேதனையை அது ஒருவாறு ஆற்றிவைக்கும். விருத்தாப்பிய தசையிலிருக்கும் அவருக்குத் தாங்கள் கண்ணும் கருத்துமாகப் பணிவிடை பண்ணுங்கள். நான் காலதாமதம் பண்ணலாகாது. எனக்கு விடை கொடுத்தனுப்புங்கள்."

தாயார்: என் ஆருயிர்ச் செல்வா! நீ பூண்டுள்ள தீர்மானத்தின்படியே நடந்துகொள். நீ எங்கிருப்பினும் நலமுற்று இருப்பாயாக.

பிறகு இராமன் தான் வாழ்ந்திருந்த மாளிகைக்குத் திரும்பிவந்தான். சீதையினிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் நெருக்கடியில் அவன் இருந்தான். அவளோ இராமனுடைய வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருந்தாள். அவன் தன்னை மகுடாபிஷேக மண்டபத்துக்கு அழைத்துச் செல்வானென்று அவள் எதிர்பார்த்தாள். இராமனோ தனக்கேற்பட்டிருந்த இக்கட்டைச் சீதையினிடத்திருந்து மறைத்துவைக்க முயன்றான். ஆயினும் அந்த இளம் மாதோ நேர்ந்திருந்த நெருக்கடியைக் குறிப்பால் அறிந்துகொண்டாள். துயரத்தில் மூழ்கியவளாக அவள் தரையின் மீது அமர்ந்தாள். யுவராணி பட்டாபிஷேகம் பெறுதற்

கிருந்த யுவதி கேள்விகள் பலவற்றைக் கிளப்பினுள். "வெண்குடை எங்கே? பாடகர்கள் எங்கே? ஓதுவார்கள் எங்கே? ராஜஸ்ரீ தியும், ராஜகோலமும் எங்கே?"

உறுதியான விடை வருவதாயிற்று: " தளராத நெஞ்சம் படைத்துள்ள சீதா, கைகேயி தேவியாருக்கு என் தந்தை கொடுத்திருந்த இரண்டு வரங்களுள் ஒன்ருகக் கானகம் ஏகும்படி எனக்கு உத்தரவு பிறந்திருக்கிறது. பரதன் நாடாளுகையில் நான் வனத்தில் தவம் புரிவேன். நீ அமைதியாக அரண்மனையில் வாழ்ந்திருந்து உன்னுடைய மாமஞர், மாமிமார்களுக்குப் பணிவிடை புரிவாயாக. பரதனை அரசனுக அங்கீகரித்து அவனுக்கு வந்தனை வழிபாடு செய்வாயாக."

இராமனைவிட்டுப் பிரிந்திருப்பது சீதைக்குச் சாத்தியமன்று. அப்படிப் பிரிந்திருப்பதைப் பற்றி மனதால் நினைக்கவும் அவளுக்கு முடியவில்லை. உறவுகளுள் மனைவியின் உறவு அலாதியானது. கணவனுக்கு நலனே வாய்க்கட்டும், கேடே வாய்க்கட்டும், அவை யாவிலும் பங்குகொள்பவள் மனைவி ஒருத்தியே. தன்னைப் பகிஷ்கரிப்பதற்கான பொல்லாங்கு எதையும் தான் செய்ததில்லை என்று சீதை பரிவுடன் தெரிவித்துக் கொண்டாள். காட்டிலாலுைம் சரி, நாட்டிலாலுைம் சரி, மனைவியாகிய தனக்குக் கணவனுகிய இராமனேடு வசித்திருப்பதுதான் உசிதம் என்று அவள் எடுத்துரைத்தாள். வனவாசத்தைப்பற்றிய அச்சம் அவளுக்கு இல்லை. ஆனல் கணவன் அவளை விட்டுச் சென்ருல் அவள் உயிர் போய்விடும். இங்ஙனம் அவள் இயம்பினுள். அவளுடைய வேண்டுதலுக்கு இராமன் இணங்க வேண்டியதாயிற்று. ஆகவே அவளுடைய நகை, நட்டு முதலிய உடைமைகளையெல்லாம் ஏழையர்களுக்குப் பங்கிட்டுக்கொடுத்து

விட்டுப் புறப்படுவதற்கு ஆயத்தப்படுத்தும்படி இராமன் அவனை ஏவினன்.

இனி இலக்ஷ்மணன் தன்னுடைய நிலைமையை எடுத்து உரைக்க முன் வந்தான். கானகம் ஏகுதற்குத் தனக்கும் அனுமதி கொடுத்தாக வேண்டுமென்று இராமனிடம் அவன் விண்ணப்பித்தான். முதலாவதாக இராமனைவிட்டுப் பிரிந்திருப்பது அவனுக்குச் சாத்தியமன்று. எங்கு மூத்தவன் இருப்பானே ஆங்கு இளையவனும் இருப்பதே இன்றியமையாத செயல். இரண்டாவதாக அண்ணனுக்கும், அண்ணியாருக்கும் அல்லும் பகலும் பணிவிடைபண்ணுவதும், காவல் இருப்பதும், கனி, கிழங்கு முதலிய கானகத்தில் அகப்படும் உணவு வகைகளைத் தேடித் தருவதும் தன் கடமை என்று அவன் தெரிவித்துக் கொண்டான். ஆயினும் அகற்றுதற்கரியதாயிருந்த மற்றொரு பிரச்னையை இளையவனுக்கு ஞாபகமூட்ட மூத்தவன் முன்வந்தான். பரதனே ஆட்சிமுறையிலேயே ஆழ்ந்து ஈடுபட்டிருப்பான். தாய்மார்களாகிய கௌசல்யா தேவிக்கும் சுமித்ரா தேவிக்கும் பணிவிடை பண்ணுவதற்கு யாருமில்லை. கவனிப்பார் அற்றவர்களாக அவர்கள் இருக்கலாகாது. ஆதலால் அவர்கள் பொருட்டு இலக்ஷ்மணன் அயோத்தியிலேயே நின்று விடுவது முறை. ஆனல் அன்னை கௌசல்யா தேவிக்கு வந்து அமைகிற நெருக்கடிகள் யாவையும் நன்கு சமாளிக்கும் திறமை அவ்வம்மையாருக்கு வாய்த்திருந்தது என்று ஊக்கம் ததும்பிய இளைஞன் மூத்தவனுக்கு விளக்கிக் காட்டினன். இதற்கு மாறாக விபத்து நிறைந்திருந்த வனவாசத்தில் அண்ணனோடு தம்பி இருப்பதே தக்கது என்று அவன் தெரிவித்தான். இராமன் அக்கூற்றை ஆமோதித்தான். ராமலக்ஷ்மணர்களுக்குச் சொந்தமாயிருந்த விலையுயர்ந்த பொருள்களையெல்

லாம் ஏழைகளுக்கு எடுத்து வழங்கி விட்டுப் புறப்பட ஆயத்தப்படுத்தும்படி இளைஞனுக்கு அண்ணல் ஆக்ஞாபித்தான். அத்துடன் வசிஷ்ட மஹரிஷியிடம் அவர்கள் ஒப்படைத்து வைத்திருந்த அரிய அஸ்த்ரசஸ்த்ரங்களைத் தன்னோடு எடுத்து வரும்படியும் தமையன் தம்பியிடம் தெரிவித்தான்.

சக்கரவர்த்தியாரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு வனவாசத்தைத் துவக்குவதற்காக மூவரும் புறப்பட்டுச் சென்றனர். வீதிகளில் இப்பொழுது காட்சி மாறிவிட்டது. ஆங்காங்கு குதூகலத்துடனிருந்த கூட்டங்கள் கலைந்து போயின. ஏதோ சில இடங்களில் மட்டும் வருந்திக்கொண்டிருந்தவர்கள் தென்பட்டார்கள். மற்றோர் அதிசயம். விரட்டியனுப்பப்பட்ட மூவரும் அமைதியே வடிவெடுத்திருந்தனர். அதற்கு மாறாக வீதியில் தென்பட்டவர்கள் எல்லாம் துயரத்தில் மூழ்கித் தவித்துக்கொண்டிருந்தனர். தந்தையார் முன்னிலைக்கு இராமன் வந்து சேர்ந்தான். சிறிது எட்ட இருந்துகொண்டு வீழ்ந்து வணங்கினான். "ஐயனே, புறப்பட்டுப் போவதற்குத் தங்கள் அனுமதியை வேண்டுகிறோம். சீதையும், இலக்ஷ்மணனும் என்னோடு வருகிறார்கள். அப்படி அவர்கள் செய்துள்ள முடிவினின்று பின்வாங்க அறவே மறுக்கின்றனர். ஆகவே எங்கள் மூவருக்கும் ஆசிகூறி அனுப்பிவையுங்கள்."

வேந்தன்: இராமா, கைகேயிக்கு நான் கொடுத்துள்ள வரங்களில் கட்டுப்பட்டவனாகவே இருக்கிறேன். ஆயினும் உண்மை ஒன்றை உனக்கு எடுத்து உரைக்கிறேன் கேள். நாட்டினின்று உன்னை அப்புறப்படுத்தவேண்டும் என்னும் இந்த அடாத செயலை நான் கனவிலும் எண்ணியதே கிடையாது. அப்படி எண்ணவும் என்னால் இயலாது. இது

சத்தியம். இந்த ஓர் இரவாவது என்னோடு தங்கி இருந்து விட்டுச் செல். கடைசியாகக் கண்குளிர உன்னைக் காண நான் விரும்புகிறேன். நாளை விடிவதற்கு முன்பு நீ புறப்பட்டுப் போகலாம்.

இராமன்: ஒத்திப்போட்டு வைப்பதால் பிரிவைப் பற்றிய துன்பம் இன்பமாக மாறாது. நான் தங்களிடத்துப் பேரன்பு பூண்டுள்ள புத்திரன். தாங்கள் கொடுத்துள்ள வாக்கைச் சத்திய சங்கல்பமாக நிறைவேற்றி வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆதலால் அன்னை கைகேயியாரின் ஆணையின்படி நான் இப்பொழுதே புறப்பட்டுப் போகிறேன். கிருபை கூர்ந்து பரதனை இப்பொழுதே வரவழைத்து இரண்டாவது வரத்தையும் உடனுக்குடன் நிறைவேற்றுங்கள். சிம்மாசனத்தின் மீது எனக்கு ஆசை கிடையாது.

வனவாசம் நாடுகிற இராமனோடு தக்க பொருள்களையும் பரிவாரங்களையும் அனுப்பிவைக்க அரசர் ஆவல் பூண்டார். ஆனால் இராமன் அதற்குச் சிறிதளவும் இடம் தரவில்லை. தவத்திற்குச் செல்லுகின்றவன் பரிவாரங்களுடன் போவது பொருந்தாது. தியாகம் பூணுகின்றவன் தேசத்துக்குரிய திரவியத்தைத் தீண்டலாகாது என்பது இராமனுடைய கோட்பாடு. கைகேயிதேவியார் திட்டமிட்டதும் இதுவே. புதல்வர்கள் இருவரும் மரவுரி தரித்துத் தவக்கோலத்துடன் போகவேண்டுமென்பது அவளுடைய திட்டம். இராமனை இங்ஙனம் சிறுமைப் படுத்துதலில் அவள் இன்பம் கண்டாள். ஆனால் இராமனோ ரிஷிகள் போக்கில் தன்னை மாற்றியமைத்துக் கொள்ளுதலில் இன்பம் கண்டான்.

பட்டணத்தினின்று வெளியேகிய மூவரும் இலக்ஷ்மணனுடைய மாதாவாகிய சுமித்ராதேவியிடமிருந்து இறுதியாக விடைபெற்றனர். இலக்ஷ்மணனுக்கு அவள் இட்ட ஆணை

அதிசயிக்கத் தக்கது: "வனத்தில் வாழ்ந்திருக்கும் கால மெல்லாம் இலக்ஷ்மணு! இராமனைத் தந்தையாகவும், சீதையைத் தாயாகவும் போற்றி அவர்களுக்குப் பணிவிடை புரிந்து வருவாயாக."

3. ரதத்தில் ஏறுவதற்கு முன்பு இராமன் தந்தையாரிடம் விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்தான்: "தந்தையே, என் தாயாகிய கௌசல்யாதேவி தன்னுடைய விருத்தாப்பிய தசையில் புத்திரனை விட்டுப் பிரிந்திருக்கும் துயரத்துக்கு ஆளாகா வண்ணம் அவளைக் காப்பாற்றி வைப்பீர்களாக."

வீதியில் மற்றொரு சம்பவம். புறப்பட்டுப் போகிற ரதத்தைச் சிறிதுநேரம் நிறுத்தி வைக்க வேண்டுமென்று ஜனக் கூட்டம் கூப்பாடு போட்டது. ஆனால் அதை அப்பொழுதே விரட்டி வேகமாக ஓட்டிச் செல்லவேண்டுமென்று சாரதிக்கு இராமன் உத்தரவிட்டான். துயரக் காட்சியினின்று விரைவில் மறைந்துபட்டுப் போகவேண்டுமென்பது இராமனுடைய நோக்கம். ரதமும் விரைந்தோடித் தூரத்தில் காட்சியினின்று மறைந்தது. அயோத்தி நகரோ இருள் சூழ்ந்தது போன்று ஆயிற்று. மக்கள் துயரக்கடலில் மூழ்கலாயினர்.

தசரதச் சக்கரவர்த்தி துயரில் மூழ்கியவராய் விரைந்து க்ஷீணதசையடைந்து வந்தார். அவரைத் தொடுதற்குக் கைகேயிக்கு அனுமதி கொடுக்கவில்லை. ஒடுங்கி வந்த பிராணனை ஒருவாறு உறுதிப்படுத்திக்கொண்டு அவர் இயம்பியதாவது: "கைகேயி! இனி நான் உனக்கு உரியவன்லலேன். உன்னுடைய துர்ப்போதனைக்கு இணங்கிப் பரதன் சிம்மாசனத்தில் அமர்வானாகில் என்னுடைய ஈமச்சடங்குகளை அவன் செய்யலாகாது." இதுவே அவருடைய கடைசிப்

பேச்சு அத்துடன் அவருடைய நா அடங்கிவிட்டது. சைகையால் அவருடைய விருப்பத்தை அறிந்துகொண்டவர்கள் அவரைக் கௌசல்யாதேவியின் மண்டபத்துக்குத் தூக்கிச் சென்றனர். முடிவை எதிர்பார்த்து ஆங்கு அவர் படுத்துக் கிடந்தார்.

நாட்டினின்று விரைந்து சென்ற இராமன் முதல் இரவைத் தமஸா நதிக்கரையில் கழித்தான். தியானத்திற்கும் பிரார்த்தனைக்கும் அது பொருத்தமான இடமாயிருந்தது. வெட்டவெளியில் புல் தரையில் படுத்திருந்ததும் அவர்களுக்குப் பிரீதிகரமாய் இருந்தது. இராமனும் சீதையும் கவலையற்று உறங்கியதை இலக்ஷ்மணன் கவனித்தான். நேற்று இரவு அயோத்தியிலிருந்த ராஜரீதியான ஆடம்பரம் எத்தகையது; இன்றிரவு நாடு கடத்தப்பட்டவர்களாகக் கவனிப்பாரற்றுத் தரையில் படுத்துக்கிடப்பது எத்தகையது! ஒரு மனிதனுடைய ஜீவிதத்தில் இவ்வளவு பெரிய மாறுதல் வர முடியுமா? அப்படி வந்திருப்பதைப் பொருள்படுத்தாதிருப்பது இராமனுக்கன்றி வேறு யாருக்காவது சாத்தியப்படுமா? இப்படியெல்லாம் இளையவன் எண்ணலாயினன்.

அடுத்தநாள் காலையில் கங்கா நதிக்கரை ஓரம் அவர்கள் வந்து சேர்ந்தார்கள். ரதத்தை அயோத்திக்குத் திரும்பி ஓட்டிச் செல்லும்படி சுமந்திரனிடம் இராமன் தெரிவித்தான். ஆனால் அந்தச் சாரதியோ ரகுகுல திலகமாகிய இராமனை விட்டுப் பிரிய இயலாதவனாய்த் தேம்பித்தேம்பி அழுதான். வனவாசத்தை மேற்கொண்ட குமார வேந்தன் அவனுக்கு ஆறுதல் சொல்லித் தேற்றினான். அவனுடைய கண்ணீரைத் தானே துடைத்தான். தாங்கள் மூவரும் அகமகிழ்வுடன் ஆரண்யத்தை நோக்கிச் செல்வதாக அரண்மனையில் இருப்பவர்களுக்குத் தெரிவிக்கும்படி இராமன் சொல்லி

அனுப்பினான். நிகழ்ந்த நிகழ்ச்சியைக் குறித்துத் தான் எந்த விதத்திலும் மனக்கிலேசம் அடையவில்லையென்று அன்னை கைகேயிக்குத் தனிச் செய்தியும் சொல்லியனுப்பினான்.

துயரத்தில் தவித்துக்கொண்டிருந்த சுமந்திரன் காலி ரதத்தை ஓட்டிக்கொண்டு திரும்பிப்போன சிறிது நேரத்துக்குள் மற்றொரு மானுடன் அங்குப் பிரசன்னமானான். அந்த வட்டாரத்துக்கு அதிபதியாயிருந்த குகன் என்று அவன் தன்னை இராமனுக்கு அறிமுகப்படுத்திக்கொண்டான். வந்திருந்த மூர்த்திகள் மூவருக்கும் உள்ளன்போடு அவன் நல்வரவு அளித்தான். அது மட்டுமன்று. வனவாசத்துக்குரிய பதினான்கு வருஷங்களையும் தன்னுடனிருந்து கழிக்கும்படி அவன் பக்தி பூர்வமாக வேண்டினான். ஆனால் அப்படிச் செய்வது தான் எடுத்துள்ளவிரதத்துக்கு ஒவ்வாது என்று இராமன் மரியாதையாக மொழிந்தான். அறுசுவையுடன் ஆயத்தப்படுத்தியிருந்த உணவைக் குகன் வந்திருந்தவர்களுக்கு வழங்கினான். ஆனால் இராமனோ ஊராரிடமிருந்து அப்படி உணவு ஏற்பதும் தங்களுக்கு ஒவ்வாது என்று பண்புடன் பகர்ந்தான். கனி வர்க்கங்களை மட்டும் குகனிடமிருந்து அதிதி சத்காரமாக அம்மூவரும் ஏற்றுக் கொண்டனர். சிறிது நேரத்தில் அவர்களுக்கிடையில் அமைந்த நட்போ அசைக்கமுடியாதது. குகனுடைய கண்காணிப்பில் அவ்விடத்தில் அவர்கள் கழித்த ஓர் இரவு பாராட்டுதற்குரியதாய் இருந்தது. ஏனென்றால் இராமனும் சீதையும் இன்புற்றுச் சயனித்துக் கொண்டிருந்தபொழுது இலக்ஷ்மணனும் குகனும் உறக்கத்தை அறவே ஒதுக்கித் தள்ளியவர்களாக இராம மஹிமைகளைப் பற்றியே உரையாடிக்கொண்டிருந்தனர். தெய்விகம் ததும்பிய பேச்சுக்களிலேயே அவர்கள் காலத்தைக் கழித்தனர்.

அடுத்தநாள் காலையில் முறைப்படி கங்கா ஸ்நானம், வழிபாடு முதலிய ஆசார அனுஷ்டானங்கள் நிறைவேறின. பிறகு குகனுடைய திறமை வாய்ந்த ஆட்கள் படகைச் செலுத்தியதனால் அவர்கள் நதியைக் கடந்து சென்றனர். கங்காதேவிக்குச் சீதாதேவி வந்தனை வழிபாடுகளைச் செலுத்தினாள். தாங்கள் எடுத்துக்கொண்டிருந்த விரதம் இனிது நிறைவேற வேண்டுமென்றும் அவள் வேண்டிக்கொண்டாள்.

நதியின் தென்கரைக்கு வந்த பிறகு ஏகாந்தம் என்றால் என்ன என்பதை மூர்த்திகள் மூவரும் முதன்முதலாக அறிய வந்தனர். ஏனென்றால் அவர்களைத் தவிர மானுட வடிவம் எதுவும் அப்பக்கங்களில் தென்படவில்லை. இந்த அனுபவம் இராமனுக்கு வாழ்க்கையை ஒட்டிய பேருண்மை ஒன்றை நினைவூட்டியது. மானுடனொருவன் உலகினுள் தன்னந்தனியனாக வருகிறான். அப்படி வந்தவன் உலகில் பலருடன்கூடி வாழ்கிறான். பிறகு அவன் தன்னந்தனியனாகவே இவ்வுலகை விட்டு ஏகுகிறான். ஆதலால் இவ்வுலகில் வாழ்ந்திருக்கிறபொழுதே சமுதாய வாழ்க்கையையும் ஏகாந்த வாழ்க்கையையும் எங்ஙனம் கொண்டு செலுத்த வேண்டும் என்னும் பாடத்தைக் கற்றுக்கொள்வது அவசியம். இராமனுக்கு மற்றோர் எண்ணம் உள்ளத்தில் உதயமாயிற்று. அயோத்யாபுரியில் என்னென்ன நிகழ்ச்சிகள் என்னென்ன பாங்குகளில் வடிவெடுக்கக்கூடும் என்பதையும் அவன் ஒருவாறு யூகித்தான். அசாதாரணமான நிகழ்ச்சி ஏதாவது நேர்ந்தால் அதைச் சமாளித்தல் பொருட்டு அடுத்த நாள் தம்பி இலக்ஷ்மணன் திரும்பிப் போவது உசிதம் என்று அவனைத் தூண்டினான். ஆனால் இளையவனோ அதற்கு இம்மியளவும் இணங்கவில்லை. ராம சேவைக்கென்றே தன் தாய் சுமித்ராதேவி தன்னை அனுப்பி

வைத்திருக்கிருள் என்றும், அந்தச் சேவைக்கு நிகரான செயல் தன் வாழ்க்கையில் வேறு ஏதுமில்லையென்றும் அவன் வற்புறுத்திக் கூறினன்.

வாழ்வாங்கு வாழத் தெரிந்துகொண்டிருப்பவனுக்குத் தலைவிதி என்பதும், தௌர்பாக்கியம் என்பதும் இல்லை. வனவாசம் என்னும் வருத்தம் நிறைந்துள்ள வாழ்க்கையைத் தனக்கு மேன்மை நல்கும் பெருவாழ்வாக இராமன் மாற்றி அமைத்துக்கொண்டான். ஆரண்யங்களில் ஆங்காங்கு அமர்ந்திருக்கும் ஆன்றோர்களோடு விரைவில் இணக்கம்பூண அவன் திட்டமிட்டான். கங்கையும் யமுனையும் கூடுகிற இடத்தில் வசித்துவந்த பரத்வாஜ மஹரிஷியைத் தரிசிப்பது அவனுடைய முதல் திட்டம் ஆயிற்று. முன்பொரு நாள் மிதிலாபுரியில் தனக்கு மணம் முடிந்தானபிறகு இராமன் ஆர்வத்தோடு அயோத்யாபுரிக்குத் திரும்பினன். இப்பொழுதோ அதைவிட அதிகம் ஆர்வம் படைத்தவனைகப் பரத்வாஜ ஆச்ரமத்தை நோக்கி அவன் விரைந்து சென்ருன். அப்படிச் செல்லுதலில், பயன் மிக இருந்ததையும் அவன் கருத்தில் வைத்திருந்தான்.

யாத்திரைவாசி ஒருவனிடத்து இருக்கவேண்டிய பக்தி நிறைந்த பாங்குடன் இராமன் பரத்வாஜ ஆச்ரமத்திற்குப் போய்ச்சேர்ந்தான். அம்மகாமுனிவரோ இராமனுக்கும் அவனுடன் வந்திருந்த இருவருக்கும் பாத்தியம், அர்க்கியம் முதலியன படைத்து அவர்களைப் பாராட்டி வரவேற்ருர். இராமன் தன்னைப்பற்றியே இன்னும் அறியாது இருந்த பேருண்மை ஒன்றைப் பரத்வாஜ மஹரிஷி அறிந்திருந்தார். உலக நன்மைக்காக அரிய பெரிய செயல்களைச் செய்து சாதிக்க இராமன் மண்ணுலகுக்கு வந்திருக்கிருன் என்பதே அவர் அறிந்திருந்த உண்மையாகும். ஆதலால்

தான் அந்த இளையவனை அவர் அத்தகைய மரியாதையோடு வரவேற்றார். வணக்கத்துக்குரிய அந்த வயோதிக விப்ரர் வந்திருந்த மூவரையும் தம்முடைய சொந்தக் குழந்தைகளெனக் கருதினார். அந்த ஆச்ரமத்தில் அவர்கள் அதிக நாள் தங்கவில்லை. ஆயினும் அக்குறுகிய தங்கலில் கருத்து மிகப் புதைந்திருந்தது. ஆரண்ய வாசத்தை அவர்கள் என்ன பாங்கில் நடாத்தவேண்டும் என்னும் கோட்பாட்டை ஆங்கு அவர்கள் அறிந்துகொண்டனர். பிறகு சித்ரகூடம் செல்லுதற்கான வழி அவர்களுக்குக் காட்டப்பட்டது. அப் பிரதேசத்தில் அவர்கள் ஆழ்ந்து ஆத்ம சாதனங்களில் ஈடுபடுவது அவர்களுக்கு வாய்த்த முதல் கடமையாயிற்று.

பிரயாகையின்கண் அமைந்திருந்த பரத்வாஜ ஆச்ரமத்தினின்று சித்ரகூடத்தை நோக்கி அவ் இளைஞர் மூவரும் பண்ணிய பயணத்தில் அற்புதமான அனுபவங்கள் பல ஏற்பட்டன. கடப்பதற்கரிய அடர்ந்த காடே வழி நெடுக இருந்தது. நடப்பதற்கு வழிவகுத்துக் கொண்டு இலக்ஷ்மணன் முன்னே சென்றான். பருத்த மரங்களுக்கிடையிலும், முள் நிறைந்த புதர்களுக்கிடையிலும் பாதை பண்ணி வைப்பதில் அவன் பெருமகிழ்வு பூண்டான். அந்த இளையவனுக்குப்பின் சீதை நடந்து சென்றாள். அவளுக்குப் பின் இராமன் போய்க்கொண்டிருந்தான். ஆபத்து மிக நிறைந்திருந்த அந்த யாத்திரையை இளைஞர்களாகிய இம்மூவரும் மிக மகிழ்வோடு கடைப்பிடித்தனர். மூவருள் இளம் மாதரசியின் மகிழ்வோ உச்ச நிலையிலிருந்தது. உல்லாசப் பயணம் போகும் மாணாக்கன் ஒருவன் வழிநெடுக ஆசிரியர்களிடம் அந்தந்த இடத்துக்குப் பொருத்தமான கேள்விகள் பலவற்றைக் கேட்பதற்கு நிகராகச் சீதாபிராட்டி பறவைகளைப் பற்றியும், விலங்குகளைப் பற்றியும், மரம், செடி, கொடி

களைப் பற்றியும் ஆர்வத்துடன் வினுக்களைக் கிளப்பி அவை களுக்கேற்ற விடைகளைப் பெற்றுக்கொண்டு செல்வாளாயினள். எத்தனை எத்தனை விதமான மலர்கள், எத்தனை எத்தனை சுவை படைத்த கனி வகைகள், எவ்வளவு எவ்வளவு செழுமை படைத்த இயற்கை ஆகிய நூதன உலகில் இவர்கள் மேல்நோக்கிச் சென்றனர். பட்டணங்களில் ஒருபொழுதும் தென்படாத வாழ்க்கைத் தத்துவங்கள் பல வனத்தில் புதைந்து கிடந்தன. அவை யாவையும்பற்றிக் கேட்டு அறிந்துகொள்ளுதலில் பூம்பாவை ஆர்வம் மிகப் படைத்திருந்தாள். சிற்ருேடைகளையும், பெரிய நதிகளையும் அவர்கள் அடிக்கடி தாண்டும்படி நேரிட்டது. பாதம் தண்ணீரில் படியாது ஒரு பாறையினின்று மற்ருெரு பாறைக்குக் குதித்துப் போவதற்கு ஏற்ற பாங்கில் சில ஓடைகள் அமைந்திருந்தன. நீரினுள் நடந்து செல்லும் பாங்கில் இன்னும் சில நதிகள் அமைந்திருந்தன. உலர்ந்து போன மரக்கட்டைகளைக் கொண்டு தெப்பம் கட்டி அதன் மீது மிதந்துகொண்டு தெப்பத்தைச் செலுத்தும் பாங்கில் வேறு சில நதிகள் அமைந்திருந்தன. புதிய பிறப்பெடுத்துப் புதிய உலகில் வாழ்ந்து வந்தவர்கள் போன்று மும்மூர்த்தி களும் பெருமகிழ்வுடன் படிப்படியாக முன்னேக்கிச் சென்றனர். கடைசியாக மந்தாகினி நதியை அவர்கள் போய்ச் சேர்ந்தார்கள். பரத்வாஜ மஹரிஷி கொடுத்திருந்த விளக்கத்துக்கு ஒத்திருந்த சித்ரகூடம் என்னும் குன்று அந்நதிக் கரையினின்று காட்சிக்கு எட்டியது. அதை வெறுமனே பார்ப்பதிலேயே அவர்களுச்குப் பூரிப்புண்டாயிற்று. ஆங்கு அமைந்திருந்த அழகிய மரம், செடி, கொடிகள் வர்ணனைக்கு எட்டாதவைகளாக இருந்தன. ஆங்காங்கு தூரத்தில் யானை களும் மான்களும் மேய்ந்து கொண்டிருந்தன. பறவைகளின்

இன்னிசையோ கேட்போருக்குக் கர்ணனந்தத்தை ஊட்டியது. பரத்தின்கண் மனதை நாட்டுதற்கு உற்ற இடமாக அது திகழ்ந்தது. ஆங்கு இலக்ஷ்மணன் தன் கை வண்ணத்தைக் காட்டுகிற பாங்கில் அரியதொரு குடிசிலை அமைத்தான். அதன் சுவர்கள் மண்ணால் அமைக்கப்பெற்றவை. அதன் கூரையோ காட்டு இலைகளைக்கொண்டு அமைந்தது. இங்கே இராமனும், சீதையும், இலக்ஷ்மணனும் ஆழ்ந்து ஆத்ம சாதனங்களில் மூழ்குவாராயினர். உலகைப்பற்றிய எண்ணங்களெல்லாம் அவர்களுடைய உள்ளத்தினின்று மறைந்துபட்டுப் போயின.

4. அயோத்தியில் குற்றுயிர் உற்றுக் கிடந்த தசரதச் சக்கரவர்த்தியானவர் தம்மைத் தேற்றுதல் பொருட்டு 'இராமன் ஒரு வேளை திரும்பி வரக்கூடும்' என்னும் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தார். பின்பு சோகத்தில் அழுந்திக் கிடந்த சுமந்திரன் தன்னந்தனியனகத் திரும்பி வந்து கங்கை நதிக்கரையில் நிகழ்ந்தவைகளை எல்லாம் தழதழத்த குரலிலே எடுத்துக் கூறினன். அச்செய்திக்குத் தம் திறனுக்கேற்றவாறு காது கொடுத்திருந்த கோமானனவர் 'ராமா' என்று இயம்பிக்கொண்டு உடலை விட்டுப் பிரிந்தார். அக்கணமே அதைப் பற்றிய செய்தி பட்டணம் எங்கும் பரவியது. அதன் விளைவாக ஊரெங்கும் மற்றும் ஒருமுறை துயரமானது அலைவீசிப் பாய்வதாயிற்று.

துயரம் ஒருபுறம் ஊரார் உள்ளங்களையெல்லாம் உருக்கிக்கொண்டிருப்பதற்கிடையில் மகாமுனிவரும், புரோகிதருமாகிய வசிஷ்ட மஹரிஷி அடுத்தபடியாக நிகழவேண்டிய செயல்களில் கருத்தைச் செலுத்தினர். பரதன் திரும்பி வரும்வரையில் அரசனுடைய ஆக்கையைக் காத்து வைத்திருத்தல் பொருட்டு அதை எண்ணெய்க் கொப்பரையில்

அமிழ்த்தி வைத்திருக்கும்படி உத்தரவிட்டார். அதிவிரைவில் பரதனை அழைத்து வரும்படி கேகேய நாட்டுக்குக் குதிரை வீரர்கள் சிலரை அவர் அனுப்பி வைத்தார். ஏதோ அவசரக்காரியமாக அயோத்தி நகருக்குத் திரும்பி வர வேண்டும் என்னும் செய்தி மட்டும் அந்த ராஜகுமாரனுக்குத் தெரிவிக்கப்பட்டது. அயோத்திக்கு வந்த பிறகே நிகழ்ந்த விபத்துக்களையெல்லாம் பரதன் அறிந்துகொள்ள வேண்டுமென்பது முனிவருடைய கருத்து.

கடந்துபோன இரவில் பரதன் சோகரசம் ததும்பிய கனவு ஒன்று கண்டான். அதைப் பற்றி அவன் மனக்கிலேசம் கொண்டிருந்தான். அதே வேளையில் அவன் அயோத்திக்கு உடனே வந்து சேரவேண்டுமென்று வசிஷ்டருடைய வேண்டுதல் வந்து சேர்ந்தது. பாட்டனரிடத்திலிருந்தும், மாமாவிடத்திலிருந்தும் நிதானமாக விடைபெறுவதற்கான அவகாசம் அவனுக்குத் தரப்படவில்லை. ஒரு நொடிப்பொழுதில் பரதனும், சத்ருக்கனனும் கேகேய நாட்டுத் தலைமைப்பட்டணத்தினின்று தூக்கி எடுத்துச் செல்லப்பட்டார்கள் என்று தான் இயம்பவேண்டும்.

சகோதரர்களிருவரும் குதிரைச் சவாரியில் நிபுணர்கள். தங்கள் சொந்தத் தலைமைப்பட்டணத்துக்கு அவர்கள் விரைந்து சென்றனர். போய்க்கொண்டிருப்பதற்கிடையில் துயரம் சூழ்ந்த ஏதேதோ எண்ணங்கள் அவர்கள் மனதை வந்து தாக்கின. விரைந்து வந்து சேரவேண்டுமென்று வசிஷ்ட முனிவர் உத்தரவு அனுப்புவானேன்? அயோத்தி அரண்மனையில் பொருந்தாத செயல் ஏதேனும் நிகழ்ந்து விட்டதோ? அத்தகைய ஆவல் ஒரு பக்கம். போற்றுதற்குரிய அப்பாவையும், அண்ணவையும் சந்திப்பதைப்பற்றிய ஆர்வம் மற்றொரு பக்கம்.

அயோத்தியை அணுக அணுக அமங்கலமான காட்சிகளே கண்ணுக்குத் தென்பட்டன. வழக்கமாக இருந்து வந்த கலகலப்பை இப்பொழுது அவர்கள் காணவில்லை. எங்குத் திருப்பிப் பார்த்தாலும் துன்பத்தின் அறிகுறிகளே தென்பட்டன. மக்கள் எல்லாருடைய முகங்களிலும் வாட்டமே நிறைந்திருந்தது. ராஜகுமாரர்களிருவரும் அவசர அவரசமாகக் கைகேயி அம்மையாரின் மண்டபத்தினுள் பிரவேசித்தனர். அன்னையாரின் முன்னிலையில் இருவரும் வீழ்ந்து வணங்கினர்.

பரதன் : அம்மா, இம்மண்டபத்தில்தானே என் தந்தையாரை நான் பெரிதும் காண்பது வழக்கம்! அவருடைய தெய்விக சாந்நித்யம் ஈண்டு இல்லாதிருப்பதற்குக் காரணம் யாதோ ?

கைகேயி: உடல் எடுத்திருப்பவர்களெல்லாம் இறுதியில் செல்லும் உலகுக்கு உன் தந்தையாரும் சென்றுவிட்டார்.

தந்தை மடிந்துபோனார் என்னும் செய்தியைக் கேட்ட பரதன் அடியற்ற மரம்போல் தரையில் வீழ்ந்து ஒரு பாலகன் போன்று கதறிப்பதறி அழுதான். தான் கண்ட கனவின் உட்பொருள் இப்பொழுது அவனுக்கு விளங்கிற்று.

கைகேயி : வையகம் ஆளும் வேந்தன் ஒருவன் மாண்டு போனவர்களை முன்னிட்டுத் தரையில் புரண்டு கொண்டு புலம்புவது பொருந்தாது. எழுந்திருந்து உனக்காகவென்று கொடுக்கப்பட்டுள்ள ராஜபதவியை ஏற்றுக்கொள்.

கபடம் எதையும் அறியாதிருந்த பரதனுக்கு அக்கூற்றின் உட்பொருள் விளங்கவில்லை.

பரதன்: தந்தையார் ஏன் தேகவியோகமானார்? அவரைப் பீடித்த பிணிதான் யாது? கடைசிக் காலத்தில் அவ

ருக்குக் கைங்கரியங்கள் பண்ணும் வாய்ப்பு இராமனுக்கே வாய்த்திருந்தது. அவனோடு கூடியிருந்து பணிவிடை பண்ணும் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை. கடைசியாகத் தந்தையார் கூறியதுதான் என்ன?

கைகேயி: புத்திரன் தன்னைவிட்டுப் பிரிந்து போனதைப் பொறுக்கமாட்டாத பிதாவானவர் 'ஹா ராமா' என்று இயம்பினர். அத்துடன் அவருடைய ஹிருதயம் அடிப்பது நின்றுவிட்டது.

பரதன்: அப்பொழுது இராமன் எங்கே இருந்தான்? ஏதாவது பொதுநலச் சேவையை முன்னிட்டு அவன் புறத்தே போயிருந்தானா? அதன் விளைவாகவா விருத்தாப்பியத்தில் வருந்திக்கொண்டிருந்த தந்தையாரிடமிருந்து அவன் பிரிந்திருக்கும்படி நேர்ந்தது?

கைகேயி: அதொன்றுமில்லை. நாடுகடத்தப்பட்டதன் விளைவாகவே அவன் தந்தையாரிடமிருந்து பிரிந்து போகும்படி நேர்ந்தது.

பரதன்: போற்றுதற்குரிய என் தமையன் இராமன் நாடு கடத்தப்பட்டவன் ஆனானா? அடாத அக்கிரமம் ஏதாவது செய்தானா? அதை முன்னிட்டு மன்னிக்க முடியாத பாங்கில் அவன் நாட்டைவிட்டு வெளியே அனுப்பப்பட்டானா? அத்தகைய கொடிய தண்டனைக்கேற்ற குற்றம் எதைத்தான் அவன் செய்யத் துணிந்தான்? குணமே உருவெடுத்திருந்த இராமனுக்குக் குற்றம் பண்ணுவதும் சாத்தியமாயிற்றா? அப்படியானால் அவனை நாடு கடத்தியவர் யார்? தான் செய்த குற்றத்துக்கு ஈடாக நாட்டைவிட்டு வெளியேகுதல் என்னும் தண்டனையைத் தானே ஏற்றுக்கொண்டானா?

கைகேயி: பிள்ளாய், அது ஒன்றுமில்லை. குற்றம் எதிலும் சம்பந்தப்படாத மேலோன் ஆவான் இராமன். அவன் யாண்டும் அறம் காக்கும் தர்மவான்.

பல்லாண்டுகளுக்கு முன்பு தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையில் போர் நிகழ்ந்தது. உன் தந்தையார் அப்போரில் தேவர்களுக்கு உதவிபுரிந்தார். தீவிரமாக அவர் சண்டையிட்டுக்கொண்டிருந்தபொழுது சிறிது நேரம் அவர் மூர்ச்சை போய்விட்டார். அப்பொழுது நான் அவருக்கு அரிய பணிவிடைகள் பண்ணித் தெளிவு ஊட்டினேன். என்னுடைய சேவைக்குக் கைம்மாறாக இரண்டு வரங்கள் தர அன்று அவர் எனக்கு வாக்குக் கொடுத்தார். வேண்டும் என்கின்றபொழுது அவைகளைப் பயன்படுத்திக்கொள்கிறேன் என்று நான் அவருக்குச் சொல்லி வைத்திருந்தேன். சில தினங்களுக்கு முன்புதான் நீ ஊரில் இல்லாத சமயம் பார்த்து உன் தந்தையார் இராமனுக்கு அவசர அவசரமாக யுவராஜ பட்டாபிஷேகத்துக்கு ஏற்பாடு செய்து வந்தார். அவ்வேளையில் அவர் எனக்கு முன்பு கொடுத்திருந்த வரங்கள் இரண்டையும் ஞாபகமூட்டினேன். இராமன்மீது ஆணையிட்டு அவ்வரங்களை நிறைவேற்றி வைப்பதாக அவர் எனக்கு உறுதி கூறினர். இந்த ராஜ்யத்திற்கு உன்னை யுவராஜனகச் சிம்மாசனத்தில் ஏற்றி வைக்க வேண்டுமென்று முதல் வரமாகக் கேட்டேன். அன்றைக்கே தவ வேடம் பூண்டு இராமன் பதினன்கு வருஷகாலம் கானகம் ஏகவேண்டுமென்பதை இரண்டாவது வரமாகக் கேட்டேன். இராமன் மீது வைத்திருந்த பெரும் பற்றுதலின் விளைவாகச் சக்கரவர்த்தியார் இரண்டாவது வரத்தை நிறைவேற்றி வைக்க இயலாது திகைத்துப்போனர். ஆதலால் ஆரண்யத்தின் கண் தவத்திற்காகப் புறப்பட்டுப் போகவேண்டு

மென்று இராமனிடம் நானே உத்தரவிட்டேன். அவனும் மகிழ்ச்சியோடு என்னுடைய ஆக்ஞையை நிறைவேற்றினன். சீதையும் இலக்ஷ்மணனும் அவனுடன் சேர்ந்து காட்டுக்குப் போய்விட்டார்கள். நீ ராஜ்ய பரிபாலனத்தை ஏற்பதற்கான உபாயத்தை நான் கையாண்டிருக்கிறேன். ஆதலால் இப்பொழுது மகிழ்வுடன் நீ அரச பதவியை ஏற்று இன்புற்று இருப்பாயாக.

இதுகாறும் துயரத்தில் மூழ்கிக் கிடந்த பரதனிடம் இப்பொழுது கடும் சினம் பொங்கியெழுந்தது. அவன் கர்ஜித்ததாவது: "பொல்லாத பாதகியே, உனக்குரிய வரங்களை வேண்டுவதன் வாயிலாகப் பாதகம் நிறைந்த உன்னுடைய பாங்கை வெளிப்படுத்தியுள்ளாய். பதவி மோகம் உன்னுடைய அறிவைப் பாழ்படுத்திவிட்டது. மூத்த மகன் நாடாளுதற்குச் சிம்மாசனம் ஏறுவது இந்த இக்ஷ்வாகு வமிசத்தின் ஐதிகமாகும். புனிதம் வாய்ந்த இந்த ஐதிகத்துக்கு அபகீர்த்தியை வரவழைத்திருக்கிருய். அது மட்டுமன்று. கேகேய நாட்டு அரசனுகிய மாட்சிமை தங்கிய அசுவபதி கோமானுக்குக் குமாரியாக நீ உருவெடுத்தது பொல்லாத தௌர்பாக்கியமாகும். உன்னைத் தம்முடைய அலாதியான அன்புக்கு இலக்காயுள்ள அரசியாகத் தேர்ந்தெடுத்ததில் என் தந்தையார் பெரும்பிழை செய்துவிட்டார். இராமனே தன்னை ஈன்றெடுத்த தாயை நேசிப்பதைவிட அதிகமாக உன்னை நேசித்தான். அவன் உனக்கே அரிய பெரிய பணிவிடைகளைப் பண்ணி வந்தான். நன்றிகெட்ட பாதகியே, நம்பிக்கைத் துரோகமே வடிவெடுத்தவளே, என் தமையன் உனக்குச் செய்துள்ள சேவைகளுக்குக் கைம்மாருக நீ அவனைக் கானகத்துக்கு விரட்டியோட்டியிருக்கிருய். என் தந்தையை ஒழித்துத் தள்ளிய கொலைபாதகி நீ.

உன்னுடைய பாபச் செயலுக்கு ஏற்ற தண்டனையாக உன்னைக் கொன்று தள்ளுவது முறை. ஆனால் எனக்குத் தெய்வமாக இலங்கும் என் தமையன் இராமன் அந்தை ஆமோதிக்கமாட்டான். ஆதலால் அவனை முன்னிட்டு நான் உனக்கு உயிர்ப்பிச்சை தருகிறேன். எனக்கு ராஜ்யம் ஒன்று தேடிவைத்திருப்பதாக மனக்கோட்டை கட்டிக் கொண்டு நீ மகிழ்வுற்றிருக்கிறாய். ஆனால் இதோ பார்! உன் முன்னிலையிலேயே நான் சபதம் ஒன்று கூறுகிறேன். இராமனைத் தேடிக்கொண்டு இப்பொழுதே அயோத்தியை விட்டு வெளியே கிளம்புகிறேன். இராமன் இல்லாத கால மெல்லாம் பரதன் அயோத்திக்குள் நுழையமாட்டான். மேலும் இராமன் மரவுரி தரித்துத் தவவேடம் பூண்டிருக்கும் காலமெல்லாம் பரதனும் அதே தவவேடத்தில்தான் இருப் பான். கடைசியாக, காறித் துப்பிப் புறக்கணிப்பதற்கு ஏற்ற ராக்ஷஸியே, உன்னுடைய மகன் என்னும் இணக் கத்தை இப்பொழுதே நான் துறந்து விடுகிறேன்."

அடுத்தபடியாகப் பரதன் தங்களுடைய ராஜ குடும்பப் புரோகிதராகிய வசிஷ்டரைச் சென்று சந்தித்தான். காலம் சென்ற தந்தைக்குரிய ஈமச் சடங்குகளைச் செய்து முடிப்ப தற்கான ஏற்பாடுகளையும் விரைவில் ஆயத்தப்படுத்தும்படி அவரிடம் அவன் வேண்டிக்கொண்டான். உள்ளத்தைத் துயரம் ஒருபுறம் வாட்டிக்கொண்டிருக்கையில் சோகம் ததும்பிய சாந்தத்துடன் ராஜகுமாரர்கள் இருவரும் எண் ணெய்க் கொப்பரையினின்று தந்தையாரின் சடலத்தை மேலே எடுத்தார்கள். தகனத்தின் பொருட்டு உரிய இடத் துக்கு அது எடுத்துச் செல்லப்பட்டது. ஐதிகத்தை ஒட்டி சிரார்த்தச் சடங்குகள் செய்யப்பட்டன.

அதன் பிறகு சிமமாசனத்தில் வீற்றிருப்பதற்குத் தகுதி வாய்ந்த பரதன் முதியோர்களையும், மந்திரிமார்களையும், குடி

மக்களின் பிரதிநிதிகளையும் கூட்டி வைத்தான். கைகேயி தேவியார் கிளப்பிவைத்திருந்த பிரச்னைகளைப்பற்றி அக் கூட்டத்தார் ஆலோசனை செய்தார்கள். பரதனுடைய மனப்பாங்கைப் பொதுமக்கள் ஐயம் திரிபு அற நன்கு அறிந்துகொண்டனர். பதவியைத் துறந்திருந்த பரதனு டைய தலைமையின் கீழ் அயோத்திவாசிகளின் பிரதிநிதிகள் ஒரு சிலர் இராமனை அணுகி நாட்டுக்குத் திரும்பி வரும்படி அவனிடம் பரிந்து வேண்டிக்கொள்ளத் தீர்மானித்தனர். ஸ்ரீ ராமனுக்கு வனத்திலேயே பட்டாபிஷேகம் செய்வித்து ராஜ கோலத்துடன் அவனைத் திருப்பி அழைத்து வருவது அவர்களுடைய திட்டமாயிற்று. எனவே இராமனுடைய ஆச்ரமத்தை நோக்கி அயோத்தி நகரின் குழாம் புறப்பட்டுச் சென்றது.

கங்கைக் கரையைப் பரிபாலித்து வந்த குகன் இக் கூட்டத்தை முதன் முதல் சந்தித்தான். பெருங்கூட்டத் துடன் பரதன் இப்படிப் புறப்பட்டு வருவதன் கருத்து யாதோவென்று குகன் ஐயம் பூண்டான். ஆனால் அவனு டைய நோக்கத்தை ஆராய்ந்து பார்த்தபொழுது அவன் அண்ணனாகிய இராமன்மீது அளவுகடந்த பக்தி வைத்திருந் தான் என்பதை அறிந்துகொண்டான். முன்பு இராமனுக்கு நடந்தது போன்றே இப்பொழுது பரதனுக்கும் அவனோடு வந்திருந்த பெருங்கூட்டத்துக்கும் உபசரிப்பு உவகையோடு நடைபெற்றது. கங்கையைக் கடந்து பரதனுடைய கூட்டத் தார் தென் திசைக்குப் போவதற்கும் வேண்டிய உதவிகள் செய்யப்பட்டன.

பரதன் பரத்வாஜ ஆச்ரமத்துக்குப் புறப்பட்டுச் சென் றான். தன்னோடு வந்தவர்களைச் சற்று எட்டத் தங்கியிருக் கும்படி செய்துவிட்டு வசிஷ்டரும் தானுமாகப் பரத்வாஜ

மஹரிஷியைச் சென்று சந்தித்தார்கள். தாங்கள் புறப்பட்டு வந்ததன் நோக்கத்தைச் சுருக்கமாக எடுத்து மாமுனிவருக்குத் தெரிவித்தார்கள். இராமனுடைய வாசஸ்தலத்தை அம்மஹரிஷியிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொண்டார்கள். அதன் பிறகு இராமனைக் காணுதல் பொருட்டு அவர்கள் கானகத்தின் வழியாகத் தென்திசை நோக்கிச் சென்றார்கள்.

5. உலகத்தவர்களுடைய கலகலப்பு ஏதுமில்லாத, ஏகாந்தமான இடமாகிய சித்ரகூடத்தில் இராமனுடைய ஆத்ம சாதனங்கள் அமைதியாகவும் ஆனந்தகரமாகவும் நிகழ்ந்துகொண்டிருந்தன. வழக்கம்போன்று இலக்ஷ்மணன் தன்னுடைய நித்தியக் கடமைகளில் ஈடுபட்டிருந்தான். அப்பொழுது படையெடுத்து வருவதற்கு நிகராக ஒரு பெரும் கூட்டம் வடதிசையில் அவனுக்குத் தென்பட்டது. மரக்கிளை ஒன்றன்மீது ஏறி அக்கூட்டத்தை அவன் கூர்ந்து கவனித்தான். இக்ஷ்வாகு வமிசத்தின் கொடி தாங்கியதாக அக்கூட்டம் தென்பட்டது. அதைப் பார்த்ததும் ஆபத்து அணுகி வருகிறது என இளையவன் யூகித்தான். உடனே மூத்தவனிடம் அவன் விரைந்து ஓடினான். பதைபதைப்புடன், "அண்ணா, தங்களுடைய பங்காளி பரதன் படையெடுத்து வருகிறான். எதிர்காலத்தில் தனக்கு உபத்திரவம் ஏதும் நிகழாதிருத்தல் பொருட்டுத் துவக்கத்திலேயே தன்னுடைய ஆதிக்கத்தைப் பலப்படுத்திக் கொள்ளுதல் அவனுடைய நோக்கம் என எண்ணுகிறேன். கிருபை கூர்ந்து உத்தரவு தாருங்கள். அன்னவன் தங்களை அணுகுவதற்கு முன்பே அவனையும், அவனுடைய படைகளையும் நான் பாழ்படுத்திவிடுகிறேன்" என்று இயம்பினான்.

இராமன்: இலக்ஷ்மணா, அவசரப்படாதே. ஒருவேளை பரதன் இங்கேயே தங்கியிருந்து எனக்குத் தொண்டுபுரிய

முன்வந்தால் அவனுக்குப் பதிலாக நீ அயோத்தி சென்று ஆட்சிபுரிய ஆயத்தமாயிருக்கிருயா?

இலக்ஷ்மணன் இப்பொழுது நாணமுற்று அமைதியாக நிற்கிறுன்

பரதனும் சத்ருக்கனனும் கண்ணீரும் கம்பலையுமாக இராமனுடைய சந்நிதியில் வந்து வீழ்ந்து வணங்குகிருர்கள். பிறகு அவர்கள் தேம்பித் தேம்பி அழுகிருர்கள்.

இலக்ஷ்மணனே பரதனுடைய பாங்கை இப்பொழுது உள்ளபடி பார்க்கிருன். அவன் கொண்டிருந்த வெட்கம் பன்மடங்கு அதிகரித்தது.

தான் புறப்பட்டு வந்ததைச் சுருக்கமாகச் சொல்லி விட்டுப் புத்திரர்கள் யாரும் பக்கத்தில் இல்லாத நிலையில் தந்தையார் தேகவியோகமானதை விரிவாக எடுத்து விளக்கினன்.

சகோதரர்கள் நால்வரும் ஏனையவர்களும் இப்பொழுது துயரத்துக்கு ஆளாகிருர்கள். தவிர்க்கமுடியாத பாங்கில் தந்தையாருச்கு நேர்ந்த முடிவைக் குறித்துத் துன்புற்று இருந்தவர்கள் சிறிது சிறிதாகத் தங்களைத் தேற்றிக் கொள்கின்றனர்.

சகோதரர்கள் நால்வரும் சீதையும் சேர்ந்து நதிக் கரைக்குச் சென்று காலகதியடைந்த தந்தையாருக்கு ஆத்ம சாந்தி உண்டாகும் பொருட்டு சிரார்த்தச் சடங்குகளை முறையாகச் செய்து முடித்தனர். மரணதசையடைகின்றவர்களுக்கு மண்ணுலகில் இருக்கிறவர்கள் ஊக்கத்தோடும் அன்போடும் படைக்கின்ற பிண்டதானம் பெருநலனை விளைவிக்கிறது.

பிறகு இராமனுக்கும் பரதனுக்குமிடையில் நிகழ்ந்த சம்வாதம் வருமாறு:

இராமன்: அயோத்தியில் நீ அரச கோலத்திலிருந்து ஆட்சி புரிவது உன் கடமை. அதற்கு மாறாக நீ பூண்டிருக்கின்ற தவவேடம் உனக்கு ஒவ்வாது.

பரதன்: ஆராதனைக்குரிய அண்ணா, தாங்கள்தான் அயோத்யாபுரியின் அரசன். அத்தகைய தாங்கள் எவ்வளவுகாலம் தவவேடம் தாங்கியிருப்பீர்களோ அவ்வளவு காலம் நானும் தவவேடம் பூண்டிருக்கத் தீர்மானித்திருக்கிறேன்.

இராமன்: பெற்றோர்களுடைய ஆணைக்கு அடிபணிந்து நான் தவவேடம் பூண்டிருக்கிறேன். அவர்களுடைய ஆணைக்கு அடிபணிந்து நீ அரசகோலம் பூண்டிருக்கக் கடமைப்பட்டிருக்கிறாய்.

பரதன்: நம் இக்ஷ்வாகு வம்சத்தின் ஐதிகப்படி மூத்த குமாரனாகிய தாங்களே நாடு ஆள்வதற்கு உரியவர் ஆவீர். நம் தந்தை அந்த ஐதிகத்தை மாற்றியதற்குக் காரணம் என் தாய் ஆவாள். இந்த மாற்றத்துக்கு நான் இணங்க மாட்டேன்.

இராமன்: பெற்றோர் சொற்படி நடப்பது புத்திரனுடைய கடமை. பெற்றோர் போக்கைப் புறக்கணிக்க முயலுபவன் புத்திரனல்லன்.

பரதன்: ஐதிகத்தினின்று பெற்றோர்களே பிறழ்ந்து போகிறபொழுது மைந்தன் அவர்களுக்கு ஏன் அடிபணிய வேண்டும்?

இராமன்: தேவை ஏற்படுகின்றபொழுது ஐதிகத்தை மாற்றலாம். பெற்றோர்கள் நெறி பிறழ்ந்து போகிறவர்கள்

போன்று நடந்துகொள்கிறவிடத்தும் மைந்தன் அவர்களுடைய சொற்படி நடந்துகொள்ளவேண்டும். அப்படி அடிபணிவதால் அவனுக்கு நலனே உண்டாகிறது.

பரதன் : பிறர் பொருளைச் சூறையாடும்படி பெற்றோர் ஆணையிட்டால் அந்த ஆணைக்கும் அடிபணியும்படி மைந்தன் கடமைப்பட்டிருக்கிறானோ?

இராமன் : இல்லை. அத்தகைய ஆணைக்கு அவன் அடிபணியலாகாது. பெற்றோர் புத்திரனுக்கு இடுகிற ஆணை தர்மத்துக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும்.

பரதன் : அண்ணா, தங்களுக்குரிய ஆட்சியை நான் முறை தவறி அபகரிக்க வேண்டுமென்று என் தாய் விரும்புகிறாள். அத்தகையவளுக்கு நான் அடிபணிவது எங்ஙனம்?

இராமன் : பரதா, இப்படி நீ பகர்வதில் பொருள் இல்லை. பெற்றோர்களுடைய உடைமைகளாகப் பொருள்கள் இருப்பது போன்று புத்திரர்களும் பெற்றோர்க்கு உடைமைகள் ஆகின்றனர். பொருள் என்னும் உடைமையைப் புத்திரர்கள் என்னும் உடைமைக்கு அவர்கள் எப்படி வேண்டுமானாலும் பங்கிட்டுக் கொடுக்கலாம். அறநெறி பிறழாத செல்வன் பெற்றோர்கள் பண்ணுகிற தீர்மானத்தில் குறை கண்டுபிடிக்க முன்வரலாகாது.

பரதன் : பேராசைக்காரியாகிய அந்தப் பெண்பால் நான் அனுபவம் அற்றவன் என்பதையும் தந்தையாருக்குப் பொதுநலப்பொறுப்பு இருக்கிறதென்பதையும் கருத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. மனைவியிடம் வைத்திருந்த பற்றுதலை முன்னிட்டுத் தந்தையார் செயலற்றுச் சும்மா இருந்துவிட்டார். ராஜ நெறியினின்று அவர் எப்படியோ வழுவிப் போயிருக்கிறார். அவர் செய்துள்ள தவறுதலைச்

சரிப்படுத்த மைந்தர்களாகிய நாமிருவரும் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களுடைய தவறுகளைத் தகைமையாக மாற்றியமைப்பதன் வாயிலாக நாம் அவர்களுக்குச் சத்புத்ரர்களாக இருந்து வந்தனை வழிபாடுகள் செய்கிறோம்.

இராமன்: என் உயிருக்குயிராகிய இளையவா, நீ இயம்புவது உண்மையன்று. கடமைகளுள் உச்சநிலையிலிருப்பது தவம் புரிதல் என்னும் கடமை. அத்தகைய பெரிய கடமையைப் பிதாவானவர் என்மீது சுமத்தியிருக்கிறார். என்னுடைய முழு ஆற்றலைப் பயன்படுத்தி அக்கடமையை நான் நிறைவேற்றவேண்டும். சிம்மாசனத்தில் வீற்றிருப்பது சுகபோகத்தில் திளைத்திருப்பதற்கு அறிகுறியென உலகத்தவர்கள் பொருள்படுத்துகின்றனர். ஆனால் சிம்மாசனம் ஏற்பது என்பது பொதுநலனுக்காகத் தன்னை ஒப்படைப்பது என்பதை அறிஞர்கள் தாம் அறிந்துகொள்கின்றனர். உலகப்பற்றுடையவர்கள் அதை அறிந்துகொள்ளமாட்டார்கள்.

பரதனோடு சித்ரகூடத்துக்கு வந்திருந்தவர்களுள் ஜாபாலி என்னும் பெயர் படைத்திருந்த புரோகிதர் ஒருவர் ஆவார். அவர் தம் கருத்தை இராமனுக்குத் தெரிவித்தார். "ராமா, மானுடன் ஒருவனிடத்து மாறாது நிலைத்திருக்கும் சொரூபம் ஏதுமில்லை. அவன் ஓயாது மாறியமைந்து கொண்டே இருக்கிறான். பிறகு அறவே அழிந்துபட்டுப் போகிறான். தசரதச் சக்கரவர்த்தியாக இருந்தவர் இப்பொழுது இல்லவேயில்லை. ஐம்பூதங்களால் ஆகிய அவர் அழிந்துபட்டுப் போய்விட்டார். இல்லாதவருடைய ஆணையை நிறைவேற்றுவது பொருளற்ற வீண் செயல்; ஏழை நெஞ்சத்தின் பாங்கு அது. உண்மை ஏதும் அதில் இல்லை. உன்னை விட்டுப் பிரிந்ததனால் அயோத்யா பட்ட

ணம் முழுவதும் துயரத்தில் தவித்துக்கொண்டிருக்கிறது. மனம் வைத்து நாட்டுக்குத் திரும்பிப்போய் மக்களுக்கு இன்பமூட்டு. நீ வாழ்ந்திருக்கும் காலமெல்லாம் உனக்கு வாய்த்திருக்கிற பரந்த சாம்ராஜ்யத்தை இன்புற்று அனுபவித்து வா. போகம் ஒன்றே வாழ்க்கையில் கைகண்ட வாய்ப்பு ஆகிறது. ஆதரவற்ற நம்பிக்கைகளை ஒதுக்கித் தள்ளு. உலகம் தருகிற ஆனந்தத்தைத் தயங்காது அனுபவித்து வா."

சத்தியத்தோடும் தர்மத்தோடும் முரண்படுகின்ற இக் கொள்கையை இராமன் ஆமோதிக்கவில்லை. அதை லோகாயதம் என அவன் ஒதுக்கித் தள்ளினான்.

இப்பொழுது பரதன் மற்றும் ஓர் உபாயத்தைத் தமையனிடம் தெரிவித்தான். பெற்றோர்கள் புதல்வர்கள் எல்லாரையும் ஒரே பாங்கில் நேசித்து வருகிறார்கள். தங்கள் செல்வர்களுக்குச் சில கடமைகளைச் செய்யும்படி உத்தரவு போடுகிறார்கள். அப்படிப் போட்டுள்ள உத்தரவைப் புதல்வர்கள் ஏற்றுக்கொண்டு தங்களுக்கிடையில் வசதிக் கேற்ற பாங்கில் கடமைகளை மாற்றிக்கொள்கின்றனர். அப்படி மாற்றிக்கொள்வது பெற்றோர்களுடைய ஆணையை மீறி நடந்துகொள்வதாகாது. அப்படித் தங்களுக்கிடையிலே பரிமாறிக்கொள்கிற முறைப்படி பரதன் பதினான்கு வருஷகாலம் வனவாசம் பண்ணும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள முன் வந்தான். மக்களுடைய மதிப்புக்கு இலக்காக இருந்த இராமன் அயோத்தியை ஆளும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளட்டும். இங்ஙனம் அவர்கள் தங்களுக்குள் கடமைகளைப் பிரித்து அமைத்துக் கொள்வது பெற்றோர் ஆணையை மீறி நடந்ததாகாது. இங்ஙனம் பரதன் எடுத்துரைத்தான். ஆனால் இராமன் அதை ஆமோதிக்கவில்லை.

வெறுமனே சமுதாய அமைப்புக்கும் ஆட்சிமுறைக்கும் அத்தகைய ஏற்பாடுகள் ஏற்புடையவைகள் ஆகக்கூடும். ஆனால் சத்தியத்தைக் கடைப்பிடிப்பதற்கும் தர்மத்தைத் தழுவுதற்கும் அந்த ஏற்பாடுகள் பயன்படமாட்டா. தந்தையைச் சத்திய சங்கல்பன் ஆக்குவதே இராமனுக்கு அமைந்திருந்த பெரிய கடமையாயிற்று.

பரதன் இப்பொழுது தன்னுடன் வந்திருந்தவர்களிடம் முறையிட்டதாவது: "என் தமையனார் என்மீது சிறிதேனும் இரக்கம் காட்டாதிருக்கிறார். ஆதலால் இங்கேயே நான் படுத்துக்கிடந்து பட்டினி போட்டு உயிரை மாய்க்கிறேன்."

இராமன் : தம்பீ; வீரன் ஒருவன் இத்தகைய செயலில் இறங்கமாட்டான். உனக்கு அமைந்துள்ள கடமை யாது என்பதை நன்கு அறிந்துகொண்டு ஆண்மையுடன் அதில் பிரவேசிப்பாயாக.

பரதனுடன் வந்திருந்த கூட்டத்தார் அனைவரும் பிரலாபிக்கலாயினர்: "ரகுராமா, எங்களை ஆண்டு அருள்பவராகிய தங்களைத் தேடிக்கொண்டு நாங்கள் எல்லாரும் இங்கு வந்துள்ளோம். எங்கள்மீது தாங்கள் கிருபை வைக்காவிட்டால் நாங்கள் எல்லாரும் அனாதைகள் ஆகிவிடுவோம். நாங்கள் இத்தனைபேர் ஒன்றுகூடிச் செய்கிற விண்ணப்பமானது தந்தையாருக்குத் தாங்கள் கொடுத்துள்ள வாக்குத் தத்தத்தைப் பொருளற்றதாக்குகிறது. கிருபை கூர்ந்து அயோத்திக்குத் திரும்பி வருவீர்களாக."

இராமன் : கடலே வற்றிப்போகலாம், ஹிமாசலத்தில் ஹிமம் அல்லது உறைபனி சிறிதேனும் இல்லாது உருகிப் போகலாம், சூரியன் தன் பிரகாசத்தை இழக்க நேரலாம், ஆனால் இராமன் மட்டும் தன் தந்தையார் கொடுத்த வாக்குத்

தத்தத்தினின்று பிறழ்ந்தவன் ஆகமாட்டான். தந்தையைச் சத்திய சங்கல்பன் ஆக்குதல் பொருட்டு இராமன் பதினன்கு வருஷகாலம் வனவாசம் பண்ணுவான்.

பரதன் : பெற்றோர் சொல் கேட்டு அதன்படி நடக்கும் பெருமை என் தமையனருக்கு இருக்கட்டும். பெற்றோர் சொல் கேளாத கீழ்மை எனக்கே உரியதாகுக. இராமன் நான் வணங்கும் தெய்வம். அவனுடைய சிம்மாசனத்தின் மீது நான் ஒரு பொழுதும் அமரேன். இம்முறையில் தான் பெற்றோரை அடிபணிய நான் மறுக்கிறேன்.

வசிஷ்டர் : இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கான உபாயம் ஒன்றைக் காண்போம். பரதனுடைய தீர்மானத்தின்படி இராமனுடைய சிம்மாசனத்தின்மீது அவன் அமர வேண்டியதில்லை; ஆனால் இராமனுடைய பிரதிநிதியாய் இருந்துகொண்டு ராஜ்ய பரிபாலனத்தை அவன் கவனித்துக் கொள்ளட்டும். இம்முறையைக் கையாளுவதால் பெற்றோருடைய திட்டமும் இனிது நிறைவேறுகிறது.

பரதன் : அண்ணா, தாங்கள் எனக்குத் தெய்வம். தந்தையார் தேகவியோகமானர். என் தாயை நான் துறந்து விட்டேன். தங்கள் ஆதரவில் வாழ்ந்திருக்க அவாவுற்றிருந்தேன். ஆனால் தாங்கள் அயோத்திக்கு வர மறுத்துவிட்டதால் நான் ஓர் அனாதையாகத் தவிக்கிறேன். அனாதையாக இருந்துகொண்டே தங்கள் ஆட்சி முறையைக் கவனித்து வருகிறேன். சிம்மாசனத்தின் மீது தங்களுக்குப் பதிலாகத் தங்களுடைய பாதுகைகள் இடம் பெறும். தாங்கள் இல்லாத அயோத்திக்குள் நுழையமாட்டேன் என்று சபதம் பூண்டிருக்கிறேன். அந்தச் சபதத்தின்படியே நடந்துகொள்வேன். அயோத்தியாபுரிக்குப் புறத்திலிருக்கும் நந்திக் கிரா

மத்தில் தங்கியிருந்து தவம் புரிகிற பாங்கில் உங்களுடைய ஆட்சியை என்னால் இயன்றவளவு நிறைவேற்றி வருவேன்.

பரதனுடைய இத்திட்டத்தை இராமன் ஆமோதித்தான். அதற்கு அறிகுறியாகத் தன் தம்பியை அன்போடு கட்டித் தழுவிக்கொண்டான். மரப்பாதுகைகள் இரண்டின் மீது இராமன் பாதங்களைப் படியவைத்து அவைகளைத் தம்பியிடம் கொடுத்து உதவினான்.

பரதன்: ஆராதனைக்குரிய அண்ணலே, தம் முன்னிலையில் நான் விரதம் ஒன்று பூணுகிறேன். ஆண்டுகள் பதினான்கைப் பூர்த்தி பண்ணிக்கொண்டு அடுத்த நாள் நண்பகலுக்குள் தாம் அயோத்யாபுரிக்குத் திரும்பி வாராதிருந்தால் பரதனை உயிரோடு காணமாட்டீர்கள். தம்முடைய நாமத்தை உச்சரித்துக்கொண்டு என் உடலைத் தீக்கு இரையாக்குவேன்.

இராமன்: நீ பகர்ந்துள்ளபடி திரும்பிவர நான் வாக்குக் கொடுக்கிறேன். உன்னிடம் மற்றும் ஒரு வேண்டுகோளை விநயபூர்வமாகத் தெரிவிக்கிறேன்: உன் தாயார் கைகேயி தேவியாரிடம் நீ எவ்விதமான மனத்தாங்கலும் பூண்டிருக்கலாகாது. மாத்ரு பக்தியில் நீ ஓங்கி வளர்ந்து வரவேண்டும்.

பரதன் கம்பீரமான மௌனம் பூணுகிறான். மனதுக்குள்ளேயே அவன் எண்ணிக்கொள்கிறான்; இத்தகைய தெய்விகப்பண்பு இராமனுக்குத்தான் சாத்தியம். 'ராம, ராம' என்று ராம நாமம் உச்சரித்துக்கொண்டு சீதா ராமனைப் பரதன் வலம் வருகிறான். சோக ரசம் சொட்டுகிற அவனுடைய முகவிலாசத்தைப் பார்த்த இராமனுக்கு உள்

ளம் உருகுகிறது. ஆனால் தம்பியைத் திருப்திப்படுத்தும் பாங்கில் தமையன் இல்லை.

பரத்வாஜ மஹரிஷி முன்னிலைக்குத் தம்பி பரதன் திரும்பி வந்து நிகழ்ந்தவைகளையெல்லாம் மஹரிஷிக்குத் தெரிவித்துவிட்டு நந்திக் கிராமத்துக்கு வருகிறான். தவவேடம் தரித்துக்கொண்டு மந்திரிமார்களுடைய துணையைக்கொண்டு ராமராஜ்யத்தை அவன் திறமையுடன் நிர்வகித்து வந்தான். அவனுடைய அன்றாட அண்ணலின் வழிபாடு ராஜ்ய பரிபாலனத்தைவிட மிக்கதாக இருந்தது.

ஆரண்ய காண்டம்

இராமன் தான் பூண்டிருந்த தவவேடத்தையோ ஆரண்யவாசத்தையோ குலைத்துவிடுவான் என்பதன் அறிகுறி ஏதும் தென்படவில்லை. திட்டப்படியே அவன் பதினான்கு வருஷம் வனத்தில் பூர்த்திபண்ணுவான் என்பதே உறுதியாயிற்று. பின்பு பரதனே ஏமாற்றமடைந்து புண்பட்ட மனதோடு அயோத்திக்குத் திரும்பிச் சென்றான். தம்பிக்கும் அவனுடன் வந்திருந்த அயோத்தி மக்களுக்கும் ஏமாற்றத்தை உண்டுபண்ணியதை முன்னிட்டு இராமனுக்கு ஒருபுறம் வேதனையாயிருந்தது. இத்தகைய் சம்பவம் மீண்டும் மீண்டும் நிகழக்கூடும். ஏனென்றால் அயோத்தி வாசிகள் தங்கள் அண்ணலின் தரிசனத்தின் பொருட்டு இடையிடையே சித்ரகூடத்துக்கு வருவது சாத்தியம். அத்தகைய சம்பவங்கள் ஆத்மசாதனத்திற்குப் பொருத்தமானவைகள் ஆகமாட்டா. பின்பு இராமனுக்குப் பெற்றோர்கள்

தண்டகாரண்யத்தில் வசித்திருக்க வேண்டுமென்று விதித்துள்ளார்கள். ஆங்கு ரிஷிகள் பலர் வசித்து வந்தனர். ரிஷிகளின் இணக்கத்தை நாடுவதும், நாட்டு மக்களின் இணக்கத்தை ஒதுக்குவதும் இராமனுக்கு அவசியமாயிற்று. சித்ரகூடத்தில் எதைப்பார்த்தாலும் பரதனைப்பற்றியே அது ஞாபகமூட்டியது. அத்தகைய சித்த விருத்தியும் பொருந்தாது. இக்காரணங்களையெல்லாம் முன்னிட்டு இராமன் சித்ரகூடத்தைக் காலிசெய்து விட்டுத் தென்திசையை நோக்கிப் புறப்பட்டுச் சென்றான்.

இராமனும் சீதையும் இலக்ஷ்மணனும் தண்டகாரண்யத்தில் பிரசித்தி பெற்றிருந்த அத்ரி மஹரிஷியின் ஆச்ரமத்திற்கு முதன் முதலில் போய்ச் சேர்ந்தார்கள். பழுத்த விருத்தாப்பியத்திலிருந்த அந்த விப்ரர் வாலிபத்திலிருந்த இம்மூவருக்கும் வழங்கிய வழிபாடு தெய்வ வழிபாட்டுக்கு ஒப்பானது. அதற்குற்ற காரணத்தை அந்த மஹரிஷி நன்கு அறிந்திருந்தார். பிரபஞ்ச நடைமுறையை ஒட்டிய அரிய பெரிய செயல்கள் சிலவற்றை நிறைவேற்றுவதற்கென்றே இம்மூவரும் வந்துள்ளார்கள். அத்ரி மஹரிஷியின் பத்தினியாயிருந்தவர் வயது முதிர்ந்த அனசூயாதேவி. ஆரண்ய வாசிகளாகிய இத்தம்பதிகளிருவரும் ஆத்ம ஞானத்தின் உச்சநிலையை எட்டியவர்கள் ஆவார்கள். அனசூயாதேவியோ அக்காலத்தில் போன்று இக்காலததிலும் ஆராதிக்கப்பட்டு வருகிறாள். பெண்பால் ஒருத்தியிடம் இருக்க வேண்டிய பாரமார்த்திகப் பண்பே வடிவெடுத்தவள் அவ்வம்மையார். தெய்விகம் கமழும் இத்தம்பதிகள் வந்திருந்த மூவரையும் தங்களுக்குச் சொந்தமான செல்வர்கள் செல்வியாகவே பேரன்புடன் பாராட்டினர். அனசூயாதேவி செல்வியாகிய சீதையினிடத்து வைத்த அன்போ அலாதியானது.

அது அருளுக்கு உறைவிடமாகிய அன்னை ஒருத்தி அருளுக்கு உறைவிடமாகிய புதல்வியைப் பேணுவது ஆயிற்று. அருள் செல்வியின் கூந்தலைக் கோதியமைப்பது, ஆடையை ஒழுங்குபடுத்துவது, ஆபரணங்கள் சிலவற்றைப் பொருத்த மாக அமைப்பது—ஆகிய செயல்கள் தாயின் ஸ்தானம் வகித்திருந்த அந்த மாதரசிக்கு மட்டில்லா மகிழ்ச்சியை ஊட்டின. இத்தகைய அருள்விருந்தை ஜானகியானவள் அயோத்யாபுரியிலோ மிதிலாபுரியிலோ ஒருபொழுதும் பெற்றிருக்கமுடியாது. மானுடப்பிறவி எடுத்திருக்கிறவர்கள் பெறுதற்கரியபேறு அதனை பூமாதேவியின் புதல்வியாகிய மைதிலி பெறுவாளாயினள். இது ஒரு புறமிருக்க இராமனும் அத்ரி மஹரிஷியின் பரஸ்பரம் வழங்கிக்கொண்ட ஆத்மானுப வங்களோ சொல்லுக்கு எட்டாதவைகளாம். அதற்கு அடுத்தபடியாக தண்டகவனத்தில் எங்கெந்த ஆச்ரமங்களை நாடி எங்கெந்தத் திக்குகளில் போகவேண்டும் என்பதும் பேசி முடிக்கப்பட்டது. இராமனுக்கு வாய்த்த வனவாசத்தில் நலங்கள் பல அவனுக்கு வந்தமைந்தன. அந்த நலங்களுள் அத்ரிமஹரிஷியின் இணக்கம் குறிப்பிடுதற்குரிய அலாதி யானது எனலாம்.

வன சஞ்சாரத்தில் பலப்பல புண்ணிய ஸ்தலங்களை இராமன் சென்று சேவித்தான். சென்றவிடங்களில் எல்லாம் அவன் இனிது ஆராதித்து வரவேற்கப்பட்டான். அவன் சக்கர வர்த்தியின் திருக்குமாரன் என்பதைத் தபோதனர்கள் நன்கு அறிந்திருந்தனர். நாடு ஆளுதற்கு இருந்த தசரதகுமாரன் முறையாகக் காடு ஆளுதற்கென்றே வந்து வாய்த்தவனாக அவர்களுக்குத் தென்பட்டான். ஆங்காங்கு அமைந்திருந்த ஆஸ்ரமங்களுக்கு இடைஞ்சல்களை உண்டுபண்ணும் மூர்க்கத் தனம் வாய்ந்த ஜந்துக்கள் பல இருந்தன. அவைகளால் விளைந்த விபத்துக்களெல்லாம் காடு ஆளும் வேந்தனிடம்

எடுத்து விளக்கப்பட்டன. ரகுராமனும் தக்க பாங்கில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து வந்தான். மேதினியில் மேனி காக்கும் பொறுப்பை இராமன் வகித்து வருகையில் முனிவர்கள் பரத்தின்பால் தங்களுடைய மனதை ஆழ்ந்து செலுத்தினர்கள். அதற்கேற்ற வசதியை வகுத்து வழங்கியது தனக்கு வாய்த்த ஆத்மீகப் பேறு ஆக இராமன் உணர்ந்தான்.

2. இராமனும், சீதையும், இலக்ஷ்மணனும் அடர்ந்த அடவிக்குள்ளே சென்று கொண்டிருந்தபொழுது பருத்த உடல் தாங்கிய அரக்கன் ஒருவன் திடீரென்று சீதையின் மீது பாய்ந்து இரு சகோதரர்களிடத்திருந்தும் அவளைப் பிரித்து எடுத்துக்கொண்டான். அவளைத் தூக்கித் தன் தோளின் மீது வைத்துக்கொண்டு ஆடவர்களை விரட்டினன். தவவேடம் பூண்டிருந்த அவர்கள் பெண்பால் ஒருத்தியைத் தங்களோடு வைத்திருந்தது எப்படிப் பொருந்தும் என்பது அவன் செய்த ஆட்சேபம் ஆகும்.

அந்த ஆடவர்களைக் கொன்று ஒழித்துவிட்டுப் பெண்பாலைத் தன் மனைவியாக வைத்துக்கொள்வதாக அவன் பயமுறுத்தினன். அவன் மீது சகோதரர்கள் அம்புமாரியைப் பொழிந்தார்கள். அதன் விளைவாக அரக்கன் இரத்தத்தை ஏராளமாகச் சிந்தினன். இப்பொழுது பெண்பாலை இறக்கித் தரையில் வைத்துவிட்டுப் போர்வீரர்கள் இருவரையும் தூக்கித் தன்தோள்களில் வைத்துக்கொண்டு கானகத்திற்குள் கனவேகமாக ஓடினன். அவ்வேளையில் சகோதரர்களிருவரும் அந்த அரக்கனுடைய கரங்களிரண்டையும் துண்டித்தனர். அவன் பிடியினின்று விடுபட்டு பூமியில் குதித்து அவர்கள் ஓயாமல் அவன்மீது அம்பை எய்தனர். அவன் பெரிதும் காயப்பட்டிருந்தான். எனினும் சாவுக்கு மட்டும்

அவன் இரையாகவில்லை. அந்த மர்மத்தை அறிந்துகொண்ட இராமன், "எந்த ஆயுதங்களாலும் இந்த அரக்கனுக்கு மரணமில்லை என்னும் வரத்தை இவன் வாங்கியிருக்கிறான். ஆதலால் ஆழமான குழியொன்று வெட்டி அதனுள் இவனை உயிரோடு புதைப்போம்" என்று தம்பியிடம் இயம்பினான். இயம்பியபடியே இருவரும் செயலைச் செய்து சாதித்தனர். அக்கணமே சாபத்தினின்று அவன் விடுதலை அடைந்தான். கந்தர்வன் ஒருவன் குழியினுள் நிறைந்திருந்த மாமிசக் குன்றினின்று கிளம்பி வெளியே வந்தான். வானத்திலே அவன் மேல் நோக்கிச் செல்லுகையில் சொல்லியதாவது: "ராமா, உன்னை நான் நமஸ்கரிக்கிறேன். ஒரு சாபத்தின் விளைவாக நான் இதுவரையில் ஆயுதங்களால் அழிக்கப் படாத விராதன் என்ற ராக்ஷசனாக இருந்தேன். மானுடர் களைத் துன்புறுத்துவது என்னுடைய தொழிலாயிருந்து வந்தது. எனக்குச் சாபம் நேர்ந்தபொழுதே தசரதராமனு டைய தீண்டுதலால் சாபவிமோசனம் வாய்க்கும் என்ற ஆறுதல் செய்தியும் வந்தது. கருணாகரனாகிய உன்னைப் போற்றுகிறேன். ராமா, அண்மையில் சரபங்க மஹரிஷியின் ஆஸ்ரமம் இருக்கிறது. அங்கு நீ எழுந்தருள்வாயாக." அந்தக் கந்தர்வனுடைய வேண்டுதல்படி நடந்துகொள்ள இராமனும் தீர்மானம் செய்தான்.

3. இராமன், இலக்ஷ்மணன், சீதை ஆகிய மூவரும் பழையபடி ஒன்றுகூடினார்கள். சரபங்க மகாமுனிவருடைய ஆஸ்ரமத்தை நாடி அவர்கள் நடந்துசென்றார்கள். சரபங்க முனிவர் வாழ்ந்திருந்த மண்ணுலக வாழ்வு மகிமை மிக வாய்க்கப்பெற்றது. அவருடைய கர்மம் முடிவடைந்திருந்தது. ஆஸ்ரமத்துக்கு அருகில் வந்தபொழுது இராமன் அரிய தொரு காட்சியைக் கண்டான். ஜோதிர்மயமான இந்திர

னும் அவனுடைய திருக்கூட்டமும் ஆஸ்ரமத்தினின்று விண்ணுலகை நோக்கி மேலே போய்க்கொண்டிருந்தனர். அதன் பிறகு இராமனும், தம்பியும், சீதையும் ரிஷி ஆஸ்ரமத்திற்கு வந்து சேர்ந்தனர். பிறகு ரிஷிபுங்கவருக்குப் பாதங்களில் வீழ்ந்து வந்தனை வழிபாடுகள் செய்தார்கள். முனிவர் அவர்களை இங்ஙனம் வரவேற்றார். "அருள் செல்வர்காள், வாருங்கள். உங்களைக் காண்பதில் நான் பேரானந்தம் அடைகிறேன். இவ்வையக வாழ்வுக்குரிய என் பழவினைகளெல்லாம் பூர்த்தியாகிவிட்டன. ஆதலால் விண்ணுலகுக்கு என்னை அழைத்துச் செல்ல இந்திரன் சிறிதுநேரத்துக்கு முன்புதான் இங்கே பிரசன்னமாயிருந்தான். ஊனக்கண்கொண்டே நரோத்தமனாகிய இராமனைத் தரிசித்தபின் உடலை உகுத்துவிட்டு இந்திரனுடன் செல்ல எண்ணினேன். என் விருப்பத்தை அவனுக்கும் எடுத்து விளக்கினேன். எனக்காகச் சிறிதுநேரம் காத்திருக்கும்படி அவனிடம் வேண்டினேன். என் அவாவை அவன் ஆமோதித்தான். ஆனால் அதற்காகக் காத்திருப்பது தனக்கு ஒவ்வாது என்று அவன் எனக்குத் தெரிவித்தான். ஏனென்றால் இந்திரன் இராமனைச் சந்திப்பதற்கான காலம் இன்னும் வந்துசேரவில்லை. ராமா, நீ மண்ணுலகிலே நிறைவேற்றுவதற்கான அரிய பெரிய செயல்கள் சில இருக்கின்றன. அவைகளை நீ செய்து முடித்தான பின்பே இந்திரன் உன்னை வந்து இவ்வுலகில் சந்திப்பான். ராமா, உன்னுடைய தரிசனத்தினால் நான் கிருதார்த்தனாயிருக்கிறேன். இங்கிருந்து நீ சுதீக்ஷ்ண மஹரிஷியின் ஆஸ்ரமத்துக்கு எழுந்தருளும்படி வேண்டுகிறேன். உன்னுடைய வாசஸ்தலம் முதலிய விபரங்களைப் பற்றி அந்த மகாமுனிவர் உனக்கு எடுத்து மொழிவார். இதோ ஹோமாக்னி சுடர்விட்டு எரிந்துகொண்டிருக்கிறது

பார். உன்னுடைய சொருபத்தை உறுதியாக உள்ளத்தினுள் வைத்துக்கொண்டு தகனமாகக்கூடிய இந்த தேகத்தை வேள்வித்தீக்கு இரையாக்குகிறேன்.'' இயம்பியபடி சரபங்க முனிவர் நெருப்பினுள் உடலை உகுத்தார். ஜோதி சொருபமாக அவர் கிளம்பி இராமனுக்கு வணக்கம் செலுத்திவிட்டு விண்ணுலகை நோக்கி மேலே சென்ருர்.

விதவிதமான சாதன வகைகளைச் சாதித்துக்கொண்டிருந்த தபஸ்விகள் பலர் ஒருவர்பின் ஒருவராக இராமனை வந்து சந்தித்தார்கள். அவ்வனங்களில் வசித்து வந்த ராக்ஷசர்கள் என்னென்ன விதங்களில் தங்களுக்குத் தீங்குகள் செய்து வந்தார்கள் என்பனவற்றையெல்லாம் ரகு ராமனிடம் வணக்கத்துடன் எடுத்துரைத்தார்கள். நல்லாரைக் காப்பதற்காகவே ஆயுதம் தாங்கியிருந்த இராமன் அவர்களுக்கு அபயம் அளிக்க வேண்டுமென்று விண்ணப்பித்தார்கள். அகமகிழ்வுடன் அண்ணலும் அதற்கு இசைந்தான். "என் தந்தையார் கொடுத்திருக்கும் உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கென்றே நான் இவ்வனங்களுக்குள் வந்திருக்கிறேன். அவர் சொல்லை நிறைவேற்ற வந்துள்ள எனக்கு இப்பொழுது மற்ருெரு கடமை தானுக வந்து வாய்த்திருக்கிறது. கொடியவர்களிடமிருந்து நல்லாரைக் காப்பதே என் புதிய கடமையாகும். ஆக, இரண்டு விதங்களில் நான் பாக்கியவானுகின்றேன். தந்தை சொல் காத்தலும், தக்கவர்களுக்குத் தீங்கு வாராது காத்தலும் அவ்விரு கடமைகளாகும்.'' ஆக, தபோதனர்களுடைய வேண்டுதலுக்கிணங்கி அவர்களைக் காத்தருள இராமன் இசைந்தான்.

இப்பொழுது இராமன் சுதீக்ஷ்ண மஹரிஷியின் ஆஸ்ரமத்தை நோக்கிப் புறப்பட்டான். அவனுடன் ரிஷிகள் சிலர் சென்றனர். சுதீக்ஷ்ண மஹரிஷியின் ஆஸ்ரமமோ அமைதிக்

கும் அருளுக்கும் உறைவிடமாய் இலங்கியது. ரிஷிபுங்கவரின் முன்னிலைக்கு வந்து இராமன் சாஷ்டாங்கமாக் வீழ்ந்து நமஸ்கரித்தான். அதே வேளையில் தன்னை இன்னான் என்று சான்றோரிடம் அறிமுகப்படுத்திக்கொண்டான். மஹரிஷியோ அவனைப் பிடித்து மேலே கிளப்பிக் கட்டித் தழுவிக்கொண்டார். இராமன் சித்ர கூடத்துக்கு வந்தது முதற்கொண்டு அவனுடைய நடமாட்டங்களெல்லாம் தம் காதுக்கு எட்டியதாக மஹரிஷி மொழிந்தார். வயதில் அவர் முதிர்ந்து இருந்தார். எனினும் தம்போக்கில் அவர் தம் முடைய ஆயுளை வளர்த்துக்கொண்டே போனார். தாம் எடுத்திருந்த ஸ்தூல சரீரத்தைக்கொண்டு இராமனை ஸ்தூல சரீரத்திலேயே தரிசிக்கவேண்டுமென்பது அவரது பேரவா. தண்டகாரண்யத்தில் ஆஸ்ரமங்கள் பல நிறுவப்பெற்று இருந்தனவெனினும் வேந்தன் இல்லாத வெறும் வனமாக அது சோர்வுற்றுக் கிடந்தது. இராமனுடைய வருகையால் அந்தக் குறைநிலை நீக்கப்பெற்றது. இங்ஙனம் மஹரிஷி இயம்பியபொழுது மறைமுகமாக அவர் தனக்கிடும் கட்டளை யாது என்பதை இராமன் அறிந்துகொண்டான். எனவே தற்செயலாகத் தனக்கு வந்து வாய்த்திருந்த அரச கடமைகளைச் சரியாக நிறைவேற்ற அவன் தனக்குள் தீர்மானித்துக் கொண்டான். ஆங்காங்கு ஆஸ்ரமங்கள் பல இருந்தன. ஆதலால் முறை வைத்து அவைகளிடத்து அயோத்திராமன் விஜயம் செய்ய வேண்டுமென்பது விப்ரர்களுடைய வேண்டுகோள். சுதீக்ஷண மஹரிஷியிடம் பக்தி பூர்வமாக விடை பெற்றுக்கொண்டு இராமன் பலப்பல ஆஸ்ரமங்களுக்கு முறைப்படி செல்வானாயினன். எந்தெந்த ஆஸ்ரமங்களில் எத்தனை வாரங்கள் அல்லது மாதங்கள் தங்கியிருப்பது என்பதைப்பற்றிய ஏற்பாடுகளையும் ஆஸ்ரம வாசிகள் தங்க

ளுக்குள் ஒருமை மனதாக அமைத்துக்கொண்டனர். அந்த ஏற்பாட்டின்படி ஒவ்வோர் ஆஸ்ரமத்துக்கும் இராமன் பல தடவைகளில் விஜயம் செய்யும் வாய்ப்பு அமைந்தது. பாரமார்த்திகப் பெருவாழ்வும் ரிஷிபுங்கவர்களுடைய கூட்டுறவும் ஒன்றுகூடி இராமனையும் சீதையையும், இலக்ஷ்மணனையும் கால அதீதத்தில் திளைத்திருக்கச் செய்தன. பத்து ஆண்டுகள் அதிவிரைவில் உருண்டு ஓடிவிட்டன.

4. இராமன் விஜயம் செய்த ஆஸ்ரமங்களிலெல்லாம் அருள்நிலை இனிது பெருகுவதாயிற்று. அத்தகைய ஆஸ்ரமங்களுள் அகஸ்திய மஹரிஷி ஆஸ்ரமத்துக்குத் தனி மகிமை வாய்ப்பதாயிற்று. ஏற்கனவே அதன்கண் அமைந்திருந்த ஆத்மீகம் மிக மேலானதாயிருந்தது. பலப்பல தெய்வங்களுக்கு ஏற்ற சந்நிதானங்கள் அற்புதமாக அமைந்திருந்தன. மெய்ப்பொருள் ஒன்று, அதற்கு வடிவங்கள் பல என்னும் கோட்பாடு சொல்லாமலேயே அந்த ஆஸ்ரமத்தின்கண் அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஆங்கு அமைந்திருந்த ஒழுங்குப்பாடோ அதன் நிர்வாகம் மிகமேலானது என்பதை விளக்கிக் காட்டிற்று. அருந்துதற்கான கனிகளும், கிழங்குகளும் ஆங்கு ஏராளமாகச் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. சிரமப்படாது அவைகள் சேகரிக்கப்பட்டதால் நிலமகளது வளம் மேலோங்கியிருந்தது என்பது வெளியாயிற்று. மஹரிஷியைச் சந்திப்பதற்கு முன்னேற்பாடு செய்வது அவசியமாயிருந்தது. அதனால் ஆங்கு ஆஸ்ரம வாழ்வு அளந்தெடுத்து நடாத்தப்பட்டு வந்தது என்பதும் சொல்லாமலேயே விளங்கிற்று. அந்த ஆஸ்ரமத்தில் வதிந்திருந்த விப்ரர்களின் எண்ணிக்கை மிகப் பெரியதாயிருந்தது. அந்த ஸ்தாபனம் மிகப் பெரியது என்பதற்குத் தபஸ்விகளின் எண்ணிக்கையே அத்தாட்சியாயிற்று. முன் ஏற்பாட்டின்

படி இராமன் அகஸ்திய மகாமுனிவருடைய சந்நிதியை அணுகி வீழ்ந்து வணங்கினன். மஹரிஷியும் அவனைத் தரையினின்று தாவி எடுத்துக் கட்டித் தழுவிக்கொண்டார். அவர்கள் பரஸ்பரம் காட்டிக்கொண்ட தெய்விக மனப்பான்மை இரு மூர்த்திகளின் மாண்புக்கு எடுத்துக்காட்டு ஆயிற்று. வந்திருந்த இராமனுடைய மகிமைகளை ஆஸ்ரம வாசிகளுக்கு எடுத்து விளக்குகின்ற பாங்கில் அகஸ்திய முனிவர் அவனை அறிமுகப்படுத்தினர்.

"இதோ இங்கே எழுந்தருளியிருக்கும் ராமபிரான் தர்மத்தின் சொரூபமாவான். இவன் லாகவமாக எடுத்துக் கையாளும் கோதண்டத்தின் பாணம் ஒரு நாளும் வீண் போகாது. மக்களை மேலோராக மாற்றி அமைப்பதற்கென்றே இவனுடைய அஸ்திரம் அமைந்திருக்கிறது. மேலும் இவன் உபாசனைக்கு உரிய மூர்த்தி; இவனுடைய புனித வடிவம் தியானத்திற்குரியது; இவனுடைய நாமம் ஜபத்துக்குரியது; இவனுடைய பராக்கிரமம் வியாக்யானத்துக்குரியது; இவனுடைய சாந்நித்யம் பரப்பிரம்மத்துக்கு ஒப்பானது." அக்காலத்திய ரிஷிகள் இவ்விதத்தில் தான் இவனுடைய மகிமைகளை உலகத்தவர்களுக்கு எடுத்து இயம்புவாராயினர். அக்காலம், இக்காலம் என்னும் பாகுபாடு இல்லாது எக்காலத்தவர்களுக்கும் இதுவே தெய்விகம் நிறைந்த செய்தியாகும்.

பின்பு அகஸ்திய மஹரிஷி தாம் திருவருளால் பெற்றிருந்த தெய்விகப் பேராற்றல் ஒன்றை ரகுராமனுக்குச் சொந்தமாக்கினர். தம்முடைய தவத்தின் விளைவாக அரிய பெரிய அஸ்த்ர சஸ்த்ர வித்தைகளை அகஸ்திய முனிவர் அனுபூதியின் வாயிலாக அடைந்திருந்தார். அவைகளைத் தக்க பாத்திரம் ஒருவனைத் தேடி அவனிடம் ஒப்படையாது அவர்

உடலை உகுப்பாராகில் அது குறைபட்ட வாழ்வாகக் குன்றிப் போம். தக்க மூர்த்தியைப் பெறுதற்கு அம்முனிவர் தவம் இருந்தார் என்றே இயம்பலாம். இராமனுடைய வருகையால் முனிவருடைய அவா இனிது நிறைவேறிற்று. நல்லாரைக் காப்பதற்கும், தீயவர்களைத் துடைத்துத் தள்ளுதற்கும் ஏற்றவைகளாக அந்த அஸ்த்ர சஸ்த்ரங்கள் அமைந்திருந்தன. அவைகளைப் பெறுதற்குப் பொருத்தமான பாத்திரம் இராமன் ஒருவனே ஆவான். இராமன் எதற்காக உடல் தாங்கி மண்ணுலகுக்கு வந்திருக்கிறான் என்பது முனிவருக்கு நன்கு தெரியும். தக்க இடத்தில் அவைகளை ஒப்படைப்பதன் வாயிலாக முனிவரின் பொறுப்பு இனிது முடிவுற்றது. இராமனுக்குத் தேவையாயிருந்த ஆயுத வகைகள் தெய்வாதீனமாக அவனுக்கு வந்து வாய்ப்பனவாயின. அருள்சக்தி வாய்ந்த அந்த ஆயுதங்களை ஏற்றுக்கொண்டு இராமன் பஞ்சவடியில் போய் ஆஸ்ரமம் அமைத்து அங்குத் தவ வாழ்க்கை வாழ்ந்திருக்க வேண்டும் என்னும் ஆக்ஞை முனிவரிடமிருந்து இராமனுக்கு வந்தது. இனி, பஞ்சவடியோ புனிதமும் இனிமையும் கம்பீரமும் நிறைந்திருந்த கோதாவரி நதிக்கரையிலிருந்தது.

அகஸ்தியமுனிவர் இட்ட ஆணைக்கு உட்பட்டு இராமன் பஞ்சவடிக்குப் போய்ச் சேர்ந்தான். அதை அவன் நேரில் பார்த்தபொழுது முனிவர் கொடுத்திருந்த வர்ணனைக்கு மேலானதாகவே அது அவனுக்குத் தென்பட்டது. அதன் சூழ்நிலை மிகக் கவர்ச்சிகரமாயிருந்தது. ஆங்கு அமைந்திருந்த மரம், செடி, கொடிகளின் மகிமை உள்ளத்தைக் கொள்ளைகொண்டு போனது. இயற்கையின் வளம் வர்ணனைக்கு எட்டாதிருந்தது. பறவைகளின் மெல்லிய ஓசைகள் மனதைத் தெய்விகத்தில் குளிப்பாட்டின.

விலங்குகளோ சண்டையிட்டுக்கொள்வதற்குப் பதிலாக நிதானமாக ஒட்டி உறவாடிக்கொண்டிருந்தன. மண்ணுலகில் வசித்திருப்பவருடைய மனதை அருள் நாட்டத்தில் தூண்டுவதற்கான அற்புதமான அமைப்பாக இயற்கைத் தாய் காட்சி கொடுத்தாள். பொருத்தமான மேடை ஒன்றன் மீது இலக்ஷ்மணன் கவர்ச்சிகரமான குடில் ஒன்றை அற்புதமாக அமைத்தான். வேண்டிய அளவு இடவசதி அதனுள் இருந்தது. மண்ணினால் அதற்குச் சுவர் எடுக்கப் பட்டிருந்தது. காய்ந்துபோன அகன்ற இலைகள் அதற்குக் கூரையாக அமைந்தன. இயற்கையின் அழகை மானுட முயற்சி பன்மடங்கு மேலானதாக்கும் என்பதற்கு இலக்ஷ்மணனுடைய முயற்சியே சான்றாயிற்று. பூலோக சொர்க்கம் எனப் பகருதற்கேற்ற இந்தப் பஞ்சவடியிலே சீதையும், இராமனும், இலக்ஷ்மணனும் பாரமார்த்திகப் பெருவாழ்வில் ஆழ்ந்து ஈடுபட்டிருந்தனர். பரத்தைப்பற்றிய தியானம், ஈஸ்வர மகிமைகளைப் பற்றிய பேச்சு, தெய்விகத்தில் மூழ்கியிருந்த பான்மை இம்மூவருக்கும் மேலாம் பொழுதுபோக்கு ஆயிற்று.

5. ஆர்யவர்த்தத்துக்குத் தென்பக்கம் கடலுக்குள் இலங்கை என்னும் பெயர் படைத்த தீவு ஒன்று இருக்கிறது. அக்காலத்தில் இராவணன் என்பவன் அத்தீவுக்கு அரசனாக இருந்தான். அவனுடைய ஆதிக்கம் வடக்கே தண்டக ஆரண்யம் வரை பரவியிருந்தது. அப்பகுதியில் அவனுடைய ஜனஸ்தானத்தில் சேனை ஒன்றை அமைத்து வைத்திருந்தான். அவனுடைய தாயாதிகளாகிய கரன், தூஷணன் என்னும் இரண்டுபேர் அந்தச் சேனைக்கு அதிபதிகளாக அமைந்திருந்தனர். சூர்ப்பணகை என்னும் மாது ஒருத்தி அந்தச் சேனாதிபதிகளின் தங்கையாவாள். தண்ட

காரண்யத்தில் யாதொரு தங்குதடையுமின்றித் தாராளமாக எல்லாப் பக்கங்களிலும் அவள் உலாவி வருவாள். வயதில் அவள் ஒருவாறு மூத்தவளாக இருந்தாள். பார்வைக்கு அவள் இலட்சணமானவள் அல்லள். காமவிகாரம் அவளுடைய உள்ளத்தை ஆழ்ந்து பற்றிப் பிடித்திருந்தது. ஒரு நாள் காலையில் அவள் வனத்துக்குள்ளே சுற்றி உலாவிக் கொண்டிருந்தபொழுது தற்செயலாய் இராமனையும், இலக்ஷ்மணனையும் கண்டாள். அன்னவர்களின் தெய்விகக் கட்டழகு அக்காரிகையின் உள்ளத்தைக் கவர்ந்தது. இந்தச் சுந்தர மூர்த்திகளிருவரும் தவவேடம் பூண்டிருந்தார்கள். எனினும் தேவலோகத்து மங்கைபோன்று மிளிர்ந்து கொண்டிருந்த இளம் மாது ஒருத்தியுடன் இவர்கள் வாழ்ந்திருந்ததைச் சூர்ப்பணகை கண்டாள். அத்தகைய அமைப்பு அவள் பூண்டிருந்த காம நோக்கத்துக்கு அனுகூலமாயிருந்தது. அம்மூவர்களைப் பற்றிய வரலாற்றைச் சூர்ப்பணகை விசாரித்தாள். மரியாதையுடன் இராமன் தன்னைப்பற்றியதும், சீதையைப்பற்றியதும்,இலக்ஷ்மணனைப் பற்றியதுமான விவரங்களை எடுத்து விளக்கினான். ஏன் அவர்கள் வனவாசம் பண்ணிக்கொண்டிருந்தார்கள் என்பதற்கான காரணத்தையும் அவன் எடுத்து இயம்பினான். வந்திருந்த மாது வினவியதுபோன்று இராமனும் அவளைப் பற்றிய வரலாற்றை அறிந்துகொள்ள விரும்பினான். சூர்ப்பணகை தன்னை இன்னார் என்று எடுத்து விளம்பினாள். பேச்சோடு பேச்சாக அருவருப்புக்குரியவளும் ஒல்லியாக இருந்தவளுமாகிய சீதையை ஒதுக்கித் தள்ளிவிட்டுத் தன்னை மனைவியாக ஏற்றுக்கொள்ளும்படி இராமனிடம் அவள் வேண்டினாள். அவளுடைய விருப்பம் நிறைவேறினால் இராமனும் தானுமாகத் தண்டகவனம் எங்கும் இன்புற்று உலாவி இருக்கலாமென்றும் அவள் இயம்பினாள்.

இராமன் அகன்ற புன்முறுவல் பூத்தான். தனக்கு மனைவி ஒருத்தி இருக்கிறாள் என்றும் பண்புடன் அவளிடம் பகர்ந்தான். இலக்ஷ்மணன் தனியனாக ஆங்கு வசித்து இருந்ததனால் அவளுடைய கருத்தை அவனிடம் வேண்டுமானால் தெரிவித்துப் பார்க்கலாம் என்றும் அவன் இயம்பினான். காமத்தில் ஊறிக்கிடந்த அந்த அரக்கி நாணம் சிறிதேனுமின்றி இளையவனுடைய மையலை நாடி அவனை அணுகினாள். ஆனால் வெட்டெனை அவன் விளம்பியதாவது: "நானோ அப்பெரியவனுக்குத் தம்பி. அவனுக்குப் பணிவிடை செய்வது என் கடமை. ஆதலால் என்னை நாடுவது ஒவ்வாது. அழகுக்கு இருப்பிடமே! மீண்டும் அவனிடமே சென்று முயற்சி செய்துபார். ஒருவேளை நீ அவனை உனக்குரியவன் ஆக்கிக்கொள்ள முடியும்."

காமவெறி தலைக்கேறியிருந்த அக்கிழத்தி இந்தப் பரிகாசச் சொல்லைப் போற்றுதலாகப் பயன்படுத்திக் கொண்டாள். தன்னுடைய நோக்கத்தை முற்றிலும் நிறைவேற்றுவதற்கான மற்றோர் உபாயத்தையும் அவள் நினைவில் கொண்டாள். அதாவது வற்றல் போன்று தென்பட்ட வைதேகியை ஒழித்துவிட்டால் இராமன்மீது அவள் வைத்திருந்த காதல் கண்ணோட்டம் முற்றும் பூர்த்தியாகிவிடும் என்பது அவளுடைய துணிபு. அவ் எண்ணத்தின்படியே சீதையின்மீது ஆவேசத்தோடு அவள் பாய்ந்தாள். அது எத்தகைய விபத்தாக வடிவெடுக்கும் என்பதை இலக்ஷ்மணன் ஒரு நொடிப்பொழுதில் அறிந்துகொண்டான். சூர்ப்பணகை எத்தகைய வேகத்துடன் சீதையின்மீது பாய்ந்தாளோ அதே வேகத்துடன் இளையவன் அரக்கியின் மீது பாய்ந்து அவளுடைய மூக்கையும், காதுகளையும் கொய்து தள்ளினான். அவ் அரக்கியைக் கொல்லுதற்குப்

பதிலாக இம்முறையை அவன் கையாண்டான். மூக்கையும், காதுகளையும் இழந்துவிட்ட அரக்கி பெரும் இரைச்சல் போட்டாள். அழுதவண்ணமாகத் தன்னுடைய இருப்பிடத்திற்கு அவள் விரைந்து ஓடினாள். அவளுடைய கீச்சுக் குரலோ வானகமெங்கும் எதிரொலித்தது. அவள் தூரத்தில் போவதற்கேற்ப அவளுடைய புலம்பலின் ஓசை படிப்படியாகப் பின்வாங்கிற்று.

6. உடன் பிறந்தவனான கரனிடம் சூர்ப்பணகை தனக்கு நேர்ந்திருந்த இடுக்கணைத் தேம்பித் தேம்பி அழுது தெரிவித்தாள். அவள் முறையிட்டதாவது: 'மாது ஒருத்தியுடன் இரு சகோதரர்கள் இலங்கையின் ஆட்சிக்குரிய அடவியினுள் அத்து மீறி வந்துள்ளார்கள். அந்தப் பெண்பாலைப் பாதுகாத்தல் பொருட்டுக் கரனுடன் பிறந்தவளைக் குறை அங்கம் உடையவளாகச் செய்து அவர்கள் துன்புறுத்திவிட்டார்கள். பழிக்குப்பழி வாங்குதல் பொருட்டு அன்னவர்களைக் கொன்றாக வேண்டும்; அவர்களின் இரத்தத்தையும் தான் பருகியாகவேண்டும்.' நிகழ்ந்த கொடுமையைக் கேட்ட கரனுக்குத் தாங்கவொண்ணாச் சீற்றம் தலைக்கேறிற்று. நன்கு பயிற்சி பெற்றிருந்த போர் வீரர்கள் பதினான்கு பேரை அவன் பொறுக்கி எடுத்தான். துணிச்சலுடன் தங்களுடைய பிரதேசத்தினுள் புகுந்திருந்தவர்களை மாய்த்துத் தள்ளும்படி அவர்களுக்கு உத்தரவு இட்டான். சூர்ப்பணகை வழி காட்டிச் செல்ல அவ்வீரர்களும் விபத்து நிகழ்ந்த இடத்தைச் சென்றடைந்தனர். துணிந்து தீங்கு இயற்றியவர்களை அவ்வீரர்கள் விரைந்து எதிர்த்தார்கள். ஆங்குத் தென்பட்ட அரக்கி எத்தகைய அடாத செயலைச் செய்தாள் என்பதை இராமன் தன்னை எதிர்த்து வந்தவர்களிடம் தெரிவித்தான். அவள் செய்த குற்றத்தை உணர்ந்து அமைதியாகப் பின்

வாங்கும்படியும் அவன் அவர்களுக்கு எடுத்துரைத்தான். ஆனால் தாக்க வந்தவர்களோ இராமன் சொல்லுக்குச் செவி சாய்க்கவில்லை. அவனை ஒழித்துத்தள்ள அவர்கள் முந்தினர். ஆதலால் செயலில் ஈடுபடுவது இராமனுக்கும் அவசிய மாயிற்று. ஒரு நொடிப்பொழுதில் பதினன்கு வீரர்களையும் அவன் மாய்த்துத் தள்ளினன். குற்றவாளியாகிய அரக்கி யின்மீது அவன் மேற்கொண்டு நடவடிக்கை ஏதும் எடுத்துக் கொள்ளவில்லை. அவளோ கரனிடம் மீண்டும் விரைந்தோடித் தங்களுடைய போர் வல்லுனர்க்கு வந்த கதியை விளக்கிச் சொன்னள். அதைக்கேட்ட கரனுக்குத் தாங்கவொணுச் சீற்றம் உண்டாயிற்று. அவன் தன்னுடன் பிறந்தவனுகிய தூஷணனையும், சேனைத் தலைவனுகிய திரிசிரசையும் ஆயுதம் தாங்கி அமருக்கு ஆயத்தமாகும்படி ஏவினன். அம்மூவர் ஆணைப்படி பெரும் சேனை ஒன்று படை எடுத்துச்சென்றது.

ஆபத்து வருகிறது என்பதை இராமன் உணர்ந்தான். பக்கத்திலிருந்த குகை ஒன்றனுள் சீதாபிராட்டியாரைக் காப்பாற்றி வைக்கும்படி இலக்ஷ்மணனிடம் அவன் தெரி வித்தான். கோதண்டம் தாங்கியவனுக அக்கோமான் ஆங்கு நின்முன். எல்லாத் திக்குகளினின்றும் அலை வீசிய தற்கு நிகராக அரக்கர்படைகள் இராமனை எதிர்த்துப் பாய்ந்தன. ஆனல் அவர்கள் கதி என்னவாயிற்று? சுடர் விட்டு எரியும் தீக்கொழுந்தினுள் விட்டில் பூச்சிகள் வீழ்ந்து மடிவதுபோன்று அடுக்கு அடுக்காக வந்து பாய்ந்த அரக்கர் களை ஓயாது பொழிந்த ராமபாணம் ஒழித்துத் தள்ளிற்று. அந்த உயிர்த் திரள்களோடு கூடி தூஷணனும் வீழ்ந்து மாண்டுபோனன். சிறிது நேரத்திற்குள் திரிசிரசினுடைய கதியும் அதுவே ஆயிற்று. கடைசியாகக் கரனுக்கும் இராமனுக்குமிடையில் போர் மூண்டது. எஞ்சியிருந்த

இந்த ஒற்றை அரக்கனும் கொன்று வீழ்த்தப்பட்டான். இராமனுடைய செயலோ வியப்புக்குரியதாயிற்று. இக்காலத்திய அணுசக்தி நிலத்தைத் தீய்த்துத் தள்ளுகிறது. உயிர்களை ஒடுக்கித் தள்ளுகிறது. ஆனல் ராமபாணமோ ஜட சக்தி மயமானதன்று. அது சித் சக்தி மயமானது. அக்கம்பக்கத்திலிருக்கும் சேதனம், அசேதனம் ஆகியவைகளை ராம பாணம் அழிக்கவில்லை. சமுதாய வாழ்க்கைக்கு அழிவை விளைவிக்கும் உயிர்வகைகளை மட்டுமே அது களைந்தெடுத்துத் தள்ளியது. இதுவே ஜட சக்திக்கும், அறநெறி பிறழாத சித் சக்திக்கும் இடையிலுள்ள வேற்றுமையாம்.

7. ராமபாணத்துக்கு இரையாகாது தப்பித்துக்கொண்டவன் ஒரே ஒருவன் இருந்தான். அவன் பெயர் அகம்பனன். உயிர் தப்பிய அவன் லங்காபுரிக்கு விரைந்தோடினன். இராவணனுடைய முன்னிலையை எட்டினன். பிறகு அவனுக்கு ஒரு தயக்கம் உண்டாயிற்று. பொருந்தாத செய்தியைக் கொடுங்கோல் மன்னன் ஒருவனிடம்கொண்டு போனல் அச்செய்தி கொண்டுவந்தவனையே கொடுங்கோல் அரசன் ஒழித்துத் தள்ளிவிடுவான். இலங்கேசனிடம் நடு நடுங்கிக்கொண்டு அகம்பனன் இயம்பியதாவது: “வேந்தே, எனக்கு உயிர்ப்பிச்சை கொடுங்கள். பிறகு உங்களுக்குப் பிரதிகூலமான செய்தி ஒன்றைச் சமர்ப்பிக்கின்றேன்.” இராவணனும் அவன் கொண்டுவந்த செய்தியைத் தெரிவிக்குமாறு அனுமதி கொடுத்தான்.

அகம்பனன்: தண்டக வனத்திலுள்ள ஜனஸ்தானம் முழுவதும் பாழ்படுத்தப்பட்டுள்ளது.

இராவணன்: என்னுடைய ர்ராஜ்யத்தைப் பாழாக்கத் துணிந்த தேவர்கள் யார்? இப்பொழுதே சென்று நான் அவர்களை மாய்த்துவிடுகிறேன்.

அகம்பனன் மேலும் இயம்பியதாவது: "வேந்தே, விண்ணவர்கள் யாண்டும் தம்மைக் குறித்துப் பயந்து இருக்கின்றனர். ஜனஸ்தானத்தை ஆக்கிரமித்தவன் தசரத குமாரனாகிய இராமன். தன் தம்பி இலக்ஷ்மணனோடும், தேவலோகக் கன்னிகை போன்று திகழ்ந்துகொண்டிருக்கிற தன் மனைவி சீதையோடும் பஞ்சவடி என்னுமிடத்தில் இராமன் முகாம் வைத்திருக்கிறான். இந்த இராமன் தன்னந்தனியனாக நம் ஜனஸ்தானப் போர்வீரர்கள் பதினாலாயிரம் பேர்களை மாய்த்துவிட்டான். கரன், தூஷணன், திரிசிரன் ஆகிய சேனைத் தலைவர்கள் மூவரையும் அவன் சிதைத்துவிட்டான். நம் ஜனஸ்தானம் நிர்மூலம் ஆக்கப் பட்டது."

"இந்த மானுடப் புழுக்களை நசுக்கித் தள்ளிவிட்டுத் திரும்புவேன்" என்று இலங்கைக் கோமான் கொந்தளிப்புடன் எழுந்து நின்று உரக்கக் கத்தினான்.

சமயோசித புத்தியையுடைய அகம்பனன் தன் மன்னனை ஒருவாறு சாந்தப்படுத்தினான். இராமனுடைய பராக்கிரமம் ஒப்புயர்வு அற்றது என்னும் விஷயத்தை விரிவாக எடுத்து விளக்கினான். அத்தகைய பராக்கிரமம் வாய்ந்த இராமனைத் தோற்கடிப்பதற்கு ஒரே ஓர் உபாயம் தான் இருந்தது. கட்டழகில் ஒப்பற்றவளாயிருந்த தன் மனைவியின்மீது அவன் வரம்புகடந்த வாஞ்சை வைத்திருந்தான். ஏதேனும் ஓர் உபாயத்தைக் கையாண்டு அக் கட்டழகியைக் கவர்ந்துகொண்டு வந்துவிட்டால் இராமனுடைய கொட்டம் ஒழிந்துபட்டுப்போம். பிரிந்துபோன மனைவியை எண்ணியெண்ணி அவன் ஏக்கமுற்றுக் கிடப்பான். அம்முறையைக் கையாளுவதற்கு மாறாக அவனோடு போருக்குப் போனால் அது இராவணனுக்குப்

பிரதிகூலமாகப் போம். இந்தப் பாங்கில் அகம்பனன் பொடி வைத்தான்.

கொடூரத்துக்கு இருப்பிடமாகிய இராவணனிடத்துப் பெரிய குறைபாடு ஒன்று இருந்தது. அவன் காமநோய்க்கு அடிமைப்பட்டவன். அக்குறைநிலையை அகம்பனன் நன்கு பயன்படுத்திக்கொண்டான். இராவணனிடம் காமநோய் அக்கணமே தலைதூக்கியது. அதன் விளைவாக அகம்பனனுடைய புத்தி சாதுர்யத்தை அவன் பெரிதும் பாராட்டினான்.

கரனையும் ஏனைய சேனைத் தலைவர்களையும் ஜனஸ்தானத்தில் வசித்து வந்த சேனை முழுதையும் இழந்துவிட்டது அந்த அரக்க அரசனுக்குப் பெரிய நஷ்டமாகத் தோன்றவில்லை. மற்றும் ஓர் அழகிய மாதைத் தனக்கு மனைவியாக அபகரித்துக்கொள்ள அவன் முடிவுகட்டினான். அங்ஙனம் உதித்த காமத்தின் வேகம் மற்ற உணர்ச்சிகளையெல்லாம் மறைத்துவிட்டது.

லங்காபுரியின் வடபகுதியில் மாரீசன் வாழ்ந்து வந்தான். அவன் இருக்கும் இடத்தை நோக்கி இராவணன் வானத்தில் பறந்து செல்லும் தன் விமானத்தைச் செலுத்தினான். மாரீசனும் மரியாதையுடன் தன் மன்னனை வரவேற்றான். இந்த மாரீசன்தான் விஸ்வாமித்ர முனிவருடைய யக்ஞத்துக்கு விக்னங்களையும், கேடுகளையும் விளைவித்தவன். அன்று இளைஞனாயிருந்த இராமன் விடுத்த பாணம் இவனைத் தூக்கி நடுக்கடலில் வீசியது. அந்த ராமபாணத்தின் விளைவாக மாரீசன் பெரிதும் மனம் திருந்தப் பெற்றிருந்தான். ஆயினும் தன் வேந்தனுடைய வருகையை முன்னிட்டு அவனுக்கு வந்தனை வழிபாடுகள் செலுத்த அவன் கடமைப்பட்டிருந்தான். அரசனுடைய ஆணைப்படி நடந்துகொள்ளத் தான் ஆயத்தமாயிருந்ததையும் அவன் பணிவுடன் தெரிவித்துக்கொண்டான்.

மாரீசனைத் தன்னுடைய நெருங்கிய நண்பனுக இராவணன் கருதிவந்தான். தன்னுடைய நலன், பொலன் யாவையும் மாரீசனேடு கலந்து பேசி அவனுடைய ஆலோசனைகளைப் பயன்படுத்துவதும் அந்த அரக்க அரசனுடைய வழக்கமாக இருந்து வந்தது. தண்டகாரண்யத்தில் அமைந்திருந்த ஜனஸ்தானத்துக்கு இராமன் செய்திருந்த தீங்குகளையும் அழிவுகளையும் அவன் விரிவாக எடுத்து விளக்கினுன். பழிக்குப் பழிவாங்கும் பாங்கில் சீதையை அபகரித்துக்கொண்டுபோகத் தான் திட்டமிட்டிருந்ததையும் அவன் தெரிவித்தான். அதற்காக மாரீசனுடைய உதவியும் வேண்டப்பட்டது. அவன் ஓர் அழகிய மானின் வடிவெடுத்து இராமனையும், இலக்ஷ்மணனையும் தங்கள் இருப்பிடத்தினின்று வெகுதூரத்திற்கப்பால் கவர்ந்திழுத்துச் செல்ல வேண்டுமென்பது அத்திட்டமாகும்.

மாரீசனே இராமனுடைய பராக்கிரமத்தை முற்றிலும் அறிந்திருந்தான். ஆதலால் தனக்குத்தானே அழிவைத் தேடிக்கொள்ளும் அத்திட்டத்தில் ஈடுபடவேண்டாமென்று இராவணனுக்கு அவன் எச்சரிக்கை செய்தான். பெயரளவில் இந்தச் சூழ்ச்சி மிகச் சுலபமானதாகத் தென்பட்டது. ஆனல் உண்மையில் இராவணனை அது அழிவில் ஆழ்த்திவிடும். யாரோ ஓர் எதிரி நண்பன்போன்று பாசாங்கு செய்துகொண்டு இராவணனுக்கு இந்தத் துர்புத்தியைப் புகட்டியிருக்கிறுன். தூங்குகிற நாகப்பாம்பின் பல்லைப் பிடுங்குதற்கு அதன் வாயில் விரல்களை வைப்பதற்கு நிகர் இந்தத் திட்டம் என்று மாரீசன் எச்சரிக்கை செய்தான். இராவணனுக்கோ அழகு வாய்ந்த மனைவிமார்கள் பலர் இருந்தனர். வைத்து அனுபவிப்பதற்கு விசாலமான ராஜ்யமும் அவனுக்குச் சொந்தமாயிருந்தது. அத்தகைய அரிய வாய்ப்பு

களைக்கொண்டு திருப்தி அடைந்திருக்கும்படி தன் வேந்தனுக்கு அவன் புத்தி புகட்டினான். வேந்தனும் அவன் ஆலோசனையைப் பொருள் மிக நிறைந்ததெனக் கருதி அவன் புகட்டியவாறு அதை ஏற்றுக்கொண்டான். தன் தலைமைப் பட்டணத்துக்குத் திரும்பிச் சென்று ஆட்சிமுறையில் அவன் கருத்தைச் செலுத்திவந்தான்.

8. சில நாட்களில், அலங்கோலப்படுத்தப்பட்ட சூர்ப்பணகை இராவணனுடைய சபா மண்டபத்திலே தோன்றித் தனக்கு நிகழ்ந்த கொடுமைகளைப் பரிதாபத்துடன் எடுத்து வாரிக் கொட்டினாள். சூழ்ச்சி நிறைந்த அந்த மாது நிகழ்ந்த நிகழ்ச்சியைத் தன்னுடைய பொல்லாத திட்டத்திற்கேற்ற வாறு திரிவுபடுத்தித் தெரிவித்தாள். சீதாபிராட்டியின் சௌந்தர்யத்தைச் சொல் வன்மையுடனும் இராவணனை மோகவலையில் கவர்ந்திழுக்கிற பாங்கிலும் விவரித்தாள். அவளுடைய கருத்துப்படி அந்தத் தெய்விக மாது இராவணனுக்குப் பொருத்தமானவளேயொழிய வேறு யாருக்கும் பொருத்தமானவள் அல்லள். அத்தகைய பெண்மணியை இலங்கேசனுக்குச் சன்மானமாகத் தூக்கிவரச் சூர்ப்பணகை முயன்றாள். ஆனால் திடீரென்று இலக்ஷ்மணன் அவள்மீது அம்புபோல் பாய்ந்து மூக்கையும் காதுகளையும் கொய்து விட்டான். அத்தீங்கு இழைத்தவனைத் தண்டித்தல் பொருட்டு அவளுடன் பிறந்த கரனும் அவனுடைய வீரம் செறிந்த படையும் பாய்ந்தனர். ஆனால் சீதையின் கணவனான இராமன் ஒற்றை ஆளாக இருந்துகொண்டு அத்தனைபேரையும் கொன்று தள்ளி விட்டான். தண்டக வனத்திலிருந்த தங்களுடைய ஜனஸ்தானத்தையும் அவன் பாழாக்கிவிட்டான். அத்தகையவனைப் பழிவாங்குதல் பொருட்டும் இலங்கேசனுடைய கௌரவத்தைக் காத்தல் பொருட்டும்,

இராமனை அவமானப்படுத்துதல் பொருட்டும் அக்கணமே நடவடிக்கை எடுப்பது முற்றிலும் அவசியமாயிற்று. இவை யாவையும் ஒரே ஒரு சூழ்ச்சிகரமான செயலின் வாயிலாகச் சாதித்து விடலாம். இராமன் படைத்திருந்த இன்பத்துக் குப் பிறப்பிடமாகிய சீதையை ஏதேனும் ஒருவிதத்தில் அபகரித்துவிட்டால் அது போதுமானது.

இச் செய்திகளுக்குச் செவி சாய்த்திருந்த இராவணன் திடீரென்று தன்னுடைய மந்திரிமார்களின் ஆலோசனை சபையைக் கலைத்தான். ஏனென்றால் ராஜ்ய சம்பந்தமான நிகழ்ச்சிகளைக் குறித்து மந்திரிமார்களோடு ஆலோசனை பண்ண அவன் எண்ணவில்லை. தன்னந்தனியனாக அமர்ந்து கொண்டு தனக்குள்ளேயே அவன் திட்டம் போட்டான். அத்தனைக்கும் காரணம் அவன் படைத்திருந்த காம விகாரத் தைத் தலையெடுக்கும்படி அப்பெண்பால் செய்த சூழ்ச்சியே யாம். முன்பு போட்ட திட்டத்தையே தீவிரமாகச் செய்து சாதிக்க அவன் தீர்மானித்தான். ஏதேனும் ஒருவிதத்தில் சீதையை அபகரித்தாகவேண்டும். இராமனையும் ஏமாளி யாக்கவேண்டும்.

காமத்தால் தூண்டப்பெற்று இராவணன் மீண்டும் ஒருமுறை மாரீசனுடைய இருப்பிடத்துக்கு ஆகாய விமானத் தில் சென்றான். அவ்வளவு விரைவில் வேந்தன் மீண்டும் ஓடி வந்தது மாரீசனுக்கு வியப்பை ஊட்டியது. ஆயினும் முறைப்படி அவன் மரியாதையோடு தன் மன்னனை வரவேற் றான். தன் சகோதரி சூர்ப்பணகைக்கு விளைந்த விபத்தை இராவணன் விரிவாக எடுத்துரைத்தான். தன் எண்ணம் நிறைவேறுவதற்கு அவன் கையாண்ட முறை வருமாறு: "இப்பொழுது நான் ஒரு நெருக்கடியில் அகப்பட்டுக்கொண் டிருக்கிறேன். என் சகோதரி சூர்ப்பணகை ஈடுசெய்ய

முடியாத பாங்கில் அவமானத்துக்கு உட்பட்டிருக்கிறாள். அலங்கோலத்திற்கும் அவமானத்திற்கும் அவள் ஆளாகியிருக்கிறாள். இது இராமனுடைய ஆக்கிரமிப்பு. என்னுடைய சகோதரர்களாகிய கரன், தூஷணன், திரிசிரன் ஆகியவர்களை அவன் மாய்த்துத் தள்ளிவிட்டான். தண்டகாரண்யத்தில் நான் வைத்திருந்த சேனை முழுதையும் அவன் துடைத்துத் தள்ளிவிட்டான். இங்ஙனம் வரம்பு கடந்து நடந்து கொண்ட இராமனுடைய நிலைமையை ஆராய்ந்து பார்ப்போம். அவன் செய்த ஏதோ குற்றத்தை முன்னிட்டுத் தந்தையினால் வனத்திற்கு விரட்டியோட்டப்பட்டிருக்கிறான். தகுதி ஏதுமில்லாத ராஜகுமாரன் அவன். தன் மனைவி சீதையுடன் அவன் அடவியில் அலைந்து திரிகிறான். அந்த நாடோடி தவவேடம் பூண்டிருக்கிறான். ஆனால் அவன் இந்திரிய சுகங்களுக்கு அடிமை. அதர்மமே வடிவெடுத்தவன். என் இனத்துக்கும் என் தங்கைக்கும் இவன் செய்திருக்கிற தீங்குக்குப் பரிகாரமாக நான் பழி வாங்காவிட்டால் லங்காபுரிக்கு நான் அரசன் அல்லேன். அந்த இராமனை அவமானப்படுத்தவும், அவனுக்குத் தண்டனை கொடுக்கவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். அவனுடைய மனைவியை அபகரித்துக்கொண்டு போக நான் தீர்மானம் செய்தாகி விட்டது. இந்த ஏற்பாட்டில் உன்னுடைய உதவி எனக்குத் தேவையாயிருக்கிறது. எனக்குச் சகாயம் செய்யும்படி உன்னை வற்புறுத்தி வேண்டுகிறேன். நீ செய்யக் கிடக்கும் செயல் வருமாறு: வெள்ளிப் புள்ளிகளுடைய தங்கமான் வடிவத்தை நீ எடுக்கவேண்டும். அதற்கேற்ற ஜால வித்தையை எல்லார் கண்களிலும் நீ நிலைநாட்ட வேண்டும். அக்கவர்ச்சிகரமான வடிவத்தைப் பூண்டு கொண்டு சீதையின் முன்னிலையிலேயே நீ இங்கும் அங்கும்

துள்ளிக்குதித்து விளையாடிக் கொண்டிருக்க வேண்டும். நூதனமான அந்தமானைப் பிடித்துத் தரும்படி அப்பெண் பாலானவள் தன் புருஷனிடம் மன்றுடி வேண்டுவாள். சகோதரர்களிருவரையும் நெடுந்தூரத்திற்கப்பால் இழுத்துச் செல்லுகிற உபாயத்தை நீ கையாண்டாக வேண்டும். மானைத் தொடர்ந்து ஓடி அவர்கள் திண்டாடிக் கொண்டிருக்கிற பொழுது தன்னந்தனியளாக விடப்பட்டிருக்கிற சீதையை நான் தூக்கிக்கொண்டு போய் விடுவேன். மனைவியைப் பறிகொடுத்த இராமன் புலம்பி நொந்து போவான். அந்நிலைக்கு அவனைக்கொண்டு வந்தான பிறகு எங்கள் வம்சத்திற்கு அவன் செய்திருக்கிற தீங்குக்குத் தண்டனையாக அவனை நான் கொல்லப் போகிறேன்."

மாரீசனுக்கு மனக்குழப்பம் வந்தது. ஆபத்து நிறைந்த இந்தத் திட்டம் ஆதரவு அற்றது என அவன் உணர்ந்தான். ஏதோ ஒரு போக்கில் தன்னைத் தைரியப்படுத்திக்கொண்டு இராவணனிடம் அவன் இயம்பியதாவது: "வேந்தே, உமக்கு நிகழ்ந்த இந்த விபத்தைக் குறித்து நான் மிகவும் வருந்துகிறேன். நான் உம்மை முகஸ்துதி பண்ணவோ முறை வழுவிப் போகவோ விட்டுவிடலாகாது. உண்மையை உள்ளபடி உமக்கு எடுத்து இயம்புகிறேன். இராமன் வீரியத்திற்கு இருப்பிடம். அவன் அறம் காப்பவன்; தந்தை சொற்படி நடப்பவன். தன் தந்தையைச் சத்திய சங்கல்பன் ஆக்குதற்பொருட்டு இராமன் தானாகவே வலிய வனவாசத்திற்கு வந்திருக்கிறான். அவனுடைய விரோதத்தை வரவழைத்துக் கொள்வதன் வாயிலாக உம்முடைய அழிவுக்கும், உம் இனத்தவர் அழிவுக்கும் தாம் அடிகோலுகின்றீர். உம்முடைய அழிவுக்கென்றே சீதை பிறப்பெடுத்து வந்திருக்கின்றாள் என்று தோன்றுகிறது. அவள்மீது தாம் காதல்

'பூண்டது, அழிவுக்கு ஏதுவான முயற்சியன்றோ? அவள் உம்முடைய நோக்கத்துக்கு இணங்குவாள் என்று எண்ணுகின்றீரா? அவளுடைய கற்பை அழித்தால் தாம் சாம்பலாக அழிந்துபட்டுப் போவீர். இராமனைத் தாம் எதிரியாகக் கருதுவீராகில் பகிரங்கமாக அவனோடு போர் புரிவீராக. கபடமான முறை தமக்குப் பொருந்தாது. அதில் என்னையும் தாம் இணைத்து வைக்கின்றீர். இத்திட்டத்தின் வாயிலாக மரணத்தினிடத்தே தாம் என்னை உந்தித் தள்ளுகின்றீர்."

இப்பொழுது இராவணன் அதிகாரப்பூர்வமாகப் பகர்ந்ததாவது: "உன்னுடைய அறிவுரையைக் கேட்க இப்பொழுது நான் இங்கே வரவில்லை. மாற்ற முடியாத முடிவை நான் ஏற்கனவே எடுத்தாயிற்று. இராமன் ஒரு மடையன். ஒரு பெண்பாலால் ஏமாற்றப்பட்டு, சிம்மாசனத்தினின்று கீழே உந்தித் தள்ளப்பட்டு நாடு கடத்தப்பட்டவனாக அவன் இருக்கிறான். அத்தகைய மடையனோடு துவந்த யுத்தம் பண்ணுவது என்னுடைய அந்தஸ்துக்குப் பொருந்தாது. அவனுடைய மனைவியை அபகரிப்பதன் வாயிலாக நான் அவனை அவமானப்படுத்தப் போகிறேன். உன்னுடைய அரசன் என்னும் ஹோதாவில் நான் உனக்கு ஆணையிடுகிறேன். நீ ஓர் அழகிய மானின் வடிவமெடுத்து இராமனை ஏமாற்றி அப்பால் கவர்ந்திழுத்துச் செல்லக் கடமைப்பட்டிருக்கிறாய். உனக்கு இடப்பட்டுள்ள ஆணையை முறையாக நீ நிறைவேற்றி வைக்காவிட்டால் நான் உன்னைக் கொன்றுவிடுவேன்."

மாரீசன் தனக்குள்ளேயே எண்ணிப் பார்த்ததாவது: "இப்பொழுது நான் மரணத்தின் வாயில் அகப்பட்டுள்ளேன். இராவணனோ அல்லது இராமனோ என்னைக் கொல்லப் போகிறான். சாவது நிச்சயம் என்றால் இராமனுடைய

அம்புக்கு இலக்காகி நான் அழிந்துபட்டுப் போகிறேன். ராமபாணம் என்னை உயர்நிலைக்கு எடுத்துச் செல்வது திண்ணம்."

உத்தரவுப்படி நடந்துகொள்ள மாரீசன் இணங்கினன். அது இராவணனுக்குப் பெரும் மகிழ்வை ஊட்டியது. இப்பொழுது அவர்கள் இருவரும் வானத்தில் பறந்து போகும் விமானத்தில் ஏறிக்கொண்டு இராமனுடைய ஆஸ்ரமத்தை நோக்கிப் பறந்து சென்றனர். அந்த ஆஸ்ரமமோ அடவியின் கண் அழகாக அமைந்திருந்த ஓர் அற்புதமான இடமாயிருந்தது.

9. இராமனுடைய ஆஸ்ரமத்தின் அக்கம் பக்கங்களில் மந்தை மந்தையாக வந்து மான்கள் மேய்வதுண்டு. ஒரு நாள் காலையில் அழகின் உச்ச நிலையை அடைந்திருந்த மான் ஒன்று ஆங்குத் தென்பட்டது. மற்ற மான்கள் வாசனையால் அதன் பாங்கை அறிந்துகொண்டு அதன் அருகில் போகவில்லை. புதிய ஜந்துவோ விதவிதமான பாங்குகளில் பார்ப்பவர்களுடைய உள்ளத்தைக் கவர்ந்தது. அவ்வேளையில் பூந்தோட்டத்தில் சீதை புஷ்பங்கள் கொய்து கொண்டிருந்தாள். கவர்ச்சிகரமானதும் நூதனமானதும் ஆகிய அந்த விலங்கை அவள் காணலாயினள். அதை வந்து பார்க்கும்படி இராமனை அவள் கூவி அழைத்தாள். இதுவரையிலும் தாங்கள் கண்டறிந்திராத புதிய மானென்றைப் பார்த்து அவர்கள் இருவரும் பூரிப்படைந்தனர். அது ஒய்யாரமாக நடந்தது. புல்லையும் தளிர்களையும் அது கடித்தெடுத்ததில் புதுமை ஒன்று புலப்பட்டது. துள்ளிக் குதித்து இங்குமங்கும் அது ஓடியதில் நாட்டியக்கலை நிறைந்திருந்தது. மாந்தரை அது உற்று நோக்கியதில் மகிமை ஒன்று விளங்கியது. கபடமொன்றுமறியாக் குழந்தை

போன்று அது காட்சி கொடுத்தது. அதன் மேனியில் அமைந்திருந்த கவர்ச்சிகரமான நிறங்களும் புள்ளிகளும் பரவசமூட்டுவனவாக இருந்தன. தவம்புரிய வந்திருந்த தம்பதிகளின் உள்ளத்தை அம்மிருகம் அடியோடு கவர்ந்து விட்டது. காண்பதற்கரிய அம் மானைக் கட்டிப்பிடிக்க வேண்டும், பிறகு அதைத் தங்களுக்குச் சொந்தமாக்கவேண்டும் என்று அவர்களிருவரும் ஏகோபித்துத் தீர்மானித்தனர். எப்படியாவது அதைத் தனக்குரியதாக்கவேண்டும் என்னும் ஆசை தீவிரமாக அந்தத் தையலாள் உள்ளத்தில் புகுந்து விட்டது.

விருப்பு, வெறுப்புக்கு அடிமைப்படாத தம்பி இலக்ஷ்மணனுக்கு மட்டும் இக்காட்சியின் உட்பொருள் உள்ளபடி விளங்கிற்று. 'அண்ணா, இந்த ஜாலவித்தையை நடாத்துபவன் மாரீசன் என்பதை உங்களுக்கு நினைவூட்டுகிறேன்' என்று எட்ட நின்றுகொண்டிருந்த அவன் உரக்கக் கத்தினான். ஆனால் மனதில் பதைபதைப்பே வடிவெடுத்திருந்த கணவனும் மனைவியும் இந்த எச்சரிக்கைக்குச் செவி சாய்க்கவில்லை.

"துரத்திச் சென்று கூடுமானால் இவ்விலங்கை உயிரோடு பிடியுங்கள்" என்று சீதை தன் கணவனிடம்வேண்டினாள்.

"லக்ஷ்மணா, சீதைக்குக் காவல் இரு. ஏமாற்றுகிற இந்த மானை நான் ஒரு கை பார்த்துவிடுகிறேன்" என்று பலத்த குரலில் கூறிவிட்டு இராமன் அதன் பின் ஓடினான். இந்தப்பாங்கில் சீதாராமன் சீதையிடமிருந்து பிரிந்து வெறும் தோற்றத்தைப் பிடிக்கப் பறந்தோடினான். இனிப் பல மாதங்கள் இராமன் சீதையைக் காணமாட்டான் என்பதும், அதைக் குறித்து அவன் துன்பக்கடலில் துய்த்திருப்பான் என்பதும் அப்போது அவனுக்குத் தெரியாது.

நூதனமானதும், அலங்கரிக்கப்பட்டதுமான மான் தனக்கேற்ற கவர்ச்சிகரமான பாங்கிலே அப்பால் போய்க் கொண்டேயிருந்தது. ஒருவேளை அது தயங்கி நிற்கும். அடுத்தவேளை அது அம்புபோன்று முன்னேக்கிப் பாயும். இப்பொழுது கைக்கு அகப்படுவதுபோல் அண்மையில் நிற்கும். அடுத்த வேளையில் அது சேய்மையில் காட்சி கொடுக்கும். விதவிதமான பாங்குகளிலே அது இராமனை ஏமாற்றி அவனுடைய வனவாசக் குடிசிலினின்று நெடுந்தூரத்திற்கப்பால் அவனைக் கவர்ந்திழுத்துக்கொண்டு போய்விட்டது. தன்னை மயக்கிய அந்த மானைப் பின்தொடர்ந்த இராமன் ஓடிச் சலித்துப்போனுன். இலக்குப் பிசகாத அம்பு ஒன்றை அவன் அந்த விலங்கின்மீது எய்தான். அக்கணமே மான் மாயமாக மறைந்துபோயிற்று. அதற்குப் பதிலாக மாரீசன் மாய்ந்து வீழ்ந்தான். ஆனுல் வீழ்வதற்கு முன்பே அவன் "ஆ சீதா! ஆ லக்ஷ்மணு!" என்று வனமெங்கும் எதிரொலிக்கும்படி கத்தினுன். அப்படிக் கத்தியவன் மற்றொரு சூழ்ச்சியையும் கையாண்டான். இராமனுக்குச் சொந்தமாயிருந்த குரலிலேயே கூப்பாடு போட்டான். இராமனுக்கு ஆபத்து நிகழ்ந்துவிட்டது என்றும் உதவியை நாடி அவன் கூக்குரலிட்டான் என்றும் கேட்டவர்கள் யூகிப்பதற்கான சூழ்ச்சியை வெற்றிகரமாக அவன் கையாண்டான்.

உதவியை நாடி இராமன் கத்தியது ஆவலுடன் காத்திருந்த சீதையின் காதில் வீழ்ந்தது. அக்கணமே அவள் இலக்ஷ்மணனைத் தூண்டினுள். அவன் தன் தமையனுக்கு உதவிபுரிய அப்பொழுதே ஓடவேண்டுமென்று பதைபதைப்புடன் அவள் வேண்டினுள்.

ஆனுல் இலக்ஷ்மணனே தன் தமையனின் ஆணைப்படி அசையாது அங்கேயே நின்றுகொண்டிருந்தான்.

சீதை: சுமித்திரையின் மைந்தா, என் கணவனின் தோழன் போன்று பாசாங்கு பண்ணிக்கொண்டு நீ வனத்துக்கு வந்திருக்கிறாய். பின்பு அவன் ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டு இருக்கிறபொழுது அந்த ஆபத்தை வரவேற்பவன் போன்று நீ காணப்படுகிறாய். உன் தமையன் செத்து ஒழியவேண்டும் என்பது உன்னுடைய நோக்கமா? என் மீதும் நீ ஏதாவது வழுவிய கருத்து வைத்திருக்கிறாயா?

இலக்ஷ்மணன் கரங்களால் தன் காதுகளைப் பொத்திக் கொண்டான். பரிந்து அவன் விண்ணப்பித்ததாவது: "அம்மா, தயைகூர்ந்து அமைதியுடனிருங்கள். இராமனை எதிர்க்க வல்லமை வாய்ந்தவன் யாருமே இவ்வுலகில் இல்லை. பத்திரமாக அவர் திரும்பி வந்து சேர்வார். நாம் கேட்ட குரல் என் தமையனுடைய குரல் அன்று. அது யாரோ ராக்ஷசனுடைய சூழ்ச்சி. தமக்குக் காவல் இருக்கும்படி என் தமையன் என்னை நிறுத்தி வைத்திருக்கிறார். அவர் ஆணைப்படி நடக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்."

சீதைக்கு மேலும் சினமும் சோகமும் கொதித்தெழுந்தன: "இராமன் ஆங்கு அழிந்துபட்டுப் போய்க்கொண்டிருக்கிறார். அவர் ஆணைப்படி நீ இங்கே காத்திருப்பேன் என்று கூறுகிறாய். அவருடைய அழிவுக்காகத்தான் நீ இங்கே காத்திருக்கிறாய். அவர் அழிந்துபட்டுப் போன பிறகு என்னை உனக்கு உரியவள் ஆக்கிக்கொள்வது உன் திட்டம். அந்த எண்ணம் நிறைவேறாது. இராமனுக்கு உதவி பண்ண இப்பொழுதே விரைந்து ஓடுவாயாக. நீ அப்படிச் செய்யாவிட்டால் இராமன் அழிந்துபோவதற்கு முன்பே நான் கோதாவரிக்குள் குதித்து என்னை மாய்த்துக்கொள்வேன்."

இலக்ஷ்மணன்: "தாயே, நான் குற்றம் அறியாக் குழந்தை என்று சத்தியம் பண்ணுகிறேன். நான் என்

தலைவனுடைய ஆணையை மீறி நடக்கவும், தங்களுடைய ஆணைக்கு அடிபணிந்து நடக்கவும் துணிகிறேன். நமக்கு ஏதோ விபத்து வரப்போகிறது என்று நான் அஞ்சுகிறேன். ஆதலால்தான் இந்தத் துர்புத்தி தங்கள் உள்ளத்தில் புகுந்திருக்கிறது. தங்களைத் தனியாக விட்டு விட்டு நான் போகிறேன். தாங்கள் ஆபத்து ஏதுமின்றிப் பத்திரமாக இருப்பீர்களாக. வனதேவதைகள் தங்களைக் காப்பாற்றுவார்களாக. மீண்டும் தங்களை இராமனோடு இணைத்து வைத்துக் காண்பேனோ?" மனக்கொந்தளிப்புடனும், துக்க வேதனையில் தவித்துக்கொண்டும், கோபத்தில் வெந்துகொண்டும் இலக்ஷ்மணன் புறப்பட்டுப் போனான். மாய மானைத் துரத்திக்கொண்டு இராமன் எந்தத் திக்கில் ஓடினானோ அதே திக்கில் இலக்ஷ்மணனும் சென்று மறைந்தான்.

10. இலக்ஷ்மணன் பர்ணசாலையைவிட்டு வெளியேகிய சிறிது நேரத்திற்குள் துறவி ஒருவன் வேதகானம் பண்ணிக்கொண்டு அங்கே தோன்றினான். அவன் காவி உடை அணிந்திருந்தான். கையில் கமண்டலமும் தண்டமும் தாங்கியிருந்தான். எனவே வந்தவன் ஒரு சந்நியாசி என்பது வெளியாயிற்று. அன்னவனுடைய தெய்விக அந்தஸ்தை அனுசரித்து சீதாபிராட்டி அவனைப் பக்திபூர்வமாக வரவேற்றாள். பிறகு கனிகளையும் கிழங்குகளையும் அவனுக்குப் படைத்தாள்.

சீதாப்பிராட்டியினுடைய மேனியழகை வந்தவன் மிகைபட வர்ணித்தான். அப்படிச் செய்வது துறவி ஒருவனுக்கு ஒவ்வாத செயலாகும். ஆயினும் ஒரு குழந்தையின் பாங்கு படைத்திருந்த மாதரசி அவனுடைய போக்கைப் பற்றிச் சந்தேகப்படவில்லை. ராக்ஷசர்கள் நிறைந்திருந்ததும் ஆபத்துக்கு ஏதுவானதுமாகிய அடவியில் தன்னந்தனியளாக

அவ்வள் ஏன் வசித்திருந்தாள் என்று வந்தவன் கேட்டான். அருளாளன் ஒருவனிடமிருந்து எதையும் மறைத்து வைக்கலாகாதென்று எண்ணிய தூய உள்ளம் படைத்திருந்த சீதை தன்னைப்பற்றியும், தன் கணவனைப்பற்றியும், கணவனுடைய சகோதரனைப்பற்றியும் ஆகிய விவரங்களையெல்லாம் உள்ளபடி விரித்து உரைத்தாள். ஆங்கு எழுந்தருளிய முனிவன் சற்றுத் தங்கியிருந்தால் தன் கணவன் திரும்பி வந்து ஐதிகத்துக்கேற்ற ஆராதனைகளையெல்லாம் அச் சான்றோனுக்குச் சமர்ப்பிப்பான் என்று மேலும் அவள் மொழிந்தாள்.

முனிவன் போன்று வேஷம் தரித்திருந்தவனுக்கு அதே வேஷத்தில் நெடிது தாக்குப்பிடிக்க இயலவில்லை. தன் நிஜசொருபத்தில் இப்பொழுது தன்னைப்பற்றி எடுத்து விளக்குவானாயினன். லங்காபுரிக்கு அரசன் என்று அவன் தன்னை அறிமுகப்படுத்தினான். அந்நாட்டிலே செல்வம் ஏராளமாக வாய்த்திருந்தது. சுகபோகத்துக்கான வாய்ப்புகளெல்லாம் அங்கு நிறைந்திருந்தன. வனவாசியாகிய இராமனைப் புறக்கணிக்கும்படி சீதைக்கு அவன் புத்தி புகட்டினான். வனவாசத்தினுடைய கஷ்டங்களை எல்லாம் ஒதுக்கித் தள்ளும்படியும் அவன் ஏவினான். லங்காபுரிக்குரிய வல்லமை வாய்ந்த வேந்தனைக் கணவனாக ஏற்றுக்கொள்ளும்படியும் அவன் இயம்பினான். அதனால் ராஜபோகமும், பெருமித வாழ்வும் அவளுக்கு எளிதில் சொந்தமாகுமென்றும் எடுத்துச் சொன்னான். சுகபோகமும், ஆதிக்கமும், பகட்டும், அளப்பரிய செல்வமும் உலகத்தவர்களைக் காமுறச் செய்கின்றன. சீதையும் அந்தப்பாங்கில் தனக்கு வசப்படுவாள் என்று இராவணன் மனக்கோட்டை கட்டினான். அவளுக்கு மையல் ஊட்டித் தனக்கு உரியவளாக்குவது அவனுடைய நோக்கம். இராமனைப் புறக்கணித்துவிட்டு அவள் தன்னோடு

இணங்கி வருவதன் மூலம் இராமனை அவமானப்படுத்துவதும் இலங்கை வேந்தனுடைய திட்டமாயிற்று.

இதுகாறும் மடமையே வடிவெடுத்திருந்த சீதை இப்பொழுது ஒரு பெண் சிங்கம் போன்று கர்ஜித்தாள்: "நான் யாண்டும் இராமனுக்குரியவள். ஒவ்வாத உன் எண்ணத்தை என்மீது திருப்புவதன் வாயிலாக உன்னுடைய அழிவுக்கு நீ வழி வகுத்துள்ளாய். அல்ப ஜந்துவே, இக்கணமே இவ்விடத்தை விட்டு ஓடிப்போ. இல்லையேல் இராமன் வந்து உன் உயிரை வாங்கி விடுவார்."

இராவணன் மையல் ஊட்டியது பயன்படாது போயிற்று. பயமுறுத்துதலின் மூலம் ஒருவேளை வெற்றி வாய்க்கும் என அவன் எண்ணினான். உறுதிப்பாட்டோடும், உட்பொருள் நிறைந்த பாங்கிலும் அவன் இயம்பியதாவது: "பத்துத்தலை இராவணன் என்றால் தேவர்களும் நடுங்குவார்கள். என்மீது காற்று விரைந்து வந்து மோதாது. என் முன்னிலையில் சூரியன் சூடு நிறைந்த தன் கிரணங்களை அடக்கிக்கொள்கிறான். என்னைப் பார்த்த மாத்திரத்தில் நதிகள் ஓடாது நின்று விடுகின்றன. என் வரவைக் காண்கின்ற பொழுதெல்லாம் கானகத்தில் உள்ள மரம் செடி கொடிகள் அசைவற்று நிற்கின்றன. இராமனோ ஓர் அல்ப ஜந்து. அவனைக் குப்பை என ஒதுக்கித் தள்ளிவிட்டு என்னை வந்து அடைவாயாக. இல்லையேல் நீ படும் துயரத்துக்கு முடிவு இராது."

இராவணன் படைத்திருந்த அசாதாரணமான வல்லமைகளைப் பற்றியெல்லாம் கேள்விப்பட்டு மெல்லிய மேனி படைத்திருந்த மாதரசி அச்சம் சிறிதேனும் பூணவில்லை. இராவணனோ விரும்பியவாறு வெவ்வேறு வடிவங்களை எடுக்க வல்லவனாயிருந்தான். இப்பொழுது ஒரு பருத்த

இராக்ஷச வடிவை எடுத்தான். சீதையைத் தூக்கித் தன்னுடைய பறந்து போகும் புஷ்பக விமானத்தில் வைத்தான். அது வானவெளியில் பறந்து போயிற்று. சீதையோ ஆபத்துக்கு அறிகுறியான கூக்குரலைக் கிளப்பினாள். தனக்கு உதவி புரிதற்கும், தன்னைக் காப்பாற்றுதற்கும் ஓடி வாருங்கள் என்று இராமனையும், இலக்ஷ்மணனையும் தொடர்ந்து கூவி அழைத்தாள். ஆனால் அவர்கள் இருவரும் நெடுந்தூரத்துக்கப்பால் இருந்ததனால் அவளுடைய அழுகை அவர்களின் காதில் விழவில்லை. ஆபத்து வேளையில் அவளைக் காப்பாற்றுதற்கான சூழ்நிலையில் சகோதரர்கள் இருவரும் இல்லாது போயினர். அடுத்தபடியாக வன விருக்ஷங்களிடத்தும், வனவாசம் பண்ணிய ஜந்துக்களிடத்தும் அவள் முறையிட்டழுதாள். தனக்கு வாய்த்திருந்த விபத்துக்கு அவைகள் யாவும் அத்தாட்சியாக வேண்டுமென்று விண்ணப்பித்தாள். இராவணன் என்ன முறையில் தன்னை அபகரித்துப் போய்விட்டான் என்னும் செய்தியை இராமனிடம் தெரிவிக்கும்படி அவைகளை அவள் பரிந்து கெஞ்சிக் கேட்டாள்.

அந்த வட்டாரத்தில் ஜடாயு என்னும் வயது முதிர்ந்த கழுகு ஒன்று தன்னுடைய விருத்தாப்பிய தசையைக் கழிக்கும் பாங்கில் ஓய்வு பெற்று வாழ்ந்து வந்தது. முன்பு ஒரு காலத்தில் இந்த ஜடாயு தசரதச் சக்கரவர்த்திக்குத் தோழனாயிருந்து வந்தது. சிறிது காலத்துக்கு முன்பு இக்கழுகு தன்னை இராமனிடம் அறிமுகப்படுத்திக்கொண்டது. தன்னால் இயன்ற கைங்கரியத்தை இராமனுக்குச் செய்வதாகவும் அது பணிவுடன் தெரிவித்துக் கொண்டது. அந்த ஜடாயு இப்பொழுது தூங்குவதும், விழித்திருப்பதுமாகிய நிலைகளுக்கிடையில் ஊசலாடிக்கொண்டிருந்தது. சீதாபிராட்டி

யின் அழுகை ஏதோ பட்டும் படாத நிலையில் தன் காதில் வீழ்ந்தபொழுது இக்கழுகு திடீரென விழித்துக் கொண்டது. சந்தர்ப்பம் வாய்த்தபொழுதெல்லாம் இராவணன் பெண்பாலர்களை அபகரித்துக்கொண்டு போவ தைப்பற்றி ஜடாயுவுக்கு நன்கு தெரிந்திருந்தது. தன் போக்குக்கு ஒப்ப இப்பொழுது சீதையை அவன் தூக்கிக் கொண்டு போவதை இக் கழுகு வேந்தன் காணலுற்றது. அக்கணமே அது இராவணன்மீது பாய்ந்து அவனுடைய பாய்ச்சலுக்குத் தடை உண்டுபண்ணிற்று. பயங்கரமான போர் ஒன்று நிகழ்ந்தது. நெடுநேரத்திற்குப் பிறகு உயிரை இழக்கும் பாங்கில் ஜடாயு கத்தியைக்கொண்டு காயப்படுத் தப்பட்டது. கண்ணீரும் கம்பலையுமாகத் தவித்துக்கொண் டிருந்த சீதை தனக்கு நிகழ்ந்த விபத்தை எப்படியாவது இராமனுக்குத் தெரிவிக்கவேண்டும் என்று பிரார்த்தித் தாள். அவள் தென்திசையை நோக்கித் தூக்கிச் செல்லப் பட்டாள். அப்பொழுது ஒரு பாறையின் மீது ஐந்து குரங்கு கள் அமர்ந்துகொண்டு வானவெளியில் அவள் தூக்கிச் செல்லப்பட்டதை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தன. சீதை தன்னுடைய மஞ்சள் நிறமான மேல் ஆடையையும், ஆபரணங்கள் சிலவற்றையும் கழற்றிக் கீழே போட்டாள். ஒருவேளை அவைகள் இராமன் கைக்கு எட்டக்கூடும் என் பது அவள் கொண்டிருந்த எண்ணம். விண்ணவர்கள் மேல் உலகினின்று நிலவுலகின் நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண் டிருந்தனர். "இராவணனுக்கு அழிவுகாலம் அணுகிவிட்டது" என்று அவர்கள் ஏகோபித்து இயம்பினர். தன்னுடைய மரணத்துக்கு அறிகுறியாக அவன் சீதையை லங்காபுரியி லிருந்த தன் மாளிகைக்குத் தூக்கிச் சென்றான்.

லங்காபுரியில் அற்புதமான மாளிகை இராவணனுக்கு உரியதாயிருந்தது. அதைச் சுற்றிலும் இன்பமூட்டுதற்

கான இனிய பூங்காக்கள் ஆங்காங்கு அமைக்கப்பெற்றிருந் தன. அவைகள் யாவையும் அவன் சீதைக்குக் காட்டினன். தங்கம், வெள்ளி, ரத்தினங்கள் ஆகியவைகளால் அமைக்கப் பெற்றிருந்த கவர்ச்சிகரமான ஆபரணங்களையும் அவன் அவளுக்குக் காட்டினன். இதுகாறும் எந்த மங்கையின் முன்னிலையிலும் அவன் தலைவணங்கியது கிடையாது. ஆனல் இப்பொழுது அவனுடைய பத்துத்தலைகளும் சீதையின் பாதங்களில் படும்படி தலைவணங்கித் தன்னைக் கணவனுக ஏற்றுக்கொள்ளும்படி நயந்துவேண்டினன். சீதாபிராட்டியோ அளப்பரிய செல்வத்தைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. இராவணன் பகர்ந்த மையலூட்டும் இச்சகத்துக்குச் செவி சாய்க்கவில்லை. அவளுடைய நிலைமையைப்பற்றி நிதான மாக எண்ணிப்பார்ப்பதற்கு வேண்டிய அவகாசத்தை அவன் அவளுக்கு நல்கினன். அரக்கியர்கள் ஒரு சிலர்க் கிடையில் சீதையை அவன் காவலில் வைத்தான். அதற்குப் பொருத்தமான இடம் அசோகவனமாயிருந்தது. கொஞ்சு தல், கெஞ்சுதல், பயமுட்டுதல், நேர்மையாக வேண்டுதல், வஞ்சித்தல் ஆகிய உபாயங்களையெல்லாம் கையாண்டு அவளை இராவணனுக்கு உரியவளாகப் பண்ணுவது அந்த அரக்கியர்களுடைய கடமையாயிற்று. சில மணி நேரங் களுக்கு முன்பு பஞ்சவடியில் இராமனேடு பரமானந்தத்தில் திளைத்திருந்த சீதை இப்பொழுது சிலமணி நேரங்களுக்குப் பின்பு இத்தகைய பரிதாபகரமான நிலையில் வைக்கப் பட்டவள் ஆனள்.

11. அடுத்தபடி இராமனுடைய கதியை ஆராய்ந்து பார்ப்போம். மாரீசன் வீழ்ந்து மடிந்தபின்பே தான் ஏமாற் றப்பட்டான் என்று இராமன் அறியலானன். இலக்ஷ் மணன் செய்த எச்சரிக்கை முற்றிலும் பொருத்தமானது.

அரக்கன் கையாண்ட சூழ்ச்சிகளுள் மிகக்கொடியதாகவும், குழப்பத்தை உண்டுபண்ணக்கூடியதாகவும் அது இருந்தது. மேலும் அதே மாரீசன் இராமனுடைய குரலைக் கையாண்டு 'சீதா' என்றும் 'லக்ஷ்மணா' என்றும் கூவினான். அக் குரலைக் கேட்டதன் விளைவாகப் பர்ணசாலையில் ஏதாவது விபரீதம் நேர்ந்திருக்கக்கூடும் என்று இராமன் கவலைப் பட்டான். என்னென்ன விபரீதங்கள் வடிவெடுத்திருக்கக் கூடும் என்பனவற்றைப் பற்றிச் சிந்தனையில் மூழ்கியவனாக இராமன் பர்ணசாலையை நோக்கி விரைந்து சென்றான். இராமன் உத்தேசித்தபடியே துயரத்தில் மூழ்கியவனாக இலக்ஷ்மணன் தென்பட்டான். அவன் தனியனாக வந்ததைப் பார்த்த இராமன் திகில் அடைந்தான். 'சீதைக்குப் பாதுகாப்பின்றி அவளைத் தனியளாக விட்டுவிட்டு நீ ஏன் இங்கு வந்தாய்?' என்று ஆவலுடன் தமையன் வினவினான்.

கண்ணீர் சிந்திக்கொண்டு இளையவன் இயம்பியதாவது: "அண்ணா, நான் வேறு என்ன தான் செய்வது? தம்முடைய குரலைக் கேட்ட மாது தங்களை நோக்கி ஓட வேண்டும் என்று தூண்டினாள். தங்களுக்கு ஆபத்து ஏதும் நேராது என்று நான் தடை மிகச் செய்தேன். அதற்கு அவள் தன் மீதும் தங்கள் மீதும் நான் ஏதோ வஞ்சகம் பூண்டிருப்பதாக எண்ணிக்கொண்டு என்மீது அவதூறு கூறினாள். நான் களங்கமற்றவன் என்று சத்யம் பண்ணினேன். தம்மை நாடி நான் உடனே ஓடாவிட்டால் தான் செத்து மடிந்து போவதாகப் பயமுறுத்தினாள். ஆதலால் தான் நான் இங்குத் தென்படுகிறேன்."

"சீதையை நாம் மீண்டும் காண்போமா?" என்று இராமன் வருந்தினான். சகோதரர்களிருவரும் பர்ண சாலையை நோக்கி விரைந்து சென்றனர். அது காலியாகக்

கிடந்தது; சீதையை அவர்கள் கூவி அழைத்தனர். எங்கே யாவது அவள் தென்படுவாளா என்னும் ஆவலுடன் அவர் கள் இங்கும் அங்கும் ஓடிப்பார்த்தனர். ஆ! அவள் காணாது போய்விட்டாள். இராமன் துயரத்தில் மூழ்கியவனானான். ராக்ஷசர்கள் அவளைப் புசித்திருக்கக் கூடும் என்று எண்ணி இராமன் ஸ்தம்பித்துப்போனான்.

தம்பி இலக்ஷ்மணன் தமையனைத் தேற்றினான். அவன் இயம்பியதாவது: 'துயரப்படுவதில் பயன் ஏதுமில்லை. திண்ணியன் ஒருவன் விதியை வெல்லுகிறான். ஆகாததை அவன் ஆகும்படி செய்கிறான். வனாந்தரத்தில் கண்ணும் கருத்துமாகத் தேடிப் பார்க்கலாம். ஏதாவது உளவு கிடைக் கக்கூடும். சகோதரர்களிருவரும் சீதையைக் கூவி அழைத் துக்கொண்டு வெவ்வேறு இடங்களைச் சுற்றிப் பார்த்தனர். ஆனால் துப்பு ஒன்றும் அகப்படவில்லை. மான் மந்தை ஒன்றை அவர்கள் சந்தித்தனர். சீதை எங்கு உள்ளாள் என்பதை அவைகள் தெரிவிக்க மாட்டாவா, என்று ஆவலு டன் அவைகளை நோக்கிப் பார்த்தனர். அப்பாவிகளாகிய அந்த விலங்குகள் வானத்தைப் பார்த்துக்கொண்டு தென் திசையை நோக்கி நகர்ந்தன. சகோதரர்களும் அதே திசையை நோக்கிச் சென்றனர். அதிவிரைவில் கழுகு வேந் தனாகிய ஜடாயுவை அவர்கள் சந்தித்தனர். அவனே உடல் முழுதும் ரத்தம் தோய்ந்தவனாகத் தென்பட்டான். இராம னுக்குத் திடீரென்று உள்ளத்தில் கருத்து ஒன்று பாய்ந்தது. சீதையின் மரணத்துக்கு முகாமையாயிருந்த யாரோ ஒரு ராக்ஷசன் இவன் என அவன் எண்ணினான். ஆனால் சக்தியை இழந்து வந்த பறவை எஞ்சியிருக்கிற வல்லமையை யெல்லாம் சேகரித்துக்கொண்டு தான் இராவண னோடு புரிந்த போராட்டத்தை விளக்கியது. "அரைத்

தூக்கத்தில் இருந்த என்னைச் சீதையின் கூக்குரல் தட்டி எழுப்பியது. பொல்லாத இராவணன் அவளைச் சிறை தூக்கிச் சென்றதை நான் கண்டேன். என்ன வெட்ககரமான செயல், என்ன பயங்கொள்ளித்தனமான நடத்தை! கணவன் இல்லாத வேளையில் பெண்ணொருத்தியைத் திருடிக் கொண்டு போவது வீரன் ஒருவனுடைய செயலாகுமா? என்று நான் அவனை அதட்டினேன். ஆனால் அந்த அரக்கனுக்கும் நல்லொழுக்கத்துக்கும் வெகுதூரம். அவனை எதிர்த்து அலகால் கொத்தவும் நகங்களால் கீறவும் செய்தேன். விருத்தாப்பியம் எனக்குப் பிரதிகூலமாயிருந்தது. என் சிறகுகளையும் நகங்களையும் அவன் துண்டித்துவிட்டான். சிறையெடுக்கப்பட்ட சீதை தனக்கு நேர்ந்த விபத்தை உனக்குத் தெரிவிக்கும்படி என்னிடம் பரிந்து வேண்டிக் கொண்டாள். அவள் விண்ணப்பத்தை நிறைவேற்றுதல் பொருட்டே குற்றுயிர் உற்று நான் இங்குக் கிடக்கிறேன். தேடி அவளைக் கண்டுபிடிப்பாயாக. நீ இராவணனைக் கொன்று சீதையை மீட்டெடுப்பாய்." இங்ஙனம் இயம்பிக் கொண்டு ஜடாயு உயிர் துறந்தான்.

இராமன் தண்டகாரண்யத்துக்கு வந்த நாள் முதற் கொண்டு இந்தக் கழுகு வேந்தன் தந்தை மைந்தனிடத்தில் நடந்துகொள்ளும் பாங்கில் அவனோடு நடந்து கொண்டான். அபகரிக்கப்பட்ட சீதையைக் காப்பாற்றுதல் பொருட்டுத் தன் உயிரை வழங்கினான். ஜடாயுவின் முடிவைக் குறித்துச் சகோதரர்களிருவரும் பெரிதும் வருந்தினர். அவனுடைய சடலத்தைத் தகனம் பண்ணி ஈமக்கிரியைகளையெல்லாம் முறைப்படி செய்து முடித்தனர். அயோத்தியிலே தசரதச் சக்கரவர்த்தி தேகவியோகமானபொழுது இவர்கள் ஆங்கு இருந்திருப்பார்களாகில் எத்தகைய பொறுப்புடன்

ஈமக்கிரியைகளைச் செய்திருப்பார்களோ அதே தரத்தில் ஜடாயுவுக்கு அக்கிரியைகளைச் செய்து நிறைவேற்றினர். இப்பொழுது சீதை மடிந்து போகவில்லை; உயிருடன் இருக்கிருள் என்னும் நம்பிக்கை சிறிது இவர்களுக்கு உண்டாயிற்று. பின்னர் அடர்ந்த அடவிக்குள் தென் திசையை நோக்கி நுழைந்து சென்றனர்.

12. அடி அடியாக அடவிக்குள் நகர்ந்து சென்ற சகோதரர்கள் சிற்சில வேளைகளில் உறுதிப்பாட்டை இழப்பவர்கள் ஆனர்கள். இராமனுக்குச் சோகம் வரம்பு கடந்து மேலிட்டபொழுதெல்லாம் இலக்ஷ்மணன் அவனுக்கு ஆறுதலையும் ஊக்கத்தையும் ஊட்டுவானுயினன். அதேபாங்கில் எப்பொழுதெல்லாம் இலக்ஷ்மணனுக்கு மனச்சோர்வும் வியாகுலமும் மேலிட்டதோ அப்பொழுதெல்லாம் தமையன் அவனைத் தேற்றுவானுயினன். இங்ஙனம் அவர்கள் பரஸ்பரம் உதவி புரிந்து கொண்டனர்.

விலங்குகள் நிறைந்திருந்த கானகத்துக்குள் உத்தேசமாக வழி வகுத்தவர்களாகச் சகோதரர்களிருவரும் போய்க்கொண்டிருந்தனர். அப்பொழுது விபரீதமான ஜந்து ஒன்றை அவர்கள் காணலாயினர். அதற்குக் கழுத்தும் தலையும் இல்லை. வயிற்றிலே அகன்ற வாயும், அதில் வெளியே நீட்டிக்கொண்டிருந்த கூரிய பற்களும் அதற்கு இருந்தன. இடையிடையே நீண்ட நாவை அது அசைத்துக்கொண்டிருந்தது. நெஞ்சிலே அதற்கு ஒற்றைக் கண் இருந்தது. அக்கண்ணின் கூரிய பார்வை பயமூட்டுவதாக இருந்தது. நகர்ந்து போவதற்கு அதற்குக் கால்களில்லை. ஆனல் பறவைகளையும் விலங்குகளையும் இரையாக்குதற்கு நெடுந்தூரம் நீட்டுதற்கான இரண்டு கைகளை அது படைத்திருந்தது. அருவருப்புக்குரிய அந்த ஜந்து இரண்டு சகோ

தரர்களையும் இரண்டு கரங்களில் பற்றிப் பிடித்துக்கொண்டு அவர்களை விழுங்கும் தறுவாயில் இருந்தது. ஆனால் சம யோசித புத்தி படைத்திருந்த சகோதரர்களிருவரும் அந்தப் பயங்கரப் பிராணியினுடைய கரங்களை ஒரு கணப்பொழுதில் துண்டித்துவிட்டனர். அச்செயலின் விளைவாக அதற்கு நேர்ந்திருந்த சாபத்திலிருந்து அது விடுதலை பெற்றது. அது ஒழுக்கத்திலிருந்து வழுவியதன் விளைவாக இந்திரன் அதற்குச் சாபம் போட்டிருந்தான். சாப விமோசனம் ஆனதும் அந்த ஜந்துவுக்குப் பழைய நல்லறிவு உதயமாயிற்று. தன்னைத் தாக்கியவர்கள் இராமனும் இலக்ஷ்மணனுமாக இருக்கக்கூடுமோ என்று அது கேட்டது. கேள்விக்கேற்ற உடன்பாட்டு விடையும் வருவதாயிற்று. அப்பொழுது அந்த ஜந்து "என்னுடைய உடலுக்குத் தீ மூட்டுங்கள். அதற்குக் கைம்மாருக நான் உங்களுக்கு நலன் ஒன்று செய்கிறேன்" என்று அந்த ஜந்து வேண்டிக்கொண்டது. அதன் விருப்பத்தைச் சகோதரர்கள் நிறைவேற்றினர். சடபுடவென்று சுடர்விட்டு எரிந்துகொண்டிருந்த நெருப்பினின்று கபந்தன் என்னும் பிரகாசம் வாய்ந்த வடிவம் ஒன்று வெளிக்கிளம்பிற்று. அவன் இயம்பியதாவது: "ராமா, நீ சீதையை மீண்டும் பெறுவாய். அழகான பம்பா நதிக்கரையோரம் செல்வாயாக. அதற்கு அருகில் ரிஷ்யமுகம் என்னும் பாறை ஒன்று இருக்கிறது. அதன்மீது சுக்ரீவன் வசித்திருக்கிறான். அவனோடு நீ உறவுகொண்டாடு. உனக்குத் தேவையாயுள்ள உதவியை அவன் செய்து சாதிப்பான்." இப்படிச் சொல்லி முடித்தவுடனே கபந்தன் விண்ணுலகை நோக்கி மேலே கிளம்பினான். இப்பொழுது இராமனும் இலக்ஷ்மணனும் பம்பையை நோக்கிச் சென்று அதை அடைந்தனர். பம்பையோ செழிப்பின் உச்சநிலையிலிருந்தது. கனவுலகம்.

போன்று அது காட்சி கொடுத்தது. அப்பக்கத்தில் மதங்க மஹரிஷியின் ஆஸ்ரமம் இருந்தது. அதனுள் சகோதரர்கள் இருவரும் நுழைந்தனர். ஆனால் அது குடிபோன இடமாகத் தென்பட்டது. சபரி என்னும் பெயர் படைத்திருந்த கிழவி ஒருத்தி அதற்குக் காவல் இருந்தாள். அவள் நீங்கலாக ஏனைய ஆஸ்ரமவாசிகள் ஆத்ம சாதனத்தின் விளைவாக மோக்ஷசாம்ராஜ்யம் பெற்றவர்கள் ஆனார்கள். பழுத்த வெள்ளரிப்பழம் எப்படிக் கொடியில் ஒட்டியிருப்பதில்லையோ அப்படி சரீர வாழ்க்கையை அவர்கள் தாண்டியவர்கள் ஆயினர். ஆனால் அவ் ஆஸ்ரமத்தின் குலபதி சபரிக்கு மட்டும் தனி உத்தரவு அளித்திருந்தார். அவளுடைய யோக பலத்தால் தசரதராமன் வரும் வரையில் அவள் உடல் தாங்கி இருந்தாள். கனி, கிழங்குகளைக்கொண்டு அவனுக்கு அதிதி சத்காரம் செய்து முடித்தான பிறகு அவள் உடலை நீத்துவிடுவாள் என்பது மஹரிஷியின் ஆணை. பிறப்பில் அவள் தாழ்ந்தவள் எனினும் பண்பில் மேலோங்கி இருந்ததனால் இந்தத் தனிச் சிறப்பு அவளுக்கு வாய்ப்பதாயிற்று. தியானத்திலும் பிரார்த்தனையிலும் காலம் கழித்து வந்த சபரி ஞானக் கண்கொண்டு இராமனையும் இலக்ஷ்மணனையும் அடையாளம் தெரிந்துகொண்டாள். அம்மூர்த்திகள் இருவருக்கும் ப்ரவசநிலையிலிருந்துகொண்டு அவள் வந்தனை வழிபாடுகள் செய்தாள். சகோதரர்களின் அனுக்ரஹத்தைப் பெற்றுக்கொண்டு உடலை உகுத்து அவள் பரகதியடைந்தாள்.

இனி, சுக்ரீவனைத் தேடிக் கண்டு பிடிப்பது சகோதரர்களின் முக்கியமான கடமையாயிற்று. மதங்க மஹரிஷியின் ஆஸ்ரமத்தினின்று வெளியே வந்து பம்பா சரஸ் பக்கம் சுற்றியலைந்தனர். பம்பா சரஸோ பூலோக சொர்க்கமாகக்

காட்சி கொடுத்தது. பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் தீங்கில்லாத இருப்பிடமாக அது திகழ்ந்தது. ஆத்ம போதத்தை ஊட்டவல்ல பூங்காவாக நிலவுலகில் அது இடம் பெற்றிருந்தது. மதங்க மஹரிஷி தமது ஆஸ்ரமத்திற் கேற்றதாக இந்த இடத்தைத் தேடியமைத்ததில் வியப் பொன்றுமில்லை. கண் விழித்திருக்கும் நிலையிலானாலும் சரி, கண் மூடியிருக்கும் நிலையினாலும் சரி பரம்பொருளோடு இணக்கம் பூணுவதற்கு இது முற்றிலும் பொருத்தமான இடமாக இருந்தது.

கிஷ்கிந்தா காண்டம்

பம்பா சரஸினுடைய மகிமையைப் பார்த்து அதில் இராமனும் இலக்ஷ்மணனும் இன்புற்று மூழ்கியிருந்தனர். ஆயினும் அதற்கிடையில் மற்றொரு மனத்தாங்கல் அவர்கள் உள்ளத்தில் வந்து மோதியது. குடும்ப நிர்ப்பந்தத்தில் கட்டுண்டவனைப் பரதன் ஏமாற்றமடைந்து துன்பக்கடலில் மூழ்கியவனை இராமனை விட்டுப் பிரிந்துபோன காட்சியை அவன் மறக்க முடியவில்லை. பின்பு வேற்றான் ஒருவனால் சீதாபிராட்டிக்கு நேர்ந்த விபத்தைக் குறித்து அவனுடைய மனம் துடிதுடித்துக் கொண்டிருந்தது. இந்த இரண்டு இன்னல்களால் தாக்கப்பட்ட சகோதரர்கள் ஆங்கு மண்ணுலகில் திகழும் தெய்விகப் பெற்றியில் திளைத்திருக்க முடியவில்லை. சீதை இருக்குமிடத்தை ஏதேனும் ஒரு விதத்தில் கண்டு பிடித்துவிட முடியும் என்னும் நம்பிக்கை தம்பி இலக்ஷ்மணனிடம் இருந்தது. ஆதலால் அவனுடைய நடையில் உறுதிப்பாடும் மகிமையும் தென்படலாயின. தமைய

னுக்கு வழிகாட்டும் பாங்கில் ரிஷ்யமுகத்தை நோக்கி அவன் ஏகுவானாயினன்.

அந்த ரிஷ்யமுகத்தின்கண் அடைக்கலம் புகுந்திருந்த வானரங்களுக்கிடையில் இந்த இரண்டு வீரர்களுடைய வருகை மனக்குழப்பத்தை உண்டுபண்ணிற்று. புதிய புதிய பாங்குகளில் அவர்கள் ஏற்கனவே பல தடவைகளில் அலைக் கழிக்கப்பட்டு வந்தனர். இப்பொழுது அவர்கள் கண்ட காட்சி தங்களைத் துன்புறுத்துதற்கான புதியதொரு வம்பு என்று வெருண்டனர். வந்துகொண்டிருந்தவர்களை ஆஞ்சனேயன் எப்படியோ சமாளித்துக் கொள்ளட்டும் என்று எண்ணி ஆங்கு அவனை நிற்க வைத்துவிட்டு மற்ற நால்வரும் பறந்தோடி விட்டனர். மதங்க மஹரிஷியினுடைய ஆஸ்ரமம் அவர்களுக்குப் புகலிடமாயிருந்தது. அஃது அருளுக்கு உறைவிடம். யாரையும் தாக்குவது அங்கு நிகழ்வதில்லை. ஆஞ்சனேயனுக்கு அத்தகைய பாதுகாப்பு ஏதும் தேவையில்லை. எல்லாவிதமான சூழ்நிலைகளையும் மனவமைதியோடு சமாளிப்பது அவனுடைய பாங்கு. ஆதலால் எத்தகைய நெருக்கடியிலும் அவன் தோல்வி அடைந்தது கிடையாது. ஆதலால் அவன் அந்த இடத்தை விட்டு நகராது நின்று கொண்டிருந்தான்.

இராமனும் இலக்ஷ்மணனும் ஆஞ்சனேயனை அணுகினர். அன்னவன் அவர்களைக் கூர்ந்து நோக்கினான். "முரண்பாடே வடிவெடுத்துள்ள நீங்கள் யார்? என்ன நோக்கத்துடன் இங்கே வந்திருக்கிறீர்கள்?" என்று அவன் அவர்களை விரட்டுகிற பாங்கில் வினவினான்.

இலக்ஷ்மணன்: எங்களிடத்து நீ காணும் முரண்பாடு யாது?

ஆஞ்சனேயன் : பார்த்தால் தேவர்கள்போன்று தென்படுகிறீர்கள். ஆனால் உங்களுடைய பாதங்கள் பூமியில் படிகின்றன. தவசிகள் கோலம் பூண்டிருக்கிறீர்கள். ஆனால் கொடிய ஆயுதங்களை உடைத்திருக்கிறீர்கள். ஞானிகள் போன்று தென்படுகிறீர்கள். ஆனால் விசனத்தில் மூழ்கியிருக்கிறீர்கள். ஞானியர்களுக்குத் தேடுதலும் தவிர்த்தலும் இல்லை. ஆனால் நீங்களோ இழந்துவிட்ட எதையோ தேடுபவர்கள் போன்று தென்படுகிறீர்கள். இவைகள் தாம் நான் உங்களிடம் காணும் முரண்பாடு.

இராமன் : லக்ஷ்மணா, இவன் கற்றவன். இவனோடு நட்புப் பூணுவது நமக்கு நலன் விளைவிக்கும். நம்மை இவனுக்கு அறிமுகப்படுத்து.

சீதையை இழந்துவிட்டது ஈறாகத் தங்களைப் பற்றிய விவரங்களை இலக்ஷ்மணன் சுருக்கமாக அவனுக்கு எடுத்து இயம்பினான். கபந்தபாகு என்பவனை இந்த இரண்டு சகோதரர்கள் ஒரு சாபத்தினின்று விடுவித்தனர். அவன் தனும் என்னும் தேவகணமாக மாறினான். சீதையை மீட்டு எடுத்தல் பொருட்டு சுக்ரீவனோடு தொடர்பு கொள்ளும்படி அவன் தெரிவித்தான் என்கின்ற விஷயத்தையும் ஆஞ்சனேயனிடம் இளைய சகோதரன் தெரிவித்தான்.

ஆஞ்சனேயனுக்கு ஹனுமான் என்பதும், மாருதி என்பதும் மற்ற பெயர்களாம். இந்தப் புதிய தொடர்பையும், நட்பையும் குறித்து அவன் மகிழ்வுறுவானாயினன். விரட்டியடிக்கப்பட்ட வானர வேந்தனாகிய சுக்ரீவனுடைய அமைச்சன் என அவன் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டான். வந்திருக்கும் இருவரும் சம்மதம் கொடுத்தால் மறைந்திருக்கும் கோமானிடம் அவர்களை விரைவில் தூக்கிச்செல்ல முடியும் என்று அவன் இயம்பினான். தசரத குமாரர்கள்

அந்த ஏற்பாட்டுக்குச் சம்மதம் கொடுத்தனர். அதன்படியே அவர்கள் சுக்ரீவனை அதிவிரைவில் காண முடிந்தது. தான் கொண்டு வந்து சேர்த்த சகோதரர்களின் கஷ்டதசையை ஆஞ்சனேயன் சுக்ரீவனுக்கு எடுத்துச் சொன்னான். சுக்ரீவனும் தனக்கு ஏற்பட்டிருந்த துயரத்தை இராமனுக்குத் தெரிவித்தான். தன்னுடைய தமையனாகிய வாலி தன் செயலை முறை தவறிப் பொருள்படுத்திக்கொண்டான் என்றும், தன்னுடைய மனைவியை அபகரித்துக்கொண்டான் என்றும், நாட்டினின்று தன்னை விரட்டியோட்டிவிட்டானென்றும் அவன் தெரிவித்தான். ஆகவே அவ்விருவருடைய தௌர்பாக்கிய தசைகளும் கிட்டதட்ட ஒத்திருந்தன. சுக்ரீவனுக்கு ஏற்பட்டிருந்த நெருக்கடியை இராமன் நிவர்த்தி பண்ண முடியும். இராமனுக்கு விளைந்திருந்த விபத்தைச் சுக்ரீவன் சரிப்படுத்த முடியும். ஆகவே அவர்கள் தீ மூட்டினர்; கைகோத்துக்கொண்டு அந்த நெருப்பை வலம் வந்தனர். நட்புப் பூண்டிருப்பதாகவும் பரஸ்பரம் உதவி பண்ணிக்கொள்வதாகவும் அவர்கள் பிரதிக்ஞை பண்ணிக் கொண்டனர். அதே வேளையில் சிறைகிடந்த சீதாபிராட்டியின் இடதுகண் துடித்தது. பெண்பால் ஒருத்திக்கு இடது கண் துடிப்பது நல்ல சகுனம் ஆகும். அதே வேளையில் வாலியினுடைய இடது கண்ணும், இராவணனுடைய இடது கண்ணும் துடித்தன. ஆண்பாலர்க்கு இடது கண் துடிப்பது கெட்ட சகுனம் ஆகும்.

2. சீதையை இழந்ததை முன்னிட்டு இராமன் துயரத்தில் மூழ்கியிருந்ததைச் சுக்ரீவன் காணலாயினன். ஆதலால் உறுதிப்பாட்டில் நிலைத்திருக்கும்படி துன்புற்றிருந்த ராஜகுமாரனுக்கு அவன் தேறுதல் சொன்னான். சீதை எங்கு மறைக்கப்பட்டிருந்தாலும் அதைத் தான் கண்டு

பிடிப்பதாகச் சுக்ரீவன் சொன்னன். இளம் மாது ஒருத்தி ராக்ஷசன் ஒருவனல் தூக்கிச் செல்லப்பட்டதையும் அம் மாது 'ராமா, லக்ஷ்மணு' என்று கதறிக்கொண்டிருந்ததைத் தான் கேட்டதைப்பற்றியும் தான் இருந்த இடத்தில் அந்தப் பெண்பால் ஆபரண முடிச்சு ஒன்றைப் போட்டதைப் பற்றியும் அவன் எடுத்துரைத்தான். அந்த ஆபரண முடிச்சைப் பார்க்க இராமன் விரும்பினன். அதன்படியே சுக்ரீவன் குகைக்குள் சென்று மஞ்சள் மேலாடை ஒன்றையும், நகைகளையும் கொண்டுவந்தான். அவை யாவும் சீதாபிராட்டிக்கு உரியவைகள் என்பதை இராமன் அறிந்து கொண்டான். அக்கணமே அவன் மற்றும் ஒருமுறை துன்பத்தில் மூழ்கலாயினன். பிறகு அந்த நகைகளைத் துருவி ஆராய்ந்து பார்க்கும்படி தம்பியை அவன் வேண்டினன். இலக்ஷ்மணனே கால் சிலம்பை மட்டும் அடையாளம் கண்டுகொண்டனன். கை வளையல்களையும், கழுத்துச் சங்கிலிகளைப் பற்றியும் அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. நாள்தோறும் காலையில் சீதாபிராட்டியின் பாத சேவை செய்வது அவனுடைய வழக்கமாய் இருந்து வந்தது. ஆதலால்தான் சிலம்பை அவன் அடையாளம் கண்டு கொண்டான். தன் அண்ணியார் மீது அவன் வைத்திருந்த பக்தி அத்தகையதாம். அது மட்டுமன்று. பிரம்மச்சரிய விரதம் காக்கின்ற ஒருவன் பெண்பால் ஒருத்தியைக் கூர்ந்து கவனிப்பதில்லை.

பரஸ்பரம் உதவி புரிந்துகொள்வது நட்பின் பாங்கு ஆகும். தன் நாட்டினின்று விரட்டியோட்டப்பட்டதினின்றும் இடையிடையே துன்புறுத்தப்பட்டதினின்றும் விடுவித்துக்கொள்கிற உதவி சுக்ரீவனுக்குத் தேவையாயிருந்தது. மேலும் தன்னுடைய மனைவியை அவன் மீட்டெடுத்துக்

கொள்ளவேண்டும். அவனுடைய கஷ்டதசை இராமனுடைய கஷ்டதசையை ஒத்திருந்தது. இரண்டுபேரும் அவரவர் ராஜ்யத்தினின்று வெளியே கிளப்பப்பட்டவராயினர். இருவரும் மனைவியரை இழந்தவர்கள் ஆயினர். ஆகவே ஒருவருக்கு ஒருவர் அனுதாபம் காட்டும் நிலையில் இருவரும் இருந்தனர். ஒருவருக்கு ஒருவர் உதவி புரியும் நிலையிலும் அவர்கள் இருவரும் இருந்தனர்.

இளையவனாகிய சுக்ரீவனுக்கு மூத்தவனாகிய வாலி விளைவித்த கொடுமைகளைச் சரிப்படுத்தித் தருவதாக இராமன் உறுதி கூறினான். ஆயினும் செயலில் ஈடுபடுதற்கு முன்பு அந்த வானர சகோதரர்களுக்கிடையில் நிகழ்ந்திருந்த பிணக்கை உள்ளபடி அறிந்துகொள்ள அயோத்தி ராமன் விரும்பினான். செயல் ஒன்றிலே இறங்குதற்கு முன்பு அது சத்தியத்துக்கும் தர்மத்துக்கும் ஒத்ததா என்று விசாரித்துப் பார்ப்பது முற்றிலும் அவசியம்.

சுக்ரீவன் தன்னுடைய வியவகாரத்தை விளக்கினான். மாயாவி என்னும் அரக்கன் ஒருவன் ஒரு தடவை கிஷ்கிந்தையை வந்து தாக்கினான். அப்பொழுது வாலியும் சுக்ரீவனும் அவனை விரட்டியோட்ட முந்தினர். சகோதரர்களால் துரத்தப்பட்ட மாயாவி ஓட்டம் பிடித்தான். பெரிய மலை நுழைவு ஒன்றைக் கண்டதும் பாதுகாப்பின் பொருட்டு அவன் அதற்குள் நுழைந்தான். வாயிலில் காவலிருக்கும் படி இளையவனுக்கு உத்தரவு இட்டுவிட்டு அரக்கனைப் பின்பற்றி வாலி குகையினுள் சென்றான். சுக்ரீவனோ ஒரு வருஷ காலம் காவலிருந்து பார்த்தான். குகைக்குள்ளிருந்து வாலியினுடைய குரலை ஒத்திருந்த கூக்குரல் ஒன்று கேட்கப்பட்டது. அதைத் தொடர்ந்து இரத்தம் பெருக்கெடுத்து வெளியே வந்தது. அசுரன் வாலியைக் கொன்றுவிட்டான்

என்று சுக்ரீவன் நினைத்தான். ஆகவே பெரிய பாறை ஒன்றை உருட்டிக்கொண்டு வந்து குகையின் வாயிலை அவன் மூடினான். எதிரியை வெளியே வரவொட்டாது தடுப்பது அவன் நோக்கமாயிருந்தது. பிறகு மந்திரிமார்கள் நாடு ஒன்று அரசன் இல்லாது இருக்கலாகாது என்று எண்ணி, வாலியின் சிம்மாசனத்தில் சுக்ரீவனை அமரப் பண்ணினர். மாயாவியை வாலி ஒழித்து விட்டதுதான் குகையினுள் உள்ளபடி நிகழ்ந்த நிகழ்ச்சியாகும். வெளியே வர முயன்ற போது குகையின் வாய் அடைபட்டுக் கிடந்ததை வாலி பார்த்தான். சிரமப்பட்டு அந்தப் பெரிய பாறுங்கல்லை அப்புறப்படுத்திவிட்டு வாலி சீற்றம் ததும்பியவனாக வெளியே வந்தான். சுக்ரீவன் தன்னுடைய சிம்மாசனத்தைக் கைப்பற்றிக்கொண்டது அவனுடைய கோபாவேசத்தைப் பன்மடங்கு அதிகரிக்கும்படி செய்தது. சுக்ரீவன் நிகழ்ந்ததை உள்ளபடி விளக்கினான். ஆயினும் அவ்விளக்கத்தை மூத்தவன் ஏற்றுக்கொள்ளவில்லை, சுக்ரீவனுடைய மனைவியைப் பலாத்காரமாகக் கைப்பற்றிக்கொண்டு இளையவனை ராஜ்யத்தினின்று அவன் விரட்டியோட்டினான். இந்த விபத்தை ஒழுங்குபடுத்துவது இராமன் ஒருவனுக்கே சாத்தியமாயிருந்தது.

வாலியினுடைய கொடுங்கோல் ஆட்சியை ஒரு முடிவுக்குக்கொண்டு வருவதாக இராமன் சுக்ரீவனுக்கு உறுதிமொழி கூறினான். அபகரிக்கப்பட்ட மனைவியைமீட்டெடுத்துத் தருவதாகவும் அவன் தெரிவித்தான். அதற்கு மேல் கிஷ்கிந்தையின் ஆட்சியும் சுக்ரீவனுக்கு வந்து சேரும். வாலியினுடைய வல்லமை எத்தகையது என்பது சுக்ரீவனுக்குத்தான் தெரியும். அவனை வெல்லுதற்கேற்ற வல்லமை இராமனிடத்திருக்கிறதா என்னும் ஐயம் அவன் உள்ளத்தில் எழுவ

தாயிற்று. அந்த வானர வீரன் காலையில் நீராடுவதற்காக நான்கு திக்குகளிலுமிருந்த சமுத்திரங்களை நோக்கித் தாவுவான். குன்று ஒன்றை வெறும் கோலிக்கு நிகராகக் கையில் எடுத்து விளையாடுவான். நெற்பயிர்களை வயல்களினின்று உருவி எடுப்பதற்கு நிகராக அடவிகளிலிருந்த அரிய பெரிய மரங்களை அவன் வேரோடு பிடுங்கி எடுப்பான். துந்துபி என்னும் அரக்கன் எருமை வடிவத்தில் இருந்தான். அந்தத் துந்துபிக்கு ஆயிரம் யானை பலம் இருந்தது. அவனோடு போர்புரிய வல்லவன் யாருமே நிலவுலகில் இல்லை. அத்தகைய அரக்கன் வாலியை எதிர்த்து வந்து சண்டைக்கு அறை கூவினான். வாலியும் அவனுடைய எதிர்ப்பை உற்சாகத்துடன் ஏற்றுக்கொண்டான். மற்போரின், துவக்கத்திலேயே எருமை அரக்கன் தக்கதோர் எதிரியின் கையில் அகப்பட்டுக்கொண்டான். அவனுடைய வாலைப் பிடித்து கவண் சுழற்றுவதுபோன்று அந்தப் பருத்த உடலைச் சுழற்றினான். அதிவேகத்துடன் அதைத் தரையில் ஓங்கி அடித்தான். மூக்கினின்று இரத்தம் ததும்பிக்கொண்டு வெளியே வருவதற்கிடையில் அந்த எருமை அரக்கன் வாலியைத் தன் கொம்புகளால் குத்தி மாய்த்துவிட முந்தினான். வாலியோ எருமைக்கடாவின் கொம்புகளை உறுதியாகப் பிடித்தான். பேராற்றலுடன் அதன் தலையைப் பூமியில் திணித்தான். பூசணிக்காய் போன்று அது கசங்கிற்று. துந்துபி ஒழிந்து பட்டுப் போனான். குன்றுக்கு நிகரான அவனுடைய சடலத்தை வாலி தூக்கி வீசினான். வானவெளியில் அது ஓசையிட்டுக் கொண்டு நெடுந்தூரம் போனது. அவ்வேளையில் மதங்க மஹரிஷி வழிபாட்டுக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார். வெட்டவெளியில் சீட்டி அடித்த பாங்கில் சீறிச்சென்ற சவத்தினின்று சில ரத்தத்துளிகள் மஹரிஷியின்

மீது வீழ்ந்தன. அங்ஙனம் தீட்டுப்பட்ட தபோதனர் உடனே சாபம் போட்டார்: "இந்தத் தீட்டுக்கு மூலகாரணம் யாரோ அன்னவன் இந்த ஆஸ்ரமத்துக்குள் நுழையலாகாது. அப்படி நுழைந்தால் அவன் தலைதெறித்துப்போம்." இந்தச் சாபத்தை முன்னிட்டு மதங்க மஹரிஷியின் ஆஸ்ரமத்தின் பக்கம் தலைகாட்டாது வாலி விலகியிருந்தான். ஆதலால் சுக்ரீவனுக்கு அது அடைக்கலம் தரும் பாங்கில் உதவியது. ஓர் ஆச்சா மரத்தைச் சிரமம் ஏதுமின்றி வாலி பெயர்த்தெடுத்து ஒரு குலுக்குக் குலுக்கினால் அதன் இலைகள் அத்தனையும் பறந்தோடிவிடும்.

இராமனும் இலக்ஷ்மணனும் வாலியின் பராக்கிரமத்தைப் பற்றிக் கூர்ந்து கவனித்துக் கேட்டுக் கொண்டிருந்தனர். அவன் ஒரு சாமானியமான வானரவீரன் அல்லன் என்பதும் அவர்களுக்கு வெளியாயிற்று. அங்ஙனம் அவனுடைய வலிவை விரிவாக விளக்கி விட்டு இராமன் அதை எங்ஙனம் ஏற்றுக்கொண்டான் என்பதை மௌனத்தோடும் மரியாதையோடும் சுக்ரீவன் எதிர்பார்த்து நின்றான். துந்துபியின் எலும்புக் குவியல் ஒரு குன்றுக்கு நிகராக அங்குக் கிடந்தது. தன் காலின் கட்டை விரலால் இராமன் அதைச் சுண்டினான். அது வானத்தில் உயரப்பறந்து பிறகு தரையின்மீது இடிமுழக்கத்துடன் வீழ்ந்தது. அச்செயலைச் சுக்ரீவன் பாராட்டினான். ஆயினும் வாலியின் செயலுக்கும் இராமனுடைய செயலுக்கும் இடையில் பெரிய வித்தியாசமிருந்தது. வாலி எடுத்து வீசிய துந்துபியினுடைய சடலம் எடையில் மூன்று மடங்கு அதிகமாயிருந்தது. அதைக் கருத்தில் எடுத்துக்கொண்டால் இராமன் செயல் மட்டமானது என்பது வெளிப்படையாயிற்று. ஆச்சாமரம் ஒன்றை அம்பால் இராமன் துளைப்பானாகில் அது பாராட்டத்தக்க

பெரிய செயல் ஆகும் என்று சுக்ரீவன் எண்ணினன். அவன் கருத்துக்கு இணங்க இராமனும் தன் கைவண்ணத்தைக் காட்டினன். அவன் எய்த அம்பு சீறிக்கொண்டு பாய்ந்து எழு ஆச்சாமரங்களையும் துளைத்துவிட்டு, பூமியைத் தொட்டு வணங்கிவிட்டு இராமன் தோளில் மாட்டியிருந்த அம்பறாத் தூணியில் வந்து ஒடுங்கிற்று. சுக்ரீவன் திகைத்துப்போனன். மண்ணுலகிலோ விண்ணுலகிலோ இதற்கு நிகரான வீரச் செயலைக் காணமுடியாது என்று அவன் வியப்படைந்தான். இராமனை வெல்லுதற்கு எவ்வுலகிலும் யாருமில்லை என்று அவன் முடிவு கட்டினன். ஆதலால் அத்தகைய ராமபிரானுடைய நட்பு தன்னுடைய வாழ்க்கைப் பிரச்னையை நீக்குவது திண்ணம் என அவன் தெளிவடைந்தான்.

3. அடுத்தபடியாக வாலியைத் தாக்குவது எங்ஙனம் என அவர்கள் எண்ணினர். இராமனும், இலக்ஷ்மணனும், சுக்ரீவனும் கிஷ்கிந்தைக்குப் போகவேண்டும்; விரட்டியோட்டப்பட்ட சுக்ரீவன் ஆக்கிரமிப்பாளியாகிய வாலியை அறைகூவிப் போருக்கு இழுக்க வேண்டும். இருவருக்குமிடையில் மற்போர் விரைந்து நிகழ்கையில் இராமன் மறைந்திருந்து வாலியின் உயிரை வாங்கும் அம்பை எய்தல் வேண்டும். இதுவே அம்மூவரும் போட்டிருந்த திட்டமாகும்.

அதன்படியே சுக்ரீவன் கர்ஜித்து அறைகூவினன். அது வாலியின் காதில் வீழ்ந்தது. கோபாவேசத்துடன் கோட்டையினின்று அவன் குதித்தெழும்பிக் கிளம்பினன். உடன் பிறந்தார் இருவருக்குமிடையில் தொடங்கிய போர் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டிருந்தது. இராமன் வாக்குக் கொடுத்திருந்தபடி அவனுடைய உதவியைச் சுக்ரீவன் இப்பக்கமும் அப்பக்கமும் பார்த்தவண்ணமாயிருந்தான். ஆனல் உதவியோ வரவில்லை. அவனுடைய வலிவு குறைந்து

கொண்டு வந்தது. ஏதோ ஒரு போக்கில் வாலியின் பிடியி லிருந்து நழுவிக்கொண்டு தன் உயிரைக் காத்தல் பொருட்டு ரிஷ்யமுகத்தை நோக்கிச் சுக்ரீவன் ஓட்டம் பிடித்தான். சிறிது நேரத்திற்குள் இராமனும் இலக்ஷ்மணனும் அதே ரிஷ்யமுகத்திற்கு வந்துசேர்ந்தார்கள். தாங்கள் போட்டி ருந்த திட்டத்தின் தோல்வியைப்பற்றி அவர்கள் தங்களுக் கிடையில் கலந்து பேசினார்கள். தனக்குத் துரோகம் பண்ணவில்லையெனினும் தன்னை அம்பலத்தில் விட்டுவிட்ட தாகச் சுக்ரீவன் குறைகூறினான். தனக்கு ஏற்பட்டிருந்த நெருக்கடியைக் குறித்து இராமன் விளக்கினான். வடிவத்தி லும், தோற்றத்திலும், செயலிலும் வாலியும் சுக்ரீவனும் ஒரே தரத்தில் திகழ்ந்தனர். மூத்தவன் யார், இளையவன் யார் என்பதைக் கண்டு பிடிக்க இராமனுக்கு இயலவில்லை. வித்தியாசம் தெரியாமையினால் தம்பியையே அவன் தாக்கி விட்டால் அது பெரிய விபத்துமட்டுமன்று, பாதகம் நிறைந்த பாபச் செயலும் ஆகும். நம்பிக்கைத் துரோகத்துக்கு நிக ரான பழிபாவம் வேறு ஏதுமில்லை. ஆதலால் இரண்டாம் தடவை மோதுவது உசிதம் என இராமன் இயம்பினான். அதில் எதிரி தப்பித்துக்கொள்ள முடியாது. இராமனு டைய ஆணைப்படி இலக்ஷ்மணன் சுக்ரீவனுடைய கழுத்தில் பூமாலை ஒன்றை அணிவித்தான். அவனை இன்னான் என்று போரின் மும்முரத்தில் அந்த மாலை விளக்கிக் காட்டும்.

அடுத்தநாள் காலை சரியான நேரத்தில் சுக்ரீவன் கிஷ்கிந்தையைச் சென்றடைந்தான். தனக்கு உதவிபுரிய வந்தவர்களைத் தக்கதோர் இடத்தில் மறைத்து வைத்தான். பிறகு முந்தியநாள் அறைகூவியதைவிட அதிகமான ஆரவாரத்துடன் அவன் கர்ஜித்தான்.

வாலிக்கு அது எரிச்சல் ஊட்டியது. இனி, சகோதரன் என்கின்ற சலுகை ஏதும் காட்டலாகாது என அவன் தீர்மா

னித்தான். தனக்கு இந்திரன் அளித்திருந்த தங்கச் சங்கிலியை இப்பொழுது எடுத்து அணிந்துகொண்டான். கோர சொரூபியாய் வாயிலருகே அவன் விரைந்து சென்றான்.

வாலியின் மனைவியாகிய தாரை சமயோசித புத்தி மிகப்படைத்தவள். அவளும் திடீரென்று கிளம்பிக் கணவனைக் குறுக்கிட்டுத் தடுத்தாள். அவள் விண்ணப்பித்ததாவது: "இறைவா, என்னுடைய வேண்டுகோளுக்குச் சற்று செவி சாயுங்கள். எதிர்த்தவன் மீது மரணத்தை வழங்கும் நிலைமையில் நேற்று இருந்தீர்கள். எப்படியோ உயிர் தப்பியோடியவன் இன்று புதிய வீரத்துடன் கர்ஜிக்கிறான். வலிவு மிக வாய்ந்த தக்கதொரு வீரனுடைய உதவியைப் பெற்றிருக்கிறான் என்பதை அவனுடைய குரல் குறித்துக் காட்டுகிறது. நேற்று இரவு நம் செல்வன் அங்கதன் எனக்கு ஒரு செய்தியைத் தெரிவித்தான். அயோத்யாபுரி அரசகுமாரர்களாகிய இராமனும் இலக்ஷ்மணனும் இப்பிரதேசத்திற்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் அசாதாரணமான ஆற்றல் வாய்க்கப்பெற்றவர்கள். அன்னவர்களின் உதவியைச் சுக்ரீவன் பெற்றிருக்கிறான் போன்று தோன்றுகிறது. என்னதான் பிழை செய்திருந்தாலும் அவன் தங்களுடைய தம்பிதானே! நான் தங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். தம்பியை அரண்மனைக்குள் அழைத்து அவனோடு சமாதானம் செய்து கொள்ளுங்கள்."

4. வாலியின் சினந்த முகத்தினின்று நெருப்புப் பொறி பறந்து கொண்டிருந்தது. அவன் கர்ஜித்ததாவது: "அறைகூவுகிறவனிடம் நான் அடைக்கலம் புகுந்து கெஞ்சுவதா? போருக்கு அழைக்கிற பகைவனிடம் வீரன் ஒருவன் தஞ்சம் புகுவானா? இராமன் தர்மவான். நம் குடும்ப வியவஹாரங்களில் அவன் தலையிடமாட்டான். இந்தச் சுக்ரீவனோ

எனக்குத் தொல்லைக்கு மேல் தொல்லையை உண்டுபண்ணு பவன். ஆயுள் காலம் முழுவதும் மறக்க முடியாத பாடம் ஒன்றைத் துணிச்சல் வாய்ந்த இந்தப் பையனுக்குப் புகட்டி வருகிறேன்.''

கோபித்துக்கொண்ட புலி போன்று வாலி கோட்டைக்கு வெளியே வந்தான். போர் மூண்டது. சகோதரர்கள் சாமர்த்தியசாலிகளாகச் சமர்புரிந்தனர். சுக்ரீவன் வாட்ட முறும் தறுவாயில் பயங்கரமான அம்பு ஒன்று வாலியின் நெஞ்சைப் பிளந்தது. வெட்டுண்ட மரம் போன்று அவன் வீழ்ந்தான்.

வாலி: உயிர் துறந்து நான் கண் மூடுமுன் உயிரை வாங்கும் இந்த அம்பை என்மீது எய்த வீரனைக் காண விரும்புகிறேன்.

இராமனும், இலக்ஷ்மணனும் கிருபையே வடிவெடுத்த வர்களாக அவனுக்குக் காட்சி கொடுத்தார்கள்.

வாலி: நான் உனக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை. மற்றொருவனோடு நான் மற்போர் புரிந்து கொண்டிருக்கையில் நீ ஏன் என்னை அடித்தாய்?

இராமன்: உன்னால் ஆதரிப்பதற்குரிய தம்பிக்கு நீ தீங்கு செய்துள்ளாய்.

வாலி: இராமன் எப்பொழுதுமே மக்களுக்கு நீதி யுடனும் அன்புடனும் நடந்து கொள்கிறான் என்பது வதந்தி. ஆனால் உன்னுடைய தரத்தை நான் இப்பொழுது காண் கிறேன். நீ கொலைபாதகன்.

இராமன்: அதர்மர்கள் என்னுடைய அம்பிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது.

வாலி : உன்னுடைய நாட்டுக்குள்ளே நான் அத்துமீறி வந்தது கிடையாது. உனக்கு எந்த விதமான அவமானத்தையும் உண்டுபண்ணவில்லை. ஆயினும் என் உயிருக்கு நீ உலை வைத்துள்ளாய்

இராமன் : என் நாட்டுக்குரிய அலுவல்களைக் கவனிப்பதோடு என்னுடைய பொறுப்பு நின்று விடுவதில்லை. எங்கெல்லாம் நான் தீமையைக் காண்கின்றேனோ ஆங்கெல்லாம் அதை ஒழுங்குபடுத்துவது என்னுடைய கடமை. நீ தீ நெறிக்கும், காமத்திற்கும் அடிமைப்பட்டவன்.

வாலி : நாங்கள் குரங்கினத்தவர்கள் தானே! எங்களுக்கு நெறி ஏதும் வகுத்து வைக்கப்படவில்லை.

இராமன் : முன்னெச்சரிக்கையில்லாது விலங்குகளை மனிதன் வேட்டையாடுகிறான். ஆனால் நீயோ அந்தக் கோட்பாட்டில் அடங்கியவனல்லன். நீ மேலாம் கல்வி கற்றவன்.

வாலி : நீ பிறர் நாட்டின்மீது பேராசை பூண்டவன். ஆதலால் தகுதியற்ற மனிதன் ஒருவனுக்குத் துணைபுரிகிறேன் என்று பாசாங்கு செய்துகொண்டு கீழான செயலில் ஈடுபட்டுள்ளாய்.

தற்பாதுகாப்பில் இராமன் எதையும் பேசவில்லை. அவனுடைய பாங்கைத் தம்பி எடுத்து இயம்புவானாயினன்.

இலக்ஷ்மணன் : நீ சொல்லுவது சரியன்று. என் தமையன் அகண்ட ராஜ்யத்தைத் தியாகம் செய்துவிட்டுத் தவத்தில் ஈடுபட்டிருக்கின்றான். அங்ஙனம் அவன் செய்து வருவது தந்தையைச் சத்திய சங்கல்பன் ஆக்கும் பொருட்டேயாம். தந்தை கொடுத்த வாக்கினின்று அவர் பிறழ்ந்து போகவில்லை என்று நிரூபிப்பதற்கே இந்தக் கடினமான விரதத்தை அவன் ஏற்றிருக்கின்றான்.

வாலி: ராமா, நீ பூண்டிருப்பது தவவேடம்; ஆனால் மற்றவர்களுக்குக் கொடூரமாகத் தீங்கிழைக்கின்றாய். பிறரை வஞ்சிப்பதற்கான வேஷத்தை நீ அணிந்திருக்கிறாய்.

இராமன்: கொடியவர்களைத் தண்டிப்பதைத் தவத்திற்கு நிகராக நான் கருதுகிறேன். ஆகையால் தண்டனை விதிப்பதும் தவம்புரிவதும் ஆகிய இரண்டு செயல்களையும் ஒன்றுபடுத்தியே நான் புரிந்து வருகிறேன்.

வாலி: காணமல் போன சீதையை மீட்டெடுப்பதற்குத் தானே நீ சுக்ரீவனோடு நட்புப் பூண்டுள்ளாய்?

இராமன்: ஆம். அதுதான் விஷயம். நாங்கள் யாண்டும் நண்பர்களாயிருக்க உறுதிப்பாடு படைத்திருக்கிறோம்.

வாலி: மனைவியை இழந்ததோடு நீ விவேகத்தையும் இழந்திருக்கின்றாய். வேந்தன் ஒருவன் மற்றொரு வேந்தனுடைய உதவியை நாடுவது முறை. ஆனால் நீயோ காப்பார் அற்ற அகதி ஒருவனிடம் உதவியை நாடி ஓடியுள்ளாய்.

இராமன்: உடனுக்குடனே பேருதவி பண்ணக்கூடிய பெரிய நிலையில் ஒருவன் இருந்தபோதிலும் அன்னவன் நெறி பிறழ்ந்தவனாயிருப்பானாகில் அவனுடைய உதவியை நான் நாடலாகாது.

வாலி: உன்னுடைய மனைவியை அபகரித்துக்கொண்டு போனவன் யார் என்பது உனக்குத் தெரியுமா?

இராமன்: இலங்கை வேந்தனாகிய இராவணன் என் மனைவியை ஆகாய மார்க்கத்தில் தூக்கிக்கொண்டு போய் விட்டான் என்பதைக் காலஞ்சென்ற கழுகு வேந்தன் ஜடாயு என்பவன் எனக்குத் தெரிவித்தான்.

வாலி: நீ அசட்டுத்தனமாக நடந்து கொண்டாய். அந்த இராவணன் என் கையில் பொம்மை. நான் ஆணை

யிட்டால் போதும், அவன் முழந்தாளிட்டுக் கொண்டு வந்து சீதையை ஒப்படைப்பான். என்னுடைய உதவியைக் கொண்டு உன் இருப்பிடத்தில் இருந்து கொண்டு உன் மனைவியை நீ மீண்டும் பெற்றிருக்கலாம்.

இராமன்: உன்னிடம் நான் ஒன்று கேட்கிறேன். ஒருவன் ஒளிந்திருந்து திருடுகிறான். மற்றொருவன் வெட்டவெளியாகக் கொள்ளையடிக்கிறான். இவ்விருவருள் பெரிய குற்றவாளி யார்?

வாலி: கொள்ளையடிப்பவனே பெரும் குற்றவாளி என்பதற்கு ஐயமில்லை.

இராமன்: நீயும் இராவணனும் பெண்பாலரை அபகரிப்பதில் நிபுணர்கள். அவன் திருடன். நீ கொள்ளைக்காரன். பிறர் மனைவியை மறைந்திருந்து அபகரிக்கிற இரண்டாந்தரமான தீமைக்கே மரணதண்டனை விதிப்பது உறுதியாயிற்று. பிறர் மனைவியைப் பகிரங்கமாகச் சூறையாடுபவனுக்கு மரணதண்டனை விதிப்பதல்லாது வேறு என் செய்வது? உலக நலத்தின் பொருட்டு உங்கள் இருவரையும் ஒழித்துத்தள்ள நான் தீர்மானித்துள்ளேன். பிறகு உன்னிடம் உதவி கேட்பது எப்படி?

வாலி: ஆனால் நீ எனக்கு முன் எச்சரிக்கை செய்யவில்லை.

இராமன்: தெய்வாதீனமாக எல்லார்க்கும் முன் எச்சரிக்கை வருகிறது. ஆனால் அக்கிரமசாலியும் தற்பெருமை பூண்டிருப்பவனும் அந்த எச்சரிக்கையைப் பொருள் படுத்துவதில்லை.

வாலி கண்மூடிச் சிறிது நேரம் சிந்தனையில் மூழ்கியிருக்கிறான். பிறகு அவன் தனக்குத்தானே சொல்லிக்கொள்

கிறான்: "ஆம்,என் அன்புக்குரிய தாரை எனக்கு எச்சரிக்கை செய்தாள். அவள் போதனையை நான் புறக்கணித்தேன்."

இப்பொழுது வாலி மீண்டும் கண் திறக்கிறான். இராமன் மீது குற்றம்சாட்டுகிறான்: "ஆனால் நீ ஏன் ஒரு பயங்கொள்ளி போன்று மறைந்திருந்து நான் மற்றொரு மனிதனோடு போரா டிக்கொண்டிருக்கையில் என் மீது அம்பு செலுத்தினாய்."

இராமன்: அது கோழைத்தனமன்று. நான் கையாண்டது சரியான போர் முறை. தேவேந்திரன் உனக்கு ஒரு வரம் கொடுத்திருக்கிறான். நீ அணிந்திருக்கும் தங்கச் சங்கிலி அந்த வரத்தின் சின்னமாகும். எதிரியாயிருந்து போரில் உன்னை எதிர்ப்பவனுடைய வல்லமையில் செம்பாதி உனக்கு வந்து சேர்வது அந்த வரமாகும். ஆதலால் யாண்டும் எதிரிகளை வருக்கும் வல்லமையில் நீ மிக்கவன் ஆகின்றாய். இந்தத் திறமையின் விளைவாக நீ தற்பெருமையே வடிவெடுத்தவனாயிருக்கின்றாய். யாருக்கும் நீ அஞ்சுபவனில்லை. இந்த வரத்தை நீ முறை தவறிக் கையாண்டிருக்கின்றாய். ஆகையால் நீ சமுதாயத்தின் பகைவன். உன்னிடத்துள்ள ஆபத்து நிறைந்த இந்த வல்லமையை அழித்துத் தள்ளுவது என் கடமை. ஆகவே நான் செய்ய வேண்டிய செயலை ஒழுங்காகச் செய்துள்ளேன்.

வாலி மயங்கினான். சிறிதுநேரத்துக்குப் பிறகு பிரக்ஞை பெறுகிறான். பிறகு தனக்குத்தானே சொல்லிக்கொள்கிறான்: "ஆ! எனக்கு முடிவு காலம் வந்துவிட்டது. தற்பெருமை என்னும் திரை என் உள்ளத்தினின்று அகன்று போயிற்று. நான் செய்துள்ள தீமைகளை இப்பொழுது உணர்கிறேன். அதற்குக் கழுவாய் தேடிக்கொள்ளச் சிறிது அவகாசம் இருக்கிறது. தம்பி சுக்ரீவா, அருகில் வா. தயவு செய்து என்னை

மன்னித்துவிடு. உனக்கு நான் இழைத்துள்ள குற்றம் மிகப் பெரியது."

சுக்ரீவன்: அன்புக்குரிய அண்ணலே, அன்புக்கு அறிகுறியாகத் தாம் செய்துள்ள குற்றங்களையெல்லாம் நான் சகித்திருக்கவேண்டும். அதற்கு மாறாக உடன் பிறந்தவனை ஒழித்தவன் என்னும் அபகீர்த்தியை நான் தேடியுள்ளேன். தம்மிடம் நான் மன்னிப்புக் கேட்கிறேன். உமது ஆசீர்வாதத்துடன் நான் கிஷ்கிந்தையை விட்டு வெளியேறுவேன். தாம் அங்கதனுக்கு முடிசூட்டிவிட்டு முக்தி பெறுவீராக.

வாலி: இப்பொழுதாவது நாம் அன்பில் இணைக்கப் பட்டிருப்போமாக. ராஜ்யத்தை நீ ஏற்றுக்கொள். அங்கதனை இளவரசனுக்குவாயாக. முக்கியமான விஷயங்களில் தாரையின் ஆலோசனையை ஏற்றுக்கொள்வாயாக. அவள் எப்பொழுதுமே என்னை நல்வழியில் நடாத்தியிருக்கிறாள்.

உடல் திட்பம் கீழிறங்கி வந்து கொண்டிருந்ததனால் வாலி சிறிது நேரம் கண்மூடி மௌனமுற்றிருந்தான். பிறகு இராமனை உற்று நோக்கி அவன் இயம்பியதாவது: "ஓ ராமா, உன்னுடைய பாணத்தின் மகிமையை இப்பொழுது நான் அறிய வருகிறேன். அது என்னுடைய வினைகளின் தளைகளையெல்லாம் தகர்த்துவிட்டது."

சுக்ரீவன்: அண்ணா, என்னுடைய அடாத செயலை முன்னிட்டு நான் பட்டினி கிடந்து சாவேன்.

வாலி: இளையோய், அதுவன்று விஷயம். ராம காரியத்தை முன்னிட்டு அரிய பெரிய செயல்களில் ஈடுபடப் போகின்றாய். உன்னையும், நம் ராஜ்யத்தையும், நம் குடிமக்களையும், ஏனைய அனைத்தையும் சீதாபிராட்டியாரை விடுவிப்பதற்காகவென்றே ஒப்படைப்பாயாக. என் உடல் சடல

மான பிறகு என் கழுத்திலிருக்கும் தங்கச் சங்கிலி அதன் வல்லமையை இழந்துவிடும். ஆதலால் என் பிராணன் போவதற்கு முன்பே அதை எடுத்து உன் கழுத்தில் அணிந்து கொள்வாயாக. சுயநலத்துக்காக அதை நான் எடுத்துப் பயன்படுத்தினேன். நீயோ ராம சேவைக்காகவென்றே அதை நன்கு பயன்படுத்துவாயாக.

"ராமா, உன்னுடைய கிருபையினால் நான் முக்தனுயுள்ளேன். நிலையற்ற நிலவுலக ராஜ்பத்தை நீ என்னிடமிருந்து எடுத்து என் தம்பிக்குக் கொடுத்துள்ளாய். அங்ஙனமே உன்னுடைய ராஜ்யத்தை உன் தம்பிக்குக் கொடுத்துள்ளாய். தம்பிமார்களுக்கு நீ காட்டும் வாஞ்சை அலாதியானது. அத்தகைய தகைமையை இதுகாறும் நான் அறிந்திலேன். இன்னும் எங்குச் சென்று எந்தெந்தத் தம்பிக்கெல்லாம் என்ன என்ன நலன் செய்யப் போகின்ருயோ அதை நீதான் அறிவாய். ராமா, உன்னுடைய அருளால் அழிவற்ற உன்னுடைய பாரமார்த்திகப்பேறதனை இதோ அடைகிறேன்." 'ராம், ராம், ராம்' என்று இயம்பிக்கொண்டு வாலி முக்தியடைகிருன்.

5 இராமன், தானே சுக்ரீவனைக் கிஷ்கிந்தாபுரிக்கு அரசனுக முடிசூட்ட வேண்டும் என்னும் கருத்து ஒருமித்து அவனுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனல் இராமனே எந்தக் கிராமத்திற்குள்ளோ, ஊருக்குள்ளோ, பட்டணத்திற்குள்ளோ பிரவேசிப்பதில்லை என்னும் விரதம் பூண்டுள்ளான். ஆதலால் இராமனுல் அனுமதிக்கப்பட்டு சுக்ரீவனுக்கும் ருமைக்கும் கிஷ்கிந்தாபுரிக்கு ராஜாவாகவும் ராணியாகவும் பேர் ஆடம்பரத்துடன் பட்டாபிஷேகம் நடாத்தப்பெற்றது. அதே வேளையில் அங்கதன் யுவராஜாவாக அமர்த்தப்பட்டான்.

மாரிக்காலம் இப்பொழுதுதான் தொடங்குவது ஆயிற்று. ஆதலால் இராமனும் இலக்ஷ்மணனும் நான்குமாத காலம் குகை வாசம் செய்ய வேண்டியதாயிற்று. கிஷ்கிந்தைக் கோட்டைக்குள் குதூகலத்துடன் புதிய வேந்தனாகிய சுக்ரீவனுடைய ஆட்சி நிகழ்ந்துகொண்டிருக்கலாம். மழைக்காலம் முடிவு பெற்றனபிறகு வானரக் கூட்டங்கள் சீதையைத் தேடிக்கொண்டு நாலாப்பக்கங்களிலும் அனுப்பப்படுவார்கள். இதுவே அவர்கள் தங்களுக்குள்ளே அமைத்துக் கொண்ட ஏற்பாடாகும்.

பேர் இரைச்சலுடன் காற்று பயங்கரமாக வீசிற்று. குன்றுகளுக்கு நிகரான கார்மேகங்கள் ஒன்றையொன்று துரத்திக்கொண்டு தென் மேற்குத் திசையினின்று வடகிழக்குத் திசையை நோக்கி உருண்டோடி வந்து கொண்டிருந்தன. ஓய்வில்லாது மழை கொட்டித் தள்ளியது. மரங்கள் தங்கள் கிளைகளைச் சாமரம் வீசுவதுபோன்று மாரிக்காலத்தைப் பாராட்டி அசைத்துக்கொண்டிருந்தன. எங்குத் திரும்பிப் பார்த்தாலும் நீர்ப்பரப்பே காட்சி கொடுத்தது. ஆங்காங்கு ஓடைகளும் பாய்ந்து கொண்டிருந்தன. இத்தகைய சூழ்நிலையில் இராமனுடைய மனம் சீதை எத்தகைய பரிதாபகரமான நிலையில் தவித்துக்கொண்டிருக்கிறாளோ என்று எண்ணித் துடிதுடித்தது. தம்பி இலக்ஷ்மணன் தமையனுடைய மனநிலையை அறிந்துகொண்டு அவனுக்கு ஆறுதல் அளித்தான். நான்கு மாதகாலம் கிஷ்கிந்தைக்குள் நான்கு வாரங்கள் போன்று விரைவில் கடந்து போயிற்று. ஆனால் குகைக்குள்ளோ தமையனுக்கும் தம்பிக்கும் இந்த நான்கு மாதகாலம் இருள் சூழ்ந்த நான்கு யுகங்கள்போன்று கடப்பதற்கு அரியதாகத் தென்பட்டது. இதுவே உலகத்தின் போக்கு ஆகும். இவ்வுலகில் இன்பமும் துன்பமும்

ஒன்றைத் தொடர்ந்து ஒன்று வந்துகொண்டேயிருக்கின்றன. இன்பத்தில் திளைத்திருப்பவர்களுக்குக் காலம் பறந்தோடுவது கருத்தில் படுவதில்லை. ஆனால் துன்பத்தில் மூழ்கியிருப்பவர்களுக்கோ காலகதி தலைச்சுமை போன்று துன்புறுத்திக்கொண்டிருக்கிறது. ஆயினும் உலகப்பற்று உடையவர்கள் துயரத்தை ஒதுக்கவும் இன்பத்தையே நாடவும் செய்கின்றனர்.

6. மழைக் காலமும் கடைசியாக முடிவுற்றது. வானம் தெளிவடைந்தது. காற்று குளிர்ந்ததாகவும் தூயதாகவும் இருந்தது. புதிய வாழ்வுக்கு அறிகுறியாகப் பறவைகள் கூவி ஓலமிட்டன. கிஷ்கிந்தை வாசிகளுக்கிடையில் ஆஞ்சநேயன் என்றும், ஹனுமான் என்றும், மாருதி என்றும் அழைக்கப்பெறுகிற பிரமுகன் ஒருவனே இவ்வுலக சம்பந்தமான இன்ப துன்பங்களையெல்லாம் முற்றிலும் தாண்டியவனாகத் திகழ்ந்து வந்தான். அவன் நுண்ணறிவாளன்; சீலத்தின் உச்சநிலையை எட்டியவன். அன்னவன் தன்னுடைய வேந்தனாகிய சுக்ரீவனை அணுகி இராமனுக்கு அவன் செய்யக்கிடக்கும் கடமையை ஞாபகமூட்டினான்.

"பிதுரார்ஜிதமாக உனக்கமைந்துள்ள ராஜ்யத்தை மீட்டெடுத்து உனக்கு நல்கியவன் இராமன். அந்த ராஜ்ய போகத்தில் நீ இப்பொழுது மூழ்கியிருக்கின்றாய். இராமனுக்கு நீ கொடுத்துள்ள வாக்குத் தத்தத்தை மறந்து விட்டாய்போலும். நீ இப்பொழுது அனுபவித்து வருகிற சுக போகங்களையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு உன்னை உய்வித்தவனுக்கு ஊழியம் செய்ய நீ கடமைப்பட்டிருக்கிறாய். உன்னுடைய ராஜ்ய கௌரவத்தைக் காப்பாற்றுவதற்கு அது ஒன்றே உற்ற உபாயமாகிறது.

"குறித்த நாள் வருவதற்கு முன்பே கொடுத்த வாக்கை நிறைவேற்றுவது தலைத்தரமான செயலாகும். பிந்திப்போய் அதை நிறைவேற்றுவது கொடுத்த வாக்கினின்று பிறழு தற்கு நிகராகின்றது. நண்பன் வந்து அதை ஞாபகமூட்டும் வரையில் காத்திருப்பது துரோகத்துக்கு நிகரானது."

குடிவெறியில் மூழ்கியிருந்த சுக்ரீவன் தக்க தருணத் தில் தலையிட்டுத் தன் கடமையை ஞாபகமூட்டியதற்காக ஆஞ்சனேயனுக்கு நன்றி செலுத்தினன். நீலனை வர வழைத்து வானர சேனைகளையெல்லாம் செயலுக்குத் திரட்டும்படி அவன் ஆணையிட்டான். வந்துசேரத் தவறிப் போனவர்கள் தக்க பாங்கில் தண்டிக்கப்படுவார்கள். நீலனுக்கு இங்ஙனம் ஆணையிட்டுவிட்டுச் சுக்ரீவன் மீண்டும் அந்தப்புரத்துக்குள் சென்ருன்.

சுக்ரீவனுடைய உற்சாகமின்மையைக் குறித்துக் குகை யில் வசித்து வந்த இராமனுக்குப் பதைபதைப்பு உண்டா யிற்று. அவன் எண்ணியதாவது: 'உலகெங்கும் வாழ்வு இனிது நிறைவேறிக் கொண்டிருக்கிறது. எங்கேயோ சீதை தவித்துக்கொண்டிருக்கிருன். ஆதரவற்றவனுக நான் ஈண்டு இருக்கிறேன். நன்றிகெட்ட வானர வேந்தன் குடியிலும் காமவெறியிலும் மூழ்கியிருக்கிருன்.'

இளையவனிடம் அவன் இங்ஙனம் இயம்பினன்: "லக்ஷ்மணு, கிஷ்கிந்தாபுரிக்குள் விரைந்து சென்று அந்த அறிவுகெட்டவனுக்கு எச்சரிக்கை பண்ணு. உடன்படிக்கை யினின்று அவன் வழுவுவானுகில் வாலிக்கு வாய்த்த கதி அவனுக்கும் வாய்க்குமென்று ஞாபகப்படுத்து."

புறப்பட்டுப் போன இலஷ்மணனை இராமன் திரும்ப அழைத்து எச்சரிக்கை பண்ணினன். "இளையோய், பகுத்

தறிவைப் பயன்படுத்து. அம்மனிதனைப் புண்படுத்தாதே. எண்ணிப் பார்க்குமிடத்துச் சார்ந்திருப்பதற்கு அவனைத் தவிர வேறு நண்பன் யாரும் நமக்குக் கிடையாது."

இங்ஙனம் அமைதியூட்டப் பெற்றிருந்தும் வில்லாளி யாகிய இலக்ஷ்மணன் கிஷ்கிந்தாபுரியின் வாயிலுக்குள் கொழுந்து விட்டெரியும் நெருப்புக்கு நிகாாக நுழைந்தான். வாயில்காப்பாளர்கள் அன்னவனைப் பார்த்ததும் மருண்டு போயினர். ஓலமிட்டுக்கொண்டு அவர்கள் நாலாபக்கமும் சிதறி ஓடினர். நல்ல வேளையாக அங்கதன் சீறி வந்த செம்மலைச் சந்தித்தான். அதன் விளைவாக நிலைமை சிறிது சாந்தமடைந்தது. இந்த ராஜகுமாரனுடைய நிலைமை பரிதாபகரமானது என்னும் எண்ணம் இலக்ஷ்மணனுடைய கோபாவேசத்தைச் சிறிது சாந்தப்படுத்தியது. 'அன்புக் குரிய சிறுவா, துயரத்தில் மூழ்கி இருக்கும் என் சகோதர னின் பிரதிநிதியாக இங்கு வந்திருக்கும் நான் உன் சிற்றப் பாவாகிய அரசனைப் பேட்டி காண விரும்புகிறேன் என்று அவனிடம் போய்த் தெரிவிப்பாயாக.' இதுவே இந்த ராஜகுமாரன் மூலம் இலக்ஷ்மணன் சுக்ரீவனுக்குச் சொல்லி அனுப்பிய செய்தியாகும்.

அங்கதன் தன் சிற்றப்பாவை அணுகி விஷயத்தை எடுத்து விளக்கினன். ஆனல் சுக்ரீவனே குடிவெறியில் மூழ்கிக் கிடந்தான். கண் திறந்து பார்க்கவோ கொண்டு வந்த செய்தியைக் காதுகொடுத்துக் கேட்கவோ அவனுக்கு இயலவில்லை. பெரும் சிரமம் எடுத்துக்கொண்டு மந்திரி மார்கள் அவனை எழுப்பிச் சூழ்நிலையை அறிந்துகொள்ளும் படி தூண்டினர்கள்.

"இராமனுக்கு நான் ஒரு தீங்கும் செய்யவில்லை. அவன் என்மீது கோபித்துக்கொள்ளும்படி யாரோ அவனுக்

குத் துர்ப்புத்தி புகட்டியிருக்கிறார்கள்" என்று சுக்ரீவன் ஏதோ ஒருவாறு தயங்கித் தயங்கிப் பிதற்றினான்.

நிலைமையை உள்ளபடி ஆஞ்சனேயன் தெளிவுபடுத்தினான். "கொடுத்த வாக்கினின்று பிசகிப் போனதற்கு நிகராக நாம் இப்பொழுதே கால தாமதம் மிகச் செய்துள்ளோம். சீதை காணமற்போனதைக் குறித்து இராமன் பெரும் துயரத்தில் மூழ்கியிருக்கிறான். ஆதலால் நாம் கொண்டாட்டம் பூணுதற்கு இதுவன்று காலம். மேற்கொண்டு காலதாமதம் செய்தால் அது கொடுத்திருந்த வாக்குத் தத்தத்தினின்று அடியோடு பிசகியதாகும். இராமன் கோபித்துக்கொள்வானாகில் நாம் இதுகாறும் அடைந்துள்ள ஊதியங்களையெல்லாம் இழக்கும்படி நேரிடும்."

சுகபோகத்தில் மூழ்கியதன் விளைவாகத் தான் செய்துள்ள பிழைகளுக்கு நிவர்த்தி செய்துவைக்க சுக்ரீவன் தீர்மானித்தான்.

இதற்கிடையில் இலக்ஷ்மணன் அரண்மனையை நோக்கி வந்துகொண்டிருந்தான். வருவதற்கிடையில் அந்த நகரத்தின் நாகரிகத்தின்மீது அவன் சிறிது கவனத்தைச் செலுத்தினான். வீதிகளெல்லாம் மிக அழகுள்ளவைகளாக அமைக்கப்பெற்றிருந்தன. கட்டடங்களெல்லாம் மிகமிகப் பெரியவைகளாக இருந்தன. பூந்தோட்டங்கள் சிறந்த பாங்கில் அமைக்கப் பெற்றிருந்தன. கடைகளில் மிக விலை உயர்ந்த பொருள்கள் ஏராளமாக வைக்கப்பட்டிருந்தன. உடைதரித்திருந்ததில் மக்களின் பண்பாடு நன்கு வெளியாயிற்று. மக்கள் எல்லாரிடத்தும் கவர்ச்சிகரமான நடை உடைபாவனைகள் அமைந்திருந்தன. எங்குத் திரும்பி எதைப் பார்த்தாலும் அதனிடத்து ஒழுங்குப்பாடே மிளிர்ந்துகொண்டிருந்தது.

இதினின்று உண்மையொன்று வெளியாகிறது. கிஷ்கிந்தாவாசிகள் வானரர்கள் என அழைக்கப்பட்டது உடல் அமைப்பை முன்னிட்டன்று, கவிதைக்கற்பனையின் பொருட்டேயாம். இந்த வரலாற்றை வாசிக்கிற நம்மவர்களும் இதே கவிதைக் கற்பனையை ரசித்து வருவோமாகில் அது பாராட்டத் தக்கதாகும்.

இலக்ஷ்மணன் தன்னுடைய வில் நாணில் ஓசையைக் கிளப்பினன். அதைக்கேட்டதும் கிஷ்கிந்தை நகரம் முழுவதும் அஞ்சி நடுநடுங்கியது. அந்த ஓசையின் உட்கருத்து யாது என்பதை யாரும் எடுத்து விளக்காமலேயே சுக்ரீவன் அறிந்துகொண்டான். அவனுக்கும் சிறிது அச்சம் உண்டாயிற்று. இன்னும் குடிவெறி தெளியவில்லை எனினும் சுக்ரீவன் சமயோசிதப் புத்தியுடன் நடந்துகொண்டான். தாரையை முதலில் அனுப்பிச் சீற்றம் படைத்திருந்த இலக்ஷ்மணனைச் சமாதானப்படுத்தும்படி தூண்டினன். அதற்கிடையில் தன்னிடத்திருந்த குடிவெறியையும் சிறிது ஆற்றிக்கொண்டு இலக்ஷ்மணன் முன்னிலைக்கு வருவதற்குத் தகுதியுடையவனகத் தன்னை ஆயத்தப்படுத்தினன்.

இப்பொழுது தாரை சுக்ரீவனுடைய இரண்டாவது பட்ட மகிஷி ஸ்தானத்தைப் பெற்றிருந்தாள். இத்தகைய பழக்கம் சில சமுதாயங்களில் உண்டு. ஒரு சகோதரன் மடிந்துபோனல் அவனுடைய விதவை அடுத்த சகோதரனுக்கு மனைவியாவதற்கு அச்சமுதாயப் பழக்க வழக்கம் இடம் தருகிறது. அச்செயலைத்தான் இந்த மாதும் கடைப்பிடித்திருந்தாள். அப்படி நடந்துகொள்ளுதலில் கீழ்மையொன்றுமில்லை என்பது அன்னவர்களின் கோட்பாடு.

தாரையும் சிறிது மதுபான வெறிக்கு உட்பட்டிருந்தாள். உற்சாகம் தருவதற்கு ஏற்றவளவு மிதக் குடியில்

ஈடுபட்டிருந்தது அவளுடைய போக்கு. அன்னவள் இலக்ஷ்மணனை அணுகி அரண்மனையில் அமைந்திருந்த சூழ்நிலையை மிகப் புத்திசாலித் தனமாக எடுத்து விளக்கினாள். "சுக்ரீவனுக்கு நீயும் உன் தமையனும் இந்த ராஜ்யத்தை எடுத்து வழங்கியிருக்கிறீர்கள். அந்த ராஜபோகத்தை அவன் சிறிது வரம்புகடந்து அனுபவித்துக் கொண்டிருக்கிறான். காமத்துக்கு வசப்பட்டபொழுது விஸ்வாமித்திர மஹரிஷியும் கூட சுகபோகத்தில் சிறிது அளவுக்கடந்தே மூழ்கியிருந்தார். நிலைமை அப்படியிருக்க எங்களைப் போன்றவர்களைக் குறித்து மிகக் கண்டிப்பாயிருக்க வேண்டாம். தயவுகூர்ந்து சுக்ரீவனை மன்னித்து விடுவாயாக. போகத்தில் மூழ்கியிருப்பதற்கிடையில் இராமனுக்கு அவன் செய்யவேண்டிய கடமையை அவன் மறந்துவிடவில்லை. வானர சேனைகளைத் திரட்டி ஆயத்தப்படுத்தும்படி தக்க தருணத்தில் அவன் உத்தரவு இட்டிருக்கிறான். இன்னும் இரண்டொரு நாட்களில் சேனைகள் யாவும் இங்கு வந்து சேர்வது திண்ணம். ஆகவே மகிழ்வுடன் அரண்மனைக்குள் வந்து சுக்ரீவனைக் காண்பாயாக."

சுக்ரீவன் எழுந்துநின்று பணிவுடனும் பண்புடனும் இலக்ஷ்மணனை வரவேற்றான். அவன் இயம்பியதாவது: "நான் பெற்றிருக்கிற பேறு முழுதும் இராமனுடைய கருணையினால் எனக்கு வாய்த்துள்ளது. ஆதலால் நன்றியின்மை என்னும் குறையோ, உதாசீனம் என்னும் குறையோ என்னை வந்து சாராது. சிறிது காலதாமதம் ஆகிவிட்டது. அதை முன்னிட்டு என்னை மன்னித்தருள்வாயாக."

இந்த விளக்கத்தைக் கேட்ட இலக்ஷ்மணன் பரம திருப்தியடைந்தான். அவன் சுக்ரீவனை இராமனிடம் அழைத்துச் சென்றான். அப்படி அவர்கள் போய்க்கொண்

டிருப்பதற்கிடையில் வானர சேனைகளும் கரடி சேனைகளும் பெருவாரியாக நாலா பக்கங்களிலிருந்தும் திரண்டு வந்து கொண்டிருந்தன. கிஷ்கிந்தை மன்னன் இராமனைச் சந்தித்து வீழ்ந்து நமஸ்கரித்தான். தானும் தன்னுடைய சேனைகள் யாவும் ராமசேவைக்கு அர்ப்பணிக்கப்பட்டதாக அவன் தெரிவித்துக்கொண்டான். பின்பு இராமனே அடுத்து நிகழ வேண்டிய காரியங்களனைத்தையும் சுக்ரீவனுடைய பொறுப் பிலேயே ஒப்படைக்கலாயினன். தனக்குப் புதிதாக வாய்த்த நண்பனுடைய திறமையிலும், புத்திக் கூர்மையிலும், செயல் திட்டத்திலும் இராமனுக்குப் பூரண நம்பிக்கை இருந்தது.

7. சுக்ரீவனே தன்மீது சுமத்தப்பட்ட பொறுப்பு மிகப் பெரிதாய்விட்டது என உணர்ந்தான். அவன் தன்னுடைய மந்திரிமார்களுடனும் சேனைத் தலைவர்களுடனும் செயல் திட்டத்தைப் பற்றிக் கலந்து பேசினன். பொறுக்கி எடுத்த போர்வீரர்களைக் கொண்டு நான்கு படைகள் உருவாக்கப் பட்டன. அந்தந்தப் படைக்கேற்ற தலைவர்களும் உப தலைவர்களும் நியமிக்கப்பட்டனர். நான்கு திக்குகளில் இந்த நான்கு பட்டாளங்கள் அனுப்பப்பட்டன. ஒரு மாதத் துக்குள் கண்ணும் கருத்துமாகச் சீதையைத் தேடிப்பார்த் துச் செய்தி வந்து சொல்லும்படி அப்படைகளுக்கு ஆணை பிறந்தது. வெற்றியுடன் திரும்புகிற கூட்டத்துக்கு ஏராள மாகச் சன்மானம் கிடைக்கும். தென் திசையை நோக்கிச் சென்ற படைக்கு அங்கதன் தலைவனாக நியமிக்கப்பட்டான். அவனுக்கு உதவிபுரிதற் பொருட்டு ஆஞ்சநேயனும் அவ னுடன் அனுப்பி வைக்கப்பட்டான்.

ஹனுமானுடைய திறமை எத்தகையதென்பது இராம னுக்குத் தெரியும். எனவே அவனைத் தன்னிடம் அழைத் துத் தன்னுடைய நாமம் தாங்கியிருந்த மோதிரம் ஒன்றை

அவனிடம் கொடுத்தான். அந்த மோதிரத்தைச் சீதை அடையாளம் கண்டுகொள்வாள. ஆதலால் வந்த தூதனைப் பற்றி ஐயம் கொள்ளாள். கிழக்கு, மேற்கு, வடக்குத் திசைகளில் சென்ற சேனைகள், சீதையின் அறிகுறி எதையும் அப்பக்கங்களில் காணது ஒரு மாத காலத்தில் திரும்பி வந்து சேர்ந்தன. அவர்கள் தேடியதில் பயனென்றும் விளையவில்லை.

அங்கதனுடைய படை தென் திசையை நோக்கிச் சென்றது. விந்தியமலையிலிருந்த வனங்களையும் குகைகளையும் அலசி ஆராய்ந்து பார்த்தார்கள். இராமாயணத்தில் இயம்பப்பட்டுள்ள விந்தியமலை வேறு, இப்பொழுது வழக்கத்திலிருக்கிற விந்தியமலை வேறு. இக்காலத்தவர்கள் அறிந்திருக்கும் சபரிமலைக்கும் பம்பா நதிக்கும் அருகில் அக்காலத்திய கிஷ்கிந்தை இருந்தது. இக்காலத்தில் எதைத் தென்மலை என்றும், பொதியமலை என்றும் பகர்கின்ருேமோ அது அக்காலத்தில் விந்தியமலை என அழைக்கப்பட்டது. இந்த மலைப்பிரதேசத்தில் அவர்கள் சீதையைத் தேடி அலைந்து கொண்டிருந்த பொழுது அசுரன் ஒருவனைச் சந்தித்தார்கள். அவன் ஒருவேளை இராவணனக இருக்கக்கூடும் என யூகித்து அவனைக் கொன்று ஒழித்து விட்டார்கள். பிறகு சீதை அப்பக்கங்களில் ஒருவேளை அகப்படுவாள் என்று எண்ணினர்கள். கருத்துடன் மலைப் பிரதேசம் முழுதையும் ஆராய்ந்து பார்த்தார்கள்.

அங்கதனுடைய கூட்டத்துக்கு ஆயாசமும் பசியும் தாகமும் உண்டாயின. அம்மலையில் இருள் சூழ்ந்த குகை ஒன்றுக்கு அருகில் வந்தார்கள். அக்குகையினின்று பறவைகள் மகிழ்வுடன் வெளியே வந்துகொண்டிருந்தன. அது மட்டுமன்று. நறுமணம் நிறைந்த குளிர்காற்றும் அம்மலை

நுழைவினின்று வெளியே வருவதாயிற்று. ஆதலால் அப் பக்கத்தில் நீரும், மரம், செடி, கொடி வகைகளும் இருக்கக் கூடும் என அவர்கள் யூகித்தார்கள். ஒருவரோடு ஒருவர் கைகோத்துக்கொண்டு நிதானமாக அந்தக் காரிருள் பொந் துக்குள் போனார்கள். நெடுந்தூரம் போன பிறகு கொஞ்சம் கொஞ்சமாக வெளிச்சம் தென்பட்டது. அது அவர்களுக்கு மகிழ்வூட்டியது. சிறிது நேரத்திற்குள் செழிப்பான பழத் தோட்டம் ஒன்று தென்பட்டது. அதனுள் நன்னீர் ஓடை கள் ஓடிக்கொண்டிருந்தன. சிறிது தூரத்திற்கப்பால் பாழடைந்து கிடந்த பட்டணம் ஒன்று தென்பட்டது. அது விலையுயர்ந்த பொருள்களால் அமைக்கப்பட்டதாகவிருந்தது. தன்னந்தனியளாகக் கிழவி ஒருத்தி அங்குத் தென்பட் டாள். அவள் தவக்கோலத்தில் இருந்தாள். அவள் முகத் தில் எழில் வீசிக்கொண்டிருந்தது. சிறிது தயக்கத்துடன் ஆஞ்சனேயன் அத்தபஸ்வினியை அணுகினான். பிறகு அவளுடைய வரலாற்றைப்பற்றியும் சொர்க்கத்திற்கு நிக ராகத் தென்பட்ட அந்த இடத்தின் வரலாற்றைப்பற்றியும் அவன் விசாரித்தான்.

அப்பெண்பாலின் அனுமதி பெற்றுக்கொண்டு பட்டினி யால் வாடிக்கிடந்த பட்டாளத்தவர்கள் ஆங்கு ஏராளமாகத் தென்பட்ட கனி வகைகளைப் புசித்துப் பசியாற்றிக்கொண் டனர். அதன் பிறகு அந்த மாது மொழிந்ததாவது: "என் னுடைய பெயர் ஸ்வயம்பிரபை. இந்தப் பழத்தோட் டத்தை நான் பாதுகாத்து வருகிறேன். இது விண்ணுல கில் வாழும் ஹேமை என்னும் மங்கைக்குச் சொந்தம். அதற்கு முன்பு மயன் என்னும் அரக்கனுக்குச் சொந்தமா யிருந்தது. அவன் இந்திரனோடு பகைமை பூண்டுகொண் டான். ஆதலால் அவன் கொல்லப்பட்டான்.

நீங்கள் அனைவரும் யார்? அணுக முடியாத இந்த இடத்தை நீங்கள் எப்படி எட்டினீர்கள்?"

இராமனுடைய வரலாற்றை ஆஞ்சனேயன் சுருக்கமாக எடுத்துரைத்தான். அபகரித்துக்கொண்டு போகப் பட்ட சீதையைத் தேடிக் கண்டுபிடிப்பதில் தங்கள் கூட்டம் ஈடுபட்டிருக்கிறது என்பதையும் அவன் எடுத்து இயம்பினான்.

போற்றுதற்குரிய 'அந்த விருத்தாப்பிய தபஸ்வினி சொன்னதாவது: " இந்தக் குகைக்குள் வருகின்றவர் யாரும்மே தப்பித்துக்கொண்டு உயிரோடு வெளியே போக முடியாது. ஆனால் நீங்களனைவரும் ஒரு தெய்விக இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறீர்கள். ஆதலால் என்னுடைய தபோ பலத்தால் உங்களை நான் காப்பாற்றுகிறேன். இப்பொழுது நீங்கள் எல்லாரும் கண்ணை மூடுங்கள். இப்பொழுது நீங்கள் கண்ணைத் திறவுங்கள்." வானரப்படை அத்தபஸ்வினியின் ஆணைப்படியே நடந்து கொண்டது. கண் விழித்துப் பார்த்த பொழுது அவர்கள் எல்லாரும் கடற்கரையோரத்திலிருப்பதைக் காணலுற்றார்கள். இப்பொழுது அங்கதன் ஒரு நெருக்கடியில் அகப்பட்டுக் கொண்டிருப்பதை அறிய வந்தான். காலவரையறையை இப்பொழுது அவர்கள் கடந்து விட்டார்கள். சீதை எங்கிருக்கிறாள் என்பதைப்பற்றிய துப்பு ஏதும் தெரிவிக்கமுடியாத நிலையில் அவர்கள் கிஷ்கிந்தைக்குத் திரும்பினால் அவர்களுக்கு மரணதண்டனை வாய்ப்பது உறுதி. கண்ணெதிரே தென்படுகிற கடலோ மேலும் கடக்க முடியாத ஆழம் உடையது. இந்த விபத்தில் அகப்பட்டுக்கொண்ட அவன் கடற்கரையோரம் பட்டினி கிடந்து சாவது மேல் என்று எண்ணினான். படையின் தலைவர்களில் ஒருவனாகிய தாரன் மற்றோர் உபாயத்தைத் தெரிவித்

தான். பட்டினிகிடந்து சாவதோ திரும்பிப்போய் தண்டனை பெறுவதோ வேண்டாம். அவர்கள் யாவரும் சொர்க்கத்திற்கு நிகரான மயனுடைய குகைக்குள்ளே சென்று மரணத்தினின்று தப்பித்துக்கொள்ளலாம் என்றான். ஆனால் ஆஞ்சநேயனோ இந்த இரண்டுவிதமான முறைகளையும் ஆமோதிக்கவில்லை. தலைவிதி என்று சொல்லிக்கொண்டு ஒரு முயற்சியிலும் ஈடுபடாதவர்கள் பட்டினிகிடந்து சாகலாம் எனத் தீர்மானிப்பார்கள். அது பொருந்தாது. குகைக்குள் சென்று மறைந்திருப்பது உயிர்ப்பற்றுடைய கோழைகளுடைய போக்கு ஆகும். இந்த உபாயங்களிரண்டும் கீழ்த்தரமானவை. வெற்றியே வாய்த்தாலும் சரி தோல்வியே வாய்த்தாலும் சரி. நேர்மையான முயற்சி எடுத்துக்கொள்வதே பொருத்தமானது.

இதற்கிடையில் அவர்கள் ஆபத்துக்கு உள்ளானார்கள். சிறகற்றுக்கிடந்த கழுகு ஒன்று அவர்களை ஒருவனுக்குப்பின் ஒருவனை எடுத்து விழுங்க வந்துகொண்டிருந்தது. ஆயினும் இந்த வானரப்படை ஜடாயுவைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்ததனால் கழுகு அருகில் வாராது எட்ட நின்றது. அப்பறவையானது தன்னை ஜடாயுவின் சகோதரனாகிய சம்பாதி என அறிமுகப்படுத்திக்கொண்டது. அதிவிரைவில் அந்த உயிர்வகைகளுக்கிடையில் நட்பும் உறவுமுறையும் வடிவெடுத்தன. ஏனென்றால் அவையாவும் ராம கைங்கரியத்தில் ஈடுபட்டவைகளாக இருந்தன. குரங்குகளால் ஆதரிக்கப்பட்ட சம்பாதி என்னும் கழுகு கடற்கரையோரம் சென்று காலம் சென்ற தன்னுடைய சகோதரன் ஜடாயுவுக்கு ஈமக்கிரியைகள் செய்ய வல்லவனானான்.

இப்பொழுது சம்பாதியிடம் அங்கதன் ஒரு விஷயத்தைத் தெரிவித்தான். சீதையைத் தேடித்திரிந்த அந்த

வானரக் கூட்டத்திற்கு அவளைப் பற்றிய துப்பு ஏதாவது பெறுதற்கு அக்கழுகு எவ்விதத்திலாவது உதவிபண்ண முடியுமா என்பது கிஷ்கிந்தை ராஜகுமாரனுடைய வேண்டுதல். தான் தள்ளாத வயதிலிருந்தபோதிலும் தன் கண்கள் இன்னும் கூர்மை படைத்தவைகளாக இருக்கின்றனவென்றும் யோக வலிவால் சீதையின் இருப்பிடத்தைத் தூர திருஷ்டி சக்தியால் அறிந்து கொள்ள முடியும் என்றும் சம்பாதி சொன்னன். லங்காபுரியில் சீதை சிறையில் அடைபட்டுக் கிடக்கிருள். ராக்ஷஸிகள் அவள் தப்பித்து ஓடாதபடி காவல் காத்து வருகிருர்கள். இத்தகவல் குரங்குகளுக்குப் பெருமகிழ்வையூட்டியது. அவர்கள் குஷியுடன் குதித்தார்கள். மகிழ்வுக்குரிய மற்றோர் அதிசயச் செயல் நிகழ்வதாயிற்று. முன்னொருகாலத்தில் சம்பாதி பறந்து போய் சூரிய மண்டலத்தை எட்ட முயன்ருன். அதன்விளைவாக அவனுடைய சிறகுகளெல்லாம் வெந்து போயின. சிறகற்றிருந்த அவனுக்குப் பழையபடி சிறகுகள் முளைத்து வந்து அமைந்தன. அதற்கேற்ற காரணமும் உண்டு. இப்பொழுது அவன் ராம கைங்கரியத்தில் ஈடுபடலாயினன். அந்தப் புண்ணியச் செயலின் விளைவாக இத்தகைய புதுமை அவனுக்கு வாய்ப்பதாயிற்று. இதைக் குறித்து நிஷாகர ரிஷி என்பவர் ஒருவர் ஏற்கனவே இயம்பியிருந்தார். அவர் சொன்ன சொல் நிறைவேறியது. இந்த நிகழ்ச்சி வாழ்க்கையைக் குறித்துள்ள ஒரு கோட்பாடு ஆகும். எவன் ஒருவன் பிறருக்கு நலன் செய்கின்றனே அவனுடைய ஜீவிதம் ஓயாது புதுப்பிக்கப்படுகிறது.

இப்பொழுது வானரவீரர்கள் மகிழ்ச்சியோடு கடற்கரைக்கு வந்தார்கள். ஆனல் அது பயங்கரமாக அலைவீசிக் கொண்டிருந்ததைப் பார்த்த அவர்களுக்கு மனச்சோர்வு

உண்டாயிற்று. மனம் குழம்பியவர்களாக அவர்கள் இங்கு மங்கும் ஓடினார்கள். அவர்களைத் திரட்டி அமைதியை உண்டுபண்ணுவதற்கு அங்கதன் பெரும்பாடு படவேண்டிய தாயிற்று. அவர்கள் உள்ளத்தில் அவன் புதிய உற்சாகத்தை ஊட்டினான். அவன் இயம்பியதாவது: "மனச் சோர்வே வாழ்வில் தோல்விக்குக் காரணமாகிறது. சோர்வை விஷமென ஒதுக்குதல் வேண்டும். உற்சாகம் பூணுங்கள். பராக்கிரமத்தை வரவழைத்துக்கொள்ளுங்கள். லங்காபுரி இங்கிருந்து நூறு யோஜனை தூரத்தில் இருக்கிறது. கடலைத்தாண்டி அங்கே குதிக்க வல்லவன் உங்களுக்கிடையில் யாராவது இருக்கின்றானா?"

வானரவீரர்கள் தங்களுடைய திறமையை விமரிசனம் பண்ணினார்கள். ஒரு சில வீரர்கள் தொண்ணூறு யோஜனை தாண்டமுடியும். அதற்குமேல் தங்களுக்கு சாத்தியப்படாது என்றார்கள். கடைசியாக அங்கதனும் தன்னுடைய திறமையை எடுத்து இயம்பினான். ஏதேனும் ஒரு விதத்தில் நூறு யோஜனையையும் தாண்ட அவனுக்கு இயலும் என்றான். ஆனால் திரும்பி வந்து சேர்வதற்கேற்ற சக்தி தன்னிடம் எஞ்சியிருக்கிறதா என்ற ஐயம் அவனுக்கு உண்டாயிற்று.

இப்பொழுது விருத்தாப்பிய தசையிலிருந்த ஜாம்பவான் என்ற கரடி வேந்தன் தனது கருத்தைத் தெரிவிக்க முன்வந்தான். மந்திரி பிரதானிகள் செய்யக்கூடிய சாமானியமான செயல்களில் ராஜ குமாரனாக இருந்த அங்கதன் இறங்கி வருவது பொருந்தாது. தான் வாலிபனாகவிருந்த பொழுது நூறுயோஜனை தாண்டுவது தனக்கு விளையாட்டுக் காரியமாயிருந்தது. இப்பொழுதோ கிழவனாய் விட்டதால் பழைய இளமை போயே போய்விட்டது. இனி அது திரும்பி வரப்போவதில்லை என்றான்.

ஆயினும் உபாயம் ஒன்று இருந்தது. ஜாம்பவான் அதைக் கையாண்டான். அருகில் நின்றுகொண்டிருந்த ஆஞ்சனேயனிடம் அவன் இங்ஙனம் எடுத்துரைத்தான்: "மாருதி, நீ வாயு குமாரன். இச்செயலைச் செய்து சாதிக்க நீ ஒருவன்தான் தகுதி வாய்க்கப்பெற்றவன். எல்லாவித மான கலைஞானங்களும் உனக்குத் தெரியும். ஆற்றலிலோ உனக்கு மிக்கான் யாருமில்லை. உன் தாயாகிய அஞ்சனா தேவியிடமிருந்து தூய்மையை நீ ஆர்ஜிதமாக அடையப் பெற்றிருக்கிறாய். நீ சிறு குழந்தையாயிருந்தபொழுது சூரியனை ஒரு பிரகாசம் வாய்ந்த கனி எனக் கருதி அதைக் கைப்பற்ற மேல் நோக்கிக் குதித்தவன். வாயு கமனம் பண்ணுவதில், வானத்தில் பறப்பதில் நீ கருடனுக்கு நிகரா னவன். மேலும் உன் தந்தையாகிய வாயுதேவன் யாண் டும் உனக்கு அனுக்ரஹ மூர்த்தியாயிருக்கிறான். சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்ம தேவன் உனக்கு வரங்கள் பலவற்றை வாரியெடுத்து வழங்கியிருக்கிறான். நீ அமிர்த சொரூபி. எமன் உன்னை அணுகமாட்டான். உன்னைத் துன்புறுத்தும் திறமை ஆயுதங்களுக்கு இல்லை. பிரம்மச்சரியம் என்னும் மகாவிரதம் யாண்டும் உனக்குச் சொந்தம். ஆதலால் யாருமே உன்னை வெல்ல முடியாது. நல்லொழுக்கமும் பணிவும் உனக்கு அணிகளாக அமைந்திருக்கின்றன. இராம னுடைய தெய்விகக் காரியத்தை நன்கு நிறைவேற்றி வைக்க நீ ஒருவனே முற்றிலும் தகுதி வாய்ந்தவன்."

இந்த விளக்கங்களையெல்லாம் காதுகொடுத்துக் கேட் டுக்கொண்டிருக்க இருக்க ஆஞ்சநேயனிடத்து ஆத்மபோதம் உருவெடுத்தது. தன்னிடத்துப் புதைந்திருந்த தெய்விக ஆற்றல்களையெல்லாம் அவன் இப்பொழுது ஞாபகத்துக்குக் கொண்டுவந்தான். ஆத்மபோதம் ஓங்குதற்கேற்ப அவன்

விஸ்வரூபத்தை எடுக்கலாயினன். தேஜஸ் அவனிடத்துத் திகழ்ந்துகொண்டிருந்தது. இத்தகைய தெய்விக விபூதிகள் அனைத்துக்கும் மேலாக அவனுடைய மனது அகண்டாகார ஆத்மபோதத்தில் விரிவடைந்தது.

வானத்தில் பறந்து அப்பால் செல்வதற்கான இடவசதி ஒன்று மாருதிக்குத் தேவையாயிருந்தது. அதற்காகவென்று அருகில் இருந்த மகேந்திர மலையின் உச்சிக்கு அவன் சென்றான். லங்காபுரியில் சிறை கிடந்த சீதாபிராட்டியின் மீது அவன் யோக சம்யமம் பண்ணினான். வானவெளியில் பாய்ந்து செல்வதற்கான விஸ்வ ரூபத்தை அவனுடைய மேனி எடுக்கலாயிற்று. பருத்த மேனியை அவன் அசைந்து கொடுக்கையில் அந்தப்பளுவின் அழுத்தத்தால் மலை நடுங்கியது. ஆங்காங்கு குகைகளில் பதுங்கியிருந்த ஜந்துக்கள் உயிர் தப்பிப் பிழைத்தல் பொருட்டு நாலாபக்கமும் விரைந்தோடின. பாய்ந்து செல்வதற்கான வேகத்தைப் பெறுதல் பொருட்டு மாருதி தன் மேனியை முன்பக்கமும் பின்பக்கமும் ஊஞ்சலாட்டினான். அதனால் விளைந்த அழுத்தம் பாறையைப் பொடியாக்கிற்று. வானத்தில் பாய்ந்து தென் திசையை நோக்கிச் சுடர் விட்டுக்கொண்டிருந்த வால் நட்சத்திரம் போன்று பறந்தான்.

மாருதியினுடைய மேன்மை தங்கிய மண்ணுலக வாழ்க்கையில் இந்த நிகழ்ச்சி போற்றுதற்குரிய சம்பவமாகும். தெய்விக மூர்த்தியாக அவன் மாறியமைந்தான். இதுகாறும் சுக்ரீவனுக்கு அமைச்சனாயிருந்த வாழ்க்கைப் பகுதியைத் தாண்டிப் பரவாழ்வுக்குரிய அருளாளனாக அவன் மாறியமைந்தான். இனி, அவன் யாண்டும் ராமதாசன். ராம சேவைக்கென்றே தன்னுடைய வையக வாழ்க்கையை ஒப்படைத்தவன். அதைத்தவிர வேறு எந்த நோக்கமும்

அவனுடைய உள்ளத்தில் இடம் பெறவில்லை. ஆத்ம பரிபாகத்தில் அவன் இராமனுக்கு ஒப்பானவன். ஆதலால் இராமனை வழுத்துதலும் ராமதாசனாகிய ஆஞ்சநேயனை வழுத்துதலும் ஒன்றேயாம்.

இச்செயலில் நிரந்தரமாயுள்ள மற்றொரு வாழ்க்கைத் தத்துவம் வெளியாகிறது. பரமனுடைய பணிவிடைக்கென்றே யார் ஒருவன் தன்னுடைய அனைத்தையும் ஒப்படைக்கின்றானோ அன்னவன் ஆத்மீகப் பெற்றி வாய்க்கப் பெற்றவனாக மாறியமைகிறான். தெய்விகத் தரம் அவனிடம் ஓங்குகிறது. கட்டையும் கல்லும் போன்ற சாமானிய மானுடன் ஒருவன் தெய்விகக் கைங்கரியத்திற்கு உரியவனாகின்ற பொழுது அவன் மகிமை வாய்ந்த மூர்த்தியாக மாறியமைகின்றான். பரமனுடைய பணிவிடைக்கென்றே தன்னை ஒப்படைப்பவன் பாக்கியவான்.

சீதையை மீட்டெடுப்பதற்கு ஏற்ற உதவி இராமனுக்கு முற்றிலும் தேவையாயிருந்தது. அதற்காக யாருடைய உதவியை நாடி அவன் சென்றானென்று சிந்தித்துப்பார்க்க வேண்டும். பறவைகளும் விலங்குகளுமே அவனுக்கு உற்ற கருவிகளாயின. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பது கோட்பாடு. எப்பொருளையும், எந்த ஜந்துவையும் பெரிய காரியங்களுக்குப் பயன்படுத்துபவனே மக்களுள் மேலோன். ஒரு மனிதனுடைய தரத்தைச் சூழ்நிலைக்கேற்றவாறு அவன் கையாளுகிற உபாயமே விளக்கிக் காட்டுகிறது.

இயற்கையின் பாங்கு அலாதியானது. எப்படியென்றால் ஜந்து ஒன்று ஒரே வேளையில் ஒருவனுக்குத் துணைபுரிகிற பாங்கிலும் மற்றொருவனுக்கு எதிரியாய் இருக்கும் பாங்கிலும் அமைந்திருக்கிறது. ஆதலால் வாழ்க்கையை நடாத்துதற்குப் புரிகின்ற போராட்டத்தில் நிர்மாணமும்

நாசமும் சேர்ந்தே அமைந்திருக்கின்றன. ஆனால் இராமன் யாண்டும் எல்லார்க்கும் ௭ தவிபுரிகின்ற பாங்குடையவனா யிருந்தான். அவன் எடுத்துக்கொண்ட தீவிர நடவடிக்கைகள் எப்பொழுதாவது வரம்புகடந்து போனது கிடையாது. கிஷ்கிந்தையில் அவன் புரிந்த செயலே இதற்கு ஏற்ற அத்தாட்சியாகிறது.

சுந்தர காண்டம்

இராமாயணத்தில் ஏழு காண்டங்கள் இருக்கின்றன. அந்த ஏழினுள் ஆறுகாண்டங்களின் தலைப்புகள் பொருத்தமானவைகளேயாம். ஆனால் சுந்தர காண்டம் என்னும் தலைப்போ பொருத்தமற்றது போன்று தென்படுகிறது. அழகை அடிப்படையாகக்கொண்ட பகுதி என்பது சுந்தர காண்டத்தின் பொருள். ஆனால் அழகின்மையே யாண்டும் முன்னணியிலிருந்து காட்சி கொடுக்கிறது. சீதை சிறையிலே அடைபட்டுக் கிடக்கின்றாள். அருவருப்புக்குரிய அரக்கிகள் அவளைக் காவல் காத்து வருகின்றனர். அந்தச் சூழ்நிலையில் அவளுடைய வாழ்வு பரிதாபத்துக்குரியது. எப்படியாவது அவளை வசப்படுத்துவதற்கு இராவணன் பொல்லாத சூழ்ச்சிகளைக் கையாண்டு வருகிறான். இத்தகைய விபரீதமான பாங்குகளைச் சௌந்தர்யம் என்று சொல்லலாகாது. பொல்லாங்கு என்றே பகரவேண்டும். அழகு யாண்டும் கவர்ச்சிகரமானது. ஆபாசமோ ஒதுக்கித் தள்ளத் தக்கது. இக்காண்டத்தை லங்கா காண்டம் என்று இயம்பினால் அதில் பொருள் இருக்கிறது. ஆனால் அப் பெயர் அதற்குச் சூட்டப்படவில்லை. கோணலே வடி

வெடுத்துள்ள இச் சூழ்நிலையில் அழகின் காட்சி ஏதேனும் இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்ப்போம்.

ஹனுமான் கடலுக்கு மேலே வானவெளியிலே தென் திசையை நோக்கிப் பாய்ந்து போய்க்கொண்டிருந்தான். அவனுடைய பராக்கிரமத்தைத் தேவர்கள் பெரிதும் பாராட்டினார்கள். அவனைப் புகழ்ந்து பேசினார்கள். ஆனால் அன்னவர்கள் கூற்றுக்குச் செவிசாய்க்க ஆஞ்சனேயனுக்கு அவகாசமில்லை. நடுக்கடலினின்று மலையொன்று திடீரென்று மேலே கிளம்பிவந்து விரைந்துசென்ற வீரனுக்கெதிரே காட்சி கொடுத்தது. அது இடைஞ்சலை உண்டுபண்ணுகிறது என்று எண்ணிய மாருதி தன் நெஞ்சைக்கொண்டு அதை ஒதுக்கித் தள்ளினான். மேகம் போன்று சுழன்று கீழே வீழ்ந்த மைனாகமலை தன்னை ஒரு தோழன் என்றும், பகைவன் அன்று என்றும் அறிமுகப்படுத்திக் கொண்டது. வருணனால் ஏவப்பட்டு அது கடலின் கீழேயிருந்து மேலே கிளம்பி வந்தது. ஹனுமானுக்கு வழியிலே சிறிது ஓய்வும் உண்டியும் வழங்குதற் பொருட்டே அது மேல் நோக்கி வந்தது. இங்ஙனம் இயம்பிய மைனாகனுக்குப் பொருத்தமான விடையை மாருதி மரியாதையுடன் மொழிவானாயினன். ராமகாரியத்தின் பொருட்டு விரைந்து கொண்டிருந்த தனக்கு இடைவழியிலே வீண்பொழுது போக்குவது பொருந்தாது என்றான்.

ஆஞ்சனேயனுடைய சமயோசித புத்தியையும் நெருக்கடி ஒன்றை அவன் எங்ஙனம் சமாளித்தான் என்பதையும் அறிந்துகொள்ள விண்ணவர்கள் விரும்பினார்கள். ஆதலால் அவர்கள் சர்ப்பங்களின் தாயாகிய சுரசையை ஒரு செயலில் ஈடுபடும்படி தூண்டினார்கள். அந்தப் பிராணி ஒரு மிகப் பெரிய அரக்கியாக வடிவெடுத்து அந்த வானர வீரனுடைய

போக்குக்குத் தடை செய்யும்படி ஏவினர்கள். அந்த ஜந்து வும் அங்ஙனமே செய்தது. தன்னுடைய அகன்ற வாயைத் திறந்து காட்டி அதனுள்ளே செல்லவேண்டுமென்று அது ஆஞ்சனேயனை ஏவியது. தன்னுடைய போக்குக்கு இடைஞ் சல் வராதபடி பார்த்துக்கொண்டு ஆஞ்சனேயனும் அச்செய லைச் செய்ய இசைந்தான். இப்பொழுது இவ்விருவருக்கு மிடையில் உடலைப் பெரிதாக்கும் செயலில் போட்டி ஒன்று நிகழ்ந்தது. இருவருடைய மேனிகளும் வண்ணத்திலே மிகப் பெரியவைகளாக விரிவடைந்துகொண்டு போயின. போட்டி பெருகிக்கொண்டே போனதற்கிடையில் ஒரு படித் தரத்தில் ஆஞ்சனேயன் திடீரென்று நுண்ணிய வடிவெடுத் தான். அந்த அரக்கியின் அகன்ற வாயினுள் நுழைந்து தீங்கு ஏதும் அடையப்பெருதவனாக வெளியே வந்தான். அத்தருணத்தில் சுரசை தன்னுடைய சொந்த வடிவத்தில் தோன்றி மாருதி எடுத்துக்கொண்டிருந்த அரிய பெரிய செயலிலே வெற்றியடைய வேண்டுமென்று ஆசீர்வதித்தாள்.

ராமதாசனுக்குத் தொல்லைகள் இன்னும் முடிந்த பாடில்லை. வானவெளியில் தான் கையாண்ட வேகத்தை ஏதோ ஒருவித சக்தி தடைபண்ணியது என அவன் உணர்ந் தான். அது யாது என்று அவன் சிந்தித்துப் பார்த்தான். அவனுடைய நிழலைத் தொடர்ந்து போவதன் வாயிலாக அவனுடைய வேகத்தை அடக்க அரக்கி ஒருத்திக்குச் சக்தி வாய்த்திருந்தது. நெடுநாளாகத் தனக்கு ஏற்பட்டிருந்த பசியைப் போக்குவதற்கென்றே அவள் அம்முறையைக் கையாண்டாள். ஆஞ்சனேயனை விழுங்குதற்கு அவள் தன் அகன்ற வாயைத் திறந்தாள். மாருதியோ திடீரென்று ஒரு நுண்ணிய வடிவெடுத்து அவளுடைய வாயினுள் நுழைந் தான். விரைந்து வயிற்றுக்குள் சென்ருன்; அரக்கியின்

குடலைப் பாழ்படுத்தினான்; அவளுடைய உடலைப் பொத்துக் கொண்டு அவன் வெளியே வந்தான். அரக்கியும் மடிந்து போய்க் கடலினுள் வீழ்ந்தாள். ஹனுமானும் யார் கண்ணுக்கும் தென்படாதவனாய் இலங்கை என்னும் பெயர் பூண்டிருந்த ஒரு குன்றின்மீது இறங்கினான். அவ்விடம் செழிப்பு மிக வாய்க்கப்பெற்றிருந்தது. மரம், செடி, கொடிகள் செவ்வனே வளர்ந்திருந்தன. இலங்கைக்குள் வேற்றான் யாருமே நுழைய முடியாது. ஆனால் ஆஞ்சனேயனோ தீட்பமும், விவேகமும், நுண்ணறிவும், வல்லமையும் வாய்க்கபெற்றவன். அச்சிறப்புகளைப் பயன்படுத்தியதன் விளைவாக இடைஞ்சல் எதுவுமில்லாது அவன் இலங்கையைச் சென்றடைந்தான். செயற்கரிய இச்செயலில் அழகு பொலிகிறது. அதை முன்னிட்டு இப்பகுதியைச் சுந்தரகாண்டம் எனலாம்.

2. தான் வந்துள்ள காரியத்தை நன்கு நிறைவேற்றுதற்கான உபாயத்தைக் குறித்து ஹனுமான் அமைதியாகச் சிந்தனை பண்ணினான். யாருடைய கண்ணுக்கும் புலப்படாமல் அவன் தனியாகச் சீதாதேவியைத் தேடிக் கண்டுபிடித்தாக வேண்டும். இல்லையேல் அவன் வகுத்திருந்த திட்டம் முழுதும் அனர்த்தமாய்ப் போய்விடும். ஆதலால் அவன் தன் வடிவத்தை ஒரு பூனையின் வடிவத்துக் கொப்பச் சிறியது ஆக்கிக்கொண்டான். சூரிய அஸ்தமனத்துக்கு நெடு நேரத்துக்குப் பிந்தியே அவன் அந்த நாட்டினுள் நடந்து சென்றான். அதனால் என்ன! லங்காதேவி என்னும் மாது ஒருத்தி அந்த ராஜ்யத்தைப் பாதுகாப்பவளாக அமைந்திருந்தாள். அன்னவளுடைய தெளிந்தெடுத்த கண் பார்வையினின்று புதிதாக வந்திருந்தவன் தப்பித்துக்கொள்ள முடியவில்லை. “நீ யார்? எதற்காக இங்கு வந்துள்ளாய்?” என்று அவள் அதட்டி வினவினாள்.

ஹனுமான்: இவ்விடத்தை வெறுமனே பார்க்க வந்துள்ளேன். பார்த்தபின் நான் அப்பால் போய்விடுவேன்.

எதிரொலி கேட்கக்கூடிய பலத்த அறைச்சல் ஒன்றை லங்காதேவி ஹனுமானின் கன்னத்தில் விரைந்து போட்டாள்.

அதற்கு எதிர்ச் செயலாகத் தன்னுடைய விரல்களை நாம்பிக்கொண்டு காவல்காத்த காரிகையின்மீது ஓங்கிப் புதிதாக வந்தவன் குத்தினன். அவள் தடாலென்று தரையின்மீது வீழ்ந்தாள். பின்பு எழுந்து நின்று அவள் இங்ஙனம் இயம்பினள்: "இந்த ராஜ்யத்தைப் பாதுகாத்தல் பொருட்டு பிரம்ம தேவனல் நான் நியமிக்கப்பட்டவள். அப்பிரம்ம தேவனே கருத்து ஒன்றை எனக்குச் சொல்லி வைத்தார். குரங்கு ஒன்றினல் நான் அடியுண்டு வீழ்வேனகில் என்னுடைய கடமையும் அவ்வீழ்ச்சியோடு முடிவடைகிறது. அதைத் தொடர்ந்து இந்த ராஜ்யத்தின் வீழ்ச்சியும் ஆரம்பிக்கிறது." இங்ஙனம் இயம்பிக்கொண்டு அப்பெண்பால் மாயமாய் மறைந்து போனள். அது அலாதியாக லங்காபுரிக்காகவென்று அமைந்திருந்த அமைப்பு என நாம் எண்ணலாகாது. அறநெறி பிறழ்கின்ற அரியபெரிய அரசாங்கங்களுக்கெல்லாம் இத்தகைய வீழ்ச்சியின் முன் அறிகுறி ஏதேனும் ஒரு விதத்தில் வந்து அமைகிறது.

இப்பொழுது ஆஞ்சனேயன் சாதாரணமாகக் கண்ணுக்குப் புலப்படாத நுண்ணிய வடிவத்தை எடுத்துக் கொண்டான். நகரவாசிகள் சிலர் தூங்கியும், மற்றும் சிலர் தூங்காமலும் இருந்த இரவு நேரம் ஆகும் அது. தலைமைப்பட்டணத்தின் மூலைமுடுக்குகள் உட்பட எல்லாப் பகுதிகளிலும் அவன் கூர்ந்து தேடிப்பார்த்தான். கட்டடங்களோ மிக மிகப் பெரியவைகளாக அந்நகரில் அமைந்திருந்தன. செல்வம் ஆங்குத் தாண்டவமாடியதன் அறிகுறிகள் இருந்தன. அந்த

ராஜ்யம் சம்பத்து மிக வாய்க்கப்பெற்றதாக இருந்ததற்கு அறிகுறிகள் பல இருந்தன. பட்டணத்தின் அமைப்போ மிகச் சிறப்புற்று இருந்தது. அதை அமைத்த சிற்பி அக்கலையில் திறமை மிக வாய்க்கப்பெற்றவன் என்பதற்கு ஐயமில்லை. சுகாதாரக் கோட்பாடுகளெல்லாம் மிகப் பொருத்தமாக அமைந்திருந்தன. பட்டணத்தைத் துப்புரவாக வைத்திருப்பதில் அந்நகர வாசிகள் பயிற்சி மிகப் பெற்றவர்கள். ஆங்காங்கு அமைந்திருந்த பூங்காக்களும். சிங்காரத் தோட்டங்களும் நகர வாசிகள் படைத்திருந்த அழகுப் பண்புக்கு அறிகுறிகளாயின. வேதபாராயணம் பண்ணியதன் ஓசை சிற்சில இடங்களிலிருந்து மாருதியின் காதுக்கு எட்டியது. மாருதி தானே ஒரு சிறந்த வேதவித்வானாக இருந்தான். ஆதலால் ஒழுங்குப்பாடான அந்த ஓசை அவனுக்குத் திருப்தியை உண்டுபண்ணியது. இன்னும் சில இடங்களில் சிறந்த பாங்கிலே சங்கீதங்கள்பாடுவது அவன் செவிக்கு எட்டியது. அதையும் அவன் நன்கு ரசித்தான். ராகம், தாளம் முதலிய ஒழுங்குப்பாடுகளோடு பாடிய பாடல்கள் அந்நகரிலே இன்னிசை வல்லுநர் பலர் இருந்தனர் என்பதற்கு எடுத்துக் காட்டாயிருந்தன. ஆங்காங்கு நடமாடிக்கொண்டிருந்த நகர வாசிகளை அனுமன் கூர்ந்து கவனித்தான். திண்மையும் கட்டழகும் வாய்க்கப்பெற்ற மேனிகளை உடையவர்களாக அவர்கள் இருந்தனர். உடலமைப்பில் நிறைவு இருந்தது எனினும் அக்கூட்டத்தார் ராக்ஷசர்கள் எனவும், அரக்கர்கள் எனவும் பாகுபடுத்தப்பட்டிருந்தனர். அதற்கும் ஏற்ற காரணமிருந்தது. வரம்பு கடந்த சுகபோகத்திலும், கொடூரத்தன்மையிலும் அவர்கள் ஆழ்ந்து மூழ்கியிருந்தனர். யாரோ ஒரு சிலர் மேனியழகு அற்றவர்களாகவும் இருந்தனர். உடலமைப்பில் இத்தகைய குறைநிலை கிட்டத்தட்ட

எல்லாச் சமுதாயங்களிலுமே காணப்படுகிறது. கிஷ்கிந்தாபுரி வாசிகளையும் லங்காபுரி வாசிகளையும் சீர்தூக்கிப் பார்த்தால் மேனி அழகிலும் பண்பாட்டிலும் லங்காபுரி வாசிகள் மற்றவர்களைவிட மேன்மையுற்று இருந்தனர் என்பது வெளிப்படை. ஆனால் சீலத்திலோ கிஷ்கிந்தை வாசிகள் பன்மடங்கு மேலானவர்கள். லங்காபுரி வாசிகள் பலபேர் மதுபானத்தில் சொக்கியிருந்தனர். காமவெறியும் அவர்களிடத்து வரம்பு கடந்து தாண்டவம் ஆடியது. இந்த இரண்டு குற்றங்கள் எந்தச் சமுதாயத்தில் மேலோங்கி இருக்கின்றனவோ அந்தச் சமுதாயம் அதிவிரைவில் அழியப் போகிறது என்பதற்கு அவைகள் அறிகுறிகளாகும்.

நடுநிசியில் மக்களின் நடமாட்டம் அறவே நின்றுவிட்டது. அத்தருணத்தில் மாருதி இராவணனுடைய மாளிகைக்குள் நுழைந்தான். அரக்க வீரர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கியிருந்ததை அவன் நன்கு கவனித்துப் பார்த்தான். சீதாபிராட்டி எங்கே இருக்கிறாள் என்பதைக் கண்டுபிடிப்பது அவன் அவ்விடத்துக்கு வந்ததன் முக்கிய நோக்கமாகும். ஆதலால் அரை மனதுடன் அவன் அரக்கியர்கள் உறங்கிக் கிடந்த அந்தப்புரத்துக்குள் நுழைந்தான். மண்டோதரி இராவணனுடைய பட்டமகிஷி ஆவாள். ஆடம்பரமான மஞ்சத்தின் மீது சயனித்திருந்த அன்னவளைப் பார்த்தவுடனே இது சீதாபிராட்டியாக இருக்குமோ என்னும் எண்ணம் ஆஞ்சனேயன் உள்ளத்தில் பாய்ந்தது. ஆயினும் அக்கணமே தான் எண்ணிய எண்ணத்தைத் திருத்தியமைத்துக்கொண்டான். ஏனென்றால் இராமனுடைய வாழ்க்கைத்துணை தூய்மையும் தபசும் வடிவெடுத்தவள்; அத்தகைய கற்பரசி அவளை அபகரித்துக்கொண்டு வந்த பாதகனுடைய போக்குக்கு இசையமாட்டாள். இத்

தகைய சுகபோகச் சூழ்நிலையில் படுத்துறங்கவும் மாட்டாள். இதுவே ஹனுமான் கையாண்ட யூகமாகும்.

கிட்டத்தட்ட எல்லா இடங்களிலும் ஆஞ்சனேயன் சீதாபிராட்டியைத் தேடிப் பார்த்தாயிற்று. எங்கெங்த இடங்களில் பெண்பாலர்கள் வசித்து வந்தனரோ அல்லது காவலில் வைக்கப்பட்டவர்களாக இருக்கக்கூடுமோ அந்தந்த இடங்களில் எல்லாம் அவன் நுழைந்து பார்த்தாயிற்று. ஆஞ்சனேயன் தூய பிரம்மச்சரிய விரதத்துக்கு இலக்கு ஆனவன். பெண்பாலர் உறங்கும் இடங்களுக்கே அவன் ஒருபொழுதும் போகமாட்டான். ஆயினும் அவன் தன் தெய்விக அன்னையாகிய சீதாபிராட்டியாரைத் தேடி வந்தவன் ஆனான். அந்த ஓர் எண்ணத்தில் உறுதி பெற்றவனாக இருந்துகொண்டு மங்கையர் வசித்திருந்த இடங்களையெல்லாம் அலசி ஆராய்ந்து பார்த்தான். ஆயினும் அக்கற்பரசியைப் பற்றிய துப்பு எந்த இடத்திலுமே தென்படவில்லை. இதுகாறும் அவன் எடுத்துக்கொண்டிருந்த அமானுஷ்ய முயற்சி தோல்வியுற்றது. நாடிய கர்மம் நிறைவேறவில்லையென்று திரும்பிப் போவதா என்னும் ஐயம் ஆஞ்சனேயனுக்கு உண்டாயிற்று. தோல்வியுற்றுத் திரும்புவது தகாது. தேவியைத் தேடிப் பார்ப்பதிலேயே காலம் கழிந்து போகட்டும் என்னும் எண்ணம் அவனுக்கு வந்தது. மற்றும் ஓர் ஐயம் அவன் உள்ளத்தில் உதித்தது. அரக்கர்களுடைய போக்குக்கு ஒருபொழுதும் சீதாபிராட்டி உடந்தையாக மாட்டாள். அதனால் அவர்கள் சீற்றங்கொண்டு பழிவாங்கும் பாங்கில் அவளைக் கொன்று தின்றுவிட்டார்களா? அல்லது ஒருவேளை வானவெளியில் இராவணன் தூக்கிக் கொண்டுவந்த பொழுது நழுவிக்கடலில் வீழ்ந்து மாய்ந்துபோனாளோ? சம்பாதி சொன்னதும் அவன்

ஞாபகத்துக்கு வந்தது. சீதாதேவியை அருவருப்புக்குரிய அரக்கியர்கள் காவல் காத்து வந்ததை யோக சித்தியின் வாயிலாகத் தான் கண்டதாக அந்தக் கழுகுவேந்தன் கூறினன். அவன் கண்டகாட்சி வெறும் பொய்த்தோற்றமா யிருக்கக்கூடுமோ! இவ்வாறெல்லாம் அவன் ஆலோசித்துப் பார்த்தான். விளைவு எதுவாயினும் ஆருக. தன்னிடத்து உயிர் இருக்குமளவு அம்மையைத் தேடித் திரிந்துகொண்டே இருப்பதென வானர வீரன் முடிவுகட்டினன்.

3. லங்காபுரியிலே அசோகவனம் என்பது ஒரு முக்கிய மான இடம். சோகத்திற்கு ஆங்கு இடம் இல்லை என்பது அச்சொல்லின் பொருள். அழகு வாய்ந்த அந்த அரிய இடத்தை ஆஞ்சனேயன் இன்னும் சென்று பார்க்கவில்லை. அப்பூங்காவிற்கு அமைந்திருந்த சுற்றுச் சுவரின்மீது மாருதி மிகச் சுலபமாகத் தாவி ஏறி அதனுள்ளே இறங்கினன். ஆயாசத்தைப் போக்கும் பாங்கு அந்த வனத்துக்கு உண்டு. ஆஞ்சனேயனும் அனுபவ பூர்வமாக அதன் சிறப்பை அறியலாயினன். மாடமாளிகைகளெல்லாம் லங்காபுரியில் அரக்கர்களால் செயற்கையாக அமைக்கப் பெற்றவைக ளாகும். இட்பூங்காவோ இயற்கையின் மகிமைக்கு விளக்க மாகும். சுகபோகத்தை நாடுகிறவர்களுக்கு அதற்கேற்ற உணர்ச்சியை ஊட்டவல்லது இவ்விடம். கருவிகரணங்களை ஒடுக்கி அந்தர்முக திருஷ்டியில் ஆழ்ந்து மூழ்கிப் பரத்தை நோக்கிக் கருத்தைச் செலுத்த முயலுகின்றவர்களுக்கும் அத்துறையில் ஊக்கத்தை ஊட்டவல்லது இப்பூங்கா. இயற்கையின் வனப்பும் வல்லமையும் ஒன்றுகூடி இவ்விடத் தில் திகழ்ந்திருந்தன. உள்ளத்தைக் கொள்ளை கொண்டு போகும் பாங்கு இவ்விடத்தில் அமைந்திருந்தது. இதை மேலும் அலங்கரிப்பதற்குப் பூமியில் புதைந்து கிடந்த நவ

ரத்தினங்கள் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. மாறி மாறி வரும் பருவங்களிலே பூக்கவும், காய்க்கவும், பழுக்கவும் வல்ல மரவகைகள் மிகப் பொருத்தமாக ஈண்டு அமைக்கப் பெற்றிருந்தன; பறவைகளுக்கும் வண்டுகளுக்கும் விலங்கு களுக்கும் யாண்டும் மகிழ்வூட்டும் வனம் இது ஒன்றேயாம். சீதைமட்டும் உயிரோடு இருப்பாளாகில் அவள் நிச்சய மாக இந்த இடத்தில் வதிந்திருப்பாள். அவள் வனவாசப் பிரியை. ஆத்மசாதனத்துக்காக ஆனாலும் சரி, வையக வாழ் வில் பெறும் இன்பத்துக்காக ஆனாலும் சரி, இந்த அடவி ஒன்றே இவை யாவுக்கும் பொருத்தமான இடமாகும். தன் துயரத்தை மறந்திருக்கவோ, துயரத்தில் மேலும் ஆழ்ந்து துய்த்திருக்கவோ சீதாபிராட்டி இந்த இடத்திற்குத்தான் வந்திருக்கக் கூடும். இதுவே ஹனுமான் படைத்திருந்த அபிப்பிராயமாகும். அதில் தான் மறைந்திருப்பதற்கேற்ற இடம் ஒன்றை அவன் முதலில் தேடிக்கொண்டான். வான ளாவ உயர வளர்ந்திருந்த மரக்கிளை ஒன்றில் அவன் தன்னை மறைத்து வைத்துக்கொண்டான்.

அதன் பிறகு அவன் காண்பதற்கரிய காட்சி ஒன்றைக் கீழே கண்டான். மேடை ஒன்றின்மீது மெலிந்த மேனி படைத்திருந்த மாது ஒருத்தி துயரத்தில் மூழ்கியவளாகத் தென்பட்டாள். ஆனால் அவளை வாட்டிய துயரம் வியப்புக் குரியதாயிருந்தது. அது இவ்வுலக சம்பந்தமான வியவ காரங்களோடு கூடியதன்று. அது பாரமார்த்திகத்தோடு சம்பந்தப்பட்டது என்பது அதைக் காணலுற்ற குரங்கு வீர னுக்கு வெளிப்படையாயிற்று. அத்துயரத்தில் தெய்விகம் திகழ்ந்துகொண்டிருந்தது. அந்த மாதரசியோ கட்டழகே வடிவெடுத்தவளாக இருந்தாள். அவளுடைய மேனி அழகை அவள் படைத்திருந்த அருள் நாட்டம் பன்மடங்கு அதிகப்

படுத்தியது. அருள்நாட்டத்தின் விளைவாகக் கிளம்பிய ஜோதி அவளை ஒரு தெய்விக வியக்தியாகப் பொலியும்படி செய்தது. கடும் தவசிகளாலும் காண்பதற்கரிய இந்த தெய்விகக் காட்சியைக் காணும்பேறு மாருதிக்கே வாய்த்தது. மேலும் அவன் கூர்ந்து கவனித்தான். சீதாதேவி இன்னின்ன ஆபரணங்களை அணிந்திருந்தாள் என்று இராமன் விளக்கியதை வானரவீரன் ஞாபகத்தில் வைத்திருந்தான். அந்த ஆபரணங்களைத் தவத்தில் மூழ்கியிருந்த மாது அணிந்துகொள்ளவில்லை. மரக்கிளை ஒன்றில் மாட்டப்பெற்றவைகளாக அவைகள் தொங்கிக்கொண்டிருந்தன. அவள் அணிந்திருந்த மஞ்சள் ஆடை அழுக்கு மிகப்படிந்திருந்தது. அத்துகில் நெடுநாள் துவைக்கப்படவில்லை என்பது வெளியாயிற்று. அவளுடைய கூந்தல் ஒற்றை ஜடையாக இடுப்புவரை தொங்கிக்கொண்டிருந்தது. அந்த ஜடையும் மினுக்கு எடுக்கப்பெறாததாயும், கவனிக்கப்படாததாயும் அலங்கோலமாகத் தொங்கிக்கொண்டிருந்தது. உண்டியையும் உறக்கத்தையும் அவள் புறக்கணித்திருந்தாள். ஆதலால் அவளுடைய மேனி வாடி வதங்கிக் கிடந்தது. இத்தகைய அல்லோலகல்லோல நிலையில் அந்த இளம் மாதரசி ஆங்கு அமர்ந்திருந்தாள். ஆயினும் அவளுடைய தெய்விகப் பொலிவோ பாழடைந்து போகவில்லை. ராம சிந்தனையில் துயரத்துடன் அவள் ஆழ்ந்து மூழ்கியிருந்தாள். "ஆ! இவள் அன்றோ சீதாதேவி" என்னும் எண்ணம் மாருதியின் மனதில் பளீர் என்று பாய்ந்தது. அந்தக் கற்பரசி தவத்தின் சிகரத்தில் வீற்றிருந்தாள். அவளுடைய மேனி அமர்ந்திருந்தது அரக்கர் உலகில்; அவளுடைய மனம் புதைந்திருந்தது பரமாத்மாவாகிய இராமனுடைய சந்நிதானத்திலேயாம். அந்தத் தெய்விகத் தோற்றத்தை உள்ளபடி அறிந்துகொள்

னும் திறமை ராமதூதனுக்கே இருந்தது. காண்பதற்கரிய அக்காட்சியைக் காணும் வாய்ப்பு ஹனுமானுக்கே வாய்த்திருந்தது. மானசீகமாக அவன் அந்த மாதரசிக்கு வணக்கம் ஒன்றைச் செலுத்தினன். அடுத்தபடியாக அந்த மாதரசிக்கேற்ற மணாளனாயிருந்த இராமனுக்கு மற்றொரு வணக்கத்தைச் செலுத்தினன். இந்தத் தெய்விகப் பொலிவுக்கே சுந்தரகாண்டம் என்னும் பெயரை வால்மீகி மஹரிஷி பொருத்தமாக அமைத்துள்ளார்.

சூரியப் பிரகாசம் நிறைந்த காலை நேரம். ஆஞ்சனேயன் குறுகிய வடிவத்தில் மரத்தின் உச்சியில் இலைகளுக்கிடையில் மறைந்திருந்தான். கீழே நிகழ்ந்தவைகளை மேலே இருந்துகொண்டு காண அவனுக்கு இயன்றது. ஆனால் அவனைக் காண மற்றவர்களுக்கு இயலவில்லை. அவனுடைய செயல் மனச்சாட்சியின் செயலுக்கு நிகராயிருந்தது. ஆத்ம சைதன்யம் அந்தக்கரணத்துக்குள் வீற்றிருந்து கொண்டு புறத்திலே மனிதன் புரிகின்ற நல்வினை தீவினைகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறது. இந்த அரிய நிலையில் ஆஞ்சனேயன் இருந்தான்.

சிறிது நேரத்திற்குள் இலங்கேசனாகிய இராவணன் ஆங்கு வரலாயினன். மனைவிமார்களின் குழாம் ஒன்று அவனைப் போற்றிக்கொண்டும் பரிவட்டங்கள் வீசிக்கொண்டும் ஏனைய முறைகளில் வந்தனை வழிபாடுகள் செய்து கொண்டும் அவனைச் சூழ்ந்து வந்தது. இந்த ஆடம்பரக் காட்சி தென்படுவதற்கிடையில் சீதாபிராட்டியாரின் மனது ஆழ்ந்து அந்தர்முக திருஷ்டியில் ராமபிரானுடைய சாந்நித்தியத்தை நாடிச் செல்வதாயிற்று. மரக்கிளையில் மறைந்திருந்த மாருதி இராவணனுடைய மேனியின் பேரமைப்பை உற்றுக் கவனித்தான். அப்படிக் கவனித்தவன் அதன்

இலாவண்யத்தைப் பெரிதும் பாராட்டினன். அத்தகைய கட்டழகு வாய்ந்த உடலை உடைத்திருந்தவன் எதிரியாக இருக்கலாம். அதனல் என்ன? சௌந்தர்யம் எங்குத் தென் பட்டாலும் அது சௌந்தர்யம் தானே! எதிரி ஒருவனு டைய சிறப்பை உள்ளபடி காண்பதும் அதைப் பாராட்டு வதும் வீரன் ஒருவனுக்கே சாத்தியமாகும்.

இப்பொழுது இராவணன் உள்ளன்போடு தபஸ்வினி யாகிய சீதையிடம் உரையாட ஆரம்பித்தான்: "என்னு டைய அன்புக்குரியாளே, தலை கூர்ந்து நீ என்னேடு முரண் படவேண்டாம். எங்களுடைய இன ஐதிகப்படி உன்னை நான் வென்றிருக்கிறேன். இனி, நீ தப்பித்துக்கொள்ள முடியாது. ஆயினும் உன்னுடைய சம்மதமின்றி உன்னை நான் கட்டித் தழுவமாட்டேன். உன்னிடத்து அழகை அமைப்பதில் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மதேவன் தன்னு டைய ஆற்றல் முழுதையும் பயன்படுத்தியிருக்கிருன். பின்பு நீயோ மூவுலகங்களையும் வென்றுள்ள என்னை வென்றுள் ளாய். தலை கூர்ந்து பிடிவாதம் பண்ணுதே: இந்த தேவ லோகத்து மங்கையர்கள் எனக்குச் சொந்தமாயிருப்பது போன்று நீயும் எனக்குச் சொந்தமாவாயாக. வனத்தில் நாடோடியாக அலைந்து திரிகிற இராமனை மறந்துவிடு. அவன் உயிரோடு இருக்கலாம் அல்லது இறந்துபட்டுப் போயிருக்கலாம். உயிரோடு இருக்கிருன் என்றே வைத் துக்கொள்வோம். அப்படியிருந்தும் எவ்விதத்திலாவது அவன் எனக்கு மிக்கான் ஆகமாட்டான். பொருளற்ற துயரத்தைத் துய்த்துஉன்னுடைய இளமை வாய்ந்த தெய் விகப் பேரழகை வீணில்வதங்கிப் போகவிட வேண்டாம். லங்காபுரிக்குப் பட்டமகிஷி ஆவாயாக."

சீதாபிராட்டி துரும்பு ஒன்றை எடுத்துத் தன் எதிரில் தரையின் மீது போட்டாள். பிறகு அமைதியோடும் மன

ஒடுக்கத்தோடும் மேலான பாங்குடனும் அத்துரும்பைப் பார்த்துப் பேசுவாளாயினள்: "உன்னுடைய மனதை என்னிடத்திலிருந்து பிரித்தெடுத்து உனக்குச் சொந்தமாயுள்ள மனைவிமார்கள் மீது நாட்டுவாயாக. வேறொரு மனிதனுடைய கற்புடைய மனைவியின் மீது நாட்டம் வைப்பதால் நீ பாபத்துக்கு உள்ளாகின்றாய். தங்களுடைய அரசனிடத்துள்ள தீமைக்காக லங்காபுரி வாசிகள் பெரும் துயரத்துக்கு ஆளாகப்போகிறார்கள். என் தலைவனாகிய இராமனிடத்திருந்து என்னைப் பிரித்து வைக்க யாருக்குமே இயலாது. மரணத்தினின்று தப்பித்துக்கொள்ள நீ விரும்புவாயாகில் தன்னடக்கம் பழகு. அதற்குமேல் பக்திபூர்வமாக என்னை இராமனிடம் திருப்பிச் சேர்த்துவிடு. இராமனும் இலக்ஷ்மணனும் இல்லாத சந்தர்ப்பம் பார்த்து ஒரு திருடன்போன்று ஆஸ்ரமத்துக்குள் கபடமாக நுழைந்து என்னைத் திருடிக் கொண்டு வந்திருக்கிறாய். அதற்குத் தண்டனையாகப் பகிரங்கமாகப் போரிலே அவர்களால் நீ கொல்லப்படப் போகின்றாய்."

இராவணன்: மன்னிக்க முடியாத பேச்சை நீ பகர்கின்றாய். உன் மீது நான் வைத்திருக்கிற அளவு கடந்த அன்பின் காரணத்தால் உன் பேச்சை நான் சகித்துக்கொண்டிருக்கிறேன். எவ்விதத்திலும் நான் உனக்கு இரண்டு மாதம் தவணை தருகின்றேன். அதற்குள்ளாக நீ என் மனைவியாகத் தீர்மானித்து என்னுடன் படுத்து உறங்கவேண்டும். இந்த நிபந்தனையினின்று வழுவுவாயாகில் என்னுடைய சமையல்காரர்கள் உன்னைத் துண்டு துண்டாக வெட்டி என்னுடைய காலை உணவுக்காக உன்னைச் சமைத்துவிடுவார்கள்.

சீதை: கற்பரசியாகிய இராமனுடைய மனைவியோடு உன்னைத் தவிர வேறு யாரும் இப்பாங்கில் பேசமாட்டார்

கள். என்னுடைய தவத்தின் வலிவாலும் தூய்மையின் திறத்தினாலும் உன்னைச் சாம்பலாக்க எனக்கு இயலும். எனினும் உன் மீது இரக்கம்கொண்டு உன்னை நான் காப்பாற்றுகின்றேன். ஆயினும் இந்த அடாத பாபத்துக்காக இராமனுடைய அம்புகள் பொருத்தமான பாங்கிலே உன் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

சீதையினிடத்துள்ள தெய்விகப் பேராற்றலையும், அடக்கத்தையும், கருணையையும் முன்னிட்டே இப்பகுதி சுந்தர காண்டம் எனப்பெயர் பெறுகிறது. மரத்தின் மீது மறைந்திருந்து மாருதி இந்த அற்புதத்தைக்கண்டு அதிசயிக்கின்றான்.

அடியுண்டு காயம்பட்ட சிங்கம் போன்று இலங்கேசன் இப்பொழுது சீறி எழுந்தான். அவனுடைய உதடுகள் துடிதுடித்தன. இரத்தம் சுரந்து கண்களிரண்டும் செக்கச் செவேலென மாறின. ஆயினும் அவன் தன்னை ஒருவாறு சமாளித்துக்கொண்டான். இப்பொழுது சீதையைக் காவல் காத்து வந்த அலங்கோல அரக்கிகளிடத்து உத்தரவு ஒன்று இட்டான். பயமுறுத்தியும், நயமாகப்பேசியும், அனுதாபம் காட்டியும் நிகழ இருக்கும் கேடதனை விளக்கியும்—இவ்வாறெல்லாம் விதவிதமான உபாயங்களைக் கையாண்டு சிறை கிடக்கிற சீதையைச் சரிப்படுத்தவேண்டும் என்பது அவனுடைய ஆணை. பிறகு பணிவிடை பண்ணிக்கொண்டிருந்த மனைவிமார்கள் புடைசூழ மன்னனுக்குரிய மாட்சிமையுடன் அவன் அப்பால் புறப்பட்டுப் போனான்.

இராவணன், ருத்திரன் ஆகிய இரண்டு சொற்களும் ருத் என்னும் ஒரே அடிச் சொல்லிலிருந்து உருவெடுத்தவைகளாம். அழச்செய்பவன் என்பது இந்த இரண்டு சொற்களின் பொருளாகும். இனி, அழுகையில் இரண்டு பாங்கு

கள் உள. ஒன்று உலக நடைமுறைக்குரிய அழுகை; மற்றது தெய்விக நாட்டத்துக்குரிய அழுகை. துயரத்தால் தூண்டப் பெற்று இந்த இரண்டுவித அழுகைகளும் தோற்றத்துக்கு வருகின்றன. இத்தகைய அழுகைகளின் வாயிலாக நாடிய பொருள்களும் கைகூடுகின்றன. ராவணாகார அழுகை, புலம்பல், கண்ணீர் வடித்தல் முதலியன இவ்வுலக வாழ்வை ஒட்டியவைகளாம். பலப்பல பெண்பாலர்களை இராவணன் பலாத்காரமாகத் தூக்கிக்கொண்டு வந்தான். அதனால் அம்மங்கையர் கதறிப்பதறி அழுதனர். பிறகு அவன் அன்னவர்களுக்கு இவ்வுலகை ஒட்டிய இன்பங்கள், பகட்டுகள், ஆதிக்கங்களை நல்கி அவர்களைச் சமாதானப்படுத்தினான். அவன் தாராளமாக எடுத்து வழங்கிய இனிய போகப் பொருள்களைப் புறக்கணிக்க அப்பெண்பாலர்களுக்கு இயலவில்லை. ராவணாகார அழுகையின் விளைவு இதுவாகும்.

உலகத்தவர்களுடைய இந்தப் போக்குக்கு மாறான காட்சியை மறைந்திருந்த ஹனுமான் சீதாதேவியினிடத்துக் காண்கிறான். அவள் சிறையில் அடைக்கப்பட்டு இராவணனால் துன்பத்துக்கு ஆளாக்கப்பட்டாள். ஆயினும் அவளுடைய போக்கு அலாதியானதாயிருந்தது. சிறையெடுத்துச் செல்லப்பட்டதனால் அவள் பாதிக்கப்பட்டவள் அல்லள். வையக வைபோகங்களெல்லாம் அவளுடைய விரக்தி நிலையைச் சிறிதேனும் அசைக்க முடியவில்லை. உலகத்தவர்களிடத்துக் காணும் மனநிலையும் வைதேகி படைத்திருந்த மனநிலையும் ஒன்றோடொன்று ஒவ்வமாட்டா. இவ்வுலக சம்பந்தமான இன்பதுன்பங்களால் பாதிக்கப்படாதவளாகப் பாரமார்த்திகப் பெருநாட்டத்திலேயே அவள் கருத்தை வைத்திருந்தாள். தன்னுடைய நாயகனாகிய ராமபிரானோடு ஒன்றித்திருப்பதே அவள் கொண்டிருந்த குறிக்கோள்

ஆகும். தன் நாயகனிடமிருந்து பிரித்து வைக்கப்பட்டிருந்த தனல் இந்தப் பேரியல்பு அவளிடத்து உருவெடுப்ப தாயிற்று. ருத்திராகாரத் துயரம் அவளை வாட்டியது. அந்தத் துயரத்துக்கு ஏற்றவாறு அவளுடைய தூய்மை மேலோங்கு வதாயிற்று. சீதையின் தெய்விகச் சிறப்பை முன்னணிக்குக் கொண்டு வருவதற்கு இந்தப் பிரிவினை பெரிதும் பயன்பட் டது. ஆதலால் இராமாயணத்தின் இப்பகுதி சுந்தர காண்டம் எனச் சொல்லப்படுகிறது.

4. இப்பொழுது அரக்கிமார்கள் ஒருத்தி பின் ஒருத்தி யாகச் சீதையை அணுகி அவளுடைய மனதை மாற்ற முயன்றனர். இராவணனுடைய வம்சச் சிறப்பை எடுத்து ஒருத்தி விஸ்தரித்தாள். அவனுடைய பராக்கிரமங்களை யெல்லாம் மற்ருெருத்தி எடுத்து ஓதினள். இராவணன் எங்ஙனம் மூன்று உலகங்களுக்கு மன்னன் ஆகின்ருன் என் பதை மூன்ருமவள் எடுத்து மொழிந்தாள். இராவணனு டைய ஆணைக்கு அடிபணிந்து வாயு பகவானும் சூரியநாரா யணனும் வருணனும் நடந்து கொண்டது சாமானியமான செயல்கள் ஆகமாட்டா. இலங்கேசன் என்ருல் விண்ணவர் கள் நடுநடுங்கினர்கள். அவனுடைய மாளிகையின் அழகே அழகு. அவன் சேகரித்து வைத்திருந்த செல்வம் பெருமித மானது. அவன் வாழ்ந்து வந்த வாழ்க்கையில் போகத்தின் உச்சநிலையைக் காணலாம். நூற்றுக்கணக்கான மடந்தை யர்கள் இலங்கேசனுக்குப் பலப்பல விதமான பணிவிடைகள் புரிந்து கொண்டிருந்தனர். சீதாபிராட்டி பொருளற்ற பாங் கில் பரிதவித்துக் கொண்டிருந்தது பாராட்டத்தக்கதன்று. சுகபோகங்கள் அனைத்தும் அவள் கைவசத்திலிருக்கையில் அவள் தன் போக்கில் துயருற்றுக் கிடந்தது பொருந்த வில்லை. ஆழ்கடலைத் தாண்டி யாராலும் அணுக முடியாத

சிங்கார வனத்தில் அவள் அமர்த்தி வைக்கப்பட்டிருந்தாள். தப்பித்துக் கொள்வதென்பது ஆகாத காரியம். அவளை விடுவிப்பதற்கு யாராலும் முடியாது. வாய்ப்பதற்கரிய இத்தனை விதமான சம்பத்துக்களோடு கூடி வாழ்ந்திருப்பதே முறை. இத்தகைய அரிய வாய்ப்பைப் புறக்கணிப்பது மடமை. இப்படியெல்லாம் அவர்கள் சீதைக்கு ஆசையூட்டினார்கள்.

அரக்கிமார்கள் ஊட்டிய இத்தனை விதமான மையல்களுக்கும் மைதிலி கொடுத்த மறுமொழி ஒப்பு உயர்வற்றது. அவள் உறுதிப்பாட்டுடன் இயம்பியதாவது: “மாளிகைக்கும் மண்குடிசைக்குமிடையில் நான் வேற்றுமை பாராட்டுவது கிடையாது. என் உயிர்க்கு இருப்பிடம் இராமன். அவனைப் பிரிந்திருந்து நான் உயிர் வாழேன்.” பிரகிருதி தேவியின் பாங்கு இத்தகையதே. புருஷ தத்துவத்தைப் பிரிந்திருக்க அவளுக்கு இயலாது. பிரகிருதி தத்துவம் அலை போன்றது. புருஷ தத்துவம் கடல் போன்றது. கடலுக்குப் புறம்பாக அலையைக் காணமுடியாது. அதே பாங்கில் புருஷ சாந்நித்தியத்துக்குப் புறம்பாகப் பிரகிருதியைக் காண முடியாது.

பயங்கர வடிவெடுத்திருந்த அரக்கியர்கள் அடுத்தபடியாகச் சீதாபிராட்டியைப் பயமுறுத்த முந்தினர். அவளைக் கொன்று விழுங்குவதற்கான உபாயங்களையெல்லாம் அவள் காதில் விழும்படி தங்களுக்கிடையிலே அவர்கள் ஆலோசித்தனர்.

துயரமே வடிவெடுத்திருந்த சீதாபிராட்டி தன்னை வந்து தாக்கியிருந்த பரிதாபகரமான நிலையை இங்ஙனம் விமர்சனம் செய்தாள்: “மானுடப் பிறப்பு எடுப்பது துக்ககரமானது. அதற்கு மேல் வேற்றான் ஒருவனிடம் கட்டுண்டு கிடப்பது

இரண்டு மடங்கு துக்ககரமானது. பெண்ணொருத்திக்குத் துக்கங்களுள் எல்லாம் மிகக் கொடிய துக்கம் சிறை கிடக்கின்ற பொழுது தன்னுடைய உயிரைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருப்பதாம். இந்தப் பிராணிகள் என்னைப் புசித்துக் கொள்ளட்டும் அல்லது நானே எனக்கு ஒரு முடிவு தேடிக் கொள்கிறேன். இராமன் உயிரோடு இருந்தால், பிறகு என்னைப் பற்றிய செய்தி ஏதேனும் அவனுக்குக் கிட்டியிருக்குமானால், ஏதேனும் ஒருவிதத்தில் அவன் எனக்குச் செய்தி சொல்லி அனுப்பியிருந்திருப்பான். ஆனால் அத்தகையது எதையும் இதுகாறும் அவன் செய்யவில்லை. ஆதலால் நான் மேலும் பொருளற்ற பாங்கில் உயிரைப் பிடித்து வைப்பது பொருந்தாது."

இத்தருணத்தில் அரக்கியர்கள் கூட்டத்திலிருந்த திரிஜடை அங்குத் தோன்றினாள். அவ் அரக்கியர்கள் முரட்டுச் செயல் எதிலும் ஈடுபடலாகாதென்று அவள் அவர்களுக்கு எச்சரிக்கை பண்ணினாள். தான் கண்ட கனவு ஒன்றை அவள் அவர்களுக்கு எடுத்து விளக்கினாள். அதன்படி இனி வரப்போகும் நிகழ்ச்சிகளில் மாறுதல் ஒன்று அமையும். இனி இராவணன் வீழ்வது உறுதி. அதைத் தொடர்ந்து சீதையைத் துன்புறுத்தியவர்கள் எல்லார்மீதும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். ஆதலால் தங்களுடைய சொந்த நலனை முன்னிட்டு அரக்கச் செயல் எதிலும் அக்கொடிய பிராணிகள் ஈடுபடலாகாதென்று அவள் புத்திமதி புகட்டினாள். அவள் புகட்டிய நல்லறிவு பலன் தருவதாயிற்று. ராக்ஷசிமார்கள் சீதையின்மீது வைத்திருந்த கடினமான காவலைத் தளர்த்தி விட்டுத் தூங்கப்போனார்கள்.

திரிஜடைக்கும் அரக்கியர்களுக்கும் இடையில் நடந்த பேச்சு வார்த்தைகளைப் பொருள்படுத்த சீதைக்கு அவகாசம்

வாய்க்கவில்லை. தன்னுடைய சொந்தத் துயரத்திலும் எண்ணங்களிலுமே அவள் ஆழ்ந்து மூழ்கியிருந்தாள். அவள் எண்ணியதாவது: "ஆயுள் முடிவுறுங்கால் ஆடவனுக்கோ பெண்ணுக்கோ மரணம் வாய்க்கிறது. மற்றும் தன் போக்கில் வாய்க்கும் மரணத்திற்கு மாறாக ஓர் உயிர் மற்றோர் உயிரை மாய்த்துத் தள்ளுவது சாத்தியம். தற்கொலை செய்துகொள்வதால் பெரிய காரியம் ஒன்று சாதிக்கப்படுவது வாஸ்தவமானால் அதை என் போன்ற ஒருத்தி ஏன் கையாளலாகாது? ராக்ஷசர்கள் என்னைத் துண்டு துண்டாக வெட்டுவதற்கு இடம் தருவதற்கு மாறாக என் சிந்தையை ஆழ்ந்து இராமன்மீது பதிய வைத்துக்கொண்டு உடலை உகுத்துவிடுகிறேன். அதன் பிறகு இச்சடலத்தை வேண்டியவாறு புசித்து அவர்கள் இன்புற்று இருக்கட்டும்."

நள்ளிரவில் அரக்கியர்கள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தனர். சீதை மீண்டும் தீர்மானித்தாள்: "நான் சிறையில் பிடித்து வைக்கப்பட்டிருக்கிறேன். என்னை மாய்த்துக்கொள்வதற்கு என்னிடத்து ஆயுதமோ விஷமோ ஏதுமில்லை. ஆதலால் என்னுடைய நீண்ட ஜடையைக் கொண்டே கழுத்தில் சுருக்குப்போட்டு அந்த ஜடையின் நுனியை மேலே உள்ள மரக்கிளை ஒன்றில் கட்டி வைத்து விட்டுக் கீழே குதிக்கிறேன். உடலின் எடை சுருக்கை இறுகச் செய்யும். அதன் விளைவாக நான் வேண்டுகிற காரியம் நிறைவேறிவிடும்."

இங்ஙனம் கழுத்தில் சுருக்குப் போட்டுக்கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நிகழ்ந்துகொண்டிருந்தன. அதற்கிடையில் கடைசியாக ஓர் எண்ணம் தெளிவுற இந்த மாதரசியின் மனதில் உதிப்பதாயிற்று: "இந்த விபத்தானது எப்பொழுதாவது இராமனுடைய காதுக்கு எட்டுமாகில்

அதைக் குறித்து அவன் மிக வருந்துவான். ஆனால் எனக்கோ வேறு உபாயம் ஏதுமில்லை. இந்தத் தௌர்பாக்கியம் ஒன்று நீங்கலாக அவனுடைய வனவாசம் மங்களகரமாக முடிவடைவதாகுக. அவன் ஆரோக்கியத்துடனும் அகமகிழ்வுடனும் அயோத்திக்குத் திரும்பிச்சென்று மக்களுக்கு இன்பம் விளைவிப்பானாக."

அசோக வனத்தில் குறிப்பிட்ட அந்த இடத்தில் நிகழ்ந்துகொண்டு வந்த முக்கியமான செயல்களையெல்லாம் ஆஞ்சனேயன் மரத்தின்மீது இருந்துகொண்டு கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தான். ஜானகிதேவியின் உள்ளத்தில் உதித்த எண்ணங்களையெல்லாம் அறிந்து கொள்ளவல்ல ஞானியாகவும் அவன் இருந்தான். அத்தகைய பேரறிஞன் எண்ணியதாவது: "இதுகாறும் நான் எடுத்துக்கொண்டுள்ள முயற்சிகள் யாவும் வெற்றிகரமாக நிகழ்ந்துள்ளன. ஆனால் இப்பொழுதோ நான் ஒரு சங்கடத்தில் மாட்டிக்கொண்டுள்ளேன். சில நிமிஷங்கள் நான் பிந்துவேனாகில் மைதிலி அனர்த்தத்தை விளைவிக்கும் பாங்கில் மாண்டுபோவாள். நான் ஓலமிட்டால் தூங்கிக்கொண்டிருக்கிற அரக்கிகள் எழுந்திருந்து என்னைப் பிடித்துக் கொள்வார்கள். சந்தடிசெய்யாது என்னை நான் காண்பிப்பேனாகில் சீதை மருண்டு போவாள். அதன் விளைவாகத் தன்னுடைய முடிவை அவள் விரைவில் தேடிக்கொள்ளக் கூடும். ஆதலால் அச்செயலும் குழப்பத்துக்குரியதாயிருக்கிறது. அடங்கிய குரலிலே மரியாதையுடன் நான் ஏதேனும் மொழிந்தால் என்னை இராவணன் என்று தவறுதலாக எண்ணிக்கொள்வாள். ஆகவே ஒரே ஓர் உபாயம்தான் என் கைவசம் இருக்கிறது." சமயோசித புத்திபடைத்திருந்த ஹனுமான் தெளிந்த அடங்கிய குரலிலே இராமனுடைய

மகிமையையும் பராக்கிரமத்தையும் குறித்துக் கவர்ச்சிகர மாக ஓதினன். ஜானகிதேவி தற்கொலை பண்ணிக்கொள்ளப் போகும் அதே வேளையில் உள்ளத்தைக் கவரவல்ல இந்தப் பாடலும் கிளம்புவதாயிற்று. அது அந்தக் கற்பரசியின் உள்ளத்தைத் தொட்டது. தான் எடுத்துக்கொண்டிருந்த துயரம் ததும்பிய துணிச்சலினின்று அவள் பின்வாங்கினள். செவிக்கினிய விருந்தினிலே அவளுடைய கருத்துப் பாய்ந்தது. புண்பட்டிருந்த அவளுடைய உள்ளத்துக்கு அருமருந்தாக அது அமைந்தது. இராவணனுடைய நாடாகிய இலங்கையிலே இத்தகைய நிகழ்ச்சி ஒன்று நேர்வது சாத்தியமா? நிகழ்வது பாசாங்கு அன்று. ஏனென்றால் அருள் தாகத்துக்குப் பாசாங்குப் பாடல்கள் ஆறுதல் அளிக்கமாட்டா.

தனக்குப் புதியதொரு வாழ்வு வாய்த்ததாக வைதேகி உணர்ந்தாள். ஆயினும் அவள் இங்ஙனம் ஆராய்ந்தாள்: "என்னை ஏமாற்றுதற்கென்று ஏற்படுத்தப்பட்டுள்ள புதியதொரு தந்திரம் அல்லவா இது?" ஹனுமானுடைய உள்ளத்திலும் இந்த ஐயம் பிரதிபலிக்கிறது. ஆதலால் அவன் இயம்பியதாவது: "போற்றுதற்குரிய அம்மையே! நான் உன்னுடைய தலைவனால் அனுப்பப்பட்டுள்ள தூதன் என்பதை நிரூபிக்கமுடியும்."

சீதை: உன் கூற்றை நான் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

ஹனுமான்: "தாங்கள் அனுமதிப்பீர்களாகில் நான் உங்கள் முன் தோன்றி நான் இயம்புவது உண்மை என்பதை நிரூபிக்கமுடியும்." இப்படிச் சொல்லிக்கொண்டே அவன் மரத்தினின்று கீழே இறங்கி வந்து வீழ்ந்து வணங்கிவிட்டுப் பக்தி நிறைந்தவனாய் நின்றான்.

சீதையின் எதிரே தென்பட்டவன் நிறைவும் உறுதியும் உடைத்திருந்த உடல் படைத்தவனாகத் தென்பட்டான். மனத்தெளிவு அவனிடத்து மிளிர்ந்திருந்தது. ராமசேவை யில் ஊக்கம் மிகப் படைத்தவனாக இருந்தான். தேவியின் வினவுக்கு விடையாக அவள் சிறையெடுக்கப்பட்டதன் பின் நிகழ்ந்தவைகளை முறையாகத் தெரிவித்தான். அவன் கூறிய முடிவுரையாவது: "தாயே, தங்களை இழந்ததன் விளைவாக இராமனும் இலக்ஷ்மணனும் ஆறாத்துயரத்தில் அழுந்திக் கிடக்கின்றனர். எங்குத் தென்பட்டாலும் தங்களை மீட்டெடுக்க அவர்கள் தீர்மானித்திருக்கின்றனர். கிஷ் கிந்தை வேந்தனாகிய சுக்ரீவனுடைய மந்திரிமார்களுள் நான் ஒருவன். அவ்வேந்தன் தன்னுடைய நாடு, நகர், மக்கள் ஆகிய அனைத்தையும் ராமசேவைக்கென்றே ஒப்படைத் திருக்கிறான். தங்களைக் காப்பாற்றுவது ஒன்றே அக்கோமா னுடைய குறிக்கோளாகும். அவனுடைய குடிமக்களாகிய குரங்குகளனைவரும் தங்களைத் தேடிக்கொண்டு எல்லாத் திக்குகளிலும் சென்றிருக்கின்றனர். தாங்கள் இருக்குமிடத் தைக் கண்டு பிடித்து விட்டதனால் அப்பெருங்கூட்டத்தினுள் நான் பாக்கியவானாகிறேன். தம்முடைய குசலத்தைக் கூறும்படி ராமபிரான் என்னிடம் சொல்லியனுப்பினார். தங்க ளுடைய க்ஷேமத்தையும் நலனையும் குறித்து அந்தரோத் தமன் ஆவலுடன் இருக்கிறார். தன்னுடைய வந்தனை வழி பாடுகளை இலக்ஷ்மணன் என்னிடம் சொல்லியனுப்பியிருக் கிறான். தன்னுடைய போற்றுதலைச் சுக்ரீவன் என் மூலம் தெரிவிக்கிறான். நான் ராமதூதன் என்பதற்கு அத்தாட்சி யாக இதோ அவருடைய கணையாழியைக்கொண்டு வந்திருக் கிறேன்." அக்கணையாழியைச் சீதை கையில் வாங்கிக் கூர்ந்து கவனித்துப் பார்த்தாள். மூடிய கண்களிலே அம்

மோதிரத்தை அவள் ஒற்றிக்கொண்டாள். இன்பமும் பக்தியும் அவள் முகவிலாசத்தில் மிளிர்ந்தன. தன் எதிரே தென்பட்ட தூதனிடம் இப்பொழுது அவள் தாயன்பு பூணலானாள்.

ஆஞ்சநேயன் ஜானகி தேவியாரிடம் இனி நிகழப் போவதைத் தெரிவித்தான். சீதா பிராட்டியார் இருக்குமிடத்தை இராமனிடம் தெரிவித்தவுடனே சுக்ரீவனுடைய சேனையைத் துணையாகக்கொண்டு லங்காபுரியின் மீது அவன் படையெடுத்து வருவான். கொடுங்கோல் வேந்தனாகிய இராவணனையும் அவனுடைய வமிசத்தையும் அவன் ஒழித்துத் தள்ளுவான். சீதா பிராட்டியாரை அவன் மீட்டெடுப்பான். ஆகவே வரப்போகிற செயல்களைக் குறித்து வாயு குமாரன் உறுதி கூறினான்.

இப்பொழுது மைதிலியின் மனதிலே மற்றோர் ஐயம் உருவெடுத்தது. பத்து மாதம் தான் சிறை கிடந்தாய்விட்டது. இன்னும் இரண்டு மாதங்கள் தான் பாக்கி. அதற்கு மேல் இராவணன் அவளை உயிரோடு வைத்திருக்கமாட்டான். அந்த இரண்டு மாதங்களுக்குள்ளாக அவள் விடுதலை பெறாவிட்டால் கொல்லப்படுவாள். அதன் பிறகு இராமன் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளெல்லாம் பயனற்றவைகளாகப் போய்விடும். இப்பொழுது இராமனிடமிருந்து தன்னுடைய விடுதலைக்கான செய்தி வந்திருப்பதால் உயிரை மாய்த்துக்கொள்ள அவளுக்குச் சுதந்திரம் இல்லை. ஆக இருதலைக் கொள்ளி எறும்புபோன்று அவளுடைய வாழ்க்கைப் பிரச்னை கொடிய சிக்கலில் அகப்பட்டுக்கொண்டது. நம்பிக்கை ஒருபுறம், சோகத்தில் தவித்தல் மற்றொரு புறம்—இவ்விரு நிலைகளுக்கிடையில் சீதையின் மனம் ஊசலாடிக்கொண்டிருந்தது.

மைதிலிதேவிக்கு அமைந்திருந்த தடுமாற்றத்தை ஒரு நொடிப்பொழுதில் சமாளிக்க ஆஞ்சனேயன் புதிய உபாயம் ஒன்றைத் தெரிவித்தான். முதன் முதலில் யோக சித்தியைக்கொண்டு தன்னுடைய உடலை எவ்வளவு பெரியதாக வேண்டுமானாலும் அமைத்துக்கொள்ளும் திறமை தனக்கு இருந்ததை நிரூபித்தான். அடுத்தபடியாகப் பெரிய மரக் கட்டை ஒன்றன்மீது சீதாபிராட்டி அமர்ந்துகொள்ளவேண்டும். அந்த மரக்கட்டையை வெறும் விளையாட்டுப்போன்று வானர புங்கவன் வானவெளியில் தூக்கிச் சென்று கிஷ்கிந்தாபுரியில் இராமனுடைய சந்நிதியிலே இறக்கி வைப்பதாகக் கூறினான்.

வாயுகுமாரனுடைய அமானுஷ்ய வல்லமையைச் சீதாபிராட்டி பெரிதும் பாராட்டினாள். அவளை விடுவிப்பதற்கான உபாயத்தை அந்த வானர வீரன் கூறியது மிகச் சுலபமானது என்பது உண்மையே. சிறையில் சிக்கிக்கொண்டிருக்கும் யார்தான் விடுதலைக்கான இந்த உபாயத்தை ஏற்றுக்கொள்ள மறுதலிப்பர்! ஆனால் பந்தபாசத்திலிருக்கும் பொழுதும் நெறி வழுவிய பாங்கில் அப்பொல்லாங்கைத் தவிர்க்க, நெறி நிற்பவர் இணங்கார். பெண்பாலரை அபகரிப்பதில் ஆர்வம் படைத்திருந்த அரக்கவேந்தனாகிய இராவணன் அவளைத் திருடிக்கொண்டுபோனான். பின்பு பயங்கொள்ளிப் புருஷனாகிய இராமன் திறமை படைத்த ஒரு குரங்கின் உதவியைக் கொண்டு தன் மனைவியைத் திருட்டுத் தனமாகச் சிறையினின்று பிரித்தெடுத்துக்கொண்டு போய்விட்டான். இத்தகைய பழி நிரந்தரமாக இராமனைச் சார்ந்ததாகும். பழிக்கும் பொல்லாங்குக்கும் ஆளாவதை விடச் செத்து அழிந்துபட்டுப் போவது மேல். பராக்கிரமமே வடிவெடுத்தவனைகப் போர் துவக்கி அக்கிரமசாலியை

வதம் செய்து தன் மனைவியை முறையாக மீட்டெடுப்பது அயோத்தி மன்னனுடைய செயலாகும். இக்காரணங்களை முன்னிட்டுச் சீதாபிராட்டி தனக்குச் செய்தி கொண்டு வந்த வன் கையாளத் துணிந்த உபாயத்துக்குச் சம்மதம் தர வில்லை.

சீதா பிராட்டியாரின் சீரிய மனப்பான்மையை அமைதி யாக ஆஞ்சனேயன் ஆமோதித்தான். சிறை கிடந்தவேளை யிலும் அவள் படைத்திருந்த மேலாம் மனப்பான்மையை அவன் பாராட்டிப் போற்றினன். இந்தச் சீலத்தின் சௌந் தர்யத்தை முன்னிட்டே இக்காண்டம் சுந்தரகாண்டம் என் னும் பெயர் பெற்றுள்ளது.

இப்பொழுது மாருதி மைதிலி தேவியிடம் பணிந்து விண்ணப்பித்தான். தான் அவளைத் தரிசித்து அவளுடைய அனுக்ரஹத்தைப் பெற்றதற்கு அறிகுறியாக ஏதேனும் ஒரு பொருளைத் தன்னிடம் தரவேண்டுமென்று அவன் பணிந்து கேட்டான். தான் கையில் எடுத்துச்சென்ற அடையாளத் தைப் பார்த்த மாத்திரத்தில் இராமன் கொண்டிருந்த ஐயம் அகன்று போகவேண்டும். வந்த தூதனைத் திருப்திப்படுத்த சீதாபிராட்டி கடமைப்பட்டிருந்தாள். ஆதலால் சித்ரகூடத் தில் தன் தலைவனோடு வசித்திருந்தபொழுது நேர்ந்த நிகழ்ச்சி ஒன்றை அவள் தெரிவித்தாள். அசுரன் ஒருவன் காக்கையின் வடிவெடுத்து வந்து அவளைக் கொத்தி உபத்திர வப் படுத்தினன். நடவடிக்கை எடுக்க முயன்றபொழுது அக் காக்கை பறந்துபோய்த் தப்பித்துக்கொண்டது. அப் பொருந்தாத செயலைச் செய்த பொல்லாதவன் எங்கு எவ்வடி வத்திலிருந்தாலும் அவனைப் பிடித்துக்கொண்டு வரும்படி பாணம் ஒன்றை இராமன் ஏவினன். அதினின்று அந்த அரக்கன் தப்பித்துக்கொள்ள முடியவில்லை. அன்று தன்

ளைக் காப்பதில் அவ்வளவு ஊக்கம் படைத்திருந்த இராமன் இன்று ஏன் அவளை இழந்துவிட்டு உதாசீனனாக இருக்கிறான் என்பது மட்டும் தனக்கு விளங்கவில்லை என்று அந்த மாதரசி மொழிந்தாள். இராமன் இப்பொழுது செயலற்றுக் கிடந்ததுதான் தன்னை இடையறாது வாட்டி வந்தது என்றும் அவள் எடுத்து விளக்கினாள். ஆனால் அதற்கேற்ற மறுமொழியை மாருதியும் எடுத்து மொழிவானாயினன். சீதையின் பிரிவைக் குறித்து இராமன் அடைந்திருந்த வாட்டத்தை விளக்க யாருக்கும் இயலாது. அந்த வாட்டத்துக்கிடையில் சீதையின் நிலைமையை உள்ளபடி அறிந்துகொள்ளாது இராமன் எத்தகைய நடவடிக்கையையும் கையாளலாகாது. அந்நெறிக்கு உட்பட்டே அவன் அவசரப்பட்டு எந்த அஸ்திரத்தையும் கையாளாது தவித்துக்கொண்டிருந்தான் என்பதைத் தெளிவுற ஆஞ்சனேயன் தன் அன்னையிடம் தெரிவித்தான். பொருத்தமான அப்பாங்கைக்கேட்ட தேவி தன் ஆடையிலே மறைத்து வைத்திருந்த சூடாமணியை எடுத்துத் தூதன் கையில் கொடுத்தாள். அவன் சீதையைச் சந்தித்ததற்கு அதற்கும் மிக்கதோர் அத்தாட்சி ஏதுமில்லையென்று அம்மங்கையர்க்கரசி மொழிந்தாள். அச்சூடாமணியைப் பார்த்ததும் இராமனுடைய ஐயம் அறவே அகன்றுபோம். மாருதி மைதிலி தேவியைச் சந்தித்தது முற்றிலும் மெய் என்பதை அம்மேலோன் அறிந்துகொள்வான். பெறுதற்கரிய அந்த அத்தாட்சியைப் பக்தி பூர்வமாக இரு கரங்களைக்கொண்டு வானர வீரன் வாங்கினான். பின்பு தரையில் வீழ்ந்து வணங்கிவிட்டு அவன் விடைபெற்றான். தன் தலைவனிடமிருந்து நற்செய்தி கொண்டு வந்தவனை உடனே திருப்பியனுப்ப அவளுக்கு மனம் வரவில்லை. ஆயினும் ஆசி கூறிச் சீதாபிராட்டி அவனை அனுப்பி வைத்தாள்.

5. இப்பொழுது ஹனுமானுக்கு மட்டில்லா மகிழ்வு உண்டாயிற்று. லங்காபுரிக்குள் தான் பிரவேசித்ததன் முக்கியமான நோக்கம் நிறைவேறிவிட்டது. சிறிதுநேரம் ஏகாந்தத்தில் அமர்ந்து சிந்தனை பண்ணினான். தான் அடைந்துள்ள வெற்றியைத் தொடர்ந்து இன்னும் மூன்று காரியங்கள் நிறைவேறியாகவேண்டும். அம்மூன்றும் மிக முக்கியமானவைகள் அல்ல எனினும் எந்த நோக்கத்துடன் லங்காபுரிக்கு அவன் வந்தானோ அந்த நோக்கத்துக்கு ஓரளவில் அனுசரணையாகவே அம்மூன்று காரியங்களும் அமைவனவாகும். சிறைகிடந்த சீதாபிராட்டியாருக்கு வரம்பு கடந்த துன்பம் எதையாவது விளைவித்தால் ஆதிக்கத்திலிருந்தவர்களுக்கு எத்தகைய தண்டனை கிடைக்கும் என்பதற்கு முன் அறிகுறி ஒன்றை அவர்களுக்குக் காட்டியாகவேண்டும். இது முதல் செயல். இரண்டாவதாக எதிரியின் போர் வீரர்கள் எத்தகைய வல்லமை படைத்தவர்கள் என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். படையெடுத்து வருகிறவர்களுக்கு அந்த ஆராய்ச்சி நன்கு பயன்படும். மூன்றாவதாக இராவணனுடைய மனப்பாங்கைக் கண்டுபிடிக்கவேண்டும்; ஒருவிதத்தில் அது முக்கியமானது. வெற்றிக்கும் தோல்விக்கும் முகாமையாயிருப்பது மனப்பான்மை.

இராவணனுக்கு மிக விருப்பமான ஓய்வு இடமாக அசோக வனம் அமைக்கப்பட்டிருந்தது. தன் மனைவிமார்களோடு கூடிக் குலாவியிருப்பதற்கு இடையிடையே அவன் அவ்வனத்துக்கு வருவதுண்டு. மற்று, மேலான திட்டம் ஏதேனும் ஒன்றை நிர்மாணிப்பதாயிருந்தாலும் அதன் பொருட்டும் ஆங்கு அவன் வருவது வழக்கம். மகிழ்வுற்றிருப்பதற்குப் பொருத்தமான பூங்காவாக அது இருந்தது போன்று புதிய முயற்சிகளில் திட்டம் வகுப்பதற்கும் அது

பொருத்தமான இடமாயிருந்தது. ஹனுமான் செய்யக் கிடந்த செயலையும் அந்த அசோகவனத்தில் வைத்தே தீர்மானித்தான். தன் தந்தையாகிய வாயுபகவான் வனம் ஒன்றை எவ்வளவு விரைவில் பாழ்படுத்துவானோ அவ்வளவு விரைவில் அசோகவனத்தைப் பாழ்படுத்த அவன் துணிந்தான். அச்செயலை நிறைவேற்றிய பிறகு லங்காபுரிக்குச் சிறப்புற்று அமைந்திருந்த ஆலயத்தின் பெரிய கோபுரத்தைத் தகர்த்துத் தள்ளினான். பிறகு அக்கோவிலின் மேல் தளத்தின்மீது கம்பீரமாக அவன் அமர்ந்திருந்தான். தன் மீது லங்காபுரியின் ஆட்சிமுறை எத்தகைய நடவடிக்கை எடுக்கும் என்பதை அறிந்துகொள்ளுதல் பொருட்டே அவன் இந்த நாசகாரியங்களை நிறைவேற்றினான்.

மருண்டுபோன ராக்ஷசிகள் இராவணனிடம் விரைந்து ஓடினார்கள். மிகப் பருத்துக் கொழுத்திருக்கின்ற குரங்கொன்று வந்து செய்துள்ள அட்டூழியங்களையெல்லாம் அவர்கள் வேந்தனிடம் விளக்கிக் கூறினார்கள். ஒரு வேளை அந்தக் குரங்குக்கும், காவலில் கைதியாக வைக்கப்பட்டிருந்த காரிகைக்குமிடையில் ஏதாவது ரகசியமான ஒப்பந்தமிருக்கலாமென்றும் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் அரக்க வேந்தனுக்கு இது அடாத செயலாகத் தோன்றவில்லை. நிகழ்ந்தது யாது என்று பார்வையிட்டு அக்குரங்கைப் பிடித்துக் கொல்லும்படி அவன் உத்தரவிட்டான். வேட்டையாடிக் குரங்கைக் கொல்வதை வேடிக்கை பார்ப்பதற்குப் பெரும் கூட்டம் ஒன்று திரண்டது. அதை வேட்டையாடப் போனவர்கள் போர் வீரர்கள். அன்னவர்கள் அரக்கர்கோனுடைய மெய்க்காப்பாளர்கள் ஆவார்கள். ஆனால் நிகழ்ந்ததோ மெய்க்காப்பாளருடைய திட்டத்துக்கு நேர்மாறாகப் போயிற்று. அத்தனை பேரையும் அப்பொல்லாத குரங்கு எமலோகத்

துக்கு அனுப்பி விட்டது. பிறகு ஆஞ்சனேயன் தன்னைச் சுக்ரீவனுடைய தூதன் என்று பொதுமக்களுக்குப் பறை யடித்தான். தனக்கு ஒப்பான பெரிய பெரிய குரங்குகள் வந்து லங்காபுரியை அதிவிரைவில் பாழாக்கப் போகின்றன என்றும் அவன் பிரகடனம் பண்ணினன்.

ஜம்புமாலீ என்னும் பெயர் படைத்திருந்த ராக்ஷசன் ஒருவனை இலங்கை வேந்தன் அனுப்பி வைத்தான். அந்த ராக்ஷசன் திறமை மிக வாய்க்கப்பெற்றவன். குறும்புத்தனம் பண்ணிய குரங்கைக் கொன்று தள்ளும்படி அவனுக்கு உத்தரவு பிறந்திருந்தது. அந்த வில்லாளிக்கும் வானர வீரனுக்குமிடையில் போராட்டம் நிகழ்ந்தது. வில்லாளியின் உயிரை வாங்குதற்கு ஆஞ்சனேயனுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

மந்திரிமார்களுடைய புதல்வர்கள் ஏழுபேர் அதன் பின் அனுப்பப்பட்டிருந்தனர். உபத்திரவத்தை உண்டுபண்ணிய பொல்லாதவனை ஒழித்துத் தள்ளவேண்டுமென்பது அந்த ஏழு பேருக்கு இடப்பட்டிருந்த ஆணையாகும். பெரிய சேனை ஒன்றை நடாத்திக்கொண்டு மந்திரிமார்களின் மக்கள் படா டோபத்துடன் படையெடுத்து வந்தனர். கவலையற்று உட் கார்ந்திருந்த மாருதியைச செயலில் ஈடுபடும்படி அந்தச் சேனை தூண்டியது. யுத்தம் நிகழ்ந்தது நிலவுலகில் அன்று. வானத்தில் பறந்து செல்லும் திறமை படையெடுத்து வந்த வர்களிடமும் இருந்தது. தாக்குதற்கு இலக்காயிருந்த மாருதியிடத்தும் இருந்தது. வானவெளியில் மும்முரமான போராட்டம் நிகழ்ந்தது. அமைச்சர் குமாரர்கள் ஏழுபேரும் ஒருவர் பின் ஒருவராகக் கசக்குண்டு மாமிசப் பிண்டமாகக் கீழே மண்ணின்மீது வீழ்ந்தனர். இப்பொழுது இராவண னுக்குச் சிறிது கவலையுண்டாயிற்று. ஆனல் அவன் அதை

வெளியே காட்டிக்கொள்ளவில்லை. தன்னுடைய சேனைத் தலைவர்கள் ஐந்து பேருக்கு அந்த அரசன் ஆணை பிறப்பித் தான். அவன் இயம்பியதாவது. "பலப்பல தட்வைகளில் நான் தேவர்களையும் தபஸ்விகளையும் துன்புறுத்தியிருக் கிறேன். பழிவாங்கும் பாங்கில் என்னை உபத்திரவப்படுத்து வதற்காக இந்த அசாதாரணமான ஜந்துவை அவர்கள் ஏவி யிருக்கின்றனர். இப்பிராணியின் உயிரை வாங்குவது உங்க ளுடைய கடமையாகும்." சேனைத் தலைவர்களும் பொருத்த மான பட்டாளங்களைத் தங்களோடு நடாத்திச் சென்றனர். தக்க ஆயுதங்களையும் அவர்கள் தாங்கியிருந்தனர். கோயி லின் மேல்தளத்தின்மீது அசையாது அமர்ந்திருந்த ஆஞ்ச னேயனை அவர்கள் சென்று தாக்கினார்கள். பொருத்தமான போர் முறைகளையும் அவர்கள் கையாண்டனர். போர்வீரர் ஐவரும் தோல்வியடைந்து மரணத்துக்கு ஆளானார்கள். அவர்கள் திரட்டிச் சென்ற சேனையில் ஒரு துருப்புப் பாக்கி யில்லாது அனைவரும் துடைத்துத் தள்ளப்பட்டனர்.

இச்செய்தி இராவணனுடைய காதுக்கு எட்டியது. வந்திருந்த குரங்கு எத்தகைய பாங்கு படைத்தது என்பது யாருக்குமே விளங்கவில்லை. இலங்கை வேந்தன் இந்த விபத்தைப் பற்றிக் கேள்விப்பட்டுக் கொண்டிருந்தபொழுது அவனுடைய இரண்டாவது புதல்வனாகிய அக்ஷன் அவனுக்கு அருகில் இருந்தான். நிகழ்ந்த விபத்தைக் குறித்து வீரா வேசம் பூணுதற்குத் தன் தந்தைக்கு மைந்தன் அவகாசம் தர வில்லை. அக்கணமே தான் பாய்ந்து சென்று லங்காபுரிக்கு உயிர்ச் சேதத்தையும் பொருட்சேதத்தையும் விளைவித்து அவமானத்தை உண்டுபண்ணிய ஜந்துவைப் பழிக்குப்பழி வாங்கிக் கொன்று விடுவதாக அக்ஷன் பதை பதைத்தான். அவனுடைய ஆக்கிரமிப்பு உணர்வைத் தந்தை பெரிதும்

பாராட்டினன். தக்க நடவடிக்கை எடுக்கும்படி தன்னுடைய இரண்டாவது செல்வனகிய அக்ஷனை அவன் தூண்டினன். போர்புரிதற்குப் பொருத்தமான ஆயுதங்கள் பல படைத்தவனக அக்ஷன் தன்னுடைய ரதத்தில் ஊர்ந்து புறப்பட்டான். வீரம் செறிந்த துணிச்சல் படைத்தவனக அவன் தென்பட்டான். கவர்ச்சிகரமான அவனுடைய ரதத்தை வேகம் வாய்ந்த எட்டுக் குதிரைகள் இழுத்துச் சென்றன. சாதாரணமான போர்வீரன் ஒருவனைத் திகைக்கப்பண்ணும் காட்சியாக அது தென்பட்டது. உபத்திரவத்தை விளைவித்த பிராணியின்மீது ராஜகுமாரன் போர் தொடங்கினன். வல்லமை வாய்ந்த மாருதியும் அந்த ஆக்கிரமிப்பை அகமகிழ்வோடு வரவேற்றான். மந்த்ரசக்தி வாய்த்திருந்த ரதம் நிலத்திலிருந்து கிளம்பி வானவெளிக்குப் போயிற்று. வாயுகுமாரனகிய ஆஞ்சனேயன் வானவெளியில் பறந்து மேலே போனன். வானத்தில் துவங்கிய போராட்டம் பார்ப்பதற்குப் பயங்கரமாய் இருந்தது. திகைத்துப்போன வானவர்களும் அக்காட்சியைக் கண்ணுற்றார்கள். இளம் ராஜகுமாரனுடைய போர்த்திறமையையும் வீராவேசத்தையும் காணலுற்ற மாருதி எதிரியின் வல்லமையைப் பெரிதும் பாராட்டினன். அத்தகைய இளம் சிங்கம் ஒன்றை எந்தப் போர்வீரனும் மாய்த்துத்தள்ள விரும்பமாட்டான். ஆனல் இந்த இளம் சிங்கமோ கொடிய இராவணனுக்குப் பிள்ளையாய்ப் பிறந்தவன். அந்தப் பெரும் பாவிக்குச் சேர வேண்டிய தண்டனையில் ஒரு சிறு பகுதி அவனுடைய மைந்தனுக்கும் உரியதாயிருந்தது. ஆதலால் அவன்மீது கண்டிப்பான நடவடிக்கை எடுப்பது ஆஞ்சனேயனுக்கு அவசியம் ஆயிற்று. முதலில் ராஜகுமாரனுடைய போர்த்திறமையையெல்லாம் வெளிப்படுத்துவதற்கான அவகாசத்தைஆஞ்சனேயன் வழங்

கினன். அவன் வல்லமையைக் கண்டு மகிழ்ந்தான பிறகு ஆஞ்சனேயன் அஸ்வங்கள் எட்டையும் மாய்த்துப் பூமியில் வீழும்படி தள்ளினன். அடுத்தபடியாகக் கவர்ச்சிகரமான ரதத்தைத் துகள் துகளாகச் சிதைத்துப் பூமியில் விழும்படி செய்தான். கடைசியாக ராக்ஷச ராஜகுமாரனின் எலும்பு களனைத்தும் தூளாகும்படி கசக்கிப் பிழிந்து தரையில் தள்ளினன். இரத்தம் தோய்ந்த மரத்துண்டுகளும் சிறிது சிறிதாகச் சிதைக்கப்பட்டிருந்த எலும்புத் துண்டுகளும், தோலும், மாமிசமும் தடால் என்று தரையில் வந்து வீழ்ந்தன. ராஜகுமாரன் திரட்டி வந்திருந்த சேனை திகிலடைந்து நாலாபக்கமும் சிதறியோடிற்று.

தன் மகன் போரில் மடிந்துபோனதைக் குறித்து இராவணனுக்குக் கவலை அதிகம் உண்டாகவில்லை. நிலைமை சமாளிக்க முடியாததாய் இருந்ததே அவனுடைய மனதை ஒருவாறு கலக்கிற்று. இது ஒரு பெரிய நெருக்கடியாக உருவெடுக்கக் கூடுமோ என அவன் வெகுண்டான். ஆயினும் சாமர்த்தியமாகத் தான் அடைந்திருந்த கலக்கத்தைத் தனக்குள்ளேயே மறைத்து வைத்துக்கொண்டான். தன்னுடைய மூத்த குமாரனகிய இந்த்ரஜித்தைத் தன்னிடம் வரவழைத்தான். அந்த மூத்த மகனிடம் அவன் மொழிந்ததாவது: "நிலைமை வரவர மோசமாகிக்கொண்டிருக்கிறது. மேலும் அது சீர்கேடடையா வண்ணம் தடுப்பது உன் பொறுப்பாகிறது. மிக லாகவமாக ஆயுதங்களைக் கையாள வல்லவன் நீ. தேவர்களையும், அசுரர்களையும் நீ தோற்கடித்தவன். நீ புரிந்த தவத்தைப் பாராட்டி சிருஷ்டிகர்த்தாவாகிய பிரம்மதேவன் பலப்பல வரங்களை உனக்குக் கொடுத்துள்ளார். அவைகளுள் பிரம்மாஸ்திரப் பிரயோகம் மிகமிகப் பெரியதாகும். அதை நீ உடைத்திருப்பதால் மூவுலகில் யாருமே

பாராட்டினன். தக்க நடவடிக்கை எடுக்கும்படி தன்னுடைய இரண்டாவது செல்வனாகிய அக்ஷனை அவன் தூண்டினன். போர்புரிதற்குப் பொருத்தமான ஆயுதங்கள் பல படைத்தவனாகி அக்ஷன் தன்னுடைய ரதத்தில் ஊர்ந்து புறப்பட்டான். வீரம் செறிந்த துணிச்சல் படைத்தவனாக அவன் தென்பட்டான். கவர்ச்சிகரமான அவனுடைய ரதத்தை வேகம் வாய்ந்த எட்டுக் குதிரைகள் இழுத்துச் சென்றன. சாதாரணமான போர்வீரன் ஒருவனைத் திகைக்கப்பண்ணும் காட்சியாக அது தென்பட்டது. உபத்திரவத்தை விளைவித்த பிராணியின்மீது ராஜகுமாரன் போர் தொடங்கினன். வல்லமை வாய்ந்த மாருதியும் அந்த ஆக்கிரமிப்பை அகமகிழ்வோடு வரவேற்றான். மந்த்ரசக்தி வாய்த்திருந்த ரதம் நிலத்திலிருந்து கிளம்பி வானவெளிக்குப் போயிற்று. வாயு குமாரனாகிய ஆஞ்சனேயன் வானவெளியில் பறந்து மேலே போனன். வானத்தில் துவங்கிய போராட்டம் பார்ப்பதற்குப் பயங்கரமாய் இருந்தது. திகைத்துப்போன வானவர்களும் அக்காட்சியைக் கண்ணுற்றார்கள். இளம் ராஜகுமாரனுடைய போர்த்திறமையையும் வீராவேசத்தையும் காணலுற்ற மாருதி எதிரியின் வல்லமையைப் பெரிதும் பாராட்டினன். அத்தகைய இளம் சிங்கம் ஒன்றை எந்தப் போர்வீரனும் மாய்த்துத்தள்ள விரும்பமாட்டான். ஆனல் இந்த இளம் சிங்கமோ கொடிய இராவணனுக்குப் பிள்ளையாய்ப் பிறந்தவன். அந்தப் பெரும் பாவிக்குச் சேர வேண்டிய தண்டனையில் ஒரு சிறு பகுதி அவனுடைய மைந்தனுக்கும் உரியதாயிருந்தது. ஆதலால் அவன்மீது கண்டிப்பான நடவடிக்கை எடுப்பது ஆஞ்சனேயனுக்கு அவசியம் ஆயிற்று. முதலில் ராஜகுமாரனுடைய போர்த்திறமையையெல்லாம் வெளிப்படுத்துவதற்கான அவகாசத்தைஆஞ்சனேயன் வழங்

கினன். அவன் வல்லமையைக் கண்டு மகிழ்ந்தான பிறகு ஆஞ்சனேயன் அஸ்வங்கள் எட்டையும் மாய்த்துப் பூமியில் வீழும்படி தள்ளினன். அடுத்தபடியாகக் கவர்ச்சிகரமான ரதத்தைத் துகள் துகளாகச் சிதைத்துப் பூமியில் விழும்படி செய்தான். கடைசியாக ராக்ஷச ராஜகுமாரனின் எலும்பு களனைத்தும் தூளாகும்படி கசக்கிப் பிழிந்து தரையில் தள்ளினன். இரத்தம் தோய்ந்த மரத்துண்டுகளும் சிறிது சிறிதாகச் சிதைக்கப்பட்டிருந்த எலும்புத் துண்டுகளும், தோலும், மாமிசமும் தடால் என்று தரையில் வந்து வீழ்ந்தன. ராஜகுமாரன் திரட்டி வந்திருந்த சேனை நிலைகுலைந்து நாலாபக்கமும் சிதறியோடிற்று.

தன் மகன் போரில் மடிந்துபோனதைக் குறித்து இராவணனுக்குக் கவலை அதிகம் உண்டாகவில்லை. நிலைமை சமாளிக்க முடியாததாய் இருந்ததே அவனுடைய மனதை ஒருவாறு கலக்கிற்று. இது ஒரு பெரிய நெருக்கடியாக உருவெடுக்கக் கூடுமோ என அவன் வெகுண்டான். ஆயினும் சாமர்த்தியமாகத் தான் அடைந்திருந்த கலக்கத்தைத் தனக்குள்ளேயே மறைத்து வைத்துக்கொண்டான். தன்னுடைய மூத்த குமாரனகிய இந்த்ரஜித்தைத் தன்னிடம் வரவழைத்தான். அந்த மூத்த மகனிடம் அவன் மொழிந்ததாவது: "நிலைமை வரவர மோசமாகிக்கொண்டிருக்கிறது. மேலும் அது சீர்கேடடையா வண்ணம் தடுப்பது உன் பொறுப்பாகிறது. மிக லாகவமாக ஆயுதங்களைக் கையாள வல்லவன் நீ. தேவர்களையும், அசுரர்களையும் நீ தோற்கடித்தவன். நீ புரிந்த தவத்தைப் பாராட்டி சிருஷ்டிகர்த்தாவாகிய பிரம்மதேவன் பலப்பல வரங்களை உனக்குக் கொடுத்துள்ளார். அவைகளுள் பிரம்மாஸ்திரப் பிரயோகம் மிகமிகப் பெரியதாகும். அதை நீ உடைத்திருப்பதால் மூவுலகில் யாருமே

உன்னை எதிர்க்க முடியாது. கடும் தவம்புரிந்து அளக்க முடியாத வல்லமையை நீ பெற்றிருக்கிறாய். களைப்பு ஒரு பொழுதும் உன்னை அணுகாது. அறிவிலும் போர்த் திறனிலும் நீ ஒப்பற்றவன். இந்தச் சந்தர்ப்பத்தில் செயலில் ஈடுபடும்படி உன்னை அழைப்பது பொருந்தாது. ஆயினும் எதிர்பாராத நெருக்கடியை முன்னிட்டு வீரச்செயலில் நீ ஈடுபட வேண்டியதாயிருக்கிறது. தேவையான நடவடிக்கையைப் போய் நடாத்தி வைப்பாயாக. ஆக்கிரமித்திருப்பவனைச் சாமானியமானவனென்று நீ எண்ணிவிடாதே. அவனை வென்றுவிட்டு வெற்றியுடன் திரும்பி வருவாயாக."

இராவணனுடைய தலைப்பேறு ஆகிய இவ்விளைஞன் முன்பொருகாலத்தில் தேவர்களுக்கெல்லாம் தலைவனான இந்திரனைத் தோற்கடித்தவன். அக்காரணத்தை முன்னிட்டே இந்த்ரஜித் அல்லது இந்திரனை வென்றவன் என்னும் பட்டம் அவனுக்கு வாய்த்தது. இந்த இந்த்ரஜித்தும் தந்தையின் ஆணைக்கு அடிபணிந்தான்; தந்தையிடமிருந்து ஆசியைப் பெற்றான். பிறகு ரதம் ஒன்றில் ஊர்ந்து ஆஞ்சனேயன் அமர்ந்திருந்த கோயிலின் மேல் தளத்தை நோக்கிச் சென்றான். இன்னும் போராட்டம் வாய்க்கக்கூடும் என்று ஆஞ்சனேயன் எதிர்பார்த்திருந்தான். நான்கு வெண்புலிகளால் நடாத்தப்பட்ட அந்த ரதம் பயங்கரமாக ஓசையைக் கிளப்பிக்கொண்டு வந்தது. இந்த்ரஜித் கிளப்பிய நாண் ஓசையானது ரதத்தின் ஓசைக்கு மேல் ஒலித்தது. இப்போரைமைப்பைக் காணலுற்ற ஆஞ்சனேயன் தன்னுடைய வடிவத்தைப் பெரியதாக்கினான்.

இந்த்ரஜித் போரைத் துவக்கினான். மந்த்ர சக்தி வாய்ந்த பாணங்கள் பலவற்றை அவன் பிரயோகித்தான். ஆனால் ஹனுமானோ வானவெளியில் மேல் நோக்கிப்

பாய்ந்து ஒவ்வொரு பாணத்தையும் பயனற்றதாகும்படி தன் திறமையைக் காட்டினன். திரள் திரளாகப் பாணங்கள் அவன் மீது பாய்ந்தன. அப்படியிருந்தும் ஓர் அம்பாவது அவனைக் குத்துவதற்கு இடம் தராது ஒப்பற்ற சுறுசுறுப்புடன் துள்ளிக்குதித்து அவன் தப்பித்துக்கொண்டான். தன் மீது ஏவப்பட்ட அம்புக் கூட்டங்களோடு வாயு குமாரனுகிய அந்த வானர வீரன் விளையாடிக்கொண்டிருப்பவனுகத் தென்பட்டான். பயங்கர அஸ்திர சஸ்திரங்கள் அவன் மீது ஏவப்பட்டன. ஆனுல் அவையாவும் பயனற்றவைகளாகப்போய் விட்டன. மாருதியின் மேனியில் இருந்த திறமை அற்புதமாக வெளியாயிற்று. அதிசயிக்கத்தக்க அந்த விளையாட்டில் சுந்தரம் மிகப் புதைந்திருந்தது. எந்த ஆயுதமும் ஆஞ்சனேயனுடைய ஆக்கையைத் துளைக்கமாட்டாது என்னும் கூற்று இந்த்ரஜித்தினுடைய மனதில் திடீரென்று ஞாபகத்திற்கு வந்தது. ஆதலால் பிரம்மாஸ்திரத்தை மந்திரித்து அதை அவன் ஏவினுன். அதுவும் தன் வல்லமையைக் காட்டிற்று. கட்டுண்டவனுகவும் அதைஎதிர்த்துச் செயல் ஏதும் புரியாதவனுகவும் மாருதி மண்ணின் மீது கிடந்தான். தனக்கு நிகழ்ந்தது யாது என்பதுஅவனுக்குத் தெரியும். பிரம்மதேவன் தனக்குக் கொடுத்திருந்த வரத்தையும் அவன் நன்கு அறிந்திருந்தான். அஸ்திரங்கள் யாவிலும் மேலானதாயிருந்த பிரம்மாஸ்திரமும் தன்மீது நெடுநேரம் ஆதிக்கம் செலுத்தமாட்டாது என்பதைஅவன் நன்கு அறிந்திருந்தான். அதற்கிடையில் தான் இராவணனுடைய முன்னிலைக்கு இழுத்துச் செல்லப்படலாம் என அவன் எதிர்பார்த்தான்.

இப்பொழுது அறிவிலிகளாகிய ராக்ஷசர்கள் பெரும் பிழை ஒன்றைச் செய்துவிட்டனர். உறுதியான கயிறுகள் போட்டு மாருதியைக் கட்டிப்போட்டனர். அதன் விளை

வாகப் பிரம்மாஸ்திரம் பயனற்றதாய்ப் போயிற்று. இந்த மர்மத்தை அந்த ராக்ஷசக் கூட்டம் அறிந்திலது. ஆனால் வெற்றி வீரனாகிய இந்த்ரஜித்துக்கும் தோல்வியுற்றவன் போன்று கிடந்த மாருதிக்குமே இந்த மர்மம் நன்கு விளங்கியிருந்தது. இருவரும் எதிர்பாராதிருந்த இந்த முறியடிச் செயலைக் குறித்து மூச்சு வாங்கவில்லை. வென்றவனும், வெல்லப்பட்டவன் போன்று கிடந்தவனும் தத்தம் காரியத்தை நிறைவேற்றிக்கொள்ளுதல் பொருட்டே வாய் பொத்தியிருந்தனர். இப்பொழுது அரக்கர்குழாம் மாருதியை வேண்டியவாறு புடைத்தது, அடித்தது, குதித்தது, ஏளனம் பண்ணியது. தரையின்கண் அவனை இழுத்துக்கொண்டு இராவணனிடம் சென்றது.

அந்த அரக்க வேந்தனோ கோபாவேசத்தில் பொங்கிக் கொண்டிருந்தான்.

6. இப்பொழுது ஹனுமான் இலங்கை வேந்தனாகிய இராவணனை மூன்றாம்தடவை காணலாயினன். முதன்முதல் அவன் பள்ளியறையில் உறங்கிக் கொண்டிருந்தபொழுது பார்த்தான். இரண்டாம் தடவை அசோக வனத்தில் காம வெறி பிடித்தவனாக சீதா பிராட்டியாரை வசப்படுத்த முயன்றபொழுது அவனைப் பார்த்தான். அப்பொழுது ஆஞ்சனேயன் மறைந்திருந்தான். இப்பொழுதோ மூன்றாம் முறையாக நேருக்கு நேராக அந்தப் பேரரசனைப் பார்க்கலாயினன். கொலுமண்டபத்தில் பகட்டு மிக நிறைந்த படாடோபத்தோடு அவன் வீற்றிருந்தான். குற்றம் சாட்டப்பட்ட இந்தக் குரங்கு அந்த ராஜாதி ராஜனுடைய முன்னிலைக்கு இழுத்து வரப்பட்டது. அது எத்தகைய பொல்லாத விலங்கு என்பது வேந்தன் முன்னிலையில் காண்பிக்கப்பட்டது. வழி நெடுகக் குழுமியிருந்த அரக்கர்கள் அந்த

விலங்கைப் பார்த்து எள்ளி நகையாடினர். கடைசியாக அது விசாரணைக்காகக் கொண்டுவரப்பட்டிருந்தது. கைது செய்யப்பட்டவன் போன்று தென்பட்ட குரங்குவீரன் நுண்ணறிவு மிக வாய்க்கப்பெற்றவன். குறிப்பு அறியும் திறனில் அவனுக்கு மிக்கார் யாருமில்லை. லங்காபுரி வேந்தன் படைத்திருந்த பெருமைகளனைத்தையும் நேரில் பார்க்கும் வாய்ப்பு இப்பொழுது அவனுக்கு அமைந்திருந்தது. இராவணனுடைய உடலமைப்போ கவர்ச்சிகரம் மிகப் படைத்திருந்தது. பராக்கிரமமே வடிவெடுத்தவன் அவன். தன்னுடைய மாட்சிமையை விளம்பரப்படுத்திக் கொள்வதில் அவன் நிபுணன். பண்பாட்டில் அவன் மேலோன். ஒழுங்குப்பாட்டுடன் மற்றவர்களோடு நடந்துகொள்ளுதலில் அவன் தேர்ச்சி மிகப் படைத்திருந்தான். ஆட்சி முறைமையில் அவன் ஒப்பற்றவன். திட்பமும் மனத்தெளிவும் வாய்க்கப்பெற்றிருந்த மந்திரிமார்களுக்குப் பொருத்தமான தலைவனாக அவன் திகழ்ந்தான். அதே பாங்கில் வல்லமையே வடிவெடுத்திருந்த சேனைத் தலைவர்களுக்கும் இறைவனாக அவன் இலங்கினான். அதிவிரைவில் அவ்வேந்தனை மதிப்புப் போட்ட மாருதி தனக்குள் எண்ணிக்கொண்டதாவது: 'இந்த ராக்ஷச ராஜாவிடம் காமநோய் ஒன்று மட்டும் குடிகொள்ளாதிருக்குமாகில் தேவேந்திரனையே ராஜநீதியில் அவன் தோற்கடித்திருப்பான்.

இராவணன் ஹனுமானைப் பொங்கிய சினத்துடன் கூர்ந்து பார்த்தான். பிறகு மந்திரிமார்களுள் ஒருவனாகிய பிரகஸ்தனிடம் இறைமையோடு கூடிய ஆணையை இங்ஙனம் பிறப்பித்தான்: "இந்த ஜந்து எங்கிருந்து வந்துள்ளது? இது கொண்டுள்ள நோக்கம் யாது? சிறையைக் காவல் காத்து வந்த அரக்கிமார்களை இது ஏன் பயமுறுத்தியது?

அசோகவனத்தை இது அழித்ததன் நோக்கம் யாது?
வேற்றார் யாருக்குமே எட்டமுடியாத இந்த லங்காபுரிக்குள்
எதற்காக இது நுழைந்து வந்திருக்கிறது? இப்பொல்லாத
பிராணி கொலைத் தொழிலில் ஏன் ஈடுபட்டிருக்கிறது?"

ஹனுமான் நேரே இராவணனிடம் விடைவிடுத்த
தாவது: "நான் இந்திரனுக்கோ, வருணனுக்கோ, குபேர
னுக்கோ, விஷ்ணுவுக்கோ பிரதிநிதியாக இங்கு வரவில்லை.
நான் மாறுவேஷம் பூண்டிருப்பவனும் அல்லேன். நான்
வெறும் குரங்கே. அசோகவனத்தை நான் அழித்தது வாஸ்
தவம். அரசனை நேரில் சந்திப்பதற்கு ஒரு வாய்ப்புக்
கிடைக்கும் என்னும் நோக்கத்துடன் அச்செயலைச் செய்
தேன். ஆனால் போர்வீரர்கள் என்னைப் பிடித்துக்கொண்டு
வருவதற்குப் பதிலாகக் கொல்ல முயன்றனர். தற்பாதுகாப்
பின் பொருட்டு நான் அவர்களை அடித்தேன். என் அடி
களைத் தாங்கமுடியாதவர்களாக அவர்கள் மாண்டுபோயினர்.
பிரம்மதேவனிடமிருந்து நான் ஒரு வரம் பெற்றிருக்கிறேன்.
அந்த வரத்தின்படி எந்த ஆயுதமும் என்னை வெட்டமாட்
டாது. என்னைக் கட்டிப் பிடிப்பதற்கும் எதனாலும்
இயலாது. ஆனால் வேண்டுமென்றே பிரம்மாஸ்திரத்தைக்
கொண்டு கட்டுண்டு கிடப்பதற்கு நான் இணங்கினேன்.
உன்னுடைய முன்னிலைக்கு என்னை அவர்கள் கொண்டுவர
வேண்டும் என்னும் நோக்கம்தான் நான் கட்டுண்டு அகப்
பட்டதன் காரணமாகும். இப்பொழுது என்னை யாரென்று
உனக்குத் தெரிவிக்கிறேன். ராமதூதனாக நான் இங்கே
வந்திருக்கின்றேன். உனக்குத் தெரிவிக்கவேண்டிய செய்தி
ஒன்று [illegible]டமிருக்கிறது.

[illegible] சேர்ந்து நான் கூறுவதைப் பொறுமையுடன்
கேள். தர்மத்தின் பலனை அனுபவிக்கும் பாங்கு உன்னை

விட்டு அகன்று போய்விட்டது. நீ இதுகாறும் செய்துள்ள அதர்மத்தின் பலனாக வருந்தும் காலம் இப்பொழுது உனக்குத் துவங்கியிருக்கிறது. சீதையை இங்கே தூக்கி வந்த தன் விளைவாக உன்னுடைய மரணத்தையே தூக்கி வந்திருக்கிறாய். பக்தி பூர்வமாக நீ அவளை இராமனிடம் ஒப்படைத்தால் நீ காப்பாற்றப்படுவாய். ஆனால் அவள் இங்கு உன் நாட்டிலே வருந்திக்கொண்டு கிடக்கும்படி செய்ததன் வாயிலாக உனக்கும், உன் நாட்டு மக்களுக்கும் விலக்க முடியாத துயரத்தை நீ வரவழைத்திருக்கிறாய். இராமனுடைய திறமையை நீ சரியாக அறிந்துகொண்டவனல்லை. அது மிக அல்பமானதென நீ மதிப்புப் போட்டிருக்கிறாய். உன்னுடைய ஜனஸ்தானம் முழுவதையும் தன்னந்தனியனாக இருந்துகொண்டு அவன் தகர்த்துத் தள்ளிவிட்டான். நீ செய்கிற அடாத செயலை வாலியும் செய்ய முயன்றான். சுக்ரீவனுடைய மனைவியை முறைதவறி அபகரித்துக்கொண்டதற்குத் தண்டனையாக ஒரே பாணத்தைத் தொடுத்து இராமன் அந்த வாலியை மறுலோகத்திற்கு அனுப்பிவிட்டான். எந்த வாலியைப்பற்றி எண்ணினால் நீ நடுநடுங்குவாயோ அந்த வாலியின் கதி இது."

இப்பொழுது ஹனுமான் இராவணனுடைய கண்களைக் கூர்ந்து கவனித்தான். உள்ளத்தினுள் நடுக்கம் அவனை வாட்டிக்கொண்டிருந்ததை ஹனுமான் கண்டுகொண்டான். அவன் தூது வந்ததில் அவனிடம் அடங்கியுள்ள குறிப்பறியும் திறமை இங்ஙனம் வெளியாயிற்று. இதை முன்னிட்டும் இது சுந்தர காண்டம் எனப்படுகிறது.

" கிஷ்கிந்தாபுரிக்கு அரசனாகச் சுக்ரீவனை இராமன் நியமித்திருக்கிறான். அந்தச் சுக்ரீவன் ஒரு நண்பன் என்கின்ற முறையில் உனக்கு என் மூலம் செய்தி சொல்லி

அனுப்பியிருக்கிறான். நீ இராமனிடம் மன்னிப்புக்கேட்டுக் கொண்டு சமாதானம் செய்துகொள்ளவேண்டும். அப்படிச் செய்ய நீ தவறினால் சுக்ரீவன் லங்காபுரியின்மீது படையெடுத்து வருவான். அவனுடைய சேனையில் என்போன்ற வானரங்கள் எண்ணிக்கையில் அடங்காதவைகள் இருக்கின்றன. மூவுலகங்களில் வசித்திருப்பவர்களுள் யாருமே உன்னைக் கொல்லமுடியாது என்னும் வரத்தை நீ பிரம்மதேவனிடமிருந்து பெற்றிருக்கிறாய். அம்மூவுலக வாசிகளுள் நரர்களையும் வானரர்களையும் நீ கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. அவர்களால் உனக்கு என்ன தீங்கு வரப்போகிறது என்று அற்பப் பிராணிகளாகக் கருதி அவர்களை ஒதுக்கி வைத்துள்ளாய். ஆனால் உன் கதி என்ன ஆகப்போகிறது தெரியுமா? நர வடிவத்தில் இராமனும், வானர வடிவத்தில் சுக்ரீவனும் உன்னை ஒழித்துத் தள்ளுதற்கு முகாமையாக இருக்கப் போகிறார்கள். நிலைமை கைநழுவிப் போவதற்கு முன்பே நீ செய்துள்ள குற்றத்தை நிவர்த்தி பண்ணிக்கொள் என்று நான் உன்னை மன்றாடிக் கேட்கிறேன்.''

துணிச்சல் நிறைந்த இந்தக் குரங்கு புகட்டிய நல்லறிவைக் கேட்ட இராவணனுக்குச் சீற்றம் தலைக்குமேல் ஏறியது. அப்பொழுதே அவ்விடத்திலேயே அக்குரங்கைத் துண்டு துண்டாக வெட்டித் தள்ளும்படி அவன் ஆணையிட்டான். ஆனால் இலங்கை வேந்தனுடைய இரண்டாவது இளைய சகோதரனாகிய விபீஷணன் குறுக்கிட்டான்: "இவன் விவேகம் மிகப்படைத்தவன். இதுகாறும் எந்த நாகரிகம் வாய்ந்த அரசனும் தன்னிடம் வந்த தூதனைக் கொன்றது கிடையாது" என்னும் கோட்பாட்டைத் தன் தமையனுக்கு அவன் எடுத்து விளக்கினான். தூதனைக் கொல்லுதற்கு

எந்தச் சாஸ்திரத்திலும் அனுமதி கிடையாது என்பதையும் அவன் எடுத்து விளக்கினன்.

துணிச்சலும் போக்கிரித்தனமும் வாய்ந்தது இந்த வானரம் என்று இராவணன் பாராட்டினன். அத்தகையவனுடைய சீற்றத்தை விபீஷணன் ஒருவாறு தணித்தான். தூதர்களுக்குத் தண்டனை தருவது முற்றிலும் அவசியம் என்றல் அவர்களை அவமானப்படுத்தலாம் அல்லது அலங்கோலப்படுத்தலாம், அதற்குமேல் தண்டனை வழங்குதலில் வரம்பு கடந்து போகலாகாது. உயிரை வாங்குதற்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் அனுமதி கிடையாது. மற்ளொரு முக்கியமான விஷயம். இந்தத் தூதன் திரும்பிப்போய் இங்கு நிகழ்ந்தவைகளை அரசகுமாரர்கள் இருவரிடமும் தெரிவித்துப் படையெடுத்து வரும்படி தூண்டுவான். அன்னவர்கள் லங்காபுரியின்மீது முற்றுகை போடும்பொழுது அவர்களை எதிர்த்துப் போர் புரிந்து தோற்கடிக்கவேண்டும். இங்ஙனம் இளையவன் இயம்பியதை இராவணன் ஆமோதித்தான்.

அரக்க இயல்பே வடிவெடுத்தவன் இராவணன். ஆதலால் ஹனுமானுக்கு எந்தவிதமான தீங்கும் செய்யாது அவனை ஓட்டிவிட இராவணனுடைய சிற்றியல்பு இடம் தரவில்லை. தற்பெருமையே வடிவெடுத்திருந்த வானரத்தின் வாலிலே எண்ணெய் தோய்ந்த கந்தைத் துணிகளைச் சுற்றிக் கட்டி அதில் தீ மூட்டி நகரம் முழுதிலும் அதை ஊர்வலமாக இழுத்துச் செல்ல வேண்டுமென்று அவன் உத்தரவு பிறப்பித்தான். அந்த உத்தரவும் செயலாக வடிவெடுத்தது. பின்பு இச்செய்தி சீதாபிராட்டியாரின் காதுக்கு எட்டியது. தன் தலைவனுடைய தூதனுக்கு எந்தவிதமான தீங்கும் வந்துவிடலாகாது என்று அந்த மாதரசி பிரார்த்தனை பண்ணி

ஞள். அவள் பண்ணிய பிரார்த்தனையும் நிறைவேறிற்று. எரிந்து கொண்டிருந்த தீ தன் வாலைத் தகியாது இருந்ததைக் குறித்து ஆஞ்சனேயன் அதிசயப்பட்டான். அந்தத் தூதனை அவமானப்படுத்துவது அரக்கர் குழாத்தினுடைய நோக்கமாயிருந்தது. ஆனால் சமயோசித புத்தி படைத்திருந்த வாயு புத்திரன் அந்த நெருக்கடியைத் தனக்கேற்றதாகப் பயன்படுத்திக் கொண்டான். எங்கெந்த இடங்களில் எப்படியெல்லாம் தீ மூட்டினால் லங்காபுரியைத் தகனம் பண்ணலாமோ அந்தந்த உபாயங்களையெல்லாம் நடந்து போய்க்கொண்டே அவன் திட்டம் போட்டான். ஆஞ்சனேயனை அவமானப்படுத்தும் பாங்கிலும், ஊராருக்கிடையில் மகிழ் ஊட்டும் பாங்கிலும் நிகழ்ந்த ஊர்வலம் முடிவுற்றது. அக்கணத்தில் ஆஞ்சனேயன் வடிவத்தில் பெரியவன் ஆனான். அவனை நடாத்தி வந்த உத்தியோகஸ்தர்களை உதைத்துக் கொன்றான். பிறகு ஆங்காங்கு வீடுகளின்மீது அவன் தாவித் தீ மூட்டினான். சிறிது நேரத்திற்குள் அப்பட்டணம் முழுதும் அக்னி ஜுவாலையாகக் காட்சி கொடுத்தது. அதனால் விளைந்த பொருள் நஷ்டமோ அளவிட முடியாதது. குரங்கின் வாலில் எரிந்துகொண்டிருந்த நெருப்பைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்த ஊரார் இப்பொழுது தலைதலையாகப் புடைத்துக்கொண்டு கதறிப் பதறி அழ ஆரம்பித்தனர். (நல்லான் ஒருவனுக்குச் செய்யும் தீங்கு ஒரு கணப்பொழுதில் பன்மடங்கு அதிகரித்துத் தீங்கிழைத்தவனுக்கே வந்து வாய்க்கிறது.) ஆஞ்சனேயன் கடலில் குதித்து நீராடினான். வாலில் எரிந்துகொண்டிருந்த தீ அணைந்து போயிற்று. வாலுக்குக் கேடு ஒன்றும் வரவில்லை.

மாருதியின் மனதில் இப்பொழுது திடீரென்று ஆவல் ஒன்று உதயமாயிற்று. சினம் மனிதனுக்குச் சத்துரு. அது

அவனுடைய நல்லறிவை நாசப்படுத்துகிறது. இந்த மகா வீரன் தீயோடு விளையாடியது தேற்றம். விளையாட்டில் சுந்தரம் செறிந்திருந்ததும் தேற்றம். ஆனால் ஒரு வேளை அந்த விளையாட்டை அவன் வரம்பு கடந்து நிகழ்த்திவிட்டானோ! அந்த ஊழித் தீயில் ஒருவேளை சீதையும் வெந்து பட்டுப் போனாளோ! அப்படி ஆகியிருந்தால் அது சீர்படுத்த முடியாத கேடாக முடிந்திருக்கும். உள்ளப் பதைபதைப்புடன் சீதை இருந்த இடத்துக்கு அவன் சென்றான். அவளோ மங்கள மூர்த்தியாக ஆழ்ந்து ராம தியானத்தில் மூழ்கியிருந்தாள். 'ராமஜயம்' என்று ஆஞ்சநேயன் ஓலமிட்டான். தன்னை மீட்டெடுக்கத் தன் இறைவன் அதிவிரைவில் வரவேண்டுமென்று அவள் சுருங்கச் சொல்லி முடித்தாள். ஹனுமான் வீழ்ந்து வணங்கினான். தன் அன்னையின் ஆசியைப் பெற்றான். அரிஷ்டம் என்னும் குன்றின்மீது ஏறி வடதிசையை நோக்கி வானத்தில் பாய்ந்தான். சிறிது நேரத்தில் மகேந்திரமலை அவன் காட்சிக்கு வந்தது. அதைப் பார்த்ததும் அவன் ஆனந்த ஆரவாரத்தை எழுப்பினான்.

தென் திசையினின்று வானவெளியில் மாருதி பறந்து வருவதை அவனுடைய கூட்டாளிகள் கவனித்தார்கள். அவன் வெற்றி வீரனாகத் திரும்பி வருகிறானென்று அவர்கள் உறுதி கட்டினார்கள். பிரகாசம் வாய்ந்த முகவிலாசத்துடன் அவன் நிலத்தில் இறங்கினான். ஆரவாரமான ஆடல்களும் பாடல்களும் நிகழ்வனவாயின.

7. தான் சீதா பிராட்டியாரைக் கண்டு பிடித்தாயிற்று என வந்தவன் கூறினான். அவள் தூய்மைக்கு உறைவிடம். இராமனிடம் மீண்டும் யோகம் பூண அவள் தவித்துக்கொண்டிருந்தாள். விவரங்கள் யாவையும் அறிந்துகொள்ள அவ

லுற்றிருந்த தன் கூட்டத்தாருக்கு நிகழ்ந்த யாவையும் அவன் விரிவாக எடுத்து விளக்கினான்.

இப்பொழுது இளவரசனாகிய அங்கதன் தனக்குத் தோன்றிய கருத்து ஒன்றை மற்றவர்களுக்குத் தெரிவித்தான். மாருதி சீதையைக் கண்டு பிடித்ததும், செயலில் ஈடுபடுவதற்கான முன்னேற்பாடுகளை முடித்து வந்திருப்பதும் பாராட்டத்தக்க செயல்களாகும். இப்பொழுது உடனடியாக அவர்களனைவரும் லங்காபுரிக்குப் பறந்து சென்று அதை ஆண்டுவந்த அரக்கவேந்தனை அழித்து ஒழித்து விட்டுச் சீதையை மீட்டெடுத்து இராமனிடம் கொண்டுவந்து ஒப்படைப்பது உசிதம் என அவன் கருதினான். சீதையைக் கண்டு பிடித்த செய்தியைத் தெரிவிப்பதை விட அம்மாதரசியை மீட்டெடுத்து வந்து தன் மணாளனிடம் ஒப்படைப்பது சிறந்த செயல் அல்லவா என்பது அங்கதனுடைய கருத்து.

அக்கூட்டத்தில் வயதில் மிக மூத்தவன் ஜாம்பவான். தன்னுடைய கருத்தையும் அவன் தெரிவித்தான். இராமனையும் சுக்ரீவனையும் நெடுநாள் ஆவலில் ஈடுபட்டிருக்க விடலாகாது. ஆஞ்சனேயன் சாதித்தது அற்புதச் செயலாகும். அவன் சாதித்திருப்பதே போதுமானது. அடுத்து எச் செயலை எங்ஙனம் சாதிப்பது என்பதை வேந்தர்களாகிய அவர்கள் இருவருமே முடிவு கட்டட்டும். இக்கூற்றை ஏனைய எல்லாரும் ஏகோபித்து ஏற்றுக் கொண்டனர். குரங்குக் கூட்டம் இப்பொழுது குஷியாகக் கிஷ்கிந்தையை நோக்கிப் பறந்து சென்றது.

ததிமுகன் என்பவன் சுக்ரீவனுடைய சிற்றப்பா. மது வனத்திற்கு அவன் அதிபதி. அவ்வனத்தை அவன் நன்கு பாதுகாத்து வளர்த்து வந்தான். அதிகாரத்தில் இருந்த அவன் விரைந்தோடிச் சுக்ரீவனிடம் முறையிட்டான். தென்

திசைக்குச் சென்றிருந்த குரங்குக் கூட்டம் பலவந்தமாக மதுவனத்திற்குள் நுழைந்தது. காவலாளர்களை அவ்வான ரங்கள் தாக்கின. வனத்திலிருந்த பழுத்த கனி வர்க்கங்களைப் பிடுங்கிப் புசித்தன. அகப்படக் கூடிய தேன் முழுவதையும் குடித்தன. தாறுமாறாகக் குதித்துச் சில மரக்கிளைகளை ஒடித்தன. முரட்டுத்தனமான குதியாட்டத்தில் அவைகள் யாவும் ஈடுபட்டுக் கொண்டிருந்தன. இங்ஙனம் ததிமுகன் செய்தி சொன்னன். இதைக் கேட்ட சுக்ரீவன் சரியான முடிவுக்கு வந்தான். தென்திசைக்குச் சென்ற வானரங்கள் வைதேகியைக் கண்டுபிடித்து விட்டார்கள் என்பது கிஷ்கிந்தைக் கோமானுடைய யூகம்.

இப்பொழுது அதே கூட்டம் குதியாட்டத்துடன் வேந்தன் முன்னிலைக்கு வந்தது. ஹனுமான் இராமனுடைய முன்னிலையில் வீழ்ந்து வணங்கினன். எழுந்து நின்று அவன் இயம்பியதாவது: "பிரபோ! கற்பினுக்கு அரசியாகிய சீதாதேவியைக் கண்டேன். புனிதத்தின் சிகரமாக அவள் திகழ்கின்றாள். இலங்கேசனாகிய இராவணனுடைய சிறையிலே அவள் அடைபட்டுக் கிடக்கின்றாள். ஆயினும் அவளுடைய நிஜசொரூபம் முழுதும் உன்னை நாடித் தவித்துக் கொண்டிருக்கிறது." ஆங்குக் குழுமியிருந்தவர்களுக்கிடையில் திடீரென்று மகிழ்வு உதயமாயிற்று. சிறிது நேரத்துக்குப் பின்பு இந்த நல்ல செய்தியைக் கேட்டவர்களுக்கிடையில் உண்டான பரபரப்பும் ஒருவாறு அமைதியுற்றது. அதன் பிறகு தான் நிகழ்த்திய திண்ணிய செயல்களையெல்லாம் தெளிவுற ஆஞ்சநேயன் எடுத்து இயம்பினன். எந்த மரத்தடியில் சீதாபிராட்டி சிறையுண்டு கிடந்தாளோ அந்த மரத்தின் மீது கிளைகளுக்கிடையில் மறைந்திருந்துகொண்டு நிகழ்ந்தவைகளையெல்லாம் அவன் நேரில் காணலாயினன்.

தன் ஆற்றல்களனைத்தையும் கையாண்டு இராவணன் சீதை யைத் தனக்கு உரியவளாக்க முயன்றான். அவனுடைய முயற்சிக்குக் கைம்மாருக அவனுக்கு அசப்பட்டது அலட் சியமும் அருவருப்புமாம். கால நிபந்தனை ஒன்றைச் சீதை யின்மீது சுமத்திவிட்டுத் தோல்வியடைந்தவனுக இராவணன் திரும்பிச் சென்றான். அதன் பிறகு தன்னையே மாய்த்துக் கொள்ள மைதிலி தீர்மானித்தாள். தற்கொலை யாருக்குமே தகாதது. ஆயினும் சீதாபிராட்டி செய்த தீர்மானம் முற்றி லும் பொருத்தமானது. அவள் சித்ரகூடத்தில் இராமனோடு வசித்து வந்தபோது அசுரன் ஒருவன் காக்கையின் வடிவம் எடுத்து வந்து அவளை உபத்திரவப்படுத்தினன். அந்த அசுரனைப் பிடித்து வரும்படி மந்த்ரசக்தி வாய்த்திருந்த அம்பு ஒன்றை இராமன் ஏவினன். அசுரன் சென்றவிடத்துக் கெல்லாம் அவனைப் பின்தொடர்ந்து சென்று அந்த வல்லமை வாய்ந்த பாணமானது அவனைப் பிடித்துக்கொண்டு வந்தது. அன்னவன் சரணாகதி அடைந்த பின்பே அவனுக்கு உயிர்ப்பிச்சை தரப்பட்டது. பஞ்சவடியில் நடந்த நிகழ்ச் சியோ சீதைக்கு வெறும் உபத்திரவம் மட்டுமன்று; அவளு டைய சொரூபம் முழுதும் அபகரித்துக்கொண்டு போகப் பட்டது. அத்தகைய அடாத செயலைச் செய்த அரக்கன்மீது இராமன் நடவடிக்கை ஏதும் எடுத்துக்கொள்ளாதிருந்தது வியப்புக்குரிய விஷயமாகும். ஒருவேளை சீதை செத்து ஒழிந்துபோனளோ என்ற உத்தேசத்தினலோ அவன் செய லற்று இருந்தான் என சீதை யூகித்தாள். அவள் ஆதரிப் பாரற்று அவதிப்பட்டுக் கிடந்ததற்குக் காரணம் வேறு ஏதுமில்லை. அத்தகைய தௌர்பாக்கிய நிலையில் தன் உயிரைத் தாங்கிப் பிடித்துக்கொண்டிருப்பதில் பொருள் ஒன்றுமில்லை. ஆதலால் தன்னைத்தானே மாய்த்துக்கொள்ள அவள் முடிவு கட்டினள். ஹனுமான் மட்டும் ஒரு நிமிஷ

நேரம் பிந்தியிருந்திருப்பானுகில் சீர்ப்படுத்த முடியாத விபத்தாக அது போயிருந்திருக்கும். தக்க தருணத்தில் ராம மகிமையையும் அவனுடைய முன்னோர்களுடைய மாண்புகளேயும் பற்றி மாருதி அடங்கிய குரலில் கானம் பண்ணினுன். அது தன் காதில் வீழ்ந்ததும், தன் உயிர்ச் சேதத்தைச் சீதை சற்று ஒத்திவைத்தாள். ஹனுமான் எடுத்துச்சென்ற செய்தி அவள் பூண்டிருந்த தீர்மானத்தைத் திருத்தியமைக்கும்படி தூண்டியது. சீதைக்குப் புதிய உயிர் வந்தது. இராமனுடைய வருகையை எதிர்பார்த்து இன்னும் ஒரு மாதகாலம் தன் உயிரைத் தாக்குப் பிடித்து வைத்திருப்பதாக அவள் தீர்மானித்துள்ளாள். அதற்கிடையில் இராமன் லங்காபுரியின்மீது படையெடுத்துச் சென்று பொல்லாங்கு செய்த பாதகனுகிய ராக்ஷசவேந்தனைத் தண்டிக்காவிட்டால் சீதை மறைந்துபட்டுப் போவாள். இந்த நெருக்கடியை ஆஞ்சனேயன் உள்ளபடி ராமபிரானுக்கு எடுத்து விளக்கினுன்.

இந்த நற்செய்திகளையெல்லாம் எடுத்து இயம்பிக் கொண்டிருந்ததற்கிடையில் சீதாபிராட்டி கொடுத்தனுப்பியிருந்த சூடாமணியை ஹனுமான் இராமனுடைய முன்னிலையில் வைத்தான். அதைக் காணலுற்றதும் இராமனும் சற்று அயர்ந்துபோனுன். அவனுடைய முகவிலாசத்தில் இன்பமும் துன்பமும் மாறிமாறித் தாண்டவமாடின.

அடுத்தபடியாக இராவணனுடைய முன்னிலைக்குத் தான் போய்ச் சேர்வதற்கான உபாயத்தை எங்ஙனம் கையாண்டான் என்பதை மாருதி விரிவாகத் தெளிவுபடுத்தினுன். லங்காபுரி வேந்தன் வியப்புக்குரிய ஒரு மூர்த்தியாவான். தகைமைகள் பல அவனிடம் திகழ்ந்துகொண்டிருந்தன. ஆயினும் அவனுடைய வாழ்வு முழுவதையும் பாழாக்குகின்ற பாங்கில் அவனைப் பிடித்திருந்தது காமம் என்னும் ஒரு

கொடிய நோய். எக்காரணத்தை முன்னிட்டாவது மன்னிக்க முடியாத அந்த மகாபாதகத்தை முன்னிட்டு அவனுடைய உள்ளத்தில் அச்சம் குடிகொண்டிருந்தது. தன்னுடைய மாண்பை முகாமையாக வைத்துக்கொண்டு மைதிலி தேவி தன் போக்கில் அவனைக் குற்றவாளியாக்கியிருக்கின்றாள். காருண்யம் காமநோய்க்குத் தடை போட்டிருக்கிறது. இந்தக் காமநோய் சொரூபமாகவே இருக்கிற அரக்கர் கோமானை அழித்துத் தள்ளுவது இராமன் செய்யக் கிடக்கும் கடமையாகும். அந்த அரிய செயலின் வாயிலாக உலகுக்கே ஒரு நலம் செய்யும் உத்தமன் ஆவான் இராமன்.

தர்மத்துக்கு உறைவிடம் இராமன். சான்றோர்களுக்கு அடிபணிவதும், நல்லாரைப் பாதுகாப்பதும், பொல்லாரைத் துடைத்துத் தள்ளுவதும் இரகுராமனுக்கு வாய்த்திருந்த வாழ்க்கைச் செயல்களாகும். சீதை காணாமல் போனதனால் அவனுடைய சீரிய செயலுக்குத் தாற்காலிகமாகத் தடை வந்தது. சீதை சொல்லப்பட்டிருந்தால் இராமன் ஒரு பேடு என்று நிரூபிக்கப்பட்டிருக்கும். அவள் தன்னுடைய புனிதத்தை இழந்திருப்பாளாகில் அவனுக்கு அது நிவர்த்தி பண்ணமுடியாத அவமானமாக அமைந்திருக்கும். அதன் விளைவாக அவனுடைய வாழ்வே தோல்வியடைந்திருக்கும். இந்த இரண்டு முகாமைகளை முன்னிட்டே அவன் பெரும் துயரத்துக்கு ஆளாகியிருந்தான். சீலத்தைச் சீர்கேடு வென்றுவிட்டது போலத் தென்பட்டது. ஆனால் ஆஞ்சனேயனுடைய துணிச்சலான பராக்கிரமம் உண்மையை வெளிப்படுத்தியது. சீதையைச் சீர்கெட்டுப் போகும்படி செய்ய யாருக்குமே இயலாது. எக்காரணத்தை முன்னிட்டும் அழிந்துபட்டுப்போகாத புனிதத்தின் சிகரம் சீதை. இனி அதிவிரைவில் ராமபாணம் பொல்லாங்கைப் பாழ்படுத்தப்

போகிறது. அதற்கேற்ற நல்ல சந்தர்ப்பத்தை உண்டு பண்ணியவன் ஹனுமான். அந்த அதிசயத்தை முன்னிட்டே இக்காண்டம் சுந்தர காண்டம் என்னும் பெயர் பெறுகிறது.

மணம் புரிந்துகொண்ட மானுடனொருவனுக்குச் சொந்த வாழ்வு சம்பந்தமான பல சிக்கல்களும் குறைபாடுகளும் வந்து அமைகின்றன. பிறரிடமிருந்து தக்க உதவி பெறாது அத்தகைய இடர்களையும் பிரச்னைகளையும் நீக்கிக்கொள்ள இல்வாழ்பவன் ஒருவனுக்கு இயலாது. இவ்வுண்மையை ராமபிரானுடைய குடும்ப வாழ்வு நிரூபிக்கிறது. இதற்கு நேர்மாறாக நித்தியப் பிரம்மச்சாரி ஒருவனுக்குத் தன் சொந்த வாழ்வு சம்பந்தமான சிக்கல் ஏதும் உண்டாவதில்லை. அவன் யாண்டும் சுதந்திர புருஷனாகவே திகழ்கிறான். தூய்மையும் தகைமையும் அவனுக்குத் தொண்டுபுரிகின்றன. அத்தகைய மகாவீரன் ஒருவனே உலக வாழ்வின் இன்னல்களில் அகப்பட்டுக்கொண்டிருப்பவர்களை அந்த இன்னல்களினின்று விடுவிக்க வல்லவனாகின்றான். இக்கோட்பாட்டுக்கு இலக்காக இலங்குபவன் ஆஞ்சனேயன். அவன் படைத்திருந்த பண்பாடு அலாதியானது. மற்றப் பாத்திரங்கள் அவனோடு ஒப்பிட்டுப்பார்ப்பதற்குத் தகுதியற்றவர்கள். வானரனாகிய அவன் சரீர பரிணாமத்தில் நரகணத்துக்கு ஒரு படி கீழே நிற்கிறான். ஆயினும் மனப்பண்பாட்டிலும், ஆற்றலிலும் அவன் ஒப்பு உயர்வு அற்றவனாக இலங்குகிறான். பரிணாமத்திலே மகோன்னதநிலை எய்துவது உயிர்களனைத்துக்கும் பொதுவான வாய்ப்பு என்பதற்கு ஆஞ்சனேயன் எடுத்துக்காட்டு ஆகிறான். நித்தியப் பிரம்மச்சாரி ஒருவனுடைய சீலத்தில் அமைந்திருக்கும் சுந்தரம் ஏனைய சுந்தரங்களனைத்துக்கும் உயர்ந்தது என்பதை இக்காண்டம் எடுத்துக் காட்டுகிறது.

யுத்த காண்டம்

ஆஞ்சனேயன் எடுத்துரைத்த செய்திகளனைத்தையும் மனம் குளிர்ந்த பாங்கில் இராமன் செவிகொடுத்துக் கேட்டான். ஆஞ்சனேயன் புரிந்திருந்த பராக்கிரமங்களனைத்தும் அந்த ஆஞ்சனேயனுக்குத்தான் சாத்தியம் என்பதை இராமன் நன்கு உணர்ந்தான். அத்தகைய தூதனுக்கு எதைக் கைம்மாறாக நல்குவது என்பதை அவன் எண்ணிப் பார்த்தான். நன்றியுணர்வுக்கு அறிகுறியாக அத்தகைசான்ற திண்ணியனை அகமகிழ்வோடு அவன் கட்டித் தழுவிக்கொண்டான். அந்த அரிய செயலின் விளைவு அந்த அற்புதமான மூர்த்திகள் இருவருக்குமே அனுபவபூர்வமானது. தண்டகவனத்தில் ரிஷிபுங்கவர்களைத் தழுவியதன் வாயிலாக இராமன் அன்னவர்களுக்குப் பெறுதற்கரிய பிரம்ம ஞானத்தை வழங்கினான். அதே பரஞானம் இப்பொழுது ஆஞ்சனேயனுக்கும் அமைவதாயிற்று. அதை வழங்கியவனுக்கும் வழங்கப் பெற்றவனுக்குமிடையிலே வாய்த்த பிரம்மஞான ரகசியப் பேறு ஆகும் அது. அது பேச்சுக்கு எட்டாத பெரியநிலை. ஆடம்பரம் ஏதுமின்றி அமைதியாக நிகழ்ந்த அந்த அரிய செயல் ஒருபுறமிருக்க இப்பொழுது கடலைக்கடந்து லங்கா புரியை எட்டுவது எங்ஙனம் என்னும் பெரிய பிரச்னை இராமனுடைய உள்ளத்தில் எழுந்தது. நிலைமை பழைய படியே இருள் சூழ்ந்ததாக அவனுக்குத் தென்பட்டது. மனச் சோர்வு இடையிடையே அவன் உள்ளத்தை வந்து தாக்குவதாயிற்று.

அப்பொழுதுதான் சுக்ரீவன் தன்னுடைய ஆலோசனையைத் தெரிவிக்க முன் வந்தான். அமைதியாக அவன் எடுத்து இயம்பியதாவது: "ராகவா, நீ அனைத்தையும் உள்ளபடி உணரவல்ல முழு முதற்பொருள். ஆயினும் உன்

காதிலே நான் கருத்து ஒன்றைப் போட்டு வைக்கிறேன். வரம்பு கடந்த துன்பத்துக்கோ துயரத்துக்கோ ஆளாகிற மானிடனொருவன் வாழ்வில் எதையும் சாதிக்கமாட்டான். துயரம் ஆண்மையைத் தகர்த்துத் தள்ளுகிறது. இப்பொழுது வைதேகி வதிந்துவரும் இடத்தைப்பற்றியும் அவளுடைய நலத்தைப்பற்றியும் நாம் முற்றிலும் அறிந்துள்ளோம். அவளை மீட்டெடுப்பது எங்ஙனம் என்னும் ஒரு விஷயத்திலேயே நம்முடைய கவனம் முழுதையும் நாம் செலுத்த வேண்டும். நாம் படைத்துள்ள ஏவல்கள் மிகமிகப் பெரியவைகள். அறிவுத் திறனும் ஆற்றல் திறனும் வாய்க்கப் பெற்றுள்ள மூர்த்திகள் பலர் நமக்குரியவர்களாக இருக்கின்றனர். இப்பொழுது ஆக்கிரமிப்புச் செயலில் துணிந்து ஈடுபடுதற்கு நம்மவர்கள் துடித்துக்கொண்டிருக்கின்றனர்."

மிகப்பெரியதான வானரசேனை திரட்டி எடுக்கப் பட்டது. நல்ல நேரமும் வந்தது. சேனை புறப்படுவதற்கு இராமன் அனுமதி கொடுத்தான். முழு ஊக்கத்துடனும் பரபரப்புடனும் பட்டாளம் முழுதும் தென்கடற்கரையை நோக்கிப் புறப்பட்டது. வழியிலுள்ள பட்டணங்களையோ கிராமங்களையோ எந்த விதத்திலும் உபத்திரவப்படுத்தலாகாது என்னும் கண்டிப்பான ஆணை பிறந்திருந்தது. சேனை செல்வதால் பூமியில் கிளம்பிய தூசித்திரள் வானளாவ மேலே கிளம்பிற்று. பட்டாளம் நடந்துபோவதால் உண்டான ஓலம் பயங்கரமாயிருந்தது. கடற்கரையையும் அந்தச் சேனை சுகமாய்ப் போய்ச் சேர்ந்தது. கடலுக்கு அருகிலிருந்த ஒரு வனத்தினுள் வானரப்படை வசதியாகத் தங்கியிருப்பதற்கு இடம் அமைக்கப்பட்டது. கடலைக் கடந்து அக்கரை போய்ச் சேர்வதற்கான உபாயங்களை இராமனும் இலக்ஷ்மணனும் சுக்ரீவனும் ஆலோசனை பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

2. லங்காபுரியில் இராவணனுடைய நிலைமை அலங்கோலமாயிருந்தது. ஆஞ்சனேயன் பண்ணிய அட்டூழியம் அவனை அவமானப்படுத்தியது. அது ஒரு பக்கம் அவனுடைய உள்ளத்தை உறுத்திக்கொண்டிருந்தது. இனி வரப்போகிற விபத்தைக் குறித்து அவன் மனம் கலங்கியிருந்தான். கடலின் எதிர்க்கரைக்கு சுக்ரீவனுடைய சேனை வந்து சேர்ந்த செய்தி இராவணன் காதுக்கு எட்டியது. ஏதேனும் ஓர் உபாயத்தைக் கையாண்டு சுக்ரீவன் லங்காதீவுக்குள் நுழைந்துவிடுவான். இராமனோ இராவணனை எக்காரணத்தைக்கொண்டும் மன்னிக்கப்போவதில்லை. ஜனஸ்தானத்தில் அவன் ஆற்றிய நிகழ்ச்சி சாமானியமானதன்று. இந்த நெருக்கடிகளையெல்லாம் குறித்து ஆலோசனை பண்ணுவதற்கு இராவணன் மந்திரிகளுடைய சபை ஒன்றைக் கூட்டினான். இப்பொழுது லங்காபுரியைப் பயமுறுத்திக்கொண்டிருக்கும் சூழ்நிலையைக் குறித்து அமைச்சர்களுடைய அபிப்பிராயங்களை அரசன் வேண்டி நின்றான்.

மந்திரிகளோ கிட்டத்தட்ட ஒரே பல்லவியைத்தான் பாடலாயினர். இராவணன் மூவுலகுக்கும் முழுமுதற் பொருள். இந்திரஜித்தும் ஏனைய வல்லமைவாய்ந்த போர்த்தலைவர்கள் பலரும் அவ்வரசனுக்கு உறுதுணையாயிருந்தனர். அப்போர்வீரர்களுள் யாரேனும் ஒருவன் வானர சேனையை விரட்டியோட்டுதற்கும், இராமனையும் இலக்ஷ்மணனையும் யமலோகத்திற்கு ஓட்டுதற்கும் தகுதி வாய்ந்தவனாக இருந்தான். லங்காபுரியின் பாதுகாப்பைப் பற்றிய கவலைக்கு இடமில்லை. இதுவே அமைச்சர் குழாத்தினுடைய பொது அபிப்பிராயம். இராவணனுடைய இரண்டாவது தம்பியாகிய விபீஷணன் ஒருவன் மட்டும் கருத்து வேற்றுமை படைத்தவனாகத் தென்பட்டான். தன் தமையனிடத்து

அவன் வைத்திருந்த மரியாதை பாராட்டுதற்குரியது. ஆயி னும் ஐயம் திரிபு அற நிலைமையை உள்ளபடி எடுத்துத் தன் னுடைய தமையனுக்குத் தம்பியானவன் தெரிவித்தான். இராமன் புரிந்த செயல்களனைத்தும் தற்பாதுகாப்பின் பொருட்டேயாம். ஆக்கிரமிப்பில் அவன் ஈடுபடவில்லை. அத்தகையவனுடைய வாழ்க்கைத் துணைவியாகிய சீதா பிராட்டியை இராவணன் திருடிக்கொண்டு வந்தது தகாத செயல். எக்காரணத்தைக்கொண்டாவது அறிஞர் யாருமே அச்செயலுக்கு ஆமோதிப்புத் தரமாட்டார்கள். எதிரியின் பின்பலம் எவ்வளவு பெரியது என்பது தங்களுள் யாருக்குமே தெரியாது. மற்றும் லங்காபுரியின் வல்லமையே வரம்பு கடந்து மதிப்புப் போடப்பட்டிருக்கிறது. ஹனுமான் ஒருவன் இலங்கைக்குள் நுழைந்து புரிந்த செயல்களெல்லாம் முன் னெச்சரிக்கைகளாக வந்துள்ளன. இதுவே யதார்த்த மாயுள்ள நிலைமை. இந்த நெருக்கடியில் கண்ணியமான பாங் கில் இராமனோடு சமாதானம் செய்துகொள்வதும் சீதாதேவி யைத் தன் தலைவனிடம் முறையாக ஒப்படைத்து விடுவதுமே பொருத்தமான செயல்களாகும். அச்செயல்களின் வாயி லாகவே தங்கள் அரசாங்கத்திற்கேற்ற பாதுகாப்பும் அமைந் திருக்கிறது. இது விஷயத்தில் காலதாமதம் ஏற்படுவதற் கேற்பத் தங்களுக்குக் கேடு கடுமையானதாக வந்தமையும்.

இத்தகைய ஆலோசனைக்கு இராவணன் பொறுமை யோடு செவிசாய்த்துக்கொண்டிருந்தான்: நிலைமைகளை ஆழ்ந்து ஆலோசிப்பதற்கு அவகாசம் தேவையாயிருந்தது. அதன் பொருட்டு அமைச்சரவையைத் தாற்காலிகமாக அவன் கலைத்து வைத்தான்.

நல்லொழுக்கமே வடிவெடுத்திருந்த இரண்டாவது தம்பியாகிய விபீஷணன் மீண்டும் ஒருமுறை தன் தமையனை

அவனுடைய மண்டபத்தில் தனியாகச் சந்தித்தான். தமையன் முன்னிலையில் அவன் வீழ்ந்து வணங்கினன். நிலைமையை இருந்தபடி தன் தமையனிடம் அவன் தெரிவித்த தாவது: "போற்றுதற்குரிய பெரியோய், தாம் சீதாபிராட்டி யாரை லங்காபுரிக்குள் சிறைகொண்டு வந்தநாள் தொட்டு அதிவிரைவில் அதனுடைய சௌபாக்கியம் தௌர்பாக்கிய மாக மாறி வருகிறது. இப்பட்டணத்துக்குச் சொந்தமாய் இருந்த ராஜ கம்பீரம் மங்கி வருகிறது. அபசகுனங்கள் யாண்டும் தென்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. இந்நிலை மைகள் யாவும் அலாதியாக என்னுடைய கற்பனைகள் என்று தாங்கள் கருதவேண்டாம். அறிஞர்களாகிய நம் பட்டணவாசிகள் பலருடைய அபிப்பிராயமும் இதுவேயாம். தங்கள் முன்னிலையில் அன்னவர்களுடைய கருத்துக்களை உள்ளபடி வெளியிட அவர்கள் துணிந்தவர்கள் அல்லர். தங்கள் உள்ளக் கிடக்கையை உள்ளபடி உங்களிடம் எடுத்து இயம்ப அவர்கள் அஞ்சுகின்றனர். பெரும் விபத் துக்கு ஏதுவாயுள்ள இத்தகைய நிகழ்ச்சியின்கண் கருத்தைச் செலுத்தும்படி நான் தங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள் கிறேன்." இக்கூற்றுக்குச் செவிசாய்த்திருந்த இராவணன் பதில் ஒன்றும் பேசவில்லை. தம்பி திரும்பிப் போவதற்கு மட்டும் அனுமதி கொடுத்தான்.

இலங்கையில் அமைச்சர் அவையொன்று அவசர அவ சரமாகக் கூட்டப்பட்டது. அதில் கும்பகர்ணன் பங்கெடுத்துக் கொள்வது முற்றிலும் அவசியமாயிற்று. அவனோ பெரும் தூக்கக்காரன். ஐந்து மாதம் உறங்கி வெறும் ஒருமாதம் விழித்திருப்பது அவனுடைய போக்கு. இப்பொழுது அவன் தூங்கப்போய் மூன்று மாதங்கள் தான் ஆகின்றன. இன்னும் இரண்டு மாதங்கள் பாக்கி. ஆயினும் உசிதமான

உபாயங்களைக் கையாண்டு அவனை அவைக்கு அழைத்து வருவதற்கு இராவணனால் உத்தரவு இடப்பட்டது.

முக்கியமான பிரமுகர்களனைவரும் அந்த அவையிலே கலந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றனர் என்னும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அங்ஙனம் கூட்டிய மந்திரி சபைக்கு அரசனாகிய இராவணன் தன்னுடைய மாளிகையினின்று அரச படாடோபத்துடன் புறப்பட்டுப்போனான். தங்கத்தால் இழைக்கப்பெற்ற விமானம் ஒன்றில் அவன் ஊர்ந்து சென்றான். அவ்விமானமோ காண்பதற்கரிய காட்சி கொடுத்தது. பளபளப்பாகச் சீருடைகள் அணிந்திருந்த போர்வீரர்கள் அவ்வாகனத்தின் இரு மருங்கிலும் கவர்ச்சிகரமான பாங்கில் நடந்து சென்றனர். துத்தாரிகளும், மேளதாளங்களும் முழங்கின. இரு மருங்கிலும் அணி அணியாக ஆவலுடன் காத்துநின்ற பொதுமக்கள் தங்களுடைய கோமானுக்குத் தலைசாய்த்து வந்தனங்களைச் செலுத்தினர். தங்கள் வேந்தன் வாழ்கவென்று அவர்கள் உரக்க ஓலமிட்டனர்.

விஸ்தாரமான மண்டபத்திலே தன்னுடைய சிம்மாசனத்தின்மீது இலங்கை வேந்தன் நேர்த்தியாக அமர்ந்தான். மந்திரிப் பிரதானிகள் தத்தம் அந்தஸ்திற்கேற்ற ஆசனங்களில் மரியாதையுடன் அமர்ந்தனர். அந்த ராஜசபை காண்பதற்கு மிகக் கவர்ச்சிகரமாயிருந்தது. தன்னுடைய மனதை உறுத்திக்கொண்டிருந்த விஷயத்தைக் குறித்து வேந்தன் விரிவாகக் குழுமியிருந்தவர்களிடம் எடுத்துக் கூறினான். தண்டகாரண்யத்திலிருந்து சீதையை அவன் தூக்கிக்கொண்டு வந்துவிட்டான். தன்னை வாட்டிய காதலே அதற்குக் காரணமாயிற்று. சீதை இன்னும் அவன் போக்குக்கு இணங்கவில்லை, எக்காரணத்தைக் கொண்டும்

அவளை இராமனிடம் திருப்பித் தரப்போவதில்லை. மாருதி லங்காபுரியில் செய்த அட்டகாசங்களுக்கெல்லாம் காரணம் தாங்கள் முன்னெச்சரிக்கை எடுத்துக் கொள்ளாதிருந்ததே ஆகும். சுக்ரீவனும் இராமனும் கடலின் எதிர்க்கரையில் முகாம் வைத்திருக்கின்றனர். அவர்களைக் கொல்வதற்கான உபாயங்களை அவர்கள் வகுத்தெடுக்கவேண்டும். இதுவே இலங்கை வேந்தனுடைய பேச்சின் சாரமாகும். இப்பொழுது அவரவரின் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கலாம் என அரசன் ஆணையிட்டான்.

முதல் பேச்சாளியாயிருந்தவன் கும்பகர்ணன். அவன் எடுத்துரைத்ததாவது: "அறிவாளியாகிய அரசன் ஒருவன் ஆலோசனையை முதலில் கேட்கின்றான். அதன் பிறகு செயலில் ஈடுபடுகின்றான். ஆனால் என் தமையனாகிய தாம் முட்டாள்தனமாக முதலில் ஏதோ ஒன்றைச் செய்துவிட்டீர். இப்பொழுது அதைக் குறித்து எங்கள் அபிப்பிராயம் கேட்கின்றீர். இராமனையும் இலக்ஷ்மணனையும் போர்புரிந்து கொன்றபிறகு சீதையைச் சன்மானமாகத் தாம் தூக்கிக் கொண்டு வந்திருக்கவேண்டும். அப்படிச் செய்திருந்தால் அவளும் தம் சொற்படி தமக்கு அடங்கி நடந்திருப்பாள். இராமன் பாணம் தொடுக்கும்வரையில் உம்முடைய ஆயுளில் கொஞ்சம் மிச்சம் சொச்சம் பாக்கியிருக்கிறது. போனதெல்லாம் போய் ஒழியட்டும். தாம் என் தமையன். ஆதலால் தாம் புரிந்துள்ள அசட்டுத்தனத்தைப் பொருள்படுத்தாது நான் என்றைக்கும் தங்களுக்குரியவனாக இருக்கிறேன். இராமனையும் இலக்ஷ்மணனையும் கொல்ல நான் தீர்மானித்திருக்கிறேன். என்னுடைய எண்ணம் நிறைவேறுகிறபொழுது சீதையைத் தமக்கு உரியவளாகக் கொண்டு அவளுடன் சுகித்திருப்பீர்களாக." (இப்பேச்சில் வரப்

போகிற விபத்தை விளக்குகின்ற அபத்தங்கள் பலபுதைந்து கிடக்கின்றன. ஆனால் அது கும்பகர்ணனுக்குத் தெரியாது.)

அடுத்தபடியாக மஹாபார்ஸ்வன் என்னும் வல்லமை வாய்ந்த சேனைத் தலைவன் பேசினான். அவன் மொழிந்ததாவது: "துஷ்ட ஜந்துக்கள் வசித்து வரும் வனத்திலே அகப்பட்ட தேனை அருந்தாது இருப்பவன் மடையன். இறைவா, தாம் சீதையைத் தூக்கிக்கொண்டு வந்துவிட்டீர்கள். அவளுடன் இஷ்டப்படி ரமித்திருங்கள். உள்ளே பிரவேசிக்க முடியாத லங்காபுரிக்குள் எதிரிகள் ஏதோ ஒரு போக்கில் தப்பித்தவறி நுழைந்துவிட்டால் அவர்களை ஒழித்துத் தள்ளும் செயலை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்."

தனக்கு ஏற்பட்டிருந்த இக்கட்டை இப்பொழுது இலங்கை வேந்தன் எடுத்துரைத்தான்: "சீதையோடு ரமித்திருக்க எனக்கு இயலாது. பெண்ணொருத்தியை நான் சிறையெடுக்கலாம். ஆனால் அவளுடைய சம்மதமில்லாது அவளுடைய கற்பை நான் அழிப்பேனாகில் என்னுடைய தலை சுக்கல் சுக்கலாகத் தெறித்துப் போய்விடும். இதுவே சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மதேவன் என்மீது சுமத்தியுள்ள சாபமாகும்."

இராவணனுடைய பராக்கிரமத்தை விரிவாகப் பிரஹஸ்தன் எடுத்துப் பேசினான். அவனை வெல்லுதற்கு எவ்வுலகிலும் யாருமேயில்லை. இத்தகைய முகஸ்துதி அரசனுடைய வீண் கர்வத்தை ஊக்கத்துடன் கிளப்பி அதிகப்படுத்தியது. இப்பேச்சுக்குச் செவி கொடுத்த சபையோர்கள் கை கொட்டி மகிழ்வுடன் ஆரவாரித்தனர்.

இந்த ஆரவாரத்தில் விபீஷணன் ஒருவன் மட்டும் கலந்துகொள்ளவில்லை. அரச ஸ்தானம் வகித்திருந்த தன் அண்ணனுக்கு அவன் எச்சரிக்கை மிகச் செய்தான்.

தனக்கு அழிவையும் லங்காபுரிக்குக் கேட்டையும் அவன் வரவழைத்திருந்ததைத் தெளிவுற அவன் எடுத்து விளக்கினான். அதைத் தொடர்ந்து தசரத ராமன் படைத்திருந்த தெய்விகப் பேராற்றலையும் ஐயம் திரிபுஅற அவன் எடுத்துக் காட்டினான்.

இளவரசு ஸ்தானம் வகித்த இந்த்ரஜித்துக்குத் தன் சிற்றப்பாவின் பேச்சு பிடிக்கவில்லை. அவன் உளறிக் கொட்டியதாவது: "இத்தகைய பயங்கொள்ளி ஒருவர் எங்கள் அரச குடும்பத்தில் உருவெடுத்திருப்பதைக் குறித்து நான் வெட்கப்படுகிறேன். நம் இனத்தவரிடத்திலுள்ள உறுதிப்பாடு இந்த அப்பாவிடம் இல்லை; அல்லது ஒருவேளை நமக்குத் துரோகியாக இவர் தோன்றியிருக்கிறாரோ என்னவோ தெரியவில்லை. பொருளற்ற இவர் பேச்சுக்கு நாம் அமைதியாக இணங்கலாகாது. தேவர்களையும், தேவ கணங்களையும், தானவர்களையும் நாம் அடக்கியிருக்கிறோம். அத்தகைய நம்மவர்க்கெதிரே இந்த அல்ப மானுடர் இருவர் யாவர்? முன்னெச்சரிக்கை என்னும் கோட்பாட்டில் என்னுடைய சித்தப்பாவாகிய விபீஷணர் பகர்வது லங்காபுரி வாசிகளுக்கு அவமானத்தை உண்டுபண்ணுகிறது."

அமைதியாக விபீஷணன் மீண்டும் மொழிந்ததாவது: "ஓ சிறுவா, நீ இன்னும் வாழ்க்கையின் அனுபவங்களை அறிந்தவனல்லை. ஒழுக்கம் தவறிய உறுதிப்பாடு மனிதனை ஒழித்துத் தள்ளுகிறது. உன்னுடைய தந்தையின் விபரீதப் போக்குக்கு நீயும், இந்த மந்திரிகளும் உடந்தையாயிருக்கிறீர்கள். அழிவை நோக்கி நீங்கள் யாவரும் விரைந்து போய்க் கொண்டிருக்கின்றீர்கள். உற்றார் உறவினராகிய உங்கள்மீது வைத்துள்ள வாஞ்சையை முன்னிட்டு உங்களுடைய தீயசெயல்களை நான் எதிர்க்கிறேன்."

இப்பொழுது இராவணனுக்குத் தாங்கமுடியாத முன் கோபம் மூண்டுவிட்டது. அவன் கர்ஜித்ததாவது: "பெயர் வழி ஒருவன் பகிரங்கமாயுள்ள பகைவர்களோடும், பாம்பு களோடும் வாழ்ந்திருக்கலாம்; ஆனால் நய வஞ்சகர்களாகிய சகோதரர்களோடும், தாயாதிகளோடும் ஒருபொழுதும் வாழ்ந்திருக்கலாகாது. வனத்தில் வாழ்ந்து வரும் வேழம் ஒன்று வேட்டைக்காரர்களுக்கு அஞ்சுவதில்லை. ஆனால் மக்களால் பழக்கப்பட்ட தன் இனத்தில் தோன்றிய யானை ஒன்றுக்கு அது பெரிதும் பயப்படுகிறது. ஏனென்றால் வேட்டையாடுகிறவர்களிடம் அது வஞ்சகமாகக் காட்டு யானையைப் பிடித்துக் கொடுக்கிறது. புஷ்பத்திலுள்ள தேனை உறிஞ்சியான பிறகு தேன் ஈ அப்புஷ்பத்தைப் புறக் கணிக்கிறது. அதே பாங்கில் பொறாமை படைத்துள்ள தம்பி ஒருவன் நெருக்கடியான நேரத்தில் ஆக்கம் படைத் துள்ள தன்னுடைய அண்ணனை அடியோடு கவிழ்த்துவிடு கிறான். விபீஷணா, இப்பொழுது உன்னைச் சிதைத்துவிட எனக்கு இயலும். ஆயினும் உடன் பிறந்தவன் என்னும் ஒரே காரணத்தை முன்னிட்டு உன்னை நான் விட்டு வைக் கிறேன். என் காட்சியினின்று இக்கணமே மறைந்து பட்டுப்போ."

தன்னுடைய பிரிவுப் பேச்சை விபீஷணன் இங்ஙனம் எடுத்துரைத்தான்: "அண்ணா, பொல்லாத போக்கினால் தூண்டப்பெற்றுத் தாம் தம்முடைய அழிவை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறீர்கள். தங்களைக் காப்பாற்ற இனி யாருக்குமே இயலாது. என்னால் இயன்ற அளவுக்கு லங்கா புரியையாவது காப்பாற்ற நான் முயலுகிறேன்." தன்னுடன் நான்கு நல்ல ராக்ஷசர்களைச் சேர்த்துக்கொண்டு மற்றும் விபீஷணன் வானத்தின்கண் மேலே கிளம்பி வடதிசையில் இராமன் அமைத்திருந்த பாசறையை நோக்கிப்போனான்.

3. தங்களுடைய முகாமை நோக்கி வானவெளியில் மிளிர்ந்து கொண்டிருந்த வடிவம் ஒன்று விரைந்து வருவதைச் சுக்ரீவன் கண்டான். அருகில் வந்தபொழுது அத்தோற்றமானது ஐந்து ராக்ஷசர்களைக்கொண்டு ஆக்கம் பெற்றிருந்ததை அவன் காணலாயினன். அந்த ஐவரும் பலப்பல ஆயுதங்களைப் படைத்தவர்களாக இருந்தனர். பூமிக்குமேல் வானவெளியில் இருந்தபடி அன்னவர்களுள் முக்கியமானவன் தன்னை இராவணனுடைய கடைசி சகோதரனாகிய விபீஷணன் என அறிமுகப்படுத்திக்கொண்டான். சீதா பிராட்டியாரை இராவணன் சிறையில் வைத்ததை இவன் ஆமோதிக்கவில்லை. அதை முன்னிட்டு இவன் தன் தமையனோடு பிணங்கிக்கொண்டான். இராமனிடம் அடைக்கலம் புகவேண்டி இவன் இங்கு வந்துள்ளான். இச்செய்தியைச் சுக்ரீவன் இராமனுக்குத் தெரிவித்தான். தெரிவித்தது மட்டுமல்லாது அவன் வருகையைப்பற்றிய தன் சொந்த அபிப்பிராயத்தையும் வானரவேந்தன் வெளியிட்டான். இப்படி இவன் வந்துள்ளதில் சூழ்ச்சி ஏதேனும் இருக்கக்கூடும் என்னும் ஐயம் அவனுக்கு உண்டாயிற்று. பழி பாவத்துக்கு அஞ்சாத அரக்கர்கள் எத்தகைய அடாத செயலையும் எந்தெந்த வடிவத்தில் வேண்டுமானாலும் சாதிக்க வல்லவர்கள். கிளம்பி வந்துள்ள ஐவரையும் அக்கணமே கொன்று ஒழிப்பது முறைமை.

சுக்ரீவனுடைய இக்கூற்றுக்கு இராமன் அமைதியாகச் செவிசாய்த்துக்கொண்டான். பிறகு அரசனுடைய பாங்குக் கொப்பத் தன்னைச் சார்ந்திருந்த தலைவர்கள் அனைவருடைய அபிப்பிராயங்களை இராமன் நாடி நின்றான். இப்பொழுது அமைந்திருப்பது ஒரு சிக்கலான பிரச்னை. ஆதலால் இதைக்

குறித்து அவசரப்பட்டு முடிவு எடுத்துக் கொள்ளலாகாது என்பது இராமனுடைய கருத்து.

வானரவேந்தனுகிய சுக்ரீவனுக்கு அடுத்த ஸ்தானத்தில் இருந்தவன் வானர இளவரசனுகிய அங்கதன். அன்னவன் தன்னுடைய கருத்துக்களை இங்ஙனம் எடுத்துக் கூறினன்: "ராக்ஷசர்கள் முரட்டுத்தனம் வாய்ந்தவர்கள். முட்டாள் தனமாக எச்செயலிலும் ஈடுபடக் கூடியவர்கள். சிலவேளை களில் நலம் செய்யவும் அவர்களுக்கு இயலும். அப்படி நலம் செய்வதையும் அவர்கள் முரட்டுப் போக்கிலேயே முடித்து வைப்பார்கள். வந்திருப்பவன் இராவணனுடைய தம்பி. அவன் போக்கை அனுசரித்து இன்னும் நால்வர் வந்திருக்கின்றனர். இராக்ஷச எதிரியைச் சமாளிப்பது இப்பொழுது நமக்கு அமைந்துள்ள குறிக்கோள். இந்த முட்பமான காரியத்துக்கு இவர்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியுமானல் இவர்களை நம்மோடு சேர்த்துக்கொள் வது உசிதம். அது சாத்தியப்படாவிட்டால் இவர்களை விரட்டியோட்டிவிடுவோம்."

"தக்க வேவுகாரர்களை நியமித்து வந்திருக்கிற இவர் களுடைய நோக்கம் இன்னது என்று நாம் கண்டுபிடிக்க வேண்டும். இவர்கள் நோக்கத்தையறிந்து அதற்கேற்ற நடவடிக்கை எடுப்பது பொருந்தும்" என்று சரபன் என்ற பெயர் படைத்துள்ள சேனுதிபதி சொன்னுன்.

ஜாம்பவான் சாஸ்திர ஞானத்தில் மிகத் தேர்ந்தவன். அன்னவன் அறிவித்ததாவது: "வந்திருப்பவன் நம்முடைய எதிரியாகிய இராவணனுடைய தம்பி. பொருந்தாத இடத் துக்குப் பொருந்தாத வேளையில் நட்பை நாடி இவன் வந்திருக் கிருன். எனவே இவனுடைய வருகையை நாம் முற்றிலும்

நம்பலாகாது. சந்தேகத்திற்கு ஏற்ற பேர்வழியாக இவன் இருக்கிறான்."

மைந்தன் என்பவன் ராஜதந்திரம் மிக அறிந்தவன். அவன் தெரிவித்ததாவது: "இராவணனை விட்டு இந்த விபீஷணன் பிரிந்தபொழுது இவன் உபயோகித்த மொழி யாது என்னும் நுட்பத்தை மரியாதையுடனும், தந்திரத் துடனும் இவனிடமிருந்து வெளிப்படுத்த வேண்டும். இவன் அங்குப் பகர்ந்த பேச்சினின்று இவன் நல்லவனா கெட்டவனா என யூகிக்க முடியும். பிறகு அதற்கேற்ற நடவடிக்கை எடுப்பதும் பொருந்தும்."

இப்பொழுது ஆஞ்சனேயனுடைய முறை வந்தது. அவன் கூறியதாவது: "என்னுடைய கல்வியை விளம்பரப் படுத்துவதற்கோ அல்லது சம்வாதத் திறமையை வெளிப் படுத்துவதற்கோ நான் பேசுகிறேன் அல்லேன். பொருத்த மான முறை யாதோ அதைத் தங்கள் முன்னிலையில் சமர்ப் பிக்கிறேன். சத்துருவினுடைய தலைசிறந்த காரியஸ்தர்கள் அவனிடமிருந்து பிரிந்துகொண்டு நம்மோடு உறவு பூணுவார் களானால் அதற்கேற்றவாறு சத்துருவின் சக்தி தளர்வுறு கிறது. ஆதலால் அகதியாக வந்துள்ளவனைக் கொல்லுதல் என்னும் கேள்வி எடுத்த எடுப்பில் அடிபட்டுப்போகிறது.

"துஷ்டன் ஒருவனையும் புண்ணியம் வாய்ந்த மேலாம் காரியங்களுக்குப் பயன்படுத்துவது சாத்தியம். அம் முறையை மட்டும் நாம் சரியாகக் கையாளுதல் வேண்டும்.

"இப்பொழுது அமைந்துள்ள நெருக்கடியில் வேவுக் காரர்களை நியமித்துத் தஞ்சம் என்று வந்துள்ள மனிதனு டைய மனப்பான்மையைக் கண்டு பிடிப்பதற்கு நமக்கு அவகாசமில்லை."

"நம்மை அணுகுதற்கு விபீஷணன் கையாண்ட இடமும், நேரமும் மிகப் பொருத்தமானவைகளே. நாள் ஏறஏற எதிரியின் பக்கத்திலிருக்கும் தீமையின் வேகம் பன்மடங்கு அதிகரித்துக்கொண்டு வருகிறது. அதைக் கருத்தில் வாங்கிக்கொண்ட இவன் தக்க இடத்துக்குத் தக்க வேளையில் விரைந்து வந்திருக்கிறான். முரண்டுகொண்ட தன் தமையனோடு விபீஷணன் எத்தகைய வார்த்தைகளை மொழிந்தான் என்பதில் விஷயம் ஒன்றுமில்லை. எத்தகைய மனப்பான்மையுடன் இவன் வந்திருக்கிறான் என்பதே மிக முக்கியமான விஷயமாகும். இவன் தூய உள்ளம் படைத்தவன் என்பதை இவன் முகவிலாசம் விளக்கிக் காட்டுகிறது. இறைவா, புதிதாக வந்திருப்பவனைப்பற்றிய என்னுடைய அபிப்பிராயம் இதுவே. இவ்விஷயத்தில் எது பொருத்தமான நடவடிக்கையோ அதைத் தாம் அனுஷ்டிப்பீராக."

ஹனுமான் தெரிவித்த கருத்துக்களனைத்தும் இராமனுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை உண்டுபண்ணின. வாஸ்தவத்தில் விபீஷணனைப்பற்றி அவர்கள் இருவரும் கொண்டிருந்த கருத்துக்கள் முற்றிலும் ஒத்திருந்தன. தஞ்சம் நாடி வந்தவனைத் தன்னுடைய முன்னிலைக்கு அழைத்து வரும்படி சுக்ரீவனுக்கு இராமன் தெரிவித்தான். ஆனால் அந்த வானர வேந்தனோ இராமனிடம் இரண்டாம் தடவை விண்ணப்பித்துக் கொண்டான். அதாவது ராக்ஷசர்கள் எப்பொழுதுமே நம்பிக்கைத் துரோகிகள். கபடம் மிக வாய்க்கப்பெற்றவர்கள். பொருந்துவன போன்று தென்படும் பொல்லாத செயல் எதில் வேண்டுமென்றாலும் அவர்கள் ஈடுபடுவார்கள். வந்திருக்கின்றவனை ஏதோ ஒரு வஞ்சகச் செயலில் ஈடுபடும்படி இராவணன் தூண்டியிருக்கவேண்டும்.

அப்படி அல்லவெனில் கடைசி சகோதரன் மூத்த சகோதரனை ஒரு நெருக்கடியான வேளையில் கைநழுவ விட்டுவிட்டான். இவ்விரண்டினுள் எது உண்மையென்றாலும் அது ஆக்ஷேபத்துக்குரியதாகும். ஆதலால் பாசாங்குக்காரர்களைக் கொல்வது பொருந்தும் என்பது சுக்ரீவனுடைய கருத்து.

வாலிக்கும் சுக்ரீவனுக்குமிடையில் ஒருவிதப் பிணக்கு ஏற்பட்டிருந்தது. கிட்டத்தட்ட அதே போன்ற பிணக்கு இராவணனுக்கும் விபீஷணனுக்குமிடையில் வாய்த்திருந்தது. ஒருவேளை அது இராமனுடைய மனதில் பட்டிருக்கலாம். புன்னகை பூத்தவனாகத் தம்பி இலக்ஷ்மணனைப் பார்த்துத் தமையன் கூறியதாவது: "அரசர்கள் தங்கள் அக்கம் பக்கமிருக்கும் மற்ற அரசர்களை எளிதில் நம்புவதில்லை. அதே விதத்தில் தங்களுடைய நெருங்கிய சொந்தக்காரர்களையும், சகோதரர்களையும் பற்றியும் சந்தேகித்துக் கொண்டிருப்பதே அவர்களின் போக்கு ஆகும். சகோதரர்கள் எல்லாரும் பரதனைப் போன்ற சகோதரர்களாக இருக்க முடியுமா? நண்பர்கள் எல்லாரும் சுக்ரீவனுக்கு நிகராவார்களா?" பிறகு சுக்ரீவனைப் பார்த்து அவன் இயம்பியதாவது: "என்னை அணுகுபவன் நல்லவனா கெட்டவனா என்பதல்ல கேள்வி. என்னிடத்து யார் சரணாகதி நாடுகிறானோ அவனுக்கு அதை நான் உறுதியாகக் கொடுத்தருள்கிறேன். இது என்னுடைய ஜீவிதத்தில் அடங்கியுள்ள கோட்பாடு ஆகும். இராவணனே வந்து என்னிடம் அடைக்கலம் புகுவானாகில் அதைத் தரமாட்டேன் என்று நான் மறுக்கமாட்டேன். எந்த உயிருமே யாண்டும் எனக்குத் தீங்கிழைக்க முடியாது. சென்று விபீஷணனை என்னிடம் அழைத்து வருவாயாக." இராமன் பரமாத்ம சொரூபம். அவனுக்கு யார்தான் தீங்கிழைக்க முடியும்?

இராகவனுடைய மகிமையையும் மாட்சிமையையும் சுக்ரீவன் இனிது காணலானன். உடனடியாக அவன் விபீஷணனை அணுகி இராமனுடைய அருள் நிறைந்த சந்நி தானத்துக்கு அழைத்து வந்தான். தஞ்சம் நாடிய இலங்கை வேந்தனுடைய தம்பியும், அவனுடன் வந்த நால்வரும் வீழ்ந்து வணங்கினர்கள். பிறகு விபீஷணன் விண்ணப்பித்த தாவது: "இராவணனுடைய கடைசி சகோதரனுகிய நான் உன்னிடம் சரண்புகுகிறேன். லங்காபுரியில் எனக்குச் சொந்தமாயிருந்த அனைத்தையும் தியாகம் செய்துவிட்டு நான் உன்னிடம் வந்துள்ளேன்." இராமன் அவனை ஏற்றுக் கொண்டு அபயம் அளித்தான்.

தன்னுடைய சொந்த சகோதரனுகிய இராவணனை ஒரு நெருக்கடியான வேளையில் விபீஷணன் கைவிட்டு விட்ட தற்குக் காரணம் யாதோவென்று இராமன் அவனிடம் கேட் டான். சீதாபிராட்டியாரின் சிறைவாசமே விபீஷணன் தன் தமையனிடமிருந்து பிரிந்து கொண்டதற்கு மூலகாரணம் ஆகுமென்று எடுத்துச் சொன்னன். இன்னும் பல கேள்வி கள் அவனிடம் கேட்கப்பட்டன. அவ்வினுக்களுக்கு விடை யாக இராவணனுடையதும் அவனுடைய சிப்பந்திகளு டையதுமான உள்வலிவுகளை விபீஷணன் எடுத்துரைத் தான்.

ஜானகிதேவிக்கு விடுதலை தேடுதற்கு முன்பே இராவ ணனையும் அவனுடைய படைகளையும் துடைத்துத் தள்ளுவ தாக இராமன் உறுதி கூறினன். இத்தருணத்தில் விபீஷணன் தான் அறிந்திருந்த விஷயங்களையும், தான் படைத்திருந்த ஆற்றல்களையும் தன்னுடைய பணிவிடையை யும் ஒருங்கே இராகவனுக்கு அர்ப்பணம் பண்ணுவதாக வினய பூர்வமாக எடுத்துரைத்தான்.

தமையனுடைய உத்தரவுக்கு அடிபணிந்து இலக்ஷ்மணனும் சுக்ரீவனும் சேர்ந்து இப்பொழுது கடல் நீர் கொண்டு வந்து விபீஷணனைக் குளிப்பாட்டி அவனை லங்காபுரிக்கு வேந்தனாக முடி சூட்டினார்கள். விபீஷணனே இச்செயலை ஆமோதிக்கவில்லை. ஆயினும் இராமனுடைய தீர்மானத்தை மறுக்க அவன் துணியவில்லை. இந்தப் பட்டாபிஷேக நிகழ்ச்சி மிகச் சுருக்கமானது. ஆயினும் இதில் மேலாம் கோட்பாடுகள் சில புதைந்திருக்கின்றன.

சுக்ரீவனும் விபீஷணனும் முறையே இராமனை வந்தடைந்தார்கள். அவர்கள் இருவருக்குமிடையிலுள்ள கருத்து ஒற்றுமை, வேற்றுமை ஆகியவைகளை ஆராய்வது அவசியம். சுக்ரீவனுக்கு வாழ்க்கையில் சொந்தப் பிரச்னைகள் சில அமைந்திருந்தன. ஆக, தன் சொந்தக் காரியத்தை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கே இராமனோடு நட்புப் பூண்டான். ஆனால் விபீஷணனுடைய பாங்கு அதைவிட மேலானது. இராமனிடம் அவன் சரணாகதி அடைந்தான். அதில் அவனுக்குச் சொந்தக் குறிக்கோள் ஏதுமில்லை. இயன்றவரையில் லங்காபுரியை நாசத்திலிருந்து காப்பாற்றுவதே அவன் கொண்டிருந்த நோக்கமாகும்.

4. சுக்ரீவனும் இலக்ஷ்மணனும் விபீஷணனும் இப்பொழுது சபை கூடினர். தங்களுடைய சேனையை, கடலைக் கடந்து இலங்கைக்குள் எடுத்துச் செல்லுதற்கான உபாயங்களை ஆலோசிப்பதே அந்தச் சபையின் நோக்கமாயிற்று. புதியதாகச் சேர்ந்துள்ள சிநேகிதனாகிய விபீஷணன் பொருத்தமான கருத்து ஒன்றைத் தெரிவித்தான். கடல் தேவதையாகிய வருணனை இது விஷயமாக வேண்டிக் கொள்வது முறை என அவன் மொழிந்தான். அவன் சொன்ன உபாயம் அங்கீகரிக்கப்பட்டது.

இவ்வேளையில் விசித்திரமான நிகழ்ச்சியொன்று நேர்வதாயிற்று. சுக்ரீவனை இராமனிடமிருந்து சூழ்ச்சியாகப் பிரித்து வைப்பதற்கான உபாயத்தைக் கையாளச் சுகன் என்னும் தூதன் ஒருவனை இராவணன் அனுப்பிவைத்தான். அந்தப் பாதகனுடைய செய்தியின் சுருக்கம் வருமாறு: "நீயும் நானும் அக்கம்பக்கத்திலிருக்கும் சகோதரப் பாங்குடைய அரசர்களாவோம். இராமனோ பெண்பால் ஒருத்தியால் நாட்டினின்று விரட்டியடிக்கப்பட்ட வலிவற்ற அகதியாவான். மனைவி ஒருத்தியை வைத்துப் பராமரிக்கும் தகுதியற்றவன் அவன். ஆதரவற்றுக் கிடந்த அந்த மங்கையை நான் எனக்கு உடையவளாக்கிக் கொண்டதில் தீங்கு யாது உளது? ஆதரவற்ற அந்த நாடோடியை அவன் தலைவிதிக்கேற்றவாறு புறக்கணித்துவிட்டு நீ உன்னுடைய சேனைகளுடன் கிஷ்கிந்தைக்குப் போய்ச் சேர்வாயாக." இதற்குச் சுக்ரீவன் அளித்த மறுப்பு வருமாறு: "இராமனும் நானும் நண்பர்கள். நீ அவனுடைய எதிரி ஆவதால் எனக்கும் நீ எதிரி ஆகின்றாய். துஷ்டனாகிய உன்னை இவ்வுலகத்தினின்று இராமன் ஒதுக்கித் தள்ளப் போகின்றான். இராமனுக்குத் தீங்கு இழைத்தான பிறகு நீ உயிர் வாழ்ந்திருக்கப் போகின்றாய் என மனக்கோட்டை கட்டுவதற்கான மடையனல்லவா நீ?" இங்ஙனம் தத்தமக்குரிய கருத்துக்களை அவ்விருவரும் பரிமாறிக்கொண்டான பிறகு குரங்குகள் ஒன்று கூடி அந்தத் தூதனைப் புடைக்கலாயின. ஆனால் இராமன் அதைத் தடுத்துச் சுகனைக் காவலில் வைத்தான். அவன் வந்த நோக்கம் நிறைவேறவில்லை என்பதை அவன் போய்ப் பிறகு இராவணனுக்குத் தெரிவிக்கவேண்டும் என்பதே அவனை அடைத்து வைத்ததன் நோக்கமாகும்.

தர்ப்பை ஆசனம் ஒன்றின் மீது அமர்ந்துகொண்டு இராமன் மூன்றுநாள் இரவு பகலாக வருணனை நோக்கி

பிரார்த்தனை பண்ணியவனாக இருந்தான். ஆயினும் அவ
னுடைய பிரார்த்தனையைக் கடல் தேவதை பொருள்படுத்தா
திருந்தாள். இப்பொழுது உணர்ச்சியின் வேகத்தால் முகம்
ஜொலித்துக்கொண்டிருக்கிற பாங்கில் இராமன் ஆசனத்தி
னின்று எழுந்து நின்றான். "பிரகிருதன் ஒருவன் கொடுக்
கிற அடியை அறிந்துகொள்கிறான். ஆனால் பண்ணுகிற
வேண்டுதலை அறிந்து கொள்ளமாட்டான்" என்று இயம்பிக்
கொண்டு மந்த்ர சக்திவாய்ந்த பாணம் ஒன்றைக் கடலுக்
குள் செலுத்தினான். அந்தப் பாணம் பாய்ந்ததன் வேகத்
தால் அது ஒரு பயங்கரமான நீர்க்கலக்கத்தை உண்டு
பண்ணியது. நீர்வாழ்வன அனைத்தும் ஆபத்துக்கு உட்பட்
டிருந்தன. கைகூப்பியவனாக வருணன் மேலே கிளம்பி
வந்து முழந்தாளிட்டுக்கொண்டு நடுநடுக்கத்துடன் இயம்பிய
தாவது: "ஓ ராமச்சந்திரா, ஐம்பூதங்களுள் நான் ஒருவன்.
இயற்கையின் நியதியினின்று நான் பிசகுவதில்லை. நீ அக்கரை
போய்ச் சேர்வதற்கு என்மீது பாலம் கட்டுவதற்கு ஏற்ற
வசதிகளை எல்லாம் நான் எளிதில் அமைத்துத் தருகிறேன்.
உன்னுடைய கூட்டத்தில் நளன் என்னும் திறமை வாய்ந்த
ஸ்தபதி இருக்கிறான். அவனிடம் லங்காபுரிக்குப் பாலம்
கட்டும்படி ஆணையிடுவாயாக." இங்ஙனம் இயம்பிக்கொண்டு
வருணதேவன் அந்தர்முகமானான்.

திட்டப்படியே அந்த அரியபெரிய பணியை நளன் ஏற்
றுக்கொண்டான். ஆயிரக்கணக்கான வானரர்கள் அத்
திட்டத்தில் பங்குகொண்டனர். குன்றுகளையும் கரடுகளையும்
தூக்கிச் செல்வது அவர்களுக்குப் பந்தாடுவது போன்றிருந்
தது. திட்டம் மிகப் பெரியது. எனினும் அவர்கள் திண்
டாடவில்லை. விளையாட்டாக அவ்வினையைச் செய்து சாதித்
தனர். தேவர்களே அதைக்கண்டு பிரமித்தனர். ஐந்து

காட்களில் இரண்டு நிலப்பகுதிகளும் நன்கு இணைக்கப்பெற் றன. சேனையும் உடனே நகர ஆரம்பித்தது. ஹனுமானும் அங்கதனும் தங்களுடைய தோள்களின்மீது இராமனையும் இலக்ஷ்மணனையும் தூக்கிச் சென்றனர். சேனையின் பெரும் பகுதி பாலத்தின் மீது நடந்தது. ஒருசிலர் நீந்தினர். இன் னும் சிலர் வானத்தில் பறந்து சென்றனர். நிலப்படை, நீர்ப்படை, வானப்படை ஆகிய மூன்றும் ஒன்று சேர்ந்து நகர்வனவாயின. ஆரவாரித்துக்கொண்டு அவர்கள் அக்கரை போய்ச் சேர்ந்தனர். பிறகு தலைமைப்பட்டணத்தை நோக்கி அதிவிரைவில் அவர்கள் ஊக்கத்துடன் நடந்தனர். ஆங்குப் போய்ச் சேர்ந்ததும் படைகள் முறையாக வகுக்கப்பட்டுப் பொருத்தமான இடங்களிலே முகாம் வைக்கப்பட்டன. பிடித்து அடைத்து வைக்கப்பட்டிருந்த சுகனை இப்பொழுது விடுதலைபண்ணி அனுப்பினர்கள். நிகழ்ந்தவைகள் யாவை யும் அவன் இராவணனுக்கு எடுத்து உரைக்க வேண்டுமென் பது படையெடுத்து வந்தவர்களின் நோக்கமாயிற்று.

இன்னும் இரண்டு ராக்ஷசர்கள் வானரங்கள்போன்று வடிவம் மாறியமைந்து வந்து இராமனுடைய சேனையின் வலிவைப்பற்றி உளவு ஆராய்ந்தனர். ஆனல் அவர்கள் இன்னர் என்பதை விபீஷணன் அதிவிரைவில் கண்டுபிடித் தான். சிரச்சேதம் செய்தல் பொருட்டு அவர்கள் இராம னுடைய முன்னிலைக்குக் கொண்டுவரப்பட்டனர். ஆனல் கருணாகரனை ராமபிரானே நிராயுதபாணிகளாக வந்திருந்த வேவுகாரர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்தான். மேலும் அவர்களுக்குத் தேவையாயிருந்த செய்திகளும் விபரங்களும் தாராளமாக அவர்களிடம் தெரிவிக்கப்பட்டன.

தூதனுக வந்த சுகனும் துப்பறிய வந்த உளவுகாரர் களும் இராவணனிடம் திரும்பிச் சென்று எதிரியின் வல்ல

மையைப் பற்றி விரிவாக எடுத்துச் சொன்னார்கள். சீதையை இராமனிடம் பத்திரமாக ஒப்படைத்துவிட்டு அவனோடு சமாதானம் செய்துகொள்வது பொருந்தும் என்று அவர்கள் தங்கள் மன்னனிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் அவர்களிடத்திருந்த பயங்கொள்ளித் தனத்தை முன்னிட்டு அம்மூவரும் விரட்டியோட்டப் பட்டனர். சரதுலன் என்பவனும் இன்னும் சில சாமர்த்திய சாலிகளும் வேவுகாரர்களாக அனுப்பப்பட்டனர். அவர்களோ அஞ்சிக்கொண்டு துட்பு அறிபவர்போன்று பாசாங்கு பண்ணிவிட்டுத் தாங்கள் கண்டறிந்தவைகள் என்ன என்ன என்பதை இலங்கை வேந்தனிடம் தெரிவித்தார்கள். அந்த வேந்தனுக்கும் உள்ளத்தினுள் நடுக்கம். ஆனால் வீறுப்பு வாய்ந்தவன் போன்று வெளியே காட்டிக்கொண்டான். இவ்வுலகிலுள்ள எப்பொருளை முன்னிட்டாவது சீதையைத் திருப்பிக் கொடுக்கப் போவதில்லை என்று இறுமாப்புடன் அவன் எடுத்துரைத்தான்.

லங்காபுரியின் மீது படையெடுத்து வந்த இராமன் அதன்மீது முற்றுகை போடுதலில் தீவிரமாக ஈடுபட்டிருந்தான். அதே வேளையில் காமநோய்க்கு அடிமைப்பட்டிருந்த இலங்கைக் கோமான் சிறைகிடந்த சீதையை ஏமாற்றுதலில் தீவிரமாக ஈடுபட்டிருந்தான். அவள் இருந்த இடத்துக்கு இராவணன் நேரில் சென்றான். வானர சேனையைத் தன்னுடைய போர்வீரர்கள் எங்ஙனம் அடியோடு கொன்று தள்ளினார்கள் என்பதைப்பற்றியும் இராமனைத் தானே எங்ஙனம் மாய்த்துவிட்டான் என்பதைப்பற்றியும் அவன் விரிவாக எடுத்துரைத்தான். முன் ஏற்பாடு செய்திருந்தபடி அவன் அப்படிப் பேசி முடித்தவுடனே மாந்திரிகன் ஒருவன் இராமனுடைய சிதைந்த தலையைக் கொண்டுவந்து ஆங்கு

வைத்தான். இனி, சீதைக்கு இராவணனுடைய மனைவி ஆவதைத் தவிர வேறு கதி ஒன்றுமில்லையென்று அவளுக்குத் தெரிவித்தான்.

இதுகாறும் ராம தியானத்தில் மூழ்கியிருந்த சீதை இப்பொழுது பொங்கிப் பிரலாபித்தாள். தன் மாமியார் கைகேயி தேவியின் பொல்லாத திட்டம் நிறைவேறிவிட்டது என்று எண்ணினள். தம்பி இலக்ஷ்மணன் இப்பொழுது அனாதைபோன்று பரிதவித்துக் கொண்டிருப்பான் என்று எண்ணினள். இராமனுடைய ஜீவிதம் இத்தகைய விபத்தில் வந்து முடிந்ததா என்று மனம் உருகினள். பின்பு இராவணனிடம் தன்னுடைய விண்ணப்பத்தைப் பணிவுடன் அவள் தெரிவித்தாள். தன்னுடைய தலையையும் வெட்டித் தன் நாயகனுடைய தலைக்குப் பக்கத்தில் வைப்பது பாராட்டத் தக்க புண்ணியச் செயலாகும் என்று அவள் பரிதவித்து வேண்டினள். இந்த நெருக்கடியில் ஏதோ ஓர் அவசரமான காரியத்தை முன்னிட்டு மந்திரிகள் வந்து இராவணனை அழைத்துச் சென்றனர். அவன் அசோக வனத்தினின்று அப்பால் சென்ற சிறிதுநேரத்திற்குள் ஜாலவித்தையைக்கொண்டு உருவாக்கிய இராமனுடைய சிரசும் மறைந்து போயிற்று. அதன் பிறகு சரமா என்னும் பெயர் பூண்டிருந்த இராக்ஷசி ஒருத்தி மைதிலியின் முன்னிலைக்கு வந்துசேர்ந்தாள். அப்படி வந்தவளோ மற்ற இராக்ஷசிகளைப் போன்றவள் அல்லள். அவள் நல்லியல்பு படைத்தவள். அப்பொழுது நிகழ்ந்த நிகழ்ச்சிகளனைத்தும் சீதையை ஏமாற்றுவதற்காக இராவணன் புரிந்த பித்தலாட்டங்களாகும் என்று அவள் விளக்கினள். சீதாதேவிக்குத் தக்கமுறையில் அவள் ஆறுதலும் கூறினள். அதற்குச் சற்று முன்பே லங்காபுரியின்மீது இராமனுடைய முற்றுகையும் துவங்குவதாயிற்று.

5. அதுகாறும் ஆகியிருந்த சம்பவங்களை விமர்சனம் பண்ணும் பொருட்டு இராவணன் தன்னுடைய போர்வீரர்களின் சபையைக் கூட்டினான். மால்யவான் என்பவன் இராவணனுடைய தாய்க்குத் தந்தையாவான். ராஜதந்திரிகள் அனைவருக்கும் அவன் மூத்தவன் ஆவான். தன் மனதில் பட்ட முன் எச்சரிக்கையையும் தங்குதடையின்றி அவன் எடுத்துரைத்தான். படையெடுத்து வந்திருந்த எதிரியோ போருக்குப் பொருத்தமான இடங்களைத் தன் கைவசப் படுத்திக் கொண்டான். இலங்காபுரியின் அழிவுக்கான அறிகுறிகளே ஆங்காங்குத் தென்படுகின்றனவென்று அவன் தெரிவித்தான். நாட்டைப் பாதுகாக்கும் எண்ணம் இருந்தால் சீதையை உடனே இராமனிடம் ஒப்படைத்துவிட்டு அவனோடு சமாதானம் செய்துகொள்வது உசிதம் என்பது வயதில் மூதிர்ந்த அன்னவன் கருத்து. ஆனால் இராவணனோ அக்கருத்தை எள்ளி நகையாடினான். போர்வீரர் சபையை உடனே கலைத்தான். எதிரியின் பலத்தைப் பார்வையிடத் தன் மாளிகையின் மேல்தளத்துக்கு அவன் சென்றான்.

இராவணன் தன் மாளிகையின் மேல் தளத்தில் நின்று கொண்டு எதிரியின் பாசறையைப் பார்த்தான். சுவேலை என்னும் குன்றின் மேல் நின்றுகொண்டு இராமனும், அவனுடைய கூட்டத்தாரும் இராவணனைக் கண்டனர். சுக்ரீவன் திடீரென்று பறந்தோடி இராவணனுடைய கிரீடத்தை அவனுடைய தலையினின்று தட்டிக் கீழே வீழ்த்தினான். பிறகு இருவருக்குமிடையில் பயங்கரமான மற்போர் நிகழ்ந்தது. ஒருவனுக்கு ஒருவன் சண்டையில் பின்வாங்கியவனல்லன் என்பது நிரூபிக்கப்பட்டது. மந்த்ர சக்தியோடு கூடிய போர்முறையைக் கையாளுவது உசிதம் என இராவணன் எண்ணினான். அதற்குள்ளாக ஆக்கிரமித்த

சுக்ரீவன் இராமனிடம் சுவேலைக் குன்றுக்குத் திரும்பி விட்டான். இந்நிகழ்ச்சி இராமனுக்கு அகமகிழ்வை ஊட்டியது. ஆயினும் அச்செயலை அவன் ஆக்ஷேபித்தான். ஏனென்றால் முறையாகப் போர் துவங்குவதற்கு முன்பு சுக்ரீவன் பண்ணியது அரசனுடைய அந்தஸ்துக்குத் தகாதது. அந்தப் பாதகனைப் பார்த்ததும் தனக்குச் சீற்றம் தலைக்கு மேல் ஏறிவிட்டது என்று சுக்ரீவன் தன் செயலை விளக்கினான்.

பராக்கிரமம் வாய்ந்த வானரவீரர்களும் கரடி வீரர் களும் போருக்குப் பொருத்தமான இடங்களில் அமர்த்தப் பெற்றிருக்கவேண்டும் என்பது இராமனுடைய கருத்து. அப்படிச் செய்தால்தான் ராக்ஷசப் போர்வீரர்களை முறை யாகச் சமாளிக்கமுடியும். தக்க பாங்கில் படை அமைக்கப் பெற்றாயிற்று. அதன் பிறகு அங்கதன் வாயிலாக இராவணை னுக்குப் போர்ச் செய்தி அனுப்பப்பட்டது. அச்செய்தியை அங்கதன் கொண்டுபோவதே மிகப் பொருத்தமானது. ஏனென்றால் அவனுடைய தந்தையாகிய வாலிக்கு இராவ ணன் அஞ்சி நடந்தான். 'ஒழுங்காகச் சமாதானம் பண்ணிக் கொள். இல்லையேல் போருக்கு ஆயத்தப்படுத்து' என்பது தான் அங்கதன் எடுத்துச் சென்ற செய்தியாகும்.

அங்கதனும் தனக்கு இட்ட ஆணைப்படி நடந்துகொண் டான். பெருந்தன்மை வாய்ந்த ராஜகுமாரனைக் கொடூரத் தன்மை வாய்ந்த ராக்ஷசக் கோமானை அவன் அணுகினான். தான் எடுத்து வந்த செய்தியை அவன் இங்ஙனம் விளக் கினான்: "காலஞ்சென்ற கிஷ்கிந்தை வேந்தன் வாலியின் மகன் அங்கதன் நான் என என்னை உனக்கு அறிமுகப் படுத்திக் கொள்கிறேன். உனக்கும் என் தந்தைக்குமிடையில் எத்தகைய இணக்கம் இருந்தது என்பதை நிச்சயமாக நீ

மறந்துபோகவில்லை. இப்பொழுது நான் இராமனுடைய தூதனாக உன்னிடம் வந்திருக்கின்றேன். அவன் அனுப்பியுள்ள இந்த எச்சரிக்கையை உனக்குத் தெரிவிக்கிறேன். 'பிரம்ம தேவன் உனக்குக் கொடுத்துள்ள வரத்தின் விளைவாக நீ செருக்குடையவனாகவும் துஷ்டனாகவும் வடிவெடுத்திருக்கிறாய். முனிவர்களும், தேவர்களும், நரர்களும் நெடுங்காலமாகச் சித்திரவதை பண்ணப்பட்டிருக்கின்றனர். படுபாவியாகிய உன்னுடைய பொல்லாத பூவுலக வாழ்வுக்கு முடிவுகாலம் வந்திருக்கிறது. உன்னைத் துடைத்துத் தள்ளுவதன் வாயிலாக மண்ணுலகம் தூயதாகத் திருந்தியமையும். சிறிது நேரம் பஞ்சவடி ஆஸ்ரமத்தினின்று நான் வெளியே போயிருந்தபொழுது நீ சீதையைத் திருட்டுத்தனமாகத் தூக்கிக்கொண்டு போயிருக்கிறாய். அதற்கு ஈடாக என்னை எதிர்த்துப் போர்புரிந்து அழிந்துபட்டுப் போவாயாக. என் பாணத்தினின்று இனி நீ ஒருபொழுதும் தப்பிக்க முடியாது. ஆனால் உனக்கு உயிர்ப்பற்று இருக்குமாயின் திருப்பி என்னிடம் ஒப்படைத்துவிட்டு மன்னிப்புக் கேட்டுக்கொள்வாயாக. அப்படிச் செய்தால் நீ உயிர் பிழைப்பாய். எவ்விதத்திலும் இனி நீ லங்காபுரியை ஆளும் கொடூரக் கோமான் ஆகமாட்டாய். உன் தம்பியாகிய விபீஷணன் ஏற்கனவே லங்காபுரிக்குரிய நல்லரசனாக முடிசூட்டப் பெற்றிருக்கிறான். மரணத்தின் வாயிலாக அல்லது பகிஷ்காரத்தின் வாயிலாக லங்காபுரியை விட்டு நீ வெளியேகுவாயாக."

இராவணனுக்கு இப்பொழுது சீற்றம் தலைக்குமேல் ஏறி விட்டது. 'துணிச்சலே வடிவெடுத்துள்ள இந்தக் குரங்கைப் பிடித்துக் கொன்று விடுங்கள்' என்று அவன் வல்லமை மிக வாய்ந்திருந்த நான்கு ராக்ஷசர்களுக்கு உத்தரவு பிறப்பித்

தான். அங்கதனும் வேண்டுமென்றே எளிதில் அகப்பட்டுக் கொண்டான். நான்கு ராக்ஷசர்கள் அவனைப் பிடித்துத் தொங்கிக்கொண்டிருக்கையில் ஒரு பாணம் போன்று அவன் திடீரென்று வானத்தில் மேல்நோக்கிப் பாய்ந்தான். மிக உயர மேலே போனபிறகு வலுத்த பாங்கில் திடீரென்று தன் உடலைக் குலுக்கினான். அதன் விளைவாக நான்கு ராக்ஷசர்களும் அவனைவிட்டுச் சிதறிக் கீழே வீழ்ந்தனர். தலைகீழாக அவர்கள் விழுந்துகொண்டிருக்கையில் அங்கதன் ஒவ்வொருவனுக்கும் ஓர் உதை கொடுத்தான். உதையுண்ட ஒவ்வோர் அரக்கனும் இராவணனுடைய பார்வையில்படும் படி மாளிகையின் முற்றத்தில் பிணமாக வீழ்ந்தான். ராம தூதனே மற்றும் ஒரு செயலைச் சாதித்தான். இராவண னுடைய சபாமண்டபத்துக்குப் பொருத்தமான பெரிய கோபுரம் ஒன்று இருந்தது. அக்கோபுரத்தை அவன் விரைந்து உதைத்தான். அது ஒரு பெரிய கிண்ணம்போன்று வெடித்துக் கீழே வீழ்ந்தது. பிறகு வெற்றிகரமாக அவன் இராமனிடம் திரும்பிப்போய்ச் சேர்ந்தான். தங்கள் மகிழ்ச் சியைத் தெரிவிப்பதற்கு வானரங்கள் உரக்க ஓலமிட்டன.

நகர்வதற்கு இடமில்லாத பாங்கில் லங்காபட்டணம் முழுவதையும் வானரப்படைகள் குவிந்து முற்றுகை போட் டிருக்கின்றன என்னும் செய்தி இராவணனுக்குத் தெரிவிக் கப்பட்டது. கோபாவேசத்துடன் அவன் தன் மாளிகையின் மேல்தளத்துக்கு விரைந்து ஓடினான். விசாலமாக எங்கும் பரவியிருந்த வானர சேனையை அவன் பார்வையிட்டான். வானரங்களோ தங்களுடைய கைகளில் பெரிய பெரிய கற் பாறைகளையும், பிடுங்கி எடுத்த பெரிய பெரிய மரங்களையும் ஆயுதங்களாகத் தாங்கியிருந்தன. இந்த வானரப்படைகள் முழுதையும் கசக்கிக் கொன்றுவிடும்படி ஒரு பரந்த ராக்ஷச

சேனைக்கு அக்கணமே உத்தரவு உருவாயிற்று. தம்பட்டங்களை அடித்துக்கொண்டும், கொம்புகளை ஊதிக்கொண்டும் பயங்கரமான ராக்ஷச சேனை கனவேகத்துடன் எதிரிகளை வந்து தாக்கியது. இதற்கு எதிர்ப்பாகக் குரங்குகள் செய்தது யாது? சிறு சிறு கூழாங்கற்களை எடுத்துவைத்துக்கொண்டு விளையாடுவது போன்று பெரிய பெரிய பாறுங்கற்களை ராக்ஷசப் படைமீது வீசி எறிந்தன. பெரிய பெரிய மரங்களைச் சிலம்பம் விளையாடுவது போன்று அவைகள் எடுத்துச் சுழற்றின. அதன் விளைவாக ராக்ஷசர்கள் அடியுண்டனர்; கசங்கி மடிந்து போயினர். யாண்டும் தங்களுக்குச் சொந்தமாயிருந்த நகங்களையும், நாம்பிய கைகளையும், பற்களையும் குரங்குகள் தாராளமாகப் பயன்படுத்தின. போரோ பார்ப்பதற்குப் பயங்கரமாயிருந்தது. இருகட்சியிலும் ஆயிரக்கணக்கான பேர் வீழ்ந்து மடிந்தனர். தரை முழுதும் ரத்தம் பரவிக் கிடந்தது. துண்டுகளாகச் சிதறியிருந்த பிரேதங்களால் அத்தரை மூடப்பட்டிருந்தது. உள்ளத்தைக் கலக்குகிற கொலைக்களமாக அது காட்சிகொடுத்தது. ஆயினும் இரண்டு பக்கங்களிலும் வீராவேசமே தாண்டவமாடிற்று.

இங்ஙனம் சேனையோடு சேனை தாக்கிக் கணக்கற்ற பேர் மடிந்துபோனது ஒருபுறமிருக்க திறமை வாய்ந்த போர் வீரர்களுக்கிடையில் வீரனோடு வீரன் தனித்தனியாகச் சண்டையிட்டது மற்றொரு நிகழ்ச்சியாகும். அங்கதன் இந்த்ரஜித்தோடு போராடினான். ஹனுமானும் ஜம்புமாலியும் பரஸ்பரம் ஓயாது உதைத்துக் கொண்டனர். அதே விதத்தில், இலக்ஷ்மணனும் விருபாட்சனும் சிங்கத்தோடு சிங்கம் மோதுவது போன்று சண்டையிட்டனர். இருதரத்தாரும் காண்பித்த போர்த் திறமை மிக அற்புதமாயிருந்தது.

ராக்ஷசப் படைகளுக்கிடையில் ரதங்கள் வேண்டியவாறு இடம் பெற்றிருந்தன. அந்த ரதங்களனைத்தும் ஒன்றன்பின் ஒன்ருகத் தவிடுபொடியாக்கப்பட்டன. தன்னுடைய பாணங்களைக்கொண்டு இராமன் தன்னந்தனியாக ஆயிரக்கணக்கான அரக்கர்களைத் தகர்த்தொழித்தான்.

நாள் முழுதும் பயங்கரப் போர் மும்முரமாக நிகழ்ந்த வண்ணமாயிருந்தது. இரு பக்கங்களிலும் கொல்லப்பட்டவர்களோ கணக்கில் அடங்கமாட்டார்கள். சூரியன் அஸ்தமித்து இரவு வந்தது. ஆயினும் சீற்றம் நிறைந்த சண்டை நின்றபாடில்லை. காரிருளில் தன்னைச் சேர்ந்தவன் யார், தன்னை எதிர்த்துப் போர்புரிபவன் யார் என்பதைக் கண்டுபிடிக்க இருதரத்தாருக்கும் இயலவில்லை. எதிரில் நிற்பவன் யார் என்று விசாரித்துக் கிடைத்த விடைக்கேற்ப வினையாற்றப்பட்டது. ராக்ஷசர்கள் பயன்படுத்திய குதிரைகளும் யானைகளும் ஏராளமாகக் கொல்லப்பட்டன. தாம் படைத்திருந்த பற்களைக்கொண்டு கடித்தும், நகங்களைக்கொண்டு குத்தியும் வண்ணத்தில் தங்களினும் மிக்க விலங்குகளை வானரங்கள் வீழ்த்திவிட்டன. ராக்ஷசர்கள் அணிந்திருந்த பொன் ஆபரணங்கள் காரிருளில் மின்மினிப் பூச்சிகள் போன்று காட்சி கொடுத்தன. அக்காட்சிகள் குரங்கு இனத்துக்கு நன்கு பயன்பட்டன. மின்னிக்கொண்டிருந்த வடிவங்களைப் பிடித்துக் கசக்கிக் கொன்றுவிட்டார்கள். வல்லமை வாய்ந்த அங்கதன் வெல்லமுடியாத இந்த்ரஜித்தை வென்றுவிட்டான். அந்த வெற்றியை முன்னிட்டு வானரங்கள் மகிழ்ச்சியோடு கர்ஜித்தன. ஆனல் இந்த்ரஜித்தோ திடீரென்று காட்சியினின்று மறைந்தான். மற்றவர்களுக்கு விளங்காத மந்த்ரசக்தி வாய்ந்த ஆயுதங்கள் பல அவனிடமிருந்தன. காட்சிக்குத் தென்படாதிருந்துகொண்டு இராமன்

மீதும் இலக்ஷ்மணன் மீதும் அவன் பாணங்களைப் பொழிந்தான். சகோதரர்கள் இருவருக்கும் வெறுமனே தங்களைக் காப்பாற்றிக் கொள்ளுதற்கு மட்டும் இயன்றது. காட்சிக்கு எட்டாத சத்துருவைத் தாக்க அவர்களுக்கு இயலவில்லை. இறுதியாக இந்த்ரஜித் நாகாஸ்திரத்தை எய்து வல்லமை வாய்க்கப்பெற்ற சகோதரர்கள் இருவரையும் பிணித்துவிட்டான். இடத்தைவிட்டு நகர அவர்களுக்கு இயலவில்லை. மாண்டுபோனவர்கள் போன்று அவர்கள் மண்ணின் மிசை கிடந்தனர். இந்த விபத்தின் விளைவாக வானரசேனையின் வீரியம் தளர்வுற்றது. சேனைத் தலைவர்களுக்கிடையிலும் மற்றவர்களுக்கிடையிலும் மனச் சோர்வு விரைந்து புகுந்துவிட்டது.

6. வெற்றி வீரனாக இந்த்ரஜித் தன் தந்தையிடம் திரும்பிச் சென்றான். இராமனையும் இலக்ஷ்மணனையும் தான் கொன்றுவிட்டதாகத் தன் தந்தையிடம் தெரிவித்தான். அச் செய்தியைக் கேட்ட இராவணனுக்கோ மட்டில் அடங்காத மகிழ்ச்சி உண்டாயிற்று. ஏனென்றால் அவன் போட்டிருந்த திட்டம் வெற்றிகரமாக நிறைவேறிவிட்டது. தன் மைந்தனை அவன் குதூகலத்தோடு கட்டித் தழுவிக்கொண்டான். செயற்கரிய செயலை அவன் சாதித்ததற்காக மனமார அவன் ஆசி கூறினான். அக்கணமே அவனுடைய மனது மைதிலியின்பால் சென்றது. எப்படியாவது அவளைத் தன் வசப் படுத்துவது அவனுடைய திட்டமாயிற்று. ராக்ஷசிகள் சீதையைப் புஷ்பக விமானத்தில் ஏற்றி வைத்துக்கொண்டு போர்க்களத்துக்கு அழைத்துச் சென்று நிகழ்ந்தவைகளையெல்லாம் அவளுக்குக் காட்டவேண்டும். தன் கணவனைப் பற்றி அவள் பெருமிதமாக மதிப்புப்போட்டிருந்தாள். அது முற்றிலும் பக்றகனவாகப் போய்விட்டது என்பதை அவள்

கண்டுகொள்ள வேண்டும். ராக்ஷசிகளும் தங்களுடைய வேந்தனுடைய ஏவல்படியே செய்தார்கள். சகோதரர்களிருவரும் செயலற்றுத் தரையில் கிடந்ததை வைதேகி விமானத்திலிருந்தபடி பார்த்தாள். தாங்கவொண்ணுத் துயரம் அவளைப் பிடித்து வாட்டியது. அவள் பிரலாபித்ததாவது: "இராமனுக்காகவென்று நான் உயிரைத் தாக்குப் பிடித்து வைத்திருந்தேன். ஆனல் அவன் வீழ்ந்துகிடப்பதைப் பார்க்கும் தௌர்பாக்கியம் எனக்குரியதாயிற்று. சாமர்த்தியம் வாய்ந்த ஜோதிடர்கள் என்னைக் குறித்துக் கணித்தது எல்லாம் பொய்யாகப் போயிற்று. நான் விதவையாகமாட்டேன் என்றும் எனக்கு மகப்பேறு வாய்க்கும் என்றும் அவர்கள் கணித்து உறுதிகூறினர்கள். அவர்கள் கூற்று பொய்யாகப் போயிற்று. என் தலைவனை யாருமே வெல்லமுடியாது என்று ரிஷிகள் பெருமிதமாகப் போற்றினர்கள். ரிஷிகள் கூற்றும் பொய்யாகப் போயிற்று. இனி, இந்தத் தௌர்பாக்கியத்தைப் பூர்த்திபண்ணுவது என்கடமையாகும். ஒன்றுக்கும் உதவாத பாபியாகிய நான் என்னையே மாய்த்துக்கொள்ளவேண்டும்."

சீதை இங்ஙனம் ஆருத்துயரத்தில் அழுந்திக்கிடந்த பொழுது திரிசடை என்னும் நல்லியல்பு படைத்த அரக்கி சீதையை அணுகினள். அவள் கூறிய ஆறுதல் மொழியாவது: "அம்மா, நீ காணும் இந்தப் பரிதாபகரமான காட்சி வெறும் புறத்தோற்றம் என்பதை இயல்பாக நான் உணர்கிறேன். துன்பத்துக்குரியது போன்று தென்படுகிற இக்காட்சி அதிவிரைவில் இன்பத்துக்குரியதாக மாறியமையப் போகிறது. நீ நெடுங்காலம் தவத்தில் ஈடுபட்டிருக்கின்ருய். இன்னும் சிறிதுகாலம் அப்புண்ணியச் செயலில் தொடர்ந்து ஈடுபடு. அதிவிரைவில் உனக்கு நல்லகாலம்

வரப்போகிறது.'' இங்ஙனம் எடுத்துச்சொல்லித் திரிசடை சீதைக்கு உற்சாகமூட்டினுள்.

சகோதரர்களிருவரும் செயலற்றுத் தரையில் கிடப்பதைப் பார்த்த சுக்ரீவன் பெருங்குழப்பத்திற்கு ஆளானுன். அச்சமும் மதிமயக்கமும் அவனைக் கவர்ந்துகொண்டன. ஆனால் விபீஷணனுடைய பாங்கு வேறு ஒருவிதமாக இருந்தது. பிரதிகூலமான சூழ்நிலையிலும் சுக்ரீவன் சாந்தமூர்த்தியாயிருக்கவேண்டுமென்றும் தன்னுடைய கடமையைத் துணிச்சலுடன் நிறைவேற்ற வேண்டுமென்றும் அவன் தூண்டினுன். சகோதரர் மாண்டுபோகவில்லை. இதை அவன் தெளிவுறுத்தினுன். மந்த்ரசக்தி வாய்ந்த ஆயுதத்துக்கு அடிமைப்பட்டவர்கள் போன்று அவர்கள் தென்பட்டனர். அதிவிரைவில் அவர்கள் தெளிவுறுவார்கள். இச்செய்தியைக்கேட்ட வானரங்களுக்குச் சிறிது ஆறுதல் உண்டாயிற்று. உயிரற்றவர்கள் போன்று தரையில் படுத்துக் கிடந்த சகோதரர்கள் இருவரையும் கண்ணும் கருத்துமாக அவர்கள் காப்பாற்றி வந்தனர். (இராமனும் இலக்ஷ்மணனும் உயிர் துறந்தவர்கள் போன்று படுத்துக்கிடந்தது பரதத்துவம் ஒன்றுக்கு நல்ல விளக்கமாகும். பொறிவழியே புலன்களில் மனதைச்செலுத்திப் பிரபஞ்ச வாழ்வில் மூழ்கிக் கிடக்கின்றவர்களுடைய உள்ளத்தில் உறைகின்ற பரமாத்மன் ஜடப் பொருள் போன்று செயலற்றுக் கிடக்கிறது. ஆயினும் அப்பரமாத்ம தத்துவம் எக்காரணத்தை முன்னிட்டும் பழுதுபட்டுப் போவதன்று.)

நாகாஸ்திரத்திற்கு இராமன் வசப்பட்டிருந்த நேரம் முடிவுற்றது. ஆகவே அவன் விழித்து எழுந்திருந்தான். அவன் சங்கல்பித்த மாத்திரத்தில் காயம்பட்டிருந்த அவனுடைய அவயவங்களெல்லாம் குணமடைந்தவைகளாக மாறியமைந்

தன. தன்னை முற்றிலும் நிஜ நிலைக்குக் கொண்டு வந்த மூத்தவன் தம்பியாகிய இலக்ஷ்மணனுடைய பரிதாபகரமான நிலையைப்பார்த்தான். அக்கணமே அவன் தாங்கவொண்ணாத் துயரத்துக்கு ஆளாயினன். "ஒப்பற்ற தம்பியைப் பிரிந்து நான் வாழ்ந்திருக்கமாட்டேன். இலக்ஷ்மணனைப் பிரிந்துள்ள எனது ஜீவிதம் தாங்க முடியாத தலைபாரம் போன்று தோன்றுகிறது. அவனுக்கு நான் செய்யும் கைம்மாறு ஒன்றே ஒன்று உள்ளது. அதிவிரைவில் அவனோடு கூடி யிருக்க இவ்வுலக வாழ்வைத் துறந்து மறுமை எய்துவேன். ஒரே ஒரு குறைநிலை என் மனதை உறுத்துகிறது. விபீஷண னுக்கு நான் கொடுத்துள்ள வாக்குறுதியை நிறைவேற்ற முடியாதவனாகப் போய்விட்டேன். சுக்ரீவன் எனக்குச் செய் துள்ள பேருபகாரம் ஒப்பற்றது. அவனுடைய படை வீரர் கள் மேலும் என் பொருட்டுப் பலியாக வேண்டிய அவசிய மில்லை. இலக்ஷ்மணனைப் பிரிந்துள்ள வாழ்வில் எனக்குப் பயனொன்றுமில்லை. நான் மடிந்து போவேன்."

நிகழ்ந்தவைகளை ஆராய்தல் பொருட்டு விபீஷணன் தானே அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தான். அரசர்களை உண்டாக்க வல்லவர்களாக இராமனும் இலக்ஷ்மணனும் இருந்தார்கள். ஆனால் அவர்களுடையதும் அதோ கதியாகப் போய்விட்டது. லங்காபுரியை நல்ல நாடாகத் திருத்தி யமைக்க அவன் திட்டம் போட்டிருந்தான். அத்திட்டமோ நிறைவேறாமல் போயிற்று. இதற்கிடையில் குரங்குகள் கூச்சலிட்டுக் கொண்டு குழம்பி நாலாபக்கமும் பறந் தோடின. ஆங்கு வந்திருந்தவன் அச்சத்திற்குரிய இந்த்ரஜித் தாக இருப்பானோவென்று அவ்வானரங்கள் அஞ்சினார்கள்.

எப்படி ஆராய்ந்து பார்த்தாலும் நிலைமை குழப்பத்திற் குரியதாகவே தென்பட்டது. அத்தகைய நிலைமையையும்

எப்படிச் சமாளிப்பது என்பதைச் சுக்ரீவன் அமைதியாகத் தீர்மானித்தான். முதன் முதலாக அவன் செய்த செயல் குரங்குகளைத் தேற்றியதேயாம். தங்களிடம் வந்திருப்பவன் தங்களுடைய கூட்டாளியாகிய விபீஷணன். அவனை இந்த்ரஜித் என்று எண்ணி அஞ்சவேண்டாம் என வானரக் கூட்டத்திற்கு அவன் உற்சாக மூட்டினன். அடுத்தபடியாகத் தன்னுடைய சினேகிதனாகிய விபீஷணனுக்கு மற்றொரு போக்கில் அவன் உற்சாகமூட்டினன். எவ்விதத்திலாவது கொடும்பாதகனாகிய இராவணனைக் கொன்று விபீஷணனை லங்காபுரியின் சிம்மாசனத்தில் ஏற்றி வைக்கத் தனக்கு முடியும் என்று அவன் திட்டவட்டமாகச் சொன்னன். அடுத்தபடியாகத் தன்னுடைய மாமாவாகிய சுஷேணனுக்கு ஒரு கருத்தைச் சுக்ரீவன் தெரிவித்தான். இராமனையும் இலக்ஷ்மணனையும் கிஷ்கிந்தைக்கு எடுத்துச் சென்று அவர்களைக் குணப்படுத்துவதற்கான முறைகளையெல்லாம் கையாளவேண்டும் என்பது அவனுடைய கருத்து. தன்னுடைய சொந்த முயற்சியைக் கொண்டு இராவணனைக் கொன்றுவிடுவது திண்ணம் என்றும், சீதையை மீட்டெடுத்து இராமனிடம் சேர்ப்பது திண்ணம் என்றும் சுக்ரீவன் தெரிவித்தான். சுஷேணனே புதியதோர் கருத்தை வெளியிட்டான். பாற்கடலிலே சந்த்ரா என்ற மலையொன்றிருக்கிறது. அதில் சஞ்சீவிகரணி, விஸல்யா என்னும் இரண்டு மூலிகைகள் இருக்கின்றன. மாண்டு போனவர்களுக்கு மீண்டும் உயிர்தரும் வல்லமையும் காயப்பட்டுக்கிடந்தவர்களை அக்கணமே குணப்படுத்தும் தன்மையும் அம்மூலிகைகளுக்கு இருந்தன என அவன் எடுத்துரைத்தான். அம்மலையை அப்படியே பெயர்த்தெடுத்து வரும்படி மாருதி நியமிக்கப்பட்டான். பாக்கிய வசத்தால் அப்பொழுதுதான் அந்த இடத்துக்குக் கருடன் விரைந்து வந்து சேர்ந்தான். இந்தக்

கருடனே மகாவிஷ்ணுவுக்கு வாகனமாகின்றான். அவனுடைய முன்னிலையில் நாகாஸ்திரம் வலிவற்றதாகப்போகிறது. இதுவே அந்த அஸ்திரத்தைப் பற்றிய மர்மமாகும். கருடன் வந்தவுடன் நாகாஸ்திரம் செயலற்றுப் போனது. சகோதரர்களிருவரும் பழையபடி தங்களுடைய நிஜநிலையை எய்தினர். யுத்தத்துக்கும் அவர்கள் ஆயத்தமாயினர்.

7. இந்த்ரஜித்தினால் இராமனும் இலக்ஷ்மணனும் கொல்லப்பட்டார்கள் என்னும் செய்தியை முரசடித்து லங்காபுரி மக்களுக்கிடையிலே இராவணன் விளம்பரப்படுத்தினான். அதைக் கேட்ட ராக்ஷசர்கள் ஆனந்தக்கூத்தாடினார்கள். ஆனால் சிறிது நேரத்திற்குள் அந்தக் கூப்பாட்டை முறியடிக்கிற பாங்கில் சுக்ரீவனுடைய சேனை முகாமினின்று மகிழ்ச்சிக் கூப்பாடு கிளம்பியது. அதைக் கேட்ட இராவணன் ஏமாற்றமடைந்தான். அக்கணமே அந்நிகழ்ச்சியை ஆராய்ந்தறிய அவன் ஆணையிட்டான். இந்த்ரஜித் எய்த நாகாஸ்திரத்தினின்று இராமனும் இலக்ஷ்மணனும் விடுதலை பெற்று வேகம் வாய்ந்த வேழங்கள் போன்று சேனையை உற்சாகப்படுத்தி வருகிறார்களென்னும் செய்தி வந்தது. அதைக் கேட்ட இலங்கை வேந்தனுக்கு வெட்கமும் பரபரப்பும் உண்டாயின. அதற்கேற்ற காரணமும் இருந்தது. இந்த்ரஜித் எய்த நாகாஸ்திரத்தினின்று யாருமே தப்பித்துக்கொள்ள முடியாது. இந்த அல்ப மானுடர்கள் எப்படி விடுதலை பெற்றார்கள் என்பதுதான் அவனுக்கு ஏற்பட்ட ஏமாற்றம். கவலை இன்னதென்று அறியாதிருந்த இலங்கைக் கோமானுக்கு இப்பொழுது கொஞ்சம் கவலை உள்ளத்தில் உருவெடுத்து விட்டது.

தூம்ராக்ஷன் என்பவன் பராக்கிரமம் வாய்க்கப்பெற்ற ராக்ஷச சேனாபதி. தக்க சேனையைத் திரட்டிக்கொண்டு

போய் இராமனைக் கொல்லும்படி அந்தச் சேனுபதிக்கு ராக்ஷச ராஜாவிடமிருந்து உத்தரவு வந்தது. போரில் ஈடுபடும்படி முதன் முதல் பொறுக்கி எடுக்கப்பட்டவன் தான் என்கின்ற காரணத்தை முன்னிட்டு அச்சேனுதிபதி தன்னைக் குறித்துப் பெருமையடித்துக் கொண்டான். பெரிய பட்டாளம் ஒன்றை அவன் திரட்டியெடுத்தான். பலப்பல பயங்கரமான ஆயுதங் கள் தாங்கியவர்களாக அந்தச் சேனைத் துருப்புக்கள் வானரப் படைகளின்மீது பாய்ந்தார்கள். அதற்கு எதிர்ச்செயலாகக் குரங்குகள் கரடுகளையும் பெரிய பெரிய மரங்களையும் தூக்கி ராக்ஷசர்கள் மீது சுழற்றி வீசினுர்கள். இரு கட்சிகளிலும் உயிர்ச் சேதம் ஏராளமாக உண்டாயிற்று. அந்தத் தூம் ராக்ஷனை ஹனுமான் வீராவேசத்துடன் தாக்கினுன். வீரர் களாகிய இருவருக்குமிடையில் நிகழ்ந்த மற்போர் மிக உக்கிரமாயிருந்தது. மகா வீரனுகிய மாருதி மிகப்பெரிய பாறை ஒன்றைத் தூக்கி அந்த ராக்ஷசன்மீது வீசி அவனைக் கசக்கிக் கொன்று விட்டான். சேனைத்தலைவன் மடிந்தவுடன் சேனை குழம்பி லங்காபுரிக்குள் பறந்தோடியது.

ராக்ஷச ராஜனே நடந்த நிகழ்ச்சியை முன்னிட்டுச் சிறி தேனும் சோர்வடைந்தவன் அல்லன். மனக்கொதிப்புடன் வஜ்ர தம்ஸ்ட்ரன் என்னும் மற்றொரு தலைசிறந்த சேனுதி பதிக்குப் படையெடுத்துப் போகும்படி அவன் உத்தரவு பிறப்பித்தான். எப்படியாவது எதிரிகளை அதிவிரைவில் நசுக்கித் தள்ளவேண்டுமென்பது அரசனுடைய உத்தரவு. அதற்கு அடிபணிந்து சேனுதிபதியும் வேந்தன் முன்னிலையில் தலைவணங்கினுன். மிகப் பெரிய படை ஒன்றைத் திரட்டிக் கொண்டு தெற்கு வாயில் பக்கம் அவன் துரிதமாகப் போனுன். ஆங்கு முகாம் அமைத்திருந்த அங்கதன் மீதும் அவனுடைய சேனையின் மீதும் வஜ்ர தம்ஸ்ட்ரன் பாய்ந்

தான். பயங்கரமான போர் நிகழ்ந்தது. இரு மருங்கிலும் இறந்துபட்டுப்போனவர்கள் எண்ணிக்கையில் அடங்கமாட்டார்கள். கடைசியாக அங்கதனும் வஜ்ர தம்ஸ்ட்ரனும் கைச்சண்டை துவக்கினார்கள். அது நெடுநேரம் வல்லமையுடன் நிகழ்ந்தது. இறுதியில் ராக்ஷசனை வானர இளவரசன் விண்ணுலகுக்கு வழியனுப்பிவிட்டான். சேனைத் தலைவன் மடிந்ததும் சேனை சிதறடைந்தோடிக் குழப்பத்துடன் பட்டணத்துக்குள் மறைந்தது. வானர வீரர்கள் அங்கதனைச் சூழ்ந்துகொண்டு ஆனந்தத் தாண்டவமாடினார்கள். தங்கள் இயல்புக்கொப்ப வெற்றிக் கூப்பாடு போட்டார்கள்.

அகம்பனனுக்குப் படையெடுத்துப் போகும்படி அடுத்த படியாக ஆணை வந்தது. அசைக்கப்படாதவன் என்பது அகம்பனன் என்ற சொல்லுக்குப் பொருளாம். தண்டகாரண்யத்திலே ஜனஸ்தானத்தின் பேரழிவைக் குறித்த செய்தியை ஆங்கிருந்து இராவணனுக்குக்கொண்டு வந்தவன் இந்த அகம்பனன். தனக்குரிய பெரிய ரதம் ஒன்றில் ஊர்ந்துகொண்டு அளப்பரிய படையொன்றைத் திரட்டிக் கொண்டு போர்க்களத்துக்குத் துணிச்சல் வாய்ந்தவனாக அவன் வந்தான். அவன் முற்றுகைபோட்டதும் அவனுடைய தரத்திற்கு ஏற்றதாயிருந்தது. அதினின்று உருவெடுத்த யுத்தமோ சொல்லால் விளக்கமுடியாதது. போர்க்களத்தில் கிளம்பிய குப்பையும் தூசியும் உறவினன் யார், எதிரி யார் என்று அறிந்துகொள்ளமுடியாத வண்ணம் எங்கும் நிறைந்திருந்தன. விபரீதமாகச் சில வேளைகளில் ஒரு குரங்கோடு மற்றொரு குரங்கும், ஒரு ராக்ஷசனோடு மற்றொரு ராக்ஷசனும் மல்யுத்தம் பண்ணுபவராயினர். அகத்தில் மனக்குழப்பமும் புறத்தில் மண்மேகமுமே அதற்குக்

காரணங்களாயின. கணக்கற்றபேர் தகர்த்துத் தள்ளப் பட்டனர். போர்க்களம் முழுதும் பிரேதமயமாய்க் காட்சி கொடுத்தது.

வானரங்கள்மீது அகம்பனன் அம்புகளைப் பொழிந்து தள்ளினன். அதன் விளைவாகப் பெருவாரியாகக் குரங்குகள் அழிந்துபட்டுப் போயின. இந்த ராக்ஷசச் செயலைப் பார்த்த மாருதிக்கு வீராவேசம் வந்தது. பெரிய மரம் ஒன்றை வேருடன் பெயர்த்தெடுத்து அவன் அகம்பனன் மீது விரைந்து வீசினன். அது வந்து பாய்ந்த வேகத்தினல் ராக்ஷச வீரனுடைய தலை அடையாளம் தெரியா வண்ணம் நசுங்கிப் போயிற்று. தங்கள் சேனதிபதியின் பரிதாபகர மான கதியைக் காணலுற்ற பட்டாளம் லங்காபுரிக்குள் பாய்ந்து ஓட்டம் பிடித்தது.

ராக்ஷச வேந்தன் இத்தகைய தோல்வியைக் குறித்து மனம் தளர்ந்தவனல்லன். பிரஹஸ்தன் என்னும் மற்றொரு சேனதிபதிக்குப் படையெடுத்துப் போகும்படி அவன் உத்தரவு பிறப்பித்தான். அரிய பெரிய ஆயுதபாணிகளாக அவன் திரட்டிய சேனை அமர்க்களத்துக்கு வந்து சேர்ந்தது. அப்படி வந்தவர்கள் அடித்த தம்பட்ட ஓசையும், ஊதிய கொம்பு ஒலமும் வானரப்படைகளின் காதுகள் அடைக்கும் படி செய்துவிட்டன. இது பிரஹஸ்தன் கையாண்ட யுத்த சூழ்ச்சி. இதன் விளைவாகக் குரங்குகள் முற்றிலும் மருண்டு ஓடிவிடும் என்று அவன் எதிர்பார்த்தான். அவைகளால் கைவிடப்பட்ட சகோதரர்கள் இருவரையும் கைதிகளாகப் பிடித்துக்கொண்டு போவது அவன் அமைத்திருந்த திட்ட மாகும். ஆனல் நிகழ்ந்தது யாது? குரங்குக் கூட்டம் கிளப் பிய எதிர்ப்பு ஒலம் ராக்ஷசர்களுடைய காதுகளைத் துளைத் தது. ஆக, ஒலச் செய்தி ஒன்றுக்கும் உதவாததாய்ப்

போயிற்று. பிறகு பயங்கரப் போர் துவங்கியது. இரு கட்சிகளிலும் கொலையுண்டு மடிந்தவர்களைக் கணக்கிட முடியாது. பிரஹஸ்தனாகிய ராக்ஷச சேனாதிபதி நீலனாகிய வானர சேனாதிபதியை நேரில் தாக்கினான். இருவருக்கு மிடையில் நிகழ்ந்த கைக்குத்துச் சண்டை கொடூரமானதா யிருந்தது. நீலன் வீசிய பெரும்பாறை ஒன்று பிரஹஸ்தனை நிலத்துக்குள் அமிழ்த்தி ஒழித்துவிட்டது. ராக்ஷசப்படை யினர் மருண்டோடிப் போர்க்களத்திலே தங்கள் தலைவ னுக்கு நிகழ்ந்த வெட்ககரமான முடிவை நடுங்கிக்கொண்டு இராவணனிடம் தெரிவித்தனர்.

இராவணனுக்குப் பொறுக்க முடியாத முன்கோபம் மூண்டெழுந்தது. ஏனென்றால் தன்னுடைய சேனைத் தலை வர்களுக்கெல்லாம் தலைவனாயிருந்த பிரஹஸ்தன் எதிரி களால் மாய்த்துத் தள்ளப்பட்டான். இலங்கை வேந்தன் இயம்பியதாவது: "பிரஹஸ்தனைக் கொன்ற எதிரி சாமானிய மானவனாக இருக்க முடியாது. ஆக, நானே போர்முனைக் குச் சென்று எதிரியையும் அவனுடைய படைகளைத் தையும் துடைத்துத் தள்ளுவேன்." இராவணன் போர்க் களத்துக்குள் பிரவேசித்த பாங்கு மிகக் கவர்ச்சிகரமாக வும், பயங்கரமாகவும் காட்சி கொடுத்தது. அவனுடைய ரதம் வலிவு மிகப் படைத்திருந்த நான்கு குதிரைகளால் நடத்தப்பட்டது. திமிங்கலம் ஒன்று நீர்வாழ்வன அனைத் தையும் சிதைத்துத் தள்ளிக்கொண்டு பாய்வதற்கு நிகராக இராவணனுடைய ரதம் வானர சேனைகளைப் பிளந்து கொண்டு முன்னேக்கிச் சென்றது. அப்படி ஆக்கிரமித்து வந்தவனை எதிர்த்து சுக்ரீவன் போர் புரிந்தான். யுத்தத்தின் வேகம் மிக உக்கிரமாக இருந்தது. வானர வேந்தன் அலுத் துப்போனான். அதை அறிய வந்த ஆஞ்சனேயன் அரக்க

வேந்தன் மீது மும்முரமாக முட்டி மோதினன். அவனுடைய கைவரிசையும் சிறிது சிறிதாகத் தளர்வுறுவதாயிற்று. அவனைத் தொடர்ந்து வல்லமை வாய்ந்த நீலன் போர்புரிந்தான். அன்னவனும் தளர்வுற்றுப் போனன். அடுத்தபடி இலக்ஷ்மணன் இலங்கை வேந்தனைத் தாக்கினன். தாற்காலிகமாக இலக்ஷ்மணனும் தோல்வியுற்றுப் போனன். இத்தகைய நெருக்கடியை இராமன் கூர்ந்து கவனித்தான். படுபாவியாகிய அரக்க அரசனுக்குத் தன் அம்பின் வல்லமையை எடுத்துக்காட்ட ராமபிரான் எண்ணங்கொண்டான். இதற்குள்ளாக ஆஞ்சனேயன் முற்றிலும் களைப்பாறியவன் ஆகிவிட்டான். தன் தலைவனை இராமனைத் தன்தோளின்மீது அமர்த்திக்கொண்டு யுத்த களத்தில் வந்து நின்றான். இந்த ஏற்பாடு மிகச் சாமானியமானது எனினும் இலங்கை வேந்தனுடைய ஆடம்பரமான யுத்த தளவாடத்தைச் சமாளிக்க வல்லதாயிருந்தது. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்னும் கோட்பாட்டுக்கு இலக்காக இக்ஷ்வாகு இளம் சிங்கம் விளங்கினன்.

எதிரிகள் இருவருக்குமிடையில் பயங்கரப் போராட்டம் துவங்கிற்று. ஒருவன் எய்த ஒவ்வோர் அம்புக்கும் எதிர் அம்பு மற்றவனிடமிருந்து வந்தது. ஊசியின்மீது ஊசி பாய்ந்தது போன்று ஒருவனுக்கு நிகராக மற்றவன் தென்பட்டான். வாகனமாயிருந்த ஹனுமானைக் காயப்படுத்திய தன் வாயிலாக அரக்க அரசன் போர் நியதியைப் புறக்கணிப்பவன் ஆயினன். அவன் செய்த அடாத செயலுக்கு நிகரான எதிர்ச் செயலைச் செய்து முடிக்க இராமன் இப்பொழுது கடமைப்பட்டவனுயிருந்தான். அவன் சரமாரியாகச் சொரிந்த பாணங்கள் இராவணனுடைய ரதத்தைத் தவிடுபொடியாக்கின. வல்லமை வாய்ந்த நான்கு குதிரைகளும் அவைகளை

நடாத்திய சாரதியும் சிறிது நேரத்தில் ராமபாணத்துக்கு இரையாயினர். இராவணனுடைய அகன்ற நெஞ்சின்மீது பாய்ந்த ராமபாணம் அவனைத் திணறச் செய்தது. அவன் தட்டுத் தடுமாறித் தன் வில்லைக் கைநழுவ விட்டுவிட்டான். திணறிக்கொண்டிருந்த அரக்க வேந்தனுடைய கிரீடத்தை மற்றோர் அம்பு துகளாக்கிக் கீழே தள்ளியது. இப்பொழுது தெளிந்த தொனியிலே இராமன் கம்பீரமாகக் கூறுவானாயி னன்: "இன்று நீ அற்புதமாகப் போர் புரிந்துள்ளாய். தகை சான்ற என் வீரர்களெல்லாம் உன்னால் தோற்கடிக்கப்பட் டுள்ளனர். நீ களைத்துப்போனவனாகத் தென்படுகின்றாய். ஆதலால் இன்று நான் உன்னை ஒழிக்கமாட்டேன். உன் மாளிகைக்குச் சென்று ஓய்வெடுத்துக்கொள். புதிய திண்மை வாய்க்கப் பெற்றவனாக மற்றொரு ரதம் ஊர்ந்து என்னோடு போருக்கு வா. என்னுடைய வல்லமையைத் தெளிவுற்ற நிலையிலிருந்து நீ காண்பாய்."

அவமானப்பட்டவனாய், கிரீடம் வீழ்ந்தவனாய், வெட்கத் திற்கு ஆளாகியவனாய் இலங்கை வேந்தன் தன் அரண்மனைக் குள் தள்ளாடி நடந்துசென்றான். அந்த அரக்க வேந்தனு டைய ஆயுள் முழுதிலும் தோல்வியைக் கண்டறிந்தது இதுவே முதல்தடவையாம். ஆதலால் அவன் ஆழ்ந்து சிந் தித்துப் பார்த்தான். அவன் அதுகாறும் புரிந்துவந்த அடாத செயல்கள் அவனுடைய உள்ளத்தைத் தாக்கின. ஆயினும் அவனுடைய வீறுப்பு அழிந்துபோனபாடில்லை. அவனுடைய முழு ஆற்றலையும் பயன்படுத்தி மற்றும் ஓர் ஆக்கிரமிப்பில் ஈடுபட அவன் துணிந்தான். தன்னைச் சூழ்ந்திருந்த வானரச் சேனைகளும், மானுடப் பிண்டம் ஒரு வனும் பாராட்டுதற்குத் தகுதியற்ற புல்லியர்களாம். இதுவே அவன் செய்த மனோராஜ்யமாகும்.

8. அரக்கப் பிண்டம் என்றால் இராவணன்தான் பொருத்தமான அரக்கப் பிண்டமாவான். வாழ்க்கையில் அவன் அடைந்த தோல்வி அவன் உள்ளத்தைச் சிறிதேனும் பாதிக்கவில்லை. யாண்டும் உள்ள வணங்காமுடி மன்னனாக அவன் தென்பட்டான். தன் ஏவலாளர்கள் சிலரை அழைத்து அவர்களுக்கு அவன் இட்ட ஆணையாவது: "இக்கணமே சென்று தம்பி கும்பகர்ணனைத் தட்டி எழுப்புவீர்களாக. அவன் மாதக்கணக்காக உறங்குபவன். தக்க முறைகளைக் கையாண்டு அவனைத் தூக்கத்தினின்று விழிக்கச் செய்யுங்கள். உடனுக்குடனே அவனுக்குத் தேவையாயிருக்கும் அன்னத்தையும் பானத்தையும் வேண்டியவாறு எடுத்துக் குவியுங்கள். முற்றிலும் விழிப்படைந்தவனாக அவன் எழுந்திருப்பானாகில் இந்தப் புல்லிய பதர்களைத் துடைத்துத் தள்ளுதற்குப் பொருத்தமான பிடாரன் அவன் ஆவான்."

கும்பகர்ணனோ சாபம் ஒன்றுக்கு இலக்கானவன். அந்தச் சாபத்தை அவன்மீது சுமத்தியது சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மதேவன். தொடர்ந்து ஐந்து மாதங்களுக்கு அவன் கல்லுக்கு நிகராகத் தூங்கிக் கிடப்பான். பிறகு வெறும் ஒரு மாதத்திற்கு மட்டும் அவன் விழித்திருப்பான். இயற்கையில் இதற்கு நிகரான நிகழ்ச்சி ஒன்று உள்ளது. வட துருவத்தையும் தென் துருவத்தையும் கதிரவன் வெறும் இரண்டு மாதங்களுக்கு மட்டும் எட்டிப்பார்க்கிறான். பிறகு பத்து மாத காலம் சூரிய வெளிச்சம் படாத பாங்கில் பூமியில் அப்பகுதிகள் இருக்கின்றன. உறக்கத்தினின்று கும்பகர்ணன் எழுந்து கொண்டவுடனே தாங்க முடியாத பசியும், தாகமும் அவனுக்கு உண்டாயின. அதை அனுசரித்து ஏராளமான உண்டியும் பானமும் அவனுக்காகவென்று ஆயத்தப்படுத்தப்பட்டன. அவனைத் தட்டி எழுப்பவோ

யாருக்கும் இயலாது. உறங்கும்பொழுது அவன் கிளப்பிய மூச்சோ வேகம் மிக வாய்ந்தது. அதைச் சமாளித்துக் கொண்டு அருகில் நிற்க யாருக்குமே இயலாது.

தூங்கிக் கொண்டிருந்த கும்பகர்ணனை ஒரு பட்டாளம் வந்து சூழ்ந்தது. அவன் காதருகில் நின்று கொண்டு அத்தனை பேரும் கத்து கத்து என்று உரக்கக் கத்தினர். ஆயினும் ஒன்றுமில்லை. அவன் அசையவில்லை.

...டு, தம்பட்டம், பறை, மேளம், கொம்பு, தாளம், துத்தரி ஆகிய பேரொலிக் கருவிகளை ஏக காலத்தில் கையாண்டு கும்பகர்ணனைச் சூழ்ந்துகொண்டு ஓசையைக் கிளப்பினார்கள். ஆனால் அதில் பயன் ஒன்றும் விளையவில்லை. பிறகு வலிவு வாய்ந்த அரக்கர்கள் அவனுடைய உடலைக் குத்து குத்தென்று குத்தினார்கள். அச்செயலும் பயன்படவில்லை. உலக்கைகளைக் கொண்டு தப்புத் திப்பென்று அவனுடைய முதுகின்மீது குத்தினார்கள். அதற்கும் அவன் அசையவில்லை. கடைசியாக யானைகளைக் கொண்டு கும்பகர்ணனை முன்னுக்கும் பின்னுக்கும் வலிந்து உருட்டினார்கள். அது ஓர் அளவு பயன் கொடுத்தது. உறக்கத்திலின்று சிறிது விழிப்பு நிலைக்கு வந்த அந்த நித்திரை நிபுணன் அன்னபானங்களை வேண்டினான். குவியல் குவியலாகவும், பீப்பாய் பீப்பாயாகவும் அவைகள் அவனுக்கு வழங்கப்பட்டன. இப்பொழுது உறக்கமும், பசியும், தாகமும் நீங்கப்பெற்ற கும்பகர்ணன் தன் உறக்கத்தைக் கலைத்ததன் காரணத்தை வினவினான். அது அவனுக்கு எடுத்து விளக்கப்பட்டது. இராமனும், சுக்ரீவனும் பயங்கரமாகப் படையெடுத்து வந்து லங்காபுரிக்குள் புகுந்து விட்டார்கள். யுத்தமும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. லங்காபுரி வாசிகள் பலர் மடிந்து போயினர். பொருள் சேதத்துக்கு அளவில்லை.

இராவணன் உயிர் பிழைத்தது பெரும்பாடாயிற்று. அந்த நெருக்கடிகள் யாவும் அவனுக்கு எடுத்து விளக்கப்பட்டன. அக்காரணங்களை முன்னிட்டே தன் தம்பி நீண்ட ஆனந்தத் தூக்கத்தினின்று இராவணனுடைய உத்தரவுப்படி கலைத்து எழுப்பப்பட்டான்.

"தமையன் இராவணனைச் சந்திப்பதற்கு முன்பே இராமனைப் போய் ஒழித்துத் தள்ளட்டுமா?" என்னும் கருத்தை, உறக்க வேந்தன் ஏதோ ஒரு போக்கில் உளறினன்.

மந்திரிகளோ அச்செயலை ஆமோதிக்கவில்லை. அரசனை முதலில் சந்திப்பது அவசியம். அவன் அமைக்கிற போர்த் திட்டத்தின்படி செயலில் இறங்கவேண்டும்.

கும்பகர்ணன் தன் தமையனைச் சபா மண்டபத்தில் சந்தித்தான். காமவெறியினல் தூண்டப்பெற்று அவன் புரிந்த பொருந்தாத செயலைக் குறித்து அவனைக் கடிந்து கொண்டான்.

இராவணனுக்கோ கடும் கோபம் மூண்டு விட்டது. ஆயினும் அதை அவன் ஒருவாறு அடக்கிக்கொண்டான். அவன் எடுத்துரைத்ததாவது: "இப்பொழுது லங்காபுரி ஆபத்துக்குள்ளாகி இருக்கிறது. எனக்கு உன்னுடைய ஆற்றல் தேவையாயிருக்கிறது. ஹிதோபதேசத்திற்கு இது நேரமன்று. ஆபத்துக் காலத்தில் முறையாக உதவுகின்றவனே உண்மையான நண்பனும், உறவினனும் ஆகின்றான். இளையோய, உனக்கு என்மீது வாஞ்சை இருக்குமாகில் தயைகூர்ந்து இக்கணமே என்னைக் காப்பாற்றுதற்கு வா."

இத்தகைய பரிதாபகரமான வேண்டுதல் கும்பகர்ணனுடைய உள்ளத்தை இளகச் செய்தது. அவன் எடுத்

துரைத்ததாவது: "நான் உன் தம்பி. உன் எதிரி எனக்கும் எதிரியாகிருன். அச்சத்தை அகற்று. இராமனும் இலக்ஷ்மணனும் என்றல் ஏற்கனவே கொல்லப்பட்டுள்ளார்கள் என வைத்துக்கொள். வானரப்படைகளனைத்தையும் நான் துடைத்துத் தள்ளுவேன்." இது அவன் இயம்பிய உறுதி மொழி.

இப்பொழுது இராவணனுக்குச் சிறிது தைரியம் வந்தது. தன் உடன்பிறந்தவனைக் குறித்து அவன் பெருமை பாராட்டினன். தன்னந்தனியனுகத் துணிந்து போய்ப் பகைவர் படைகளனைத்தையும் புடைத்து ஒதுக்க அவன் தீர்மானித்திருப்பது அரக்கர்களின் வீரத்திற்கு எடுத்துக் காட்டு ஆகும். ஆயினும் தன் தம்பியைத் தனியனுகப் போர்க் களத்திற்கு அவன் அனுப்பவில்லை. அளப்பரிய அபாரமான படையொன்றை அவனுக்குரியதாக்கினன். அதன் பிறகு எதிரியின் மீது பாயும்படி அவனைத் தூண்டினன். இது வரையிலும் கண்டிராத மலை போன்ற வடிவம் ஒன்றைக் கண்டு வானரப் படைகள் குழப்பமடைந்து நாலா பக்கங்களிலும் சிதறியோடின.

ஆயினும் தகர்க்க முடியாத அங்கதன் தங்கள் சேனைகள் சிதறடைந்து போவதைக் கண்டு சும்மாவிருக்கவில்லை. அவர்களுக்கு உற்சாகமூட்டி ஒழுங்குபடுத்தினன். பொருத்தமான இடங்களில் அவைகள் துணிச்சலுடன் கூடி நின்றன. எல்லாப் பக்கங்களிலிருந்தும் கும்பகர்ணன்மீது அச்சேனைகள் அனைத்தும் திடீரென்று பாய்ந்தன. அதனுலென்ன! மலைபோன்று தென்பட்ட எதிரி அச்சேனைகளையெல்லாம் விரட்டியோட்டினன். அங்கதன் அதற்கும் சளைத்தவனல்லன். தன் சொல் திறமையினல் தன் சேனைகளை உற்சாகப்படுத்தினன். தோழன் என்னும் முறையில் அச்சேனைகளை அன்

புடன் அதட்டினான். தக்க தருணத்தில் தன்னுடைய பராக்கிரமத்தைப் பயன்படுத்த ஆஞ்சனேயன் முன்வந்து நின்றான். மிகப் பருத்த பாறாங்கல் ஒன்றைத் தூக்கிக் கும்பகர்ணன் மீது அவன் சுழற்றி வீசினான். அதன் விளைவாக எதற்கும் அசையாத எதிரிக்குப் பலத்த காயம் உண்டாயிற்று.

பலத்த அடிக்கும் அசைபவனல்லன் அந்த எதிரி. அவன் ஹனுமானின் நெஞ்சின்மீது ஓங்கி ஒரு குத்துவிட்டான். அதை வாங்கிய ஆஞ்சனேயன் சிறிதுநேரம் திணறிப்போனான். தன்னைச் சரிப்படுத்திக் கொள்வதற்காகச் சிறிதுநேரம் பின்வாங்கியும் நின்றான். அடுத்தபடியாக அங்கதன் மலைக்கொப்பான அப்பகைவனை விரைந்து தாக்கினான். அவனுடைய தாக்குதல் அந்த சத்துருவுக்கு ஒரு கொசுக்கடிக்குச் சமானமாயிருந்தது. அங்கதனை அவன் ஓங்கி அறைந்தான். அதனால் அவனும் மயங்கித் தரையில் வீழ்ந்தான். அடுத்தபடியாக சுக்ரீவன் வந்து அசைக்க முடியாத அந்த சத்துருவை விரைந்து தாக்கினான். அவனுடைய தாக்குதலுக்கும் எதிரி அசைந்தானல்லன். இப்பொழுது கும்பகர்ணன் பிரயோகித்த அம்போ ஆபத்து மிக நிறைந்தது. அதனால் என்ன! வானவெளியில் விரைந்து வந்த அந்த அம்பை ஆஞ்சனேயன் தாவிப்பிடித்தான். அதைத் தன் தொடையில் அடித்துத் துண்டித்தான். அடுத்தபடியாகக் கும்பகர்ணன் பெரிய கல் ஒன்றை எடுத்து சுக்ரீவன் மீது சுழற்றி வீசி அவனை உணர்ச்சியற்றவனாக்கினான். மயங்கிப்போன அந்த வானர வேந்தனை அரக்கமலை தன் தோளின் மீது போட்டுத் தூக்கிக்கொண்டு ஓடிற்று. ஓட ஓட அவனை நசுக்கிக் கொன்று விடுவது கும்பகர்ணனுடைய திட்டமாயிற்று. சுக்ரீவன் மரணமடைந்ததும் யுத்தமும் ஒரு முடிவுக்கு வரும் என அவன் எதிர்பார்த்தான்.

வானர வேந்தன் கைதியாகப் பிடிபட்டதைக் குறித்துக் குரங்குப்படைகள் சோர்வடைந்து போயின. போர் வீரம் அவர்களிடமிருந்து அக்கணமே அடங்கிப் போயிற்று. அந்த நெருக்கடியை மாருதி கவனித்தான். படைகளிடத்துப் பராக்கிரமத்தைப் புகட்டுவதும் அவசியமாயிற்று. சுக்ரீவன் எப்படியும் தப்பித்துக்கொண்டு திரும்பி வந்து விடுவான் என்று அந்த வானர வீரன் அனைவருக்கும் உற்சாகம் ஊட்டினன். பின்பு லங்காபுரியோ பரம கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தது. ஏனென்றால் போர் புரியச் சென்ற தங்களுடைய வீரன் படையெடுத்து வந்த எதிரி அரசனைக் கைதியாகப் பிடித்துக்கொண்டான். நகரத்திற்குள்ளே வீதிகளில் தூக்கிச் செல்லப்பட்ட சுக்ரீவனுக்குப் பிரக்ஞை, தெளிவு உண்டாயிற்று. சமயோசித புத்தி படைத்திருந்த அப் பார்வேந்தன் அக்கணமே போர்த்திறன் ஒன்றைக் கையாண்டான். தூக்கிச் சென்ற கும்பகர்ணனுடைய முகத்திற்குப் பக்கத்திலிருந்தது சுக்ரீவனுடைய முகமும். ஆதலால் அவன் கும்பகர்ணனுடைய மூக்கையும் காதுகளையும் கடித்தெடுத்துத் துப்பித் தள்ளினன். அவனைக் கீழேபோட்டு மிதிப்பதற்காகக் கடியுண்டவன் தோளினின்று அவனைத் தரையில் தள்ளினன். தள்ளப்பட்ட சுக்ரீவன் தரையில் விழவில்லை. பறவை போன்று அவன் தன் முகாமுக்குப் பறந்து போய் விட்டான்!

அன்றொரு நாள் பஞ்சவடிக்கருகில் கும்பகர்ணனுடைய சகோதரி மூக்கை இழந்தாள். அதேகதி இன்று சகோதரனாகிய கும்பகர்ணனுக்கும் நேர்வதாயிற்று. மூக்கையும் காதுகளையும் பறிகொடுத்த கும்பகர்ணனுக்குத் தாங்கவொணச் சினம் மூண்டுவிட்டது. ஆதலால் திரும்பவும் அவன் போர்க்களத்தை நோக்கி ஓடினன். கும்பம் போன்ற

காதுகளை உடைத்திருந்தவன் கும்பகர்ணன். இப்போது கர்ணங்கள் போய்விட்டதனால் அவன் மொட்டை முகம் படைத்திருந்தான். அதினின்று இரத்தம் சொட்டிக்கொண்டிருந்தது. பார்த்தவர்களுக்கிடையில் நகைப்பூட்டும் காட்சியை அவன் நல்கிவந்தான். இப்பொழுது ஓணான் ஈசல்களை எடுத்து விழுங்குவது போன்று கும்பகர்ணன் குரங்குகளை எடுத்துக் கும்பல் கும்பலாக விழுங்க ஆரம்பித்தான். ஆனால் அப்படிப் பசி துடைக்கும் செயலில் அவன் தொடர்ந்து ஈடுபட இலக்ஷ்மணன் இடம் தரவில்லை. அம்புகளை மழைக்கு நிகராக அரக்கன் மீது அயோத்தி ராஜகுமாரன் பொழிந்தான். இளையவனுடைய போர்த்திறனை அரக்கமலையாகிய கும்பகர்ணன் பெரிதும் பாராட்டினான். ஆயினும் அவன் தன் கருத்தை மூத்தவனாகிய இராமனிடத்துச் செலுத்தினான். இளையவன் சொரிந்த அம்பு மழையைச் சமாளித்துக் கொண்டு அவன் தானே தன்னுடைய அம்பு மழையை இராமன் மீது பொழிந்தான். அதற்கு எதிர்ச்செயலாக இராமன் ஒரு பாணத்தை எய்து கும்பகர்ணனுடைய கையொன்றைத் துண்டித்தான். துண்டிக்கப்பட்ட கையும் அது ஏந்தியிருந்த கதையும் சுழன்றுகொண்டு மேல்நோக்கிச் சென்று பிறகு தரையில் தடாலென்று வீழ்ந்தன. அதன் விளைவாகக் குரங்குகள் பல நசுங்கி மடிந்து போயின. மற்றும் ஒருபாணத்தை இராமன் எய்தான். அடுத்த கரத்தை அது கொய்து தள்ளியது. சந்திரனை ஒத்த சக்கரபாணங்கள் இரண்டு அரக்கனுடைய தடித்த கால்களைத் துண்டித்துத் தூக்கிக்கொண்டு போய்விட்டன. உறுப்புகள் அற்றுப் போய்ப் பாறுங்கல் போன்று தென்பட்ட அரக்கன் உருண்டு கொண்டே போய் வானரச் சேனைகளுக்கிடையில் பெரும் சேதத்தை உண்டுபண்ணினான். அடுத்தபடியாக ராமபாணம்

அவனுடைய தலையைச் சீவி எடுத்து நெடுந்தூரத்திற்கப்பால் கடலுக்குள் வீசிற்று. அதைத் தொடர்ந்து வந்தபாணம் எஞ்சியிருந்த உடலை இரண்டாகப் பிளந்தது. அதில் ஒரு பகுதி கடலில் வீழ்ந்தது. அடுத்த பகுதி லங்கா நகருக்குள் வீழ்ந்து சுவர்களை இடித்துத் தள்ளிற்று. லங்காபுரி சக்கர வர்த்திக்குப் பேருதவியாக இருந்த கும்பகர்ணனை ராம பிரான் இந்தப் போக்கில் ஒழித்துத் தள்ளினன்.

தன் தம்பி சிதைக்கப்பட்ட செய்தி இராவணன் காதுக்கு எட்டியது. அதனல் அவன் பெரிதும் அதிர்ச்சி அடைந் தான். ஏதோ ஒரு போக்கில் அவன் மூர்ச்சையும் போய் விட்டான். விசனப்படாத அரக்கனுக்கு விசனத்தை ஊட்டும் செய்தி அது. அவமானம் என்ருல் இன்னதென்று அறியா திருந்த அரக்க வேந்தன் அவமானத்திற்கும் ஆளானன். தான் துச்ச மானுடன் எனக்கருதிய இராமன் இராவண னுடைய வீராதி வீரனகிய தம்பியின் உடலைத் துண்டு துண்டாக நொறுக்கி அவனை எமலோகத்திற்கு அனுப்பி னன். இப்பொழுது அரக்க வேந்தனுக்குச் சிறிது விவேகம் உதயமாயிற்று. தன் அரிய தம்பியை இழந்தபிறகு தான் வாழ்ந்திருப்பதில் பயன் யாது உளது என்னும் உணர்வு அவன் உள்ளத்தில் உதித்தது. இராவணன் அரக்க இயல் புக்கு உறைவிடம் என்னும் கோட்பாடு இந்த விபத்தின் வாயிலாக வெளியாயிற்று. விபீஷணன் என்னும் தம்பியை அவன் விரட்டியோட்டினன். தன்னுடைய தீச்செயல்களுக்கு அவன் தடையாயிருந்ததே அதற்குக் காரணமாயிற்று. அடுத்த சகோதரன் அவனுடைய கொடும் செயல்களுக்கு முற்றிலும் உடந்தையாயிருந்தான். தமையனுக்காகவென்று அவன் போர்புரிந்து மடிந்தும் போனன். நல்லவனயிருந்த விபீஷணன் தன்னைவிட்டு விலகிப் போனதில் அவனுக்கு

நஷ்டம் ஒன்றுமில்லை. தன் கொடூரச் செயலுக்கு ஆதரவா யிருந்த கும்பகர்ணன் ஒழிந்துபட்டுப் போனதைப் பெரிய நஷ்டமாக அவன் கருதினன். அரக்க இயல்பு எது என்பது இப்பொழுது வெளியாகிறது. சுயநலமே வடிவெடுத்திருப் பவன் அரக்கன். இந்திரிய சுகபோகத்தில் வரம்பு கடந்து மூழ்கியிருப்பவன் அரக்கன். இந்த அரக்க இயல்புகளை ஆதரிப்பவர்கள் அரக்கன் ஒருவனுக்கு நண்பர்களாகின்ற னர். புல்லிய இத்தகைய சிற்றியல்புகள் இராவணனிடத்துப் புதைந்து கிடந்தது வெளிப்படை.

எளியாரை யாண்டும் துன்புறுத்திக் கொண்டிருப்பவன் வலியாரை ஒருபொழுதும் அணுகமாட்டான். வீரச்செய லுக்கு இது நேர்மாறானது. வீரன் யாண்டும் நெறிபிறழ்ந்த வலியார்களைத் தாக்குவான்; எளியாரை அன்னவன் துன் புறுத்தமாட்டான். இராவணன் வெறும் டாம்பீக சூரன். ராக்ஷசர்கள் யாண்டும் மானுடர்களைவிட மேலானவர்கள் என்று அன்னவன் பெருமை அடித்துக்கொண்டிருந்தான். ஆனல் தன்னிடத்திலிருந்த ராக்ஷசத் தன்மையை இராவ ணன் எங்ஙனம் விளக்கிக் காட்டினன் என்பதை நாம் ஆராய்ந்து அறிந்திருத்தல் வேண்டும். தண்டகாரண்யத்தில் வசித்திருந்த இராமனை எதிர்க்க இராவணன் திட்டம் போடவில்லை. ஆஸ்ரமத்தில் இராமன் இல்லாத நேரம் பார்த்துச் சீதையை அபகரித்துக்கொண்டு அவன் ஓடினன். பின்பு லங்காபுரியில் நிகழ்ந்த போராட்டத்தில் கூடியவரை யில் அவன் தன்னைப் பின்னணியில் வைத்துக்கொண்டான். தன்னுடைய உற்றார் உறவினர்களைக் கருவியாகக்கொண்டே போராட்டத்தின் பெரும் பகுதியை அவன் கொண்டு செலுத் தினன். எனவே அவன் ஒரு வீரன் அல்லன். பயங்கொள் ளித்தனமான சூரன் என்றே அவனைப் பற்றிச் சொல்ல

வேண்டும். தன்னுடைய சுயநலத்திற்காக மாரீசனை அவன் பயன்படுத்திக்கொண்டதே அவன் அல்ப டாம்பீக சூரன் என்பதற்கு எடுத்துக்காட்டு ஆகும்.

9. இலங்கை வேந்தன் இராவணனுக்கு உற்றார் உறவினர்களாக வாய்த்திருந்தவர்கள் எண்ணிக்கையில் அடங்க மாட்டார்கள். திரிசிரன், நராந்தகன், தேவாந்தகன், மகோதரன், மட்டன், அதிகாயன் ஆகியவர்கள் அவனுடைய உற்றார் உறவினர்களுள் மிக முக்கியமானவர்கள் ஆவார்கள். அன்னவர்கள் ஒன்றுகூடித் தங்களுடைய அரசனை அணுகி அவனிடத்தில் புதிய உற்சாகத்தை ஊட்டினார்கள். இது காறும் நிகழ்ந்த நஷ்டங்களெல்லாம் மிக அல்பமானவைகள். அவைகளை நஷ்டமாகப் பொருள்படுத்தவேண்டிய அவசியமில்லை. தங்களிடத்திருந்த அசட்டுத்தனத்தால் அவைகள் நிகழ்ந்து போயின. ஆரம்பத்திலிருந்து மிக எச்சரிக்கையாகப் போர்புரிகிற ராக்ஷசர்களுடைய போர்த்திறனை ஒருபொழுதும் புறக்கணிக்கலாகாது. அதை மறந்து விடவும் கூடாது. இங்ஙனம் இராவணனுடைய அந்தச் சுற்றத்தார்கள் அவனைச் சூழ்ந்துகொண்டு அவனுக்கு உற்சாகம் ஊட்டினார்கள். அரச வம்சத்தைச் சேர்ந்த தாங்களே துணிந்து படையெடுத்துச் சென்றால் எதிரிகளைத் தாக்கி இதுகாறும் நிகழ்ந்து வந்த தோல்விகளையெல்லாம் வெற்றியாக மாற்றியமைக்கத் தங்களுக்கு முடியுமென்று அவர்கள் வீறுப்புப் பேசினர். இப்பொழுது இராவணனுக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது. புதிய ஆக்கிரமிப்புக்கு அவன் அனுமதி கொடுத்தான்.

துணிச்சல் நிறைந்திருந்த புதிய படை போராட்டத்துக்குத் தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டு சத்துருக்கள்மீது சளார் எனப் பாய்ந்தது. அதன் விளைவாகப் போராட்டம்

மீண்டும் மும்முரமாக நிகழ்வதாயிற்று. இருதரத்தார்க்கிடையிலும் வீராவேசச் செயல்கள் பலப்பலவாக வெளியாயின. அங்கதனும் ஆஞ்சனேயனும் போராட்டத்தில் வீராதி வீரர்கள் என்று காட்டித் தருவதற்கு ஏற்ற சந்தர்ப்பம் கிடைத்தது. ராக்ஷசர்களோ எந்த விதத்திலாவது அவர்களுக்குப் பின் வாங்கியவர்களல்லர். படையெடுத்து வந்த பகைவர்களை அந்த அரக்கர்கள் பலப்பல விதங்களில் தாக்கித் துன்புறுத்தினர். ஆனால் நிகழ்ந்தது யாது? அரக்க மல்லர்கள் ஒருவர் பின் ஒருவராக மடியலாயினர். குரங்குத் தலைவர்களோ தாக்குப் பிடித்து வெற்றிகரமாகச் சமாளித்தனர்.

அதிகாயனுக்கும் இலக்ஷ்மணனுக்கும் இடையே நடந்த துவந்த யுத்தம் பயங்கரமானது. ஒருவன்மீது ஒருவன் அஸ்திரசஸ்திரங்களைத் தாராளமாக வழங்கிக்கொண்டான்.. போராட்டமும் நீடித்துக்கொண்டே போனது. அஸ்திர சஸ்திரச் சண்டையில் அரக்கர்கள் அவ்வளவு தூரம் முன்னேற்றமடைந்திருந்தது இலக்ஷ்மணனுக்கு வியப்பூட்டியது. இறுதியில் அவன் பிரம்மாஸ்திரத்தைப் பிரயோகித்தான். அதிகாயன் அக்கணமே அழிந்துபட்டுப்போனான். அவனுடைய வீழ்ச்சி இராவணனுடைய சேனைக்கிடையில் பீதியை உண்டுபண்ணிற்று. அரண்டு போன அவர்கள் இலங்கைக் கோட்டைக்குள்ளே பறந்தோடினர்.

இராவணன் என்னும் சொல்லுக்கு அழச் செய்பவன் என்பது பொருள். அப்பொருளுக்கேற்ப அரக்க அரசனாகிய இராவணன் உலகில் பலரைக் கதறி அழச் செய்தான். ஆனால் அவன் செய்த கொடிய கர்மம் அவன் மீதே திரும்பிச் சூழ்ந்தது. இராம இராவண யுத்தத்தில் தனக்கேற்பட்டிருந்த நஷ்டங்களையெல்லாம் மனமுடைந்து போனவனாக அவன் விமர்சனம் பண்ணினான். அவனுக்காக

வென்று அவனுடைய உற்றார் உறவினர்கள் எல்லாரும் உயிர் துறந்தார்கள். எங்குத் திரும்பிப்பார்த்தாலும் லங்காபுரியில் பாழாக்கப்பட்ட காட்சியே தென்பட்டது. விசனத்தின் அறி குறிகள் அவனுடைய முகத்தில் ஸ்பஷ்டமாகத் தென்பட்டன.

இந்திரனையே தோற்கடித்து விரட்டியோட்டிய இந்திர ஜித் இப்பொழுது தன் தந்தையின் எதிரே வந்து நின்றான். தனக்குத் தோன்றியபடி தந்தையை அவன் தேற்றுவித்தான். "அப்பா, தாங்கள் துயருற வேண்டாம். நான் உயிருடன் இருக்கிறபொழுது தாங்கள் வருந்துதல் எதற்காக? தமக்கு நிகழ்ந்துள்ள விபத்துக்கள் அனைத்துக்கும் நான் ஈடுசெய்து வைக்கிறேன்." இங்ஙனம் இயம்பிவிட்டு அவன் அளவு கடந்த காலாட்படையைத் திரட்டினான். எதிரிகளுக்கிடை யில் நடு நடுக்கத்தை உண்டுபண்ணும் பாங்கில் போர்க்களத் தில் அவன் பிரவேசித்தான். தான் கற்று அறிந்திருந்த அஸ்திர சஸ்திரங்களனைத்தையும் எடுத்துக்கொண்டு போர்க் களத்துக்குள் வந்தான். வேள்வித் தீமூட்டி இரகசியமான வேள்விச் சடங்குகள் சிலவற்றைச் செய்து சாதித்தது அவ னுடைய முதல் செயல் ஆகும். அதன் விளைவாக அவன் யார் கண்ணுக்கும் தென்படமாட்டான். யாரும் அவனை வெல்ல முடியாது. இங்ஙனம் சன்னத்தமானவன் யுத்தத் தைத் துவக்கினான். பார்த்தவர்களுக்கிடையில் குலைநடுக் கத்தை அது விளைவித்தது. இராமன் பக்கத்திலிருந்த போர் வீரர்களனைவரும் பராக்கிரமத்தோடு போராடினார்கள். ஆயினும் அவர்களனைவரும் ஒருவர்பின் ஒருவராகத் தோல்வி யடைந்து வீழ்ந்தார்கள். அதற்கேற்ற காரணமும் இருந்தது. எதிரியோ கண்ணுக்குத் தென்படவில்லை. உத்தேசமாக அவன் இருந்த இடத்தைக் கற்பனை பண்ணி வெட்ட வெளி யில் அவர்களுடைய ஆயுதங்களை அவர்கள் எய்தனர். யார்

கண்ணுக்கும் தென்படாதிருந்துகொண்டே இந்த்ரஜித் அனைவரையும் கொல்ல வல்ல ஆயுதங்களைப் பொழிந்துகொண்டிருந்தான். இராமன் மீதும் இலக்ஷ்மணன் மீதும் அவன் பிரம்மாஸ்திரத்தைப் பிரயோகித்தான். அதனிடத்திருந்து யாருமே தப்பித்துக்கொள்ள முடியாது. மடிவதைத் தவிர வேறு உபாயம் ஏதுமில்லை. அச்செயலை அறியவந்த இராமன் தம்பியிடம் ஒரு விஷயத்தைத் தெரிவித்தான். அந்த அஸ்திரத்தைத் தோற்றுவித்த பிரம்மதேவனுக்கு மரியாதை காட்டும் பாங்கில் அவர்கள் இருவரும் அதன் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டவர்கள் போன்று கொஞ்சநேரம் நடந்துகொள்ளவேண்டும். இது அவன் தம்பிக்குக் கொடுத்த செய்தி. இந்திரஜித் அற்புதமாகப் போர் புரிந்தான். அதன் விளைவாக ஒரு குரங்காவது தலைதூக்கி நிற்கவில்லை. வானர சேனையைச் சேர்ந்த அனைவரும் கொல்லப்பட்டோ காயப்பட்டோ பிரக்ஞை போயோ வீழ்ந்து கிடந்தனர். இராமனும் இலக்ஷ்மணனும் தகர்த்தொழிக்கப்பட்டனர் என இந்த்ரஜித் எண்ணிக்கொண்டான். வெற்றி வீரனாக அவன் கோட்டைக்குள் திரும்பிப் போனான். தன் செயல் வன்மையைத் தந்தையிடம் அவன் தெரிவித்தான்.

10. காயப்படாது தப்பித்துக்கொண்டவன் ஒரே ஒரு பெயர்வழி. அவன் ஹனுமான். தேடிப் பார்த்து விபீஷணன் அந்த ஹனுமானைக் கண்டுபிடித்தான். படுகொலைக் களம் முழுவதையும் அவ்விருவரும் சுற்றிப் பார்த்தார்கள். போர் வீரர்கள் அனைவரும் வீழ்ந்து கிடந்தனர். சுக்ரீவனோ அங்கதனோ இதற்கு விலக்காகவில்லை. களைத்துப் போய்க் கிடந்த ஜாம்பவான் தன்னிடத்து எஞ்சியிருந்த ஆற்றலை ஒன்று திரட்டினான். ஆங்குத் தென்பட்டது ஆஞ்சனேயனா என்று அடங்கிய குரலில் அவன் கேட்டான். அவன் கேள்

விக்கு உடன்பாட்டு விடை வந்தது. காயப்பட்டுக் கிடந்த கரடி வீரன் கஷ்டப்பட்டு ஏதோ ஒரு போக்கில் தழதழத்த குரலில் அவனிடம் கூறுவானுயினன்: "ஓ மாருதி, எங்கள் அனைவரையும் இந்த விபத்தினின்று விடுவிக்க வல்லவன் நீ ஒருவனே. எல்லை கடந்த ஹிமாலயத்திலிருக்கும் கயிலாய கிரிக்கு விரைவில் பறந்து போ. அந்தக் கிரிக்கு அருகில் சிகரம் ஒன்று இருக்கிறது. அதில் மூலிகைகள் ஏராளமாக இருக்கின்றன. அவைகளுள் பிரகாசம் வாய்க்கப்பெற்றுள்ளவைகள் நான்கு இருக்கின்றன. ஒன்று மிருதசஞ்சீவினீ. அது செத்தவர்களுக்கு உயிர் கொடுக்கும். அடுத்தது விசல்ய கரணீ. அது பட்டகாயத்தைக் கணப்பொழுதில் சிகிச்சை பண்ணும். மூன்ருவதாயுள்ளது சாவர்ண்ய கரணீ. அது உற்ருர் உறவினர்க்கு மட்டும் உயிர் கொடுத்து உய்விக்கும். எதிரிகளுக்கு அது உதவாது. நான்காவதாயிருப்பது சந்தான கரணீ. சிதறடைந்து போன அங்கங்களை ஒட்டும்படி செய்து அது சிகிச்சை பண்ணும். இந்த நான்கு மூலிகைகளையும் சேகரித்துக்கொண்டு அதிவிரைவில் திரும்பி வருவாயாக. எங்கள் எல்லாருடைய கதியும் உன் கைவசத்தில் இருக்கிறது."

வடதிசையை நோக்கி மாருதி வால் நட்சத்திரம் போன்று பாய்ந்தான். கைலாசத்திற்கு அருகிலிருந்த சிகரத்தின்மீது அவன் இறங்கினன். குறிப்பிட்டிருந்த அந்த மூலிகைகளைப் பாகுபடுத்தி எடுக்க அவனுக்கு அவகாசமில்லை. ஆதலால் அச்சிகரத்தை அப்படியே பெயர்த்தெடுத்து அதைத் தூக்கிக்கொண்டு வந்துசேர்ந்தான். அதனுடைய சாந்நித்தியத்தில் வானரப்படையினர் அனைவரும் எழுந்திருந்தனர். புதிய வலிவும் உற்சாகமும் அவர்களிடத்துத் தென்பட்டன. இந்த அதிசயச் செயலைச் செய்து

முடித்ததும் மகாவீரனுகிய மாருதி அந்தச் சிகரத்தை அதற் குரிய இடத்தில் தூக்கி வைத்தான். சுக்ரீவன், அங்கதன், இராமன், இலக்ஷ்மணன், அவர்களைச் சார்ந்திருந்த பட்டா ளத்தார் அனைவரும் திண்ணியர்களாகவும், தகைசான்ற வர்களாகவும் திகழ்ந்தனர். அன்று இரவே சுக்ரீவனுடைய சேனையைச் சேர்ந்த ஒரு கூட்டத்தார் லங்காபுரியைச் சேர்ந்து தாக்கினர். அச்செயல் இராவணனைத் திகைத்துப் போகும்படி பண்ணியது. கோபித்துக்கொண்ட கோமான் கும்பகர்ணனுடைய மக்களாகிய கும்பன், நிகும்பன் ஆகிய இருவருக்கும் ஆணை ஒன்றைப் பிறப்பித்தான். முற்றுகை போடவந்த எதிரிகளை உடனடியாக விரட்டியோட்ட வேண்டும் என்பதே அவன் பிறப்பித்த ஆணையாகும். ஆனல் ஆக்கிரமித்து வந்தவர்கள் பயந்து ஓடுபவர்கள் அல்லர். ராஜகுமாரர்கள் இருவரோடு அவர்கள் வம்புச் சண்டை போட்டு அவர்கள் உயிரை வாங்கிவிட்டனர்.

மைந்தன் இந்த்ரஜித்தின் உதவியைத் தந்தையாகிய அரக்க வேந்தன் மீண்டும் ஒருமுறை வேண்டினுன். அவ னும் அதற்கு இசைந்து படைதிரட்டினுன். படையெடுத்து வந்த எதிரிகளனைவரையும் துடைத்துத்தள்ள அவன் இப் பொழுது தீர்மானித்தான். தனியாக அவனுக்கே சொந்தமா யிருந்த இரகசிய வேள்வியை மற்றும் ஒருமுறை அவன் நிறைவேற்றினுன். அதன் விளைவாக அவன் யார் காட்சிக் கும் தென்படாத வசதியைப் பெறுவானுயினன். இப் பொழுது அவன் சத்துருக்கள்மீது சொரிந்தது அம்பு மழை அன்று. மரண மழையைக் கொட்டித் தள்ளினுன். இராமனும் இலக்ஷ்மணனும் கட்புலனுகாது மறைந்திருந்த இந்த்ரஜித்திடத்திருந்து சீறிக்கொண்டு வந்த அம்புகளை எதிர்த்து அடித்தார்கள். இப்பொழுது இந்த்ரஜித் மற்றும்

ஒரு ஜாலத்தைக் கையாண்டான். எதிரிகளுக்கு அவன் கட்புலனுனன். மாயா சீதை ஒருத்தியை அவன் தோற்று வித்தான். அவனுடைய ஜாலவித்தையைக் கொண்டு சீதையை அவன் வெட்டித் தள்ளினுன்.

திடீரென்று எதிர்பாராதபடி மாறியமைந்த காட்சியானது இராமனைத் திடுக்கிடச் செய்தது. அவன் துயரத்தில் மூழ்கினுன். புண்ணியத்தைப் பாபம் வென்றுவிட்டது என்று அவன் வருந்தினுன். இத்தருணத்தில் விபீஷணன் இராமனை அணுகி அவனைத் தேற்றுவித்தான். இராமன் கண்ட சீதையின் கொலை உண்மையில் நிகழவில்லை. அது இந்த்ரஜித்தினுடைய ஜாலவித்தை. அதைக்கொண்டு அவன் எதிரியை ஏமாற்றிவிட்டான். இராவணன் பூண்டிருந்த ஒரே ஒரு லட்சியம் சீதையைக் கொல்லுவதன்று; அவனை எவ்விதத்திலாவது வெல்லுவதேயாம்.

இப்பொழுது இந்த்ரஜித் மீண்டும் தன்னைக் கட்புலனுகாது மறைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாயிற்று. அதற்காகவென்று போர்க்களத்திற்கருகில் வேள்வித் தீயை மூட்ட அவன் முந்தினுன். அப்பொழுது அதற்கு இடையூறு விளைவிக்கும்படி இலக்ஷ்மணனையும் ஹனுமானையும் இராமன் தூண்டினுன். இந்த்ரஜித்தைப் பாதுகாத்து வந்த அரக்கர்களுடைய குழாமைத் துளைத்துக்கொண்டு அவர்களிருவரும் எதிரித் தலைவனுக்கருகில் வந்துவிட்டார்கள். அன்னவர்களுடைய தாக்குதலினின்று தன்னைக் காப்பாற்றிக்கொள்ளுதற்பொருட்டு இந்த்ரஜித் துவக்கிய யாகத்தை நிறைவேற்ற முடியவில்லை. அரைகுறை நிலையில் அச்சடங்குகளை நிறுத்தி விட்டுத் தற்பாதுகாப்பில் துணிவது அவசியமாயிற்று. வேள்விச் சடங்குகள் நிறைவேருது போய் விட்டதனுல் அவன் தன்னைக் காட்சியினின்று மறைத்துக்கொள்ள

இயலாதவனானான். இப்பொழுது காட்சிக்கு இலக்காக இருந்ததனால் எதிரிகளை ஏமாற்ற அவனுக்கு இயலவில்லை. இனி நியாயமான பராக்கிரமம் வாய்ந்த போராட்டம் ஒன்று தான் சாத்தியப்பட்டது.

ரதம் ஒன்றின்மீது ஊர்ந்துகொண்டு இந்த்ரஜித் இலக்ஷ்மணன் மீது வெட்ட வெளியான யுத்தத்தைத் துவக்கினான். இலக்ஷ்மணனோ ஹனுமானின் தோள்களின்மீது அமர்ந்து கொண்டான். இங்ஙனம் போர் துவங்கியது. அதன் வேகத்தை விளக்க யாருக்குத்தான் இயலும்? இருவருக்கு மிடையில் சீற்றம் நிறைந்த பயங்கரமான போராட்டம் நெடுநேரம் நிகழ்வதாயிற்று. இருதரத்தாரும் சலிப்பு என்பதை அறியாதவர்களாக இருந்தார்கள். ஆயினும் இந்த்ரஜித்தினுடைய ரதம் நொறுக்கித் தகர்க்கப்பட்டது. அவன் மற்றும் ஒரு ரதத்தின்மீது ஊர்ந்தான். இரண்டாவது ரதத்தின் கதியும் அதுவேயாம். மந்த்ரசக்தி வாய்ந்த ஆயுதங்களை இருவரும் தாராளமாகக் கையாண்டார்கள். ஒருவன் கிளப்பிய மந்த்ரசக்தி வாய்ந்த பாணத்தை முறியடிக்கிற மற்றொருவித மந்த்ர சக்தி வாய்ந்த பாணம் வந்து பாய்ந்தது. இப்பொழுது இருவருக்குமிடையில் நடந்த போராட்டம் யாரிடத்து மந்த்ரசக்தி வாய்ந்த ஆயுதங்கள் அதிகமாக இருந்தன என்பதை ஆராய்ந்து அறிவதற்கான போராட்டமாம். அத்தகைய ஆயுதங்களைப் பிரயோகிக்கிற கலையே அலாதியானது. இளையவர்களிருவரும் ஒருவருக்கொருவர் பின் வாங்கியவரல்லர். கடைசியாக இலக்ஷ்மணன் இந்திர அஸ்திரத்தை எடுத்து வீசினான். வீசும்பொழுது "இராவணனுடைய மகனாகிய இந்த்ரஜித்தின்மீது இராமன் கடைப்பிடித்துவருகிற தர்மமும் சத்தியமும் தங்களுடைய திறமைமைகளைக் காட்டுவனவாக" என்று ஜபித்து ஏவினான்.

இராவணனுடைய மெய்க்காப்பாளனாகவிருந்தவனும், தேவர்களையெல்லாம் தோற்கடித்தவனுமான இந்த்ரஜித்தினுடைய தலை தெறித்து அப்பால் வீழ்ந்தது. தலையில்லாத தேகம் தரையில் வீழ்ந்து புரண்டது. அப்பொழுது நிலமகளுக்கு நற்காலம் வந்ததன் அறிகுறிகள் தென்பட்டன. வானர சேனைகளும், கரடிப்படைகளும் ஓலமிட்டுத் தங்களுடைய மகிழ்வை வெளிப்படுத்தின.

11. இந்த்ரஜித் இலக்ஷ்மணனால் கொல்லப்பட்டான் என்னும் செய்தி இராவணன் காதுக்கு எட்டியது. அதைக் கேட்டதும் அவன் ஸ்தம்பித்துப் போனான். எண்ணிறந்த உயிர்களுக்கு இன்னலை விளைவித்தவன் இப்பொழுது தானே அந்த இன்னலுக்கு ஆளானான். அதனால் வந்த மன வேதனையோ ஒப்பற்றது. துக்க அதிர்ச்சியினின்று இராவணன் தெளிவடைவதற்குச் சிறிது நேரம் பிடித்தது. சீற்றம் கொண்ட அவன் பழிக்குப்பழி வாங்கும் பாங்கில் சீதையின் தலையைச் சீவித்தள்ளத் தீர்மானித்தான். வாள் ஒன்றைக் கையில் ஏந்திக்கொண்டு அசோக வனத்தை நோக்கி அவன் விரைந்து சென்றான். நல்லவேளையாக சுபார்ஸ்வன் என்னும் அறிவுபடைத்த அமைச்சன் அந்த ராக்ஷசப் பழிகாரனை வழியில் சந்தித்தான். சிறை கிடந்த அபலை ஒருத்தியை வெட்டித் தள்ளுவதால் அவன் பழிபாவத்துக்கு ஆளாவான் என்பதை அவனுக்கு ஞாபகமூட்டினான். அதற்குப் பதிலாக இராமனைக் கொன்றுவிட்டு சீதையைத் தனக்கு உரியவள் ஆக்குவது முறையென்றும் அந்த அமைச்சன் தெரிவித்தான். அவனுடைய நல்லுரையைக் கேட்ட இராவணனுக்குச் சிறிது சுயபுத்தி வந்தது. சோர்வுற்றவனாய் அவன் அரண்மனைக்குத் திரும்பிப் போனான்.

நெருக்கடியை நேர்மைப்படுத்துதற்கென்றே ஆயத்தமாய் வைத்திருந்ததும், ஆற்றல் மிகப் படைத்திருந்ததும்

ஆகிய சேனையை இப்பொழுது இராவணன் செயலில் ஈடு படுத்தினன். அப்படையினர் அனைவரும் இராமன் மீது ஏகோபித்துப் பாய்ந்து அவனை ஒழித்துவிடவேண்டும். அது அன்னவர்களுக்கே சாத்தியமாகும். ஒருவேளை அவர்கள் தோல்வியுற்றால் அரசன் தானே சென்று அந்த வனவாசியை மாய்த்துத்தள்ளத் தீர்மானித்தான். இதுகாறும் தடுத்து வைத்திருந்த சேனையும் திடீரென்று இராமன்மீது பாய்ந்தது. ஆனால் நிகழ்ந்ததோ வியப்புக்குரியதாம். கந்தர்வ அஸ்திரம் என்று ஒன்று உண்டு. அதைப் பிரயோகிக்கும் முறையை ராமபிரானும் சிவபிரானுமே அறிந்திருந்தனர். அந்த அஸ்திரத்தை ஏவியதன் விளைவாகப் பார்க்குமிடமெங்கும் இராமனே தென்பட்டான். ஆனால் மூல மூர்த்தியாகிய இராமனோ காட்சிக்கு எட்டவில்லை. இது பரமாத்மனுக்குரிய பாங்கு ஆகும். ஆதலால்தான் இந்த அஸ்திரப் பிரயோகத்தை இந்த இரண்டு மூர்த்திகள் மட்டுமே அறிந்திருந்தனர். தோற்றத்திற்கு வந்திருந்த எண்ணிறந்த ராமமூர்த்திகள் எண்ணிறந்த அரக்கப் பட்டாளத்தை அரக்கிவிட்டனர். கணப்பொழுதில் கணக்கற்ற பெண்பாலர் கைம்பெண்கள் ஆனார்கள். அன்னவர்களும் அவர்களின் குழந்தைகளும் பெருவாரியாகப் பதைத்து அழுதனர். லங்கா பட்டணம் முழுதும் ஒரே அழுகை மயமாகக் காட்சி கொடுத்தது. பிரலாபித்துக்கொண்டிருந்த பெண்பாலர்கள் பழங்காலத்தில் சொல்லி வைத்திருந்த ஜோதிடப் பலன் ஒன்றைத் தங்களுக்குத் தாங்களே ஞாபகப்படுத்திக்கொண்டனர். பெண்பால் ஒருத்தியை முன்னிட்டு லங்காபுரியை ஆண்டு அனுபவித்து வந்த அரக்கர்கள் கூட்டம் அனைத்தும் அழிந்து பட்டுப்போம் என்பது அந்த ஜோதிடவாக்கு. இப்பொழுது சீதையை முன்னிட்டு அந்த வாக்குப் பலிதமாயிருக்கிறது.

இங்ஙனம் இயம்பிக்கொண்டு ஊரார் அனைவரும் ஓலமிட்டு அழுதனர்.

அத்தனைபேர்களுடைய கூக்குரல்களும் திரண்டு ஒன்றாகி இராவணன் காதில் வந்து வீழ்ந்தன. அதைக் கேட்ட மாத்திரத்தில் கல் நெஞ்சமும் கரைந்துபோம். ஆனால் இராவணனுக்கோ சகிக்கமுடியாத சீற்றம் தலைக்கு ஏறிற்று. தன் ரதத்திற்குக் குதிரைகளைப் பூட்டும்படி அவன் உத்தர விட்டான். பலப்பல ஆயுதங்களை எடுத்து ரதத்தில் ஆங்காங்கு மாட்டி வைக்கும்படியும் ஏவினான். எஞ்சியிருக்கின்ற போர்வீரர்களையும் படைகளையும் அவன் ஒன்றாகத் திரட்டினான். தன்னுடைய உற்றார்களையும் உறவினர்களையும் சேனாதிபதிகளையும் மாய்த்ததற்குப் பழிக்குப்பழி வாங்கும் பொருட்டு எதிரிகளை ஒழித்துத் தள்ளப் போர்முனைக்கு முந்தினான். அவனுடைய கண்களினின்று தீப்பொறி பறந்து கொண்டிருந்தது. ஆனால் இயற்கையோ அவனுக்குப் பிரதிகூலமான காட்சியைக் கொடுத்தது. சூரியன் சுடரிழந்து போயிற்று. திசைகளெல்லாம் மறைந்துபட்டுப் போயின. உயிர்வகைகள் யாவும் தளர்வுற்றுக் கிடந்தன. அதனால் என்ன? இந்த முன் அறிகுறிகளை அத்தீவுக்குத் தலைவனாயிருந்த மன்னாதி மன்னன் சிறிதும் பொருள்படுத்தவில்லை. போர் ஆவேசம் படைத்தவனாக இராவணன் தென்பட்டான். தன் அழிவை நோக்கி அவன் அதிவேகமாகப் போய்க் கொண்டிருந்தான். வானரப் படைகளைக் கும்பல் கும்பலாக அவன் வெட்டித்தள்ளினான்.

சுக்ரீவனுடைய வீராவேசமோ அரக்க வேந்தனுடைய ஆவேசத்துக்குப் பின் வாங்கவில்லை. ராக்ஷசப் படைகளை அவன் திரள் திரளாகத் துடைத்துத் தள்ளினான். விருபாக்ஷன் என்பவன் ராக்ஷச சேனாதிபதிகளில் ஒருவன்

ஆவான். அந்தச் சேனாதிபதியின்மீது சுக்ரீவன் செலுத்திய அடி அக்கணமே அவனை எமலோகத்திற்கு அனுப்பியது. இந்தப் பயங்கரச் செயலைப்பார்த்த எதிரிகள் மருண்டு போயினர். மடிந்துபோன சேனாதிபதிக்குப் பதிலாக மகோதரன் என்னும் பெயர் படைத்திருந்த மற்றொரு சேனாதிபதி அவனுடைய ஸ்தானத்தில் வந்து நின்றான். சிறிது நேரம் வீராவேசத்தோடு போர்புரிந்த அந்த மகோதரனும் சுக்ரீவனால் வீழ்த்தப்பட்டான். மஹாபார்ஸ்வன் என்பவன் மற்றொரு ராக்ஷச சேனாதிபதி ஆவான். அன்னவனோடு அங்கதன் அதிசயிக்கத் தக்கபாங்கில் சண்டையிட்டு அவனைச் சாய்த்துத் தள்ளினான்.

இப்பொழுது இராவணனுடைய தலைசிறந்த மூன்று சேனாதிபதிகள் கொல்லப்பட்டனர். அதை முன்னிட்டு இராவணனுக்கு அடக்கவொண்ணா ஆவேசம் கிளம்பிற்று. தன்னுடைய பாணங்களையெல்லாம் அவன் இராமனை நோக்கிப் பிரயோகித்தான். இருவருக்குமிடையில் பயங்கரமான போராட்டம் நிகழ்ந்தது. மந்த்ரசக்தி வாய்ந்த அஸ்திர சஸ்திரங்களை ஒவ்வொருவனும் எதிரியை ஒழித்துத் தள்ளப் பிரயோகித்தான். ஆயினும் அதிசயம்தான் என்னே! அத்தகைய ஒவ்வோர் அஸ்திரத்தையும் முறியடிக்க எதிர் அஸ்திரம் வழங்கப்பட்டது. இராவணன் நாக அஸ்திரத்தை ஏவினான். இராமன் கருட அஸ்திரத்தை ஏவி அதைத் தோற்கடித்தான். ராம ராவண யுத்தத்திற்கு நிகர் ராம ராவண யுத்தமே. மந்த்ரசக்தி வாய்ந்த அஸ்திரசஸ்திர ஞானத்திலும் அவ்வாயுதங்களைப் பிரயோகிக்கும் முறையிலும் அவர்கள் இருவரும் ஒருவருக்கு ஒருவர் நிகராகவே தென்பட்டனர். மிக்கான் யார் மெலிந்தவன் யார் என்று கண்டுபிடிக்க யாருக்குமே இயலவில்லை.

ராம ராவண யுத்தம் இங்ஙனம் குலைநடுங்கச் செய்யும் பாங்கில் நிகழ்ந்துகொண்டிருக்கும் வேளையில் இலக்ஷ்மணன் ஓர் உபாயத்தைக் கையாண்டான். இராவணனுடைய சாரதியைத் தாக்கி அவனைக் கொன்று தள்ளினன். அதே வேளையில் விபீஷணன் இராவணனுடைய ரதத்தில் பூட்டி யிருந்த திறமை வாய்ந்த குதிரைகளைக் கொன்று தள்ளினன். மூர்க்காவேசம் பூண்டிருந்த இலங்கை வேந்தன் ரதத்தி னின்று தரையில் குதித்தான். அப்படிக் குதித்தவன் தனக் குச் சொந்தத் தம்பியாயிருந்த விபீஷணன் மீது சக்தி ஆயு தத்தைப் பிரயோகித்தான். இலக்ஷ்மணன் திடீரென்று இடையில் பாய்ந்து அந்த ஆயுதத்தைத் தானே ஏற்றுக் கொண்டான். அந்தச் செயலின் வாயிலாக விபீஷணன் காப்பாற்றப்பட்டான். இலக்ஷ்மணனோ உணர்ச்சியற்றுத் தரையில் வீழ்ந்தான். காயப்பட்டுக் கிடந்த தன் தம்பியைக் கவனிக்க இராமனுக்கு இப்போது அவகாசம் இல்லை. எதிரியின் மீது அவன் விரைந்து பாய்ந்து அச்சமூட்டி விரட்டியோட்டினன். அடுத்த கணப்பொழுதில் இலக்ஷ் மணனிடம் ஓடி அவன் நெஞ்சில் புதைந்திருந்த அம்பைத் திறமையுடன் பிடுங்கி எடுத்தான். பணிவிடை பண்ணிக் கொண்டிருந்த வானரர்களுக்கு அந்த அம்பைப் பிடுங்கி எடுக்கும் முறைமை விளங்கவில்லை. தமையன் ஆவலோடு தம்பியின் முகத்தைப் பார்த்தான். உயிர் இருக்கும் அறிகுறி அதில் காணவில்லை. ஆதலால் அப்பொழுதே அண்ணன் கதறியழ ஆரம்பித்தான். இலக்ஷ்மணனோ தன் சொரூபத் தில் செம்பாதி. அத்தகைய இலக்ஷ்மணன் இல்லாத நில வுலக வாழ்க்கை அவனுக்குப் பொருளற்றதாகத் தென் பட்டது. ஆனல் சுஷேணன் அவ்விடத்துக்கு ஓடிவந்து பார்த்தான். இலக்ஷ்மணன் உயிர் இழக்கவில்லையென்று

உறுதிகூறி மூத்தவனைத் தேற்றுவித்தான். அக்கணமே ஹிமாலய பர்வதத்திற்குப் பறந்தோடித் தெய்விகச் சக்தி வாய்ந்த மூலிகைகளைக் கொண்டு வரும்படி ஆஞ்சனேயனை அவன் ஏவினான். பட்டகாயத்தைக் குணப்படுத்துதற்கும், இழந்த உயிரை மீண்டும் பெறுதற்கும் அம் மூலிகைகள் நன்கு பயன்படும். அந்த அரியபெரிய செயலைச் சிறிது நேரத்தில் செய்து முடித்ததும் இலக்ஷ்மணன் தெளிவுற்று எழுந்திருந்தான். பழைய நிறை மனிதனாகவே தமையனுக்குத் தம்பி தென்பட்டான். இப்பொழுது இளையவன் மூத்தவனுக்கு முக்கியமான விஷயம் ஒன்றை ஞாபகமூட்டினான். இராவணனை அன்றே ஒழித்துத் தள்ளுவது அவ்விஷயமாகும்: சூரிய அஸ்தமனத்திற்குள் அச்செயல் நிறைவேறியாக வேண்டும்.

12. இராவணன் மற்றும் ஒரு ரதத்தைத் தனக்கு ஆயத்தப்படுத்திக்கொண்டான். பொருத்தமான ஆயுதங்களையும் அதில் அமைத்து வைத்தான். பிறகு அமர்க்களதுக்கு ஆரவாரத்துடன் வந்து சேர்ந்தான். அந்தப் படுபாவியுடன் போராட ரகுராமன் தரையின்மீது நின்றுகொண்டிருந்தான். அப்படி அவன் நிற்பது தகாது என தேவர்களுக்கு அரசனான இந்திரன் கருதினான். எனவே தெய்விக வல்லமை வாய்ந்த ஆயுதங்களோடு அமைக்கப் பெற்றிருந்த தன் ரதத்தைச் சாரதியாகிய மாதலி மண்ணுலகுக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று அவன் ஆணையிட்டான். அந்த ரதமும் விண்ணுலகினின்று மண்ணுலகுக்கு இராமன் எதிரே கீழே இறங்கி வந்து நின்றது. தக்கவர்களுக்குப் பொருத்தமான உதவி தக்க தருணத்தில் வந்து அமைவது வெளிப்படை. இப்பொழுது தேவர்களெல்லாரும் ஆங்காங்கு இடம் வகித்து இந்த அரிய போராட்டத்தைக் காணக் காத்திருந்தனர்.

போராட்டமோ தர்மத்திற்கும் அதர்மத்திற்குமிடையில் நிகழ்வதாம்.

வீராவேசத்துடன் நடைபெற்ற சமரிலே அசுர வேந்தன் அனைத்தையும் அழிக்க வல்ல சூலாயுதத்தைப் பிரயோகித்தான். அது பெரும் நாசத்தை விளைவித்துக் கொண்டிருந்த பொழுது இந்திரன் கொடுத்தனுப்பிய சக்தி ஆயுதத்தை இராமன் கையாண்டான். அரக்கன் விடுத்த ஆயுதத்தின் வல்லமையை அது அழித்துத் தள்ளியது. அதோடு அது நின்றுவிடவில்லை. இராவணன் படைத்திருந்த அறிவுத் திறமையையும் அது அழிக்கலாயிற்று. இந்தச் சந்தர்ப்பத்தில் ரகுபதி ராமன் இயம்பியதாவது: "நான் இல்லாத நேரம் பார்த்து சீதையைத் திருடிக்கொண்டு ஓடுகிற வெளிப் பகட்டுச் சூரனாக உன்னை நீ அமைத்துக்கொண்டாய். இப்பொழுது என்னுடைய பாணங்களை எதிர்த்து உன்னுடைய தகைமையை நிலைநாட்டுவாயாக." அதற்குப்பதில் ஏதும் பகர அப்பாதகனுக்கு இயலவில்லை. அவனுடைய ஆயுதங்கள் தளர்வுறுவனவாயின. அவனுடைய சங்கடத்தைக் காணலுற்ற சாரதி போர்முனையினின்று ரதத்தை அப்புறப் படுத்தினான்.

தாற்காலிகமாக இராவணனை வந்து தாக்கியிருந்த மனக்குழப்பம் இப்பொழுது தெளிவுற்றது. அதன் விளைவாக அவனுடைய அரக்கத் தன்மை ஆரவாரித்துக்கொண்டு முன் வந்தது. பகைவனிடத்திருந்து ரதத்தைப் பின்வாங்கித் தன்னை அவமானப்படுத்திய சாரதியின் மீது அவன் சீறி விழுந்தான். சாரதியோ நிகழ்ந்ததை உள்ளபடி விளக்கி அவனைச் சமாதானப்படுத்தினான். போராடிக்கொண்டிருந்த இலங்கை வேந்தனிடத்தும் அவனுடைய ரதத்தைக் கடாவிய குதிரைகளிடத்திலும் களைப்பேற்பட்டிருந்ததை அவன் கண்

டான். போர்முனையில் அவன் புறம் காட்டிப் போனதற்குக் காரணம் அதுவேயாம். இராவணன் இதற்குள்ளாகப் புதிய முறுக்கைப் பெறலாயினன். போர்முனைக்கு அவன் மீண்டும் வந்து சேர்ந்தான்.

இதற்கிடையில் அகஸ்திய மஹரிஷி இராமனை வந்து அணுகினார். இவர் முன்பே தண்டகாரண்யத்தில் தம்மிடமிருந்த அரிய பெரிய மந்த்ர சக்தி வாய்க்கப் பெற்றிருந்த அஸ்திர சஸ்திரங்களை இராமனிடம் ஒப்படைத்திருந்தார். அவைகளைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இப்பொழுது தானாக வந்தமைந்தது. 'ஆதித்ய ஹ்ருதயம்' என்னும் மந்த்ரக் கோட்பாட்டை அகஸ்திய முனிவர் இராமனுக்கு இங்கு வைத்துக் கற்பித்தார். அதைப் பயன்படுத்தித் தீமையைத் தகர்த்துத் தள்ளும் வல்லமை வாய்ந்தவனாக இராமன் இப்பொழுது ஆயத்தமாயிருந்தான்.

இராமனும் இராவணனும் மற்றும் ஒரு முறை பயங்கரப் போராட்டத்தைத் துவக்கினார்கள். ஒருவனை ஒருவன் தாக்கியது போர்த் திறமைக்கு எடுத்துக் காட்டாக இருந்தது. தாக்கியதன் வேகமோ விண்ணவர்களுக்கும் காண்பதற்கரிய காட்சியாய் இருந்தது. இரண்டு கட்சிகளிலுமுள்ள சேனைகளும், சேனைத் தலைவர்களும் தாங்கள் புரிந்த போராட்டத்தை நிறுத்தி வைத்தனர். ராம ராவண யுத்தத்தின் அதிசயத்தைக் கண்டு திகைப்பதே அப்போது அவர்களுக்குக் குறிக்கோளாயிற்று. இராமனுடைய ரதத்திலிருந்த கொடி மரத்தை உடைத்துத்தள்ள இராவணன் முயன்றான். ஆனால் அம்முயற்சியில் அவன் தோல்வியடைந்தான். அதற்கு எதிர்ச் செயலாக இராகவன் செய்தது வியப்புக்குரியதாம். ஒரே ஓர் அம்பைக்கொண்டு எதிரியினுடைய கொடிக் கம்பத்தை அவன் துகளாக்கினான்.

போரில் இராமன் ஊர்ந்துசென்ற இரதத்திலே பூட்டப் பெற்றிருந்த குதிரைகளின் வேகமோ வாயுவேகத்திற்கு நிகராயிருந்தது. வேகம் நிறைந்த அந்த வாகனங்களைத் தன்னுடைய கொடிய அம்புகளால் வெட்டித்தள்ள இராவணன் முயன்றான். ஆனால் ராமபாணங்கள் ராவண பாணங்களைச் செயலற்றவைகள் ஆக்கின. இப்பொழுது இராவணனுடைய திறமை வாய்ந்த துரகங்களைத் துடைத்துத்தள்ள ரகுபதி தீர்மானித்தான். ஆயினும் அவன் எய்த அம்புகள் பயன்படாது போயின. போர் வீரர்கள் இருவரும் ஒருவருடைய பாணத்தை மற்றொருவர் முறியடிப்பதிலேயே ஈடுபட்டிருந்தார்கள். இச்செயல் படிப்படியாக வேகம் மிக வாய்க்கப் பெற்றதாயிற்று. சீறிக்கொண்டு வந்த அம்புகள் போர்க்களத்துக்கு மேலே வானத்தையே மூடிக்கொண்டிருக்கிற விதானம் போன்று காட்சி கொடுத்தன. விண்ணவர்களும், மண்ணவர்களும் வியப்புற்றவர்களாய் இந்த அதிசயச் செயலைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அருளாளர்க்கும் மருளாளர்க்கும் இடையில் நிகழ்ந்த போரின் வேகம் அத்தகையதாம். அதைக் கண்ணுற்றவர்களனைவரும் ராம ராவண யுத்தத்துக்கு நிகரானது எங்குமில்லை என்னும் முடிவுக்கு வந்தனர்.

இறுதியாக இக்ஷ்வாகு வீரனாகிய இராமன் எதிரியின் தலையைக் கொய்யத் தீர்மானித்தான். அங்ஙனம் சங்கல்பம் செய்துகொண்டு ஜொலித்துக்கொண்டிருந்த பாணம் ஒன்றை எடுத்துப் பிரயோகித்தான். அந்த ஆயுதமும் தன் திறனை வெளிப்படுத்தியது. எதிரியின் தலை துண்டிக்கப்பட்டுக் கீழே விழுந்தது. ஆனால் அதற்குப் பதிலாக மற்றொரு தலை தோன்றி வந்தது. தலைக்குப் பிறகு தலையை ராமபாணம் வெட்டித்தள்ளிக்கொண்டே போனது. புதிய தலைக்குப்

பிறகு தலை தோன்றி வந்துகொண்டேயிருந்தது. வெட்ட வெட்ட இராவணன் தலை முளைத்துக்கொண்டே இருந்தது. அல்லும் பகலும் நிற்காது இப்போர் நிகழ்ந்துகொண்டே யிருந்தது. ஆயினும் அதன் பலன் ஒன்றேயாம். இராவண னுக்குப் புதிய தலைகள் தோன்றுவது அவனுடைய கூறு ஆயிற்று. இதைக் காணலுற்ற இராமன் பிரம்மாஸ்திரத்தை எடுத்தான். தெய்விக சக்தியை அதன்கண் ஆவாஹனம் பண்ணினன். அதர்மத்தின் வடிவினனாகிய இராவணன்மீது அந்த அஸ்திரத்தை இராமன் ஏவினன். எதிரியின் ஹ்ருதயத்தை அது துளைத்தது. பிறகு அது தரையைத் தொட்டது. கடைசியாக இராமனுடைய அம்பறாத்தூணி யில் அது வந்து அடங்கிற்று. இராவணன் தரையில் வீழ்ந்து புரண்டு மடிந்தான். புறத்தில் நிகழ்ந்த அறப்போர் அகத் தில் ஞானிகளுடைய உள்ளத்தில் யாண்டும் நிகழ்ந்து வருகிறது. மண்ணக வாழ்விலுள்ள மாசுகள் அனைத்துக்கும் முரியாக வந்து வாய்ப்பது பரஞானமாம். இந்தப் பேருண் மைக்குப் புறச்சான்றாக ராவண சம்ஹாரம் இராமனால் நிறை வேறிற்று. வானவர்களும் வையகத்தவர்களும் வியப் புற்றுக் கர்ஜித்தார்கள். அதன் எதிரொலி திக்கனைத்தும் பரவியது. இராமன் மண்ணுலகில் தோன்றியதன் முக்கிய மான குறிக்கோள் இப்பொழுது வெற்றிகரமாக நிறைவேறி யது. லங்காபுரி விபீஷணனுடைய நாடு ஆனது.

13. விபீஷணன் அரக்கர் கூட்டத்தில் பிறந்தவன் எனி னும் அவனிடத்துத் தெய்வ சம்பத்துக்கள் வேண்டியவாறு நிறைந்திருந்தன. பொதுநலனுக்கு அவன் முதன்மைகொடுத் தான். பொது நலனுக்காகப் பொல்லாங்கே வடிவெடுத் திருந்த இராவணன் ஒழிந்தாக வேண்டும் என்பது அவ னுடைய திட்டம். ஆனால் அவனைக் கொன்ற பிறகு சகோதர

வாஞ்சை தலையெடுத்தது. தமையன் அழிவைக் குறித்து அவன் கதறிப் பதறி அழுதான். விண்ணவர்கள் யாராலும் வெல்லப்படாத இலங்கை வேந்தன் வையகவாசி ஒருவனால் ஒடுக்கப்பட்டான். அத்தகைய தமையனுக்கு விபீஷணன் வேண்டியவாறு எச்சரிக்கை செய்திருந்தான். அந்த எச்சரிக்கையை அவன் ஏற்றுக்கொள்ளவில்லை. அறவே அழிந்து பட்டுப் போதல் அதன் விளைவாயிற்று. இதையெல்லாம் எண்ணியெண்ணி விபீஷணன் வருந்தினன். சிறிது நேரத்திற்குப் பிறகு இராமன் விபீஷணனுடைய பிரலாபத்தில் தலையிட்டான். நிகழவேண்டியது நிகழ்ந்தாயிற்று. தொடர்ந்து அதைக்குறித்து வருந்துதலில் பயன் ஏதுமில்லை. மடிந்து போன இராவணனே வேதம் கற்றவன். அரிய பெரிய தவம் புரிந்து பராக்கிரமங்கள் பலவற்றை அடையப்பெற்றவன். வல்லமை வாய்ந்த வேந்தன். யாராலும் வெல்லமுடியாத போர்வீரன். அத்தகைய பெருமைகள் யாவும் வாய்க்கப் பெற்றவன் இராவணன். அவனே இராமன் கையில் மரண தண்டனையைப் பெற்றான். ராமபாணம் பாய்ந்ததன் விளைவாக அவனுடைய பாபங்களெல்லாம் அழிந்துபட்டுப் போயின. அன்னவனுக்குப் பொருத்தமான ஈமக்கிரியைகளைச் செய்து முடிக்க விபீஷணன் கடமைப்பட்டிருந்தான். அச்செயல்கள் தம்பி தமையனுக்குச் செய்த வந்தனை வழிபாடுகள் ஆயின.

இராவணனுக்கு அரசிமார்கள் பலர் இருந்தனர். அவர்களுள் முதன்மை வகித்தவள் மண்டோதரி. அப்பேரரசி கால்நடையாகக் கணவன் மடிந்துகிடந்த களத்தை வந்தடைந்தாள். அவள் உரக்கப் பிரலாபித்ததாவது: "என் ஆருயிர்த் தலைவா, தாம் மூவுலகுக்கும் மன்னனாகத் திகழ்ந்தீர். இப்பொழுது மரணமுற்று மண்ணில் புரண்டு கிடக்

கின்றீர். வெறும் மானுடன் ஒருவனால் தாம் மாய்க்கப்பட்டு இருக்கின்றீர். துன்பத்துக்கும் எனக்கும் வெகுதூரம் எனக் கனவு கண்டுகொண்டிருந்தது இப்பொழுது பொய்யாய்ப் போயிற்று. தம்மைப் பிரிந்ததனால் நான் அடையும் வேதனை அணு அணுவாக என்னை அரித்துத் தள்ளுகிறது. விண்ணவர்களையெல்லாம் வெல்லுவது தம்முடைய போக்காய் இருந்தது. என் இறையே, என்ன விந்தை! அவ்வளவு எளிதில் தாம் மானுடன் ஒருவனால் மாய்க்கப்பட்டிருக்கிறீர். என்னுடைய கணவனுக்கோ என் அருமைச் செல்வன் இந்த்ரஜித்துக்கோ நிகரானவர்கள் யாருமே எவ்வுலகிலும் இல்லையென்று நான் பெருமையடித்துக்கொண்டிருந்தேன். பராக்கிரமம் வாய்ந்த என் கணவன் சீதையைத் தன் கணவனிடமிருந்து பிரித்து வைத்தார். அவள்பட்ட துயரத்தை நான் அப்பொழுது அறிந்துகொள்ளவில்லை. இப்பொழுதோ நான் என் கணவனிடமிருந்து நிரந்தரமாகப் பிரித்து வைக்கப் பட்டிருக்கிறேன். அவள் படும் துயரத்தை நான் இப்பொழுதுதான் அறிய வருகிறேன். அவளோ தன் கணவனோடு மீண்டும் இணைந்திருப்பாள். நானோ இனி யாண்டும் விதவை. எல்லாம் வல்ல காலத்தின் போக்கை யார்தான் மாற்றமுடியும்?"

இந்திரனுடைய சாரதியாகிய மாதலியை இராமன் அழைத்து அவன் கொண்டுவந்திருந்த ரதத்தைத் திரும்பவும் தேவலோகத்துக்கு எடுத்துச் செல்லும்படி சொன்னான். அடுத்தபடியாக இராமன் சுக்ரீவனை அணுகி அவனை உவகையோடு தழுவிக்கொண்டான். இராவணனைத் தோற்கடிக்கும் செயலில் அன்னவன் புரிந்த சேவை சாமானியமானதன்று. அதற்காகவென்று அவனைப் பெரிதும் பாராட்டி நன்றி செலுத்தினன். அதன் பிறகு இராமனுடைய கருத்

துப்படி இலக்ஷ்மணன் விபீஷணனை முறைப்படி நீராட்டி அவனை லங்காபுரிக்கு அரசனாக நியமித்து முடிசூட்டினான். அதற்கடுத்தபடி அதுகாறும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளனைத்தை யும் அசோகவனத்தில் இருந்த சீதாதேவியிடம் தெரிவிக்கும் படி ஹனுமானை ஏவினான்.

அச்செயலில் இறங்குவதற்கு ஹனுமானுக்கு மட்டற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. சீதாபிராட்டியார் இருந்த இடத் திற்குப் பக்திபூர்வமாக அவன் நடந்து சென்றான். அவள் முன்னிலையில் அவன் வீழ்ந்து வணங்கினான். நற்செய்திக ளனைத்தையும் அவன் அன்னையிடம் தெரிவித்தான். "படு பாவி இராவணன் இராமனால் கொல்லப்பட்டுள்ளான். தாயே, தாம் இனிச் சிறைவாசியல்லீர். இந்த அரசாங்கம் இப் பொழுது ராமபக்தனாகிய விபீஷணனுக்குரியது. ஆதலால் தாம் வேற்றூர் நாட்டில் இப்பொழுது இல்லை. தமக்குச் சொந்தமாயுள்ள தேசத்திலே சுதந்திர தேவியாக வீற்றிருக் கின்றீர். இராமனும், இலக்ஷ்மணனும், சுக்ரீவனும், விபீஷண னும் தங்களுடைய க்ஷேம சமாசாரத்தை உங்களிடம் தெரி விக்கும்படி என்னை ஏவியிருக்கிறார்கள். தங்களுடைய நலனை அறிந்துகொள்ள அவர்கள் ஆவலுடன் இருக்கிறார்கள்.

சீதாபிராட்டி அசைவற்றும், பேச்சற்றும் அமர்ந்திருந் தாள்.

ஹனுமான்: தாயே, தாங்கள் பேசாது இருப்பது ஏன்?

சீதை: 'உணர்ச்சியின் வேகம் என் உள்ளத்தை அடைக்கிறது. நாவை அது கட்டிப் போட்டுள்ளது.' தன் கன்னங்களில் முத்து முத்தாகக் கண்ணீரைச் சிந்திக் கொண்டு அவள் இயம்பியதாவது: 'நான் உனக்கு எங்ஙனம் கைம்மாறு செய்வேன்? எதைத்தான் உனக்குச் சன்மான மாகத் தருவது என்பது எனக்கு விளங்கவில்லை.'

ஹனுமான்: ராமஜயம் நாம் பெற்றுள்ள சன்மான மாகிறது. தாயே, அதற்கு நிகரான சன்மானம் வேறு ஏது மில்லை.

சீதை: மஹாவீரா, அறிவில் நீ ஒப்பு உயர்வு அற்றவன். ஆற்றலிலோ நீ நிகரற்றவன். சீலத்தின் சிகரத்தில் நீ உள்ளாய். உன் பணிவு போற்றுதற்குரியது. பரிபூரணத் தின் சொரூபம் நீயே.

ஹனுமான்: தாயே, தங்களைத் துன்புறுத்திச் சித்திர வதை பண்ணிய ராக்ஷசிகள் இங்கே நின்று கொண்டிருக் கிறார்கள். தாங்கள் அனுமதி கொடுத்தால் இக்கணமே நான் அவர்களைப் பாதாளலோகத்துக்கு அனுப்பி வைப்பேன். ஓர் அடி, ஒரு குத்து, ஓர் உதை, ஒரு தாக்குதல், ஓர் அறைச் சல்—அவர்களைத் துடைத்துத் தள்ளுவதற்கு இவை போது மானவை.

சீதை: இல்லை, என் அன்புக்குரிய செல்வா, சான் றோரின் போக்கு இத்தகையதன்று. என்னைத் துன்புறுத்திய பாபி கொல்லப்பட்டுள்ளான். இந்த உயிர் வகைகள் அவ னிடத்து வெறும் கருவிகளாகத்தானே இருந்தார்கள்? நாம் அவர்களிடத்து இரக்கம் மிகக் காட்டவேண்டும். நான் துயருற்றுக் கிடந்தது தெய்வாதீனம். அதற்காக யாரையும் நொந்து கொள்ளலாகாது. யாரையும் பழி சூட்டலாகாது.

ஹனுமான் தனக்குள்ளேயே எண்ணிக்கொள்கிறான். ராமபிரானுக்கே உரியவளான சீதாபிராட்டியைத் தவிர வேறு யாரிடத்திலும் இத்தகைய பரந்த பாங்கைக் காண முடியாது. பிறகு அவன் வாய்விட்டு இயம்புகின்றான்: 'தாயே, ராமபிரானிடம் நான் எடுத்துச் செல்லவேண்டிய செய்தி யாதோ?'

சீதை: என் நாதனோடு இணங்கியிருக்க நான் ஆவலுற்று இருக்கிறேன்.

வீழ்ந்து வணங்கிவிட்டு ஹனுமான் புறப்பட்டுப் போகிருன்.

14. ஆஞ்சனேயன் தெரிவித்த விவரங்களையெல்லாம் இராமன் கேட்டுக்கொண்டான். அதன் பிறகு வைதேகியை நீராட்டி, முறையாக ஆடை அணிவித்துத் தக்க தாதிமார்களுடன் அழைத்து வரும்படி விபீஷணனை வேண்டிக் கொண்டான். அரண்மனையிலிருந்த பெண்பாலர்களிடம் பிரீதிகரமான இப்பணிவிடையை விபீஷணன் ஒப்படைத்தான். மைதிலி தேவியோ தன்னுடைய தவக்கோலத்திலேயே தலைவன் முன்னிலைக்கு வர விரும்பியிருந்தாள். ஆனல் இராமனுடைய ஆணைப்படி நடந்துகொண்டாக வேண்டும். முற்றிலும் பொருத்தமான நீராட்டுதல் கைங்கரியம் சீதாதேவியாருக்குச் செய்யப்பட்டது. பொருத்தமான பாங்கிலே அவள் அலங்கரிக்கப்பட்டாள். பல்லக்கு ஒன்றிலே அவளை எழுந்தருளப்பண்ணி இராமனுடைய சந்நிதானத்துக்குப் பக்தி பூர்வமாக லங்கா வாசிகள் அவளை அழைத்துச் சென்றனர். இப்பொழுது ராக்ஷசக் கூட்டங்களும், வானரக் கூட்டங்களும் திமுதிமுவென்று வந்து கூட்டம் கூடினர்கள். ஒருவனுக்குமேல் ஒருவன் தலைதூக்கிப் பார்த்தான். எந்த மாதரசியை முன்னிட்டு இராவணனும் அவனைச் சேர்ந்த பலரும் மடிந்து போனர்களோ, எந்த மாதரசியை முன்னிட்டு லங்காபுரியின் சரித்திரமே மாறியமைந்ததோ அந்த மாதரசியைக் காண அவர்கள் கூட்டம் கூடியதில் வியப்பு ஒன்றுமில்லை.

ராமபிரானுடைய பாங்கை யாரே முற்றிலும் அறிய வல்லவர்! இதுகாறும் சீதாபிராட்டியாரை உய்வித்தல்

பொருட்டு உள்ளம் துடிதுடித்துக் கொண்டிருந்த மூர்த்தியின் பாங்கு இப்பொழுது திடீரென்று மாறியமைந்தது. கவர்ச்சிகரமும், வசீகரமும் வாய்க்கப்பெற்றிருந்த ராமபிரானுடைய முகவிலாசத்தில் இப்பொழுது பயங்கரம் உருவெடுத்து நின்றது. கணவனும் மனைவியும் பல மாதங்களாகப் பிரிந்திருந்தனர். அதன் பிறகு அவர்களுடைய சேர்க்கையில் இனிமை காண வேண்டியது இயல்பு. ஆனால் அதற்குத்தான் இடமில்லை. கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சி கொடுத்த மாதரசியிடம் கூர்த்த முகம் படைத்திருந்த ரகுராமன் கூறியதாவது: "சுக்ரீவனோடும் விபீஷணனோடும் நான் உறவு பூண்டது வெறுமனே ராவணசம்ஹாரத்தின் பொருட்டேயாம். காமவெறி பிடித்திருந்த அந்தக் கயவனைக் கொன்று தள்ளுவது என் கடமையாயிற்று. மரணம் ஒன்றுக்கே அவன் தகுதி வாய்ந்தவனாயிருந்தான். அத்தகைய தண்டனை தர்மபரிபாலனத்தின் பொருட்டு அவனுக்குத் தரப்பட்டது.

"ஹே சீதை, அதே தர்மபரிபாலனத்தின் பொருட்டு உன்மீது நடவடிக்கை எடுக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தப் புல்லிய பாவி பலாத்காரமாக உன்னைத் தூக்கிச் சென்றான். பல மாதங்களாக அவன் உன்னைத் தன் வீட்டில் அடைத்து வைத்திருந்தான். அவன் உன்மீது செலுத்தியது காமக் கண்ணோட்டம். ஆதலால் நீ தீட்டுப் பட்டவளாகின்றாய். புனிதத்தை இழந்து தீட்டுப்பட்ட சீதையோடு திரும்பவும் சேர்ந்திருப்பது எனக்குச் சாத்தியமன்று. உன்னை நான் ஒதுக்கித் தள்ளுகிறேன். நீ எங்கு வேண்டுமானாலும் சென்று யாரோடு வேண்டுமானாலும் வாழ்ந்திருக்கலாம்."

இதுகாறும் அழுதுகொண்டிருந்த அபலையாகிய சீதாபிராட்டி இப்பொழுது வீரம் ததும்பும் விவேக மூர்த்தியாக

வடிவெடுத்தாள். அவள் விடுத்த விடையாவது: "ஆர்ய புத்ரா! தாம் ஒரு பாமரன் போன்று பேசுவது ஏன்? தாம் சாட்டும் குற்றம் என்னை வந்து சாராது. எக்காரணத்தை முன்னிட்டாவது எப்பொழுதாவது தீட்டுப்படியாத தூய சீதாபிராட்டி நான். இது சத்தியம். எனக்கு நிகழ்ந்தது தெய்வாதீனம். அதற்கு நான் பொறுப்பாளி அல்லேன். பிரதிகூலமான சூழ்நிலைகளிலே நான் உயிரைத் தாக்குப் பிடித்து வைத்திருந்தேன். என் உயிர் எனக்குச் சொந்தமன்று. அது இராமனுக்குச் சொந்தம். ஆதலால் இராமனுக்குச் சொந்தமாயுள்ள உயிரை வாங்குதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என நான் கருதி வந்தேன். ஆனால் தாம் இப்பொழுது இயம்புவது அதற்கு நேர் மாறானது. இந்தச் செய்தியை அன்றே ஆஞ்சனேயன் மூலம் எனக்குச் சொல்லியனுப்பியிருந்தால் கணக்கற்றபேர் என்னைக்குறித்துப் பட்ட கஷ்டங்களெல்லாம் நேர்ந்துபோகாது தவிர்த்து இருந்திருக்கலாம். சித்திரவதைப்படுவது போன்று நான் பட்ட துயரத்தையும் என் தேகத்தைத் துடைத்துத் தள்ளுவதன் வாயிலாக நான் தவிர்த்திருக்கலாம்.

"உடல் தாங்கியுள்ள பெண்பால் ஒருத்தியின் உடல் தீட்டுக்கு உட்படலாம். எவ்வளவுதான் பாதுகாப்புப் போட்டு வைத்திருந்தாலும் அந்தத் தௌர்பாக்கியத்தைத் தவிர்க்கமுடியாது. எனக்கு நேர்ந்துள்ள விபத்து அத்தகையதாம். அதனால் என்ன? மனத்தகத்து நான் மாசுபடியாதவள்; தூய்மைக்கும், நிறைவுக்கும், கற்புக்கும் நான் உறைவிடம். பவித்திரம் எதுவோ அந்தப் பவித்திரமே நான் என்பது எனக்குத் தெரியும்.

இப்பொழுது இராமன் என்னைப் புறக்கணித்திருக்கிறான். ஆதலால் என் ஜீவிதத்தை நான் விரும்பியவாறு

கையாண்டுகொள்ளும் உரிமை எனக்கு வந்துள்ளது. இந்தச் சடலத்தை நான் அக்னிக்கு இரையாக்குவேன். என்னுடைய நிஜசொரூபமாகிய ஆத்மாவைப் பரமாத்மாவில் லயப்படுத்துவேன்; பரமாத்மாவும் இராமனும் எனக்கு ஒன்றே."

"லக்ஷ்மணா, என்னுடைய தகைமைக்கு மேலாகவே நீ என்னிடத்து மகோன்னதமான பாங்கிலும் மரியாதையுடனும் நடந்துள்ளாய். கடைசியாக இந்த ஒரு பேரன்புச் செயலை உன்னிடமிருந்து நான் வேண்டுகிறேன். சுடர்விட்டு எரிகின்ற அக்னி ஜுவாலை ஒன்றை எனக்காக ஆயத்தப் படுத்துவாயாக."

இலக்ஷ்மணனுக்கோ மனத்தாங்கல் ஒரு பக்கம், சீற்றம் மற்றொரு பக்கம். இத்தகைய பாங்குடன் அவன் இராமனை உற்று நோக்கினான். இராமன் அமைதியுற்றிருந்தது அக்னியை வளர்ப்பதற்கு அனுமதி என அவன் யூகித்தான். அந்த முடிவுக்கேற்ப பெரிய தீக்குண்டம் ஒன்றை அவன் தயாரித்தான்.

அமைதியுடனும் பேரன்புடனும் சீதாபிராட்டி தன் கணவனை வலம் வந்தாள். தகதகவென்று எரிந்துகொண்டிருந்த தீயின் எதிரே நின்றுகொண்டு அவள் இங்ஙனம் இயம்பினாள்: "ஓ அக்னி தேவா! எதிர்பாராத சம்பவங்கள் என்னை இராமனிடமிருந்து பிரித்து வைத்தன. அதைத் தொடர்ந்து வேண்டப்படாத சூழ்நிலையில் நான் சிறையில் வைக்கப்பட்டேன். ஆதலால் என்னைச் சோதிப்பதற்கு இராமனுக்கு உரிமையுண்டு. என் தேகம் தீட்டுப்பட்டிருக்கிறது என நீ காண்பாயாகில் இதை உடனே தகித்துத் தள்ளு. உடலுடன் கூடியிருந்த ஜானகியாகவோ தேகத்தினின்று விலகிக்கொண்ட வைதேகியாகவோ நான் யாண்டும்

இராமனுக்கே உரியவள். இராமனை விட்டுப் பிரியாது அவனை உபாசித்த வண்ணமாக நான் இருப்பேன்.'' ஜுவாலைக் கொழுந்துகளுடன் மேலே கிளம்பிக்கொண்டிருந்த நெருப்பினுள் நிறைபிறழாத மாதரசி நடந்து சென்று மறைந்தாள்.

கூடியிருந்த அனைவரும் ஸ்தம்பித்துப் போயினர்; நடு நடுங்கி நின்றனர். எந்த ஆத்மாவிடத்திலிருந்தும் ஒரு வார்த்தையேனும் கிளம்பவில்லை. இதுதானா முடிவு? விண்ணவர்கள் மண்ணகத்திற்குக் கீழே இறங்கி வந்து திகைத்துப் போனவர்களாகத் தீயைச் சுற்றிலும் நின்றுகொண்டிருந்தனர். அக்னிக்கொழுந்தினின்று அக்னி தேவன் இப்பொழுது வடிவெடுத்து நின்றான். அவன் இயம்பியதாவது: ''சீதாதேவி தூய்மைக்கு உறைவிடம். அந்தத் தூய்மையைத் தகிக்க நான் வல்லவன் அல்லேன்.''

மேனி அமைப்பிலும், மனப்பான்மையிலும் புதுப்பிக்கப்பட்டவளாக, பிரகாசமும் அமைதியும் வாய்க்கப்பெற்றவளாகத் தீக்குண்டத்தினின்று சீதாதேவி நடந்து வெளியே வந்தாள். உயிர்களனைத்துக்கும் அவள் இரக்கம் காட்டுபவள். அவள் மீது மோகித்தவனுக்கும் இரக்கம், அவளை உபத்திரவப்படுத்தியவர்களுக்கும் இரக்கம், அவளைச் சோதித்தவனுக்கும் இரக்கம், இந்தக் காரிகையே கருணாகரத் தெய்வம் ஆவாள்.

கோபாவேசத்துடனிருந்த இராமன் இப்பொழுது முற்றிலும் அன்பு சொரூபமாக மாறியமைந்தான். யாண்டும் தன்னை விட்டுப் பிரியாதவளாகிய சீதாபிராட்டியைப் பேரன்புடன் இராமன் ஏற்றுக்கொண்டான். தீச்சோதனையின் வாயிலாக அவ்விருவருக்கும் இடையிலிருந்த மாற்ற முடியாத இணக்கம் தெய்விக இணக்கமாகவும், ஆத்ம

போதத்தை ஓங்குவிக்கும் அருள் இணக்கமாகவும் ஜொலித்துக்கொண்டிருந்தது. இப்பொழுது வானவர்களும் வையகத்தவர்களும் ஏகோபித்து ஜயகோஷம் கிளப்பினர்கள். ஏனென்றால் அவர்கள் கண்டது தெய்விகக்காட்சி. சீதா ராமனைத் திரிகரண சுத்தியுடன் போற்றிப் பாராட்டினர்கள். வானளாவ அவனைப் புகழ்ந்தார்கள்.

உள்ளத்தைத் தொடவல்ல மற்றெரு நிகழ்ச்சி. மனம் உடைந்தவராக மண்ணுலகினின்று விலக்கி இந்திரலோகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட தசரத சக்கரவர்த்தியைத் தேவர்கள் ஒரு ரதத்தில் எழுந்தருளப்பண்ணி இராமனுடைய பராக்கிரமத்திற்கு இலக்காகிய பாருலகத்திற்கு அழைத்து வந்தார்கள். அன்று தன் மைந்தனை முன்னிட்டு நொந்துகொண்டு விண்ணுலகு ஏகிய வேந்தன் இப்பொழுது அவனுடைய செயற்கரிய செயல்களைக் கண்டு மட்டற்ற மகிழ்வில் மூழ்கியிருந்தார். ரகுநந்தனன் ஆகிய இராமன் தன் தந்தையின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினன். அத்தகைய செல்வனுக்குச் செய்தி ஒன்றைத் தந்தையார் சொல்வாராயினர். இராமனை விட்டுப் பிரிந்ததன் விளைவாக ரிஷிகள் புடைசூழ்ந்திருந்த சொர்க்க வாழ்வு தமக்கு இன்பம் தரவில்லை. தமக்கும் தம்முடைய தனயனுக்கும் இடையே நேர்ந்த பிரிவின் விளைவாகப் பாராட்டுதற்குரிய பொதுநலச் செயல் ஒன்று நிகழ்வதாயிற்று. அதை முன்னிட்டுத் தந்தையாருக்கு இப்பொழுது முற்றிலும் மன ஆறுதல் உண்டாகியிருந்தது. புத்திரனைத் தழுவிக்கொண்டதன் விளைவாகப் பிதாவுக்கு அழிந்துபட்டுப் போகாத பாரமார்த்திகப் பேரானந்தம் வாய்த்தது. அதிவிரைவில் தம் அருமைச் செல்வன் அயோத்திக்குத் திரும்பிப்போய் சிம்மாசனத்தில் வீற்றிருக்க வேண்டுமென்று விதேகமான தசரத வேந்தர் வேண்டிக்

கொண்டார். தன் தமையனுக்கு யாண்டும் திருப்பணி செய்துகொண்டே இருக்கவேண்டுமென்று இளையவன் இலக்ஷ்மணனுக்கு அவர் எடுத்துரைத்தார். யாண்டும் இராமனுக்கேற்ற சகதர்மிணியாகத் திகழ்ந்திருக்கவேண்டு மென்று செல்வி சீதா பிராட்டியாருக்கு அவர் ஆசி கூறினர். உலகுக்குத் தான் ஓர் எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும் என்னும் நோக்கத்தைக்கொண்டே இராமன் சீதையைச் சோதனைக்கு ஆளாக்கினன். ஆதலால் அச்செயலைப்பொருள் படுத்த வேண்டாமென்று அவளை அவர் தேற்றினர். தந்தை யார் மீண்டும் சொர்க்க ஆரோகணம் பூணுதற்கு முன்பு மைந்தன் அவரிடம் விண்ணப்பித்துக்கொண்டதாவது: "தந்தையே, அடிபணிந்து தங்களிடம் நான் விண்ணப்பிக் கிறேன். என் அருமைத் தாயாகிய கைகேயினிடத்தோ எனக்கேற்ற தம்பியாயுள்ள பரதனிடத்தோ தாங்கள் எந்த விதமான மனத்தாபமும் பூண்டிருக்கலாகாது." இதற்கொப் பான மாட்சிமை தங்கிய மனப்பான்மையை இம்மண்ணுல கம் மீண்டும் காணுமா என்பது கேள்வி.

இராமன் புரிந்த தர்மரீதியான பராக்கிரமங்களைப்பற் றித் தேவராஜனாகிய இந்திரனுக்கு மட்டில்லா மகிழ்வுண் டாயிற்று. தக்க பாங்கில் தசரத குமாரனுக்குத் தான் ஏதா வது கைங்கரியம் பண்ணவேண்டுமென்று அவன் மகிழ்வுடன் முன்வந்தான். இராமனும் அதற்குச் சம்மதம் கொடுத்தான். தனக்காகவென்று உயிர் துறந்த வானரங்களும், அங்கங்கள் சிதறிப் போன வானரங்களும் உயிர்பெற்று எழுந்திருந்து பழையபடி திண்ணியர்களாகத் திகழவேண்டுமென்பது இராமனுடைய வேண்டுகோள். இந்திரன் மகிழ்வுடன் அந்த விருப்பதனை நிறைவேற்றி வைத்தான். மாண்டு போன வானரங்களும் கரடிகளும் உயிர்பெற்று எழுந்திருந்து

உயிரோடு இருந்தவர்களோடு இனிது உறவாடினார்கள். அதனால் அவர்களுக்கு உண்டான ஆனந்தமோ அளப்பரியது.

தனக்கிருந்த விருப்பமொன்றை விபீஷணன் இராமனிடம் தெரிவித்தான். அவனுக்கு நன்றாக அபிஷேகம் செய்து அலங்கரித்து வைத்து அவனுக்கும், அவனைச் சார்ந்திருந்த கூட்டத்தார் அனைவருக்கும் நல்விருந்தளிக்க அவன் விரும்பினான். இராமன் லங்காபுரியில் கொஞ்சகாலம் தங்கியிருக்க வேண்டுமென்பது அவனுடைய அடுத்த வேண்டுதல். இராமனும் அன்புடன் பொருத்தமான விடைவிடுத்தான். அவன் கைவசம் இருந்தகாலம் மிகக்குறைவு. அயோத்திக்கு அவன் விரைந்து சென்று ஆறாத்துயரத்தில் ஆழ்ந்துகிடக்கும் தம்பி பரதனைத் தான் வாக்குக்கொடுத்தபடி தேற்றுதல் வேண்டும். தம்பி பரதன் இன்னும் தவக்கோலத்தில் இருக்கும்பொழுது இராமன் தன்னுடைய தவக்கோலத்தை ஒதுக்கி வைப்பதோ விருந்து ஏற்பதோ பொருந்தாது. ஆயினும் சுக்ரீவனுக்கும் அவனுடைய சேனையிலிருந்த அனைவருக்கும் லங்காபுரிக்குப் புதிய மன்னனாய் அமைந்திருக்கும் விபீஷணன் தக்க பாங்கில் உபசாரங்களும் விருந்தோம்புதலும் நடாத்தவேண்டும்.

பொருத்தமான இந்த நிபந்தனைகளை விபீஷணன் முழு மனதோடு ஆமோதித்தான். கால நெருக்கடியையும் சுலபத்தில் சமாளிக்க அவன் முன்வந்தான். குபேரனிடமிருந்து புஷ்பக விமானத்தை இராவணன் கைப்பற்றியிருந்தான். அந்த விமானத்தைப் பயன்படுத்தி இராமனையும், அவனைச் சார்ந்திருந்த அனைவரையும் அதிவிரைவில் அயோத்தியில் கொண்டு சேர்க்க முடியும் என்று விபீஷணன் உறுதி கூறினான். இப்புதிய இலங்கை வேந்தன் சுக்ரீவனுக்கும் அவனுடைய பட்டாளத்தைச் சேர்ந்தவர்களுக்கும் தாராளமாகச்

சன்மானங்கள் வழங்கினான். இத்தகைய நட்பும் உபசாரமும் இராவணனுடைய அரக்க ஆட்சியில் ஒருபொழுதும் நிகழ்ந்திருக்கமாட்டா.

15. புஷ்பக விமானம் இராமனையும், சீதையையும், இலக்ஷ்மணனையும், சுக்ரீவனையும், விபீஷணனையும் ஏற்றிக் கொண்டு வடதிசையை நோக்கிப் புறப்பட்டது. இரண்டு அரசர்களுடைய சிப்பந்திகளும் அவர்களுடன் பயணம் போனார்கள். திரும்பிப் போய்க்கொண்டிருந்தபொழுது உயரத்தில் வானவெளியிலிருந்தபடியே தங்களுடைய வன வாசத்தோடு சம்பந்தப்பட்ட இடங்களையெல்லாம் இராமன் சீதாபிராட்டிக்கு விளக்கிக் காட்டினான். அதிவிரைவில் ஆகாய விமானம் பாரத்வாஜ ஆஸ்ரமத்தைச் சென்றடைந்தது.

இராமன் புரிந்த பதினான்கு வருஷகால வனவாசம் பாரத்வாஜ ஆஸ்ரமத்தில் துவங்கியது. இப்பொழுது அதே பாரத்வாஜ ஆஸ்ரமத்தில் அது முற்றுப்பெற்றது. இராமன் புரிந்திருந்த செயற்கரிய செயல்களையெல்லாம் குறித்து மஹரிஷி பரமானந்தமடைந்தார். தென் திசையை நோக்கிச் சென்ற மூவர் இப்பொழுது பெரும் கூட்டத்தோடு திரும்பி வந்தனர். அவர்கள் அனைவரும் ஆஸ்ரமத்தில் ஒரு நாள் தங்கியிருக்கவேண்டும் என்பது மஹரிஷியின் விருப்பம். அவர் விருப்பப்படியே இராமனும் நடந்துகொண்டான்.

இதற்கிடையில் ஆஞ்சநேயன் முன்கூட்டியே அயோத்தி நகருக்கு அனுப்பப்பட்டான். வழியில் குகனிடத்தும் தலைமைப் பட்டணத்தில் பரதனிடத்தும் அடுத்த நாள் அயோத்யாபுரிக்கு இராமனுடைய வருகை பற்றிய நற்செய்தி அனுப்பப்பட்டது. ஆஞ்சநேயனிடம் மற்றொரு விஷயத்தை இராமன் சொல்லியனுப்பினான். உலகத்தவர்

கள் நெடுங்காலம் ஆதிக்கத்திலும் அரசபோகத்திலும் ஈடு பட்டிருப்பார்களானால் அந்தச் சம்பத்துக்களில் அவர்களுக்கு அளவுகடந்த பற்றுதல் வருவது இயல்பு. ஒருவேளை பரத னிடமும் அத்தகைய பற்றுதல் தலையெடுத்திருக்குமாகில் அதில் தோஷம் ஒன்றுமில்லை. பரந்த ராஜ்யத்தை அவனே ஆண்டு அனுபவிக்கட்டும். இராமனுக்கு அது முற் றிலும் சம்மதம். தனக்கு விருப்பமான வனவாசத்திலேயே அவன் நிரந்தரமாக இருந்துவிடலாம். இம் முடிவை ஆஞ்ச னேயன் தனக்குள்ளேயே வைத்துக்கொள்ள வேண்டு மென்று அவன் சொல்லி அனுப்பினான்.

எங்குச் சென்றாலும் நற்செய்தியையே கொண்டு வருவ தில் ஆஞ்சனேயன் நிபுணன். முதல் முதல் சுக்ரீவனுக்கு நற்செய்தி கொண்டுவந்தான். அடுத்தபடி சிறைகிடந்த சீதா தேவிக்கு நற்செய்தி எடுத்துச் சென்றான். அங்கிருந்து கிஷ்கிந்தையிலிருந்த இராமனுக்கு நற்செய்தி கொண்டுவந் தான். இராமனுக்கும் இலக்ஷ்மணனுக்கும் சஞ்சீவி என்னும் மூலிகையின் வாயிலாக வாழ்வைப் புதுப்பிக்கும் நற்செய்தி கொண்டுவந்தான். ராவணசம்ஹாரம், ராமஜயம் என்னும் நற்செய்தியைச் சீதையிடம் சமர்ப்பித்தான். இறுதியில் இன்னும் இரண்டு மூர்த்திகளுக்கும் நற்செய்தி எடுத்துச் செல்கிறான். கங்கைக் கரையோரம் படகோட்டி வேந்தனாக வாழ்ந்திருந்த குகனைத் தனது ஐந்தாவது சகோதரனாக வனவாசம் போகும்பொழுது இராமன் ஏற்றுக்கொண்டான். அத்தகைய குகன் என்னும் சகோதரனுக்கு ராம விஜயத் தைப் பற்றிய நற்செய்தியைத் தெரிவித்தான். அடுத்தபடி யாக அயோத்யாபுரியின் எல்லைப்புறத்தில் நந்திக் கிராமம் என்னுமிடத்தில் தொடர்ந்து பதினான்கு வருஷகாலம் ராம சிந்தனையில் தவம் புரிந்து கிடந்த பரதனுக்கு நற்செய்தி

கொண்டுபோனான். போனவன் பரதனைக் கண்ணுற்றான். கண்ணுற்றதும் அவனுடைய பாங்கை முற்றிலும் அறிந்து கொண்டான். அரசனுக்குரிய ஆடம்பரம் எதையும் ஆங்கு அவன் காணவில்லை. வெறும் தவவேடத்தில் அவன் திகழ்ந்திருந்தான். உடலோ மெலிந்து கிடந்தது. ராம சிந்தனையைத் தவிர வேறு எந்த எண்ணமும் அவனுடைய உள்ளத்தில் இடம் பெறவில்லை. ஆட்சித்திறனும் நேர்மையும் படைத்திருந்த மந்திரிகள் அவனைச் சூழ்ந்திருந்தார்கள். நாட்டைக் காப்பதில் நிபுணர்களாயிருந்த சேனாதிபதிகளும் அவனைச் சார்ந்திருந்தனர். பாங்குகள் அனைத்திலும் ராஜ்யம் முன்னேற்றம் அடைந்திருந்ததன் அறிகுறிகளே எங்கும் தென்பட்டன. 'இராமனும், சீதையும், இலக்ஷ்மணனும் இறுதியில் ஓர் ஆண்டு மட்டும் துன்பத்துக்கு ஆளாய் இருந்தனர். முற்பகுதி பதின்மூன்று ஆண்டுகள் பாரமார்த்திகப் பெருநிலையில் ரிஷிகளுடைய கூட்டுறவில் இன்புற்றிருந்தனர். பரதனுடைய நிலையோ அத்தகையதன்று. பதினான்கு வருஷகாலம் முழுதும் வனவாசம புரிந்துவந்த தமையனுடைய சிந்தனையிலேயே அவன் தோய்ந்துகிடந்தான். அதன் விளைவை அவனுடைய சொரூபம் விளக்கிக் காட்டியது. மனம், மொழி, மெய் ஆகிய அவனுடைய திரிகரணங்களும் இராமனுக்கு உற்ற கருவிகளாக மாறியமைந்திருந்தன. "இராமனை நான் மீண்டும் ரகுராமனாக நல்ல நிலையில் காண்பேனா?" என்னும் ஐயம் அல்லும் பகலும் அவனுடைய உள்ளத்தை உறுத்திக் கொண்டிருந்தது. அவனுக்குக் காலம் கடிதில் கடந்து போகவில்லை. பதினான்கு ஆண்டுகள் அத்தனை யுகங்களாக அவனுக்கு நீடித்துக்கொண்டு போயின. அந்த யுகங்களுக்கும் முடிவு வந்தது. "இராமனைக் காண வேண்டிய நல்ல நாள் உதய

மாயிற்று. ஆயினும் இராமனைப் பற்றிய செய்தி ஏதும் அவன் காதுக்கு எட்டவில்லை. வாக்குக் கொடுத்துள்ளபடி என் தமையன் இங்குத் திரும்பி வராது போய்விடுவானாகில் என் உடல் வாழ்க்கையைத் தாக்குப் பிடிக்க எனக்கு இயலாது" என்னும் முடிவுக்குப் பரதன் வந்தான். அதே வேளையில் ஆஞ்சநேயன் அவன் முன்னிலையில் பிரசன்னமானான். சீதையோடும் இலக்ஷ்மணனோடும் ராமபிரான் நாளைக் காலையில் இங்கு விஜயம் பண்ணுவான் என்னும் நல்ல செய்தியை அவன் சமர்ப்பித்தான்.

சாகும் தறுவாயிலிருந்த பரதனுக்குப் புத்துயிர் புகட்டியதற்கு நிகராக அச்செய்தி அவன் காதில் வீழ்ந்தது. "இந்த நல்ல செய்தியை எனக்குக் கொண்டு வந்துள்ள நீ யார்? நீ மானுடனோ, தேவனோ, மற்று யாரோ?" இப்படி வினவி முடிப்பதற்குள் ஆனந்த மயக்கத்தில் இளையவன் மூழ்குவானாயினன். சிறிது நேரத்தில் அந்த மயக்கம் தெளிந்து ஆவலுற்றிருந்தவனாக அவன் தென்பட்டான். ஆஞ்சநேயனும் தன்னை இன்னான் என்று அறிமுகப்படுத்திக் கொண்டான். பரதன் சித்ரகூடத்தில் இராமனை விட்டுப் பிரிந்தது முதற்கொண்டு அது வரையில் நிகழ்ந்திருந்த சம்பவங்களையெல்லாம் சுருக்கமாக அவன் எடுத்துச் சொன்னான். நந்திக்கிராமத்தில் வாடிக்கிடந்த பரதனுக்கும் தம்பி சத்துருக்கனனுக்கும் புத்துயிர் வந்தது. புதிய ஊக்கமும், தெளிவும் வாய்க்கப்பெற்றவர்களாகச் சகோதரர்களிருவரும் தென்பட்டார்கள்.

காட்டினின்று வீட்டிற்குத் திரும்பி வந்து கொண்டிருந்த அயோத்தி வேந்தனுக்குப் பொருத்தமான வரவேற்பை அளிப்பதற்கான ஆயத்தங்களை அதிவிரைவில் செய்து வைக்க வேண்டுமென்று பொதுமக்களுக்கு சேனைத் தலைவர்

கள் வாயிலாகவும் அமைச்சர்கள் வாயிலாகவும் பரதன் ஆக்ஞாபித்தான். நகரவாசிகளனைவரும் ஏகோபித்து உற்சாகத்துடன் ஒன்று கூடினர். ராஜவீதியை அவர்கள் அற்புதமாக அலங்கரித்தனர். வீதியின் இருமருங்கிலும் மக்கள் கும்பல் கும்பலாய்க் குழுமியிருந்தனர். அவர்களுடைய முகவிலாசங்களில் ஆனந்தம் தாண்டவமாடியது. வந்து கொண்டிருந்த புஷ்பக விமானம் வானவெளியில் காட்சி கொடுத்தது. அதைப் பார்த்ததும் பரதன் இராமனுடைய பாதுகைகள் இரண்டையும் தூக்கித் தன் தலையின்மீது வைத்துக்கொண்டு அடக்கமும் ஒடுக்கமும் நிறைந்த மரியாதையோடு நின்றான். விமானம் இறங்கித் தரையைத் தொட்டது. தம்பி பரதன் தமையன் இராமனுடைய திருவடிகளில் பாதுகைகளை அமைத்து வைத்தான். நாட்டுக்குரிய நல்ல வேந்தனிடம் ராஜ்யத்தைத் திருப்பி ஒப்படைத்ததற்கு அறிகுறியாக அமைந்திருந்தது அச்செயல். அதைத் தொடர்ந்து சகோதரர்கள் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிக் கொண்டனர். பரதனும் சத்துருக்கனனும் பக்திக்கு அறிகுறியாகச் சீதாதேவியின் பாதங்களைத் தொட்டு வணங்கினர். சுக்ரீவனும் விபீஷணனும் புதியவர்களாய் வாய்க்கப்பெற்ற சகோதரர்கள் என அறிமுகப்படுத்தப்பட்டனர். விமானத்தினின்று கீழே இறங்கி வந்த இராமன் தாய்மார்கள் மூவருக்கும் பாதங்களைத் தொட்டு தன்னுடைய வந்தன வழிபாடுகளைச் செலுத்தினன். அடுத்தபடியாக அதே விதத்தில் சீதையும் இலக்ஷ்மணனும் தாய்மார்களுக்குத் தங்களுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

அயோத்தியை நோக்கி ஊர்வலம் புறப்பட்டது. ஆனந்தத்தில் மூழ்கியிருந்த அயோத்தி வாசிகள் இன்பக் கடலில் நீந்திக் கொண்டிருந்தனர். பதினன்கு ஆண்டுகளுக்கு முன்பு

இந்த அயோத்தி வாசிகளிடத்திருந்து இராமன் பலாத்கார மாகப் பிரிந்து போனான். அன்றைக்கு அந்தச் சூழ்நிலை துன்பக்கடலாகக் காட்சிக் கொடுத்தது. இன்றைக்கோ அது இன்பக்கடலாக மாறியிருக்கிறது. இரண்டுவிதமான கடல்களையும் சீர்தூக்கிப் பார்ப்பதற்கு அன்றுமுதல் இன்று வரையில் இவ்வையக வாழ்வில் ஈடுபட்டிருந்தவர்கள் பாக்கியவான்களும் பாக்கியவதிகளும் ஆவார்கள். இடைக் காலத்தில் இராமன் அமானுஷ்யகரமான செயற்கரிய செயல் களைச் செய்து சாதித்தவனானான். சென்றவிடங்களில் எல் லாம் அவன் தர்ம சம்ஸ்தாபனம் பண்ணினான். ஊரார் விருப்பத்திற்கிணங்கி அவன் வெறுமனே அயோத்யாபுரி யில் வாழ்ந்திருந்தால் உலக நன்மைக்காக வாய்த்த இந்த அரிய பெரிய செயல்கள் நிகழ்ந்திருக்கமாட்டா. மேனி தாங்கி அவன் மண்ணுலகுக்கு வந்திருந்ததும் பொருளற்ற தாய்ப் போயிருந்திருக்கும். தியாக மூர்த்திகளே பரந்துள்ள பாருலகுக்கு நலன்கள் பல வழங்குவதற்கு வல்லவர்களா கிறார்கள் என்பதற்கு அயோத்தி ராமன் நல்ல எடுத்துக் காட்டு ஆகிறான்.

இப்போது இராமனோடு கூடி அரண்மனைக்குள் புகுந் திருந்த பரதன் தன்னுடைய தாய்மார்கள் மூவர் முன்னிலை யிலும் மூத்தவனிடம் சமர்ப்பித்ததாவது: "அண்ணா, தம்மு டைய ஆணைக்கு அடிபணிந்து தம்முடைய பிரதிநிதியாக ஆட்சிபுரிய நான் இசைந்தேன். தாம் நலனுற்று அயோத் திக்குத் திரும்பி வருவீர்கள் என்னும் எண்ணமே என்னை இந்தப் பதினான்கு வருஷகாலம் தாக்குப் பிடித்திருக்கச் செய்தது. தம்மை அயோத்தி மன்னனாக மறுபடியும் காண் கின்ற நான் பாக்கியவானாகின்றேன். தயைகூர்ந்து பொக் கிஷ சாலையையும், சேனையையும் அரண்மனையையும் பரி

சீலனே செய்து பாருங்கள். பொக்கிஷச் சாலையில் திரவியம் பத்து மடங்கு அதிகரித்திருக்கிறது. தம்முடைய பிரஜை களனைவரும் நன்கு பாதுகாக்கப்பட்டவர்களாக இருந்து வருகிறார்கள்.'' உலக மக்கள் சாம்ராஜ்யம் ஒன்றைப் பெறு வதில் எவ்வளவு மகிழ்வுற்று இருப்பார்களோ, அவ்வளவு சாம்ராஜ்யத்தை அதன் அதிபதியான அண்ணனிடம் ஒப் படைப்பதில் மகிழ்வுற்றிருந்தான் பரதன்.

இனி, இராமனுடைய பாங்கை ஆராய்ந்து பார்ப்போம். கிஷ்கிந்தாபுரியையும் லங்காபுரியையும் பொருந்தாத மன்னர் களிடமிருந்து அவன் பிரித்தெடுத்தான். ஆனால் அந்த ராஜ்யங் களின் செல்வத்தில் அவன் சிறிதேனும் கருத்துச் செலுத்திய வனல்லன். அந்நாடு நகரங்களைத் தகுதி வாய்ந்த தரணி வேந் தர்களிடம் அவன் ஒப்படைத்தான். சென்றவிடங்களில் எல் லாம் பாராளும் வேந்தர்களைப் படைக்கும் மூர்த்தியாக அவன் இலங்கினான். லங்காபுரியில் குவிந்து கிடந்த அளப்பரிய செல்வத்தில் ஒரு சிறு பகுதியை அவன் தனக்குரியதாகச் செய்திருப்பானாகில் அதில் இழுக்கு ஏதுமில்லை. ஆனால் விபீஷணனிடமிருந்து ஒரு விருந்து உண்பதையும் கூட அவன் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கு மாறாக அயோத்தி யில் தன்னுடைய பட்டாபிஷேகத்தின் பொழுது சுக்ரீவனுக் கும், விபீஷணனுக்கும் அவன் எடுத்து வழங்கிய ஆடை ஆபரணங்கள் ராஜஸ்ரீதியாயிருந்தன. அந்த மன்னர்கள் இரு வருக்குமட்டுமல்ல, அவர்களுடன் வந்திருந்த சிப்பந்திகளனை வருக்கும் அதே ராஜஸ்ரீதியில் அவன் பொருளை எடுத்துப் பகிர்ந்து கொடுத்தான்.

இராமனுடைய பட்டாபிஷேகத்திற்குத் தேவையா யிருந்த பொருள்கள் அதிவிரைவில் சேகரிக்கப்பட்டன. புண்ணிய ஸ்தலங்களினின்று தீர்த்தங்கள் கொண்டுவரப் பட்டன. குறிப்பிட்ட நல்ல நாளிலே, நல்ல நேரத்திலே

இராமனும் சீதையும் ராஜாங்க முறையில் ஆடை ஆபரணங்கள் அணிவித்து இரத்தினங்கள் இழைக்கப்பட்டிருந்த சிம்மாசனத்தின் மீது அமர்த்தப்பெற்றனர். புனிதம் ஆக்கப்பட்ட புண்ணிய தீர்த்தங்களை வசிஷ்டர் அவர்கள் மீது தெளித்தார். சூரிய வமிசத்திற்குரிய இரத்தினங்கள் இழைக்கப்பெற்ற முடியானது இராமனுடைய சிரசின் மீது வைக்கப்பட்டது. அற்புதம் வாய்ந்த இந்த மகுடாபிஷேகத்தைக் காண மண்ணுலகப் பெருமக்கள் மட்டுமல்லர், விண்ணுலகத்தவர்களும் வந்து கூடினர். ரிஷிகள் சுவஸ்தி வசனம் ஓதினார்கள். இராமன் அயோத்திக்கு அரசனானதை முன்னிட்டு உலக மக்கள் அனைவரும் இன்புற்றிருந்தனர்.

ராம ராஜ்யம் என்பது முடியரசு, குடியரசு ஆகிய இரண்டும் நன்கு இணைக்கப்பெற்றதாம். இராமன் அதை ஆண்டு வந்ததால் அது முடியரசு என இயம்பப்பெற்றது. தர்மத்தின் சொரூபமாக இராமன் இலங்கினான். தந்தையின் பாங்கில் இருந்துகொண்டு குடிமக்களை அவன் பேணிவந்தான். தன் ஆட்சியின் கீழிருந்த குடி மக்கள் அனைவருடைய நலனில் அவன் ஊக்கத்தோடு கருத்தைச் செலுத்தி வந்தான். தனித்தனியாக வந்த மக்களும், கூட்டம் கூட்டமாக வந்தவர்களும், எப்பொழுது வேண்டுமானாலும் இடைஞ்சல் ஏதுமின்றித் தங்கள் மன்னனை அணுக எளிதில் இயன்றது. அம்மக்கள் எடுத்துரைத்த குறைகளுக்கும், ஏனைய விஷயங்களுக்கும் இராமன் பொறுமையுடன் செவிசாய்த்தான். அன்னவர்களுடைய குறைகளை அவன் அப்போதைக்கப்போது அகற்றிவந்தான். அவனுடைய ஆட்சி முறையைக் குடியரசு எனக்கூறுதற்கு ஏற்ற காரணம் இருந்தது. எல்லாப் படித்தரங்களிலுமிருந்த மக்கள் எல்லாருடைய பிரதிநிதிகளும் ராஜசபையில் பொருத்தமான இடம்பெற்றிருந்தனர். பொதுமக்களுடைய அபிப்பிராயங்கள் ஆழ்ந்து

அலசி ஆராயப்பட்டன. அவைகளுள் நலன் தருபவைகள் ஈசனுடைய ஆதேசம் 'என உவகையுடன் எடுத்துக்கொள்ளப்பட்டன. ஆரோக்கியம் நிறைந்த உடல் எந்த விதத்திலும் மனிதனுக்கு இடைஞ்சல் பண்ணுவதில்லை. அதேவிதத்தில் ராமராஜ்யம் இனிது நடைபெற்று வந்ததனால் அதை ஓர் இடைஞ்சல் எனவோ முட்டுக்கட்டை எனவோ யாரும் கருதவில்லை. மக்கள் அனைவருடைய வாழ்வும் அமைதியாகவும் இன்பகரமானதாகவும் பேருக்கத்துடனும் நிகழ்ந்து வருவதாயிற்று.

இராமன் நடத்திவந்த இராமராஜ்யம் உலக மக்களுக்கு யாண்டும் முன் மாதிரியாக இலங்கிற்று. மக்கள் கடவுள் பக்தி படைத்தவர்களாக இருந்தனர். எங்கும் நீதிநெறி இலங்கிற்று. மக்கள் நேரான வழியில் ஆழ்ந்து உழைத்தனர். சமுதாயத்துக்கு வீண் சுமையாக யாரும் இருக்கவில்லை. நிறை செல்வமும் சாந்தமும் எங்கும் நிலவின. மக்கள் எல்லாரும் இன்புற்றும் திருப்தியடைந்தும் இருந்தனர். நோயற்ற வாழ்வே எங்கும் தென்பட்டது: மிகைபட்டும் குறைபட்டும் மழை பெய்யவில்லை. அது யாண்டும் அளந்தெடுத்தே மக்கள் நலனுக்காகப் பெய்து வந்தது. பஞ்சமும் பீடையும் மக்களை வாட்டியது கிடையாது. திருட்டும், புரட்டும், கொலையும் ராமராஜ்யத்தில் நிகழ்ந்தது கிடையாது. அச்சமும் ஆவலும் ஆங்கு இடம் பெறவில்லை. மழையும் வெயிலும் முறையாக அமைந்திருந்தன. நிலமகள் வேண்டியவாறு மக்களுக்கு விளைவை வழங்கி வந்தாள் பசுக்கள் பாலைப் போதிய அளவுக்குக் கொடுத்துவந்தன மண்ணுலகு விண்ணுலகு போன்று காட்சி கொடுத்தது. இலட்சுமிதேவி தானே நிலவுலகில் சீதாதேவியாக இராமன் அருகில் அமர்ந்திருந்ததே இவை யாவுக்கும் காரணமாயிற்று.

உத்தர காண்டம்

உத்தர காண்டம் என்னும் இராமாயணத்தின் கடைசிப் பகுதி வால்மீகி மஹரிஷியினால் இயற்றப்பெற்றது அன்று. யார் யாரோ கூடிக் கதம்பம் போன்று அதை அமைத்து வைத்திருக்கின்றனர். தெய்விக மகிமை வாய்க்கப்பெறாத பகுதிகள் பல இதில் இடம் பெற்று இருக்கின்றன. அவை யாவும் வாசிப்பவர்கள் உள்ளத்தில் பக்தியை ஊட்டுபவை ஆகமாட்டா. மாற்ற முடியாத வினைப்பயன், படைத்தவனது தீர்மானத்தின் வல்லமை, ஜோதிடம், ஜாதி வேற்றுமை, புரோகித தந்திரம், நரபலி போன்ற பொருத்தமற்ற கோட்பாடுகளும் கொள்கைகளும் இதில் புதைந்து கிடக்கின்றன. இத்தகைய பொருளற்றவைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு இராமாயணத்தின் தூய வரலாற்றை மட்டும் ஈண்டு எடுத்து இயம்புகிறோம்.

இனி, பக்தி சிரத்தையோடு இராமாயணம் வாசிப்பவர்களில் பலர் உலகப்பற்றில் உழல்பவர்களாக இருக்கின்றனர். அத்தகையவர்கள் உத்தர காண்டத்தை வாசிக்கவோ கேட்கவோ விரும்புவதில்லை. இராமனுக்கும் சீதைக்கும் அயோத்தியில் வைத்துப் பட்டாபிஷேகம் பண்ணி வைப்பதோடு இந்த இதிகாசப் படிப்பை அவர்கள் நிறுத்திவிடுகின்றனர். மற்று, உண்மையை அறிந்துகொள்ளுதலில் மக்கள் ஊக்கம் மிகப் படைத்திருத்தல் வேண்டும். மண்ணுலகை வாழ்க்கைக்கு எங்ஙனம் துவக்கம் இருக்கிறதோ அங்ஙனம் அதற்கு ஒரு முடிவும் உண்டு. இவ்வையக வாழ்க்கையைக் கவர்ச்சிகரமாகத் துவக்குவது மட்டும் போதாது. வீரியம் நிறைந்துள்ள பாங்கில் அதை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதும் அவசியமாகிறது. துவக்கத்தை விட முடிவே மிக முக்கியமானது. இம்மண்ணுலகினுள் வந்துள்ள மேன்மை

தங்கிய மூர்த்திகள் தங்களுடைய நிலவுலக வாழ்க்கையைக் கம்பீரம் வாய்ந்ததாகவும் வீரியம் படைத்ததாகவும் அமைத்து முடிவுக்குக் கொண்டு வந்திருக்கின்றனர். அந்த அரிய கோட்பாட்டை இக்காண்டம் இனிது எடுத்து விளக்குகிறது.

நல்ல விளைவு எடுப்பதற்குப் பொருத்தமான நிலவளம் அமைந்திருத்தல் வேண்டும். அத்தகைய நிலவளத்துக்கு நிகரானது மாண்புமிக வாய்க்கப்பெற்றுள்ள அரசாங்கம். நல்ல விளைவுக்கு நிகரானது ஒழுக்கம் நிறைந்த சமுதாய அமைப்பு. இவை இரண்டும் இனிது ஒன்று கூடுமானல் மேலாம் கருத்துக்களும் தலை சிறந்த நாகரிகமும் உருவெடுப்பது திண்ணம். ராம ராஜ்யத்தில் இந்தச் சிறப்புகள் யாவும் நன்கு இடம் பெற்றிருந்தன. இராமனுடைய ஆட்சி முறையில் மங்களகரமான அமைதியும் சௌபாக்கியமும் நிறைந்திருந்தன. இம்மண்ணுலக வாழ்வு விண்ணுலக வாழ்வுக்கும் மிக்கதாக இலங்கியது. இன்புற்றிருப்பது ஒன்றே விண்ணுலக வாழ்வின் போக்காகும். ஆனல் இராமனுடைய மண்ணுலக ஆட்சி முறையிலோ மானுட வாழ்வின் பாங்குகள் அனைத்தும் துருவி ஆராயப்பட்டன. காரண காரியமாக வருகிற கரும நியதியின் ஒழுங்குப்பாடு, அறநெறி பிறழாத ஆன்றோர்களுடைய வாழ்க்கை முறை, அறநெறியினின்று விலகிய அரக்கர்களுடைய பாங்கு, அசாதாரணமான யோக சித்திகளையும் மந்த்ர சக்திகளையும் அடையப்பெறுதல், மந்த்ரசக்தி வாய்க்கப்பெற்ற அஸ்திர சஸ்திரங்களைப் பெறுதல், அந்த ஆயுதங்களை முறையாகக் கையாளுதல், அவைகளை முறைதவறிக் கையாளுதல்—இவைபோன்ற அரியபெரிய விஷயங்களை ஸ்ரீ ராமனும் அவனுடைய சாந்நித்தியத்துக்கு எழுந்தருளியிருந்த முனிபுங்கவர்களும் ஆழ்ந்து

ஆராய்ச்சி பண்ணினார்கள். இத்தகைய மேலாம் பாங்கி லேயே அன்னவர்கள் காலத்தைப் பயன்படுத்தி வந்தார்கள்.

வாழ்க்கையைப் பற்றிய மற்றொரு கோட்பாடு உண்டு. பிரம்மச்சரிய விரதத்துக்கும் புத்திரப் பாக்கியத்துக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. ஆடவன் ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு பிரம்மச்சரிய விரதத்தில் நெடுங் காலம் உறுதிபெற்று இருக்கின்றானோ அவ்வளவுக்கவ்வளவு வீரியம் வாய்ந்த மகப்பேறு பெற அவன் வல்லவனாகிறான். விந்துதாரணை என இயம்பப்பெறுகின்ற விரதத்தை அவன் நன்கு காத்தல் வேண்டும். அதற்கேற்பச் சந்தானத்தின் தகைமை மேலோங்குகிறது. ஆடவன் போன்று பெண்பால் ஒருத்தியும் பிரம்மச்சரிய விரதம் காக்கக் கடமைப்பட்டிருக் கிறாள். இந்த மேலாம் விரதத்தில் நிலைத்திருப்பதற்கு ஏற்ப அவளுடைய கருவின் தரம் மேலோங்குகிறது. இது புத்திர சந்தானத்தைப்பற்றிய கோட்பாடு. இராமனும் சீதையும் மேலாம் மகப்பேறுக்குரிய இந்த நிபந்தனையை நன்கு நிறை வேற்றியிருந்தனர். மணம் முடித்துக்கொண்டபிறகு அவர் கள் இருவரும் அயோத்தியிலேயே பன்னிரண்டு வருஷம் பிரம்மச்சரிய ஆஸ்ரம நியதிகளைக் கடைப்பிடித்து இருந்த னர். பிறகு வனவாசத்தில் தவசிகளாயிருந்தபொழுது பதி னான்கு வருஷகாலம் பிரம்மச்சரிய விரதத்தை அனுஷ்டித் திருந்தனர். ஆக விவாகம் பண்ணிக்கொண்ட பிறகு அவர் கள் இருவரும் இருபத்தாறு ஆண்டுகள் விரதங்களுள் மேலான விரதமாகிய பிரம்மச்சரிய விரதத்தை அனுஷ்டித்து வந்தனர். வனவாசத்தை முடித்துக்கொண்டு அயோத்திக்குத் திரும்பி வந்த பிறகு இராமனும் சீதையும் பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டனர். அதன் பிறகே அவர்களிருவரும் இல்வாழ்க்கையில் ஈடுபட்டனர். அதன் விளைவாக சீதா தேவி கருத்தரிக்கலாயினள்.

கர்ப்பிணியாயிருக்கின்ற மாது ஒருத்திக்கு என்னென்ன ஆசைகள் உள்ளத்தில் உருவெடுக்கின்றனவோ அந்தந்த ஆசைகளையெல்லாம் நிறைவேற்றிவைப்பது அவசியமாகிறது. வயிறு வாய்த்துள்ள வனிதை ஒருத்தியின் ஆசை ஏதேனும் நிறைவேறப்பெறாது போமாயின் அதன் விளைவாக அவளுக்கு வாய்க்கிற மகப்பேறினிடத்து ஏதேனும் ஒரு குறைவு வந்து குறுக்கிடும். பிறக்கின்ற குழந்தையும் தரத்தில் கீழ்மை அடைந்துவிடும். இக்கோட்பாட்டை இராமன் நன்கு அறிந்திருந்தான். ஆதலால் சீதையின் உள்ளத்திலே நிறைவேறப்பெறாத ஆசை ஏதேனும் தங்கிக்கொண்டிருக்கிறதா என்று அவன் கேட்டான். அக்கேள்விக்கேற்ற விடையையும் வைதேகி எடுத்துச் சொன்னாள். கங்கைக் கரையோரம் வாழ்ந்து வந்த தபோதனர்களைத் தரிசித்து அவர்களுடைய ஆசியைப் பெறுவதில் தான் ஆசை மிகக்கொண்டிருந்ததாகஅவள் விடை விடுத்தாள். அவள் பூண்டிருந்த ஆசை பாராட்டத்தக்கது என்றும் அதை அதிவிரைவில் நிறைவேற்றிவைப்பதாகவும் இராமன் உறுதிகூறினான்.

இராமன் யாண்டும் ஓர் உத்தமனாக விளங்கினான். அவன் புத்ரோத்தமன்; நரோத்தமன்; ரிஷிபுங்கவர்களிடம் பக்தி பூண்டிருந்ததில் உத்தமன்; தீமையைத் தகர்த்துத் தள்ளுதலில் உத்தமன்; தலைவிக்கேற்ற தலைவனாக இருப்பதில் உத்தமன்; சத்துருவைச் சமாளிப்பதில் உத்தமன். இப்பொழுது அயோத்திக்குத் திரும்பிவந்து ராஜ்ய பரிபாலனம் பண்ணுவதில் உத்தமனாகத் திகழ்ந்தான். ராஜோத்தமன் என்னும் கோட்பாட்டுக்கு இணங்க ராஜ்ய பரிபாலனத்தில் சான்றோர்களுடைய அபிப்பிராயத்தையும், பொதுமக்களுடைய அபிப்பிராயத்தையும், அலசி ஆராய்ந்த பிறகே நாட்டின் நலனுக்குரிய முக்கியமான காரியங்களில் அவன் ஈடுபடு

வான். அரசாங்கத்தின் நடைமுறையைக் குறித்து மக்களுக் கிடையிலே நிலவுகின்ற அபிப்பிராயங்களையெல்லாம் உள்ள படி தனக்கு எடுத்துத் தெரிவிக்கவேண்டுமென்று வேவு காரனிடம் அவன் உத்தரவு பிறப்பித்திருந்தான். பொது மக்கள் அபிப்பிராயம் பிரதிகூலமானதாகவிருந்தாலும் அவை களை உள்ளபடி தனக்கு எடுத்துத் தெரிவிக்க வேண்டுமென் பது அவனுடைய ஆணை. ஒற்றர்களும் குடிமக்களின் கருத் துக்களை உள்ளபடியே இராமனுக்குத் தெரிவித்து வந்தார் கள். இராமனுடைய ஆட்சியிலே செயல்கள் அனைத்தும் பாராட்டத் தக்கவைகளாகவே இருந்து வந்தன. ஆனால் ஒரே ஒரு செயலில் மட்டும் ராஜா ராமன் பிரஜைகளுக்கு முன்மாதிரியாக அமையவில்லை என்பது பலர் கருத்து. சீதா பிராட்டியை இராவணன் பலவந்தமாக அபகரித்துத் தன் மடியின்மீது வைத்துத் தூக்கிக்கொண்டுபோனான். அங்ஙனம் தீட்டுப்பட்ட சீதையை அவன் மீட்டெடுத்துத் தனக்கு உரிய வளாகவைத்திருப்பது பொருந்தாத செயல். குடிமக்களுக்கு அது முன்மாதிரியான செயல் ஆகாது. கணவனுக்கும் மனை விக்குமிடையே கருத்துவேற்றுமை இடையிடையே வருகி றது. வேற்றான் வீட்டில் சில மாதங்கள் சீதை தங்கியிருந் ததைவேந்தனாகிய இராமனே பொருள்படுத்தாது அவளை மீட்டெடுத்துக்கொண்டானே! அரசன் அந்தப்போக்கில் நடந்துகொண்டிருக்கையில் பொது மக்களாகிய நாம் ஏன் நமக்கிடையே நிகழும் சிறு சிறு குறைபாடுகளை மிகைப் படுத்தவேண்டும் என்னும் கேள்வியை மனைவிமார்கள் கிளப்புகின்றனர். வேந்தன் எப்படியோ, வையகமும் அப்ப டியே என்னும் கோட்பாட்டுக்கு இணங்க இராமனுடைய செயல் மக்களுக்கிடையில் தீமையை வளர்ப்பதற்கு இடம் தருகிறது. ஆக, இராமன் புரிந்த இச்செயலைப் பொதுமக்கள் எல்லாரும் ஏகோபித்து ஆமோதிக்கவில்லை.

சீதாபதியாகிய ராமபிரான் அந்தக் கேள்வியின்கண் கருத்தை மிகச் செலுத்தினன். சீதை குற்றமற்றவள் என்பதை இராமன் நன்கு அறிந்திருந்தான். பொதுமக்கள் எல்லாரும் அவளுடைய பாங்கை அறிந்துகொள்ளுதல் பொருட்டு லங்காபுரியில் அவளைத் தீக்குளிக்கச் செய்தான். ஆனால் அச்செயலை அயோத்தியில் எடுத்து இயம்புதலில் பயன் ஒன்றுமில்லை. இயம்பினால் அதன்மூலம் நலன் ஏதும் வாராது. அது நிலைமையை மேலும் குழப்பத்தில் ஈடுபடுத்தும். கணவன் என்னும் முறையில் சீதை குற்றமற்றவள் என்பதை இராமன் நன்கு அறிந்திருந்தான். ஆனால் அரசன் என்னும் முறையில் அவன் தன் கருத்தைக் குடிமக்களுக்கிடையில் திணிக்கலாகாது. கணவன் மனைவிக்குச் செய்ய வேண்டிய பாதுகாப்பு ஈண்டுப் பின்னணிக்குப் போகிறது. அரசன் குடிமக்களுக்கு முன்மாதிரியாயிருக்க வேண்டும் என்னும் பொறுப்பு முன்னணியில் வந்து நிற்கின்றது. தகைசான்ற மன்னனாயிருப்பது அவ்வளவு சுலபமானதன்று. மக்களின் பொது நலனுக்காக சீதையைப் பகிஷ்கரிக்க இராமன் தீர்மானித்தான்.

தம்பிமார்கள் மூவரையும் ரகுபதிராமன் தன்னிடம் வரவழைத்தான். தான் கொண்டிருந்த தௌர்பாக்கியமான தீர்மானத்தைத் தம்பிமார்களுக்குச் சுருக்கமாக எடுத்துச் சொன்னான்: "ஜானகி யாண்டும் தூயவள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் நம் குடிமக்கள் அதை அறிந்து கொள்ளவில்லை. கற்பிழந்த மனைவி ஒருத்தியை வைத்திருக்கும் வேந்தன் குடிமக்களுக்கு நல்ல வழிகாட்டி ஆகமாட்டான் என்பது மக்கள் என்மீது சாட்டும் குற்றமாகும். அவளுடைய தூய்மையை எடுத்து விளக்க நான் முயன்றால் அது குழப்பத்தை அதிகப்படுத்தும். சத்தியமே இறுதியில்

வெல்லும். அயோத்திக்கு அரசன் என்னும் பொறுப்பில் சீதையை நான் இப்பொழுது நாடு கடத்துகிறேன். அதன் வாயிலாக நாட்டுமக்களின் ஒழுக்கத்தை நிலைநிறுத்துகிறேன். இதைக் குறித்துத் தம்பிமார்களாகிய நீங்கள் விவாதிக்க வேண்டாம். என்னுடைய தீர்மானத்துக்கு உட்பட்டு நடந்துகொள்ளுங்கள்."

துடிதுடித்த உள்ளத்துடன் கண்ணீர் சொட்டிக்கொண்டு இளையவர்கள் மூவரும் மௌனம் சாதித்து மூத்தவனுடைய தீர்மானத்திற்குத் தலைவணங்கினர்.

இராமன் மேலும் மொழிவானாயினன்: "கங்காதீரத்தில் வாழ்ந்திருக்கும் ரிஷிகளைத் தரிசிக்க மைதிலி விரும்புகின்றாள். அன்னவர்களின் ஆசியைப் பெறுவது அவளுடைய குறிக்கோள். அந்த ஆசையை நிறைவேற்றி வைக்க நானும் இசைந்துள்ளேன். அதைச் சாக்காக வைத்துக்கொண்டு ஓ லக்ஷ்மணா, நாளைக்கு நீ அவளைக் கங்காநதியின் தென்கரைக்கு அழைத்துக்கொண்டு போ. பிறகு பொது மக்களின் நலனுக்காகவென்று நான் அவளைப் புறக்கணித்துவிட்டேன் என்று இயம்பிவிட்டுத் திரும்பிப்பார்க்காது அயோத்திக்கு வருவாயாக. விதி விட்டவழியில் அவள் நடந்துகொள்ளட்டும்."

உள்ளத்தை வெடிக்கவைக்கும் இந்த ஆணைக்கு இலக்ஷ்மணன் தலைவணங்கினான். துயரத்தில் மூழ்கிய தம்பிமார்கள் தமையன் முன்னிலையினின்று பின்வாங்கினார்கள்.

வனத்தில் வசித்து வந்த ரிஷிகளின் ஆஸ்ரமங்களுக்குச் சென்று வரும் செய்தியை இலக்ஷ்மணன் சீதாபிராட்டிக்குத் தெரிவித்தான். அச்செய்தியை அவள் மகிழ்வோடு ஏற்றுக்கொண்டாள். அக்கணமே அவள் புறப்படுவதற்கும் ஆயத்த

மானுள். தென்திசையை நோக்கிச் சாரதி சுமந்திரன் ரதத்தை விரைந்து ஓட்டிச் சென்ருன். ரிஷிபுங்கவர்களுடைய ஆசீர்வாதங்களைப் பெறும் விஷயத்தில் வைதேகி மகிழ்வு மிகப் பூண்டிருந்தாள். அதற்கு நேர்மாருக இலக்ஷ்மணன் தன் துயரத்தை ஏதோ ஒருபோக்கில் மறைத்து வைத்திருந்தான். அவனுடைய பாங்கைச் சீதாபிராட்டி கவனித்தாள். அவள் கேட்ட கேள்விகளுக்கு அவன் சரியாக விடை கொடுக்கவில்லை. படகு ஒன்றில் கங்கையைக் கடந்து அதன் தென்கரையிலிருந்த வால்மீகி மஹரிஷியின் ஆஸ்ரமத்திற்கு அருகில் போனுர்கள். கதறிப் பதறி அழுது கொண்டு இலக்ஷ்மணன் தெரிவித்ததாவது: "தாயே, தமது நாதன், என் தமையனுகிய இராமன் உயிருக்குயிராகத் தம்மை நேசிக்கிருர். ஆனுல் அயோத்யாபுரியைப் பொல்லாங்கினின்று காப்பாற்றுதல் பொருட்டு அயோத்தி மன்னன் என்னும் பொறுப்பில் அவர் தம்மைப் பகிஷ்கரிக்கிருர். இராவணனுல் தீண்டப்பட்ட தாம் அயோத்திக்கு அரசியாக இருக்கலாகாதாம்." இங்ஙனம் இயம்பிவிட்டுத் துயரத்தில் துய்த்துக் கிடந்த இலக்ஷ்மணன் அக்கணமே சீதையின் காட்சியினின்று மறைந்துபட்டுப் போனுன். இல்லையேல் சீதையின் துயரம் அவன் செயலைக் கெடுத்து விடும்.

2. இடி இடித்தாற்போன்று சீதை தரையில் வீழ்ந்தாள் அவள் மயங்கிப்போனுள். அம்மயக்கத்தினின்று தெளிவடையச் சிறிது நேரம் பிடித்தது. தெளிவடைந்தவள் தான் வனத்தினுள் தனியாகப் புறக்கணிக்கப்பட்டிருப்பதைக் கண்டாள். தன் நிலைமையைக் குறித்து அவள் கதறிப் பதறி அழுதாள். கங்கையில் மூழ்கி ஒழிந்து போவதைப் பற்றிய எண்ணம் அவள் மனதில் பளீரென்று பாய்ந்தது.

ஆனால் அதற்குத் தடையாக மற்றோர் எண்ணம் அவள் உள்ளத்தில் உதித்தது. இராமன் தன்னுடைய சொரு பத்தை சீதையின் கர்ப்பத்தில் வைத்திருக்கிறான். அச்சிசு வைக் காக்கும் பொறுப்பு அவளுடையது. எனவே தற் கொலை செய்துகொள்ளும் சுதந்திரம் அவளுக்கு இல்லை. பரிதாபகரமான அவளுடைய அழுகை வனமெங்கும் எதிரொலித்தது.

காரணம் இன்னதென்று அறியாதவராக வால்மீகி மஹரிஷி சீதை வருந்திக்கொண்டிருந்த திசையை நோக்கி நடந்து சென்றார். தூரத்தினின்று வந்த அழுகை இலேசாக அவருடைய காதுக்கு எட்டின. நின்றபடி அவர் சிறிது நேரம் தியானத்தில் மூழ்கியிருந்தார். நிகழ்ந்தனயாவும் அவருடைய தூய அறிவுக்கு எட்டியது. துயரத்தில் மூழ்கிக் கிடந்த சீதையின் அருகில் சென்றார்.

வால்மீகி மஹரிஷி: செல்வி சீதா, துயருறுதே. நான் வால்மீகி மஹரிஷி. நம் ஆஸ்ரமத்துக்கு அருகில் நீ இருக் கிறாய். ஈண்டுப் புதிய பாரமார்த்திகப் பெருவாழ்வு உனக் குத் துவங்குகிறது.

சீதை: தர்மத்தைப் பேணுதல் என்னும் பெயரை முன் வைத்துக்கொண்டு குற்றமற்ற பெண்ணொருத்தியை முன் எச்சரிக்கையின்றி அம்பலத்தில் விட்டுவிடுவது தர்மமாகுமா?

மஹரிஷி: தர்மத்தின் மேலாம் பாங்குகளை அறிந்து கொள்வது மிகக் கடினம். இராமன் தர்ம கோப்தா. தர்மத் தினின்று அவன் ஒருபொழுதும் பிசகியவன் ஆகான்.

சீதை: தேவே, தங்களைக் காணுது இருந்திருந்தால் நான் அழிந்துபட்டுப் போயிருந்திருப்பேன்.

மஹரிஷி: நல்லார்க்குத் தெய்வம் துணைபுரிகிறது.

சீதை: ஆனால் நான் கர்ப்பிணியாயிருக்கிறேன். அதற்கேற்ற சூழ்நிலை எனக்குத் தேவை.

மஹரிஷி: அயோத்தி வாசம் இப்பொழுது உனக்கு உதவாது. ஆஸ்ரம வாழ்வு ஒன்றே இத்தருணத்தில் உனக்குப் பொருத்தமான சூழ்நிலையாகும். அயோத்தியில் அரண்மனை வாசம் உன் உள்ளத்தில் உதிக்கும் எண்ணங்களையெல்லாம் உலகுக்குரியவைகளாகக் கீழ்மையில் உந்தித் தள்ளும். உன் கர்ப்பத்தில் நாட்டப்பெற்றிருக்கும் சிசு அந்த எண்ணங்களுக்கேற்றவாறு கீழ்மை அடையும். மற்று, ஈண்டு ஆஸ்ரம வாசம் புரிகையில் உன் உள்ளத்தில் உதிக்கும் தெய்விக எண்ணங்களெல்லாம் உன் கர்ப்பத்தில் உருவெடுத்து வரும் சிசுவுக்கேற்ற தெய்விகப் பெற்றியை அதனிடத்து ஊட்டிவரும். சூழ்நிலைகள் யாவும் சங்கேதமாய்க் கூடி இந்தப் புண்ணிய ஸ்தலத்துக்கு உன்னைக் கொண்டு வந்து சேர்த்திருக்கின்றன. ஆகையினால் நீ பாக்கியவதி ஆகின்றாய்.

"மற்றும் ஒரு விஷயம். பெண்பாலர்க்குரிய விடுதி ஒன்று நம் ஆஸ்ரமத்தோடு இணைக்கப்பெற்றிருக்கிறது. அதில் வசித்து வரும் வனிதைகளோடு கூடி நீ தவத்தில் ஈடுபடுவாயாக. எவ்வளவுக்கெவ்வளவு நீ ஆழ்ந்து இங்குத் தவத்தில் ஈடுபடுகின்றாயோ அவ்வளவுக்கவ்வளவு நீ நலனை அடைவாய். உன் கர்ப்பத்திலிருக்கும் சிசுவும் நலனை அடையும். நீ இன்னார் என்பது இங்கு யாருக்குமே தெரியாதிருக்கட்டும். உன் பெயர் மறைந்திருக்கட்டும். வால்மீகி மஹரிஷி ஆஸ்ரம வாசிகளில் ஒருத்தியாக நீ இருந்து வருவாயாக."

இலக்ஷ்மணன் அயோத்திக்குத் திரும்புகையில் அவனும் சாரதி சுமந்திரனும் துக்க சாகரத்தில் ஆழ்த்தப்பட்டவர்

கள் ஆயினர். இலக்ஷ்மணன் அப்பொழுது முறையிட்ட தாவது:

"தந்தை தசரதர் பெண்பால் ஒருத்திக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதற்காக இராமன் பதினன்கு வருஷ காலம் கடினமான வனவாசத்தை மேற்கொண்டு அதன் விளைவாக எத்தனையோ இன்னல்களுக்கு ஆளானன். சீதை சிறையெடுத்துச் செல்லப்பட்டது, பிறகு அவள் தீக்குளித்தலுக்கு இரையானது ஆகியவைகள் அந்த வனவாசத்தின் விளைவுகள் ஆயின். அயோத்தியில் வசித்து வரும் பொது மக்களுக்கு சீதை தீக்குளித்துத் தன் தூய்மையை வெளிப் படுத்திய விபரம் தெரியாது. அறிவிலிகளாகிய அவர்கள் கிளப்பிய அவதூறுக்கு இலக்கு ஆகிய இராமன் அயோத்யா புரிக்கு அரசன் என்னும் பொறுப்பை முன்னிட்டுச் சீதா பிராட்டியாரைப் பகிஷ்கரித்திருக்கிறன். பொருந்தாத இக் கொடூரச் செயலுக்கு நாம் எப்படி உடந்தையாவோம்?"

துயரத்தில் மூழ்கியிருந்த சுமந்திரன் சொன்னதாவது: "இராமன் எப்பொழுதாவது நெறி பிசகியது கிடையாது. அவன் புத்ரோத்தமன் என்பதை நன்கு விளக்கியிருக்கிறன். வனவாசம் பண்ணியபொழுது நரோத்தமன் என்பதை நிரூபித்திருக்கிறன். சிறைகிடந்த சீதாபிராட்டி பெண்பாலர்க் கிடையில் உத்தமி என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறள். அத்தகைய கோதில்லாக் குலமகளை இராமன் விலக்கி வைத்திருக்கிறன். கொற்றவன் குடிமக்களுக்கு முன்மாதிரி யாயிருக்கவேண்டும் என்னும் நோக்கத்துடன் இச்செயலில் இறங்கியிருக்கிறன். இதன் விளைவு என்ன ஆகும் என்ப தைப் பொறுத்திருந்து பார்ப்போம்."

சியவன மஹரிஷியும் மற்றும் பல முனிவர்களும் இராம னுடைய சந்நிதானத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அப்படி

வந்தவர்கள் தங்களுக்கு ஏற்பட்டிருந்த குறை ஒன்றை எடுத்துக் கூறி முறையிட்டார்கள். யமுனை நதிக்கரையில் யாருமே அமைதியுடன் வாழ்ந்திருக்க முடியவில்லை. ஆங்கு இலவணன் என்னும் கொடிய அரக்கன் இருந்தான். அன்னவன் மக்களைக் கும்பல் கும்பலாகக் கொன்று துடைத்துத் தள்ளினன். அந்த அரக்கனுக்குத் தந்தை மது என்பவன் ஆவான். அந்த மதுவுக்குச் சிவனர் சூலாயுதம் ஒன்றைக் கொடுத்தார். அந்தச் சூலாயுதம் பின் மகன் கைக்கு வந்தது. அதைக் கையில் ஏந்தியிருந்த இலவணாசுரனை யாருமே தோற்கடிக்க முடியாது. அவன் படைத்திருந்த பேராற்றலுக்கு அதுவே காரணமாயிருந்தது. அந்த அரக்கன் உயிரோடு இருக்கும் வரையில் மதுபுரியை முன்னணிக்குக் கொண்டுவர யாருக்குமே இயலாதிருந்தது. இப்பாங்கில் இராமனிடம் சியவன மஹரிஷியைப் பின் தொடர்ந்து வந்த முனிவர்கள் முறையிட்டார்கள்.

ராமபிரான் தம்பி சத்ருக்கனனிடம் பொறுப்பு ஒன்றை ஒப்படைத்தார். மதுபுரிக்குச் சென்று இலவணாசுரனைக் கொல்லுதல் வேண்டும். அதன் பிறகு மதுபுரியில் நீதி வழுவாத ஆட்சிமுறை ஒன்றை நிறுவுதல் வேண்டும். அதற்காக அவன் அயோத்தியில் வைத்து மதுபுரிமன்னனக முடிசூட்டப் பெற்றான். பின்பு வல்லமை வாய்ந்த சேனை ஒன்றையும் குடியேறுதற்குத் தகுதியான மக்களையும் திரட்டிக்கொண்டு அவன் மதுபுரிக்குப் போனன்.

சேனையையும் குடியேறுதற்கு இருந்த மக்களையும் முன் கூட்டியே அனுப்பி வைத்துவிட்டுச் சத்ருக்கனன் சற்று நிதானமாகப் பயணம் பண்ணினன். அதிதியாக வழியிலே வால்மீகி ஆஸ்ரமத்திலே ஓர் இரவு தங்கியிருந்தான். அதே இரவில் சீதாபிராட்டி ஆங்கு இரட்டையர்களைப் பெற்றெடுத்

தாள். அச்சிசுக்களுக்கு வால்மீகி குசன், லவன் என்னும் பெயர் வைத்தார். ஆனால் இந்நிகழ்ச்சியை மஹரிஷி சத்ருக்கனனுக்குத் தெரிவிக்கவில்லை.

இலவணாசுரனைக் கொன்று தள்ளிவிட்டுச் சத்ருக்கனன் மதுபுரியில் வளம் நிறைந்த அரசாங்கத்தை அமைத்தான். பன்னிரண்டு வருஷங்களுக்குப் பிறகு ராமதரிசனத்திற்காகக் கொஞ்ச காலம் மதுபுரியினின்று வெளியேகியிருந்தான். அவன் அயோத்திக்குப் போய்க்கொண்டிருந்தபொழுது வால்மீகி ஆஸ்ரமத்தில் ஓர் இரவு தங்கியிருந்தான். அப்பொழுது சத்ருக்கனனும் அவனுடன் வந்தவர்களும் இனிய குரலிலே பாலர் இருவர் இராமாயணம் படனம் பண்ணியதைக் காதுகொடுத்துக் கேட்டார்கள். ஆனந்தத்தில் திளைத்தவர்களாகச் செவிக்கினிய அந்த அருள்விருந்தை அவர்கள் நெடுநேரம் கேட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் அப்படிப் பாடியவர்கள் யார் என்பது சத்ருக்கனனுக்குத் தெரிவிக்கப்படவில்லை. அதிதியாக வந்திருந்தவனும் அதைப் பற்றி விசாரிக்கவில்லை.

3. ஆட்சிமுறை ஒழுங்காகவும் ஆக்கம் நிறைந்ததாகவும் இருந்ததற்கு அறிகுறியாக அஸ்வமேத யக்ஞம் பண்ண வேண்டும் என்று இராமன் தீர்மானித்தான். ஆனால் சீதா பிராட்டியாரை ஒதுக்கிவைத்துவிட்டு இராமன் தனியாக இருந்துகொண்டு அந்த யாகத்தைச் செய்வது பொருந்தாது என்று புரோகிதர்கள் பகர்ந்தார்கள். பொதுமக்கள் அபிப்பிராயம் அவளுக்குப் பிரதிகூலமாயிருந்ததனால் அவளைத் திருப்பி அழைக்க முடியவில்லை. ஆதலால் அவளுடைய தங்கப் பதுமை ஒன்றை அவளுக்குப் பதிலாக இராமன் அமைத்துக்கொண்டான். அவன் ஏகபத்தினி விரதம் பூண்டிருந்ததனால் மறுவிவாகம் பண்ணிக்கொள்ள அவன் இசைய

வில்லை. ஆகவே சீதாபிராட்டி பதிவிரதத்தில் உச்சநிலை அடைந்திருந்தது போன்று இராமன் ஏகபத்தினி விரதத்தில் தலைசிறந்தவனுகத் திகழ்ந்தான். சூழ்நிலையை முன்னிட்டோ வற்புறுத்துதலை முன்னிட்டோ வேறு எக்காரணத்தை முன்னிட்டோ அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் காதலித்திருந்த பாங்கு சிறிதளவும் கலைக்கப்படவில்லை.

அஸ்வமேத யக்ஞத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் மிக விரிவடைந்திருந்தன. அதற்கு முதன்முதல் செய்யவேண்டிய சடங்கு ஆற்றலும், அங்க அமைப்பும் நன்கு வாய்க்கப் பெற்றிருந்த குதிரை ஒன்றைப் பலப்பல பிரதேசங்களில் யதேச்சையாகப் போகும்படி விட்டுவிடுவதாம். யாரேனும் அதற்குத் தடை பண்ணவோ பிடித்துக் கட்டிவைக்கவோ செய்யவில்லையென்றால் அந்த யாகத்துக்கு யாரும் ஆக்ஷேபம் கொண்டுவரவில்லை என்பது வெளிப்படையாகிறது. எனவே அச்செயலை அனைவருடைய ஆமோதிப்புக்கும் அறிகுறியாக வைத்துக்கொண்டு தீவிரமாக அதில் ஈடுபடலாம். ஈடுபடுகிற நல்லகாரியம் ஒன்றுக்கு அதில் சம்பந்தப்பட்டு உள்ளவர்களுடைய அனுமதி முற்றிலும் இன்றியமையாததாம். இந்த ஐதிகத்துக்கு இணங்க அயோத்யாபுரியிலிருந்த ராமராஜ்யமானது கன்னங்கரேலென்றிருந்த வீரியம் வாய்ந்த குதிரை ஒன்றை அவ்வட்டாரங்களில் உலாவுவதற்கு அனுப்பியது. இலக்ஷ்மணன் அதைப் பின்தொடர்ந்து போனுன். அக்கம் பக்கத்திலிருந்த அரசர்கள் அக்குதிரையின் வருகையை எங்ஙனம் ஏற்றுக்கொண்டார்கள் அல்லது தடை செய்தார்கள் என்பதைக் கவனிப்பது அவனுடைய கடமையாயிற்று. அயோத்யாபுரியின் ஆட்சிமுறைக்கு இடைஞ்சல் போன்று தென்பட்ட ஒரே ஒரு நிகழ்ச்சி நேர்வதாயிற்று. வால்மீகி மஹரிஷியின் ஆஸ்ரமப்

பக்கம் அக்குதிரை போய்க்கொண்டிருந்த பொழுது அந்த ஆஸ்ரமச் சிறுவர்களாகிய குசனுக்கும் லவனுக்கும் அந்த நூதனமான மிருகத்தினிடத்து விருப்பம் மிக உண்டாயிற்று. அவர்களுக்கு அது பசுபோன்று தென்பட்டது. ஆனால் அதற்குக் கொம்பு இல்லை! அதுவே அச்சிறுவர்கள் அந்த விலங்கினிடத்துக் கண்ட அதிசயமாகும். சிறிது நேரம் அதனோடு விளையாடுவதற்காக அதனைப்பிடித்து ஒரு மரத்தில் கட்டி வைத்துவிட்டார்கள். ஐதிகப் பிரகாரம் இச்செயல் எதிர்ப்புக்கும் ஆக்ஷேபத்துக்கும் அறிகுறியாகும். ஆனால் இலக்ஷ்மணனே அந்நிகழ்ச்சியைப் பொருள்படுத்தவில்லை. ஏனென்றால் விரோதபாவனை இன்னதென்று அறியாத புனித ஆஸ்ரமவாசிகள் ஆவார்கள் அச்சிறுவர்கள்.

யாகசாலை அமைப்பதற்கு விஸ்தாரமான நிலம் ஒன்று பொருத்தமானதெனக் கருதப்பட்டது. தாற்காலிகமாகத் தங்கியிருப்பதற்கேற்ற விடுதிகளும் கொட்டகைகளும் குடில்களும் ஏராளமாக அமைக்கப்பட்டன. யாகத்துக்காக அழைக்கப்பட்டிருந்த ரிஷிபுங்கவர்கள், நாடாளும் வேந்தர்கள், மேன்மைதங்கிய பிரமுகர்கள், பண்டிதர்கள், பொது மக்கள் ஆயினோர் அவரவர் அந்தஸ்திற்கு ஏற்றவாறு தங்கும் இடங்களைப் பெறுவாராயினர். அஸ்வமேத யக்ஞம் தொடர்ந்து சில நாட்கள் நடைபெறவிருந்தது. அதை நடாத்திவைத்த புரோகிதர்களுக்கும் பொருத்தமான இடவசதி செய்துவைக்கப்பட்டது. சுக்ரீவனும் விபீஷணனும் இப்பெரிய நிகழ்ச்சியில் பங்கு கொண்டனர். இதையொட்டிய பலப்பல அலுவல்களைச் செய்து நிறைவேற்றுவதற்கு ஏற்ற சிப்பந்திகளையும் இவ்விரு பிரமுகர்களும் தங்களோடு அழைத்து வந்தனர். அன்னவர்களை அரக்கர்கள் என்றோ வானரர்கள் என்றோ பாகுபடுத்தியது வெறும் கவிதை

ரசத்தின் பொருட்டேயாம். இராமனிடத்து அவர்கள் இரு வரும் வைத்திருந்த பக்தியின் விளைவாக யாகத்தின் பெரும் பகுதியை அவர்களே இனிது செய்து சாதித்தனர்.

யாகத்துக்காகவென்று சேகரித்த பொருள்களும், தானிய வகைகளும், திரவியமும் கணக்கில் அடங்கா. இத்தகைய யாகங்கள் அக்காலத்தில் மற்ளெரு காரியத்துக்குப் பயன் படுத்தப்பட்டன. அரசாங்கத்தில் குவிந்துகிடந்த செல்வங் கள் இத்தருணங்களில் தகுதி வாய்ந்த ஸ்தாபனங்களுக்கும், பிரமுகர்களுக்கும் 'தாராளமாக எடுத்து வழங்கப்பட்டன. மக்களுக்குத் தேவையாயிருந்தவைகள் பொருத்தமான பாங் கில் அவர்களுக்கு எடுத்துக் கொடுக்கப்பட்டன. பண்பும் படிப்புத்திறனும் பாராட்டுதற்குரிய மேலான கருத்துக்களும் வேண்டியவாறு எடுத்து விளக்கப்பட்டன. அறிவிலும் ஒழுக்கத்திலும் மேன்மையுற்றிருந்த மக்களிடத்து இந்த ஞானச் செல்வம் முறையாக எடுத்து அளிக்கப்பட்டது. பொருளையும் பண்பாட்டையும் பொது உடைமை ஆக்குவதே அக்காலத்தில் நிகழ்ந்த யாகங்களின் முக்கிய நோக்கமா யிருந்துவந்தது. அக்காலத்தில் யாகங்களில் ரிஷி சிரேஷ் டர்கள் மனமுவந்து கலந்துகொண்டனர். ஞானத்தை மக்க ளுக்கிடையிலே எடுத்து வழங்குதல் அவர்களுடைய கொடையாயிற்று. இராமன் நடாத்திய அஸ்வமேத யக்ஞத் தில் பரத்வாஜர், அகஸ்தியர், வால்மீகி ஆகிய ரிஷிபுங்கவர் கள் அரிய பெரிய இடம்பெற்றுவந்தனர். பின்பு இந்த யக்ஞத்தில் கலந்து கொள்ளாமையை முன்னிட்டு மேன்மை யுற்று விளங்கியவன் மாருதி என்னும் மகாவீரன். இராம ஞேடு தொடர்புகொண்ட நாள் முதற்கொண்டு ஒவ்வொரு செயலிலும் நிகழ்ச்சியிலும். அவன் முக்கிய இடம்பெற்று வந்தான். ஆனல் உத்தர காண்டத்தில் அவன் பின்னணிக்

குப் போகிறான். முன்னணியில் இருந்திருப்பானாகில் இராமாயணம் வேறு ஒரு வடிவெடுத்து இருந்திருக்கும். சீதா பிராட்டியாரைப் பகிஷ்கரிப்பதற்கு அவன் சம்மதம் கொடுத்திருக்கமாட்டான். முன்பு சீதையை மீட்டெடுத்தல் பொருட்டு அரக்க வேந்தன் இராவணனையும், லங்காபுரி மக்களையும் எதிர்த்து அவன் பயங்கரமாகப் போர்புரிந்தான். அதே வல்லமையுடன் பின்பு அயோத்தியில் அவன் இருந்திருப்பானாகில் சீதா பிராட்டியாரின் புனிதத்தை நிரூபித்துக்காட்டுதல் பொருட்டு அயோத்தி வேந்தனாகிய இராமனையும் ஏனையவர்களையும் எதிர்த்து அவன் தீவிரமாகச் சண்டை செய்திருப்பான். ஏனென்றால் தன் அன்னை சீதாதேவியின் தூய்மையை அவன் அறிந்திருந்த அளவு இராமனே அறிந்து கொள்ளவில்லை. அதற்கேற்ற சந்தர்ப்பமும் அவனுக்கு வாய்க்கவில்லை. அயோத்தியில் சீதாபிராட்டியாருக்குப் பதிலாகப் பொன்பதுமை செய்து வைப்பதற்கு ரிஷிகளும் புரோகிதர்களும் சம்மதம் கொடுத்தார்கள். மற்று, மாருதி அத்தருணத்தில் அங்கேயிருந்திருப்பானாகில் அப்பதுமையைத் துகள் துகளாக உடைத்துத் தள்ளியிருந்திருப்பான். தெய்வத்தின் திட்டம் அஃது அன்று. ஆதலால் ஆஞ்சனேயன் ஆங்கு மேனியுடன் பிரசன்னமாகவில்லை.

4. ரிஷிபுங்கவர்கள் முகாம் வைத்திருந்த இருப்பிடங்களில் இரண்டு சிறுவர்கள் தென்பட்டார்கள். நாளுக்கு நாள் அவர்களுடைய கியாதி வளர்ந்துகொண்டே வந்தது. மக்களில் பெரும்பான்மையோர் அச்சிறுவர்களைப் பற்றியே பேசிய வண்ணமாயிருந்தனர். உடையணிந்திருந்தது ரிஷிகளின் போக்கிலெனினும் தோற்றத்தில் அவர்களிருவரும் பால ராமன் போன்றே காட்சியளித்தார்கள். முன்பு சீதா பிராட்டியாரின் தூய்மையைப் பற்றிப் பேச்சு எழுந்த

பொழுது அது இராமனுக்குப் பெரும் சங்கடமாயிருந்தது. இப்பொழுது இராமன் போன்றே தென்பட்ட இரண்டு பாலகர்களைப்பற்றிய பேச்சும் அவனுக்குச் சங்கடமாயிருந்தது. அச்சிறுவர்களிருவரும் அற்புதமாக இராமாயணம் படனம் பண்ணியதைப் பற்றிய செய்தி இராமன் காதுக்கு எட்டியது. ஆதலால் தானும் அதைக் கேட்க ஒருவாறு ஆவலுற்றிருந்தான். அறிஞர்கள் பலருடைய வற்புறுத்தலுக்கு இணங்கி அச்சிறுவர்களுடைய கலாவன்மையை வெளிப்படுத்துதற்கான நிகழ்ச்சி ஒன்று இராமனால் வைக்கப்பட்டது.

அக் கூட்டம் மிகப் பெரியதாயும் உள்ளத்தைக் கவரக் கூடியதாயும் இருந்தது. போற்றுதலுக்கு இலக்காயிருந்த பாலர்களாகிய குசனும் லவனும் ரிஷிபுங்கவர்களால் அச் சபைக்கு அழைத்து வரப்பட்டனர். குழுமியிருந்த அனைவருடைய கண்பார்வையும் அவர்கள்மீது திருப்பப்பட்டது. அவர்கள் இரட்டையரையும் இராமனையும் மாறிமாறிப்பார்த்த வண்ணமாயிருந்தனர். முகச்சாயல் முற்றும் ஒத்திருந்தது. வயதில் மட்டும் வித்தியாசம். கவர்ச்சிகரமான பேரழகு, துணிச்சல் நிறைந்த பேராற்றல், ஒளிவிடும் பேரறிவு, தெய்விகப் பேரின்பம், இனிமை நிறைந்த தன்னடக்கம்—இத்தகைய தெய்விகப் பாங்குகளுக்கு உறைவிடமாக அந்த இரட்டையர் தென்பட்டனர். அன்னவர்களைக் காண்பது தெய்வக் காட்சிக்கு நிகராயிருந்தது.

சபையோர் வேண்டுதலுக்கிணங்கி இளைஞர்கள் இருவரும் இராமாயணத்தின் முதல் பகுதியை ஓதினர். குரலோசையின் இனிமை, உச்சரிப்பின் தெளிவு, பொருத்தமான ஏற்ற இறக்கம், பேச்சின் கலை ஆகியவைகள் சபையோர் உள்ளத்தைக் கவர்ந்தன. சபை முழுதும் ஸ்தம்பித்திருந்தது. மாணக்கர்களுடைய விளக்கம் அற்புதமாயிருந்தது.

மொழியின் தெளிவு உச்சநிலையிலிருந்தது. இத்தகைய பண்புகள் அனைத்தும் ஒன்றுகூடி அக் கலா நிகழ்ச்சியை மகோன்னத நிலைக்குக் கொண்டு போயின.

இராமனுடைய ஆணைக்கு இணங்கித் தம்பி இலக்ஷ்மணன் ஒரு தட்டு நிறையத் தங்கமும், வெள்ளியும், இரத்தினங்களும் வைத்து இரட்டையர்களுக்குச் சன்மானம் பண்ணினன்.

குசன் : மின்னுகிற இப்பொருள்களை மேலானவைகள் என்று உலகத்தவர் மதிப்புப் போடுகின்றனர். ஆஸ்ரம வாசிகளாகிய நாங்கள் இவைகளைத் துச்சமென ஒதுக்குகின்றோம். எனவே இவைகள் உங்களோடு இருக்கட்டும். மேலான எண்ணங்களிலும் தூயவாழ்விலும் நாங்கள் திருப்தியடைந்திருக்கிறோம்.

இராமன் : சிறுவர்காள், நீங்கள் யார் என்பதை நாங்கள் அறியலாமா?

குசன் : வால்மீகி மகரிஷியின் ஆஸ்ரமத்தைச் சேர்ந்த இரட்டையர்கள் ஆவோம் நாங்கள். என் பெயர் குசன், என் தம்பியின் பெயர் லவன்.

இராமன் : உங்கள் தந்தை யார்?

லவன் : எங்கள் குலபதியாகிய வால்மீகி மஹரிஷி எங்களுடைய ஞானத் தந்தை என்பதை மட்டும் நாங்கள் அறிந்திருக்கிறோம்.

இராமன் : உங்களுடைய தாய் யார்?

குசன் : எங்களுடைய தாயை 'அம்மா என்று அழைக்கிறோம். அதைத் தவிர வேறு பெயர் இருக்கிறதோ இல்லையோ எங்களுக்குத் தெரியாது.

இராமன் : உங்களுடைய குலபதியை ஈண்டு அழைத்து வருவீர்களா ?

இரட்டையர்கள் : அவர் ஏன் இங்கு வரவேண்டும்? அவரைத் தரிசிக்க நீங்கள் ஆஸ்ரமத்திற்கு வாருங்கள்.

ரிஷிகள் : அந்த ரிஷிபுங்கவர் தம் திருக்கூட்டத்துடன் இப்பொழுதுதான் வந்து கொண்டிருக்கிறார்.

5. வால்மீகி மஹரிஷி சபை நடுவே வந்தார். அனைவரும் எழுந்து நின்று அவரை வரவேற்றனர். அதன் பிறகு எல்லோரும் அமர்ந்தனர்.

இராமன் : பிரபோ, தம் ஆஸ்ரமத்துக்குரிய இந்த இரட்டையர்களைப்பற்றி ஈண்டு என்னென்னவோ பேச்சு வார்த்தைகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இவர்கள் யார் என்பதைக் கிருபை கூர்ந்து தாங்கள் கூறியருள்வீர்களா ?

வால்மீகி : இவர்கள் சீதையின் புதல்வர்கள்.

இராமன் : எந்த சீதை ?

வால்மீகி : ராமா, உன்னை நான் கேள்வி ஒன்று கேட்கிறேன். உன்னுடைய வாழ்நாளில் நீ எத்தனை சீதைகளைக் கண்டிருக்கிறாய்? இவ்வுலகம் எத்தனை சீதைகளைக் கண்டிருக்கிறது ?

இராமன் சிறிது மௌனமுற்று இருக்கிறான். பிறகு அவன் வேண்டுகிறான் : "தேவே, மக்களின் பிரதிநிதியாக இருந்து கொண்டு நான் தங்களிடம் வேண்டுகிறேன். சீதை தோஷமற்றவள் என்பதை இச்சபை நடுவே தாங்கள் உறுதியாகக் கூறுவீர்களா ?"

வால்மீகி: ராமா, நான் மற்றும் ஒரு கேள்வியை உன்னிடம் கேட்கிறேன். சீதையின் புனிதத்தைப் பற்றி உன்னுடைய சொந்த அபிப்பிராயம் என்ன?

இராமன்: சீதை தூய்மையே வடிவெடுத்தவள் என்பதை நான் அறிந்திருக்கிறேன்.

வால்மீகி: அப்படியானால் கர்ப்பவதியாயிருந்த அவளை நீ ஏன் பகிஷ்கரித்தாய்?

இராமன்: அயோத்திக்கு அரசன் என்னும் பொறுப்பில் குடிமக்களுக்கு நான் முன்மாதிரியாக இருக்கக் கடமைப்பட்டிருந்தேன். அரசனுக்கு அமைந்த கடமை கணவனுக்கு அமைந்த கடமையைவிட மிகப் பொறுப்பானது. அந்த மேலாம் கடமையை நான் நிறைவேற்றினேன்.

வால்மீகி: இதோ இப்பொழுது சீதையின் புனிதம் தன்னைத்தானே விளக்கிக்கொள்ளும். அதற்கு முன் பொது மக்களுக்கு அறிவுறுத்தும் பாங்கில் நான் சிறிது எடுத்து இயம்புகிறேன். ராமா, நீ தர்மகோப்தா, யாண்டும் தர்மத்தைக் காப்பவன் நீயே. அதற்கெல்லாம் மேலாக தௌர்பாக்கிய தசை ஒன்றைச் சௌபாக்கிய தசை யாகத் திருத்தியமைத்துக்கொள்ளும் கலைஞானம் அலாதியாக உனக்கே உள்ளது. மற்றவர்கள் கருத்துக்கு எட்டாதது இது. உன்னிடத்துத் தெய்விக மகிமை ஒன்று உண்டு. அன்னை கைகேயி உன்னை வனத்துக்கு அனுப்ப முயன்றபொழுது தர்மத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு அந்தத் தௌர்பாக்கியத்தைச் சுலபமாகத் தவிர்த்திருக்கலாம். ஆனால் மகிழ்வோடு நீ அந்த ஆணையை ஏற்றுக்கொண்டதன் வாயிலாக நான்கு பெரிய தெய்விக மகிமைகளை நீ வரவழைத்துள்ளாய். நீ புத்ரோத்தமன்

என்பது எக்காலத்தும் அழிந்துபட்டுப் போகாத பெருமை. இப்பேறு முதலிடம் பெறுகிறது. தண்டகாரண்யத்தில் வசித்திருந்த ரிஷிபுங்கவர்களுடனே நீ சத் சங்கம் பண்ணியது இரண்டாவது பேருகும். உலகுக்கே கேடாகக் கிளம்பியிருந்த இராவணனைச் சம்ஹாரம் பண்ணியது மூன்ருவது பேறு ஆகும். லங்காபுரியில் வைத்துத் தீக்குளித்ததன் வாயிலாகச் சீதாபிராட்டியாரின் தூய்மையை வெளிப்படுத்தியது நான்காவது பேறு ஆகும்.

இங்கே அயோத்யாபுரியிலே குடிமக்கள் உன்மீது குறை ஒன்றைச் சாட்டினர். ராஜாராமனுகிய நீ தீட்டுப்பட்ட மனைவியை உடன் வைத்திருப்பதன் வாயிலாகக் குடிமக்களுக்கு நீ முன்மாதிரி ஆகவில்லை என்பது அவர்கள் உன்மீது கூறிய புகார். சீதையின் பவித்திரத்தைப் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்ல நீ முந்தவில்லை. குடிமக்களின் கருத்துக்களுக்கு இணங்கியதன் வாயிலாக நீ பல நன்மைகளைப் பெற்றுள்ளாய். தகைசான்ற வேந்தன் ஒருவன் குடும்ப நலனைப் பொதுநலனுக்குப் பின்னணியில் வைக்கிருன். சந்தேகத்திற்கு இடம் தருகிற மனைவி ஒருத்தியைப் புறக்கணிப்பதன் வாயிலாகப் பொதுமக்களின் நல்லொழுக்கம் வளர்க்கப்படுமாகில் அதற்குரிய தியாகத்தைப் பண்ண அரசன் ஒருவன் ஆயத்தமாயிருத்தல் வேண்டும். ராமா, நீ குற்றமற்ற கோமான் என்பதை நிரூபித்துள்ளாய். வேந்தனுகிச் சிம்மாசனத்திலிருந்து கொண்டு நீ பெற்றுள்ள முதல் வெற்றி அதுவாம். பெண்ணெருத்தி காலமெல்லாம் ஆடவனைச் சார்ந்திருப்பது ஒவ்வாது. வாழ்க்கையின் பிற்பகுதியில் அவள் தன்னைத்தானே சார்ந்திருந்து பழகவேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தை நீ சீதைக்குக் கொடுத்தது நீ பெற்றுள்ள இரண்டாவது வாய்ப்புஆகும். நம் ஆஸ்ரமத்தை

அணுகி ஆத்ம ஞானத்தைப் பெற்றிருப்பது சீதாபிராட்டி பெற்றுள்ள பெறுதற்கரிய பேருகும். அயோத்தியிலே அரண்மனைவாசம் அந்த ஞானப்பேற்றுக்கு இடைஞ்சலாக இருந்திருக்கும். கொடூரச்செயல் போன்று தென்பட்ட இராமனுடைய நடவடிக்கையினின்று நிகழ்ந்த மூன்ருவது நலன் அதுவாம். குசனும் லவனும் பெறுதற்கரிய ஆத்மீகப் பயிற்சியைப் பெற்றது சீதாபிராட்டியாரின் ஆஸ்ரம வாழ்க்கையின் விளைவாம். அந்த நாலாம் பேறு பெறுதற்கரிய தெய்விகப் பேரும். எக்கர்மத்திலும் ஏதேனும் ஒரு விதத்தில் சிறிது தோஷம் தொக்கி நிற்கும். ஆனல் இராமனுடைய செயலிலோ யாண்டும் எண்ணிக்கையில் அடங்காதவாறு நலன்கள் குவிந்திருக்கின்றன. கேட்டை எவ்வளவுக்கெவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு இராமனுடைய முயற்சியானது கேட்டைத் தவிர்க்கவோ குறைக்கவோ செய்கிறது.

சீதை என்னுடைய ஞானச் செல்வி ஆவாள். தன்னுடைய பாங்கை எடுத்து விளக்கும்படி இச்சபை நடுவே நான் அவளை வரவழைக்கிறேன்.

6. தபஸ்வினி ஒருத்திக்குப் பொருத்தமான காவி உடையை சீதை அணிந்திருந்தாள். அமைதியுடன் சபையின்கண் அவள் எழுந்தருளினள். அவளுடைய பார்வையின் பெரும்பகுதி உள்முக நோக்கத்தில் நிலைபெற்றிருந்தது. அவள் இயம்பியதாவது: "நான் அன்னை நிலமகளிடத்திலிருந்து தோன்றி வந்தவள். என் தூய்மைக்கு யாண்டும் அவளே சாட்சி ஆகின்ருள். நான் இராமனுக்கு மணந்து கொடுக்கப்பட்டவள். ஆதலால் சர்வகாலமும் என்னுடைய சொரூபம் முழுவதையும் அவனுக்கே ஒப்படைத்தவளாகிறேன். வாழ்க்கையில் நலமே வாய்த்தாலும் சரி, கேடே

வாய்த்தாலும் சரி, மனைவி எப்பொழுதும் தன் கணவனுக்கு உரியவள் ஆகிறாள். இக்கோட்பாட்டுக்கு இணங்க என் கணவனோடு தண்டக ஆரண்ய வாசத்தை நான் ஏற்றுக் கொண்டேன். என் கணவனுக்கு ஏற்பட்ட கஷ்ட தசையில் நானும் பங்குகொண்டேன்.

"அந்த அரக்கன் இராவணன் கையில் நான் சிறையுண்டது ஓர் எதிர்பாராத செயலாகும். ஆனால் அந்த விபத்தானது நான் படைத்திருந்த ராம பக்தியைப் பன்மடங்கு அதிகரிக்கச் செய்தது. அந்த அரக்கனுடைய பிடியினின்று என்னை விடுவித்த என் கணவன் என்னைக் கடினமான சோதனைக்கு ஆளாக்கினான். அதை முன்னிட்டு நான் அவன் மீது வைத்துள்ள பக்தி எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை. லங்காபுரியில் நான் தீக்குளிக்கும்படி நேர்ந்தது. ஆனால் அக்னி தேவதைக்கு என்னைத் தகிக்க இயலாது போயிற்று. என்னுடைய தூய்மைக்கு அதுவே சான்றாகும்.

"அயோத்தி நகரவாசிகள் எனனுடைய புனிதத்தைப் பற்றி ஐயம் பூண்டனர். கொற்றவன் ஒருவன் குடிமக்களுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும் என்னும் கோட்பாட்டுக்கு உட்பட்டிருந்த என் கணவன் கர்ப்பவதியாயிருந்த என்னை ஒதுக்கித்தள்ளக் கடமைப்பட்டிருந்தான். எண்ணிய மாத்திரத்திலேயே என் உடலைப் பஞ்சபூதங்களாகப் பிரித்து ஒதுக்கும் வல்லமை என்னிடத்திருந்தது. ஆயினும் அச்செயலை நான் செய்யவில்லை. அதற்கேற்ற காரணமும் இருந்தது. என் கர்ப்பத்திலேயே கணவன் தன்னுடைய சொரூபத்தைப் பதித்திருந்தான். அதற்குப் பங்கம் ஏதும் விளைவிக்க எனக்கு உரிமை கிடையாது. குலபதி வால்மீகி மஹரிஷி எனக்கு நல்கிய ஞானப்பால் கொண்டு என் கர்ப்

பத்தில் உருவாகி வந்த ராம சொரூபத்தை உள்ளன்போடு நான் பேணி வந்தேன்.

"இன்ப துன்ப மயமானது இந்த உலகம். இத்தகைய இவ்வுலகில் என்னைத் துன்பமே பெரிதும் வாட்டியது. அதை நான் அமைதியாக ஏற்றுச் செமித்து என் மயமாக்கினேன். துன்பத்தை அமைதியாக ஏற்றுகொண்டதன் வாயிலாக நான் அத்துன்பத்தை வென்றவள் ஆகிறேன். எனக்கு நிகழ்ந்த துன்பத்தை முன்னிட்டு நான் யாரையும் நொந்துகொள்கிறேன் அல்லேன். என்னை முன்னிட்டே ஆரண்ய வாசத்தின்பொழுது என் கணவன் பலப்பல துயரங்களுக்கு ஆளாயினன். அயோத்யாபுரி வாசத்திலும் என்னை முன்னிட்டே என்கணவனுக்குப் பிரச்னைகள் பல வந்தமைந்தன. அத்தனை சோதனைகளுக்கிடையிலும் என் மீது வைத்திருந்த அன்பை என்கணவன் மாற்றவில்லை. அவன் காட்டியுள்ள பேரன்பே சோதனைகள் அனைத்தையும் சமாளிக்கும் வல்லமையை எனக்கு நல்கியது.

"எனக்கு நேர்ந்த சோதனைகளுள் மிகமிகக் கடினமானது இச் சிறுவர்கள் இருவரையும் பேணி உருவாக்குவதில் உண்டாயிற்று. இவர்கள் இன்னார் என்பதை இவர்களுக்குத் தெரிவிக்கும் உரிமை எனக்கு வாய்க்கவில்லை. என்னுடைய பெயரை அவர்கள் அறிந்துகொள்ளலாகாது என்பது மற்றொரு நிபந்தனை. குலபதி புகட்டிய சீதா ராம மகிமைகளை இச்சிறுவர்கள் நாள்தோறும் இனிது ஓதிப் பழகினர். ஆனால் தங்களுடைய தாய் தந்தையரின் பெருமைகளையே இவர்கள் ஓதிவந்தார்கள் என்பது இவர்களுக்குத் தெரியாது. இது விஷயத்தில் அனாதைகள் போன்று இவர்கள் வளர்க்கப்பட்டனர். இந்த நிபந்தனைதான் சோதனைகளுள் பெருஞ்சோதனையாக என்மீது சுமத்தப்பட்டிருந்தது.

அது எத்தகைய பெரிய வேதனையை எனக்கு உண்டுபண்ணிற்று என்பதை என்னைத் தவிர வேறு யாரும் அறியார். அத்தகைய கொடிய வேதனையையும் நான் என்னிடத்தே மறைத்து வைத்திருந்தேன்.

"என் ஆருயிர்ச் செல்வங்காள்! குசா, லவா! இதுகாறும் நீங்கள் என்னை அம்மா என்றுதான் அறிந்தீர்கள். இப்பொழுது இச்சபை நடுவே நான் யார் என்பதை உங்களுக்கு வெளிப்படுத்துகிறேன். நீங்கள் பாடிப் பாராட்டி வந்த சீதைதான் நான். இப்பெருங்கூட்டத்துக்கு அதிபதியாக அமர்ந்திருக்கும் போற்றுதற்குரிய பெரிய மூர்த்திதான் உங்களுடைய தந்தை. இதுகாறும் நீங்கள் என்னால் வளர்க்கப்பட்டு வந்திருக்கிறீர்கள். இனி, உங்களை வளர்க்கும் பொறுப்பை உங்கள் தந்தையார் ஏற்றுக்கொள்கிறார். ஏக காலத்தில் தாயோடும் தந்தையோடும் கூடி வாழ்ந்திருக்கும் தெய்விகப்பேற்றி உங்களுக்கில்லை. நீங்கள் இருவரும் மேன்மையுற்று மிளிர்வீர்களாக."

"ஞானத் தந்தையே, தங்களுடைய அளவையில் அடங்காத அருளினால் அயோத்தி ராமனை என் ஆத்ம ராமனாக அனுபூதியில் அறிந்துகொள்ளும் வாய்ப்பு எனக்கு அமைந்துள்ளது. உடல் எடுத்துள்ள நான் பெறுதற்கு இதைவிட மேலான பேறு ஏதும் இல்லை. முடிவான இப் பேறதனை எனக்குக் கொடுத்து அருளிய தங்களுக்கு நான் கடப்பாடு உள்ளவள் ஆகிறேன்.

"உயிர்க்கு உயிராயுள்ள என் இறைவா! நான் உன்னை என்னிலும் என்னை உன்னுள்ளும் அனுபூதியில் அறிகிறேன். நமக்கிடையிலுள்ள இணக்கம் நித்தியமானது. இந்தச் சரீரம் தாங்கி வந்து நான் உனக்கும் உன்னுடைய சந்தானத்திற்கும் செய்யவேண்டிய பணிவிடை இப்பொழுது பூர்த்தி

யாகிறது. ஆகவே இவ்வுடலைக் கலைத்துவிட்டு யதாஸ்தானம் எய்துகிறேன்.

"மாதா பூமாதேவி! எனக்கு இவ்வடிவத்தை நீ நல்கினாய். உபயோகப்படுத்த வேண்டிய முறையில் நான் இதை உபயோகப்படுத்தியாய் விட்டது. என்னுடைய தூய்மையை அங்கீகரிக்கும் பாங்கில் உன்னுடைய வடிவத்தினுள் என்னை ஒடுக்கிக்கொள்வாயாக."

சீதாபிராட்டி இப்பொழுது எல்லை மருவா ஒளிப் பிழம்பாக மாறிப் பூமியினுள் மறைந்தாள்.

இராமன் திகைத்து நின்றான். என்ன செய்வதென்று அவனுக்கு விளங்கவில்லை. நிலைமையை வால்மீகி மஹரிஷி தெளிவுபடுத்தினார்: "ராமா, கூடியவர்கள் பிரிந்தாக வேண்டும். அத்தகைய கூடுதலும் பிரிதலும் உனக்கும் சீதைக்கும் இடையிலே நேர்ந்தாய்விட்டது. தன் செயலைச் சீதை அற்புதமாகச் செய்திருக்கிறாள். இப்பொழுது குசனையும் லவனையும் உனக்குச் சொந்தமாக்குவாயாக. நீயும் உன் சகோதரர்களும் இப்பூவுலக வாழ்வை ஒதுக்கிவைக்க முன் வருவீர்களாக. உங்கள் நால்வருடைய நரலோக லீலைக்கு முடிவு வந்திருக்கிறது."

தாய்மார்களாகிய கௌசல்யா தேவியும் சுமித்ரா தேவியும் கைகேயி தேவியும் ஏற்கனவே தங்களுடைய மண்ணுலக வாழ்க்கையை முடித்துவிட்டுப் பரகதி அடைந்துள்ளார்கள். தசரத சக்கரவர்த்தி இன்புற்று இருக்கும் பரலோகப் பிராப்தியை நாடி அவர்கள் அவ்வுலகுக்குச் சென்றுள்ளார்கள்.

இராமனுக்கு வாய்த்ததுபோன்றே பரதனுக்கும் இலக்ஷ்மணனுக்கும் இரட்டையர்கள் வாய்த்திருந்தார்கள். அந்தந்தச் சந்ததிக்கேற்ற சாம்ராஜ்யமும் மண்ணுலகில் அமைக்கப் பெற்றது.

7. அயோத்தியிலே இராமனுடைய அரண்மனைக்குள் தபஸ்வி ஒருவர் தோன்றி வந்து இராமனைப் பேட்டி காண வேண்டுமென்று தெரிவித்ததால் அவருடைய விருப்பப்படியே இலக்ஷ்மணன் தன் தமையனுடைய சன்னிதானத்துக்கு அவரை அழைத்துச் சென்றான்.

தபஸ்வி: ராமா, நான் உன்னோடு தனியாகப் பேச வேண்டிய ரகசியம் ஒன்று இருக்கிறது. நாம் அப்பேச்சில் ஈடுபட்டிருக்கிறபொழுது மூன்றாவது மனிதன் ஒருவனுடைய காதுக்கு அப்பேச்சு எட்டலாகாது. யாரும் அவ்வேளையில் நம் எதிரே தென்படலாகாது. 'இந்த ஆணையை மீறி நடப்பவனுக்கு மரணதண்டனை விதிப்பேன்' என்று எனக்கு வாக்குக் கொடுப்பாயாக.

அங்ஙனமே நடந்துகொள்ள இராமன் வாக்குறுதி தந்தான். உள்ளேயாரும் நுழையாதபடி வாயிலில் காத்திருக்கும்படி இலக்ஷ்மணனுக்குத் தமையன் உத்தரவு பிறப்பித்தான்.

இராமனும் புதிதாக வந்திருந்த தபஸ்வியும் தங்கள் போக்கில் உரையாடிக்கொண்டிருந்தனர். ஆங்கு வந்திருந்த தபஸ்வி இராமனிடம் தெரிவித்ததாவது: "நான் யமதர்மன். பிரம்மதேவன் என்னை உன்னிடம் அனுப்பியிருக்கிறான். உன்னுடைய நரலோக லீலை இத்துடன் பூர்த்தியாகிறது. இதுவே என்மூலம் அவன் கொடுத்துள்ள செய்தியாகும். இம்மண்ணுலகுக்கு உன்னுடைய வரவு பெருநலனை விளைவித்திருக்கிறது. இத்தரணியில் உள்ளோர்க்குத் தர்மம் இன்னது என்பதை நீ தெளிவுற விளக்கியுள்ளாய். உன்னுடைய யதாஸ்தானமாகிய வைகுண்டத்துக்கு எழுந்தருளும் காலம் வந்துள்ளது."

முன்கோபமும் சம்ஹாரச் செயலுமே வடிவெடுத்திருந்த துர்வாச மஹரிஷி ஆங்குத் திடீரென்று பிரசன்னமானார். அக்

கணமே இராமனைக் கண்டாக வேண்டுமென்று அவர் ஆணை யிட்டார்.

இலக்ஷ்மணன்: போற்றுதற்குரிய பெரியோய், சற்றுப் பொறுத்திரும். இராமன் இப்பொழுது முக்கியமான மற்றோர் அலுவலில் ஈடுபட்டிருக்கிறான்.

துர்வாச மஹரிஷி: காத்திருக்கும்படி எனக்கு உத்தரவு போடும் துணிச்சல் உனக்கு வந்திருக்கிறதா? இக்கணமே இராமனை என்னிடம் கொண்டுவா. இல்லையேல் ரகுகுலமும் அதனுடைய அரசாட்சியும் ஒரு நொடிப்பொழுதில் அழிந்து போகும்படி நான் சாபமிடுவேன்.

இலக்ஷ்மணன் எண்ணிப் பார்த்தான்: "குடும்பம் முழுவதற்கும் அதைத் தொடர்ந்து ராமராஜ்யத்திற்கும் அழிவை வலியதேடிக்கொள்வதைவிட நான் அழிந்துபட்டுப்போவது மேல்." இப்படித் தீர்மானித்தவன் இராமனுடைய சன்னிதானத்திற்கு விரைந்து ஓடினான். துர்வாச மஹரிஷி இராமனை அக்கணமே பார்க்க விரும்பியதாகத் தமையன் முன்னிலையில் அவன் தெரிவித்தான்.

தன்னைப் பார்க்க வந்தவரை இராமன் திருப்பி அனுப்பியாகி விட்டது. இலக்ஷ்மணன் தெரிவித்தபடி துர்வாச மஹரிஷியைத் தரிசிக்க இராமன் விரைந்து சென்றான். போற்றுதற்குரிய பெரியவர் ஒருவருடன் பேசிக்கொண்டு இருந்ததன் விளைவாகத் துர்வாச மஹரிஷியை வரவேற்பதில் விளைந்த கால தாமதத்தைக் குறித்துத் தன்னை மன்னிக்கவேண்டும் என்று இராமன் பணிவுடன் வேண்டினான்.

துர்வாசர் நெடுநாள் உபவாசமிருந்து தவம் புரிந்ததாகவும் அந்த உபவாசத்தை அன்றுதான் முடிவுக்குக் கொண்டு வந்ததாகவும் அதை முன்னிட்டுத் தமக்குத் தாங்கவொண்ணுப் பசி கிளம்பி விட்டதாகவும் தெரிவித்தார். ஆதலால்

அப்பொழுதுதான் இராமனுக்காகவென்று பக்குவப்படுத்தியிருந்த அதே போஜனத்தைத் தாம் அருந்தவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

துர்வாச மஹரிஷியின் விருப்பப்படியே அமுது படைத்த தன் வினைவாக அவர் திருப்தியடைந்தார். இராமனை ஆசீர்வதித்துவிட்டு அவர் புறப்பட்டுப் போனார்.

இப்பொழுது இலக்ஷ்மணனுக்கு ஏற்ற தண்டனையை விதிக்க இராமன் கடமைப்பட்டிருந்தான். ஏனென்றால் முன்பு வந்தவரோடு பேசிக்கொண்டிருந்தவேளையில் யார் வந்தாலும் அவனுக்கு மரணதண்டனை என்னும் நிபந்தனைக்கு இராமன் கடமைப்பட்டிருந்தான். அதைக் குறித்து அவன் முதியோர்களுடைய சபையொன்றைக் கூட்டினன். நிகழ்ந்த குற்றத்தை அச்சபையோரிடம் அவன் தெரிவித்தான். நிபந்தனையினின்று இம்மியளவும் பிசகாது இருப்பதுதான் முறை என்னும் முடிவுக்கு அச்சபையோர் வந்தார்கள். நிபந்தனைப்படி இராமன் இலக்ஷ்மணனைக் கொன்றாகவேண்டும். அது சாத்தியமா? அமைதியுடன் சிறிது நேரம் இருந்து இராமன் எண்ணிப்பார்த்தான். பிறகு, "ஓ லக்ஷ்மணா! இந்நாட்டினின்று உன்னை நான் பகிஷ்கரிக்கிறேன்" என்று உத்தரவிட்டான். சான்றோர்களுக்கிடையில் இத்தண்டனையானது உயிரை வாங்குதற்கு நிகரானது. பிறந்தது முதற்கொண்டு தன்னை விட்டுப் பிரியாதிருந்த தம்பிக்கு இத்தகைய பிரிவு என்னும் தண்டனையை விதிக்க இராமன் கடமைப்பட்டிருந்தான். சங்கடம் நிறைந்த அச்செயலை அவன் துணிந்து நிறைவேற்றினன்.

இக்கொடிய தண்டனைக்கு இலக்காகிய இலக்ஷ்மணன் தன்னுடைய மாளிகைக்குத் திரும்பிப் போகவில்லை. நேராக அவன் சரயு நதிக்கரை ஓரத்துக்குச் சென்றான். ஆங்கு அவன் ஆழ்ந்து தியானத்தில் அமர்ந்தான். அந்நிலையில்

நிலையற்ற உடலை ஒதுக்கிவிட்டு அகண்ட சச்சிதானந்தம் என்னும் மூல நிலை எய்தினன். மண்ணுலக வாழ்வில் யாண்டும் இராமனைப் பின்பற்றியவன் விண்ணுலக நிலைக்கு இராமனுக்கு முன் சென்றான். சூழ்நிலை அவனை அவ்வாறு தூண்டியது.

மண்ணுலக வாழ்வு யாண்டும் நிறைவையும் சௌபாக்கியத்தையும் உடைத்திருப்பது ஆகாது. இடையிடையே தௌர்பாக்கியமும் அதிலிருந்து துளிர்த்து வருகிறது. ஆனால் அதை முன்னிட்டு வீரன் ஒருவன் சஞ்சலப்படுவதில்லை. தௌர்பாக்கியத்தை அவன் அமைதியாக ஏற்றுக் கொள்கிறான். தன்னுடைய மனபரிபாகத்தையும் பேராற்றலையும் விளக்குதற்கென்றே அந்தத் தௌர்பாக்கியத்தை அவன் பயன்படுத்திக்கொள்கிறான்.

8. அயோத்யாபுரிக்குரிய இரண்டு பகுதிகளுக்கு வேந்தர்களாகக் குசனும் லவனும் முடி சூட்டப்பெற்றனர். அதே பாங்கில் மதுபுரிக்குரிய இரண்டு பகுதிகளுக்குப் பார்த்திபர்களாகச் சத்ருக்கனனுடைய இரட்டைக் குமாரர்கள் பட்டாபிஷேகம் செய்து வைக்கப்பட்டார்கள். அச்சீரிய சடங்கை முடித்துவிட்டுச் சத்ருக்கனன் இராமனோடு சேர்ந்துகொள்ள விரைந்து அயோத்திக்கு வந்தான். சுக்ரீவன் கிஷ்கிந்தா புரிக்குக் கோமானாக அங்கதனை நியமித்தான். இவ்வாறு ஒவ்வோர் இடத்திலும் சந்ததிகளாயிருந்தவர்கள் நாடாளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர்.

இராமனுடைய பக்தர்கள் எல்லாரும் தங்களுடைய தூய உள்ளுணர்வினால் ஏவப்பட்டு விரைந்து இராமனிடம் வந்து சேர்ந்தார்கள். பரதனும் சத்ருக்கனனும் ஏற்கனவே அவன் அருகில் இருந்தனர். அயோத்யா நகரில் வாழ்ந்திருந்த தூய ஆத்மாக்கள் தங்களைப் புறக்கணித்து விடலாகாது என்று வேண்டிக்கொண்டனர். அவர்களுடைய

இறைவனும் என்றென்றும் தன்னோடு அவர்களை இணைத்து வைத்திருக்க உறுதி கூறினன். சுக்ரீவனோடு ஒரு பெருங் கூட்டமாக வானரங்களும் கரடிகளும் வந்து சேர்ந்தனர். தங்களை இராமனுக்கே ஒப்படைத்து வைக்க அவர்கள் தீர் மானித்திருந்தார்கள். பக்தர்களும் பகவானும் ஒன்றே என் னும் கோட்பாட்டைச் சுக்ரீவனுக்கு இராமன் ஞாபகப்படுத் தினன். பக்தர்களைப் புறக்கணித்துவிட்டுத் தான் மட்டும் பரமபதத்துக்குப் போவது பொருந்தாது எனப் பராத்பர ராமன் தெரிவித்தான்.

தனக்கு உய்வு நல்கிய இராமனோடு சேர்ந்துகொள்ள விபீஷணன் அயோத்திக்கு வந்து சேர்ந்தான். ஆனல் மற்றொரு முக்கியமான கடமையை இராமன் அவனுக்கு நிர்மாணித்தான். லங்காபுரியை ஆண்டுகொண்டு விபீஷணன் யாண்டும் நிலவுலகில் வாழ்ந்திருத்தல் வேண்டும். ஆத்ம பரிபாகம் அடைந்திருப்பவர்களுக்கு முக்திக்கு வழி காட்டு வது அவனுடைய கடமையாக அமைக்கப்பட்டது. (சத்துவ குணம் யாண்டும் இவ்வரிய செயலை நிகழ்த்தி வருகிறது. சத்துவகுணத்தின் சொரூபமாக விபீஷணன் இலங்கு கின்றான்.)

பக்த ராஜனும் தெய்விக ஆற்றலிலே மகாவீரனுமாகிய ஆஞ்சனேயன் ஏற்கனவே இராமனுடைய சந்நிதானத்தை வந்து அடைந்திருந்தான். ஆனல் அவனுக்கு மற்றும் ஒரு முக்கியமான பணிவிடை நியமிக்கப்படுவதாயிற்று. மண் ணுலகில் அவன் யாண்டும் சிரஞ்சீவியாக வாழ்ந்திருத்தல் வேண்டும். எங்கெல்லாம் இராமாயணம் படனம் பண்ணப் படுகிறதோ ஆங்கெல்லாம் அவனுடைய சாந்நித்தியம் புறத் தோற்றத்தில் இல்லாத பாங்கில் அமைந்திருத்தல் வேண்டும். அதன் வாயிலாக இராமாயணம் படனம் பண்ணப்பட்ட இடமும் அதற்குச் செவி கொடுத்த மக்களும் தூய்மையில்

மேலோங்குவார்கள். ஆஞ்சனேயன் குரு தத்துவமாக இலங்குகின்றான். மண்ணுலகில் குருவின் ஸ்தானம் காலி யாகலாகாது என்பது கோட்பாடு. பெருந்திரளாக அடி யார்களும் பக்தர்களும் புடைசூழ இராமன் சரயு நதிக்குச் சென்றான். ஆங்கு நீராடுவதன் வாயிலாக அக்கூட்டத்தார் அனைவருடைய உடலங்கள் அப்பிராகிருத நிலையை எய்தின. அதாவது அருளுக்கு இலக்கான மூர்த்திகளாக அவர்கள் மாறியமைந்தனர். அனைவரும் ஏகோபித்து வைகுண்ட வாசிகளாக அப்பெருநிலத்தை நாடி மேலேகினர்.

அத்யாத்ம இராமாயணம்

இராமாயணத்தின் சீரிய அமைப்பு ஸ்ரீராமனோடு துவங்கி அவனோடு முற்றுப்பெற்றது அன்று. அது என் றைக்கும் தன்மயமாயுள்ள தத்துவமாம். மக்கள் எல்லார் உள்ளத்திலும் பண்பாட்டை நாடி எடுத்துக்கொள்ளும் முயற்சியாக அது இடம் பெற்று வருகிறது. இராமாயணத் தின் மகிமை அற்புதமானது. அதில் அமைந்துள்ள பாத் திரங்கள் மனிதனுடைய அகவுலக வாழ்வில் அமைந்துள்ள தத்துவங்களுக்கு விளக்கங்களாக அமைந்திருக்கிறார்கள்.

உலகு அனைத்துக்கும் ஆதாரமாயிருப்பது ஆகாசம். அதே பாங்கில் பரமாத்மன் பிரபஞ்சமனைத்துக்கும் ஆதார மாக அமைந்திருக்கிறான். இந்தப் பரமாத்மனுடைய ஸ்தா னத்தைத் தசரதராமன் பெறுகிறான். அதே விதத்தில் ஜீவாத்மனுடைய ஸ்தானத்தை சீதாபிராட்டி பெறுகிறாள். சீதைக்கும் இராமனுக்குமுள்ள இணக்கமே ஜீவாத்மனுக்கும் பரமாத்மனுக்குமுள்ள இணக்கமாக யாண்டும் அமைந்திருக் கிறது. சீதாபிராட்டி யாண்டும் இராமனுக்கே உரியவ

ளாகிருள். அதே விதத்தில் ஜீவாத்மன் யாண்டும் பரமாத்ம னுக்கு உரியவன் ஆகிருன்.

மஹாவிஷ்ணு தாமே இராமன், பரதன், இலக்ஷ்மணன், சத்ருக்கனன் ஆகிய நான்கு மூர்த்திகளாகத் தோற்றத்துக்கு வந்துள்ளார். வடிவத்தில் நால்வர் எனினும் சொரூபத்தில் அவர்கள் ஒன்றே. அதே விதத்தில் மெய்ப்பொருளாகிய பரவஸ்து சிவன், விஷ்ணு, அம்பிகை கணேசன், குமரன் ஆகிய மூர்த்திகளாக இலங்கிக் கொண்டு இருக்கிருர். இம் மூர்த்திகளில் ஏதேனும் ஒரு மூர்த்தியை உள்ளபடி அறிந்து கொள்ளுதல் மெய்ப்பொருளைப் பற்றிய ஞானமாகிறது. தசரத குமாரர்கள் நால்வரும் ஒரே பாங்குடைய ஆத்ம சகோதரர்கள் ஆகின்ருர்கள்.

வாலியும் சுக்ரீவனும் உலகத்தவர்களுக்கிடையிலுள்ள சகோதர வாஞ்சை வாய்க்கப் பெற்றவர்கள் ஆகிருர்கள். அவர்களுடைய இணக்கம் நிலைபேறு உடையது ஆகமாட்டாது. உலகப் பற்று உடையவர்களுடைய பாங்கும் அத் தகையதேயாம்.

சத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குண மயமானது பிர பஞ்சம். தூய வாழ்வுக்கு உறுதுணையாயிருப்பது சத்வம். ஆசைக்கும் ஆற்றலுக்கும் இருப்பிடமாயிருப்பது ரஜஸ். தமோ குணமோ தூக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. ஜீவாத்மனை ஜடநிலையில் அது தள்ளுகிறது. லங்காபுரிக்கு உரியவர்களாகிய மூன்று சகோதரர்களுள் விபீஷணன் சத்வ குணத்தின் பிரதிநிதியாக இலங்குகிருன். ஆதலால்தான் தன் உடன் பிறந்தவனுகிய இராவணனுடைய தீய வழிகளை அவன் எதிர்க்கிருன். இராவணன் ரஜோகுணமே வடிவெடுத் தவன். போகத்தில் அவன் பெரும் பற்று வைத்தவன். ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து ஆகிய பத்து இந்திரியங்களும் இராவணனுடைய பத்துத் தலை

களாக உருவகப்படுத்தப்பட்டிருக்கின்றன. தமோகுணமய மாயிருப்பவன் கும்பகர்ணன். தூக்கமும் பெரும் தீண்டியும் தமோகுணத்தின் போக்கு ஆகும்.

இராவணன் என்னும் கட்டுக்கடங்காத மனது சீதை என்னும் ஜீவாத்மனை இராமன் என்னும் பரமாத்மனிடத்திருந்து பிரித்து வைத்துத் தனக்குச் சொந்தமாக்க முயலுகிறது. ஆனல் சீதை என்னும் ஜீவாத்மா இராவணன் என்னும் உலகப் பாங்கைக் கண்ணெடுத்துப் பார்க்காது இராமன் என்னும் பரமாத்மனையே நாடியிருக்கிறது.

ஜீவாத்மனுக்கும் பரமாத்மனுக்கும் இடையில் இணக்கத்தை உண்டுபண்ணுபவர் ஞானகுரு. அத்தகைய குருமூர்த்தியிடம் திகழ்வது தூய்மையும் நல்லொழுக்கமுமேயாம். ஆஞ்சனேயன் அத்தகைய குருஸ்தானம் வகித்துள்ளான். தேடியலைந்து சீதையை ஆஞ்சனேயன் கண்டுபிடிக்கிறன். அவளை இராமனேடு இணைத்து வைக்கும் அரிய செயலை நிறைவேற்றுவதாக ஆஞ்சனேயன் உறுதிகூறுகிறன். ஞான குரு ஒருவர் செய்கிற செயல் இதுவேயாம்.

ராம ராவண யுத்தம் நலங்கேடு ஆகியவைகளுக்கிடையில் உள்ள போராட்டமாம். கேடு வல்லமை மிக வாய்க்கப்பெற்றது. எனினும் முடிவில் நலன் கேட்டை வெல்லுகிறது. அதன் விளைவாக ஜீவாத்மன் பரமாத்மனேடு இணக்கம் கொள்கிறது. அந்த இணக்கமே யோகம் என்னும் பெயர் பெறுகிறது.

ஒவ்வொரு ஜீவாத்மனும் தன் தன் போக்கில் இராமாயணத்தைத் தன்னுடைய ஜீவிதத்தில் நடாத்துவதன் வாயிலாக அந்தந்த ஜீவன் பரமாத்மனை நோக்கிப் பண்பாட்டில் மேல் நிலைக்குப் போய்க்கொண்டிருக்கிறன். பக்தன் ஒருவன் தன்போக்கில் இராமாயணத்தை எழுதுகிறன் என்னும் கோட்பாடு இதுவேயாம்.

இராமாயண பாத்திரங்கள்

அகம்பனன் अकंपनः Akampana

இராவணனின் போர் வீரர்களில் ஒருவன்.

அகஸ்தியர் अगस्त्यः Agastya

தண்டகவன மாமுனிவர். இராமனுக்கு அரிய அஸ்திரம் கொடுத்தவர். ராம உபாசனையைத் துவக்கி வைத்தார்.

அகல்யை अहल्या. Ahalya

கௌதம மஹரிஷியின் பத்தினி. ஸ்ரீராமனால் அவள் சாப விமோசனம் பெற்றாள்.

அங்கதன் अङ्गदः Angada வாலியின் குமாரன்.

அக்ஷன் अक्षः Aksha இராவணனின் இரண்டாவது மகன்.

அத்ரி மஹரிஷி अत्रि महर्षिः Atri Maharishi

தண்டகவனத்தில் ஸ்ரீ ராமன் சந்தித்த உயர்ந்த முனிவர்.

அதிகாயன் अतिकायः Atikaya

இராவணனின் சேனாதிபதிகளில் ஒருவன்.

அனசூயா अनसूया Anasuya

அத்திரி முனிவரின் தர்ம பத்தினி. உத்தம பதிவிரதை.

ஆஞ்சனேயன் आञ्जनेयः Anjaneya

சிறந்த ராம பக்தன். ஹனுமான், மாருதி, ராமதூதன் எனபன அவனுடைய வேறு பெயர்கள்.

இந்த்ரஜித் इन्द्रजित् Indrajit இராவணனின் மூத்த மகன்.

கபந்தன் कबन्धः Kabandha

தலையற்ற சிலந்தி போன்ற அமைப்பு உடைய அரக்கன். இவனை இராமன் கொன்று சாபவிமோசனம் செய்தான்.

கரன் खरः Khara

இராவணனுடைய ஜனஸ்தானத்தின் பிரதம தளபதி.

குகன் गुहः Guha

கங்காதீரத்தில் வேடர்களின் தலைவன். ஸ்ரீ ராமனின் நண்பன்.

கும்பகர்ணன் कुम्भकर्णः Kumbhakarna

இராவணனின் முதல் தம்பி. தூக்கத்தில் நிபுணன்.

கும்பன் कुम्भः Kumbha கும்பகர்ணனின் மகன்.

கைகேயி कैकेयी Kaikeyi

தசரதனின் மூன்றாவது மனைவி. பரதனின் தாய்.

கோசலை कौसल्या Kousalya

தசரதனின் முதல் மனைவி. இராமனின் தாய்.

கௌதமர் गौतमः Gautama

சிறந்த முனிவர். அஹல்யையின் கணவன்.

சத்ருக்னன் शत्रुघ्नः Satrughna

தசரத குமாரன். சுமித்திரையின் இரண்டாவது புதல்வன்.

சம்பாதி सम्पातिः Sampati கழுகு. ஜடாயுவின் அண்ணன்.

சரபங்கர் शरभङ्गः Sarabhanga

தண்டகவனத்தில் இராமன் சந்தித்த பெரிய முனிவர்களுள் ஒருவர்.

சீதை सीता Sita இராமாயணத்தின் கதாநாயகி. ஸ்ரீராமனது பத்தினி.

சுக்ரீவன் सुग्रीवः Sugreeva வாலியின் தம்பி. ராம சகாயன்.

சுஷேணன் सुषेणः Sushena வானர வீரன். வைத்திய நிபுணன்.

சுதீக்ஷ்ணர் सुतीक्ष्णः Sutheekshna

தண்டகாரண்யத்தில் இராமன் சந்தித்த உயர்ந்த முனிவர்களில் ஒருவர்.

சுபாகு: सुबाहुः Subahu கொடிய அரக்கன். மாரீசனின் சகோதரன்.

சுமந்திரன் सुमन्त्रः Sumantra தசரதனின் சாரதி.

சுமித்திரா सुमित्रा Sumitra

தசரதனின் இரண்டாவது மனைவி. இலக்ஷ்மணன், சத்ருக்னன் இவர்களின் தாய்.

சூர்ப்பணகை शूर्पणखा Surpanakha

இராவணனின் சகோதரி. இராவண சம்ஹாரத்திற்கு விதை விதைத்தவள்.

தசரதன் दशरथः Dasaratha

அயோத்தியின் மன்னன். ஸ்ரீராமனின் தந்தை.

ததிமுகன் दधिमुखः Dadimukha

சுக்ரீவனது மாமன். மதுவனத்தைப் பாதுகாத்து வந்தான்.

தாடகை ताटका Tataka

கொடிய ராக்ஷசி. விஸ்வாமித்ரரின் கட்டளைப்படி இராமனால் வதை செய்யப்பட்டவள்.

தாரை तारा Tara வாலியின் மனைவி. இவள் சிறந்த அறிவாளி.

திரிஜடை त्रिजटा Trijata

சீதைக்கு நியமிக்கப்பட்டிருந்த காவல் அரக்கிகளுள் ஒருத்தி. நல்ல இயல்பு வாய்ந்தவள்.

துர்வாச மஹரிஷி दुर्वास महर्षिः Durvasa Maharishi

பெரிய மஹரிஷி. கோபாவேசமே வடிவெடுத்தவர். கொடிய சாபங் களுக்குப் பேர்போனவர்.

தூஷணன் दूषणः Dushana ஜனஸ்தானப் பாதுகாப்பாளன்.

தேவாந்தகன் देवान्तकः Devantaka

இராவணனின் படைத்தலைவர்களில் ஒருவன்.

நளன் नलः Nala

கடலில் அணை கட்டியவன். வானரத் தளபதிகளில் ஒருவன்.

நிகும்பன் निकुम्भः Nikumbha கும்பகர்ணனின் மகன்.

நீலன் नीलः Neela வானரப் படையின் சேனாபதி.

பரசுராமன் परशुरामः Parasurama

விஷ்ணுவின் அவதாரம். ஸ்ரீ ராமனால் கர்வபங்கம் செய்யப்பட்டான். இவன் ஸ்ரீராமனிடம் தன் விபூதிகளையெல்லாம் தந்துவிட்டு மறைந்தான்.

பரத்வாஜர் भरद्वाजः Bharatvaja

உயர்ந்த முனிவர். ஸ்ரீ ராமன் இவரை வனவாச ஆரம்பத்திலும் இறுதியிலும் சந்தித்தான்.

பரதன் भरतः Bharata தசரதகுமாரன், கைகேயியின் புத்திரன்.

மண்டோதரி मण्डोदरी Mandodari

இராவணனின் மனைவி. இந்த்ரஜித்தின் தாய்.

மந்தரை मन्थरा Manthara

கைகேயியின் தாதிமார்களில் ஒருத்தி. கூன் முதுகு உள்ளவளாகை யால் கூனி என்ற பெயர் பெற்றவள்.

மாதலி मातलिः Maatali இந்திரனின் தேரோட்டி.

மாரீசன் मारीचः Maricha—Mareecha
சீதையைத் திருடுவதற்கு இராவணனுக்கு உதவிய வஞ்சக அரக்கன்.

இராமன் रामः Rama இராமாயணத்தின் கதாநாயகன்.

இராவணன் रावणः Ravana
கொடிய அரக்கன். இராமனின் அவதார நோக்கம் ராவண வதம்.

ரிஸ்யசிருங்கர் ऋश्यश्रृङ्गः Risyasringa
தசரதருக்காகப் புத்திரகாமேஷ்டி யாகம் செய்தவர்.

லக்ஷ்மணன் लक्ष्मणः Lakshmana
தசரதகுமாரன். சுமித்திரையின் புதல்வன்.

வஸிஷ்டர் वसिष्ठः Vasishtha தசரதனின் குலகுரு. முனிசிரேஷ்டர்.

வாலி वालिः Vali
கிஷ்கிந்தையின் வானர அரசன். இராமனால் கொல்லப்பட்டவன்.

விஸ்வாமித்ரர் विश्वामित्रः Viswamitra
சிறந்த முனிவர். இராமனுக்கு அஸ்திரப் பயிற்சி அளித்தவர்.

விபீஷணன் विभीषणः Vibheeshna
இராவணனின் இரண்டாவது தம்பி.

விராதன் विराधः Viradha
தண்டக வனத்தில் இராமனால் வதம் செய்யப்பட்ட அரக்கன்.

ஜடாயு जटायुः Jatayu
இவன் ஒரு கழுகு. சம்பாதியின் தம்பி. தசரதனின் நண்பன்.

ஜனகன் जनकः Janaka
மிதிலா தேசத்தின் அரசன். சீதையின் தந்தை.

ஜாபாலி जाबालि Jabali
அயோத்தி மன்னன் தசரதனின் ஆலோசகர்களில் ஒருவன்.

ஜாம்பவான் जाम्बवान् Jambavan
வானரப் படையின் படைத்தலைவர்களில் ஒருவன். வயதான கரடி.

ஹனுமான் हनुमान् Hanuman
ராமபக்தன். ஆஞ்சநேயன், மாருதி என்கிற பெயர்களும் உடையவன்.